


தேசிய செம்மல்
வீரபாகு

3157



தேசிய செம்மல்

வீரபாகு

பதிப்பு	: 2017
நூலின் பெயர்	: தேசிய செம்மல் வீரபாகு
நூலின் பொருள்	: வாழ்க்கை வரலாறு
பக்கம்	: VIII - 264 பக்கங்கள்
நூல் அளவு	: 1/4 கிரௌன்
உள்தாள்	: 70 ஜிஎஸ்எம் மேப்லித்தோ
மேல்அட்டை	: 300 ஜிஎஸ்எம் ஆர்ட்போர்டு
விலை	: ரூ.100
அச்சிட்டோர்	: ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை
கணினி	: சூர்யா கிராபிக்ஸ் சென்னை

வெளியீடு

நவ இந்தியா பதிப்பகம்

756, ஈ.வெ.ரா.பெரியார் நெடுஞ்சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010
தொலைபேசி : 044-26616000

குலபதியின் குடும்பம்

தாத்தா - பாட்டி



தாத்தா
வழக்கறிஞர் ப.வீரபாகு



பாட்டி
வீ.கல்யாணி அம்மாள்

தந்தை - தாய்



தந்தை வீ.பரமசிவன்

தாய் ப.உலகம்மாள்



வளர்ப்பு தந்தை வழி **தாத்தா - பாட்டி**



தாத்தா ஏ.பி.ஆறுமுகம்

பாட்டி ஆறுமுகம்மாள்



வளர்ப்பு தந்தை - தாய்




தந்தை ஏ.பி.சொக்கலிங்கம் செட்டியார்

தாய் செர்.மகாலட்சுமி அம்மாள்





ஏ.பி.சி.வீரபாகு - மகாலட்சுமி அம்மாள்
மணநாள் : 03-02-1941



பதினாறு வயதில் மிடுக்கான இளைஞர் வீரபாகு

LIBRARY
A.P.C. MAHALAKSHMI COLLEGE FOR WOMEN
THOOTHUKUDI-2

முன்னுரை

சிலர் பெருமையோடு பிறக்கிறார்கள்; சிலர் முயற்சியால் பெருமையடைகிறார்கள்; சிலர் மீது பெருமை தினிக்கப்படுகிறது.

இதில் குலபதி ஏ.பி.சி.வீரபாகு அவர்களை எந்த வகையைச் சேர்ந்தவர் என்று எளிதாகக் கூறிவிடமுடியாது. இவரைப் பொருத்தவரை பெருமையும் புகழும் மிக்க குடும்பத்தில் பிறந்தார். இவர் தமது முயற்சியால் பெருமை யடைந்தார். அவரது கடுமையான உழைப்பினால் அவர்மீது பெருமை தினிக்கப்பட்டது.

தூத்துக்குடியில் மே 5, 1915இல் பிறந்தவர் ஏ.பி.சி.வீரபாகு. 1942இல் நாடு முழுவதும் நடைபெற்ற ஆகஸ்ட் அறப்போராட்ட காலத்தில் பங்கேற்று இந்திய தேசிய காங்கிரசில் தம்மை இணைத்துக்கொண்டார். திருநெல்வேலி மாவட்ட காங்கிரஸ் தலைவராக, கல்வியாளராக, வர்த்தக சபையின் தலைவராக, கூட்டுறவு துறையில் ஈடுபாடு மிக்கவராக, சர்வோதய சங்க தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, திட்டக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து, தம்மை ஒரு பன்முகத்தன்மை மிக்க தலைவராக அரசியலிலும் பொதுவாழ்க்கையிலும் வளர்த்துகொண்டவர் ஏ.பி.சி.வீரபாகு.

இறுதியாக, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் பொறுப்பு வகித்து பெருமை படைத்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக, நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்பார்கள். அந்த வகையில், மிகச்சிறந்த குடும்பத் தலைவராக விளங்கியவர் ஏ.பி.சி.வீரபாகு.

1915இல் பிறந்த ஏ.பி.சி.வீரபாகு, நூற்றாண்டைக் கடந்து இன்றும் புகழ்மிக்க தலைவராக தமிழக மக்களிடையே அறியபட்டவராக விளங்கி வருகிறார்.

பல்வேறு பெருமைகளையும் புகழையும் பெற்று விளங்கிய குலபதி ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அரசியலில் அவர் தடம்பதித்த சுவடுகளையும், சட்டமன்ற உறுப்பினராக இருமுறை பொறுப்பு வகித்து, தொலைநோக்கு சிந்தனையுடன் ஆற்றிய உரைகளையும், அரிய புகைப்படங்களுடன் தொகுத்து நூல் வடிவில் வழங்கவேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத்தலைவர், பண்பாளர் திரு. ஏ.பி.சி.வீ.சண்முகம் அவர்களும் அவரது சகோதரர்களும் என்னை கேட்டுகொண்டனர்.

பெருந்தலைவர் காமராஜர், மக்கள் தலைவர் மூப்பனார் என தேசிய தலைவர்களுக்கு நூற்றுக்கணக்கான புகைப்படங்களுடன் நூலினை வெளியிட்ட எனக்கு, இது ஒரு அரிய வாய்ப்பாக அமைந்தது. இந்தப் பணியில், இந்நூல் சிறப்பாக அமைய பெருந்துணையாக இருந்து செயல்பட்ட சென்னை கிறிஸ்துவ கல்லூரி பள்ளியின் முன்னாள் துணைத் தலைமை ஆசிரியர் திரு. பூ.ஜெயராமன் அவர்களுக்கும், வ.உ.சி. கல்லூரி ஆங்கில துறை பேராசிரியர் ரகு அந்தோணி மற்றும் பாரதிய வித்யாலயா முன்னாள் ஆசிரியர் தெய்வமுருகன் ஆகியோருக்கும் பதிப்பாளர் என்ற முறையில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய செம்மல் வீரபாகு என்கிற இந்நூலை அரிய புகைப்படங்களுடன் வடிவமைத்து வெளியிடுவதற்கு பெரும் துணையாக இருந்த திரு. இரா.ஜெயசீலன், கணினி இயக்குநர் திரு. மம்சை செல்வக்குமார் மற்றும் மு.புகழேந்தி ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்றைய இளைய சமுதாயம் ஏ.பி.சி.வீரபாகு அவர்களைப்பற்றி அறியும்வண்ணம், நவ இந்தியா பதிப்பகத்தின் சார்பாக இந்நூலை வெளியிடுவதில் பன்மடங்கு பெருமையடைகிறேன்.

■ **ஆ.கோபண்ணா**



பொருளடக்கம்

வாழையடி வாழை	-	3
இளமையும் கல்வியும்	-	10
உயர்கல்வி	-	14
இல்லறம் என்னும் நல்லறம்	-	17
கூட்டுறவு இயக்கப் பணி	-	30
கல்விப் பணி	-	44
சட்டமன்றப் பணி	-	55
சேவை வழியே இறைவழி என்பவர்	-	73
ஏ.பி.சி.வீரபாகு ஆற்றிய சட்டமன்ற உரைத் தொகுப்பு	-	94

குலபதியின் காலச்சுவடுகள்

குலபதியின் மணிவிழா	-	242
அரசியல் தலைவர்களுடன்	-	250
குலபதியின் மறைவு	-	262



வாழியடி வாழி!

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

- குறள்

உலகில் எண்ணற்ற உயிரினங்கள் தோன்றுகின்றன; பிறக்கின்றன; மறைகின்றன. அவற்றின் செயல்பாடுகளில் எவ்வகை மாற்றமும் இல்லை. ஆனால், மனித இனம், ஆறறிவு படைத்த காரணத்தால் காலந்தோறும் பல்வேறு படிநிலைகளில் வளர்ச்சி கண்டு உயர்ந்துகொண்டே இருக்கிறது. அதனால்தான் இவ்வுலகில் 'தோன்றி'னாலும் வாழ்வாங்கு வாழும் நெறிமுறை அறிந்து, வாழும் இனமாக மனித இனம் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. எனவேதான் வள்ளுவர், "வாழ்ந்தால் புகழுக்குக் காரணமான நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும். அப்படி வாழாதவர், உலகில் வாழ்வதனினும் வாழாதிருப்பதே சிறந்ததாகும்" என்னும் பொருளமைய இக்குறளினை எழுதியுள்ளார்.

இந்த மண்ணுலகில் எண்ணற்றவர் புகழுடைய வாழ்ந்துள்ளனர். குறிப்பாக நமது பாரதத்தில் இத்தகைய வாழ்வுடையோர் எண்ணிக்கை அளவிற்கு அரியதாகும். அதிலும் நம் தமிழகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, பிறருக்கு நன்நெறி காட்டியோராய் இருந்தோர் பலராவர். அத்தகையவர்களுள் ஒருவரும், நூற்றாண்டு காணும் பெருமை மிக்கவருமான ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் வாழ்வைக் குறித்து அறிவதும், அவர் வாழ்ந்த முறையைக் கடைப்பிடிக்க முயல்வதும் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சிறப்பை ஏற்படுத்தும்.

ஏ.பி.சி.வீரபாகுவின் முன்னோர்கள்

மனித சமுதாயத்திற்குப் பயன்பட வாழ்வோர், திடீரென்று உலகில் தோன்றிவிடுவதில்லை! வானிலிருந்து குதித்துவிடுவதில்லை! தேவர்கள் மானிட வடிவில் உலகில் தோன்றுவதாகப் புராணங்களில் பேசப்பட்டிருந்தாலும், அத்தகையவர்களும் திடீரென்று தோன்றியதாகத் அறியப்படவில்லை. அப்படித் தோன்றியவர்களும், திட்டமிட்டு, தாம் தோன்றுவதற்கு உரிய காலத்தையும், இடத்தையும், குடியையும் தேர்வு செய்துகொண்டு

அவதரித்ததாகவே கூறப்பட்டுள்ளதை, நமது பண்டைக்கால இலக்கியங்களைக் கற்போர் அறிவர். இவ்வகையில் சற்றே உற்றுச்சிந்தித்தால், ஒருவர் உயர்வதற்கும் சமுதாயத்திற்குரிய பணிகளை ஆற்றுவதற்கும், நிலமும் குடிப்பிறப்பும் இன்றியமையாததென்பது புலப்படும், இவ்வகையில் நமது 'தலைமகன்' ஏ.பி.சி.வீரபாகு அவர்களுக்கு அமைந்த பின்புலம் பற்றிக் காண்போம்.

இமயம்முதல் குமரிவரை விரிந்து பரந்தது 'இந்தியா' என்னும் பாரதநாடு. இப்பரந்த பூமியின் தென்பகுதியாக, பாரத மாதாவின் பாதமாக அமைந்துள்ளது தமிழ்நாடு என்பதை அனைவரும் அறிவர்.

நாற்பாற் குலத்தவர்

தமிழ்நாடு நானிலப்பரப்பைக் கொண்டது. அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்குவகைப் பிரிவுகளைக் கொண்டதாகும். 'குறிஞ்சி' என்பது மலையும் மலைசார்ந்த வளமான நிலப்பகுதியாகும். 'முல்லை' என்பது காடும் காடுசார்ந்த சிறப்பமைந்த நிலப்பரப்பாகும். 'மருதம்' என்பது வளம் நிறைந்த வயல்வெளிகளைக் கொண்டதாகும். 'நெய்தல்' என்பது அலைவீசும் பெருங்கடலை ஒட்டிய கடலும்கடல்சார்ந்த நிலப்பரப்புமாகும்.

இத்தகைய நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தத்தமக்கென சில தொழில்முறைகளை வகுத்து அமைத்துக் கொண்டு, அந்தந்த நிலப்பரப்பில் அந்தந்த மக்கள் செய்யக்கூடிய தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்தனர். அத்துடன் குழுக்களாகப் பிரிந்து, தலைமையை உருவாக்கிக் கொண்டு, ஆளுமைக்குரிய நெறிமுறைகளை வகுத்துக்கொண்டு வாழ்ந்துள்ளனர்.

இவ்வகையில், இந்நாநிலங்களையும் 'நாற்பாற் குலத்தவர் மேற்பார்த்து ஆண்டனர்' எனப் பண்டைச் சான்றோர் எழுதி வைத்துள்ளனர். இப்பிரிவினரை அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனக் குறிப்பிட்டுள்ளனர். அந்தணர் என்போர் வேதம் ஓதி, யாகம் வளர்த்து, நாட்டின் நலம் பேணிப் பணியாற்றினர் என்பர்.

அரசர் என்போர் தம் நாட்டையும் குடிமக்களையும் பசி, பிணி, பகை போக்கிப் பாதுகாத்து, அறம் பேணி, மறம் கடிந்து செங்கோலாட்சி புரிந்தனர். வேளாளர் என்போர் நிலத்தைப் பண்படுத்தி 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்பதையும், 'சுழன்றும் ஏர்பின்னது உலகம்' என்பதையும் நிலைநிறுத்தி உலகிற்கு உணவளித்துத் தாமும் உண்டு வாழ்ந்தவராவர்.

வணிகர் என்போர் தம் நாட்டு மக்களுக்குத் தேவையான பொருள்களை, அவை உற்பத்தியாகும் இடங்களுக்குச் சென்று பெற்று வந்தும், தம் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களைப் பிறநாடுகளுக்குக் கொண்டு சென்று மாற்றியும், சமுதாயப் பயன்பாட்டுக்குப் பெரிதும் துணைபுரிந்து வந்தனர். திரைகடல் ஓடித் திரவியம் தேடி, நம் பண்பாட்டையும் கலையையும் அன்னிய நாடுகளில்தூவி, கால்கொளச் செய்தனர்.

வணிகப் பெருமக்கள், பொருள்களைக் கொள்ளும்போது கூடுதலாகக் கொள்ளாமலும், கொடுக்கும்போது குறைவாகக் கொடுக்காமலும், பிறர் பொருளையும் தமது பொருள் போல் எண்ணி, நடுநிலைமையோடு வாணிகத்தைப் பேணிச் செய்து பாதுகாத்தனர். இவ்வகையில், நாட்டைக் காத்து நலம்புரிந்து உயர்கொள்கைகளோடு இறைவழிபாட்டில் தலைசிறந்தும் விளங்கினர். 'வேற்றுமை இல்லா

விழுத்திணைப் பிறந்த நாற்பாற் குலத்துள்' வணிகர் என்போர் வயல்பாங்கான மருத நிலத்திலும், கடற்கரை ஓரம் அமைந்த நெய்தல் நிலத்திலும் நிலைத்த குடியினராய் வாழ்ந்தனர். அதனால் உள்நாட்டில் விளைந்த பொருள்களைக் கடல் கடந்து வெளிநாடுகளிலும், வெளிநாடுகளில் உற்பத்தியான பொருள்களைத் தங்கள் நாட்டிற்கும் கொண்டுவந்து பகிர்ந்தளிக்க முடிந்தது. இதனைத்தான் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என ஔவையார் கூறியதாதல் வேண்டும்.

கடல் கடந்த வாணிகம்

இந்தியாவைச் சூழ்ந்துள்ள கடற்கரையில் எண்ணற்ற நகரங்கள், சிற்றூர்கள், துறைமுகங்கள் உள்ளன. பழமையான பெருமை படைத்த, காற்றைக் கொண்டே கடலில் கலங்களைச் செலுத்திய தமிழர் வாழ்ந்த பண்டைத் தமிழ் நாட்டின் கடற்கரையில் புகழ்வாய்ந்த பல நகரங்களும் சிற்றூர்களும் இருந்தன. அவை பட்டினம், பாக்கம் என்றெல்லாம் அழைக்கப்பெற்றன. தொன்றுதொட்டுப் பன்னெடுங் காலமாகப் புகழ்பெற்ற பல துறைமுக நகரங்கள் தமிழகத்தில் இருந்தமையை வரலாற்றுச் சான்றுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

'பூம்புகார்' என்றும், காவிரிப்பூம் பட்டினம் 'நகை' என்றும் அன்று அழைக்கப்பட்ட துறைமுக நகரங்கள் நாகப்பட்டினம், கொற்கைப்பட்டினம், காயல்பட்டினம், குலசேகரப்பட்டினம் என்று இன்றும் சிற்சில பெயர் மாற்றங்களோடு நின்று நிலவுவதை அனைவரும் அறிவர். இப்பட்டினங் களெல்லாம் பெருந் துறைமுகங்களாக இருந்த காலத்தில், இவற்றிற்கிடையே சில சிறுதுறைமுகங்களும் நின்று நிலவிய தாகத் தெரிகிறது. சிற்றூர்களாகவும் பேரூர்களாகவும் விளங்கிய இத் துறைமுகங்களின் வழியாகத்தான் தமிழகத்தின் உள்நாட்டு வாணிகமும், கடல்கடந்த வெளிநாட்டு வாணிகமும் நடைபெற்றதாகத் தெரிகிறது. உள்நாட்டில் விளைந்த, கிடைத்த பொருள்கள் தமிழகத் துறைமுகங்களில் ஏற்றுமதியாகக் குவித்து வைக்கப் பட்டிருந்தமையையும், வெளிநாடு களிலிருந்து பெருங்கலன்களில் கொண்டுவரப்பட்ட பொருள்களை இறக்கி வைத்திருந்தமையையும் சிலப்பதிகாரம், பட்டினப்பாலை முதலிய தொன்மையான இலக்கியங்களால் அறியப்படுகின்றன. இவ்வகையில், தமிழகத்தின் வணிகர்குடி சார்ந்த பெருமக்கள் பலர் தொடர்ந்து வழிவழியாகத் தம் தொழிலை அறநெறி குன்றாது செய்து வந்தமையையும் அறிய முடிகிறது.

தூற்றுக்குடி - தூற்றங்குடி

பண்டைத் தமிழகத்தின் ஒரு பகுதியான பாண்டிய நாட்டில் அமைந்த பழம்பதி கொற்கையாகும். இந்நகரின் அருகில் அமைந்ததுதான் 'மாறோக்கம் நாடு' என்பது. இது மன்னார் வளைகுடாப் பகுதியில் உள்ளது. இந் நிலப்பகுதியை ஒட்டி அமைந்த கரைப்பகுதியில் அலைகள் வீசாது, அமைதியாக இருக்கும். நிலப்பரப்பில் பனைமரங்கள் நிறைந்த காடுகள் இருந்தாலும், பனை ஓலைகள் காற்றில் அசைந்து ஒலி எழுப்புவதில்லை. இவ்வகையில் இப்பகுதியில் கடலோ, நிலமோ ஒலி எழுப்பாது அமைதியைப் பாதுகாக்கின்றன.

இத்தகைய இயற்கை அமைப்பை உள்ளடக்கிய இந்நிலப்பகுதியில் வாழும் மக்கள், இறைவிக்கு இறைவன் மந்திரம் கற்பித்ததன் விளைவே இப்பகுதியில் இந்த அமைதி நிலவுவதற்குக் காரணம் என வழங்கி வருகின்றனர். எனவே,

தூத்துக்குடியை 'திருமந்திர நகர்' எனவும் வழங்கி வருகின்றனர். இப்பகுதிக்குத் 'தூத்துக்குடி' என வழங்கப் பெறுவதற்கும் ஒரு அடிப்படைக் காரணத்தை வழங்கி வருகின்றனர்.

உப்பு நீர் மிகுந்த கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த மக்கள், அன்றாடத் தேவைக்கான குடிநீருக்கு, நல்ல தண்ணீருக்காகக் கடற்கரைப் பகுதியில் சிறுசிறு ஊற்றுகளை (தூற்றுகளை) அன்றாடம் தோண்டி, நீரைச் சேகரித்து வந்தனர். இவ்வாறு தூற்றுத் தூற்று நாள்தோறும் தண்ணீர் எடுத்த காரணத்தால், 'தூற்றுக்குடி' என வழங்கப் பெற்று, அதுவே பிற்காலத்தில் 'தூத்துக்குடி' என்று மாறியதாகவும், வழங்கப் பெறுவதாகவும் தொன்று தொட்டுக் கூறிவருகின்றனர்.

வாடித்தெருவில் பாடி வீடுகள்

இந்தத் தூத்துக்குடிப்பட்டினத்தின் 'வாடித்தெரு'வில் மாடிவீடுகள் அமைத்து வாழ்ந்தனர் வணிகர் சிலர். கோட்டை கொத்தளங்களுடன் கூடிய, குறுநில மன்னர்கள்போல் பெரும் மாளிகைகளைக் கட்டி வாழ்ந்த வணிகர்களின் இல்லங்களைக் கொண்டதாக வாடித்தெரு விளங்கியது. இத்தெரு கடற்கரையை அடுத்து, நகரின் கீழ்க்கோடியில் கட்டுக்காவல் அமைந்ததாகத் திகழ்ந்தது. இந்தச் சிறப்பமைந்த வீதியில்தான் 'நகர்த் தலைவர்' எனப் போற்றப்பட்ட, 'பிரதானி செட்டியார்' எனப் போற்றிப் பாராட்டப் பெற்ற பரமசிவன் செட்டியார் வாழ்ந்து வந்தார்.

பரம்பரைச் சைவவேளாளர் குடியில் பிறந்த பிரதானி செட்டியார், பெருங்குடி வணிகராகத் திகழ்ந்தார். இவரே வாடித்தெருவை வேலியிட்டுப் பாதுகாத்தவராவார். சைவவேளாண் செட்டிமார் மரபில் தோன்றிய வெள்ளாஞ்செட்டியார் மரபில் உதித்த பரமசிவன் செட்டியார், பெருஞ்செல்வத்தையும் உதாரக் குணத்தையும் பெற்று, இறைவழிபாட்டில் தலைசிறந்து விளங்கி, மக்களின் தேவைகளை நிறைவு செய்து, எல்லோரும் போற்றுமாறு மன்னர்போல் வாழ்ந்தார்.

கால்டுவெல் ஐயர்

இந்த வாடித்தெருவைப் பற்றிக் கால்டுவெல் ஐயர் அவர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புச் சிந்தனைக்குரியதாகும். கால்டுவெல் ஐயர் என்பவர், தமிழகத்திற்குக் கிறிஸ்தவச் சமயப் பணியாற்ற வந்தவர்; இந்தியாவில் வழங்கிய பல மொழிகளைக் கற்று ஆய்வுசெய்து, தமிழ்மொழி என்பது, தனித்த ஒப்பற்ற மொழி, சமஸ்கிருதத்தினின்று தோன்றியதோ, அம் மொழி இனக் குடும்பத்தைச் சேர்ந்ததோ இல்லை என்றும், இந்தியாவிலும் உலகின் பிற பகுதிகளிலும் வழங்கும் திராவிட மொழி இனத்தின் தாயாகத் திகழ்வது என்றும் கண்டறிந்து, தக்க சான்றுகளோடு நிறுவி நிலைநாட்டியவர்; தம் சமயப் பணியோடு திருநெல்வேலி, தூத்துக்குடி பகுதிகளில் பல்வேறு கல்வி நிலையங்களை நிறுவி, மக்கள் கல்வி கற்று வாழ்வில் உயர்வதற்கு அரும்பணியாற்றியவர்.

கால்டுவெல் ஐயர் அவர்கள், 'வாடி' என்பது டச்சு மொழிச்சொல் என்றும், அதற்கு 'உயர்ந்த இந்துக்கள் வாழும் சுற்றுச்சுவர் அமைந்த குடியிருப்பு' என்றும் எழுதி வைத்துள்ளார். அத்துடன், 'இந்த வாடித் தெருவில் வாழ்ந்த பெருவணிகர்கள் முத்துக்களின் விலையை நிர்ணயிப்பதில் வல்லவர்கள்' என்றும் எழுதி வைத்துள்ளார். மேலை நாட்டவர்க்கு இச்செய்தி எட்டும் வகையில், பிரதானி செட்டியார் பெயரோடும் புகழோடும் வாழ்ந்தார் என்பதும் கால்டுவெல் ஐயர் அவர்களின் குறிப்பால் புலப்படுகிறது.

சண்முகப் புரவி

ஈழநாட்டுடனும் பிற வெளிநாடு களுடனும் பிரதானி செட்டியார் 'சண்முகப் புரவி' என்னும் உருமூலம் கப்பல் வாணிகம் புரிந்து, பெருஞ் செல்வம் ஈட்டி, அறம் பல புரிந்து, பெயரோடும் புகழோடும் வாழ்ந்தார். இவர் தம் மகளாரின் திருமணத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து பந்தல் அமைப்பவர்கள் வந்து, மணப்பந்தலை வேய்ந்ததாகக் கூறுவர். வாழ்வதற்குரிய மாளிகை கட்டியபோது, 'சண்முகப் புரவி' என்னும் கப்பலின் உருவை உட்கொண்டு அமைத்ததாகக் கூறுவர்.

வணிகர்களுள் கோமானாக வாழ்ந்த 'பிரதானி' பரமசிவன் செட்டியார், நாள்தோறும் பூவும் புகையும் கொண்டு இறைவழிபாட்டைச் செய்யத் தவறாதவர்; தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த புண்ணியவான்; பரிவு நிறைந்த மனமுடையவராகப் பல்வேறு அறச்செயல்களைப் புரிந்தவர்.

சங்கரபாகம்

சைவ சமயத்தைப் பின்பற்றிய பாரம்பரியத்தில் தோன்றிய வணிகரான செட்டியார், தாம் வாழ்ந்த நகருக்கு மேற்கில் அமைந்ததும், கயத்தாற்றுக் குறுநிலமன்னராகவும், ஆங்கிலேயருக்குச் சிம்ம சொப்பனமாகவும் விளங்கிய மன்னரால் கட்டப்பெற்றதாகக் கூறப் பெற்ற, சிறியதாக இருந்த 'சங்கர ராமேஸ்வரர் - பாகம்பிரியாள்' என்னும் சிவன் கோயிலைப் பெரியதாகப் புதுப்பித்து, மகாமண்டபத்தோடு அர்த்த மண்டபங்களையும் அமைத்து, திருக்கோயிலைச் செப்பனிட்டு, தம் மனம் குளிரக் குடநீராட்டு விழாவும் எடுத்தவர். அதே நாளில் பிறந்த தம் மகனுக்குச் 'சங்கரபாகம்' என்று பெயரிட்டு மகிழ்ந்தார். இன்றும் இப் பெயர் வாடித்தெருவில் மேலும் சிலருக்கு இட்டு வழங்கப்படுகிறது.

இச்சிவன் கோயிலுக்கு அருகே ஒரு பெருமாள் கோயிலும் இருந்தது. அதனையும் புதுப்பித்துக் குடமுழுக்கு செய்வித்தார். ஊருக்கு வடக்கே அமைந்த சந்தன மாரியம்மன் கோயிலையும் புதுப்பித்துக் குடமுழுக்கு செய்தார். தாம் வாழ்ந்த பகுதியில் இருந்த மக்கள் அனைவரும், அவரவர்க்கு விருப்பமான தெய்வத்தை வழிபட்டுச் சிறக்கத் தம்மால் இயன்ற உதவிகளை எல்லாம் செய்தார். சிவபக்தியில் சிறந்த செட்டியார் தம் குடும்பத்தார் அனைவருடன் கீழூரிலிருந்து மேலூர் வந்து, பத்து நாள்கள் தங்கியிருப்பார். அதற்காகத் தங்கும் விடுதி ஒன்றும் கட்டிவைத்தார். கோயில்களில் திருவிழாக்களை முன்னின்று நடத்தினார். இந்த விடுதிதான் பிற்காலத்தில் சிவன் கோயிலுக்கு அருகில் நகர்மன்றப் பயணி விடுதியாக மாறியது.

பிரதானி செட்டியார்

பரமசிவன் என்று அழைக்கப்பெற்ற பிரதானி செட்டியாருக்குக் கந்தசாமி செட்டியார், சங்கரபாகம் செட்டியார், ஆறுமுகம் செட்டியார், இராமநாதன் செட்டியார், வீரபாகு செட்டியார் (ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் பாட்டனார்) என்கிற ஆண் மக்கள் ஐவரும், சண்முகத்தம்மாள், சொர்ணத்தம்மாள், பகவதி அம்மாள் என்னும் பெண் மக்கள் மூவரும் பிறந்தனர். அருட்செல்வத்தாலும் பொருட்செல்வத்தாலும் மக்கட் செல்வத்தாலும் பொலிவுபெற வாழ்ந்த பிரதானி செட்டியார், 1864ஆம் ஆண்டு இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

பிரதானி செட்டியாரின் மக்களுள் ஐந்தாமவராகிய வீரபாகு செட்டியார், வணிகக் குடும்பத்திற்கு இன்றியமையாத எண்ணும் எழுத்தும் கற்றுத் தெளிந்தார்; ஆங்கிலமும் அருந்தமிழும் கற்று வல்லவரானார். ஏற்கெனவே ஊர்

வழக்குகளை எல்லாம் விசாரித்துத் தீர்த்துவைக்கும் முதன்மை பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவராதலால், வீரபாகு செட்டியார் முதல்தர வழக்கறிஞரானார். எனவே, 'வக்கீல் வீரபாகு பிள்ளை' என அழைக்கப் பெற்றார்.

அந்நாளில், வாணிகம் செய்யும் வேளாளர் 'செட்டியார்' என்றும், உத்தியோகம் பார்ப்போர் 'பிள்ளை' என்றும் பட்டப்பெயரிட்டு வழங்கப் பெற்றனர். இப்படிச் சிலர் தம் குலத்தொழிலான வாணிகத்தைக் கைவிட்டு உத்தியோகம் தேடியதற்குக் காரணம், அந்நாளில் இந்தியாவிற்கு வந்த டச்சுக்காரர், போர்த்துக்கீசியர், ஆங்கிலேயர் என மேலைநாட்டவர் பலரும் வாணிகத்தைக் கைப்பற்றியதால், வாடித்தெரு வணிகர்களின் வெளிநாட்டு வாணிக செயல்பாடு தடைபட்டதுதான்.

அந்நியர் வருகை

அந்நியர் வருகையால் நாடு சிறிது சிறிதாக வாணிகத்தை மட்டுமன்றி, ஆளும் பொறுப்பையும் இழந்தது. அந்நியர் ஆட்சி இந்தியாவில் சிறிது சிறிதாகக் காலூன்றிக் கொடிகட்டிப் பறக்கத் தொடங்கியது. நாட்டில் நிலவிய அந்நிய ஆதிக்கம், மக்களின் தொழிலைத் தொடங்கி, அனைத்திலும் தலைவிரித் தாடியது. எங்கும் அடக்குமுறை, எதிலும் தடைகள். மக்களின் அவல வாழ்க்கை கண்டு சான்றோர்கள் சிலர் அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடக் கொதித்து எழுந்தனர். வழக்கறிஞர் வீரபாகுவும் தேசிய உணர்வால் உந்தப் பெற்றார். இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தார்.

இந்திய தேசிய காங்கிரசில் சேரல்

சென்னை மாநகரில் கூடிய இரண்டாவது அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டிற்கு பிரதிநிதியாகச் சென்றார். மக்கள் பணிபுரிந்த வழக்கறிஞர் வீரபாகு, 19-5-1891இல் நகர்மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். ஆங்கிலத் துணைக் கலெக்டர் தலைமையில் நடைபெற்ற முதல் நகர்மன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அன்று தொடங்கி 20-12-1899 வரை நகர்மன்ற உறுப்பினராக இருந்தார் வீரபாகு.

1885-86இல் தூத்துக்குடி நகர் ஐந்து வார்டுகளாகப் பிரிக்கப்பெற்று நகர்மன்றம் (Municipal Council) உருவாக்கப் பெற்றது. அதற்கு 10 உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் பெற்று, 5 உறுப்பினர் நியமனம் செய்யப்பட்டு, ஒருவர் பணிப்பொறுப்பு (Ex - Offico) எனச் சேர்க்கப்பெற்று, 16 உறுப்பினர்களைக் கொண்டு நகர்மன்றம் இயக்கப்பட்டது. இதற்கான முதல் தேர்தல் 12-10-1835 அன்று நடைபெற்றது. ஜே.எம்.பி. ரோச் விக்டோரியா என்பவர் முதல் நகர்மன்றத் தலைவராகப் பொறுப் பேற்றார். பின்னர், சேவியர் மோத்தா பர்ணாண்டசும், ஜி.செல்விஜனாரும் நகரமன்றத் தலைவர்களாகப் பொறுப்பு வகித்தனர். நகர்மன்றத்திலும் நீதிமன்றத்திலும் அரும்பணியாற்றி, அழியாப் புகழை நிலைநாட்டிய வீரபாகுபிள்ளை 1900ஆம் ஆண்டு மண்ணுலக வாழ்வை நீத்தார்.

பரமசிவனார்


இந்தவீரபாகுபிள்ளையவர்களுக்கும் பரமசிவனார் (ஏ.பி.சி.வீரபாகுவுக்குத் தந்தை), ஆறுமுகம் என்னும் மைந்தர் இருவர்இருந்தனர். ஆறுமுகம்செட்டியார் பிள்ளைப்பேறுஏதுமின்றி மறைந்தார். பரமசிவனார், ஓட்டப்பிடாரம் ராம. உ.அ.சங்கரநாராயண பிள்ளை மகளான உலகம்மாளை மணந்தார். வள்ளுவர் வகுத்த 'சுற்றம் தழாஅல்' என்னும்


அதிகாரத்தில் கூறியுள்ள இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தவர் பரமசிவனார். 'மகனறிவு! தந்தையறிவு!' என்பதுதானே நம் நாட்டு ஆன்றோர் வாக்கு! உற்றார் உறவினரைப் பேணிப் பாதுகாத்து, உறுதுணையாக இருந்து வேண்டிய உதவிகளைச் செய்து பாதுகாக்கும் நல்லுள்ளம் கொண்ட உத்தமராக இவர் வாழ்ந்தார், நீதிமன்றப் பணியிலும் நேர்மையாளராகப் புகழீட்டினார்.

நிகழ்வுகளை முன்னதாகவே கூறும் உலகம்மையார்

பரமசிவனார் தம் சுற்றத்தவர் வாழ்ந்த வாடித்தெருவைப் புதுப்பித்துப் பெருக்கினார். 'மட்டைக்கடைப் பிள்ளையார் கோயில்' என வழங்கப்பெறும் சொர்ண விநாயகர் கோயிலுக்குச் சென்று வழிபாடு ஆற்றுவதைக் கடமையாகக் கொண்டு வாழ்ந்தார். இவர்தம் துணைவியார் உலகம்மாள் பக்தியில் பிறருக்கு இளைத்தவர் அல்லர். இவ்வகையில் பலவேறு விரதங்களை மேற்கொண்டு வாழ்ந்தார். ஒட்டப்பிடாரம் உலகம்மை என்கிற பெண் தெய்வம் இவ்வம்மையாருக்கு நேரில் தோன்றிக் காட்சி வழங்குமளவிற்குப் பக்தியில் சிறப்புடன் விளங்கியதாகக் கூறுவர். இறைவியின் நல்லருளைப் பெற்றிருந்தமையால் தம் குடும்பத்தின் நிகழ்வுகளை உலகம்மையார் முன்னதாகவே அறிந்து கூறும் திறமை பெற்றிருந்தாராம்.

பரமசிவன் செட்டியார் உலகம்மையார் தம்பதியருக்கு, முதல் குழந்தையாகப் பெண் மகவு ஒன்று பிறந்தது. அம்மகவுக்குக் கல்யாணி எனப் பெயர் சூட்டினர். ஆசைக்கு ஒரு பெண் பிறந்ததும், ஆஸ்திக்கு ஓர் ஆண் மகவு தேவை என உலகம்மையார் எண்ணினார். எனவே, அரிய நோன்புகளை மேற்கொள்ளத் தொடங்கினார். ஆண் மகவுக்காகத் தவமாய்த் தவமிருந்தார் எனக் கூறலாம்! நற்பேறு காரணமாக வீரபாகு பிறந்தார். இவருக்குப் பின்னர் மகாலட்சுமி, கோமதி என்கிற மகளிர் இருவர் பிறந்தனர். ஆக, இத் தம்பதியருக்கு மகளிர் மூவரும் மகன் ஒருவரும் பிறந்தனர்.





இளமையும் கல்வியும்

ஆண்குழந்தை பிறக்கவேண்டும் என்பதற்காக உலகம்மையார் பல்வேறு நோன்புகளை மேற்கொண்டார்; எண்ணற்ற அறச்செயல்களைச் செய்தார். 'நம்பிக்கையுள்ளவர்களுக்கே இறைவன் நல்லருள் புரிவான்' என்பது அவர் உறுதியான எண்ணமாக இருந்தது. தாம் எண்ணியதை எண்ணியவாறு பெறுவதற்காக இடைவிடாது பல்வேறு விரதங்களையும் செயல்களையும் நிறைவேற்றினார். பௌர்ணமி நாளன்று குலதெய்வத்திற்கும் பொங்கல் வைத்தார்; பல்வேறு நேர்ச்சைகளை நிறைவேற்றினார்; ஏழைக் குழந்தைகளுக்குக் கவளம் கவளமாக நல்லுணவு அளித்தார். அறிவோடும் ஆற்றலோடும் தம் குலம் தழைக்க நல்லதொரு ஆண் குழந்தை பிறக்க வேண்டுமென்று பாடுகிடந்தார்.

நம் வீரபாகு பிறந்தார்

உலகம்மையின் விரதங்களாலும் அறச் செயல்களாலும் இறைவன் நல்லருள் புரிந்தார். அதனால் 1915ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதிக்குச் சரியான சித்திரைத் திங்கள் 23ஆம் நாளன்று உத்திராட நட்சத்திரம் கூடிய நல்லோரையில் ஆண் மகவு பிறந்தது. அதாவது, நம் வீரபாகு பிறந்தார். தந்தையார் பரமசிவன் செட்டியார், தம் மகனைக் கண்டு மகிழ்ந்தார். இறைவனின் அருள் திறத்தை எண்ணி வியந்து வணங்கினார். பல்வேறு வளங்களால் சிறந்த வாடித்தெருவில் புதியதொரு தலைவர் வந்து தோன்றியதாக எண்ணினார்.

வாடித்தெரு ஒவ்வொரு தலைமுறையிலும் பெருமைக்குரிய தலைவர் ஒருவரைத் தந்து மகிழும் தன்மையுடையதாகும். எனவே, பரமசிவன் செட்டியார், ஊருக்கு வடக்கில் ஐந்து மைல் தொலைவில் உள்ள 'அரசடி' என்னும் ஊரில் கோயில் கொண்டுள்ள, தம் குலதெய்வமாக விளங்கும் சாஸ்தாவான பச்சைப் பெருமாள் ஐயனார்க்கு சுற்றத்தாருடன் சேர்ந்து முறைப்படி அபிஷேகம் நடத்திப் பூசை செய்து விழா எடுத்து மகிழ்ச்சியைக் கொண்டாடினார். அகலக் கண் விழித்து துருதுருவெனப் பார்த்த குழந்தைக்கு நல்லதொரு பெயர் சூட்டுவதற்குரிய நாளைத் தேர்வு செய்து, சுற்றமும் நட்பும் சூழ்ந்திருக்கத் தம் தந்தையாரின் அருமைப் பெயராகிய 'வீரபாகு' என்பதனையே தம் மகனுக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

குழந்தை வீரபாகு குறுகுறுவென நடந்தும் சிறுகை நீட்டியும், அட்டிலில் இட்ட உணவைத் தொட்டும், இட்டும், கொட்டியும் பெற்றோர்க்கும் உற்றார்க்கும் மகிழ்வூட்டி வளர்ந்தது. பிள்ளைப்பருவத்திலேயே கண்களில் வெளிப்பட்ட அருள்ஒளி அனைவரையும் ஈர்த்தது. குறிப்பாக, அக்குழந்தை செய்த தவப்பயன், அத்தை மகாலட்சுமி அம்மையாரின் உள்ளத்தைப் பெரிதும் ஈர்த்தது, இந்த அத்தை யார்?

குழந்தை வீரபாகுவின் தந்தை, பரமசிவன் செட்டியாரின் தந்தை வக்கீல் வீரபாகு பிள்ளைக்கு, அண்ணன் சங்கரபாகம் பிள்ளைக்கு மகளாவார். அதாவது பரமசிவன் செட்டியாரின் பெரியப்பா மகள் ஆவார். இவ்வகையில் சகோதரி முறை. சங்கரபாகம் செட்டியாரின் தவப்புதல்வியான மகாலட்சுமி அம்மையார், வாடித்தெரு வணிகர்களுள் ஒருவரான ஆ.ப.சொக்கலிங்கம் செட்டியாருக்கு மணம் முடிக்கப் பெற்றார். 'ஆ.ப.' என்பது பழம்பெருமை வாய்ந்த குடும்பப் பெயர்.

தானமாகச் சொத்து வழங்கியவர்

ஒன்பது தலைமுறைகளுக்கு முன்னர் வாழ்ந்த முத்துமாடன் செட்டியாரின் இளையமகன் பச்சமுத்துச் செட்டியார் வாழ்ந்தவராவர். மூத்த மகன் அய்யம்பெருமாள் செட்டியார் வழியில் தோன்றிய ஆறுமுகம் செட்டியார் மகன் பச்சைப்பெருமாள் செட்டியார் என்பவர் பெரிய வள்ளல்; சத்திரம் சாவடிகள் கட்டியவர்; பல மானியங்களை எழுதி வைத்தவர். சிவபெருமானுக்கும் விநாயகப் பெருமானுக்கும் அம்மனுக்கும் கோயில்கள் கட்டியதோடு, முட்டின்றி விழாக்கள் நடத்தவும் வழிவகுத்தவர். அதற்கென அக்காலத்திலேயே ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் மதிப்புள்ள சொத்துக்களைத் தானமாக எழுதி வைத்தவர். இன்றும் சத்திரம் தெருவில் இவர் அமைத்த சத்திரத்தில் விழாக் காலத்தில் சுவாமி வந்து இறங்குவது வழக்கமாக உள்ளது. இங்குதான் சைவ சித்தாந்தம் தொடங்கப் பெற்றதாகக் கூறுவர்.

வேம்பு

இத்தகைய அறச்செயல்கள் பல புரிந்தவரின் செல்வப் புதல்வர்தான் சொக்கலிங்கம் செட்டியார். இவரே மகாலட்சுமி அம்மையாரை மணந்து இனிதே இல்லறம் நடத்தி வந்தார். மகப்பேறில்லா நிலையில் அண்ணன் பரமசிவனாரின் மகன் வீரபாகுவிடம் ஈடுபாடு கொண்டார். எதிர் வீட்டில் தோன்றி இன்பமூட்டி வந்த இளங்குழந்தையை, மருமகனை அன்போடு எடுப்பார்; உணவு ஊட்டுவார்; தமக்குக் கிடைத்த பேறுதற்கரிய செல்வம் எனப் பாராட்டி மகிழ்வார். ஈன்றெடுத்த தாய் அன்போடும் பரிவோடும் தம் மகனை 'வேம்பு' என்று அழைத்து மகிழ்ந்தார்.

அங்க அவய அழகோ அழகு

தனக்குக் குழந்தை இல்லாக் குறையைத் தீர்த்த வீரபாகுவை மகாலட்சுமி அம்மையார் தூக்கித் தாலாட்டுவார்; சீராட்டிப் பாராட்டுவார். 'வெல்வெட்' சட்டை அணிவித்து, பொட்டிட்டு, காதுகளில் வைரக்கல் கடுக்கண்களை அணிவித்து பூரித்துப் போவார். அடிஎடுத்து வைத்துக் குறுகுறுவென நடந்தபோது, தம் செல்வமகனுக்கு டாலர் இணைத்த இரட்டை வடத் தங்கச்சங்கிலியைக் கழுத்தில் பூட்டி, கைகளில் தங்கக் காப்பாக வளையல்களை இட்டு, இடுப்புக்குத் தங்க அரைஞாண், கால்களில் வெள்ளிச் சதங்கைக் கொலுசு, தண்டை எனப் பல்வேறு அணிகலன்களைப் போட்டு அழகுபடுத்துவார். அழகு மெறுகேறி வளர்ந்த மகனை நாள்தோறும் கண்டு மனம் மகிழ்ந்தார். அண்ணன் மகனைத் தம் மகனாக மகன்மை கொண்டார்.

தாய் தந்தையாரின் அன்போடு அத்தையின் அரவணைப்பும் ஆ.ப.சொக்கலிங்கம் செட்டியாரின் பாசப் பொழிவும் வீரபாகுவைச் செம்மையாக வளர்த்தன.

வீரபாகுவின் பள்ளி கல்வி

ஆ.ப.சொக்கலிங்கம் செட்டியாருக்கும் மகாலட்சுமி அம்மையாருக்கும் செல்லமகனாக வளர்ந்த வீரபாகு, ஐந்து வயதைத் தொட்டபோது பள்ளிக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு, விஜயதசமி நாளுக்கு மறுநாள் ஆயுதபூஜையன்று, வீரபாகுவிற்கு அட்சராப்பியாசம் தொடங்குவது என முடிவு செய்யப்பெற்றது. முகப்பொலிவுடன் ஓடிஆடி விளையாடிய முதலாளி வீட்டுக் குழந்தை பள்ளிக்குச் செல்லப் போவதைக் காண வேண்டுமென வாடித் தெரு முழுவதும் ஆவல் கொண்டது.

வளம் நிறைந்தது வாடித்தெரு; தலைமுறை தோறும் பெருந்த தலைவரைத் தந்து மகிழும் சிறப்புடையது. அத்தெருவில் குறுநில மன்னர்போல் செல்வர்கள் பலர் பெரிய பெரிய வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் தங்கள் வீடுகளில் நடுத்தரமான உறவினர்களைக் குடியேற்றி, ஒற்றுமையுடன் ஒரே குடும்பமாக வாழ்ந்தனர். இவ்வகையில் பல சிறப்புகளை வாடி வீதி பெற்றிருந்தது. அதாவது, பெரியதொரு தோட்டத்தை விலைக்கு வாங்கி, நாற்புறமும் வேலியிட்டு, வாடியாக்கி, நூறு வீடுகள்வரை கட்டி, வேளாண் மரபு சார்ந்த சைவச்செட்டியார்கள் வாழ்ந்து, வாணிகம் செய்து, செல்வ வளத்தைப் பெருக்கி, பெருமை சேர்த்த தொன்மையான தெருவாகத் திகழ்ந்தது. தெருவுக்கு மேற்கே கோயில்களில் உள்ளதுபோல் பெரிய கல்நிலை, கதவுகள், கிழக்குப் பக்கம் சிறியநிலை, இரும்புக் கதவு, வடபுறம் வண்டிகள் வந்து செல்லத் திறப்பு வாயில் என விளங்கியது.

யாவரையும் வாடவிடா வாடிவீதி

அக்காலத்தில் பிரதானிச் செட்டியார் பல்லக்கில் பயணம் செய்வார். அந்தப் பல்லக்குச் சாவடி இன்னும் உள்ளது. அந்நாளில் திருமூலம் செட்டியார், பிச்சன் செட்டியார் ஆகியோர் இரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட பீட்டன் (சாரட்டு/கோச்) வண்டியில் பயணம் செய்வர். அவசியம் ஏற்பட்டால் உறவினர்களும் வண்டிகளைப் பயன்படுத்துவர். இவ்வகையில், பிறர் வாடாமல் எல்லாரையும் ஒரே நிலையில் வைத்து எண்ணும் பெருந்தகையாளர்கள் அத்தெருவில் வாழ்ந்தனர். எனவே வாடித்தெரு, வளம் பெற்றதோடு, இன்ப துன்ப நிகழ்வுகளிலும் இணைந்தே இருந்தது. இந்த வாடிவீதியில் முதலாளி வீட்டுப் பிள்ளையின் கல்வித் தொடக்க நாளன்று விழாக்கோலம் பூண்ட தனிச் சிறப்பை எடுத்துரைக்காமல் இருக்க முடியாது.

வாடித்தெரு முழுவதும் பந்தலிடப் பட்டது. எங்கும் தோரணங்கள் கட்டப் பெற்றன. ஊர் மக்கள் அனைவர்க்கும் சாப்பாடு போட்டு விருந்து படைக்கப் பட்டது. தெரு முழுவதும் திருமணக் கோலாகலம் காணப்பட்டது. ஆயுத பூசையன்று வீரபாகுவிற்கு ஏடு தொடங்கி வைத்தவர், 'பாலு வாத்தியார்' என்று அழைக்கப் பெற்ற சங்கரநாராயணன் செட்டியார். பாலு வாத்தியார் 'தி.ச.தொடக்கப் பள்ளி' என்னும் பள்ளியை நடத்தி வந்தவர்; மிகவும் கண்டிப்பானவர்; கைராசிக்காரர். பாலு வாத்தியாருக்கு உயர்ந்த ஆடையும் மேலாடையும் மரியாதைக்கு அளிக்கப்பட்டது.

மாணவன் வீரபாகுவிற்கு சரிகைக்கரை வேட்டி கட்டி, வெல்வெட் சட்டை அணிவிக்கப்

பெற்றது. சைவ நெறிமுறைப்படி திருவிளக்கேற்றி வைத்து, அதன்முன் அமர்த்தி 'ஹரி ஓம் நம! குருவே துணை' எனப் பாடம் தொடங்கப்பெற்றது. விழாவில் பங்கேற்க வந்திருந்த பெரியவர்கள் அனைவரும் மனமார வாழ்த்தி, திருநீறு பூசினர். பின்னர், பசிப்பல்லக்கில் குழந்தை வீரபாகுவையும் ஆசிரியர் பாலு வாத்தியாரையும் அமரச் செய்து ஊர்வலம் எடுக்க முடிவு செய்தனர்.

ஆ.ப.சொக்கலிங்கம் செட்டியார், தம் உறவினரான 'பூட்சு' ஆறுமுகம் செட்டியார் மகன், 'சேது' என்கிற வழித்துணை ராமனையும் உடன் அமரச் செய்து ஊர்வலம் வரச் செய்தார். பல்லக்கிற்கு முன் நெல்லை சின்ன சுப்பையாக் கம்பர் நாதசுரமும் சிறப்பு மேளமும் முழங்க, ஊர்வலம் ஓர் அரசர் வீட்டுப் பிள்ளைக்கு நிகழ்த்துவதுபோல் நிகழ்த்தப்பெற்றது.

மிகவும் முரண்டுகாரன்

ஊர்வலம் முடிந்ததும் பல்லக்கிலிருந்து இறங்கிய வீரபாகு தாம் உடுத்தியிருந்த ஆடம்பரமான ஆடைகளை எல்லாம் களைந்து எறிந்துவிட்டு, வீட்டுக்குள் ஓடி, சாதாரண உடைகளை அணிந்தான். 'விளையும் பயிர் இளமையிலே தெரியும்!' என்பது சான்றோர் வாக்கன்றோ? இளமையிலேயே வீரபாகுவின் மனம் எளிமையை நாடியது போல்தோன்றியது இச்செயல்! அதாவது அக்குழந்தை ஆடம்பரமான பவனியை வெறுத்ததுபோல் இருந்தது! ஆனால், மாமன் - வளர்ப்புத் தந்தையாகிய ஆ.ப.சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் என்ன செய்தார்? 'மிகவும் முரண்டுக்காரன்' என்று கூறியபடி, சிரித்துக்கொண்டே வாரி எடுத்து அணைத்து மகிழ்ந்தார்.

பாடத்தோடு பாடலிலும் தேற்றம்

தி.ச.பள்ளியில் தொடக்கக் கல்வியைத் தொடங்கிய வீரபாகு, மூன்றாம் வகுப்புக்காக அருகிலிருந்த கால்டுவெல் உயர்பள்ளிக்கு அனுப்பப்பட்டார். கால்டுவெல் பள்ளி கிறிஸ்தவர்களால் நடத்தப்பெற்றது. ரெவரெண்ட் ஞானக்கண், கால்டுவெல் என்பார் அப்பள்ளியின் நிர்வாகியாகப் பணியாற்றி வந்தார்.

சிறுவன் வீரபாகுவினிடத்தில் கால்டுவெல்லுக்கு அளவற்ற அன்பும் ஈடுபாடும் ஏற்பட்டது. தம் உயிர்போல் நேசித்தார். அவர் தேவாரப் பாடலில் ஈடுபாடு உடையவர். 'மாதர் பிறைக் கண்ணியானை' என்னும் பாடலைக் கேட்கும்போது மெய் மறப்பாராம். சைவ சமயம் சார்ந்த குடும்பத்துப் பையனாகிய வீரபாகு, அப்பள்ளியில் நல்லமுறையில் கல்வி பயின்றார். சில வேளைகளில் பள்ளிக்கூடங்களில் கடவுள் வணக்கம் பாடச் சொன்னால், உடன் தேவாரப் பாடலையும் வீரபாகு பாடுவாராம்.

சுமார் எட்டு வயதிலேயே, 'மாதர் பிறைக் கண்ணியானை' என்னும் திருப்பாடலைக் கேட்போர் மனம் குளிரப் பாடினார். அப்போது, வாடித்தெருவிலிருந்த வாலிபர் சங்கத்தில் தேவாரப் பாடலைப் பாடுமாறு வீரபாகுவை வேண்டுவர். அப்போதெல்லாம் 'பொன்னார் மேனியனே' பதிகத்தைப் பண்ணுடன் பாடி உருகச் செய்வாராம். வளர்ந்த பின்னரும், வாழ்நாள் முழுவதும் இப் பதிகங்களைத் தம் காலைப் பூசை வேளையில் பாடி மகிழ்ந்தார் வீரபாகு.

தூத்துக்குடி நகரில் 1924ஆம் ஆண்டு, 'பிளேக்' என்னும் கொடுநோய் பரவியது. எனவே, பாளையங்கோட்டை பிச்சிவனத்தெருவிலிருந்ததம்பாட்டியார் வீட்டிற்குச் சென்றிருந்தார். அப்போது அங்கிருந்த பஜனை மடத்தில் தேவாரப் பதிகங்களைப் பாடி மகிழ்வித்தாராம்.



உயர்கல்வி

1931ஆம் ஆண்டு கால்டுவெல் பள்ளியில் வீரபாகு பள்ளி இறுதிப் படிப்பை முடித்தார். தொடர்ந்து நெல்லை ம.தி.தா. இந்துக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் பயின்று, இண்டர் மீடியட் படிப்பை முடித்தார். மாணவப் பருவத்திலேயே, அக்கல்லூரியில் படித்து வந்த ஏழை மாணவர்களின் கல்விக்குத் தம்மாலான உதவி செய்வதற்காக நிதியாக ரூபாய் ஆயிரம்வரை அக்காலத்திலேயே திரட்டிக் கொடுத்தார். 'ஈகையும் கொடையும் பிறவி குணம்' என்பதை நிலைப்படுத்தும் வகையில் இச்செயல் அமைந்தது. அத்துடன் மாணவப் பருவத்திலேயே தம்மிடம் குடிகொண்டிருந்த தலைமைப் பண்பையும் வெளிப்படுத்தினார் எனலாம். இவ்வகையில், வீரபாகு கற்பதில் மட்டுமன்றி, பொது நலப் பணிகளிலும் அக்கறை காட்டினார்.

இண்டர்மீடியட் வகுப்பை முடித்ததும் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக அன்றைய சென்னை மாகாணத்தின் தலைநகரமான சென்னை மாநகருக்குப் பயணமானார். சென்னையில் புகழ்வாய்ந்த லயோலா கல்லூரியில்பி.ஏ. பட்டப்படிப்பில்சேர்ந்து பொருளாதாரத்தை முக்கியப்பாடமாகக் கொண்டு கல்வி கற்கத் தொடங்கினார். சென்னைப் பல்கலைக்கழகம் 1935ஆம் ஆண்டு நடத்திய பட்டயத் தேர்வில் மாகாண வரிசையில் சிறப்பாகத் தேர்வு பெற்றார்.

சென்னை லயோலா கல்லூரியில் பயின்று கொண்டிருந்த காலத்திலேயே, 1934ஆம் ஆண்டு கவிஞர் தாகூர் அவர்களால் நிறுவப்பெற்ற சாந்தி நிகேதனுக்கு நிதிஉதவி செய்வதற்காகத் தேர்வுசெய்து அனுப்பப்பெற்ற குழுவில் பங்கேற்றுச் செயலாற்றிப் பாராட்டப் பெற்றார்.

சென்னையில் கல்லூரிப் படிப்பை மேற்கொண்ட காலத்தில், தம் செலவுக்காகப் பெற்றோரால் அனுப்பப் பட்ட பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்து, ஒரு பகுதியை மீதமாக வைத்து, அதை மாதந்தோறும் ஏழை மாணவன் ஒருவனுக்குக் கொடுத்துப் படிப்பைத் தொடர உதவி வந்தார். இப்படி இளமைப்பருவத்திலேயே ஊன்றப்பட்ட விதைதான், அவர் மனதில் பிற்காலத்தில் பல மாணவர்களைப் படிக்க வைக்கவும், பல கல்வி நிலையங்களை நிறுவவும் பெரு விருட்சமாக உருக்கொண்டது எனலாம்.

உறுதியான மனம் படைத்தவர்

கல்வியில் ஆர்வம் கொண்டது போலவே அரசியலிலும் சமூகப் பணிகளிலும் வீரபாகு ஈடுபாடு காட்டினார். செல்வத்தால் மட்டுமன்றி, அரசியல் பின்னணியையும் பெற்றிருந்தால்தான் சமுதாயத்திற்குச் சிறப்பாக உதவமுடியும், பணிகளை நிறைவாகச் செய்யமுடியும் என்றுணர்ந்த காரணத்தினால், சென்னையில் படித்து வந்த காலத்திலேயே விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் மீது பற்றுடையவராகச் செயல்படத் தொடங்கினார். இயல்பாகவேஉறுதியான மனம் படைத்த வீரபாகு, தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு காட்டியதில் வியப்பேதும் இல்லை.

தாம் வாழ்ந்த தூத்துக்குடி பகுதியில் நிலவிய தமிழ்க் குறுநில அரசுகள், ஆங்கிலேயர்களால் சிதைத் தொழிக்கப் பட்டதையும், மக்கள் செய்த தொழில்களின்மேல் அந்நியர் ஆதிக்கம் செலுத்தியதையும், வணிகம் முழுமையாகச் சிதைந்து ஒழிந்து அழிந்ததையும், அந்நியர் ஆட்சியில் மக்கள் உரிமைகளை இழந்து, அந்நியர்க்கு கைகட்டிக் கப்பம் செலுத்தி வாழவேண்டியுள்ள நிலைகளையும் நேரில் கண்டவர் வீரபாகு.

அத்துடன், தம் முன்னோர் பல தலைமுறைக்குமுன் வாழ்ந்த வாழ்வையும், பிற்காலத்தவர் வாழும் நிலையையும் பேசக் கேட்டறிந்தவர். அதனால் நம் நாட்டில், நம் மக்கள், நம் ஆட்சியை நடத்த வேண்டும்என்னும்பெருவிருப்பத்தோடு செயல்பட்ட விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச்சென்ற காங்கிரஸ் பேரியக்கத்தில் இவர் கவனம் செலுத்தியதில் வியப்பொன்றும் இல்லை. தாம் கற்ற பொருளாதார அறிவு, அரசியல் பின்புலத்திற்குக் கைகொடுத்ததால் தேசிய இயக்கத்தில் சேர்ந்தார்.

அரசியல் ஆரம்பம்

சென்னையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது, நடைபெற்ற தேர்தலில் தாம் சார்ந்த கட்சியின் சார்பாகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். அப்போது நீதிக் கட்சியைச் சார்ந்த ஆற்காடு இராமசாமி முதலியாரும் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த சத்தியமூர்த்தி அவர்களும் போட்டியிட்ட தொகுதியில், சத்தியமூர்த்தி அவர்களுக்கு தீவிரமாகத் தேர்தல் பணியாற்றினார். இத்தேர்தலில் சத்தியமூர்த்தி வெற்றி பெற்றார். இதுதான் வீரபாகுவுக்கு தேர்தல் போர்க்களத்தில் முதல் முயற்சியாக அமைந்தது. பிற்காலத்தில் அனைத்துக் கட்சியினரும் வியக்கும்வகையில் வியூகம் வகுத்துச் செயல்பட்டதற்கும், 'தேர்தல் வல்லுநர்' எனப் போற்றப் பட்டதற்கும் இம்முயற்சியே அடிப்படையாக அமைந்தது.

கதராடையையே விருப்பியவர்

பிள்ளைப் பருவத்திலேயே பள்ளியில் சேர்ந்த முதல் நாளன்றே, உடுத்தியிருந்த ஆடம்பர ஆடைகளைக் களைந்து எறிந்துவிட்டு எளிய உடைக்குத் திரும்பிய வீரபாகு, பருவ வயதைத் தொட்டபோது, பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரி மாணவரான பிறகு, சுமார் 17 வயதில் தேசிய இயக்கத்தில் பற்றுடையவராய்ச் செயல்படத் தொடங்கினார். எனவே, தேசிய இயக்கத்தின் கொள்கைப்படி கதர் ஆடையை விரும்பி உடுத்தத் தொடங்கினார்.

கல்லூரிக் கல்வியை முடித்ததும், அந்தக் காலத்தில் படித்தவர்களுள் பெரும்பான்மையினர் ஆசைப்பட்டதுபோல் வீரபாகுவும் ஐ.சி.எஸ். படிக்க வேண்டுமென்று உறுதிபூண்டார். எனினும், தந்தையார் தடுத்ததால், 'தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை' என்னும் நல்லோர் உரைக்கு ஏற்ப, அந்த எண்ணத்தைக் கைவிட்டார். அதேசமயம் தேசிய உணர்வு நாளுக்குநாள் வளர்ந்தது.

சென்னையில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு, தேசியச் சிந்தனைகளை வளர்த்துக்கொண்டு தூத்துக்குடிக்குத் திரும்பினார். தூத்துக்குடியில் வாழ்ந்த வ.உ.சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய பாரதியாரோடும் சுப்பிரமணிய சிவாவுடனும் சேர்ந்து கொளுத்திவிட்ட சுதந்திரத் தீ, தென்னகம் முழுவதும் பரவி இருந்தவேளை அது! இந்தியப் பெருங்கடலில், இந்தியத் தொழிலை, குறிப்பாகக் கடல்வணிகத்தை மீட்டெடுத்து, இந்தியாவின் செல்வங்கள் பறிபோவதைத் தடுக்க முனைந்து தம் செல்வத்தை எல்லாம் இழந்து, ஆங்கிலேயரின் சதிக்கு உள்ளாகி, இரட்டை தீவாந்தர தண்டனை, சிறையில் கல்லுடைத்தது, செக்கிழுத்து துன்புற்றது ஆகிய அனைத்தையும் வ.உ.சி. அறிந்துணர்ந்து சிந்தித்தார்.

தேசியச் சிந்தனை விதை!

சென்னையில் தூவப்பட்ட தேசியச் சிந்தனை விதை தூத்துக்குடிக்கு வந்ததும் முளைத்துக் கிளைவிட்டு படரத் தொடங்கியது. அதனால் சமுதாயத்தை உயர்த்தவேண்டும் என்கிற சிந்தனையோடு, மக்களின் அறியாமையைப் போக்கும் நல்லுணர்வோடும் செயலாற்றத் தொடங்கினார். அதன் முதல் காரியமாக வாடித்தெருவில் வ.உ.சி. பெயரில் நூலகம் ஒன்றைத் தொடங்கினார்.

மக்களிடம் தேசியச்சிந்தனையோடு, நாடு விடுதலை பெறுவதற்கு காந்தியடிகள் தலைமையில் ஒரு பிரிவினர் சாத்வீகமாகப் போராட்டங்களை நடத்திக்கொண்டிருந்தனர். காந்தியடிகள் சத்தியத்தை முன்நிறுத்தி, அகிம்சை நெறிமுறையைக் கடைப்பிடித்து, வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து, கத்தி ஏந்தாமல், ரத்தம் சிந்தாமல் போராடிக் கொண்டிருந்தார். வேறு சிலர் இம்முறையில் பயனிருக்காது, விரைவில் விடுதலை பெறமுடியாது என்னும் எண்ணத்தோடு தீவிரவாதத்தில் ஈடுபட்டு, ஆங்கில அரசையும் ஆட்சியாளர்களையும் அச்சுறுத்திக் கொண்டிருந்தனர்.

இந்தத் தீவிரவாத இயக்கம், வீரபாகுவின் தைரியத்தையும் அஞ்சா இயல்பையும் கண்டு அவரைத் தங்களோடு இணைத்துக்கொள்ள விரும்பினர். எனினும், எளிமையோடு அமைதியான முறையில் போராடிய காந்தியடிகளின் கொள்கையே வீரபாகுவைக் கவர்ந்தது. எனவே, காந்தியடிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே தொடர்ந்து இயங்கினார்.

மகாத்மாவைப் பின்தொடரல்

வீரதீர செயல்பாடுகளை விரும்பிய மனம் படைத்த வீரபாகுவின் உள்ளத்தை தேசிய இயக்கத்தில் தீவிரவாதிகளாகச் செயல்பட்ட இயக்கம் கவரவே செய்தது. குறிப்பாக வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் ஆற்றல் நிறைந்த வீர வரலாறு வீரபாகு உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. எனவே, வ.உ.சி. பெயரால் செயல்பட்டு வந்த தீவிர காங்கிரஸ் தலைவர் வீரவநல்லூர் திரு. வீரபாகு செட்டியார் அவர்களைக் கொண்டு நூலகத்தைத் திறந்தார்.

வீரபாகு அவர்களின் உள்ளம் பல்வேறு கலைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தது. ஆகவே, 'நாடோடிப் பாடல்கள்' எனப்படும் நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிப்பதிலும் பிற நாட்டுப்புறக் கலைகளை ஊக்கப்படுத்தி வளர்ப்பதிலும் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கினார். அந்நாளில் புகழ்பெற்று விளங்கிய 'வண்ணார்பேட்டை' வடிவேலு என்பவரின் வில்லுப்பாட்டை விரும்பிக் கேட்பதில் பொழுதுபோக்கினார். இதைப்போலவே சுற்றுவட்டாரத்தில் மக்களிடையே வழக்கத்திலிருந்த பல்வேறு கலைகளைப் பற்றி அறிந்து கொள்வதிலும் ஆர்வம் காட்டினார்.

இல்லறம் என்னும் நல்லறம்



எடுத்த செயல் எதுவாயினும் திட்டமிட்டு முடிப்பதிலும் வெற்றி பெறுவதிலும் ஆற்றலுடையவராக விளங்கிய வீரபாகு, எப்போதும் எச்செயலிலும் சுறுசுறுப்பாகச் செயல் பட்டார். 'தூத்துக்குடி பாங்க்' என்னும் நிறுவனத்தை உருவாக்கி சிலகாலம் நடத்தினார். பொருளாதாரப்பாடத்தைக் கல்லூரியில் கற்று, பொருளாதார வல்லுநராக விளங்கிய அதே வேளையில், தமிழ் இலக்கியத்திலும், ஆங்கில இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டு கற்றார். அவற்றில் கிடைத்த நல்லறிவை தமது வாழ்க்கைக்கு வழிகாட்டுதலாகவும் கொண்டார். அந்நெறியில் நடை போடவும் முயன்றார். 'கற்க! கசடற! கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக!' என்று வள்ளுவர் கூறிய வாசகங்களை வாழ்க்கையில் வீரபாகு கடைப்பிடித்தார் எனக் கூறுவது மிகையாகாது.

அறத்தான் வருவதே இன்பம்

இலக்கியம் பயின்றதால் பண்பட்ட மனத்தைப்பெற்ற வீரபாகு, நிதி நிறுவனத் தொழிலைத் தொடர்ந்து செய்யலாமா, செய்வது நல்லதா என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கினார். 'பொருள் வளம்பெருகவேண்டும்! அதேவேளையில் அதை அறவழியில் ஈட்டவேண்டும்' என எண்ணினார். குறிக்கோள் ஒன்றை வைத்துக்கொண்டால் அதை அடையும் நெறியைப் பற்றியும் சிந்திக்கவேண்டும் என்பதை நினைவில் கொண்டார்! பொருளைப் பெரிய அளவுக்கு ஈட்டவேண்டும்! இந்த எண்ணமும் அதற்கான செயல்பாடுகளும் உலகில் அனைவரும் விரும்பும் குறிக்கோள்தான்.

பொருளை ஈட்டும் நெறி எத்தகையதாக இருத்தல் வேண்டும்? அறநெறி நல்லதா? மறநெறி நல்லதா? சிந்தனைக்குரியதுதான். வள்ளுவர் காட்டிய நெறி அறநெறி! 'அறத்தான் வருவதே இன்பம்' என்பார் வள்ளுவர். எனவே, வீரபாகுவும் அறநெறியைப் பின்பற்றிப் பொருளீட்டும் குறிக்கோளில் வெற்றி பெறுவதென முடிவுசெய்தார்.

வளர்ப்புத் தந்தையும் மாமனுமாகிய ஏ.பி. சொக்கலிங்கம் செட்டியார் மறைவுக்குப்பின், அத்தையும் வளர்ப்புத் தாயாருமாகிய மகாலட்சுமி அம்மையாருடனும், தம் பெற்றோர்களுடன்

சகோதரிகளுடன்சேர்ந்துஒருகுடும்பமாக வாழ்ந்தார் வீரபாகு. மகாலட்சுமி அம்மையார் தம் மகனுக்கு உரிய பருவத்தில் திருமணம் செய்வித்துப் பார்க்க ஆசைப்பட்டார். எனவே, திருநெல்வேலியில் பெயரும் புகழும் பெற்று விளங்கிய 'ஓவர்சியர்' திரு. எஸ்.ஆர்.வேலாயுதம் பிள்ளை அவர்களின் திருமகளான மகாலட்சுமி என்பாரை ஏற்ற மணப்பெண்ணாகப் பார்த்து திருமணத்திற்கு உறுதி செய்தார்.

சிறப்புற நடைபெற்ற திருமணம்

1941ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்றாம் நாளன்று, நல்லோரையில் சுற்றமும் நட்பும், உற்றார் உறவினரும், ஆன்றோரும் சான்றோரும் திரண்டுநிற்க திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாடித்தெரு முதலாளி வீட்டுத் திருமணம் குறித்துக் கேட்கவா வேண்டும்! தூத்துக்குடி நகர் முழுவதும் பந்தல் போடப்பட்டு, ஊர்மக்கள் அனைவருக்கும் விருந்து அளிக்கப்பெற்று திருமணம் இனிதே நிறைவேறியது. மறுவீடும் மிகமிகச் சிறப்பாகக் கச்சேரிகளோடு நிறைவேறியது. அந்நாளில் சிறப்போடு விளங்கிய நடனமாமணி பால சரஸ்வதி தேவி அவர்களின் பரதநாட்டியம் தூத்துக்குடியில் திருவிழாவாக நடைபெற்றது என்றால், திருமணத்தின் சிறப்பைத் தெரியலாம்.

செயல் வீரரானார் வீரபாகு!

வீரபாகு அவர்களுக்கு மகாலட்சுமி அம்மையார் மனைவியாக வாய்த்த வேளை, அவர் வாழ்க்கையில் பல சாதனைகளைப் படைக்கத் துணையானது. பானை பிடித்தவள் பாக்கியசாலியாக இருந்தால், கணவன் யானையைக் கூடக்கட்டி ஆளமுடியும் அல்லவா? உள்ளூர்ப் பருத்தி ஆலை, உள்ளூர்க்கடை, கொழும்பு நகருக்கு ஏற்றுமதி இறக்குமதி வாணிகம், கழுகுமலை ஆலை என அனைத்துத் தொழில்களையும் நிர்வகிக்கத் தொடங்கினார். கண்டார் போற்றும் வண்ணம் நல்லொழுக்கத்தில் சிறந்து, கண்ணும் கருத்துமாகத் தொழில் செய்து தூத்துக்குடியில் தலைசிறந்த மனிதராக வீரபாகு திகழ்ந்தார். மக்கள் மட்டும் அல்லாமல், ஆன்றோர்களும் சான்றோர்களும் வீரபாகுவின் செயல்பாடுகளைக் கண்டு வியந்து நின்றனர்.

காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரம்!

பாரதத்தின் விடுதலைக்காகக் காங்கிரஸ் பேரியக்கம் போராடிக் கொண்டிருந்த காலம் அது! பல தேசபக்தர்கள் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டுப் போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றனர். சிறை செல்லாமல் சிலர் வெளியிலிருந்து போராட்டங்களுக்குத் திட்டமிட்டுக் கொடுத்தனர். எனினும், வெள்ளையரின் ஆதிக்க ஆட்சி, காங்கிரஸ் பேரியக்கத்தைத் தடை செய்து சட்டமியற்றியது. அதனால், காங்கிரஸ் தன் போராட்டப் பணிகளைத் தொடர முடியாமல் முடக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், சிறைவாசம் முடிந்து வெளிவந்த தியாகச் செம்மல்கள் சிலர், மீண்டும் இயக்கப் பணிகளைத் தொடங்கித் தொடர வேண்டுமென்று எண்ணி, காங்கிரஸ் மகாசபை தடை செய்யப்பட்டிருந்தாலும் 'காங்கிரஸ்காரர்கள் சங்கம்' என்னும் ஸ்தாபனத்தை உருவாக்கி அதன்மூலம் தங்கள் பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிட்டனர். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நெல்லை ஸ்ரீசுவாமி நெல்லையப்பர் பெருவீதியிலிருந்த கல்யாணி அச்சகக் கட்டிடத்தில் தலைவர்கள் பலர் ஒன்று திரண்டனர்.

அந்தக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தவர்களில் குறிப்பிடத் தக்கவராக தூத்துக்குடி தியாகி திரு.பெ.கந்தசாமிப் பிள்ளை இருந்தார்.

தேசிய இயக்கமாகச் செயல்பட்ட காங்கிரஸ் கட்சி, நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த காலம் அது. அதிலும் குறிப்பாகத் திருநெல்வேலி முதலான தென் மாவட்டங்களின் இதன் தாக்கம் அதிகமாக இருந்தது. வீரபாகு தூத்துக்குடியில் திறமையாகப் பணிகளைச் செய்துகொண்டிருந்த காலத்தில், தூத்துக்குடியில் காங்கிரஸ் தலைவராக விளங்கிய திரு.பெ.கந்தசாமிப் பிள்ளை, வீரபாகுவின் அறிவாற்றலையும் செயல்திறனையும் கண்டு வியந்தார். வீரபாகுவிடம் இயல்பாகவே காணப்பட்ட தேசிய உணர்வையும் கருத்தில் கொண்டார்.

வீரபாகு அவர்களின் திறமையை, அறிவை, பேச்சாற்றலை கண்டு, தியாகி பெ.கந்தசாமிப்பிள்ளை காங்கிரஸ் இயக்கத்திற்குள் வீரபாகுவைக் கொண்டுவரத் திட்டமிட்டார். தம் திட்டத்தை நிறைவேற்றும் எண்ணத்துடன் வீரபாகுவை அணுகினார். அடிக்கடி சந்தித்துப் பேசியும் தம் உள்ளக் கருத்தை வெளிப்படுத்தியும் உடன்பட வைத்தார். ஏற்கெனவே லோகமான்ய பாலகங்காதர திலகர், மகாத்மா காந்தி, பண்டித நேரு, தமிழ்த்தென்றல் திரு.வி.க. முதலானோரின் உரைகளைக் கேட்டும், அவர்கள் எழுதிய எழுத்துக்களைப் படித்தும் தேசிய இயக்கத்தில் ஆர்வம் காட்டி வந்த வீரபாகுவின் மனத்தில் பெ.கந்தசாமிப்பிள்ளை அவர்களின் ஆதரவான வருடல் தேசபக்தியைக் கனன்று எழச் செய்தது. பெ.கந்தசாமிப் பிள்ளையின் முயற்சி பயனளித்தது. வீரபாகு காங்கிரஸ் இயக்கத்தில் கால்பதித்தார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. தூத்துக்குடி வருகை!

1941ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் இயக்கத்தில் வீரபாகுவின் செயல்பாடுகள் அதிகரித்தன. வீரபாகுவின் பேச்சாலும் செயல்பாடுகளாலும் தென் மாநிலத்தில் காங்கிரஸ் இயக்கத்தின் செயல்பாடுகள் ஊக்கம் பெற்றன. தமிழ்மொழிப் பத்திரிகையில் தெளிவாகத் தமிழில் எழுதியும், மேடைகளில் தமிழில் இனிமையாகப் பேசியும் தமிழ்நாட்டில் காங்கிரஸ் இயக்கத்தை வளர்த்த தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாண சுந்தர முதலியார், தூத்துக்குடி நகருக்கு 1943ஆம் ஆண்டு வருகை புரிந்தார்.

இயற்கையாகவே சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் நிறைந்திருந்த வீரபாகு, வாடித்தெருவுக்கு வந்து சொற்பொழிவாற்ற திரு.வி.கலியாண சுந்தர முதலியாருக்கு வேண்டுதல் விடுத்தார். வீரபாகுவின் அழைப்பை ஏற்ற திரு.வி.கலியாண சுந்தர முதலியார் 'புது உலகம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்ற இசைந்தார். அந்த விழாவில் வரவேற்புரை ஆற்ற அழைக்கப்பெற்ற வீரபாகு அவர்கள், "நேச நாடுகள், அச்சு நாடுகள் என்னும் இருவேறு பிரிவுகளாகப் பிரிந்துள்ள உலக நாடுகளில், எந்தப் பிரிவு புது உலகத்தைப் படைக்கும்? அல்லது, காந்தியடிகளாரின் வழியில் புது உலகம் அமையுமா?" என்று தொடங்கி ஆற்றிய உரை அனைவராலும் வரவேற்றுப் போற்றப்பட்டது.

உலக நாடுகள் பெரும்போரில் ஈடுபட்டு, இருவேறு பிரிவுகளாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் தம்மால்தான் புது உலகம் படைக்க முடியும் என்று கூறிக்கொண்டிருந்த காலம் அது!

உலகப்போரில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேயர்களால், இந்தியா விரும்பாமலே போரில் இழுத்துவிடப்பட்டது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தலைவர்கள் சிலர் ஆங்கிலேயர்களை ஆதரித்தனர். வேறு சிலர் ஆங்கிலேயர்க்கு எதிரான பிரிவைச் சார்ந்து விடுதலை பெற வேண்டும் எனக் கூறி கொண்டிருந்தனர். காங்கிரஸ் இயக்கத் தலைவர்களிடையே கருத்தொற்றுமை இல்லாமல் போயிற்று. அதனால் பொதுமக்களும் காங்கிரஸ் இயக்கத் தொண்டர்களும் குழப்பத்தில் இருந்தனர். இந்த நிலையில், வீரபாகு கொடுத்த வரவேற்புரை, ஒரு தெளிவான முடிவுக்கு வர உதவியது எனலாம்.

திரு. வி,கலியாண சுந்தர முதலியார், தம் உரையைத் தொடங்கும்முன், 'காந்தியின் புது உலகம்' குறித்துத் தாம் தெளிவாகப் பேசும் வகையில் அமைந்த வீரபாகு அவர்களின் வரவேற்புரையைப் பாராட்டினார். அதனைக் கேட்டு அனைவரும் வியந்தனர். அந்த அளவுக்கு வீரபாகு அவர்களின் வரவேற்புரை சிறப்பாக அமைந்தது.

வீரபாகு ஓர் யதார்த்தவாதி!

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் உண்மையான காந்தியவாதியாகத் திகழ்ந்தார். வாய்மை, தூய்மை, நேர்மை, எளிமை, கடமை என்னும் காந்தியடிகளின் தூய சிந்தனைக் கொள்கைகளை மனத்துள்கொண்டு, காந்தியத்திற்கு இலக்கணமாக, ஆடம்பரமான வாழ்க்கையை விரும்பாமல் எளிய வாழ்க்கை வாழ்ந்தார். வீரபாகு அவர்களின் இல்லத்திற்குச் சென்று கண்டவர்க்கு இவ்வுண்மை எளிதில் புலப்படும். அவருக்கு இருந்த செல்வத்திற்கும் செல்வாக்கிற்கும் புகழுக்கும் உகந்த முறையில் அவருடைய இல்லம் நவீன சாதனங்களோடு காட்சி அளித்திருக்கலாம். ஆனால் யதார்த்தமான உண்மை வேறு. மிகமிகச் சாதாரணமான இல்லமாகவே காட்சி தந்தது. அவருடன் தொடர்புடைய வியாபார நிறுவனங்களிலும் பிற நிறுவனங்களிலும் தொலைபேசிகள் இருக்கும். ஆனால், வீரபாகு அவர்களின் வீட்டில் தொலைபேசி இருந்ததில்லை.

கதர் ஆடைகளை அணிந்ததோடு, உண்பதற்குரிய உணவு வகைகளிலும் அவசியமான பண்டங்களையே உண்டார். ஆடம்பர உணவு வகைகளிலோ, விருந்துகளிலோ ஈடுபாடு காட்டியதில்லை. காந்தியத்தோடு தொடர்புடைய சர்வோதய சங்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். தம்மால் இயன்ற தொண்டுகளையும் செய்தார். 'மேயர் நிதி'யிலிருந்து கிராமங்களை முன்னேற்றுவதற்கும் கிராமங்களில் கிணறுகள் தோண்டுவதற்கும், கிராம மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் கடன் வழங்கி நிர்வாகத்தைச் செம்மையாக நடத்தினார். திருநெல்வேலி அபிவிருத்தி டிரஸ்டுக்கு தலைவராக இருந்து சிறந்தமுறையில் பணியாற்றினார்.

தீவிர காந்தியவாதி!

'எல்லைக் காந்தி' கான் அப்துல் கபார்கான் அவர்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, வீரபாகு அவர்கள் கணிசமான அளவுக்கு நிதியை வசூலித்து வழங்கினார். காந்தியப் பொருளாதாரத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டவராக, பொருளாதாரத் தத்துவக் கோட்பாடுகளைத் தெளிவாகக் கற்றிருந்த காரணத்தால், கேட்போர்

அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் தெளிவாக விளக்குவதில் வல்லவராக விளங்கினார்.

1945ஆம் வருடம் நெல்லையில் 'வர்த்தகக் குமாஸ்தாக்கள் சங்கம்' தொடங்கி, தொழிலாளர் நலனை முன்னிறுத்தி முயற்சி மேற்கொண்டு, வர்த்தகக் குமாஸ்தாக்களுக்கு வாராந்திர விடுமுறை பெற்றனர். இந்தச் சங்கத்தவர், தங்கள் சங்கத்தின் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட விரும்பி, சங்க நிகழ்ச்சிகளில் பங்கேற்க, சிறந்த தலைவர்களையும் பேச்சாளர்களையும் தேடிக்கொண்டிருந்தனர். அதற்காகக் கல்யாணி அச்சகக் கட்டிடத்தில் நடைபெற்ற காங்கிரஸ்காரர்களின் சங்கக் கூட்டத்திற்குச் சென்றனர். தங்கள் வர்த்தகக் குமாஸ்தாக்கள் சங்க ஆண்டு விழாவிற்கு ஒரு சிறந்த தலைவரைப் பெறவேண்டும் என்பதற் காகத் தூத்துக்குடியாகி பெ.கந்தசாமிப் பிள்ளை அவர்களை அணுகினார்கள்.

வர்த்தகக் குமாஸ்தாக்கள் சங்கத்தாரின் விருப்பத்தைப் புரிந்து கொண்ட பெ.கந்தசாமிப்பிள்ளை, ''தூத்துக்குடியில் ஏ.பி.சி.வீரபாகு என்கிற இளைஞர் ஒருவர் இருக்கிறார். அவர் மிகவும் முற்போக்கான எண்ணங்களையும் தேசிய க் கருத்துக்களையும் உள்ளத்தில் வளர்த்துக் கொண்டுள்ளவர். பி.ஏ. வரை படித்தும் இருக்கிறார். சிறந்த சொற்பொழிவாற்றும் திறன்கொண்டவர். அவரை எல்லாம் உற்சாகப்படுத்தி நம் பணிகளில் ஈடுபடுத்துவது அவசியமாகும். ஆகவே, ஏ.பி.சி.வீரபாகுவை உங்கள் ஆண்டு விழாவில் பங்குபெற ஏற்பாடு செய்யுங்கள்" என்று அன்புடன் கட்டளை பிறப்பித்தார்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்களைப் பற்றி ஏதும் அறியாத காரணத்தால், வர்த்தகக் குமாஸ்தாக்கள் சங்கத்தவர் சற்றுத் தயக்கம் காட்டினார்கள். ஆனால், பெ.கந்தசாமிப் பிள்ளை, சங்கத்தாரை அவ்வளவு லேசில் விட்டுவிட விரும்பவில் லை, தம் எண்ணத்தை வலியுறுத்திக் கூறியதால் சங்கத்தவர் அவர் கருத்துக்கு உடன்பட்டு ஏ.பி.சி.வீரபாகுவை விழாவிற்கு அழைக்கச் சம்மதி த்தனர். ஏ.பி.சி. வீரபாகு அவர்களைத் தேடிச்சென்று தங்கள் அழைப்பை முன்வைத்துச் சம்மதம் பெற்றனர்.

வீரபாகுவின் நெல்லை பேச்சு!

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், குறிப்பிட்ட காலத்தில் வர்த்தகக் குமாஸ்தாக்கள் சங்க ஆண்டு விழாவில் பங்குபெற நெல்லைக்குச் சென்றார். நெல்லை மந்திரமூர்த்தி உயர்நிலைப் பள்ளியில் வர்த்தகக் குமாஸ்தாக்கள் சங்க ஆண்டுவிழாப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. விழாக் குழுவினர், மேளதாளத்துடன் ஏ.பி.சி. வீரபாகு அவர்களை விழாப் பந்தலுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அன்று நெல்லை மாநகர் விழாக்கோலம் பூண்டதுபோல் காட்சி தந்தது. கம்பீரமான தோற்றத்தோடு மேடை ஏறிய இளைஞரான ஏ.பி.சி.வீரபாகு, மடைதிறந்த வெள்ளம்போல் சொற்பொழிவாற்றினார். இதுவே நெல்லை மாநகரத்து மக்கள் ஏ.பி.சி.வீரபாகு அவர்களை முதன்முதலாக அறிந்துகொள்ள ஒரு அரிய வாய்ப்பாக அமைந்தது.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் ஆற்றிய உரையைக் கேட்ட நெல்லை நகர் வர்த்தகக் குமாஸ்தாக்கள் அனைவரும் புத்துணர்ச்சி பெற்றனர். அவருடன் நெருங்கிப் பழகும் அரிய வாய்ப்பையும் பெருக்கிக்கொண்டனர். தங்கள் இயக்கத்திற்கு நல்லதொரு தலைவர் கிடைத்துவிட்டதாக மகிழ்ச்சியோடு செயல்படத் தொடங்கினர்.

காங்கிரஸ் கமிட்டி தலைவரானார்

சிறிது காலத்திற்குப் பிறகு, அக்காலச் சட்டமன்றத் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலில் திருவாளர் சி.வ.ந.சின்னக்கண்ணுப்பிள்ளை அவர்களுக்கும் திருவாளர் ஏ.ஆர்.ஏ.எஸ்.துரைசாமி நாடார் அவர்களுக்கும் போட்டி ஏற்பட்டது. சி.வ.ந.சின்னக்கண்ணு பிள்ளை அவர்கள் வெற்றி பெறுவதற்காக வீரபாகு கடினமாக உழைத்தார். தம் செயல்திறத்தாலும் பேச்சாற்றலாலும் மக்களைக் கவர்ந்தார்; வெற்றியையும் நிலைப்படுத்தினார். இவ்வகையில் வீரபாகு அவர்களின் ஆற்றலை உணர்ந்த காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அவரை ஏகமனதாக நகர காங்கிரஸ் கமிட்டி தலைவராக தேர்வு செய்தனர். தொடர்ந்து, சென்னை மாகாணக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும் நியமனப் படுத்தினார்கள்.

1945ஆம் ஆண்டு நெல்லை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராக்கினார்கள். இதனால் வீரபாகு அவர்களின் அறிவாற்றல் மிக்க முழக்கமும் செயல்பாடுகளும் மாவட்டம் முழுவதும் பரவியது. காங்கிரஸ் கூட்டங்களில் வீரபாகு அவர்களின் வீரம் செறிந்த முழக்கங்களைக் கேட்கப் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். பேச்சோடு நிற்காமல் வீரபாகு அவர்கள், ஏழை மக்களின் பல்வேறு துயர்களைத் துடைத்தெறியத் திட்டங்களையும் தீட்டிச் செயல்படுத்தினார். இதனால் வீரபாகு அவர்களுக்கு பொதுமக்களிடம் செல்வாக்கும் ஆதரவும் பெருகியது.

இந்தியா 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் நாளன்று விடுதலை பெற்றது. ஆங்கிலேயரின் ஆதிக்கம் விலகி, இந்தியா சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கியது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளும் விழாக்கோலம் பூண்டு இரவு முழுவதும் மின்விளக்கு ஒளியில் ஜொலித்தன. வீரபாகு அவர்கள், தூத்துக்குடி நகரை விழாக்கோலம் பூணச் செய்தார். அனைத்துப் பொது நிலையங்களிலும் தாமே முன்னின்று தேசியக்கொடியை ஏற்றினார். பள்ளி மாணவர்களின் சட்டைகளில் தம் கையாலேயே தேசியக்கொடியை அணிவித்து மகிழ்ச்சி அடைந்தார்.

ஓய்வறியா உழைப்பாளி!

நெல்லையில் தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்டு அரும்பணிகளை நிறைவேற்றி, பிற்காலத்தில் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் செயலாளராகப் பணிபுரிந்த டி.கெளரி அவர்கள், ஏ.பி.சி.வீரபாகு அவர்களை குறித்து வெளியிட்ட செய்திகள், வீரபாகு அவர்களைத் தெளிவாக நம் கண்முன் நிறுத்துவதாக உள்ளன; அவற்றை அறிவது நமக்கு ஒரு தெளிவைத் தரும் :

''ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் வாழ்நாளில் சரியாத உழைப்பின்மூலம் பல நிறுவனங்களின் பொறுப்புகளை ஏற்றுத் திறமையாகச் செயல்பட்டார். காங்கிரஸ் மகாசபையை வளர்க்கும் பணியில் முன்னணியில் நின்றார்; நெல்லை மாவட்டக் காங்கிரஸ் தலைவரானபோது, அப்பெரும் பொறுப்பினை ஏற்றுத் திறம்படச் செயலாற்றினார். அடிக்கடி தொண்டர்களைக் கூட்டி விவாதித்து உற்சாகப்படுத்தி, சேவாதள முகாம்களை நடத்தி இளைஞர்களைத் தேச சேவைக்கு ஆயத்தப்படுத்தினார்."

நெல்லை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி தலைவராக வீரபாகு

இருந்தபோது, நெல்லை மாவட்ட ஜில்லா போர்டு தேர்தல் நடைபெற்றது. 54 இடங்களில் 2 இடங்களில்மட்டும் தோல்வி ஏற்பட்டது; கிடைத்தது பெரு வெற்றி! எனினும், சிறு தோல்விக்காகப் பெரிதும் வருந்தினார். அத்தோல் விக்கான காரணத்தை ஆராய்ந்து, சக நண்பர்களின் செயல்களே அச்சிறு தோல்விக்கு அடிப்படை என்பதையும் அறிந்து வேதனைப்பட்டார்.

காந்தியப் பொருளாதாரக் கொள்கை -நம் நாட்டின் தேவை!

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் உலகப் பொருளாதார அறிவைப் பெற்றிருந்தாலும் காந்தியப் பொருளாதாரக் கொள்கையையே பெரிதும் விரும்பினார். காந்தியப் பொருளாதாரக் கொள்கையில் ஏ.பி.சி.வீரபாகு அவர்களுக்கிருந்த அழுத்தமான ஈடுபாட்டுக்கு அவர் வாழ்விலிருந்தே சான்றுகளைக் காட்டலாம்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம் வீட்டில் பசு மாடுகள் வளர்த்து வந்தார். குடும்பத்திற்குத் தேவையான பாலை அவற்றிடமிருந்தே பெற்றார். வீட்டிற்குத் தேவையான பாலை வெளியே வாங்குவதன்மூலம் செலவு குறையும் என்று பலர் கூறியும், தாமே அறிந்திருந்தும்கூட அப்படி வெளியிலிருந்து வாங்குவது நமது நாட்டிற்கும், பொருளாதார நிலைக்கும் ஏற்புடையதல்ல என்று வாதாடுவார். "ஒவ்வொரு குடும்பமும் தன்னிச்சையாக ஏதேனும் ஒரு பொருள் உற்பத்தி யிலாவது தன்னிறைவு பெறவேண்டும், அம்மாதிரியான உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடுவதுதான் நாம் நம் நாட்டிற்குச் செய்யும் கடமை" என்று வலியுறுத்துவார்.

மேலும், "நம்குடும்பத்தில்பசுமாடுகள் இருப்பதன்மூலம் சிறந்த செல்வம் இருப்பதாக நாம் கருதவேண்டும். பசுக்களிலிருந்து கிடைக்கும் பால் நம் பால் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, விவசாயத்திற்குத் தேவையான உரமும் பெற முடிகிறது. இவ்விதமாக ஏதாவது ஒருவகை சுயதேவை பூர்த்தியில் ஒவ்வொரு குடும்பமும் ஈடுபடுவதுதான் காந்தியப் பொருளாதாரம். அதுவே நம்மையும் நம் நாட்டையும் பாதுகாக்கும் சிறந்த கருவியாக அமையும்" என்றும் கூறுவார். இப்படிப் பல்வேறு அறிவுரைகளைக் கூறுவதோடில்லாமல் அவற்றைத் தாமும் கடைப்பிடித்ததோடு, பிறரையும் கடைப்பிடிக்கச் செய்வார்.

காந்தியவழி வந்தவர்மட்டுமே நாட்டைக் காப்பாற்ற முடியும்!

சிறந்த, நாகரிகமான அரசியல்வாதி யாகத் திகழ்ந்த ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், சர்வோதயச் சிந்தனைகள் நாட்டில் உருவாகிப் பரவி வளரவேண்டு மென்பதில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். அதனால் கடம்பூரிலும் கழுகுமலையிலும் இருவேறு சர்வோதய மாநாடுகள் நடைபெற வழிவகை செய்தார். 'இந்த நாட்டை வேறு எந்த அரசியல்வாதியாலும் காப்பாற்ற முடியாது. அண்ணல் காந்திஜியின் வழிவந்த தியாகிகள் சிலரால் மட்டுமே நிச்சயமாகக் காப்பாற்ற முடியும்' என்று உறுதியாக நம்பினார். அதனால் காந்தியத் தொண்டர்களுக்கு எப்போதும் உதவ முன்னின்றார். எனினும், இதற்காக எல்லோரும் அரசியல் உலகிலிருந்து வெளிவந்துவிடவேண்டும் என்கிற கருத்தை ஏற்றார் இல்லை! ''அது, காலத்தால் செய்யவேண்டிய பணி'' என்று கூறிவந்தார். அத்துடன், தம்மைப் போன்றவர்களின் அரசியல் பணிகளில் காந்தியப் பணியாளர்களை நிலைப்படுத்துவதும் ஒரு பகுதியாகும் எனக் கூறுவார். இந்த எண்ணத்தின்

அடிப்படையிலேயே அவர் சர்வோதய அன்பர்களுக்கு உற்றதுணையாக இருந்து வந்தார்.

இத்தகைய சர்வோதய சிந்தனைக் கருத்துகளுடன்தான் நெல்லை மாவட்டத்தில் 'கிராம தான முன்னேற்ற நிறுவனம்' என்னும் அமைப்பை உருவாக்கி, உற்பத்தி பெருக்கத்திற்கும் விவசாய அபிவிருத்திக்கும் உற்ற துணையாக விளங்கினார். தாம் மேற்கொண்ட புனிதமான பணிக்கு மேற்கு ஜெர்மனியைச் சார்ந்த அன்பர் திரு.மேயர் என்பவரிடம் பொருளுதவி பெற்றார். அவர் அளித்த அளவுக்கு, நம் நாட்டு மக்களிடமும் நன்கொடை பெற்று, கிராம மக்களின் வளமான வாழ்வுக்குத் திட்டங்களை வகுத்து முறையாகச் செலவுசெய்து வளம் பெருக்கினார். திரு.மேயர் அவர்கள் அடிக்கடி இந்தியா வந்து, நடைபெறும் இப்பணிகளை நேரில் கண்டு, ஏ.பி.சி. வீரபாகு அவர்களைப் பலவகைகளிலும் பாராட்டிச் சென்றது உண்டு.

காலை வேளையும் கணீர் பாடலும்

ஏ.பி.சி.வீரபாகு அவர்களை நேரில் கண்டு பல்வேறு திட்டங்கள் குறித்தும், குறைநிறைகள் குறித்தும் கலந்து பேச அதிகாலையிலேயே அவரது இல்லத்திற்கு நண்பர்களும் தொண்டர்களும் வருகை தருவதுண்டு. எத்தனை பேர், எப்போது வந்தாலும் அத்தனைபேரையும் நேரில் கண்டு, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு முகம் சுளித்தல் இல்லாமல், அவர்கள் மனம் திருப்தி அடையும் வகையில் பதிலளிப்பார். அந்த வேளையில் தினப் பத்திரிகைகளைப் படித்துக்கொண்டிருந்தாலும், கேட்பவர்களுக்கு உரிய விளக்கங்களை அளிப்பார். அக்காட்சியானது ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் அட்டாவதானம் செய்துபோல் தோன்றும்.

காலை வேளையில், குறிப்பிட்ட நேரத்தில், நாள்தோறும் வழக்கமாக முருகப்பெருமானை வழிபடச் செல்வார், அந்த நேரத்தில் இறைபக்தியோடு மனமுருகிக் கணீர் குரலில் மனம் கசிய வாய்விட்டுப் பாடுவார். அவர் மனமுருகிப் பாடும் பாடல்களைக் கேட்கும்போது, அவற்றைக் கேட்பவர்களும் பக்திப் பரவசத்தில் மூழ்கிப் போவார்கள். இறைவழிபாட்டிற்குப் பின்னர் தம்மைக் காண வருபவர்களைப் ''பிராவிக்கு வாருங்கள்'' என்று கூறி வழியனுப்புவார். அதன்பின்னரும் தம்மைக் காண வந்து காத்திருப்பவர்களை அழைத்து விசாரித்து, அத்தனைபேருக்கும் தேவைகளை நிறைவுசெய்தோ, சில காரியங்களை முடித்துக் கொடுத்தோ மகிழ்ச்சி அடையச் செய்வார்.

வீரபாகுவை சந்தித்த வ.உ.சி.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம்முடன் நெருங்கிப் பழகியவர்களிடம் சில அரிய சம்பவங்களைக் கூறுவது உண்டு. அப்படிப்பட்ட அரிய வாய்ப்பு ஒன்று தமக்கு ஏற்பட்டதை டி.கௌரி அவர்கள் நினைவுகூர்ந்துள்ளார். அத்தகைய அரிய செய்திகளுள் இதுவும் ஒன்று!

ஒரு சமயம், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள், தமது தள்ளாத வயதில், மற்றொரு தேசபக்தரான மாசிலாமணிப்பிள்ளை அவர்களை அழைத்துக்கொண்டு ஏ.பி.சி.வீரபாகு அவர்களைச் சந்தித்தார். இளைஞர் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், எதிர்பாராத விதமாகதம் எதிரில் வ.உ.சி. அவர்கள் இருப்பதைக் கண்டதும் நெகிழ்ந்து போனார், எவ்வளவு பெரிய தியாகச் செம்மல்! இணையற்ற

விடுதலை வீரர்! வெள்ளை அதிகாரிகளை அதிர வைத்தவர்! அவரைத் தம் எதிரில் கண்டதும் திகைத்து, அதுவும் தம்மைத் தேடி வந்துள்ளார் என்பதை அறிந்ததும், வியந்து, விநயத்துடன், அவர் தம்மைத் தேடி வந்த காரணத்தை வினவினார்.

அப்போது வ.உ.சி. அவர்கள் தம்மோடு வந்தவரைச் சுட்டிக்காட்டி, "இந்த மாசு இல்லா மணியையும் இவர் இந்த நாட்டிற்காகச் செய்துள்ள சேவையையும் நீ அறிவாயா?" என்று வினவினார். தொடர்ந்து, "இந்த மனிதர் இன்னும் வெள்ளையனை எதிர்த்துத் தைரியமாகப் போராடி வருகிறார்; கதர் ஆடைகளும் கதர்க் குல்லாயும் அணிந்து இந்தத் தூத்துக்குடி நகர வீதிகளில் வலம் வருகிறார். இவரது தியாகத்தையும் தீரத்தையும் எண்ணி நாம் இவருக்கு உதவிசெய்ய வேண்டாமா? அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று இப்போது உமக்கு வந்துள்ளது" என்று கூறினார்.

பின்னர், ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் பாட்டியாரிடம், மாசிலாமணிப் பிள்ளை கடன் வாங்கி இருப்பதையும், அதனைத் திருப்பிக் கொடுக்க இயலாதநிலையில் அவர் இருப்பதையும் சுட்டிக்காட்டி உதவுமாறு வேண்டினார். என்ன நிகழ்ந்திருக்கும் என்பதை நாமே ஊகித்துக் கொள்ளலாம்!

இத்தகைய மனத்தை உருக்கத்தக்க எண்ணற்ற நிகழ்ச்சிகளை ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம்முடன் நெருங்கிப் பழகியவர்களிடம் பகிர்ந்துகொள்வது உண்டாம். அத்துடன், இதுபோன்ற நிகழ்ச்சிகள்தாம் வீரபாகு அவர்களுக்குத் தேசியத்திலும் கதர் ஆடை அணிவதிலும் ஈடுபாட்டை ஏற்படுத்தியதாகவும் கூறுவாராம்.

தூத்துக்குடியின் அடையாளச் சின்னமாக அலங்கரித்துக் கொண்டிருக்கும் வ.உ.சி. கல்லூரியைக் அனைவரும் அறிவர். ஆனால் அதனை உருவாக்கியபோது ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் எதிர்கொண்ட இன்னல்களை அவர்தம் நெருங்கிய நண்பர்களிடத்தில் மட்டுமே பகிர்ந்துகொண்டது உண்டு.

தேசத்திற்காக அரிய பல சேவைகளைச் செய்து, நாட்டுக்காகவும் பிறருக்காகவும் உழைத்த சிறந்த காந்தியவாதியான டி.கௌரி அவர்கள், ஏ.பி.சி.வீரபாகு அவர்களை நீண்ட காலத்திற்குப் பிறகு சந்தித்தபோது, திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் அவர் பணிபுரியும் செய்தியைத் தெரிந்துகொண்டார். அப்போது அவர், "ராஜாஜியின் ஆசிரமத்தில் பணிபுரிய உமக்குக் கொடுத்து வைத்திருக்கிறது' என்று கூறி ஆசிர்வதித்தாராம்.

அரசியல் உலகில் ஏ.பி.சி.வீரபாகு அவர்களுக்குப் பல ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டபோதிலும் ராஜாஜி அவர்களின் அன்புக்குப் பாத்திரமானவராகவே இருந்தார் என டி.கௌரி அவர்கள் நினைவுகூர்ந்து குறிப்பிட்டுள்ளார்.

எடுத்த பணியை அயராது செய்துமுடிப்பவர் ஏ.பி.சி.!

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் கம்பீரமான தோற்றம் கொண்டவர்; திருநீறும் குங்குமமும் அணிந்த நெற்றியும் ஆன்மிக உள்ளமும் கொண்டவர்; புன்னகை நிறைந்த முகமுடையவர்; தூய வெண்மையான கதர் ஆடை அணிந்தவர்; சுறுசுறுப்பாகச் செயல்படும் சிறப்புடையவர்; அஞ்சா நெஞ்சம் கொண்டவர்; அரசியல் அனுபவமும் சமூக சேவையும் இவரது தனிச்சிறப்புகள் 'ஏ.பி.சி.' என்றாலே பல சிறந்த பண்புகளும் சிறப்புகளும் முன்நிற்கும்.

இவருடைய அரசியல் வாழ்வும் சமூகத்தொண்டும் இளைஞர்களுக்கு வழிகாட்டுதலாக அமையும் சிறப்புடையன. இவர் நண்பர்களுக்கும்,

நண்பர் அல்லாதவர்களுக்கும் சிறந்த நண்பர்; முடிவெடுத்து ஒரு செயலைத் தொடங்கிவிட்டால், அதை நிறைவேற்றி முடிக்காமல் ஓயமாட்டார்; விடாமுயற்சியோடு பல அரிய பெரிய சாதனைகளைப் படைத்தவர். ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் சிறந்த விடுதலைப் போராட்ட வீரர்; ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்துக் காந்தியடிகள் நடத்திய அகிம்சைப் போரில் பங்கேற்றுச் சிறை சென்றவர்.

சட்டமன்ற உறுப்பினராக ஏ.பி.சி.

நாடு சுதந்திரம் பெற்றபின்னர், இரண்டுமுறை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்; ஜனநாயகத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்; சர்வாதிகாரப் பண்பை எதிர்த்தவர்; நெல்லை மாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் மிகுதியான அக்கறை கொண்டவர்; விவசாயிகள் வளர்ச்சிக்காகவும் கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் சர்வோதய சங்கத்தின்மூலம் அரும்பெரும் சேவைகளைச் செய்தவர்;

கூட்டுறவு இயக்கத்தைப் பேணி வளர்த்தவர்; தம் சொத்து முழுவதையும் ஈடுவைத்து, தென்னகத்தின் கல்வி அபிவிருத்திக் காகப் போற்றுதற்கரிய சேவை செய்தவர்! ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் காங்கிரஸ் பேரியக்கப் பணியிலும் தேசப்பணியிலும்அரும்பணியாற்றியவர்.

எடுத்த பணி எதையும் சீரும் சிறப்புமாகச் செய்து முடித்து பெயரும் புகழும் பெற்றவர் ஏ.பி.சி.வீரபாகு. 'செய்வன திருந்தச் செய்', 'கடமையைச் செய்' என்பனபோன்ற, ஆன்றோர்கள் நெறிமுறை சார்ந்த அறிவுரையை பொன்மொழிகளாக ஏற்று வாழ்ந்தார்.

இவ்வகையில், தாம் சார்ந்திருந்த காங்கிரஸ் இயக்கத்தில் கருத்தைச் செலுத்தி, அதன் பன்முக வளர்ச்சிக்கும் பாடுபட்டார். எனினும், தம் முன்னோர் செய்த தொழிலான வணிகத்தைக் கைவிட்டாரில்லை. தம் குடும்பத்தவர் வழிவழியாகத் தொடர்ந்து செய்துவந்த தொழில் மேலும் மேலும் சிறக்கத் திட்டங்களைத் தீட்டியும் நிறை வேற்றியும் பலரும் வாழ வழிவகுத்தார்.

இவ்வகையில், தூத்துக்குடி-இலங்கை ஏற்றுமதி இறக்குமதி சங்கத்தை வீரபாகு தோற்றுவித்தார். அது இன்றளவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இவ்வகையில் தூத்துக்குடியில் இயங்கிய பிற வணிக நிறுவனங்களும் வீரபாகு அவர்களின் வழிகாட்டுதலைப் பெறவும், வீரபாகு அவர்களின் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ளவும் முன்வந்தன.

எனவே, பல்வேறு வர்த்தக நிறுவனங் களைச் சார்ந்தவர்கள் ஒன்றுதிரண்டு, வீரபாகு அவர்களை 'இந்திய வர்த்தகக் கழகத்தின் (Indian Chamber of Commerce) தலைவராக 1947இல் தேர்வு செய்தனர். சுமார் பதினைந்து ஆண்டுகள் அப்பொறுப்பை செம்மை யாக நிர்வகித்துப் பெருமை பெற்றார்.

தொடர்ந்து துறைமுகக் கழகத்தின் (Port Trust) நிர்வாகத்திலும் பல ஆண்டுகள் பொறுப்பேற்று தொடர்ந்து தொண்டாற்றினார். அதனால் பெரும் புகழ் பெற்ற தோடு தூத்துக்குடி துறைமுகத்தையும் வளர்ச்சி அடையச் செய்தார். தம் திட்டமிடும் ஆற்றலாலும், திட்டமிட்டத்தைச் செயல்படுத்தும் திறமையாலும் சென்னை மாநகரத் திற்குச் சமமான ஒரு குட்டி சென்னை மாநகரமாகத் தூத்துகுடியை வளர்ச்சியடையச் செய்தார்.



குலபதி குடும்ப விழாவில்...



அத்தை திருமதி ஏ.பி.சி.மகாலட்சுமி அம்மாள், தம் துணைவியாரோடு குலபதி, மற்றும் சகோதரிகள், மூத்த மகன் மற்றும் மருமக்கள்




ஏ.பி.சி.வீரபாகுவின் குடும்பத்தினர் சூழ திருமண தம்பதியாய் ஏ.பி.சி.வீ.சண்முகம். பின்வரிசையில் நிற்பவர்கள் (இடமிருந்து) ஏ.பி.சி.வீ.சங்கரபாகம் (முதல்) டாக்டர் ஏ.பி.சி.வீ.வேலாயுதம் (மூன்றாவது), ஏ.பி.சி.வீ.சொக்கலிங்கம் (நான்காவது), ஏ.பி.சி.வீ.பரமசிவம் (ஐந்தாவது), மருமகன் டாக்டர் சி.முத்துசாமி (ஆறாவது), ஏ.பி.சி.வீ.ஆறுமுகம் (ஏழாவது). முன்வரிசை இடமிருந்து மூன்றாவது ஏ.பி.சி.வீ.கணபதி




குலபதி குடும்ப விழாவில்...



ஏ.பி.சி.வீரபாகுவின் மகள் திருமண நிகழ்ச்சியில்
திரு. கு.காமராசர், திரு. செல்லப்பாண்டியன், திரு. மஜித்



மகன் ஏ.பி.சி.வீ.சொக்கலிங்கத்தின்
திருமணத்தில்
புதுமணத் தம்பதியினருடன்
தம் துணைவியாருடன்
ஏ.பி.சி.வீரபாகு



தாஜ் மஹால் முன்பாக ஏ.பி.சி.வீரபாகு



1932ஆம் ஆண்டு, பூப்பந்தாட்டக் குழு வீரராக இளைஞர் ஏ.பி.சி.வீரபாகு
(நடுவரிசை இடமிருந்து இரண்டாவது)

கூட்டுறவு இயக்கப் பணி



"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!" "கூடிவாழ்ந்தால் கோடி நன்மை!" என்பவை ஒற்றுமையின் சிறப்பை விளக்கும் நம் நாட்டு வழக்குகள். கூடி வாழ்வதால் உண்டாகும் நன்மையை உணர்ந்தவர்கள் நம் முன்னோர். கூட்டுக் குடும்ப வாழ்க்கை, நம் நாட்டின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்கும். மேற்கத்திய நாடுகளில், குறிப்பாக ஜெர்மனி நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த கூட்டுறவு இயக்கம் துணை நின்றதைக் கண்டு உலகமே வியந்து கொண்டிருந்தது. பொருளாதாரத் துறையில், உலகின் பல்வேறு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிப் படிகளைக் கல்லூரியில் கற்ற காலத்தில் கற்றுணர்ந்த வீரபாகு அவர்களும் கூட்டுறவால் நாட்டை உயர்ந்த முடியும் என்னும் நம்பிக்கையில் உறுதிகொண்டிருந்தார்.

தென்பாண்டிநாட்டுத்துறைமுகமான தூத்துக்குடி முத்துக்குளித்தலில் எத்தகைய சிறப்பைப் பெற்று விளங்கியதோ, அவ்வாறே வாழையடி வாழையாகச் சைவப் பெருங்குடி வேளாளர் குலத்தில் உதித்தோர் அந்நகரில் சிறப்புடன் வாழ்ந்தனர். அக்குலத்தில் பிறந்து உத்தமத் தலைவராக வாழ்ந்த ஏ.பி.சி. வீரபாகு அவர்கள், தமிழ்நாட்டின் கூட்டுறவு இயக்கப் பணிகளில் தமக்கெனத் தனி அத்தியாயத்தை அமைத்து, தமக்கு உரித்தான திறமைகளைக் கையாண்டு சிறப்புமிக்க, ஒப்புயர்வில்லாத சேவைகளைத் திட்டமிட்டு நிறைவேற்றி முத்திரை பதித்தார்.

கூட்டுறவே நாட்டுயர்வு!

தீவிரமான காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த அரசியல்வாதியாகத் தாம் இருந்தபோதிலும், ஒட்டுமொத்தச் சமுதாயமும் நலம்பெறவேண்டும், வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்காகக் கூட்டுறவிற்கு அடிப்படைத் தத்துவமாக, கட்சி சார்பற்ற தன்மையை வழுவாது கடைப்பிடித்தார். தம் தலைமையின்கீழ் செயல்பட்ட பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களின் ஆக்க வேலைகளையும் மேம்பாட்டையும் பெருகுவதற்காகப் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களையும் பணிக்கு அமர்த்தினார். இத்தகைய செயல்பாடு, கூட்டுறவுத் துறையில் ஈடுபடுவோர் அனைவரும்

அறிந்து கடைப்பிடிக்க வேண்டிய உயர்ந்த நடைமுறையாகும்.

'தான்மட்டும் வாழவேண்டும்! தான்மட்டுமே பொருளீட்டிப் பெருமை பெறவேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல், தாமும் தம்மைச் சார்ந்தவர்களும் சூழ உள்ளவர்களும் நலமே வாழவேண்டும் என்கிற தத்துவத்தை உள்ளடக்கிய இயக்கமே கூட்டுறவு இயக்கம். வாழ்க்கைக்கு ஆக்கம் தருவன, பகை இன்மையும் பெருஞ்செல்வமுடைமையும் ஆகும். இவற்றைப் பெற அனைவரையும் சுற்றமாகப் பெற்று அரவணைத்துச் செல்லவேண்டும். அதனால் அறத்தையும் இன்பத்தையும் பொருளையும் பெறவும் அனுபவிக்கவும் முடியும்.

இத்தகைய இயல்பே தாம் நுகர்வனவற்றை எல்லாம், அனுபவிப்பவனவற்றை எல்லாம் பிறரும் நுகர்தல்வேண்டும் என எண்ணும் பண்பாகும். அதாவது 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும்உயரியஎண்ணமாகும்.இவற்றை எல்லாம் உள்ளடக்கியதாகவே, **"காக்கைகரவாகரைந்துண்ணும்ஆக்கமும் அன்னநீரார்க்கேஉள"** என்னும்வள்ளுவர் வாக்கு அமைந்துள்ளது. இதனை ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தாம் பொறுப்பேற்ற கூட்டுறவுத் துறையில் நடைமுறைப்படுத்தி அத்துறையை வளர்த்தார்.

கூட்டுறவுக் கொள்கையை பரப்பி வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த வீரபாகு அவர்கள், 1943ஆம் ஆண்டு நெல்லை மாவட்டக் கூட்டுறவு மத்தியப் பண்டக சாலையின் இயக்குநராகப் பொறுப்பேற்றார். அப்போது சென்னைமாநிலஅமைச்சராக இருந்த ஜே.எல்.பி.ரோச் விக்டோரியா அவர்கள் ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் உற்ற நண்பராக இருந்தார். எனவே, அந்தப் பெரிய கூட்டுறவு நிறுவனத்தைக் கட்டிக்காப்பாற்றும்ஆற்றல்படைத்தவர், ஏ.பி.சி. வீரபாகுவாகவே இருக்க இயலும் என முடிவுசெய்தார்.

சாதனையாளர் வீரபாகு!

தாம் பொறுப்பேற்ற நகர, மாவட்ட, மாநில அளவிலான கூட்டுறவு சங்கங்களில், ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் 'ஏதோ பதவிக்கு வந்தோம்; பதவி வகித்தோம்; காலம் முடிந்ததும் பதவி விலகிப் போனோம்' என்றில்லாமல், 'திட்ட மிட்டு அவற்றின் நல்வளர்ச்சிக் குரிய செயல்முறைகளை உருவாக்கினார், அவற்றைச் செயல்படுத்திச் சாதனை படைத்து வரலாற்றை உருவாக்கினார்' என்று போற்றிப் பேசுமளவுக்குத் திட்டங்களை நிறைவேற்றி கூட்டுறவுத் துறையில் வெற்றி பெற்றார்.

கூட்டுறவுத்துறை சார்பான சிறப்பான செயல்பாடுகளை நடைமுறைப்படுத்திய ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் சிந்தனா சக்தியையும் திறமையான நிர்வாகத்தையும் கண்ட அன்றைய விரிவான சென்னை மாகாண அரசு, மாநிலக் கூட்டுறவு நிறுவனங்களின் பல்வேறு குழுக்களுக்கும் ஏ.பி.சி.வீரபாகு அவர்களைப் பொறுப்பாளராக நியமித்தது.

சென்னை மாநிலக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் இணையம், சென்னை மாநிலத் தொழிலியல் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு யூனியன், 'கூட்டுறவு' இதழ் ஆசிரியர் குழு முதலானவற்றில் மாநில அளவிலான நிர்வாகக் குழுக்களில் பங்கேற்று ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் சிறப்பாகப் பணிகளை நிறைவேற்றினார்.

வீரபாகுவின் பொதுநோக்கு!

1961இல் தமிழ்நாடு மாநில அரசு, ஏ.பி.சி.வீரபாகு அவர்களை, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின்

சட்டங்களைத் திருத்தி அமைக்க உருவாக்கிய அமைப்புக் குழுவின் (Select Committee on Co-operation Act - Amendment Bill) பொறுப்பை அளித்தது. அப்போது கூட்டுறவு சங்கங்களில் இருந்த சிரமங்களையும், சட்டங்களில் காணப்பட்ட சிக்கல்களையும் ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான அரிய பல ஆலோசனைகளை வழங்கினார், அவற்றைச் செம்மைப்படுத்தினார்.

வளர்ந்து வரும் இளந்தலைமுறை யினருக்குக்கூட்டுறவில்நல்வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதன் பொருட்டு, தமது நெருங்கிய, நீண்டகால நண்பர்கள் எதிர்த்தபோதும், அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் 'ஒரே சமயத்தில், ஒருவர் ஐந்து கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகமாக நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கக்கூடாது' என்னும் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றினார். இத்தகைய செயல் பாடுகள் ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் சுயநலமற்ற போக்கைத் தெளிவுபடுத்தும்.

சென்னை மாநிலத் தொழிலியல் கூட்டுறவு வங்கி (Madras State Industrial Co-operative Bank) நிர்வாகக் குழுவிலிருந்து செயலாற்றியபோது, தொழிற்பேட்டைகளில் (Industrial Estates), தொழிலாளர்கள் தொழிற் சாலைகளை அமைக்க, சொத்துக்களை மட்டும் ஈடாகக்கொண்டு கடன் வழங்கி வந்த முறையை மாற்றி, தொழிலாளர்கள் அமைக்கும் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனையும் ஈடாகக்கொண்டு கடன் வழங்க ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் வழிவகை செய்தார். தொழில் செய்பவர்களின் உழைப்பிற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்கிற உள்ளன்போடு இதனைப் பெருமுயற்சி மேற்கொண்டு நிறைவேற்றி பலரும் பயன்பெறச் செய்தார்.

1949ஆம் ஆண்டு கூட்டுறவு மத்தியப் பண்டக சாலைக்குத் தலைவராகினார். அப்போது அப்பண்டக சாலையின் சொத்து மதிப்பு மூன்று லட்சங்களாகவே இருந்தது. ஏ.பி.சி.வீரபாகு தம் திறமையான நிர்வாகத்தாலும் தம்மிடம் ஒப்படைப்பட்ட பொறுப்பைத் தலைசிறந்ததாக மாற்றவேண்டும் என்கிற நிலைப்பாட்டாலும், கடினமாக உழைத்து மற்றவர்களையும் உழைக்க வைத்து, அதன் சொத்து மதிப்பை நாற்பத்தாறு லட்சங்களாக உயர்த்தினார். இதனால் சமுதாயம் நற்பயனைப் பெற்றது. தூத்துக்குடி நகரத்தில் வாழ்ந்த நடுத்தர, ஏழை மக்களின் நலனுக்காகத் தூத்துக்குடி கூட்டுறவுப் பண்டக சாலையைத் தோற்றுவித்தார். அதற்குச் செயலாளராக இருபத்தேழு ஆண்டுகள் பணியாற்றினார்.

நகரத்தில் வாழ்ந்த நடுத்தர, ஏழை மக்களின் குடியிருப்பு பிரச்சனையை தீர்க்கத் திட்டமிட்ட வீரபாகு, 1947ஆம் ஆண்டு ஏழை, நடுத்தர மக்களுக்கு வீடுகட்டிக் கொடுக்க திட்டமிட்டார். எனவே, 1947ஆம் ஆண்டு தூத்துக்குடியில் தூத்துக்குடி கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார். அதன் வாயிலாக நகரின் மேற்கில் காலியாக இருந்த இடத்தை வீடுகட்டும் மனைகளாக்கி வீடுகட்டிக் கொடுக்கத் திட்டம் தீட்டினார். அதன் பலனாகச் சிதம்பரம் நகரிலுள்ள நூற்றெழுபது வீடுகளும், இன்றைய லயன்ஸ் டவுனில் உள்ள நூற்றெழுபது வீடுகளும் அனைத்து வசதிகளையும் பெற்றனவாக உரியவர்களுக்கு வழங்கினார். வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்பவும், நவீன தொழில் நுட்பங்களைக் கையாளவும் ஏற்ற தொழிற்பேட்டைகளைத் தூத்துக்குடி பகுதியிலும் உருவாக்க ஏ.பி.சி.வீரபாகு எண்ணினார். எனவே, 1965ஆம் ஆண்டு கூட்டுறவுத் தொழிற்பேட்டையை உருவாக்கினார்.

வங்கித் துறையில் வீரபாகு!

State Bank of India Circle Committee Co-ordination in Co-operatiing Credit என்னும் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பெற்று ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் செயலாற்றினார். அப்போது கூட்டுறவு சங்கங்களுக்குக் கடன் வழங்குவதில் சிவப்பு நாடாமுறையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவும், மாநில, மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மூலம்தான் கூட்டுறவு சங்கங்கள் கடன் பெறவேண்டும் என்கிற விதிமுறையினால் கூடும் அதிகப்படியான வட்டி விகிதத்தைக் குறைப்பதற்காகவும், கூட்டுறவு சங்கங்கள், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் நேரடியாகவே கடன் பெற வழிவகுத்ததோடு, தாம் தலைமைப் பொறுப்பு ஏற்றிருந்த திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு சங்கத்திற்கு, மாநிலத்திலேயே முதன்முதலாக இந்தமுறையில் கடன்வசதியைப் பெற்றுக்கொடுத்து அமலாக்கம் செய்தார். இது ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் ஒப்பற்ற தனிப்பெருஞ் செயல்திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.

உணவுப் பொருள் விநியோகம்

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், 1942ஆம் ஆண்டு நெல், அரிசி முதலான உணவுப்பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால் மக்கள் அத்தியாவசியமான உணவுப் பொருள்களைப் பெற இயலாமல் அவதிப்பட்டனர். அப்போது கூட்டுறவுப் பண்டக சாலையின் துணைத்தலைவராக இருந்தபோதிலும், ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தமக்கேயுரிய சேவை மனப்பான்மையுடன் அப்போதைய தலைவருடன் அரசை அணுகி, திருநெல்வேலி மாவட்டத்தில் நெல் கொள்முதலையும், அரிசி விநியோகத்தையும் மாவட்டப் பண்டக சாலைகளுக்கு ஏகபோகமாகப் பெற்றுத் தந்தார். அத்துடன் உணவுப் பொருள்கள் பங்கீடாகிய விநியோகத் தையும் மாவட்டம் முழுவதும் செம்மை யாகச் செயல்படுத்தினார். அதனால், கொள்ளைலாபத்தையேகுறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வந்த வணிகர்கள், பெருநிலக்கிழார்கள் ஆகியவர்களின் கடுமையான அதிருப்திக்கு ஆளானார்.

எதிர்ப்பைக் கண்டு அஞ்சாதவர்!

செயல்வீரரான ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் பொதுமக்களின் நலன்கருதி, அதிருப்தியாளர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் கொள்முதலையும் உணவுப்பொருள்களின் பங்கீட்டையும் திறம்படச் செயல்படுத்தி வெற்றி பெற்றார். இதற்காக அன்றைய வருவாய்த்துறை அலுவலர்களும் அதிகாரிகளும் ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் மன உறுதியையும் பிறருக்கு அஞ்சாத தைரியத்தையும் பொது மக்களின் நலத்திற்கு உழைத்த பாங்கையும் வியந்து போற்றினார்.

1948ஆம் ஆண்டு மாவட்ட கூட்டுறவுப் பண்டக சாலையின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். தேசிய அளவில் உணவுப்பொருள்கள் தட்டுப்பாடும், விநியோகத்தில் நெருக்கடியும் ஏற்பட்ட காலகட்டங் களான 1958 - 59, 1964 - 65 முதல் 1966 - 69 வரையிலும் ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் தலைமையின்கீழ்ச் செயல்பட்ட மாவட்ட கூட்டுறவுப் பண்டக சாலை, அரசின் திட்டங் களுக்கு ஏற்ப, எவ்விதமான நிபந்தனையுமின்றி, தேசிய உணர்வுடன் செயல்பட்டு, அந்தக் காலகட்டங்களில் நிலவிய உணவுப் பொருள் தட்டுப்பாட்டைப் போக்கி பொது மக்களின் பாராட்டுதலைப் பெற்றது.

கடமையுணர்வுகொண்டவர்

ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் தலைமையின்கீழ் செயல்பட்ட

மாவட்டக் கூட்டுறவுப் பண்டக சாலையின் திறமையான செயல் பாடுகளைக் கண்டுவியந்த, அன்றைய நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த எம்.எம்.ராஜேந்திரன் ஐ.ஏ.எஸ். அவர்கள், 'அரசே நேரடியாக உணவுப் பங்கீட்டை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தலாம்' என அரசுக்குப் பரிந்துரை செய்தார் என்றால், ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் செயல் பாட்டில் கொண்டிருந்த நம்பிக்கை புலப்படும்.

ஒரு செயலைத் தேர்ந்தெடுப்பதிலும், அச்செயலைத் திறம்பட நடத்துவதற்குத் தேவையான பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், அவர்களைக் கடமையுணர்வோடு செயல்பட வைப்பதிலும் தலைசிறந்தவராக ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் விளங்கினார். அந்தத் திறமை, அந்தப் பண்பு, தாம் திட்டமிட்டதைச் சிறப்பாக நிறைவேற்றும் ஆற்றல் ஆகியவற்றில் ஏ.பி.சி.வீரபாகுவுக்கு இணை ஏ.பி.சி.வீரபாகுவே!

திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் தலைவராக 1948 முதல் 1971 வரை, 23 ஆண்டுகள் ஏ.பி.சி.வீரபாகு தொடர்ந்து பணியாற்றிச் சாதனை படைத்ததை, அத்துறை சார்ந்த தனிமனித சாதனை வரலாறு என்றுதான் கூறவேண்டும்.

கூட்டுறவுத் துறைக்கு அடித்தளம் அமைத்தவர்

தமிழ்நாடு மாநிலத்தில், வேறு எந்த மாவட்ட கூட்டுறவு சங்கமும் பெற்றிராத அளவுக்கு ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம் செயல் திறந்தால் நிதிவசதியைப் பெருக்கினார். அத்துடன் தூத்துக்குடி, திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் முதலான இடங்களில் கூட்டுறவு சங்கங்களுக்குச் சொந்தமாக அலுவலகக் கட்டிடங்களை கட்டினார். பொருள்களைச் சேமித்து வைப்பதற்குரிய கிடங்குகளையும் கட்டினார். அன்றைய மதிப்பில் சுமார் பதினைந்து லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சங்கரன்கோவில், தென்காசி, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஊர்களில் அரசுக் கடன் பெற்று மிகமிகப் பெரிய உரக் கிடங்குகளைக் கட்டினார். இவை எல்லாம் அவரது முற்போக்குச் சிந்தனையையும் திட்டத்தையும் வெளிப்படுத்தின.

தொலைநோக்காளர் வீரபாகு!

அரசு திட்டமிட்டு மாநிலம் முழுவதும் நவீன கூட்டுறவு அரிசி ஆலைகளை உருவாக்கியது. அவற்றுள் பெரும்பாலானவை நிர்வாகக் குறைபாட்டால் எதிர்பார்த்த அளவுக்குப் பயனளிக்காமல் போயின. அதற்கு அந்த ஆலையின் அமைப்புமுறையே காரணமாகக் கருதப்பட்டது. ஆனால், ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், தமது தொலைநோக்குப் பார்வையுடன் தொழில்நுட்ப கண்ணோட்டத்துடன் செயல்திறனை முன்வைத்து, தூத்துக்குடியில் மாவட்ட கூட்டுறவு சங்கத்திற்காகச் சிறப்பான அம்சங்களோடு திட்டமிட்டு 1964ஆம் ஆண்டு பழைய ஆலை அமைப்போடு நவீன ஆலை அமைப்பையும் இணைத்து ஆலையை உருவாக்கி, நிர்வகித்துத் திறம்படச் செயல்பட வைத்தார். இன்றளவும் அந்த ஆலை பிற ஆலைகளைப்போல பழுது ஏதும் இல்லாமல் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

1964இல் சுமார் ஐந்தரை லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட இந்த அரிசி ஆலைக்கும், அதனை ஒட்டி எட்டுக் கிடங்குகளுக்கும், தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனின்

இன்றைய மதிப்பீடு பல கோடி ரூபாய்களாகும். நுணுக்கமான தொழில் நுட்பமுள்ள இந்த ஆலையைத் திட்டமிட்டு உருவாக்கியது ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் சிறந்த செயல்திறனுக்கு அழியாத சின்னமாகும். அண்மைக்கால உணவுப்பொருள் தேவை நெருக்கடியின்போது அரசின் பெரும்பகுதி நெல்லை இந்த ஆலையே அரிசியாக்கி உதவியது என்பதற்கு ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் முன்னோக்கு திட்டமிடலே காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

எண்ணத்தாலும் சிந்தனையாலும் செயல்திறத்தாலும் சிறப்பைப் பெறுவதோடு, பிற இயல்புகளாலும் விதிமுறைகளாலும் மாட்சிமைப்பட்ட ஒருவரதுசெயல்பாட்டின்பலனை,அரசின் ஆட்சியில் இருப்போர், அனுபவிப்போர் உணர்வாராயின் அவரை நன்கு போற்றி மதித்திடுவர். இதனையே வள்ளுவர், **"வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண் ஊறுஎய்தி உள்ளப் படும்"** என்று கூறினார். இவ்வகையில், செயல்திறத்தில் - வினைத்திட்பத்தில் சிறந்து விளங்கிய ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் திட்டமிடலால் உருவான, சமுதாயத்தின் பொதுநலனுக்குப் பயன்படும் நிறுவனங்களைக் காணுகின்ற ஒவ்வொருவரும் அவரை நிச்சயமாக எண்ணிப் பார்க்கவேண்டும். இல்லையேல், நன்றி கொன்றவர்களாகி விடுவோம்!

தன்னிறைவுடன் கூட்டுறவுத்துறை

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் சமுதாயப் பாதுகாப்பான இத்தகைய கட்டுமானத் திட்டங்களைச் செயல்படுத்தியதோடு, மாவட்டக் கூட்டுறவு சங்கத்தின் நிதி உதவியையும் பெருக்கினார். அதனால் மாநிலத்தில் எந்த மாவட்ட கூட்டுறவு சங்கமும் செயல்படாதவகையில், கூட்டுறவு மத்திய வங்கியிலிருந்து கடன்வசதி எதையும் பெறாமலே, 1953முதல் 1963 வரையிலான பத்தாண்டுகால அளவிற்குத்தன்னிறைவு பெற்ற சங்கமாக (Self Reliant Society), சொந்த மூலதனத்திலேயே மிக லாபகரமாக வணிகம் செய்ய வழிவகைகளை உருவாக்கித் தந்தார். இவற்றால் கூட்டுறவுத்துறை சார்ந்து தலைவராகச் செயல்பட்ட ஏ.பி.சி. வீரபாகு அவர்களின் நிர்வாகத் திறனைத் தெளியலாம்.

வீரபாகு அவர்கள், தாம் தலைவராக இருந்த மாவட்டக் கூட்டுறவு சங்கத்திற்குப் பொருள் வருவாயை அதிகரிப்பதற்குரிய வழிமுறைகளை கண்டறிவதிலும், அவற்றின்மூலம் பொருளை ஈட்டியதிலும், ஈட்டிய பொருளை வீணாகச்செலவு செய்யாமல் பாதுகாப்பதிலும், பாதுகாத்த பொருளை வளர்ச்சிப் பணிகளில் திட்டமிட்டு முதலீடு செய்வதிலும் வல்லவராக இருந்தார். சுருங்கச் சொன்னால், வள்ளுவர் கூறிய **"இயற்றலும்ஈட்டலும்காத்தலும்காத்த வகுத்தலும் வல்லது அரசு"** என்னும் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்.

விலைவாசி குறைப்பு நடவடிக்கைகள்

மாநில அரசு, சில்லரை விற்பனை நிலையங்களை, மொத்த விற்பனைப் பண்டக சாலைகளே தொடங்கி, அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்வதன்மூலம், பொருள்களின் விலை ஏற்றத்தைத் தடுக்கலாம் என்று திட்டமிட்டு, அதன் அடிப்படையில் அரசு கடன்வசதி அளிக்க முன்வந்தது. வீரபாகு அந்தக் கடன் வசதியைப் பெற்று, அதன்மூலம் பிரதான பண்டக சாலைகளுக்கே மாவட்ட சங்கத்திலிருந்து அளித்தார். அத்துடன் அரசு எடுத்த கொள்கை முடிவைத் தெளிவாக ஆராய்ந்து,

அதன் பின்விளைவுகளையும் தெளிந்து, மொத்த விற்பனைப் பண்டகசாலைகளே, சில்லரை விற்பனை நிலையங்களைத் திறந்து, விற்பனையை மேற்கொண்டால், ஆங்காங்கே உள்ள பிரதான பண்டக சாலைகளின் வணிக விற்பனை நசிந்துபோகும், அதனால் பரவலான கூட்டுறவுக் கொள்கை வளர்ச்சி தடைப்பட்டுப் போகும் என்று தெளிவுபட அரசுக்கு விளக்கம் அளித்தார்.

இத்தகைய விளக்கத்தை அளித்து, அரசின் கொள்கை முடிவின் பின்விளைவுகளுக்கு முன்னெச்சரிக்கை கொடுத்த ஒரே மாவட்டக் கூட்டுறவு சங்கத் தலைவர் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் மட்டுமே. அதனால், தம்கீழ் இயங்கிய கூட்டுறவுப் பண்டக சாலைக்கு இழப்பு ஏதும் ஏற்படாமல் பாதுகாத்தார். எனவே, மொத்த விற்பனைச் சங்கங்களின்மூலம், பிரதான பண்டக சாலைகளின் வளர்ச்சிக்கு உதவும்வகையில், அடிக்கடி அவற்றின் பிரதிநிதிகளின் கூட்டத்தை நடத்தி, பல புதிய திட்டங்களை வகுத்தார். அவற்றை முறையாகச் செயல் படுத்தினார். அதன்மூலம் பிரதான பண்டகசாலைகளின் ஒத்துழைப்பைப் பெற்று, விற்பனை பெருக்கத்திற்கு உதவியோருக்கு ஊக்கப் பரிசுகளை வழங்கித் தொழில்தழைக்கவழிவகுத்தார். அத்துடன் அவ்வப்போது சங்க ஊழியர்களுக்கும் கூட்டங்கள் நடத்தி, சிறப்பாகப் பணியாற்றத் தூண்டினார்.

ஆவது அறிந்தவர் வீரபாகு!

ஊழியர்களிடம் உண்மையான அன்போடும் பாசத்தோடும் நடந்து கொண்டார். தமிழ்நாடு மாநிலத்தில் வேறு எந்த மாவட்ட கூட்டுறவு சங்கமும் செயல்படுத்தாத ஊழியர்கள் நலத் திட்டங்களை ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம் தலைமையின்கீழ் இயங்கிய மாவட்டக் கூட்டுறவு சங்கத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்து, மாநிலத்திலேயே முன்னோடியாகத் திகழ்ந்தார்.

ஊழியர்களின் குழந்தைகளுக்கு பள்ளிப் புத்தகம், குறிப்பேடுகள் வாங்கத் தேவையான நிதிஉதவி செய்தல்; சிப்பந்திகளின் குடும்ப வைத்தியச் செலவுகளை ஈடுசெய்தல், பிரசவ உதவித்தொகை அளித்தல் முதலான பொருளுதவிகளைச் செய்தார். **"அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார் அஃதுஅறி கல்லா தவர்''** என்கிறார் வள்ளுவர். இவ்வகையில், ஆவது அறியும் வல்லமை பெற்றிருந்தவர் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள்.

எனவே, மாவட்ட கூட்டுறவு சங்கத்தில் வணிக முறையில், பிற்காலத்தில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் நிகழக்கூடிய மாற்றங்களையும் சிரமங்களையும் முன்கூட்டியே சிந்தித்து உணர்ந்து, அவற்றை எதிர்கொண்டு தீர்வுகாண்பதற்கான வழிவகைகளைத் திட்டமிட்டார்: பிறருக்கும் எடுத்துரைத்தார்.

இரசாயன உர மொத்த விற்பனையைக் கூட்டுறவு சங்க மொத்த விற்பனைப் பண்டக சாலைகளிலிருந்து நீக்கிவிட அரசு திட்டமிடுவதற்குப் பல ஆண்டுகள் முன்னதாகவே, மாநிலத்தின் வேறு எந்த மாவட்ட கூட்டுறவு சங்கத் தலைவரும் முடிவுசெய்யாத காலத்திலேயே, இரசாயன உரத் தேக்கத்தால் சங்கம் பொருளாதாரத்தில் நஷ்டமடைய நேரிடுமென்பதை உணர்ந்த ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், இரசாயன உர வணிகத்திலிருந்து தாம் தலைமை ஏற்றிருந்த மாவட்ட சங்கத்தை விடுவிக்குமாறு செயற்குழுவைக் கூட்டி, தீர்மானத்தை இயற்றி, ஒப்புகை பெற்று, உடனடியாக விடுவிக்குமாறு அரசுக்கு தீர்மானத்தை அனுப்பி வைத்து,

நடைமுறைக்கும் கொண்டுவந்து, தமது மாவட்டக் கூட்டுறவு சங்கத்திற்கு ஏற்பட இருந்த பெருநஷ்டத்தைத் தடுத்துக் காப்பாற்றிட முயன்றார். ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் முன்கூட்டியே திட்டமிட்டுக் கூறிய திட்டத்தைச் செயல்படுத்தி இருந்தால், பிற்காலத்தில் மாநில அளவில் ஏற்பட்ட பெருமளவு நஷ்டத்தைத் தவிர்த்திருக்கலாம்.

செங்கல் தயாரிப்புத் தொழிலை ஒழுங்குபடுத்தியவர்!

சேம்பர் செங்கற்கள் உற்பத்தி செய்யப்படாத காலம் அது. மக்கள் கைத்திறனால் செங்கற்கள் உற்பத்தி செய்யப்பட்ட காலம். வல்லநாட்டில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களுக்காக மட்டுமே 'வல்லநாடு ஹரிஜன செங்கல் தொழிலாளர் தொழிலியல் கூட்டுறவு சங்க'த்தை வீரபாகு அவர்கள் நிறுவினார். அதில் தொழிலாளர்கள் அனைவரும் உறுப்பினராக்கப்பட்டனர். அதன்மூலம் உற்பத்தியைப் பெருக்கி, கிடைத்த லாபம் முழுவதையும் சங்க உறுப்பினர் அனைவரும் பெறுமாறு செய்தார். உயரிய இலட்சியத்துடன் செயல்பட்ட ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், இரண்டு ஆண்டுகளிலேயே உறுப்பினர்களுக்கு, அதாவது உழைத்த தொழிலாளர்களுக்கு ஒருவருட ஊதியத்தைப் போனசாக வழங்கினார். அதனால் ஊக்கத்தோடு உழைக்கவும் உற்பத்தியைப் பெருக்கவும் வழி ஏற்படுத்தினார்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் சிறப்பான திட்டத்தால், தாம் தலைமைப் பொறுப்பிலிருந்த மிகக் குறைந்த கால அளவுக்குள்ளாகவே 25 சதவீதம் தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலைப் பகுதியிலேயே இலவசக் குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுத்தார். மாநிலத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தொடர்ந்து தாம் நிறைவேற்ற எண்ணி இருந்த திட்டங்களை நிறைவேற்ற இயலாமல்போனது தொழிலாளர்களின் துரதிருஷ்டம் என்றுதான் கொள்ள வேண்டும்.

தீப்பெட்டி தொழிலில் கூலி உயர்வு

தீப்பெட்டி தொழிற்சாலைகளில் மிகக்குறைந்த கூலியே வழங்கப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் மனிதாபிமானத்தோடு, குறிப்பாக, திக்கற்ற நிலையில் வாழ்ந்த பெண்களுக்கு உதவுவதற்காக திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தினார். இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டு அகதிகளாகத் தாயகம் திரும்பியவர்களுக்காக, குறிப்பாகப் பெண்களுக்காகக் குடிசைத் தொழிலியல் தொழிலாளர் கூட்டுறவு தீப்பெட்டி தொழிற்சாலையை திருச்செந்தூரில் நிறுவினார்.

1956 - 57ஆம் ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவே கூலி வழங்கப்பட்ட காலத்தில், பெண்களுக்கு அதிகபட்சமாக 1 ரூ 50 காசு உயர்த்தி, தினக்கூலியாக வழங்கினார். இத்தகைய அபூர்வமான திட்டங்கள் அவரையன்றி வேறு எவராலும் நிறைவேற்றி இருக்கமுடியாது.

அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தை ஒழுங்குபடுத்தியவர்

இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பிறகு, நாட்டில் உணவுப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனைப் போக்க அரசு சில திட்டங்களை வகுத்தது. அப்போதைய திருநெல்வேலி மாவட்ட கலெக்டராக இருந்த திரு. விஸ்வநாதன், ஐ.சீ.எஸ். அரசின் கொள்கையை நிறைவேற்ற ஏ.பி.சி.வீரபாகு அவர்களை அணுகி வேண்டுகோள் விடுத்தார். எனவே, 1942இல் தூத்துக்குடி கூட்டுறவுப்

பண்டக சாலையையும், அதன் சார்பாகப் பத்து கிளைகளையும் உருவாக்கினார். அவற்றின்மூலம் பொதுமக்களிடையே அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கத் தொடங்கினர்.

தமது திட்டமிட்ட திறமையான செயல்பாட்டால், விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்ததோடு, உணவுப்பொருள் கிடைக்காத நெருக்கடிநிலையையும் போக்கினார். இச்செயல் அன்றைய மக்களின் நீங்காத நினைவாகவும் இன்றைய இளையதலைமுறைக்கு செவிவழிச் செய்தியாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

'வினை நலம்வேண்டிய எல்லாம் தரும்' என்பார் வள்ளுவர். இவ்வகையில், தமக்கே உரிய சிறப்பான சிந்தனையுடன்கூடிய திட்டமிடலாலும் செயல்படுத்தும் திறமையாலும், தொழிலாளர்கள் அதிகமாக வாழும் பகுதியான தூத்துக்குடி எஸ்.எஸ்.பிள்ளை தெருவில் கூட்டுறவு சங்கத்தின் தலைமை இடத்தை அமைத்துச் செயல்பாடுகளைத் தொடங்கினார். அதனால் தொழிலாளர்களுக்குப் பண்டக சாலையின் சேவை காலதாமதமின்றி கிடைக்க வழிவகை செய்தார். பண்டக சாலையின் தலைமையை ஏற்றுத் திறம்படச் செயல்பட வைத்தார்.

வெள்ளிவிழா கண்ட கூட்டுறவு சங்கம்

ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் தலைமையும் தொடர்பணியும் கூட்டுறவு சங்க வணிக நிறுவனங்களை சிறப்பாக வளர்ச்சி அடையச் செய்தது. சங்கத்தின் இருபத்தைந்தாண்டு கால சேவையின் பலனாகச் சொந்தக் கட்டிடம் உருவாக்கப்பட்டது. வெள்ளிவிழாவும் கொண்டாடப்பட்டது.

அப்போது தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி பொதுத்தேர்தலில் தோற்று, தி.மு.க. ஆட்சி நடைபெற்றது. எனினும், அந்நாளைய தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள், தூத்துக்குடி கூட்டுறவு சங்கத் தலைவர் ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் செயற்கருஞ் செயல்களைப் பாராட்டிப் பேசியதை வரலாறு பதிவுசெய்துள்ளது. மாற்றுக் கட்சித் தலைவராக இருந்தபோதிலும் மனம்விட்டு, வெளிப்படையாகப் பாராட்டியதை மறக்கமுடியாது. ஏ.பி.சி.வீரபாகு போன்றவர்களின் செயல்பாடுகளைக் கண்டுதான் அண்ணாதுரை 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு'என்று கூறினாராதல் வேண்டும்.

வீடில்லாதவர்களுக்கு வீடு!

தமிழகத்தில்குடியிருக்கச்சொந்தமாக வீடு இல்லாதவர்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் மட்டுமே வீடு என்னும் சிறப்பான நிபந்தனையுடன் முதன்முதலில் தூத்துக்குடியில் 1946ஆம் ஆண்டு, ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தூத்துக்குடி கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தை நிறுவினார். அதன்மூலமாக அன்றைய காலகட்டத்தில் ரூ.3,000, ரூ.5,000 செலவில் வீடுகட்டவழிசெய்தார்.

''செய்யவேண்டுமென்று நினைத்தால், செய்வதற்கு அருமையான செயல்களைப் பெருமைப் பண்புடையவர்களே செய்ய இயலும்" என வள்ளுவர் கூறுவார். அவ்வகை சிறப்பைப் பெற்றவர் ஏ.பி.சி.வீரபாகு. அதனால்தான் தமிழ்நாட்டிலேயே இத்தகைய நிபந்தனையை முன்வைத்து, வேறு எந்த மாவட்டத்திலும் தொடங்காத காலத்திலேயே, வீடுகட்டும் கூட்டுறவு சங்கத்தைத் தொடங்கி நெடுங்காலம் அதன் தலைவராக இருந்து பணியாற்றினார். மிகச்சிறிய அளவில் தொடங்கப்பட்ட இச்சங்கத்தின் வாயிலாக, தூத்துக்குடி பெருநகர் உருவாயிற்று என்பது உண்மை.

கூட்டுறவு அடமான வங்கியைத் தொடங்கியவர்

தூத்துக்குடி நகர்வாழ் மக்களின் நலன்கருதி 1962இல் 'தூத்துக்குடி கூட்டுறவு வீடு அடமான பாங்க்' என்னும் வங்கியை ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தொடங்கி, அதன் தலைவராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். அதன்மூலம் தூத்துக்குடி நகர மக்கள் தங்கள் முன்கடனைத் தீர்க்கவும், ஏற்கெனவே இருக்கிற சொந்த வீட்டைப் புதுப்பிக்கவும், கூடுதல் பகுதிகளைக் கூட்டவும், புதிதாக வீடுகளைக் கட்டவும் தேவையான நிதி உதவியைக் கடனாகப் பெற ஏற்பாடு செய்தார். நெடுங்காலம் தொடர்ந்து தலைவராக இருந்து தூத்துக்குடி கூட்டுறவு வீடு அடமான பாங்கு, புதிய வீடுகட்ட அதிகபட்சமாகச் சுமார் இருபது லட்சம்வரை அவர் காலத்தில் கடன் வழங்கினார். இன்றைக்குச் சொத்து மதிப்பிற்கு ஏற்ப அதிக அளவில் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் முதன்முதலில் சிவகாசி, தூத்துக்குடி ஆகிய இரு ஊர்களில்மட்டுமே கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகள் அமைத்து தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டன. தூத்துக்குடியில் நிறுவப்பட்ட தொழிற்பேட்டைக்கு ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் பொறுப்பேற்றுக் கட்டுமான அமைப்பைச் சிறப்பாக உருவாக்கினார். எனினும், சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முன்னரே, மாநிலத்தில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதால், தலைமைப் பொறுப்பில் இருந்த ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம் பணியைத் தொடர இயலாமல் விலகினார்; இது துரதிருஷ்டவசமானதாகும்.

மீனவர் நண்பர் வீரபாகு!

சமுதாயத்திற்குப் பயன்பட வாழ்ந்த ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், தாம் வாழ்ந்த வாடித்தெருவைச் சுற்றிலும் வாழ்ந்துவந்த பரதவர் குல (மீனவர்) மக்களுடன் நெருங்கிப் பழகிவந்த காரணத்தால், அவர்கள் பட்ட இன்னல்களைக் கண்டு, பொறுக்க முடியாமல், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகத் 'தூத்துக்குடி மீனவர் கூட்டுறவு சங்க'த்தை உருவாக்கினார். கைம்மாறு கருதாத கடப்பாடுடைய ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் செய்த பேருதவியால் அம்மக்கள் பெரிதும் மகிழ்ந்தனர். மீனவர்களுக்கென முதன்முதலில் உருவாக்கப்பட்ட கூட்டுறவு சங்கம் இதுவேயாகும்.

தூத்துக்குடி நகரில் எத்தனையோ பரதவர் குலப் பெருமக்கள் இருந்த போதிலும், இந்த மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு Special Developement Officer's D.D.R.e. 47/49 dated 31.01.1950இன்படி Chief promoterஆக ஏ.பி.சி.வீரபாகு அவர்களே இருந்து இந்தச் சங்கத்தின் வளர்ச்சிக்கு உழைத்து மீனவர்கள் அனைவரின் போற்றுதலுக்கும் உரியவராக விளங்கினார்.

கூட்டுறவுத் தந்தை வீரபாகு!

சமுதாயத்தின் பல்வேறு பிரிவு மக்களும் அவரவர்க்கு இயன்ற தொழிலைச் செய்து வளர்ச்சிபெற கூட்டுறவு இயக்கத்தை வீரபாகு விரிவுபடுத்தினார். அதனால் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள் உருவாயின. கூட்டுறவு வீடு அடமான வங்கி, வல்லநாடு அரிஜன செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், ஹார்வி கூட்டுறவு சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் எனப் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களை உருவாக்கி, அவற்றின் முக்கியப் பொறுப்பை தாமே ஏற்று, அவற்றைச் செம்மையாக நிர்வகிப் பதற்குரிய நிர்வாகிகளை உருவாக்கி, அவர்களுக்கு வளர்ச்சிக்குரிய நன்நெறிகளைக் காட்டி செம்மையாகச் செயல்பட வைத்தார்.

தாம் தொடங்கிய நிறுவனங்கள் நெடுங்காலம் நின்று நிலைத்து மக்களின் தொழில்சார் பணிகளை ஊக்கப்படுத்த வேண்டுமெனத் திட்டமிட்டுச் செயல்முறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தினார். தமிழ்நாட்டில் சிறந்த கூட்டுறவு சங்கங்கள் பலவற்றைத் தோற்றுவித்து, தமிழக மக்களின் தொழில் வளம் பெருகவும் நாட்டின் பொருளாதாரம் உயரவும் கூட்டுறவு முறையைச் சிறப்பாகக் கையாண்டதால் ஏ.பி.சி.வீரபாகு அவர்களை மக்கள் 'கூட்டுறவுத் தந்தை' எனப் போற்றினர்.

தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்த திரு.செ.மாதவன் அவர்கள், கூட்டுறவுத்துறை விழா ஒன்றில் பேசும்போது, "இப்பண்டக சாலையை நடத்தும் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது, ஆளுங்கட்சியில் இருந்தவர். அப்போது அவர் பேசும்போது, எதிர்க்கட்சியினரான நாங்கள் பேச வேண்டியதை அவரே பேசி வந்தார். உள்ளதை உள்ளபடியே பேசும் உண்மையான ஜனநாயகப் பண்பு உடையவர் ஏ.பி.சி.வீரபாகு. இவரைப் போன்ற தன்னலமில்லாத சேவை மனப்பான்மையுள்ளவர்கள்தான் இந்தக் கூட்டுறவுத்துறைக்குப் பணிசெய்ய முன்வரவேண்டும்" என்று பாராட்டினார்.

தமிழ்நாடு அரசு கூட்டுறவுக் குழுமத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், சென்னை மாநிலக் கூட்டுறவு அபெக்ஸ் மார்க்கெட்டிங் சங்கத்தின் டைரக்டராகவும் நியமிக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி, அதன் செயல்பாட்டையும் பொருளாதாரத்தையும் உயர்த்தினார். மாநில வங்கி இணைப்புக்குழு வட்டத்தில் பிரதிநிதியாகவும் பணியாற்றினார். நாடு முழுவதும் கூட்டுறவு இயக்கத்தை வளர்த்தெடுக்கப் பெரிதும் பாடுபட்ட பெருந்தகையான ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், தென்பிராந்தியக் கூட்டுறவு இணைப்புக் கமிட்டியிலும் பணியாற்றினார்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், கூட்டுறவு நிறுவனங்களை நிர்வகித்த முறை குறித்து, நெல்லைநகர் காங்கிரஸ் கமிட்டி தலைவராகப் பணியாற்றிய திரு.எஸ்.சுப்பையா முதலியார் அவர்கள் கூறியுள்ள செய்திகளை நினைவில் கொள்வது நலமாகும். இச்செய்தி எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு நல்ல பாடமாகவும் கூட்டுறவுத்துறை சார்ந்த வழிகாட்டுதலாகவும் அமையும் :

"ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் தலைவராகவும் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் இருந்தார். நெல்லை மாவட்டக் கூட்டுறவு மத்தியப் பண்டகசாலைத் தலைவராக இருந்த பல ஆண்டுகள் பணிபுரிந்தார். அப்போது சில ஆண்டுகள் நிர்வாகக் குழுவில் ஓர் உறுப்பினராகப் பணியாற்ற எனக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தலைவராக இருக்கும் நிறுவனத்தில் டைரக்டராயிருக்க எனக்கு வாய்ப்பு கிடைத்ததைப் பெருமையாகக் கருதுகிறேன்."

செயல்திறன் மிக்கவர்!

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், கூட்டத்தை நடத்துகிற முறையே அலாதியானது. கூட்டத்திற்கு வருபவர்களுக்குத் தத்தம் மனக் கருத்துகளைச் சுதந்திரமாக விளக்கிப் பேச வாய்ப்பளித்து, பின்னர் தலைவர் என்ற முறையில், தெளிவாக விளக்கித் தம் முடிவைக் கூறுவார். அனைவரும், கருத்து வேறுபாடின்றித் தக்க முடிவு என்று ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக அவர் கூறும் விளக்கம் அமைந்திருக்கும்.

கூட்டுறவு அமைப்புகளில் பண்டக சாலைகளை நிர்வகிப்பது எளிதான காரியமில்லை. தொழில் நுட்பம் தெரிந்த, தனித்திறமையோடு செயலாற்றினால்தான் பண்டக

சாலைகள் சிறப்பாக இயங்க முடியும். விலைவாசி ஏற்றத்தாழ்வு, சேதாரம், தரம் கெடாமல் பாதுகாப்பது போன்ற அம்சங்களில் கவனம் செலுத்தத் தவறினால் பண்டகசாலை நட்டத்தில் இயங்க நேரிடும். இரசாயன உரம், நவ தானியங்கள், கைத்தறி துணிவகை, மில் துணிவகை, உணவுப் பொருள்கள் முதலானவை பண்டகசாலைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டன. பள்ளி மாணவர்களுக்குத் தனியாக நோட்டுப் புத்தகங்கள், எழுதுபொருள்கள், மருந்து விற்பனை நிலையங்கள் நடத்தப் பட்டன. எல்லாப் பிரிவுகளும் ஓரளவு லாபம் கிடைக்கக்கூடிய வகையில் செயல்பட்டு வந்தன.

அரசின் முகவராக விநியோகம் செய்த இரசாயன உரம், அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருள்களில் அரசின் கொள்கை காரணமாக நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தலைவராக இருந்த காரணத்தால், நஷ்டத்தின் அளவு குறைவாகவே இருந்தது.

பண்டகசாலை ஊழியர்களை நடத்த வேண்டிய விதத்தையும் அவரிடம்தான் கற்கவேண்டும். வேலையில் கண்டிப்பாக இருப்பார்.' பலர் அவரை அணுகவே அஞ்சுவர். அதேநேரத்தில், ஊழியர்களின் தேவைக்கு ஏற்ப ஊதிய உயர்வு, போனஸ் வழங்குவதில் தாராள மனப்பான்மையை வெளிப்படுத்துவார்.

மத்திய பண்டகசாலைக்கு ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் பொறுப்பாக இருந்த காலத்தில், இலாபத்தை வருடாவருடம் திரட்டிச் சேமித்து, பதவி விலகியபோது பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்களையும், இதர சொத்துக்களையும் விட்டுச் சென்றார்.

"இதனை இதனான் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்னும் குறள் கூறும் இலக்கணத்திற்கு ஏற்ப பணியாளர்களையும் பொறுப்பாளர்களையும் ஏ.பி.சி.வீ. அவர்கள், தேர்வு செய்து இயக்கி, நிர்வாகத்தை நடத்திக் காட்டினார்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு யூனியனின் முக்கிய நிர்வாகக் குழு உறுப்பினராகவும், அகில இந்தியக் கூட்டுறவு அமைப்புகளிலும் பொறுப்பு வகித்து மிகமிகத் திறமையாகப் பணியாற்றினார்.

"கூட்டுறவு சார்ந்த மாநாடுகளில் தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டால், 'ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் கருத்து என்ன?' என்று கேட்டு முடிவுசெய்கிற அளவுக்குத் திறமையாகப் பணியாற்றினார்" என்று திரு.எஸ்.சுப்பையா முதலியார் அவர்கள் கூறியுள்ள செய்தி, நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

ஏ.பி.சி.வீரபாகுவைக் கேளுங்கள்!

அக்காலத்தில், அரசாங்கத்தில் எத்துறை சார்ந்த ஐயங்களுக்கும் விடை தேடும்போது, 'ஏ.பி.சி. வீரபாகுவைக் கேளுங்கள்' என்று கூறுமளவுக்குப் பல்வேறு துறைகளிலும் கவனம் செலுத்தி, ஈடுபாட்டோடு உழைத்தார். மக்களின் தேவைகளை அறிந்து நிறைவு செய்யவும், மக்களின் தொழில்துறைகள், வணிகம், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தவும் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் பெரிதும் ஈடுபாடுகாட்டியதை அன்றையமக்களும் அரசியல் தலைவர்களும் நன்கு அறிவார்கள்.

இன்றைக்கு வாழும் மக்களும், இனி வரப் போகும் சந்ததியினரும்கூட தூத்துக்குடியின் வளத்திற்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத காரண கர்த்தாவாக இருந்தவர் ஏ.பி.சி.வீரபாகு அவர்களே என்பதைப் பறைசாற்ற வேண்டும்; எக்காலத்திலும் நினைவில் கொள்ளுதலும் வேண்டும்.

கூட்டுறவுத் துறையில்...





தூத்துக்குடி கூட்டுறவு சங்க வெள்ளி விழா கட்டிடத் திறப்பு விழாவில், தமிழகக் கூட்டுறவு துறை அமைச்சர் செ.மாதவன் உரையாற்றுகிறார். அருகில் ஏ.பி.சி.வீரபாகு அமர்ந்துள்ளார்.



தூத்துக்குடி கூட்டுறவு சங்க வெள்ளி விழா கட்டிடத் திறப்பு விழாவில் என்.எம்.ஆர்.சுப்பாராமன் உரையாற்றுகிறார். அருகில் ஏ.பி.சி.வீரபாகு அமர்ந்துள்ளார்.



மாவட்ட
ஆட்சியாளர்
ராஜேந்திரன், IAS
அவர்களுடன்
ஏ.பி.சி.வீரபாகு



ஆர் சி பிஷப்
தாமஸ் ஆண்டகை,
செவாலியர்
சி.ஆர்.மச்சாது
ஆகியோருடன்
ஏ.பி.சி.வீரபாகு



திருநெல்வேலி மாவட்ட
மத்திய கூட்டுறவு வங்கி விழாவில்
எம்.டி.கே.ராமலிங்கம் (பாப்பா)
டி.வி.அந்தோணி மற்றும்
ஏ.பி.சி.வீரபாகு



கல்விப் பணி

நாடு சுதந்திரம் பெற்று விட்டதால் மட்டுமே மக்கள் வாழ்வுநிலை உயர்ந்துவிடாது என்பதை காந்தியவாதியான வீரபாகு அவர்களே உணர்ந்திருந்தார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மக்கள் எதிர்கொண்ட வறுமை, வாழ்க்கைப் பிரச்சினை, வளமான வாழ்வின்மை ஆகிய அனைத்தும் சுதந்திரத்திற்குப் பின்னரும் தொடரவே செய்தன. இதற்கு அடிப்படைக் காரணம், மக்கள் அறியாமை இருளில் மூழ்கி இருந்ததே என்பதை வீரபாகு தெளிவாக உணர்ந்திருந்தார்.

தூத்துக்குடி நகரத்தில் வாழ்ந்ததோடு அன்றி, பிற நகரங்களுக்கும் சென்றுவந்த வீரபாகு அவர்கள், அங்கெல்லாம் மக்கள் வளம்பெற வாழ்ந்ததற்கு அடிப்படையாக அமைந்தது கல்வியே என்பதையும் உணர்ந்தார். சிற்றூர்களுக்குச் சென்றபோது அங்கு வாழ்ந்த மக்கள் ஏழ்மையிலும் வறுமையிலும் வாடிக்கிடந்ததை கண்டார். இந்த மக்களின் துயர்போக்க எண்ணினார். தாம் வாழ்ந்த மாவட்டத்து மக்களுக்கும் அதனைச் சூழ உள்ள மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் கல்வி வழங்கத் திட்டமிட்டார்.

மக்கள் கல்வி அறிவைப் பெற்றால்தான், தங்களைப் பிடித்துள்ள அறியாமை நீங்கப் பெறுவர்; அறிவியல் சார்ந்த தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்கொண்டு நாட்டு முன்னேற்றத்திற்கு உழைப்பர். வெறும் கூலித் தொழிலாளர்களாலும், மக்களாலும் நல்வாழ்வை அமைத்துக் கொள்ளவோ, நாட்டு முன்னேற்றத் திற்கு உழைக்கவோ, குடியரசுநாட்டிற்குச் சிறந்த தலைவர்களை உருவாக்கவோ முடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்தார்.

எனவே, மக்கள் அனைவருக்கும் தம்மால் இயன்ற அளவுக்குக் கல்வி அளிக்கத் திட்டமிட்டார். விடுதலைக் காற்றைச் சுவாசிக்கும் மக்கள், கல்வி கற்றால்தான் சிறப்பாகச் சிந்திக்கவும் செயல்படவும், பிறருக்கு வழிகாட்டவும் முடியும்; சீரிய தலைமைகளை உருவாக்க முடியும் என்று உணர்ந்தார். எனவே,

"இன்னறுங் கனிச்சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்னும் தேசிய க்கவி பாரதியாரின் அறிவுரையை நிறைவேற்றி வைப்பது தம் கடமை எனக் கருதி, தம்மால் செய்ய முடியும் என்னும் உறுதியோடு, திருமந்திர நகரத்திலுள்ள தம் சொத்துக்களை முழுமையாக பிணையாக வைத்து, 'கப்பலோட்டிய தமிழன்', 'செக்கிழுத்த செம்மல்', 'தென்னாட்டுத் திலகர்' என்றெல்லாம் போற்றப்பட்ட வ.உ.சிதம்பரனார் பெயரில் ஒரு கல்லூரியை உருவாக்கத் திட்டமிட்டார்.

ம.பொ.சி. வியந்த வீரபாகு!

ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் இயல்பு குறித்தும், கல்விப்பணி குறித்தும் தமிழ்நாடு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவராகப் பணியாற்றிய 'சிலம்புச் செல்வர்' ம.பொ.சிவஞானம் அவர்கள் நினைவுகூர்ந்த செய்தி இங்கு நோக்கத்தக்கதாகும்.

'தூத்துக்குடியில் வ.உ.சி.கல்லூரி அமைவதற்கான ஆரம்பப் பணிகளில் ஈடுபட்டவர்களிலே நானும் ஒருவன், மூதறிஞர் ராஜாஜியும், கல்கி கிருஷ்ணமூர்த்தியும் வ.உ.சி.கல்லூரி நிறுவுவதற்கான முதல் முயற்சியினை மேற்கொண்டார்கள். அந்தக் காலந்தொட்டுக் கல்லூரியை நிறுவவும், அதனை நிலைக்க வைக்கவும் அரும்பாடுபட்டு வந்திருக்கிறார் அன்பர் வீரபாகு.

விடுதலைப் போராட்டக் காலத்தில் நாங்கள் இருவரும் நட்புகொண்டு, காங்கிரஸ் மகாசபையின் மூலம் பாடுபட்டோம். ராஜாஜியின் தலைமை, தமிழ்நாட்டிற்கு நீடித்துக் கிடைக்க வேண்டும் என்று கருதி, அதற்காக நான் பாடுபட்ட காலத்திலே, நண்பர் ஏ.பி.சி.வீரபாகுவுடன் நெருங்கிப் பழகித் தொடர்புகொள்ள நேர்ந்தது.

ஆஜானபானுவான உடல்வளத்தைப் பெற்றவராயினும், அயராது ஓடியாடி உழைப்பதிலே ஆர்வமுடையவர். ஆம்; சிறந்த உழைப்பாளி; கள்ளங்கபடமற்றவர்; நண்பர்களோடு திறந்த மனத்துடன் உரையாடக் கூடியவர். தூத்துக்குடி வாழ் குழந்தைகளுக்கும், காளையர்களுக்கும் ஆரம்ப, நடுத்தர, உயர்தரக் கல்வி தரும் பணியிலே அன்பர் வீரபாகு காட்டி வரும் ஆர்வம் போற்றுதற்குரியதாகும்.

வ.உ.சி. பெயரில் கல்லூரி!

கட்சிஅரசியல்வேறுபாடுகாரணமாக, நாங்கள் முன்போல் அடிக்கடி சந்தித்துப் பழக வாய்ப்பற்றவர்களாகி விட்டோம். ஆயினும், ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் கல்வித்துறையில் ஆற்றி வரும் பணிகளை நான் கூர்ந்து கவனித்து வந்திருக்கிறேன். அண்மையில் வ.உ.சிதம்பரனாரின் நூற்றாண்டு விழாவினையொட்டி, நான் வ.உ.சி. கல்லூரிக்கு வர நேர்ந்தது. ஆம், வீரபாகு அழைத்துத்தான்! அப்போது அவர் என்னை உபசரித்த பண்பானது, பழைய நண்பராகவே அவரை எனக்கு அறிமுகப்படுத்தியது."

வ.உ.சி. கல்லூரியின் வளர்ச்சியைக் கண்காணித்து வருபவர்கள், அந்தக் கல்லூரியின் வளர்ச்சி எந்த அளவுக்கு ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்திருந்தது என்பதைத் தெளிவாக அறிவர். ஏ.பி.சி.வீரபாகு அவர்கள்

தம் வாழ்நாளில் பெரும் பகுதியை ஏன், முழுவதையும் கல்லூரியின் முன்னேற்றத்திற்காகவே செலவிட்டார் எனலாம். இந்தக் கல்லூரியை உருவாக்குவதற்கு ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் அனுபவித்த இன்னல்கள், இடையூறுகள் பல. கல்லூரி தொடங்குவதற்குத் தேவையான நிதியைக் குறித்த காலத்தில் கட்டமுடியவில்லை. அதேவேளையில், அக்கல்லூரியைத் தாம் நினைத்த, அந்தக் கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே திறக்கவும் முடியவில்லை என்றால், மேலும் ஓராண்டு காலம், அடுத்த கல்வி ஆண்டு வரை காத்திருக்க வேண்டும்.

எனவே, தம் முயற்சியைத் தள்ளிப்போட விரும்பவில்லை. மேற்கொண்ட செயலை உடனே செய்து முடிக்காமல் காலம் தாழ்த்துதல் என்பது மறதியை உருவாக்கலாம்; மறதி என்பது சோம்பலை உருவாக்கலாம்; சோம்பல் என்பது உறக்கத்தைத் தோற்றுவிக்கலாம். இவை அனைத்தும் தொடர்ந்தால் செயல் நிறைவு பெறுவதைத் தடுக்கலாம். இதைத்தான் வள்ளுவர்,

"நெடுநீர் மறவி மடியுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்"

என்று கூறினார்.

இதைத்தெளிவாக உணர்ந்திருந்த காரணத்தால், எண்ணியதை எண்ணியபடி செய்து முடிக்கும் உறுதியான மனம் படைத்த ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், கல்லூரியைத் திட்டமிட்டபடி அந்தக் கல்வி ஆண்டிலேயே திறப்பதில் உறுதியாக இருந்து முனைப்பாகச் செயல்பட திட்டமிட்டார்.

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என்று வள்ளுவர் கூறியுள்ளார் அல்லவா?

தம் சமுதாயத்தை, தம் நாட்டை உயர்த்தக் கல்வி நிலையத்தைத் தொடங்கியே ஆகவேண்டும் என முனைப்போடு இருந்தவருக்கு, அவர் வணங்கிய இறைவன் துணை நின்றதில் வியப்பில்லை. எனவே, ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் விடாமுயற்சியை மேற்கொண்டார். முயற்சி திருவினை ஆக்குமல்லவா?

தடைகளைத் தகர்த்தவர்!

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த, மறைந்த மாமேதை டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களைச் சந்தித்து, இந்தச் சிக்கலான நிலைமையை ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் விளக்கினார். கல்லூரி தொடங்குவது தொடர்பான செயல்களை நிறைவு செய்வதாக உறுதியும் அளித்தார்.

டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் திறமைக்கும் கண்டிப்புக்கும் இலக்கணமாக விளங்கியவர் என்பது உலகறிந்த உண்மை! அத்தகையவர் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தந்த உறுதிமொழியில் பூரண நம்பிக்கை வைத்து, நிதியை முழுமையாகக் கட்டமுடியாத சூழ்நிலையிலும் கல்லூரியைத் திறப்பதற்கு அங்கீகாரம் அளித்தார்! ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் வாக்குக்கு எந்த அளவுக்கு மதிப்பு இருந்தது என்பதை இதனால் தெளியலாம்.

தொடர்ந்து, மகளிருக்கெனத் தனிக் கல்லூரியை உருவாக்கி, தனிக் கட்டிடமும் கட்டி இயங்கவைத்தார். அதற்குத் தம் தாயார் மகாலட்சுமி பெயரைச் சூட்டினார். கல்லூரியில் எம்.ஏ. முதலான பிரிவுகளைக் கொண்டுவந்து, முதல்நிலைக் கல்லூரியாக

உயர வழிவகுத்த பெருமையும் வீரபாகு அவர்களையே சாரும்.

இவற்றுடன், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை ஏற்படுத்தியது முக்கியமான சாதனையாகும். இக்கல்லூரிகள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து கணக்கெடுத்தால், பல ஆயிரம் ஏழை எளிய மாணவர்கள் குறைந்த செலவில் கல்வி பயின்று சமுதாயத்தில் உயர்ந்துள்ளமை புலப்படும்.

இருபதாம் நூற்றாண்டில் சமுதாயத்தில் கல்விக்காக அரும்பணியாற்றிய தலைவர்களுள் ஒருவராக வரலாற்றில் இடம்பிடித்தவர் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் ஆவார். தமிழ்நாட்டில் ஒரு முக்கிய அரசியல் தலைவராக இருந்து வந்ததோடு, சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உழைத்து, குறிப்பாகக் கல்விக்கு உழைத்துச்சாதனை செய்தவர்.

வ.உ.சி.கல்லூரி இந்த விண்ணும் மண்ணும் உள்ளளவும் ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் கல்வித் தொண்டுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை!

வற்றாத கல்விக் கடல் வ.உ.சி. கல்லூரி!

திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்குப் பயணம் செய்யும்போது, தூத்துக்குடி எல்லைக்குள் நுழைந்தவுடன், வ.உ.சி. கல்லூரி கம்பீரமாகக் காட்சி அளிப்பதைக் காணலாம். இக்கல்லூரியை உருவாக்கிய முழுப்பொறுப்பும் ஏ.பி.சி.வீரபாகு அவர்களையே சாரும். இக்கல்விப் பணியைத் தொடங்குவதற்காக ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், ''வ.உ.சி. கல்விக்'கழகம் என்னும் அறங்காவலர் குழுவைப் பதிவு செய்தார்.

1949-1951இல் வ.உ.சி. கல்லூரியை நிறுவத் திட்டமிட்டு, அப்போது சுதந்திர இந்தியாவில் முதல் ஜனாதிபதியாக வீற்றிருந்த டாக்டர் ராஜேந்திரபிரசாத் அவர்களைக் கொண்டு அடிக்கல் நாட்ட ஏற்பாடு செய்திருந்தார். திட்டமிட்டபடி ஜனாதிபதி வரஇயலாமல் போனதால், தமிழ்த் தொண்டிலும் சைவசமயத் தொண்டிலும் அந்நாளில் சிறந்தோங்கி இருந்த, திருவாவடுதுறை ஆதீன கர்த்தா நல்லாசி கூற, அப்போதைய சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த மாண்புமிகு குமாரசாமி ராஜா அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

கல்வி நிறுவனத்தை உருவாக்குவதும் அதற்குரிய கட்டிட அமைப்பை உருவாக்குவதும், அதற்குத் தேவையான இடத்தைத் தேடுவதும் அவ்வளவு எளிதான செயலன்று. இன்றுபோல் கல்வி வியாபாரத்திற்காக, கல்வி நிறுவனங்களை அவர் தொடங்கவில்லை.

அந்நாளில், கல்விக்கொடை வழங்குவதைச் சான்றோரும் செல்வந்தர்களும் உன்னதமான அறச்செயல் எனக் கருதி வந்தனர். எனவே, தாம் திட்டமிட்ட கல்லூரி வளாகத்தை, தென் மாவட்டத் திலேயே மிகப் பெரியதாக அமைக்கத் திட்டமிட்டு, சுமார் எண்பது ஏக்கர் நிலப்பரப்பை அரசிடமிருந்து மிக அரிதின் முயன்று பெற்றார்.

கலைக்கோயிலாய்த் திகழும் வ.உ.சி. கல்லூரி!

தென் மாநில மக்கள் அனைவரின் கல்வித் தேவையை நிறைவு செய்யும்

வகையில், கல்லூரிப் பாடப் பொருள் களை, கற்பிப்பதற்குரிய பாடங் களைத் திட்டமிட்டுக் கல்லூரியைக் கட்டத் தொடங்கினார். கல்லூரியின் ஒவ்வொரு அமைப்பையும் எதிர்கால விரிவாக்கத்திற்குத் தக்கவகையில் திட்டமிட்டுக் கட்டத் தொடங்கினார். ஒரு குழந்தையைப் பேணி வளர்க்கும் தந்தைபோல் வ.உ.சி. கல்லூரியை ஒரு கலைக்கோயிலாக உருவாக்கினார். தாம் கனவுகண்ட கலைக்கூடத்தைக் கல்லூரி வடிவில் நிர்மாணித்தார்.

கல்வி கற்பதற்காக நெல்லை மாநகருக்கும் மதுரைக்கும் சென்ற மக்களும், செல்லமுடியாத மக்களும் உள்ளூரிலேயே, தத்தம் பெற்றோரையும் வீட்டையும் பிரிந்து துன்புறாமல் கல்வி கற்க வ.உ.சி. கல்லூரி பெரிதும் துணைபுரிந்தது. இன்றும் பல்லாயிரக் கணக்கானோர், பட்டதாரிகளாக உருவாகக் காரணமாகவும் திகழ்கிறது.

வ.உ.சி. கல்லூரி தூத்துக்குடி நகருக்கே ஒரு சிறந்த அணிகலனாக இன்றும் திகழ்ந்து வருகிறது. அது ஊருக்குப் பெருமை சேர்க்கும் உன்னத நிறுவனமாக விளங்குகிறது.

தேசபக்தர், வீரர் சிதம்பரனாரின் பெயரைத் தாங்கி, மாணவர்களுக்குத் தேசபக்தியையும் அறிவு ஒளியையும், ஆன்மிகத்தோடு நல்லொழுக்கத்தையும் வழங்கி வரும் இக்கல்லூரியைக் கண்டு பெருமை கொள்ளாதவர் எவரும் இரார்.

தென் தமிழகத்தில் மதுரைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்ட பின்னர் அதன்கீழ் அமைந்த மிகப்பெரிய கல்லூரியாக வ.உ.சி.கல்லூரி விளங்கியதற்கு வீரபாகு அவர்களின் பெருமுயற்சியே காரணமாகும்.

வெள்ளிவிழாவையும் பொன்விழா வையும் கடந்து, வானளாவி நிற்கும் கட்டிடங்கள், வண்ணமலர்கள் பூத்துக் குலுங்கும் மரங்கள் அடர்ந்து, கோயில் கு டை வ ரை வ ா யி ல் ப ே ா ல் நுழைவுவாயில் எல்லாம் ஒன்றுசேர்ந்து கலைக்கோயிலாக நின்று நிலவுகிறது.

நாட்டிற்கு நல்ல ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் என்பதற்காக அதன் அருகிலேயே சிறந்த வ.உ.சி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியையும் உ ரு வ ா க் கி ன ா ர். 1959 ஆ ம் ஆண்டிலேயே அதற்குத் தேவையான மாதிரி உயர்நிலைப்பள்ளியை உருவாக்க, 'சுப்பையா வித்யாலயம்' என்னும் ஆண்கள் பள்ளியை வாங்கி, அதனை விரிவாக்கம் செய்து பாதுகாத்தார்.

அந்நாளில் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் ஒன்றான சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட் உறுப்பினராகவும் வீரபாகு அவர்கள் பணியாற்றிப் பெருமை சேர்த்தார்.

ராஜாசர்.அண்ணாமலைசெட்டியார், டாக்டர்அழகப்பசெட்டியார், கருமுத்து தியாகராசசெட்டியார், அவிநாசிலிங்கம் செட்டியார், பச்சையப்ப முதலியார், செங்கல்வராய நாயக்கர் எனத் தமிழகத்தில் எண்ணற்ற கல்விக் கொடையாளிகள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கல்விக் கொடையளித் துள்ளனர். இவ்வகையில், தூத்துக்குடி, திருநெல்வேலி பகுதி மக்களின் உயர்வுக்குரிய கல்விக்கொடை வழங்கிய ஏ.பி.சி.வீரபாகு அவர்களை இவர்களோடு ஒப்பவைத்து நாம் போற்றுவது மிகையாகாது.





விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சி.யின் பெயரில் திறக்கப்படும் நூலகம். பின்னர் இந்நூலகம், வ.உ.சி. கல்லூரியாக மாற வழிசெய்தவர் ஏ.பி.சி.வீரபாகு



இந்தியா சுதந்திரம் பெற்ற 1947 ஆகஸ்ட் 15 அன்று விடுதலை விழாவில் ஏ.பி.சி.வீரபாகு



வ.உ.சி. கல்லூரி விழாவில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் டி.வி.அந்தோணி, இ.ஆ.ப., கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஸ்ரீதரமேனன் ஆகியோருடன் ஏ.பி.சி.வீரபாகு



கல்விப் பணியில்...



ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரி தொடக்க விழாவில்
தமிழக முதல்வர் மு.கருணாநிதி அவர்கள் உரையாற்றுகிறார்.
தமிழக சட்டமன்ற சபாநாயகர் சி.பா.ஆதித்தனார்,
எஸ்.ஏ.முருகானந்தம் ஆகியோருடன் ஏ.பி.சி.வீரபாகு



வ.உ.சி. கல்விக் கழக
கூட்டமொன்றில்
ஏ.பி.சி.வீரபாகு



வ.உ.சி. கல்லூரியில்
நடைபெற்ற மகாத்மா காந்தி
நூற்றாண்டு விழாவில்
டி.என்.அனந்தநாயகி
உரையாற்றுகிறார்.
ஏ.பி.சி.வீரபாகு மேடையில்
அமர்ந்துள்ளார்.

31574



வ.உ.சி. கல்லூரியில் ஆங்கில இலக்கியம் முதுகலை பட்டப்படிப்பு தொடக்க விழாவில் தூத்துக்குடி மறை மாவட்ட ஆயர் வணத்திற்குரிய தாமஸ் பர்னாண்டோ அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு

A.P.C. MAHALAXMI COLLEGE FOR WOMEN
LIBRARY
THOOTHUKUDI-628 002



வ.உ.சி. கல்லூரி விழாவின்போது ஏ.பி.சி.வீரபாகு உரையாற்றுகிறார்



வ.உ.சி. கல்லூரியின் முதல் முதல்வர் பேராசிரியர் ஆ.சீனிவாசராகவன் அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு. நடுவில் இருப்பவர் இரண்டாவது முதல்வர் பேராசிரியர் ஸ்ரீதரமேனன்



துணைவேந்தர் சிட்டிபாபுவுடன் வ.உ.சி. கல்லூரி முதல்வர் ஏ.பி.சி.வீரபாகு





ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரியின் முதலாம் ஆண்டு விழாவில் ஏ.பி.சி.வீரபாகு



தூத்துக்குடி நகர சபை சார்பாக வ.உ.சி. கல்லூரிக்கு ரூபாய் ஒரு லட்சம் வழங்கும் நகர சபைத் தலைவர் எம்.வி.எஸ்.சுந்தரவேல். எதிரில் அமர்ந்திருப்பவர் எம்.சி.வீரபாகு



மதுரை காமராசர்
பல்கலைக் கழக
துணைவேந்தர் முனைவர்
தெ.பொ.மீனாட்சிசுந்தரம்
அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



சென்னைப் பல்கலைக் கழக
துணைவேந்தர்
பேராசிரியர்
நெ.து.சுந்தரவடிவேலு
அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



சென்னைப் பல்கலைக் கழக
துணைவேந்தர்
டாக்டர் ஏ.லட்சுமணசாமி முதலியார்
அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு

கல்வியாளர்களுடன்...



அண்ணாமலை பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.வி.சிட்டிபாபு அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு





அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர் வி.சி.குழந்தைசாமி அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு

மதுரை காமராசர் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் மு.வரதராசானார் அவர்களுடன் (இடது புறம்) ஏ.பி.சி.வீரபாகு





சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் மால்கம் ஆதிசேஷையா அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



சட்டமன்றப் பணி

காங்கிரஸ் பேரியகத்தில் சேர்ந்து, நாட்டின்விடுதலைக்காகப்போராடினார். எனினும், பதவிகளைத் தேடி வீரபாகு செல்லவில்லை. எனினும், மக்கள் விருப்பப்படியும் கட்சிப் பொறுப் பாளர்களின் வேண்டுதல்படியும் ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலிருந்து சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு உறுப்பினராக 1957ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பெற்றார். மீண்டும் 1962இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சட்டமன்றத்தில் 1967வரை பணிபுரிந்தார்.

இவ்வகையில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் பத்து ஆண்டுகள் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். அப்போது பல பொதுக் குழுக்களில் அங்கம் வகித்துச் சிறந்த பணிகளை நிறைவேற்றியுள்ளார். எந்தக் குழுவில் இடம்பெற்றாலும் ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் கருத்துக்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. முதிர்ந்த அரசியல் ஞானத்தோடு, பொருளாதார வல்லுநராகவும் மூதறிஞர் ராஜாஜியின் பக்தராகவும், பெருந்தலைவர் காமராஜருக்கு உற்ற நண்பராகவும் விளங்கினார்.

நெல்லை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றியதால், தொண்டர்களிடம் பாச உணர்வோடு பழகினார். தொண்டர்கள் துன்பப்படும் போதெல்லாம், தம் சொந்த கைப்பொருளைக் கொடுத்தும் அவர்களின் துயர் களைந்தவர். தொண்டர்களை ஆதரித்ததில் ஏ.பி.சி.வீரபாகு அவர்களுக்கு நிகர் ஏ.பி.சி.வீரபாகு அவர்களாகத்தான் இருக்க முடியும்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலகட்டத்தில் தமது மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பாடுபட்டு, பல திட்டங்களை நிறைவேற்றக் கடினமாக உழைத்து வெற்றிகண்டார்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் பேசும் பொதுக் கூட்டங்களுக்கும், நடத்தும் பொதுநிகழ்ச்சிகளுக்கும் மக்கள்

திரண்டு வந்து தங்கள் அன்பையும், நன்றியுணர்வையும் வெளிப்படுத்திப் பேராதரவு தந்தார்கள். அரசியல் பிரச்சினையாயினும் சரி, நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையாயினும் சரி தெளிவாகவும் கோர்வையாகவும், கேட்போர் மனம் தெளிவடையும் வகையில் பேசும் வல்லமையில் வீரபாகு அவர்கள் மிகச்சிறந்த ஆற்றலுடையவராகத் திகழ்ந்தார்.

முன்னுணர்வுடைய மூதறிஞர்!

சட்டமன்றத்தில் வீரபாகு அவர்கள் ஆற்றிய உரைகள் அனைத்தும் தீர்க்க தரிசனமாகவே அமைந்தன. பின்னர் வரக்கூடியதை முன்னரே அறிந்து கூறுபவர்போல், வீரபாகு அவர்கள் சட்டமன்றத்தில் செயல்பட்டார். வீரபாகு அவர்களின் தெளிவான சிந்தனையில் பிறந்த கருத்துகளை எதிர்கட்சியினரும் பாராட்டினார்கள்.

பல ஆண்டுகள் அரசியல் அனுபவம் பெற்றுத் தமிழ்நாட்டில் முதலமைச்சராகப் பணியாற்றிய கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், ''தரமாகப் பேசக்கூடிய ஒரு சில உறுப்பினர்களுள் ஏ.பி.சி.வீ அவர்களும் ஒருவராவார்'' என்று பாராட்டியுள்ளதிலிருந்தே இதனை அறியலாம்.

பின்னர் நடைபெறவேண்டிய நிகழ்வுகளை முன்னரே அறிந்து கூறுவதுபோல் ஆற்றிய உரைகளைக் கேட்டவர்கள் பலரும், வீரபாகு அவர்களை 'முன் உணர்வுடைய மூதறிஞர்' எனப் பாராட்டினர்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் நம் நாட்டின் எதிர்கால வளர்ச்சியில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். எனவே, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராகப் பணியாற்றிய பண்டித ஜவஹர்லால் நேருவுக்குப் பிறகு, நம் நாட்டில் முற்போக்குத் திட்டங்கள் நிறைவேற்ற வேண்டுமானால், ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டுமென்றால், நாட்டுக்கும் காங்கிரஸ் இயக்கத்திற்கும் இந்திராகாந்தியின் தலைமையே சிறந்தது என்று உறுதிபடக் கூறினார்.

இந்திய நாட்டை உலக நாடுகளுக்கு ஒப்பாக வார்த்தெடுக்க இந்திய தேசிய காங்கிரஸால்தான் முடியும் என்பதை உணர்ந்ததால், கட்சிக்கு சிரமநிலை ஏற்பட்டபோது, தமிழகத்தில் கட்சிப் பொறுப்பேற்று, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதவியை ஏற்று, கட்சியை வளர்த்தெடுக்க முயன்றார்.

வங்கிகள் தேசியமயமானது சரியே!

இந்திரா காந்தி பிரதமராகி வங்கிகளைத் தேசியமயமாக்கியபோது, ''தேசியப் பொருளாதாரப் பிரச்சினையில் - ஒரு பிரச்சினையை முடிப்பதில், நடைமுறை அணுகுதலில் சமூகத்திலுள்ள மூலதனத்தை முதலீடு செய்தவர்களுக்கும், உழைப்புச் சக்தியைக் கொடுப்பவர்களுக்கும், உற்பத்தி செய்த பொருளை அனுபவிப்போருக்கும் இடையில் பல்வேறு கருத்து மோதல்கள் ஏற்படுவது இயற்கையே'' என்று பேசி, வங்கிகளைத் தேசியமயமாக்கியது சரியே என ஆதரித்தார்.

மேலும், ''இந்தத் தேசத்தில் வேலையில்லாதோரின் பிரச்சினை அதிகரித்துக் கொண்டுபோகின்ற நிலவரத்தை நீட்டிக்காமல் தடுத்து நிறுத்த அரசுதவறுமானால், தேசத்திற்குப் பேரபாயம் விளையும்'' என்று உறுதியாகக் கூறினார்.

''பொதுமக்களின் சேமிப்பை, பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும் பயன்படுத்தவேண்டும். இதற்காக

மக்கள்நல அரசு (Welfare State) தனிக்கவனம் செலுத்தவேண்டும் என்பது இன்றியமையாத கடமை யாகும். அதைத்தான், வங்கிகளைத் தேசியமாக்கியதன்மூலம் பிரதமர் இந்திரா காந்தி தலைமையிலான அரசு நிறைவேற்றியுள்ளது'' என்று ஆதரவு தந்தார்.

ஜனநாயக சோஷலிசத்தைப் பிரகடனப்படுத்திய காங்கிரஸ்!

வீரபாகு அவர்கள் மாவட்டக் காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பு வகித்தபோது, காங்கிரஸ் இயக்கத்தின் எதிர்கால செயல்பாடுகள் என்னென்னவாக இருக்கவேண்டும் என்பதை 16.09.1947இல், அனைத்திந்தியக் காங்கிரஸுக்குக் கடிதம் ஒன்றை எழுதித் தம் கருத்தை உறுதிப்படுத்தினார்.

இந்திய விடுதலைக்காகப் பல்வேறு போராட்டங்களை மக்களின் ஒத்துழைப்போடு நடத்தி வெற்றி கண்ட காங்கிரஸ் இயக்கம், இனி இந்திய மக்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் பெருக்கத்திற்கும் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகளைத் திட்டவட்டமாக வரையறுத்து நெறிப்படுத்தி எழுதினார்.

இந்தக் காலகட்டத்தில்தான் காங்கிரஸ் இயக்கம், இந்தியாவைக் குடியரசு நாடாக்கவும், இருபத்தோரு வயதுநிறைந்தகுடிமக்கள்அனைவருக்கும் ஓட்டுரிமை வழங்கவும், சுதந்திர இந்தியாவை சோஷலிச ஜனநாயக நாடாக மாற்றவும் திட்டமிட்டுக் கொண்டிருந்தது.

எனவே, வீரபாகு அவர்கள், "காங்கிரஸ் பேரியக்கத்தின் குறிக்கோள், இந்தியாவை சோஷலிச ஜனநாயக நாடாக மட்டும் அல்லாமல், அனைத்து மக்கள் வாழ்வு சிறக்கவும், நாட்டின் பொருளாதாரம் வளம் பெறவும் திட்டங்களை வகுப்பதாகவும் இருக்கவேண்டும். நம் நாட்டு மக்களுள் பெரும்பான்மையினர் கிராமங்களில் வாழ்வதால், விவசாயிகளின் நலனும், நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்கத் தொழிலாளர்களின் நலனும் பாதுகாக்கப்படுவதோடு, அனைவரின் வாழ்க்கைத் தரமும் உயர்த்தப்படவேண்டும். இதற்காகக் காங்கிரஸ் இயக்கத்தின் பொறுப்பாளர்கள் அனைவரும் சூளுரை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று எழுதினார்.

1962ஆம் ஆண்டு ஆவடியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் அன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் காமராஜர், இந்தியப் பிரதமர் பண்டித நேரு முதலானோர் ஜனநாயக சோஷலிசத்தைப் பிரகடனம் செய்ததை இங்கு நினைவுகூர்தல் வேண்டும்.

இவ்வாறு பிரகடனப்படுத்துவதற்கு முன்பே, வீரபாகு அவர்கள், 1947ஆம் ஆண்டிலேயே ஜனநாயக சோஷலிச குடியரசு தத்துவத்தைப் பற்றித் தாம் சார்ந்திருந்த இயக்கத்திற்குக் கடித வாயிலாகத் தெரிவித்தார் என்றால், அவரது தீர்க்க தரிசனம் விளங்கும். வீரபாகு அவர்கள் எழுதிய கடிதத்தின் உள்ளடக்கச் செய்திகள் சிலவற்றை இனி காண்போம்.

விவசாயிகளின் வேதனையைத் தீர்த்தவர்

வீரபாகு அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தில் இருந்த காலத்திலும், சட்டமன்ற உறுப்பினரான பிறகும், தூத்துக்குடி பகுதியிலும் திருநெல்வேலி மாவட்டத்திலும்

பொதுமக்களின் நலனுக்காகப் பல்வேறு பணிகளை மேற்கொண்டார். அந்த வகையில் சில அதிகாரிகளுக்கு கடிதங்களை எழுதி, உடனுக்குடன் செயல்பட வைத்தார்.

தமிழ்நாடு தனி மாநிலமாகப் பிரிக்கப்படாதிருந்த, விரிந்த சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில், அரசியல் தியாகிகளுக்கு நிலம் வழங்குவது தொடர்பாகவும் தச்சநல்லூர் பொதுவழி குறித்தும் அப்போதைய நிலங்கள் வருவாய்த் துறை அமைச்சர் மாண்புமிகு காசா வெங்கட்ராவ் அவர்களுக்கு 12.04.1948இல் கடிதம் எழுதினார். அமைச்சர் உடனடியாக 16.04.1948 அன்று பதில் அனுப்பினார். இதனால் அன்றைய பொறுப்புள்ள அமைச்சர்கள் வீரபாகு அவர்களை எந்த அளவுக்கு மதித்துள்ளனர் என்பது தெளிவாகும். வீரபாகு அவர்களின் வேண்டுதல்களும் உடனடியாக நிறைவேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கிணறுகளை ஆழப்படுத்துவதற்குரிய போரிங் கருவிகளையும் வெடிமருந்து சிமெண்டு முதலானவற்றையும் உடனடியாக விவசாயிகளுக்கு அளித்து உதவவேண்டுமென்று 1947ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் நாளன்று அரசுக்குக் கடிதம் எழுதினார். அடுத்த சில வாரங்களில் அரசு செயலர், மாவட்ட கலெக்டர் அவர்களுக்கு ஆணைப்பிறப்பித்து ஆவண செய்வதற்கு வழிவகுத்தார்.

விவசாயிகளின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்யவும், பொதுமக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்யவும், நாளும் பெருகிவரும் மக்கள் தொகையைக் கவனத்தில் கொண்டு புதிய கிணறுகளை வெட்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் வேண்டும் என்பதை 1947இல் வீரபாகு அவர்கள் அரசுக்கு வலியுறுத்தினார்.

அத்துடன், 1965இல் சர்வோதய கிராம தான டிரஸ்டை ஏற்படுத்தி, அதன் மூலமாக நாங்குநேரி, சங்கரன்கோவில் வட்டங்களில் முந்நூறுக்கும் மேற்பட்ட கிணறுகளைத் தோண்டுவதற்கு வழிவகுத்தார்.

நீர்ப்பாசனத்துக்கான நிதி வசூல்!

1960ஆம் ஆண்டு முணிமுத்தாறு நீர்ப்பாசன அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஆட்சிப் பொறுப்பிலிருந்த அன்றைய அரசு மக்களிடம் கடனாக நிதி திரட்டியது. இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதற்காக, அன்றைய மாவட்ட காங்கிரஸ் தலைவர்களாக இருந்தவர்கள், மக்கள் துயர்போக்கும் திட்டத்தை நிறைவேற்றக் கடினமாக உழைத்தார்கள்.

வீரபாகு அவர்கள், தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, அன்றைய காலகட்டத்தில் பத்து லட்சம் ரூபாயை வசூலித்துக் கொடுத்தார். எதிர்பார்த்ததைவிட அதிகமான தொகை வசூலில் கிடைத்தது. இதைக் கண்டு அன்றைய பொதுப் பணித்துறை அமைச்சர், வீரபாகு அவர்களைப் பாராட்டி அன்றைய மாவட்ட கலெக்டர் ஆர்.எஸ்.சுப்பையா பிள்ளை அவர்களுக்கு தீட்டிய கடிதத்தை எவரும் மறந்திட முடியாது.

தமக்கென வாழாதவர்

பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக, இன, மத, வேறுபாடு கருதாமல், அனைவருக்கும் உதவி செய்வதில் வீரபாகு அவர்களுக்கு இணையானவர் அவரே என்றுதான் கூறவேண்டும். அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தித் தம் இனம்மட்டும் வாழ, சுயநலமான

திட்டங்களையும் செயல்பாடுகளையும் நிறைவேற்றி வரும் இன்றைய அரசியல் தலைவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, எல்லோரும் வாழ வழிவகுத்தவர் வீரபாகு அவர்கள் என்பதற்கு எத்தனையோ சான்றுகளைக் கூறலாம்.

தம் மாவட்டத்தில் வாழ்ந்த, தொழிலில் மிகவும் பின்தங்கிய மீனவர்களுக்கு உதவுவதற்காக வீரபாகு அவர்கள் கூட்டுறவு சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். அச்சங்கத்திற்குத் தேவையான நிதியைத் திருநெல்வேலி மத்திய கூட்டுறவுப் பண்டகசாலையின் பொதுநல நிதியிலிருந்து பெற்றுத் தந்தார். இச்செய்தியை அன்றைய தனி அபிவிருத்தி அதிகாரி பெரிதும் பாராட்டினார். மகாத்மா காந்தி நினைவு நிதி உருவாக்கப்பட்டபோது, அதற்கு ஒரு லட்சம் ரூபாய்வரை வீரபாகு அவர்கள் திரட்டி அளித்ததை அன்றைய மேலிடத் தலைவர்கள் பெரிதும் வியந்து பாராட்டியதை எவரும் மறந்திட முடியாது.

தாம் பதவிவகித்த காலத்தில், தம் பதவியைக்கொண்டு மக்களுள் பின்தங்கியவர்களுக்கும், கிராமப்புறத்தில் வாழ்ந்தவர்களுக்கும் விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், தாழ்த்தப் பட்டவர்களுக்கும் அதிகபட்சமாக எந்த அளவுக்கு உதவமுடியுமோ, அந்த அளவுக்கு உதவிகளை எல்லாம் செய்தார். இவ்வகையில், வீரபாகு அவர்கள் தமக்கெனவாழாப் பிறர்குரியவ ராக வாழ்ந்து புகழெய்தினார்.

வங்கிப்பணிகள்

சிதம்பர நகர் என்னும் பெயருடன் இன்று பிரதானமாகவிளங்கும்நகரத்தைக் கூட்டுறவுத்துறை மூலம் உருவாக்கிய பெருமை ஏ.பி.சி.வீரபாகு அவர்களையே சாரும். கூட்டுறவு சங்கங்களை அமைத்து, மக்களின் தொழில்வளம் சிறக்கப் பணிபுரிந்த வீரபாகு அவர்கள், 1956ஆம் ஆண்டு திருநெல்வேலி 'தி சௌத் இண்டியா பாங்க்' டைரக்டராகப் பொறுப்பேற்றார். 1964ஆம் ஆண்டுமுதல் 1971ஆம் ஆண்டுவரை அவ்வங்கியின் தலைவராகப் பணியாற்றினார். தாம் பொறுப்பேற்றபோது ஆறு கிளைகள் மட்டுமே இருந்த நிலையை மாற்றி, முப்பது கிளைகளை உருவாக்கி, வங்கியின் செயல்பாடுகளை விரிவுபடுத்தினார்.

பொருளாதாரக் கலையைக் கற்ற காரணத்தால், வங்கியின் பொருளாதார விரிவாக்கச் செயல் முறைகளில் தெளிவுபெற்று, வங்கித் தொழிலுக்குரிய அடிப்படைத் தன்மைகளைப் புரிந்து, வங்கிகளின் செயல்பாட்டு முறைகளில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்தார். அதனால் மக்களுக்கான வங்கியின் செயல்பாடுகள் விரிவடைந்து, வங்கி வணிகம் பன்மடங்காகப் பெருகியது. மேலும், வங்கி தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்பட ஒழுங்குமுறைகளை உருவாக்கினார். வங்கி ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தினார்.

தாம் பொறுப்பேற்ற நிறுவனத்தை எல்லோரும் வியக்கும்வகையில் வளம்பெருக்கி முன்னேறச் செய்தார். தொழில்துறை வளர்ச்சிக்கு உருவாக்கப்பெற்ற கூட்டுறவு வங்கியிலும், கூட்டுறவு யூனியனிலும் சிறப்பான பணிகளை நிறைவேற்றித் தம் செயல்பாட்டை உறுதிப்படுத்தினார். கூட்டுறவு இயக்கங்களுக்காக நடத்தப்பட்ட கூட்டுறவு இதழின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்து, துறை சார்ந்த பல கட்டுரைகளை எழுதி, அரிய பணிகளை நிறைவேற்றி, இதழியலிலும் தம் ஆற்றலை வெளிப்படுத்தினார்.

சர்வோதய இயக்கம்

சர்வோதய இயக்கம் தொடங்கப் பட்ட நாள்முதல் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் அவ்வியக்கத்தில் சேர்ந்து பொறுப்புக்களை ஏற்று அரும்பணி யாற்றினார். 'கடையனுக்கும் கடைத் தேற்றம்' என்னும் கொள்கையை இளமைதொட்டே மனத்தில் பதித்துச் செயல்பட்ட வீரபாகு அவர்களுக்கு, சர்வோதயப் பணி கசக்கவா செய்யும்?

சர்வோதய இயக்கத்தின் சார்பாகக் கடம்பூரிலும் கழுகுமலையிலும் இருபெரும் மாநாடுகளை நடத்தி வீரபாகு அவர்கள் பெருமை பெற்றார். அதன்வாயிலாகப் பல அரிய திட்டங்களைத் தீட்டி அவற்றை நிறைவேற்ற வழிவகுத்தார்.

இந்தியாவிலேயே முதன்முதலில் கிராமதான அபிவிருத்தி டிரஸ்ட்டை உருவாக்கிக் கிணறுகள் தோண்டுவதற்கு எளிய தவணைக் கடன்களை வழங்கி ஏழைகளின் வாழ்வு மலர வழிவகுத்தார். நாங்குநேரி, சங்கரன்கோவில் வட்டங்களில் பூமிதான அபிவிருத்தி பொறுப்பாட்சி என்னும் நிறுவனத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு 300 கிணறுகள் தோண்டுவதற்கு உதவி புரிந்தார். இந்த வகையில், மக்களின் நல்வாழ்வுக்குப் பல்வேறு இனிய திட்டங்களை வகுத்தளித்த ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களே கண்டு வியக்குமாறு, வீரபாகு அவர்கள் செயலாற்றினார்.

மேற்கு ஜெர்மனி நாட்டவரான மேயர் என்பவர் இத்திட்டத்திற்குப் பேருதவி புரிந்தார். திரு.மேயர் வழங்கிய பல லட்சம் ரூபாய்களைப் பெற்று அந்த நிதியை ஒழுங்காகச் செலவிட உரிய பணியாளர்களை நியமித்து, நேர்மை காத்து அனைவரின் பாராட் டையும் பெற்றார். "ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு" என்றார் வள்ளுவர். இதைச் சரியான முறையில் பயன்படுத்தி, வள்ளுவர் வாக்கை நடைமுறைப்படுத்த முடியும் என்பதை நிரூபித்துக் காட்டினார் வீரபாகு.

இறைவழிபாடு

சிவநெறியைப் போற்றிப் பாதுகாத்த பாரம்பரியமான குடும்பத்தில் பிறந்தவர் வீரபாகு. சமுதாயத்தை உயர்த்த, தம்மைச் சூழ்ந்திருந்த அனைத்துத் தரப்பு மக்களின் நல்வாழ்வுக்காகவும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு இடைவிடாது செயல்பட்டு வந்தார். சிவதீட்சை பெற்று தினமும் ஸ்படிக சிவலிங்க பூசை செய்து வந்தார்.

பல்வேறு பொதுப்பணிகளுக்கு இடையிலும் வீரபாகு அவர்கள் நாள்தோறும் காலைவேளையில் தம் வீட்டின் பூஜை அறையில் அமர்ந்து குறைந்தது ஒரு மணி நேரம் தேவாரத் திருப்பதிகாரங்களை வாய்விட்டு, மனம் மகிழப் பாடி பூவும் புகையுமாய்ப் பூஜை செய்வார். முருகன்படமும் வேலும் வைத்துத் தொடங்கி, மகா சக்கரம் விஷ்ணு சக்கரம் மூலமந்திரங்கள் என உருவேற்றப்பெற்று வீரபாகு அவர்களின் வழிபாடு, அவர் வீட்டு அறைக்குள் நடந்தாலும், ஏதோ ஓர் ஆலயத்தில் நுழைந்ததுபோன்ற உணர்வை ஊட்டும். சிறுகோயில்போல் காட்சியளிக்கும் அறைக்குள் வீரபாகு அவர்கள் உருக்கமாகத் தம்மை மறந்து வழிபாடு செய்வது, காண்போர் அனைவராலும் போற்றப்பெறும் ஒரு நிகழ்ச்சியாகவே இருந்து வந்தது.

வீரபாகு அவர்கள், ஸ்ரீலஸ்ரீ பன்றிமலை சுவாமிகளிடம் தமிழ் மந்திர உபதேசம் பெற்றவர். பின்னைப் பருவத்திலிருந்தே பண்ணுடன் நன்கு பாடும் பீடு பெற்றிருந்தமையால், திருமுறைகள், பாசுரங்கள்,

பிள்ளைத்தமிழ் ஆகியவற்றை மனமும் வாயும் குளிரப்பாடுவார். நெற்றியில் பூசப்பட்ட திருநீறும் அதனிடையே வைக்கப்பட்ட குங்குமமும் காண்பவர் உள்ளத்தில் ஆழப்பதிந்து ஆன்மிகத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்யும்.

திருவண்ணாமலைப் பெருமானிடத்திலும், செந்திலாண்டவனிடத்திலும் அளவற்ற ஈடுபாடு உடையவர். அடிக்கடி திருச்செந்தூர் சென்று முருகப்பெருமானை நேரில் கண்டு வழிபாடு செய்வதில் மகிழ்ச்சி அடைந்தவர். தங்கள் முன்னோர்கள் செய்து வந்ததுபோலவே சஷ்டித் திருநாள், திருக்கல்யாணக் கட்டளை போன்ற விழாநாள்களில் நேரில் சென்று வைபவத்தில் கலந்துகொண்டு விழாவை நடத்தியும் வந்தார்

ஜெகவீரபாண்டியனார் என்பவர் நகர விடுதிமுன் நிகழ்த்திய கந்தபுராண விரிவுரையை இளம்பருவத்திலேயே கேட்டுச் சிலாகித்து வியந்தவர். இளமை முதலே புராண இதிகாசங்களில் அதிகக் கவனம் செலுத்தி, அதில் காணப்பட்ட நற்கருத்துக்களைச் சுவைத்து மகிழ்ந்தவர். சமயம் சார்ந்த நூல்களையும் சாத்திரங்களையும் மூல நூலிலிருந்தே கற்றுத்தெளிந்த ஞானத்தைப் பெற்றவர்.

கற்றறிந்த சான்றோர் கூறும் விளக்கங்களைக் கேட்டுச் சிந்திப்பதில் இன்பம் கண்டவர். சைவ சித்தாந்த சபை நடத்தும் ஆண்டு விழாக்களில் தவறாமல் கலந்துகொள்வதைக் கடமையாகக் கொண்டவர். சிற்சில ஆண்டுகளில் சபையின் விழாத் தொடக்கத்தில் உரையாற்றித் தம் கருத்துக்களை வெளியிடுவதிலும் வல்லவர்.

சித்தாத்தம் வழங்கும் விளக்கமே ஆன்மிக அறிவுக்குப் பொருத்தமான கோட்பாடாகும் என்பதை முடிவாகக் கொண்டவர். எனினும், வேதாந்த வித்துக்களான அடிப்படைகளையும் பேணிப் பாதுகாத்தவர். சேங்காலிபுரம் அனந்தாராம தீக்ஷிதர் அவர்களிடம் அளவற்ற மரியாதையும் அன்பும் கொண்டவர். அவர் ஆற்றும் பேருரைகள் நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதில் மகிழ்ச்சி கொண்டவர். வேறு இடங்களில் எங்காவது அவர் உரை நிகழ்ச்சி நடைபெற்றாலும், அங்குச் சென்று கேட்டு மகிழ்ச்சி அடைந்தவர்.

திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்களின் இசைநயத்தையும் அதில் பொதிந்துள்ள இயற்கை அழகின் நலத்தையும் எண்ணி வியந்து பாராட்டுவார். திருவாசகத்தைத் தந்தருளிய மாணிக்கவாசகப்பெருமான் வாழ்ந்த காலம் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு, தம் ஆய்வின் முடிவைக்கொண்டு மாணிக்கவாசகர் காலம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டாகும் என்று அறுதியிட்டுக் கூறியவர்.

தாம் கற்றறிந்தவற்றைப் பற்றிச் சிந்தித்து, புதுப்புது கருத்துக்களைக் கூறிக் கேட்பவரை நன்னெறிக்குச் செலுத்திய புண்ணிய சீலராக வாழ்ந்தவர்.

சமுதாயம் சீர்பெறத் தனிமனித ஒழுக்கம் இன்றியமையாதது என்பதை உறுதியாக நம்பியவர். தாம் கடைப்பிடித்ததுபோலவே சிறந்த நல்லொழுக்கப் பண்புகளை தம்மைச் சார்ந்தவர்களும், சமுதாயத்தில் உள்ளவர்களும் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். இதற்கு இல்லற வாழ்க்கையே அடிப்படை என்பதை உணர்ந்ததால் ''ஒருவனைப் பற்றி ஓர் அகத்து இரு'' என்னும் ஔவை மொழிக்கு அழகான விளக்கங்களைக் கூறி நெறிப்படுத்துவார். ''இது ஒரு பெண்ணுக்குமட்டும் கூறப்பட்டதாக எடுத்துக்கொள்ளக்

கூடாது. ஆண்களும் ஒருத்தியைக் கைப்பிடித்து ஒரு வீட்டில் நிலையாக வாழவேண்டும் என்பதை விளக்கவே இவ்வாறு கூறியுள்ளார்" என்று விளக்கம் தந்து, தனிமனித ஒழுக்க நெறியை வலியுறுத்துவார்.

இலக்கிய உணர்வு

தேவாரம், திருவாசகம் எனப் பக்தி இலக்கியங்களிலும் புராண இதிகாச நூல்களிலும் மட்டுமே ஈடுபாடு காட்டியவர் அல்லர் வீரபாகு அவர்கள்! தம் தாய்மொழியின் பழமையையும் சிறப்பையும் தெளிவாக உணர்ந்தவர். கல்லூரியில் கற்றது பொருளாதாரப் பாடமாயினும், தமிழ் இலக்கியங்களில் அளவற்ற ஈடுபாடு காட்டினார். அவற்றைக் கற்றுத் திளைத்தார்.

தொன்மை இலக்கியங்களான சங்க இலக்கியங்களிலும் நீதி நூல்களிலும் ஈடுபாடு காட்டினார். திருக்குறளைத் தெளிவாகக் கற்றார். கற்றவற்றைத் தாம்மட்டும் உணர்வதிலோ, சுவைப்பதிலோ மட்டும் இன்பம் கண்டவர் அல்லர் அவர்! தாம் உணர்ந்தவற்றைப் பிறர்க்குக் கூறுவதிலும் மகிழ்ச்சி கண்டவர். தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறவேண்டும் என்பதில் உறுதிகொண்டவர்.

இவ்வகையில், தாம் கற்றனுபவித்த திருக்குறளின் முதல் அதிகாரமான 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தில் அமைந்த பத்துக்குறள்களையும் பலமுறை சுவைத்து மகிழ்ந்த காரணத்தால், பொதுக்கூட்ட மேடைகளில் அவற்றைக் கூறி விளக்குவார்.

புறநானூறு, அகநானூறு முதலிய சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய ஐம்பெருங் காப்பியங்களிலும் பிள்ளைத் தமிழ்போன்ற சிற்றிலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்த வீரபாகு, அவற்றைக் கற்று, அவற்றுள் தேவையான செய்திகளை மேடைகளில் பேசி, மக்களும் அந்நூல்களின் பெருமைகளை உணர வைத்தார். இதனால் பல்வேறு இலக்கிய விழாக்களில் கலந்து கொள்ளவும் வாய்ப்பு உருவாயிற்று. இவ்வகையில் வீரபாகு அவர்கள் சிறந்த இலக்கியவாதியாகவும் விளங்கினார்.

பழமையான இலக்கியச் செய்திகளைப்புதிய கண்ணோட்டத்துடன் அணுகும் முறையோடு தாம் அறிந்த செய்திகளை வரிசைபடக் கோவையாகப் கேட்போர் புரிந்துகொள்ளும் வகையில் முன்வைக்கும் புலமைத்திறன், பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் செய்திகளை எளியநடையில் எடுத்துவைக்கும் பாங்கு ஆகிய அனைத்தும் வீரபாகு அவர்களுக்கேஉரிய சிறப்புகள் எனலாம்.

1966ஆம் ஆண்டுதொடங்கி, 1970ஆம் ஆண்டுமுடிய நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவராக வீரபாகு பணியாற்றினார். இக்காலகட்டத்தில் மக்களிடையே, நூல்களைப் படிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறி, படிக்கும் பழக்கத்தைப் பரப்பினார். இதற்காக, அந்நாளில் வீரபாகு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள், அவர்தம் ஆழ்ந்தகன்ற, நுட்பமான நூலறிவுக்குச் சான்று பகரும்.

வீரபாகு அவர்களின் சொல்லாற்றலையும் பேச்சுத் திறமையையும் கண்டோர் 'செஞ்சொற் கொண்டல்' எனப் போற்றினர். எனவே, இலக்கியச் சங்கங்களையும் இலக்கிய மாநாடுகளையும் நடத்துவோர், தங்கள் விழாக்களில் தலைமையுரை ஆற்றுவதற்காக வீரபாகு அவர்களை வேண்டி விரும்பி நாடி வந்தனர்.

மக்கள் போற்றும் மாமனிதர்

வீரபாகு அவர்கள் உடை விஷயத்தில் எளிமையையே கடைப்பிடித்தார். எளிய கதர் ஆடைகளையே அணிந்தார். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் குறித்து, நிறைவேற்ற வேண்டிய செயல்களைத் திட்டவட்டமாக முடிவுஎடுத்து நிறைவேற்றுவார். துணிவு மிக்கவராதலால் எதையும் எண்ணிப் பார்த்து, நன்கு உறுதிசெய்தபின் துணிந்து கூறும் மனஉறுதி படைத்தவராக விளங்கினார். எதிலும் நேர்மையைக் கடைப்பிடித்தார். நாணயத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தார்.

தாம் சார்ந்த சமுதாயத்தின் நலனுக்குப் பாடுபடும் பொதுச் சிந்தனை உடையவராக இருந்ததால், மக்களிடம் நிலவிய சாதி சமய வேறுபாடுகளை முன்நிறுத்திச் செயல்படாத பொதுநெறியாளராக வாழ்ந்தார்.

சாதி, இன, மத வேறுபாடுகளை ஒதுக்கிவைத்து அனைவரையும் மக்களாக ஏற்ற மனிதநேயராக விளங்கியதால் வீரபாகு அவர்கள், பிராமணர்களின் உயரிய நண்பராகத் திகழ்ந்தார். நாடார்களின் நம்பிக்கைக்குரிய அன்பராக இருந்தார். கம்மவார் நாயக்கர்களின் கண்ணனைய காவலராக விளங்கினார். தாழ்த்தப்பட்ட மக்களின் அல்லல் போக்கும். அடலேறாகத் திகழ்ந்தார். கிறிஸ்தவப் பரதவர்களின் துணைவராக இருந்தார். சைவப் பெருமக்களின் தனிப்பெருந் தலைவராகக் காட்சியளித்தார்.

வீரபாகு அவர்கள் எதை நினைத்தாலும், எதைச் செயல்படுத்தக் கருதினாலும், அனைத்துப் பொது மக்களின் நலனை மையமாக வைத்தே சிந்தித்தார்; செயலாற்றினார். பொதுநலனைத் தம் உயிர்மூச்சாகக் கொண்டார். சமூக நலனையே தம் நலனாகக் கருதினார். வீரபாகு அவர்கள், 'மக்கள் பணியே மகேசன் பணி' என்பதைக் குறிக்கோளாகக்கொண்டு செயலாற்றியதால், மக்கள் உள்ளங்களில் தனி இடம் பெற்ற தலைவராக விளங்கினார்.

இவ்வகையில், **''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்''** என்னும் வள்ளுவன் வாக்கிற்குச் சான்றாகத் திகழ்ந்தார்.

தமிழ்நாட்டின் தனிப்பெரும் தலைவர்களுள் ஒருவராக விளங்கிய வீரபாகு அவர்கள், ஏழை எளிய மக்களின் திருமணங்களுக்கு உதவிசெய்வதில் முதலில் நின்றார். தம் உறவினர்களுள் ஏழை பணக்காரர் என்னும் வேறுபாடு கருதாமல், அவர்களின் இல்லங்களில் நடைபெறும் சுபநிகழ்வுகளானாலும், துக்கநிகழ்வுகளானாலும் யாவற்றியிலும் கலந்து கொள்வதில் முன்நிற்பார். தீபாவளிப் பண்டிகையின் போது சுமார் இருநூற்றைம்பது ஏழை எளியவர்களுக்கு ஆண்டுதோறும் உடுத்தி மகிழ, நல்ல உடைகளை வழங்கி மகிழ்ச்சிகொள்ளச் செய்வார்.

குற்றம் செய்தவர்களை மிகவும் கடுமையாக கண்டிப்பார். 'கடிதோச்சி மெல்ல எறிதல்' என்னும் வள்ளுவர் வாக்கிற்கு ஏற்பத் தண்டனையை மன்னிப்பாக வழங்குவார். தம்மிடம் பணியாற்றியவர்களின் குடும்பத்தினருக்கு உதவி தேவைப்பட்டபோது உடனே கைகொடுத்து உதவுவார். அதாவது, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் இயன்ற அளவுக்கு உதவிபுரிவதில் பின்தங்கமாட்டார்.

'சமுதாயம் என்பது ஒன்றே' அனைத்து மக்களையும் உள்ளடக்கியது என்னும் கண்ணோட்டத்தில், 'ஒன்றே

குலம் ஒருவனே தேவன்' என்னும் கொள்கைப்படி செயல்பட்டு, தமிழ்ப் பண்பாட்டின் மொத்த உருவமாக விளங்கினார். இதற்கு எத்தனையோ சான்றுகளைக் கூறலாம்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்களும் எஸ்.ஏ.முருகானந்தம் அவர்களும் அரசியலில் ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துடையவர்கள். தூத்துக்குடி நகர்சார்ந்த அரசியலிலேயே பலமுறை மோதிக் கொண்டவர்கள். இருவரும் தத்தம் கட்சிக் கொள்கையில் நிலைப்பாடு உடையவர்கள்.

1952இல் முருகானந்தம் தூத்துக்குடி நகரமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப் பெற்றார். அவர் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சி, வி.வி.தனுஷ்கோடி நாடார் அவர்களை நகர்மன்றத் தலைவராக்க முடிவு செய்தது. தலைமைக்குக் கட்டுப்பட்டு தனுஷ்கோடி நாடாருக்கு உழைத்தார். வீரபாகு அவர்கள் எம்.பி.சுந்தரவேல் அவர்களைத் தலைவராக்க உழைத்தார். அப்போது இருவரும் எதிரெதிராக நின்றதை நகர மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அடுத்து நடந்த நகர்மன்றத் தேர்தலில் முருகானந்தம் வெற்றிபெறக்கூடாது என்பதற்காக வீரபாகு தம் வேட்பாளர் வெற்றிபெற அயராது பாடுபட்டார். 1968இல் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தல் சரித்திரப் புகழ் வாய்ந்ததாகும். கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக எஸ்.ஏ.முருகானந்தம் அவர்களும், காங்கிரஸ் கட்சி வேட்பாளராக சாமுவேல் அவர்களும், தி.மு.க. வேட்பாளராக சிவசாமி அவர்களும் போட்டியிட்டனர்.

இத்தேர்தலின்போது கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளருக்காக தலைவர்களான தோழர்கள் ஜீவானந்தம், ராமமூர்த்தி, கல்யாண சுந்தரம் ஆகியோரும், காங்கிரஸ் வேட்பாளருக்காக அன்றைய முதல்வர் காமராஜர் உட்பட கட்சியின் அனைத்துத் தலைவர்களும் தூத்துக்குடியில் முகாமிட்டு உழைத்ததை வரலாறு என்றைக்கும் மறக்காது.

இத்தேர்தலில் சில ஆயிரம் ஓட்டுகள் வித்தியாசத்தில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் முருகானந்தம் தோல்வியடைந்தார். காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சாமுவேல், வீரபாகு அவர்களின் கடின உழைப்பால் வெற்றி பெற்றார். தி.மு.க. வேட்பாளர் சிவசாமி மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டார். இந்த நிகழ்வு அந்தத் தேர்தலின்போது பதிவான பெரிய வரலாறு ஆகும்! இத்தேர்தலில் காங்கிரஸின் வெற்றிக்கு அடிப்படையாக இருந்தவர் வீரபாகு என்பதை அனைவரும் அறிவர்.

அடுத்து நடைபெற்ற நகர்மன்றத் தேர்தல் இன்னும் முக்கியத்துவமானது. இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டணி அமைத்துத் தேர்தலை எதிர்கொண்டன. எனினும், பன்னிரெண்டாவது வார்டில் மட்டும் இரு கட்சிகளும் எதிரெதிராகப் போட்டியிட்டன. அது முருகானந்தத்திற்கும் வீரபாகுவிற்கும் இருந்த செல்வாக்கை உறுதிப்படுத்தவேண்டும் என்பதற்காக அமைந்தது.

கம்யூனிஸ்ட்களுக்குத்தான் செல்வாக்கு என்பதை நிலைப்படுத்த முருகானந்தமும், காங்கிரஸுக்குத்தான் செல்வாக்கு என்பதை நிலைப்படுத்த வீரபாகுவும் முயன்றனர். கூட்டணி இருந்தும்கூட, இந்த இரண்டுபேரும் தத்தம் அரசியல் நிலைப்பாட்டிலிருந்து விட்டுக்கொடுக்காமல் செயல்பட்டதை எவரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. எனினும், மனித நாகரிகத்தில், தமிழ்ப் பண்பாட்டில் இருவரும் தலைசிறந்தவர்களாகவே திகழ்ந்தார்கள்.

வீரபாகு அவர்களின் மணிவிழாவின்போது, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முருகானந்தம் அவர்களும் தி.மு.க.வைச் சார்ந்த சிவசாமி மற்றும் ராமலிங்கம் ஆகியோரும் இணைந்து விழாவைச் சிறப்புற நடத்தியதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். இவ்வகையில் வீரபாகு அவர்கள் எல்லோரையும் கவர்ந்திருக்கும் பண்புடையவராக வாழ்ந்தார்.

எதிர்க்கட்சியினரும் போற்றும் பேராண்மையுள்ளவர் வீரபாகு அவர்கள். மகாலட்சுமி மகளிர் கல்லூரி புதிய கட்டிடத் திறப்புவிழாவின்போது அன்றைய தமிழக முதல்வராக இருந்த கலைஞர் மு.கருணாநிதி ஆற்றிய உரையில்,

''நண்பர் வீரபாகு அவர்கள், ஆளுங்கட்சியில் இருந்தபோது, நான் எதிர்க் கட்சியில் அமர்ந்திருந்தபோது, கிட்டத்தட்ட நான் அமர்ந்திருந்த இரண்டொரு இருக்கைகளுக்கு அப்பால் அமர்ந்திருப்பார். அவர் அங்கே அப்பொழுது ஆளுங்கட்சி சார்பில், எதிர்க்கட்சியைத் தாக்கிப் பேசுகின்ற அந்த வார்த்தைகளை எல்லாம் நான் அங்கிருந்து கேட்டிருக்கிறேன்.

ஆனாலும், கட்சி மாற்சரியங்கள், கட்சி வேறுபாடுகள் ஆகியவைகளெல்லாம் தனிப்பட்ட தாக்குதலாக இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தமிழன் கட்டிக்காக்கின்ற பண்பாட்டின் உருவங்களாகத் திகழ்ந்த ஒரு சிலரில் நண்பர் வீரபாகு அவர்களும் ஒருவர் என்பதை நாம் மறந்திட இயலாது'' என்று கூறினார்.

தூத்துக்குடி நகரில் நடைபெற்ற எந்த நற்செயலிலும் வீரபாகு அவர்களே முதல் ஆளாக நின்றார். ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் செல்வ வளம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர்; உன்னதமான தொழிலதிபர்; அரசியலில் மேதை; தமிழகத்தின் காங்கிரஸ் தலைவர், தொண்டர்; தியாகி; பொருளாதாரத் துறையில் வல்லுநர்; சிவநெறிச் செல்வர். இப்படி எத்தனையோ பாராட்டுதல்களுக்கு உரிமை பெற்றவராக இருந்தாலும், விண்ணும் மண்ணும் உள்ளவரை தூத்துக்குடியையும் அதை சூழவும் உள்ள பகுதிகளில் பிறந்து வாழக்கூடிய இளைய சமுதாயத்தினர், கல்வி கற்று சிறப்படைய வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு வ.உ.சி. கல்லூரியையும் பல்வேறு பள்ளிகளையும் உருவாக்கிய தீர்க்கதரிசியாவர்.

வ.உ.சி. கல்லூரியின் தாளாளராக இருந்து அதனைச் செம்மையாக இயக்கி வந்தவர்; தமிழக சட்டமன்ற உறுப்பினராக இருந்து தொண்டாற்றியவர்; நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் கல்விக்குமாகத் தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்த செம்மல். தொடர்புகொண்ட எல்லாத் துறைகளிலும் அயராது ஊக்கத்துடன் உழைத்தவர்; வெற்றிப்படிகளில் மேலும் மேலும் தம் காலடிச்சுவடுகளைப் பதித்துச் சென்றவர்.

வேறெங்கும் இல்லாத சைவ சித்தாந்த சங்கத்தைத் தூத்துக்குடியில் நடத்திக் காட்டியவர். அதன்மூலம் திருவருளும் குருவருளும் கைவரப் பெற்று மக்களைச் செவியுணர்வின் சான்றோராக்கியவர்.

''**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்பு பாராட்டும் உலகு**'' என்பது பொய்யாமொழி! இம்மொழிக்குச் சான்று கூறத்தக்க பெருமித வாழ்வு வாழ்ந்தவர் ஏ.பி.சி. வீரபாகு என்று கூறுவது மிகையாகாது.



குடியரசுத் தலைவர்களுடன்...



வ.உ.சி. கல்லூரி விழாவில்
குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் அவர்களுடன்
ஏ.பி.சி.வீரபாகு



வ.உ.சி. கல்லூரிக்கு வருகை தந்த
இந்தியக் குடியரசுத் தலைவர் வி.வி.கிரி அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு

இந்தியப் பிரதமர்களுடன்...



பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு குலபதி ஏ.பி.சி.வீரபாகு, எம்.எல்.ஏ., தமிழக முதலமைச்சர் கு.காமராஜர்



பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களை வரவேற்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ.பி.சி.வீரபாகு



மத்திய அமைச்சர் பி.வி.நரசிம்மராவ் அவர்களுடன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ.பி.சி.வீரபாகு

இந்தியப் பிரதமர்களுடன்...





பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களை வரவேற்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ.பி.சி.வீரபாகு, அவரது துணைவியார் மகாலட்சுமி வீரபாகு, தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி



பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களுடன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ.பி.சி.வீரபாகு மத்திய அமைச்சர் ஆர்.வி.சுவாமிநாதன்



பாரதப் பிரதமர் இந்திராகாந்தி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ.பி.சி.வீரபாகு, மத்திய அமைச்சர் சி.சுப்பிரமணியம், ஆர்.வி.சுவாமிநாதன், எஸ்.எல்.கிருஷ்ணமூர்த்தி, ஜி.பூவராகன் மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள்

தமிழக ஆளுநர்களுடன்...



வ.உ.சி. கல்லூரி விழாவில் தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்களை வரவேற்கும் குலபதி ஏ.பி.சி.வீரபாகு



சென்னை மாகாண ஆளுநர் ஸ்ரீ பிரகாசா அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு மற்றும் வ.உ.சி. கல்விக் கழக உறுப்பினர்கள்



சென்னை மாகாண நிர்வாகக் குழு உறுப்பினர் சர் சி.பி.ராமசாமி அய்யர் அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



சென்னை மாநிலத்தின் முதல் இந்திய ஆளுநர் பாவ்நகர் மகாராஜா, கிருஷ்ணகுமார் சிங்ஜி பாவ்சிங்ஜி அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு

தமிழக ஆளுநர்களுடன்...





வ.உ.சி. நூற்றாண்டு விழா - வ.உ.சி. தபால்தலை வெளியீட்டு விழாவில் தமிழக ஆளுநர் கே.கே.ஷா, பாரதப் பிரதமர் இந்திராகாந்தி, தமிழக முதல்வர் மு.கருணாநிதி, மத்திய அமைச்சர் ஹெச்.என்.பகுகுணா ஆகியோர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



தமிழக ஆளுநர் ஏ.ஜே.ஜான் அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



வ.உ.சி. கல்லூரி பொன்விழாவின்போது தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி துணைவேந்தர் எஸ்.வி.சிட்டிபாபு ஆகியோருடன் ஏ.பி.சி.வீரபாகு



வ.உ.சி கல்லூரியில் தமிழக ஆளுநர் பிஷ்ணுராம் மேதி அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு

முதலமைச்சர்களுடன்...



வ.உ.சி. கல்லூரியின் புதிய கட்டிடத் திறப்பு விழாவின்போது, தமிழக முதல்வர் கு.காமராஜர், ஏ.பி.சி.வீரபாகு மற்றும் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் ஆ.சீனிவாசராகவன்



தமிழக முதல்வர் கு.காமராஜர் அவர்களிடம் ஏ.பி.சி.வீரபாகுவின் மகள் உலகம்மாள் சீனப் போர் நிதிக்காக நூறு பவுன் தங்கக்காசு மாலையை அளிக்கிறார்



தமிழக முதல்வர் எம்.பக்தவத்சலம், காந்தி கிராமப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஜி.ராமச்சந்திரன் ஆகியோருடன் ஏ.பி.சி.வீரபாகு



ஏ.பி.சி.வீரபாகு முன்னிலையில் வ.உ.சி. கல்லூரிக்கு அடிக்கல் நாட்டுகிறார் சென்னை மாகாண முதல்வர் பி.எஸ்.குமாரசாமிராஜா

முதலமைச்சர்களுடன்...





தமிழக முதல்வர் மு.கருணாநிதி அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு, நடுவில் அமர்ந்திருப்பவர் தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் சி.பா.ஆதித்தனார்



தேசபந்து சித்தரஞ்சன் தாஸின் பேரனும் மேற்கு வங்காள முதல்வருமான சித்தார்த்த சங்கர் ரே அவர்களுடன் மிக நெருக்கமாக அமர்ந்திருக்கும் ஏ.பி.சி.வீரபாகு



தமிழக முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் உரையாற்றுவதைக் கூர்ந்து கவனிக்கும் ஏ.பி.சி.வீரபாகு

சேவை வழியே இறைவழி என்பார்



ஏ.பி.சி.வீரபாகு அவர்களைப் பற்றி திருமறை நகரில் கிறிஸ்தவ சபையில் ஆயராக சுமார் இருபதாண்டுகள் பணிபுரிந்த ரெவரண்டு தாமஸ் ஃபெர்னாண்டோ அவர்கள் நினைவுகூர்வதைச் சற்றே நோக்குவோம்:

''நண்பர்களால் மட்டுமன்றிப் பொதுமக்கள் அனைவராலும் போற்றி மதிக்கப் பெற்றவர் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள். நான் அறிந்த மக்கள் தலைவர்களுள் ஒருவர்; ஒப்பற்றவர்.'' என்று கூறுகிறார்.

"ஏ.பி.சி.வீரபாகு அவர்கள்,

மெய்வருத்தம் பாரார்
பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும்
மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார்
அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்

என்னும் குமரகுருபரரின் நீதிநெறி விளக்கச் செய்யுளுக்கு இலக்கணமாக, செயல்வடிவம் கொடுத்தவராகத் திகழ்ந்தவர்."

"அறிவுத் தெளிவும் பொதுநோக்கும் கொண்ட வீரபாகு, 'துணிந்தபின் எண்ணுவது இழுக்கு' என்பதை உள்ளத்துள் கொண்டு, 'எண்ணித் துணிந்து' எடுத்த செயல்களை நிறைவேற்றியவர்."

''வீரபாகு அவர்கள் கல்வி, கலை, சமூகநலம், அரசியல், நிர்வாகம், வணிகம் எனப் பல்வேறு துறைகளிலும் ஆழ்ந்து அகன்ற அறிவாற்றல் பெற்றவர்; அவற்றை நடைமுறையில் கைக்கொள்ளும் வழிவகைகளைக் கணித்துணரும் திறன் உடையவர்."

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்னும் மூதுரைக்கு ஏற்ப, தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தூத்துக்குடி துறைமுகம் வழிகோலும் என்பதை உணர்ந்து, அதற்கு அங்குள்ள மக்கள் நட்புறவும் ஒத்துழைப்பும் அவசியமாகும் என்பதைக் கணித்து, அதற்கான தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் நற்பணிகளை முன்னின்று செயலாற்றினார் வீரபாகு. அதனால் மக்களின்ஒற்றுமையையவளர்க்கநம்பிக்கையுடன் பல பணிகளை மேற்கொண்டார்.

வீரபாகு அவர்களுடைய சொற்பொழிவுகளைக் கேட்டு வியந்த காரணத்தால், கேட்போருக்குத் தெளிவூட்டி, கேட்போரை ஊக்குவிக்கும் விதத்தில், எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தடையின்றி, சலிப்பை ஏற்படுத்தாமல், அனைவரும் கேட்டு ரசிக்கும்படி அழகாகப் பேசுவார் என்று பாராட்டியுள்ளார். அத்துடன், தாமும் வீரபாகு வினுடைய பேச்சுகளிலிருந்து பல கருத்துக்களைக் கற்றுணர்ந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வீரபாகு அவர்களின் பல்வேறு செயல்பாடுகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, இவர் தம் திறமைகளையெல்லாம் மக்களின் பொதுநலனுக்குப் பயன்படுத்தினார்; எவருடனும் அந்நியம் பாராட்டாமல் இனிதே உரையாடி, மக்களைப் பிரித்துணரும் குறுகிய மனநோக்கமின்றி எல்லோருடைய நலனையும் உள்ளத்தில் கொண்டு, தூத்துக்குடி பட்டினத்திலும், தென்றல் தவழும் தென்பாண்டி நிலப்பரப்பிலும் அனைவருக்கும் சேவை செய்ய விரும்பினார்.

இந்தப் பொதுநோக்கே இவரைச் சேவைச் செம்மலாக்கிக் கற்றவர் - கல்லாதவர், செல்வந்தர் - எளியவர், உள்ளூர்வாசிகள் - வெளியூரிலிருந்து வந்தவர்கள் என்னும் எல்லோர்க்கும், தேவைப்பட்டவர்களுக்கெல்லாம் ஏற்புடையவற்றைச் செய்தார் என்று பாராட்டியுள்ளார்.

மக்களின் நலனை வாழ்வின் இலக்காகக் கொண்ட வீரபாகு அவர்கள், இறையடியவரான ரெவரண்டு தாமஸ் ஃபெர்னாண்டோவின் மனத்தைக் கவர்ந்ததில் வியப்பேதும் இல்லையல்லவா?

திருமுறைச்செல்வர்

'தமிழ்த் தென்றல்' எனப் போற்றப் பெற்ற மறைமலையடிகளின் மகனார் திருநாவுக்கரசு அவர்கள், 1974ஆம் ஆண்டு ஒருநாள் காலை ஆறரை மணிக்கு வீரபாகு அவர்களைக் காண, அவர் வாழ்ந்த மாளிகைக்குச் சென்றார். மாளிகையின் முன்கூடத்தில் எடுப்பான இனிய குரலில் திருமுறைப் பாடல்கள் பண்ணிசையுடன் பாடப்பெறுவதைக் கேட்டார்; தம்மை மறந்தார்; முதலில் சம்பந்தரின் தேவாரப் பாடல்கள் பலவற்றைக் கேட்டார்; நிற்க முடியாததால் அங்கிருந்த தேர் இருக்கையில் அமர்ந்தார். தொடர்ந்து, நாவுக்கரசரின் பத்திமை கனிந்த திருவிருத்தங்கள், திருத்தாண்டகங்கள் பலபாடப்பெற்றன. கண்களை மூடிக்கொண்டு சுவைத்தார்.

மறை திருநாவுக்கரசு அவர்கள், தாமே சிவபூஜை செய்துகொண்டிருப்பதுபோல, தாமே பாடிக்கொண்டிருப்பதுபோல உணர்ந்தார். தொடர்ந்து பாடப்பெற்ற சுந்தரரின் தேவாரப் பாடல்கள் சில அவர் மனத்தை உருக்கின. மேலும் தொடர்ந்து திருவாசகப் பாடல்கள் சில, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணப் பாடல்கள், நாயன்மார் வாழ்த்துகள், முருகன், திருமால் புகழ் பாடல்கள் என ஒலித்துக் கொண்டே இருந்தன.

மறை திருநாவுக்கரசு பூசனை வழிபாட்டில் முழுமையாக தம் மனத்தைப் பறிகொடுத்திருந்தார். மணியோசை கேட்டது. வழிபாடு முடிந்தது. பூசை அறையின் தகவுகள் திறக்கப்பட்டன. திருநீறு அணிந்து, சந்தனப் பொட்டிட்ட பொலிவான முகத்துடன், எடுப்பான தோற்றத்துடன் வீரபாகு அவர்கள் பூசை அறையிலிருந்து வெளியே வந்தார்.

மறைதிருநாவுக்கரசு அவர்களுடைய சிந்தனை ஆயிரம் ஆண்டுகள் பின்நோக்கிச் சென்றது. தென்கிழக்கு ஆசியா முழுவதையும் வென்று ஆட்சி புரிந்த தோடு, தஞ்சாவூரில் சிவபெருமானுக்குப் பெரிய கோயிலை அமைத்த மாமன்னன் இராசராசன் நினைவுக்கு வந்தான். அந்த மாமன்னன்தான் மறைந்திருந்த சைவத்திருமுறைகளை வெளியுலகிற்குக் கொணர்ந்தவன்; நாற்பத்தெட்டு ஓதுவார்களை அழைத்து அவற்றை ஓதச் செய்தவன். அதனால் 'திருமுறைகண்ட ராசராசன்', 'சிவபாத சேகரன்', 'அருள்மொழித்தேவன்!' என்றெல்லாம் போற்றிப் பாராட்டப் பெற்றவன்.

இவர் - நம் ஏ.பி.சி.வீரபாகு, பொருள்துறையில் வல்லவர்; இயல்பான செல்வாக்குடைய குடும்பத்தில் பிறந்தவர்; தம் பெயர் ஓதுக்கி, வ.உ.சி. பெயரால் கல்வி நிலையங்களை உருவாக்கியவர். செயற்கரிய செயல் பல புரிந்து பெருமை பெற்றவர்.

இராசராசன், திருமுறைகளைக் கண்டான்! இவர் திருமுறைகளை உள்ளம் உருக நூற்றுக்கணக்கில் ஓதி, சிவநெறி பரப்புகின்றார். எடுப்பான பெருந்தகை தோற்றத்தவரான இவர், ஆற்றும் அரும் பெருஞ்செயல்களும் பக்திமையும் கொடை மடமும் காண்தோறும்... காண்தோறும்! இவர் இருபதாம் நூற்றாண்டின் இராசராச சோழனாகவே காட்சியளிக்கிறார். தமிழுலகு உய்ய இப்பெருந்தகை பல்லாண்டு பல்லாண்டு வாழ இறைவன் அருள்புரிய வேண்டும் என இறைஞ்சியவாறு மறை திருநாவுக்கரசு எழுந்து நின்றார்.

பூசை அறையிலிருந்து வெளிவந்த வீரபாகு, மறை திருநாவுக்கரசைக் கண்டதும் அன்புடன் வரவேற்று ''எப்போது வந்தீர்கள்'' என்று பணிவன்புடன் கேட்டார். ''ஒருமணி நேரமாகிறது. உங்களுடன் சேர்ந்து நானும் திருமறைகளைப் பாடியது போலவும், சிவபூசை செய்தது போலவும் உணர்ந்தேன். ஓதுவார்கள்கூட இவ்வளவு அழகாகத் திருமுறைகளை ஓதமுடியாது, அருமையான குரல்! இனிமையாகப் பொருள் விளங்கப் பாடிய திறம் மகிழ்ச்சியளித்தது'' என்று மறை திருநாவுக்கரசு கூறினார். ''எல்லாம் தங்கள் ஆசி'' என்றார் வீரபாகு.

மறை திருநாவுக்கரசு அவர்கள், வ.உ.சி. கல்லூரியில் பணிபுரிந்தவர்; தமிழ்ப்பற்றும் சைவ சமயப் பற்றும் மிக்கவர். அந்தப் பழமையும் பற்றும் மிகுதியால் மறை திருநாவுக்கரசுக்குச் சிற்றுண்டி அளித்து, தம் கைப்பட உணவு பரிமாறி மகிழ்ந்தார். சேக்கிழார் விழாவுக்கும், பெரியபுராண நூலைப் பதிப்பிப்பதற்கும் தேவையான நிதியுதவியை வழங்கினார். தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு வ.உ.சி. மகளிர் கல்லூரியில் 'சைவ மாதர்' என்னும் தலைப்பில் உரையாற்றச் செய்தும் உபசரித்து மகிழ்ந்தார். இவ்வகையில் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தாம் உண்மையிலேயே 'திருமுறைச்செல்வர்' என்பதைச் செயலால் நிலைநாட்டிக் கொண்டார்.

மனிதருள் மாணிக்கம்

உபன்யாசஉலகில் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்த ராம தீக்ஷிதர். ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் பக்தி சிறப்பையும் சேவை மனப்பான்மையையும் பலமுறை பாராட்டியுள்ளார். சான்றோர் பெருமையைச் சான்றோரே அறிவர்! அனந்தராம தீக்ஷிதருக்குத் தம்பி மகனும் தலையாய சீடருமான என். இராமதீக்ஷிதர் என்பர், ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் சீர்மை பற்றி கூறுவதை நோக்குவோம்:

"புண்ணிய பூமியாகிய நமது பாரத தேசத்தில் பல மகான்களும் வீரர்களும் தோன்றி, அவ்வப்போது தருமத்தையும் தேசத்தையும் பாதுகாத்து வந்துள்ளனர். ஒவ்வொரு மனிதருக்கும் தேசபக்தி, மனிதாபிமானம், தெய்வ நம்பிக்கை என்னும் மூன்றும் இன்றியமையாதன வாகும். எனினும், இம்மூன்றில் ஏதேனும் ஒரு குணம் உள்ள மனிதரைப் பார்ப்பதே இக்காலத்தில் அரிதாகியுள்ளது.

ஆயினும், இம்மூன்று குணங்களும் நிறைந்த சிறந்த புண்ணிய புருஷராக ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் விளங்கினார். அவர் மக்கள் நலம் காப்பதே சிறந்த தெய்வ வழிபாடு எனவும், அதுவே தேச சேவை எனவும் கருதினார்; மனிதன் வாழ உணவும் கல்வியும் மிகமிக அவசியம் என்பதை உணர்ந்தார். எனவே, விவசாயிகளுக்குப் பற்பல உதவிகளைச் செய்து மறுவாழ்வு அளித்து உணவு உற்பத்தி பெருக வழிவகுத்தார்.

கட்சி வேறுபாடு, இன வேறுபாடு கருதாமல் உள்ளன்புடன் என்றும் அழியாத கல்விச் செல்வத்தை வழங்க வ.உ.சி. கல்லூரியை, கலைவாணியின் புனித ஆலயத்தை உருவாக்கிப் பாதுகாத்தார். ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் நாள்தோறும் காலையில் தெய்வ வழிபாட்டில் தம்மை மறந்து, கண்ணீர் மல்கி, பாக்களைப் பாடும்போது கேட்பவர்கள் நெஞ்சம் உருகுவர்."

தமது பெரிய தகப்பனாரும் தமது குருவுமான சேங்காலிபுரம் பிரம்ம ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர், ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் பக்தியையும் சேவையையும் மனமுருகப் பலமுறை பாராட்டியுள்ளதையும் விளக்கியுள்ளார் :

"பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீ நாராயண பட்டாத்திரி என்கிற மஹான், 'நாராயண்யம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். அதில் ஒவ்வொரு சுலோகத்துக்கும் ஸ்ரீகுருவாயூரப்பன் தலையசைத்து ஏற்றதாகப் பெரியோர் கூறுவர். அதில் ஒரு சுலோகத்தில் பட்டாத்தி, 'ஏ..., குருவாயூரப்பா! நான் உலகில் எல்லாரையும் சமமாகப் பார்க்க வேண்டும். வெறுப்பு, விரோதம் முதலியவைகளை நீக்கி, எல்லாரையும் தெய்வமாக (குருவாயூரப்பனாக) பார்க்கச் செய்ய வேண்டும்' என்று கூறியுள்ளார். அந்த நிலையை அடைந்தவர்தான் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள்.

ஒருமுறை குருவாயூரப்பன் பெருமை விளக்கும் உபன்யாசம் செய்தபோது ஏ.பி.சி. அவர்கள் கண்ணீர்விட்டுப் பரவசத்துடன் கேட்டதை என்னால் மறக்க முடியாது. அவர் மனிதருள் மாணிக்கமாவார்."

தவப் புதல்வர்

இறைவனை வழிபடுவதிலும் இறைவன் பெருமைகளைப் பிறர் அறிய எடுத்துரைப்பதிலும் வல்லமை பெற்ற சான்றோர்கள் பலரைக் கொண்டது தமிழ்நாடு. அத்தகையவர்கள் போற்றுமளவுக்குச் சீரோடும் சிறப்போடும் பணிகளை மேற்கொண்டவர் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள். அத்தகைய சிறப்பமைந்த சான்றோர்களுள் ஒருவரான வடகுடி என்.பாபு தீக்ஷிதர் அவர்கள், ஏ.பி.சி.வீரபாகுவை 'பாரத மாதாவின் தவப்புதல்வர்' என்று போற்றியுள்ளார். என்.பாபு தீக்ஷிதர் தம் மனம் கவர்ந்த ஏ.பி.சி.வீரபாகு அவர்களது சிறப்புகளைப் பாராட்டியுள்ளதை அவர் உரை கொண்டே காண்போம் :

''மனிதனாகப் பிறந்தவன் ஸௌகர்யமாக இருப்பதற்கு வேதத்தில் பல வழிகள் கூறப்பட்டிருக்கின்றன. வேள்விகள் செய்து, ஸௌகர்யத்தை அடையலாம், தெய்வத்தை வழிபடுவதனாலும், மந்தரஜபம்

செய்வதனாலும், தான தர்மம் செய்வதனாலும், ஸத்யர் பேசுவதனாலும், பிறருக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பதனாலும் ஸ்ரீபகவானுடைய அனுக்ரஹம் பரிபூரணமாய்க்கிடைக்கிறது. ஒருவனுக்கு ஸ்ரீபகவானின் அனுக்ரஹம் கிடைத்து விட்டதென்றால், உலகத்தில் அவனுக்கு நினைத்ததெல்லாம் கிடைக்கும் என்பதில் ஸந்தேகம் இல்லை. இதையே ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீசுகாச்சார்யாள் 'கிமவப்யம் பகவதி பிரஸன்னே ஸ்ரீநிகேதனே' என்று கூறி இருக்கிறார்.

பிரஹலாதனிடத்தில், தகப்பனாரான ஹிரண்யகசிபு, 'நீ படித்த பாடத்திற்குள் உயர்வான பாடம் எது?' என்று கேட்டதற்குப் பிரஹலாதன், 'மனிதனாகப் பிறந்தவன் பகவானைப் பூஜிக்கவேண்டும். அதற்கு ஒன்பது வழிகள் உண்டு' என்று கூறி இருக்கிறார். அதில் 'பாதஸேவனம்' என்று ஒருவழியைக் கூறினார். 'பாதஸேவனம்' என்பதற்கு வேதத்தில் 'பாதோஸ்ய விச்வாபூதாதி' என்று பொருள் கூறி இருக்கிறது. அதற்குப் பொருள் என்னவென்றால், 'ஒரு மனிதன் ப்ரதிப்பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் தேசஸேவை செய்வதே, பகவானுக்குச் செய்யும் பூஜையாகும். அதனால் அவன் குடும்பமும் அவன் வாழும் தேசமும் ஒருவிதமான குறைவும் இல்லாமல் ஸௌகர்யமாய்ப் பல்லாண்டு காலம் இருக்கும்' என்பதாகும்.

பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் தேச ஸேவை செய்கிறவர் ஒருவர் உண்டு என்றால், அவர் ஸ்ரீமான் ஏ.பி.சி.வீரபாகுதான்! ஸ்ரீமான் அவர்கள் நல்ல குடும்பத்தில் பிறந்து, தெய்வ வழிபாட்டுடன் இருந்துகொண்டு பல மஹான்களின் அனுக்ரஹத்திற்கும் பாத்திரமாக ஆகிப் பல தர்மகாரியங்களை முன்னின்று நடத்திக்கொண்டும், தானத்தில் உயர்வான வித்யாதானத்தையும் செய்துகொண்டிருக்கின்றார். எல்லாவற்றிற்கும் மேலாகக் கலியுக வரதனான ஸ்ரீகுருவாயூரப்பனின் மறு அவதாரமாக விளங்கிவரும் எனது பெரிய தகப்பனாருமான சேங்காலிபுரம் பிரும்ம ஸ்ரீ அனந்த ராம தீக்ஷிதரின் பரிபூர்ண அனுக்ரஹத்தையும் அன்பையும் பெற்றவர் ஸ்ரீமான் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள்'' என்பது வடகுடி என்.பாபு தீக்ஷிதர் அவர்களின் பாராட்டுரையாகும்.

எளிமை என்னும் ஒரு ஸதாசாரம்

பாரத நாட்டின் பண்டைப் பண்பாடு எளிமையே! புறத்தோற்றத்திலும் அகத்தோற்றத்திலும் எளிமையைக் கடைப்பிடிப்பதே சுகமான வாழ்வின் தத்துவமாகும். நம்நாடு ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாக இருந்தது. அப்போது, மாதம் மும்மாரி பெய்ததைக் கவிகள் வாயார வர்ணித்துக் காட்டியுள்ளனர். நீர்வளமும் நிலவளமும் பெற்றிருந்த அக்காலத்திலும் மக்கள் அவரவர், தத்தம் வாழ்நாள்களைச் சிக்கனமாகவும் ஆடம்பரமின்றியும், தத்தம் தேவைக்குமேல் எதையும் அனுபவிக்க விரும்பாமலும் வாழ்ந்தனர்.

ஒரு சிலர் ஆடம்பரத்தில் திளைத்துப் பெருவாழ்வு வாழ்ந்தனர். பொருள் செல்வத்தைப் பெற்றிருந்தவர்கள் மட்டுமன்றி, தாம் வகித்த பதவிகளாலும் அந்தந்தத் தகுதிகளுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்ப சிறப்புற வாழ்ந்தனர். மற்றவர்கள் அவர்களது வாழ்வுகண்டு குற்றமோ, பொறாமையோ கொண்டதில்லை. எனினும், நம் முன்னோர்கள் தேடி அலைந்தது கல்வி நலனையும், தம் உயர்வுக்குக் காரணமான ஒழுக்கத்தையுமேயாகும்; இவற்றையே பிறர்க்கும் போதித்து வாழ்ந்தனர். அதனால்தால் கூழுக்கும் கஞ்சிக்கும் பாடியஒருகிழவி(ஔவைபிராட்டி)யைக் கண்டு மன்னர்களும் அஞ்சினர்; அடிபணிந்தனர்.

மஹான்களுக்கு இணையானவர்!

இசை வழியே இறை இன்பத்தைக் கண்டு, எளிமையின் திருவடிவமாக விளங்கிய ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், ஒரு சமயம் தம் குருவின் அழைப்பை நிறைவேற்ற தஞ்சை சரபோஜி மன்னரின் அவைக்குச் சென்று, தம் குருவின் ஆணையை ஏற்று, சபையில் பண் இசைத்து எல்லோரையும் மகிழ்வித்தாராம்.

சரபோஜி மன்னர் மகிழ்ந்து பீதாம்பரம் பட்டு, தோடா, சால்வை, மகாசண்டி முதலான வைகளை ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்கு அளித்துச் சிறப்புச் செய்தார். அவற்றை ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் ஏற்று, தம் எதிரில் அமர்ந்திருந்த தம் குருநாதரின் திருவடிகளில் அனைத்தையும் அன்புடன் காணிக்கையாக்கிவிட்டு, திருவையாற்றுக்குத் திரும்பினாராம். இங்கு ஒரு கருத்தை ஆழ்ந்து அறிதல் வேண்டும்.

அன்று சரபோஜி மன்னர் தம்மைக் கௌரவித்து அளித்த சன்மானங்களை அவர் ஏற்றிருந்தாலும், அது அவருக்குப் புகழைத்தான் அளித்திருக்கும்; எல்லோரும் அச்சிறப்பு அவருக்கு ஏற்றதே என்று வாழ்த்தியும் இருப்பார்கள். எனினும், பிற்காலத்தில் அச்சிறப்புகள் மறைந்திருக்கும்; மக்கள் மனத்திலிருந்து மறைந்து போயிருக்கும். ஆனால், அவர் வழங்கிய இசையும், மொழியும் இன்றளவும், இனியும் எக்காலத்தும் யாவர்க்கும் பயனளித்துக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் வாழ்ந்த காலத்தில் பெயரோடும் புகழோடும் விளங்கிய பொப்பிலி கேசவய்யா, ஷட் கலா கோவிந்தராமன், காட்டூர் கிருஷ்ணய்யர் முதலான மகாவித்வான்கள் கர்நாடக இசைக்குப் பலபணிகளைப் புரிந்துள்ளனர். ஆயினும், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் பாடல்கள் அமரத்வம் பெற்றுள்ளன. இதற்கு முக்கியக் காரணமாக இரண்டைக் கூறலாம். ஒன்று, தாம் உலகுக்குச் சேவை செய்கிறோம் என்று அவர் எண்ணவில்லை; தாம் அடைந்த இசை இன்பத்தையே தெய்வ சந்நிதியாகக் கண்டார்; அந்த நாதப் பெருக்கின் அலை வடிவங்களையே ஸ்ரீராம பிரானாக, ஸ்ரீசிவபிரானாக, ஸ்ரீ திரிபுர சுந்தரியாகக்கொண்டு அதில் திளைத்தார். மற்றொன்று, அவருக்கு வெளிப் பகட்டுகளும் போலி ஆச்சாரங்களும் பிடிக்கவில்லை. அவற்றை அறவே ஒழித்துவிட வேண்டுமென்னும் கொள்கையை வலியுறுத்தினார்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் எளிய வாழ்க்கையைத் தாமே தமக்கு வகுத்துக் கொள்ளவில்லை. அவருக்கு அது இயல்பாகவே அமைந்தது. அவ்வியல்பு அவருக்கு ஏற்பட்ட உண்மை இயல்பு. அதுவே உயிரைவிட உயர்ந்ததாக அமைந்தது. வேறு வாழ்க்கை முறையில் தம்மை மாற்றிக்கொள்ள இயலாதவராக வாழ்ந்தார். இதுவே ஸ்தாசாரத்திற்கு அடிப்படை. இதே நிலையில்தான் மகாத்மா காந்தியும் விளங்கினார்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்குச் சங்கீதம் கருவியாக அமைந்தது. காந்தி மகானுக்குத் தேசபக்தியும், ஏழைகளுக்குச் செய்யும் சேவையும் கருவிகளாக அமைந்தன. அவரையும் இந்த ஸ்தாசாரத்தில் சேர்த்துவிட்டது. ராம நாமம் அவருக்கேற்ற ஆத்ம சக்தி, ஸ்ரீ ஸ்வாமிகள் அருளிய சாரங்கராக கீர்த்தனையின் விளக்கமாக வாழ்ந்தவர் காந்தியடிகள்.

ஆகவே, எளிமை என்பது உள்ளத்தால் பெறப்படும் உண்மை ஸதாசாரம். இது எவரிடம் விளங்குகிறதோ, அவரே செல்வச் சீமான்; வாழ்வின் நற்பயன் பெற்றவர். இவ்வகையில்,

தாம் பழகிய அளவில் ஏ.பி.சி.வீரபாகு அவர்களிடத்தில் இந்த ஸதாசாரத்தைக் காண்பதாக டி.எஸ்.பாலகிருஷ்ண சாஸ்திரி அவர்கள் பாராட்டியுள்ளார். ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்கு இசையும், காந்திமகானுக்குச் சேவையும் கருவிகளாக அவர்களை உயர்த்தியது போல, ஏ.பி.சி.வீரபாகு அவர்களுக்குக் கல்வி தானமும் சமூக சேவையும் கருவிகளாக அமைந்து பெருமை பெற செய்துள்ளன எனப் பாராட்டுகிறார்.

வீரபாகுவின் குடும்பம்

வீரபாகு அவர்கள், 'முதலாளி' என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். வீரபாகு அவர்களுக்கு ஏ.பி.சொக்கலிங்கம் செட்டியார் மாமா முறையினர் ஆயினும், மருமகன் முறையுடைய வீரபாகுவை தம் திருமகனாக ஏற்றுக்கொண்டு போற்றி வளர்த்தார். வீரபாகு அவர்களை வளர்ப்புத் தந்தை ஏ.பி.சொக்கலிங்கம் செட்டியார், தம் கண்ணின் மணியெனக் காத்து வளர்த்தார். காலக் கொடுமையாக ஏ.பி.சி. அவர்கள் முப்பத்தைந்தாம் வயதிலேயே இம்மண்ணுலக வாழ்வை நீத்ததால், தம் வளர்ப்பு மகனான வீரபாகு அவர்களின் ஆற்றலையோ, அவர் வகித்த பதவிகளையோ, செய்த அரிய பணிகளையோ கண்டுகளிக்கும் பேற்றினைப் பெற்றார் இல்லை!

ஏ.பி.சொக்கலிங்கம் செட்டியார் அவர்களை எல்லாரும் 'ஏ.பி.சி.' என்று சுருக்கமாகக் குறிப்பிட்டு அழைத்து வந்தனர். ஏ.பி.சி. அவர்களின் அன்பு மகனான வீரபாகுவை எல்லோரும் 'முதலாளி' என்றே அழைக்கத் தலைப் பட்டனர். ஏ.பி.சி. அவர்கள், வீரபாகு விடம் கொண்டிருந்த அன்பு அத்தகையது.

வீரபாகுவும் தம் மாமனும் வளர்ப்புத் தந்தையுமான ஏ.பி.சி.அவர்கள் மீது செலுத்திய பாசம் - உணர்ச்சி ஒன்றிய உறவு - எல்லோரும் தம்மை ஏ.பி.சி.வீரபாகு என அழைப்பதிலேயே வெளிப்படும் என எண்ணினார். அதையே தம் வளர்ப்புத் தந்தைக்குத் தாம் செய்யும் சிறப்பாகக் கருதினார்.

பிள்ளைப் பருவத்தில் பேணி வளர்த்த தம் வளர்ப்புத் தந்தை, தம்மை அவையத்து முந்தி இருக்கச் செய்வதற்கு ஆற்றிய நன்றியை நினைவில்கொண்ட மகனான வீரபாகு, மகனாகத் தாம் ஏதும் செய்ய வேண்டாமா?' அதனை எண்ணித்தான், 'இவனை மகனாகப் பெறுவதற்கு என்ன தவம் செய்தாரோ?' என எல்லோரும் போற்றும் வகையில், வீரபாகு தம்மை 'ஏ.பி.சி' என அழைப்பதையே விரும்பினாராதல் வேண்டும்.

'ஏ.பி.சி.' எனும் மூன்றெழுத்து!

சமுதாயத்தில் 'ஏ.பி.சி.வீ.' என்னும் எழுத்துக்களால் குறிக்கப் பெற்று, சாதனை படைத்தவர் வீரபாகு அவர்கள் என்பதை யாவரும் அறிவர். மதுரைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தராக விளங்கிய திரு.எஸ்.வி.சிட்டிபாபு அவர்கள், வீரபாகு அவர்களின் பெயருக்குக் கற்பித்து அளித்துள்ள விளக்கம் அனைவரும் அறியத்தக்கதொரு செய்தியாகும் :

"ஏ.பி.சி. என்று நாம் சொல்லும்போது, அந்த மூன்று எழுத்துக்களுக்கும் நான் கற்பித்துக்கொண்ட பொருள் : 'A' for Agility! எந்த ஒரு காரியத்தையும் வேகமாக, மிகத் துரிதமாக, சிறிதுகூட சளைக்காமல் சரியாகப் பணியாற்றக் கூடிய அந்தச் சிறப்பு உணர்வு இருக்கிறதே, அதைத்தான் ஆங்கிலத்தில் 'Agility' என்று சொல்லுகிறோம். 'P' for Placidity. அவரைப் பார்க்கும்போது மலைபோன்ற பெரும் சங்கடங்கள்

ஏற்பட்டாலும்கூட, அந்த புலன்களை யெல்லாம்அடக்கிநிலதிரியாதுஅடங்கின தோற்றம் என்ற வகையிலே, அப்படியே சற்றும் சலனம் இல்லாமல், 'எந்தவித எதிர்ப்புச் சக்தி இருந்தாலும்கூட அதை என்னால் சமாளிக்க முடியும் என்னும் உணர்வைத்தான் 'Placidity' எனச் சொல்லுவர். 'C' for Civility! ஆம், எல்லோரிடத்திலும் மிகவும் சுமுகமாக, நயமுடன் இனிமையாகப் பழகக்கூடிய பாங்கு படைத்தவர் என்பதையே C - Civility காட்டுகின்றது.

இவையெல்லாம் சேர்ந்ததொரு கலவையாக எந்தக் காரியமும், அது எத்தகைய கடுமையான காரியமா யிருந்தாலும்கூட, பல தரப்பட்ட திறமைகளைத் தன்னகத்தே கொண்டு, வென்று மிளிரக்கூடிய ஓர் அருமையான வர்ணஜாலம் வைரமாகின்ற காரணத்தினால் சொல்லுகின்றேன். அந்த 'V' கூட அவருடைய 'Versatility'யைத்தான் காட்டுகின்றது என்று சொல்வேன்."

'APCV' இந்த நான்கு எழுத்துக் களில்தான் எவ்வளவு அருமையான பொருள் பொதிந்திருக்கிறது! தெரிந்தோ, தெரியாமலோ அவர்கள் வைத்த பெயருக்குத் தகுந்தாற்போல், அந்த எழுத்துக்களுக்கு ஒரு புனிதத் தன்மையைக் கொடுப்பதுபோல் தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டார் என்று சொல்லலாம். இத்தகைய பெருந்தகைகளை நம்மால் உலகத்தில் எத்தனை பேரைக் காண முடியும்? விரல் விட்டே எண்ணி விடலாம்! அத்தகைய பெருந்தகையாக விளங்குகிறார் திரு. ஏ.பி.சி." என்று பாராட்டியுள்ளமை வீரபாகு அவர்களுக்கு உன்னதமான சிறப்பைச் சேர்க்கிறது அன்றோ?

எஸ்.வி.சிட்டிபாபு அவர்கள், வீரபாகு அவர்களைப்பாராட்டும்போது, கல்வி வேள்வி நடத்திவரும் அறநெறிச் செல்வர், விடுதலை வீரர், தேசாபிமானி. சமூகத்தொண்டர், தியாக சீலர், சைவச் செம்மல், கல்விக்கு ஒரு மணி மகுடம் சூட்டியவர் என்றெல்லாம் போற்றியுள்ளமை காலத்திற்கும் நிலைத்திருந்து ஏ.பி.சி. அவர்களின் புகழைப் பறைசாற்றும்.

மனிதப் பிறவி என்பது கிடைத்தற்கு அரிய பிறவி, அப்படி மனிதர்களாய்ப் பிறந்தவர்களுக்குள் மிகச் சிலரே பயன்பட வாழ்கின்றனர். அவர்களுக் குள்ளும் மிகமிகச் சிலரே சமுதாய நலனுக்காக வாழ்ந்து தங்கள் புகழை இவ்வுலகில் நிலைநிறுத்திச் செல்கின்றனர். அத்தகையவர்களும் ஒருவரே ஏ.பி.சி.வீரபாகு அவர்கள்.

முத்து நகர் கண்ட நல்முத்து!

காங்கிரஸ் இயக்கத்தின் செயல்பாடுகளையும் காந்திய நெறிமுறைகளையும் வழிநடத்திச் சென்றதிலும், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வேதரத்தினம் பிள்ளை என்றால், திருநெல்வேலி மாவட்டத்திற்கு வீரபாகு அவர்கள் என்கிற சிறப்பு உண்டு. 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பர். தூத்துக்குடிக்குச் சுவைசேர்க்கும் உப்பாக வீரபாகு விளங்கினார். அன்றைய காலகட்டத்தின் இளைய தலைமுறையினரின் ஆற்றல் வெளிப்பாட்டின் அடையாளமாக விளங்கினார். கல்லூரி மாணவப் பருவத்திலிருந்தே வீரபாகு, உணர்வால் ஒன்றிய தொண்டராகக் காங்கிரஸ் கட்சிக்காக உழைத்ததை அனைவரும் அறிவர்.

கல்லூரி படிப்புக்கு வீரபாகு கால்பதித்தது திருநெல்வேலி இந்து கல்லூரி. அன்றைக்கு அங்குப் பணியாற்றிய பேராசிரியர்களான

ஜே.பி.யக்ஞேஸ்வர சர்மா, கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, பேராசிரியர் சந்தானம் முதலானோர், இந்து கலாச்சாரத்தையும் இந்தியப் பாரம்பரியத்தையும் தேசப்பற்றையும், நாட்டுப்பற்றையும் ஊட்டி வளர்த்தனர்.

திருநெல்வேலி மாவட்டம், சுதந்திரப் போராட்டத்திற்குத் துணைநின்ற சுப்பிரமணிய பாரதியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை, வ.வே.சு.ஐயர் என்னும் உன்னதமான வீரர்களை அளித்திருந்தது. அவர்களின் பேச்சும் எழுத்தும் சுதந்திரப் போராட்டத்தை வளர்த்ததோடு, தேசிய உணர்வு இயக்கத்தை வீறுகொள்ளச் செயதது.

ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் பாட்டனாரான வீரபாகு என்பாரும் அவர் முன்னோர்களும்கூட தேசிய உணர்வுமிக்கவர்களாகவே வாழ்ந்தனர். இத்தகைய பின்னணியில் வளர்ந்த ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் காந்தியத்திலும், கல்வியின் வாயிலாகவே சமுதாயமும் நாடும் வளர்ச்சிப் பாதையில் கால்பதிக்க முடியும் என்பதிலும் உறுதியான நம்பிக்கையுடையவராக இருந்தார்.

புத்தாக்க எண்ணம்கொண்ட, முன்னோடி தலைவராக உருவெடுத்த வீரபாகு அவர்களின் தலைமையின் கீழ்தான் தூத்துக்குடி, கல்வியிலும் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி காணத் தொடங்கியது.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்பும், விடுதலை பெற்றதற்குப் பின்பும் பல்வேறு கல்வி நிலையங்களை உருவாக்கித் தொழில் துறைகளையும் வளப்படுத்தினார்.

அரசியலில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டினாலும், பல்வேறு பதவிகளை ஏற்றுப் பொறுப்புடன் செயலாற்றினாலும், சர்வோதய இயக்கத்தின் சார்பாகக் கழுகுமலையில் நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டத்தில் பூதானத்தைப் பிரபலப்படுத்திப் பெருங்கூட்டத்தைச் சேர்த்தார்.

வ.உ.சி. தொடங்கிய சுதேசி கப்பல் கம்பெனியைச் சிறப்பாகப் புதுப்பித்தார். தொழிலதிபராகவும் கல்வியாளராகவும் அரசியல்வாதியாகவும் பல்வேறு பரிமாணங்களில் தன்னலம் மறந்து, பிறர் நலம் பேணி, சமுதாயத்தின் அனைத்து மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட அற்புதமான சமூகத் தொண்டராக வீரபாகு விளங்கியது தமிழ் நாட்டுக்கே, அகில இந்தியாவிற்கே பெருமை சேர்த்தது.

தயவுதாட்சண்யம் பாராதவர்

''ஏ.பி.சி.வீரபாகு மிகச்சிறந்த நேர்மையாளர், யாராக இருந்தாலும் சரி, கவர்னராக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும், நாட்டின் மிகப்பெரிய தலைவராக இருந்தாலும், அவர்கள் செய்வது தவறு என்று திரு.ஏ.பி.சி. அவர்கள் கண்டுவிட்டார்களேயானால், தவறு என்று அஞ்சாது இடித்துரைப் பாரேயல்லாமல், தாட்சண்யத்திற்காகத் தலைவணங்குகின்ற இழிதன்மை என்றுமே அவரிடம் குடிகொண்டிருந்ததில்லை!

நேர்மையான அரசியல்வாதி, தயவு தாட்சண்யத்திற்காகத் தலைவணங்காத வணங்காமுடி மன்னன், அரசியலில் மாபெரும் மேதை என்றெல்லாம் சொன்னால் மிகையாகாது!'' என்பது அன்றைய நகர்மன்றத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாக இருந்த திரு.எம்.எஸ். சிவசாமி அவர்களின் கணிப்பு.

அரசியலில் இல்லாதவர்களும், அரசியலை விட்டவர்களும், பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும் எனப்

பலநோக்கு கொண்டவர்கள் எல்லோரும் வீரபாகு அவர்களை விரும்பிச் சூழ்ந்திருப்பார்கள். இத்தகைய சிறப்புகளைப் பெற்ற வீரபாகு அவர்களின் சட்டமன்றப் பணியை முன்னாள் முதலமைச்சர் திரு.பக்தவத்சலம் அவர்கள் கீழ்கண்டவாறு நினைவுகூர்ந்துள்ளார்:

"சட்டமன்றத்தில் பத்து ஆண்டுகள் இருந்திருக்கிறார். அப்பொழுது நான் அவரை உன்னிப்பாகக் கவனித்திருக்கிறேன். அவர் பேசும்பொழுது உருப்படியாகப் பேசுவார். அதற்காக மற்றவர்களைக் குறை கூறுவதாகக் கொள்ளக்கூடாது. திரு.ஏ.பி.சி.வீ அவர்கள் எழுந்துநின்று பேச ஆரம்பித்தால், மற்றவர்களுக்கு அதுபற்றிக் கேட்க விருப்பமில்லை, அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் தைரியமாகத் தம்முடைய கருத்தைக் கூறுவர். ஆணித்தரமாகப் பேசுவார். காந்தியத்தில் பற்றுக்கொண்டவர். தெய்வ நம்பிக்கைமிக்கவர்."

மனிதராகப் பிறந்தவர்கள், மனிதராக வாழ்வதற்கு எவரையாவது முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும். இச்செய்தியை முன்நிறுத்தி வீரபாகு அவர்களின் ஆற்றலை, முன்னாள் கல்வி அமைச்சர் திரு.அவினாசிலிங்கம் அவர்கள் பாராட்டியுள்ளதை நோக்குவோம்:

"மனிதனை மனிதனாகப் பார்க்கும் பழக்கம் நமக்கு வரவில்லை. ஒருவரைக் கட்சி நோக்கத்தோடு பார்க்கிறோம்; மத நோக்கத்தோடு வேறு சிலரைப் பார்க்கிறார்கள். 'அவன் பணக்காரன்' என்கிற முறையில் வேறு சிலரைப் பார்க்கிறார்கள். 'இவன் படித்தவன்', 'இவன் படிக்காதவன்' என்கிற நோக்கில் வேறு சிலரைப் பரிசீலிக்கிறார்கள். ஆனால், அனைத்திற்கும் மேலாக, நாம் மனிதனை, மனிதனாகப் பார்க்க வேண்டும். எந்தவிதத் துன்பத்திலும் தர்மத்தைப் பின்பற்றி எவனொருவன் தான் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கின்றானோ, அவன்தான் மனிதன்."

'சுயநலம் உள்ளவனுக்குச் சக்தி பிறப்பதில்லை. மகத்தான காரியத்தைச் சாதித்தவர்கள் எல்லாம் தெய்வத்தை நம்பிக்கையோடு வழிபட்டவர்கள். 'நாளையோ தவம் செய்தேன்' என்று சொல்லுகிறார் மாணிக்கவாசகர். 'சிவாய நம எனப் பெற்றேன்' அவ்வளவுதான் செய்ததெல்லாம். 'தேனாய், இன்னமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான், தானே வந்து, என் உளம் புகுந்து, அடியேர்க்கு அருள் செய்தார்' என்கிறார். ஆதலால், சக்தி பெற, ஆண்மை பெற, வீரம் பெற, மகத்தான காரியங்கள் செய்ய வழிஇருக்கிறது. கொஞ்சம் சுயநலத்தை விட்டு, தான் என்பதை விட்டு, எனக்கு என்பதை விட்டு, தேசம் என்பதை நினைத்து, சக்தி கொடுக்கட்டும் என்று நினைத்தால், சக்தி பெருகும்! திரு.வீரபாகு அவர்கள் தொடர்ந்து நல்ல பல காரியங்கள் செய்ததற்கு, 'விடாமுயற்சியை மேற்கொண்டால் வெற்றி பெறுவர்' என்னும் உறுதியே காரணம்."

அருஞ்செயல் புரிந்தவர்

'சிலம்புச் செல்வர்' ம.பொ.சி. அவர்களும், ஏ.பி.சி. வீரபாகு அவர்களும் காங்கிரஸ் இயக்கத்தில் ஒருகாலத்தில் ஒன்றாக இருந்து செயல்பட்டவர்கள். காலத்தின் கோலம் காரணமாகக் காங்கிரஸில் கோஷ்டி பூசல் ஏற்பட்ட காலத்திலும் ஒரே கோஷ்டியில் ஒன்றாக இருந்து செயல்பட்டவர்கள். பிற்காலத்தில் கட்சியிலும் இல்லாமல் கோஷ்டியிலும் இல்லாமல் வாழ்ந்த

காலத்திலும் வீரபாகு அவர்களின் செயற்கரிய செயல்களைக் கண்டு வியந்து பாராட்டியுள்ளார் :

"வீரபாகு அவர்கள் அருமையான, ஓர் ஆக்கப்பூர்வமான வழியில், பணியில் தம் அறிவையும் ஆற்றலையும் செலுத்தி வருகிறார். காந்தியடிகள் விடுதலை பெற்ற இந்தியாவில் என்னவெல்லாம் நடக்க வேண்டுமென்று விரும்பினாரோ, அந்த ஆக்க வழியில், இருப்பதற்கு வாய்ப்பு பெற்றிருக்கிறார். சாதி, மத வேறுபாடின்றி, ஏழை - பணக்காரன் வித்தியாசமின்றி, இன்றைக்கு எல்லாரும் கல்வி கற்க முன்னோடித் திட்டங்களை வகுத்துச் செயல்பட வைத்திருப்பதைப் பார்க்கிறோம். இவ்வாறாகக் கல்வித் துறையில் மகத்தான மாட்சியை ஏற்படுத்தி இருப்பதை பார்க்கிறோம். அந்த மாதிரி ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நண்பர் ஏ.பி.சி.வீரபாகு முயன்று கொண்டிருக்கிறார். எனக்கு வீரபாகு அவர்களைப் பார்க்கும் போது கொஞ்சம் பொறாமை ஏற்படுகிறது. இருந்தபோதிலும் இத்தகைய பெரும்பணிகளைச் செய்ய வாய்ப்பில்லாத எனக்கு, நல்ல பல பணிகளைச் செய்பவர்களை வாழ்த்துகிற பேறாவது கிடைத்ததை எண்ணிப் பெருமைப்படுகிறேன்."

வீரபாகு ஒரு நிறை மனிதர்!

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், ஒரு 'நிறைமனிதர்' என்பதைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர்களுள் ஒருவரான திரு.கே.எஸ்.இராமசுவாமி படம்பிடித்துக் காட்டியுள்ளமை அறியத்தக்கதாகும் :

''ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் சேவையை நாம் பார்க்கும்போது, ஒரு நூற்றாண்டு காலத்தில செய்யவேண்டிய வேலைகளைத் தம்முடைய அறுபதாண்டு காலத்தில் முடித்திருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. நண்பர் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் சமூகத் தொண்டினாலும், தேச பக்தியினாலும் இந்த மிகப்பெரிய கல்லூரியைத் தேசபக்தர் சிதம்பரனார் பெயரிலேயே நிலைநாட்டியிருக்கிறார். இந்த வட்டாரத்திலேயே, மதுரைப் பல்கலைக்கழகத்திலேயே, மிகப்பெரிய முதன்மையான கல்லூரியாக, ஏராளமான மாணவர்களைக் கொண்டிருக்கிறது.

தூத்துக்குடி துறைமுக முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டியிருக்கிறார். நான் அவற்றை எல்லாம் அவர் அருகிலிருந்து பார்த்திருக்கிறேன். வீரபாகு நிர்வகித்து வருகின்ற ஸ்தாபனங்கள் அனைத்தும் அவருடைய நிர்வாகத் திறமையை நமக்கு நன்கு காட்டுகின்றன."

நாடு பெரிது எனும் எண்ணம்கொண்டவர்

சென்னை, சர்வோதய மண்டலத் தலைவர் திரு.எஸ்.ஆர்.சுப்பிரமணியம் அவர்கள், வீரபாகு அவர்களைப் பற்றி, "பல ஏழை மாணவர்களுக்குக் கடந்த பல ஆண்டுகளாக, இந்தக் கல்லூரியின்மூலம் கல்வி அளித்துச் சிறந்த தொண்டாற்றிப் புண்ணியம் சேர்த்து வருகிறார். கடந்த முப்பதாண்டுகளாக நான் வீரபாகு அவர்களைச் சந்தித்துப் பழகி வருகிறேன். அவருடைய உள்ளம் இறைவனிடத்தில் அசையாத பக்தி கொண்டிருக்கின்ற காரணத்தால், வரும் இளைய தலைமுறையினரும் அம்மாதிரி இருக்கவேண்டும் என்று எண்ணி வருகிறார்.

வீரபாகு அவர்கள், பதவியைவிட, கட்சியைவிட நாடு பெரிது என்னும் எண்ணங்கொண்டவர். நாடு நேர்மையான, ஒழுங்கான பாதையில் செல்ல,

முறையான, ஒழுக்கமான கல்வி ஒன்றால்தான் முடியும் என்ற எண்ணம் கொண்டு சிறந்த கல்விப்பணி செய்து வருகிறார்" எனப் போற்றியுள்ளார்.

அரசியல் அவருக்குத் தொழில் அல்ல!

அரசியலில் ஈடுபட்டாலும், தொழிலதிபராகவும் கல்வியாளராகவும் சமூகப் பணியாளராகவும் வீரபாகுவைப்போலவே வாழ்வு நடத்தியவர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்கள், வீரபாகு அவர்களின் நம்பிக்கையூற்றை இங்கே நினைவுறுத்துகிறார்:

"நீண்ட நாளாக அரசியல் வாழ்வில் கேள்விப்பட்டிருந்தவீரபாகு அவர்களைச் சென்னை சட்டமன்றத்தில் நாங்கள் இருவரும் உறுப்பினர்களாக இருந்தபோது, நல்ல நண்பராகப் பெற்ற பேற்றை அடைந்தேன். தமிழக அரசியலில், காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபோது கட்சியின் அரசு பற்றியும், கொள்கை பற்றியும் விமர்சனம் செய்யும்வகையில் நாங்கள் இருவரும் ஒருமனத்தவராக இருந்தோம். பொறுப்பில் இருந்த தலைவர்களின்கொள்கைக்குழப்பத்தால், தமிழககாங்கிரசுக்கும்ஈ.வெ.ரா.பெரியார் கட்சிக்கும் அதிக வித்தியாசத்தை மக்கள் காணமுடியவில்லை. ஆகவே, 1967இல் ஆட்சிமாறியது!

ஆட்சி மாறிய பின்னர்தான் ஏ.பி.சி.வீ.யும்நானும்சிலநண்பர்களோடு தமிழக காங்கிரஸ் கட்சி, இயக்கத்தில் புதிய துறையில் செல்லவேண்டுமென்று முயற்சித்தோம். தலைமையை மாற்றித் திரு.சுப்பிரமணியத்தைப் பொறுப்புக்குக் கொண்டுவர முடிந்தது. ஆனால், புதியதலைவரும்பழையநண்பர்களோடு சமாதானமாக அரசியல் நடத்த விரும்பினார். ஏ.பி.சி.வீ.யும் நானும் கே.டி.கே.யும் பக்தவத்சலமும் புதிய தலைவரின் வழியைப் பார்த்து வருந்தினோம்.

சில மாதங்களுக்குள் தமிழக காங்கிரசில் திருவாளர் காமராஜுக்கும் தலைவர் சுப்பிரமணியத்திற்கும் மன ஒற்றுமை இல்லாதநிலை! அந்தச் சூழ்நிலையில், பக்தவத்சலம் இல்லத்தில் நடந்த நண்பர்கள் கூட்டத்தில்ஏ.பி.சி.வீ.யும், சி.எஸ்.ஸிடம் "நீங்கள் நம்பிக்கை ஓட்டு கேளுங்கள். அதன் பேரில் காரியக் கமிட்டியை மாற்றி அமையுங்கள்" என்று கூறினார். இதன் மத்தியில் தேச சூழ்நிலையிலும் காங்கிரசில் மாறுதல்கள் நிகழ்ந்தன. ஏ.பி.சி.வீ. கூறிய யோசனையை திரு.சி.எஸ்.கேட்காமல்தம் பொறுப்பை ராஜினாமா செய்தார். பின்னர் நிகழ்ந்த செய்திகள்பலரும்அறிந்தவையே.தமிழக அரசியலில்ஏ.பி.சி.வீ.யின் யோசனையை சி.எஸ். கேட்டிருந்தால் 1969இல் என்ன ஆகியிருக்கும் என்பது ஒரு பிரச்சினை!

திரு.ஏ.பி.சி.வீ.க்கும் எனக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. இருவருக்கும் அரசியல் ஒரு தொழில் அல்ல! 'Hobbyதான்!' சொந்தமாகத் தொழில் செய்வதும் கல்வி நிலையங்களை நடத்துவதும், மேலும்இருஒற்றுமையான வியங்கள். அவர் நடத்திவரும் கலைக் கல்லூரியில், கல்லூரி முதல்வர் சீனிவாசராகவனின் மணிவிழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு பெற்றேன். ஏ.பி.சி.வீ.யின் மணிவிழாவிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன்.

காங்கிரஸ் இரண்டானதற்குப் பின்னர், ஏ.பி.சி.வீ. தமிழக காங்கிரஸ் தலைவராகவும் இருந்து பெருமுயற்சி செய்தார். இப்பொழுது மறுபடியும் அவர் கல்வி, தொழில் துறை பணியில் அதிக அளவில் கவனித்து அரசியலுக்குக் காலம் கொடுப்பதைக் குறைத்துள்ளார். ஜனநாயக நாட்டில் அரசியல், Hobbyஆக உள்ளவர்கள் அதிகம் இருப்பதுதான்

நாட்டிற்கு நல்லது. ஆனால், தேசத்தில் இன்று அரசியலும் ஒரு தொழிலாக இருப்பதுதான் அதிகமாக உள்ளது. காலம் மாறி, ஏ.பி.சி.வீ. போன்ற நண்பர்கள் அதிகம் இருக்கும் காலம் வருமென நம்புகின்றேன்'' என்று கூறியுள்ளார்.

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது சான்றோர் பட்டறிவு உரை. இங்கே தமிழகத்தின் இரு வேறு பகுதிகளில் வாழ்ந்த இரு வேறு சமூகப் பொறுப்பாளர்களின் செயல்பாடுகளைக் காண முடிகிறது. அரசியலில் இரு தலைவர்களும் சமூகப் பணியாற்றுவதற்காகவே பங்கு பெற்றமையை உணர முடிகிறது. அரசியலைத் தொழிலாக மேற்கொண்டுள்ள நிலையை இன்று நாம் காண்கிறோம். கல்வியைச் சமூக முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தாமல் பணம் ஈட்டும் தொழிலாக நடத்துபவர்களையும் காண்கிறோம். உண்மையில் நாடும் சமுதாயமும் முன்னேற, குறிப்பாக நம் தமிழகம் முன்னேற முன்னோடிகளாகக் கொள்ளவேண்டியவர்களாக இவர்களைக் கொள்வது நலம் பயக்கும்.

சமுதாயப் பணியில் அக்கறை!

நா.மகாலிங்கம் அவர்கள், தம்முடன் அரசியலில் இருந்தவரைப் பற்றிப் பேசுவது என்பது 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பதற்கு நிகரானதாகும். இவர், வீரபாகு அவர்களின் செயல்பாடுகளைப் பற்றிப் பேசும்போது:

"தமிழகத்தின் சுதந்திரப் போராட்டக் காலத்திலும், அதற்குப் பின்னர் புதிய வாழ்வு பெற்ற பாரதத்தினுடைய முன்னேற்றத்திலும் அரசியல் துறை, கல்வித்துறை ஆகியவற்றிலும் மிகச் சிறப்பாகப் பணிபுரிந்து வந்தவர் திரு.ஏ.பி.சி.வீரபாகு. நண்பர் வீரபாகு தமிழகத்தின் தலைசிறந்த அரசியல்வாதிகளுள் ஒருவர். எனக்கும் அவருக்கும் ஓர் ஒற்றுமை என்னவென்றால், எங்கள் இருவருக்கும் அரசியல் ஒரு 'பார்ட் டைம்.' எப்போது அவருடைய சேவைகள் அரசியலில் இருக்கிறவர்களுக்குத் தேவைப்படுகிறதோ, அப்போது அங்குப் போய் வேண்டிய நல்லதைச் செய்துவிட்டு, அவர்களுக்குக் கஷ்டமாகவோ, சிரமமாகவோ தோன்றும்போது அங்கிருந்து விலகி, கல்வி மற்றும் சமுதாயப் பணிகளில் ஈடுபட்டு நற்சேவைகளைச் செய்து வருவதில் அக்கறை காட்டுவார்.

காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தபோது, தமிழகத்தில் ஒரு பகுதிக்குத் தலைமை ஏற்று, வெகு சிறப்பாகக் கட்சிப் பணியைச் செய்து வந்தார். ஆனால், திடீரென்று தங்களுடைய நிலைக்கான பதவிக்கு எங்கே இவரால் ஆபத்து ஏற்பட்டுவிடுமே என்றஞ்சி, இவரை ஓய்வு எடுக்கச் செய்துவிட்டார்கள், சில பதவி ஆசை பிடித்த அரசியல்வாதிகள்.

நீண்ட கால, எதிர்காலத்தின் தேவைகள் எல்லாம் சிந்தித்துச் செயலாற்றக்கூடிய தலைவர்கள் ஒரு சிலர்தான். அந்தத் தலைவர்களை மதித்து ஏற்று ஆதரவு கொடுத்து எந்தச் சமுதாயம் வாழ்த்துகின்றதோ, அச் சமுதாயத்தின் வாழ்க்கை சிறப்புள்ளதாகவும் வளம் உள்ளதாகவும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

வீரபாகு சிறந்த ஜனநாயகவாதியாக விளங்கி வருகிறார். இந்தச் சமுதாயம் இவருடைய வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய காந்தியக் கொள்கைகள் அதிகம்'' என்றும் பாராட்டியுள்ளார். நா.மகாலிங்கம் அவர்களின் பாராட்டுரைகள், வீரபாகு அவர்களின் சிறப்புகளை வெகுவாக வெளிப்படுத்துகின்றன.

அஞ்சா நெஞ்சர் வீரபாகு!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர்களுள் ஒருவரும், 'சொல்லின் செல்வர்' எனப் போற்றப்பட்டவருமான ஈ.வெ.கி.சம்பத் அவர்களின் சொற்சித்திரம், வீரபாகு அவர்களின் இயல்பைத் தெளிவாக விளக்குவதைக் காண்போம்.

"ஏ.பி.சி.வீ. அவர்களின் சிறப்புகள், தொண்டுகள், அவர்களின் இனிய பண்புகள் என்னும் தொகுப்புப் பற்றி, அவரோடு பயில்வதற்கும், தொடர்பு கொள்வதற்கும், உறவை வைத்துக் கொள்வதற்கும் வாய்ப்பு கிடைத்தவர்கள் பேசத் தொடங்கினால், அதற்கு ஒரு முடிவே இருக்க முடியாது. 'அவர் ஒதுங்கி இருக்கிறார்' என்று சிலர் சொல்வதும், 'அவர் ஒதுங்கி இருப்பது நல்லது' என்பதும், 'அது ஒரு சிறந்த தத்துவம்' எனத் தத்துவாசாரர் சொல்வதும் ஆகிய இவற்றை எல்லாம் அனுமதிக்க முடியாது.

'தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் தலைவராக இருந்தால்தான் அரசியல்' என்பதல்ல! இன்றைக்கும் காங்கிரஸ் செயற்குழுவில் அவர் உறுப்பினராக இருக்கிறார். செயற்குழு கூட்டத்திற்கு அவர் வருவதில்லை. ஆனால், தலைவர்கள் இங்கு வந்து அவரைக் கலந்துகொண்டு, அவர் வந்தால் எப்படி இருக்குமோ, அதைவிட அதிகமாகவே அவருடைய ஆலோசனைகளை வாங்கிச் சென்றிருக்கின்றோம்.

இந்த ரகசியங்கள் வெளியில் சிலருக்குத் தெரியாமல் இருக்கலாம். இவருடைய அறிவால் பெறும் ஆதாயத்தையும் வலுவையும் பெறாமல் ஏமாறக் கூடியவர்களாக ஸ்தாபனத்தில் உள்ளவர்கள் இல்லை. இவரைப் பொருத்தவரை 'அஞ்சா நெஞ்சர்' என்று துணிந்து கூறலாம்.

பொதுவாக இவர், எதிர்ப்பு பற்றிய சபலத்திற்கு உட்பட்டுச்சலனம் அடைவது கிடையாது. அபாண்டங்களையும் அவதூறுகளையும் அவர்மீது பொழிந்து மாசுபடுத்த முடியுமா என்று முயன்ற நண்பர்களைக் கூட, தம்மை வாழ்த்துவோர் பட்டியலில் இணைத்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றவர் வீரபாகு. இந்த இயல்பே வீரபாகு அவர்களின் வெற்றிக்கு அடிப்படை எனலாம். எதிர்ப்புகளுக்கு வளைந்து கொடுத்திருப்பாரேயானால் இந்தப் பெருமைக்கு ஆளாகி இருக்க மாட்டார்.

எதிர்க்கின்றவர்களை, வீரபாகு அவர்கள் எதிரியாகக் கருதுவது இல்லை. எதிர்ப்புகளைச் சந்திப்பார்; சமாளிப்பார். எதிர்ப்பவர்களை வெறுப்பதோ, கண்டு பொருமுவதோ, குமைவதோ கிடையாது. கோபமுடையவர்போல் பல நேரங்களில் காட்சியளிப்பார். கோபம் என்பது பாதுகாப்பான விஷயமாக விளங்கும். அது வெளிப்படுவதால், உள்ளம் குமைந்துக் கொண்டு இருப்பதில்லை. ஏ.பி.சி.வீ.க்கு கோபம் என்பது, அந்த நேரத்தில் ஒன்று பிடிக்கவில்லை என்றால் வெடிக்கும். வெடித்ததோடு விஷயம் முடிந்துவிடும். அடுத்த கணம், எதிரி மறுபடி நண்பராவதற்கு வாய்ப்பு கொடுத்து விடுவார். ஒன்றை உள்ளத்தில் வைத்துக் கருவறுப்பது என்பது கிடையாது. இவை எல்லாம் வீரபாகு அவர்களின் சிறப்புக்கு காரணம்."

ஓயாது உழைப்பதில் மன நிறைவு!

தி.மு.கழக ஆட்சியில் அமைச்சராக இருந்தவர் திரு.ராசாராம் அவர்கள். காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்தபோது கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதியில் சி.சுப்பிரமணியத்திற்காக வீரபாகுவுடன் சேர்ந்து தேர்தல் பணிகளை மேற்கொண்டவர். வீரபாகு அவர்களின் ஆற்றலையும் அறிவுத்

திறனையும் செயல்பாடுகளையும் திரு.ராசாராம் அவர்கள் நன்கு அறிந்தார்.

''திரு.ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தமிழகத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறந்த தொண்டாற்றியவர். ஓயாமல் உழைப்பதில் மன நிறைவு காண்பதைப் பலமுறை நான் கண்டிருக்கிறேன். தாம் எடுத்துக்கொள்ளும் வேலைகளில் முழுவதும் மூழ்கிவிடும் உள்ளம் கொண்டவர். அவர் தமிழக மக்களுக்கு அரசியல் மூலமும் கல்வி மூலமும் சிறந்த தொண்டாற்ற விருப்பம் கொண்டவர்.

வீரபாகு அவர்களைப் பற்றி மட்டுமல்லாமல் வெற்றிக்குக் காரணமாக அமைந்த அவர் துணைவியாரின் பாங்கையும் தெளிவு படப் பாராட்டியுள்ள பாங்கு அறிந்து இன்புறத்தக்கதாகும்.

திரு.ஏ.பி.சி.வீரபாகு உழைக்கின்ற பக்குவத்தைப் பெற்றவர் என்பதைப் பல நண்பர்கள் மூலமாக நான் அறிந்திருக்கிறேன். அவற்றைக் காணுகிற வாய்ப்பு சி.சுப்பிரமணியத்தைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கிருஷ்ணகிரியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலே, கூட்டாக நாங்கள் தேர்தல் வேலை பார்த்தபோது கிடைத்தது. அரசியலிலே கணக்குப் பார்த்துச் செலவழிப்பதோ, கணக்கு எழுதுவதோ கிடையாது. ஆனால், நண்பர் வீரபாகு அவர்கள், வியாபாரியாக இருக்கின்ற காரணத்தினால் அவர் கணக்கு எழுதி அரசியல் நடத்துவதை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி இருக்கிறது என்று சொல்வதற்கு யாராவது ஒரு அஸ்திவாரம் போட்டு, அதற்குக் கிளைகளை உருவாக்கிக் கொடி ஏற்றிய மகானுபாவர் ஒருவர் உண்டென்று சொன்னால், அது வீரபாகு அவர்களைத் தவிர யாரும் கிடையாது! அதற்கு முன்னாலே அப்படி ஒரு தலைவர் இருந்ததில்லை! அதற்குப் பின்னாலும் வந்த தலைவர் அவ்வளவுதான்! கருத்து வேறுபாடு காரணத்தினால் பிரிந்துவிட்ட காமராஜரானாலும் சரி, டில்லியிலிருக்கின்ற சுப்பிரமணியம் ஆனாலும் சரி, தமிழ் கூறும் நல்லுலகம் பெற்றெடுத்த சான்றோர்களானாலும் சரி, பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவ்வளவு பேரும் ஏ.பி.சி. அவர்களின் உயர்வே!

திரு. ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம் சொத்தைத் தானமாக வைத்து வ.உ.சி. கல்லூரியை ஆரம்பித்து வைத்த பாங்கை, கூட்டுறவுத் துறைக்கு அவர் ஆற்றியப் பணியை, தூத்துக்குடி நகரில் பல அறக்கட்டளைகளை அமைத்துப் பல காரியங்களை நிறைவேற்றியுள்ளதைப் பாராட்டாதவர்களே இல்லை.

திரு.ஏ.பி.சி.அவர்கள், இளமைமுதலே எந்தவிதமான கெட்ட சகவாசமும், இந்த வசதிபடைத்த பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு இல்லை என்பதைக் காணும்போது, எவ்வளவு ஒழுக்க உணர்ச்சியோடு, அரசியலில் நேர்மையான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார் என்பதைப் பார்க்கும்போது, சமுதாயத்தில் இவரைப்போல் ஒழுக்கத்தோடு இருக்கிறவர்கள்தாம் பல நற்காரியங்களைத் திட்டமிட்டுச் செயல்படுத்த முடியும் எனலாம். அன்றியும், பொதுமக்கள் இவருடைய நற்பணிக்காகக் கொடுக்கின்ற ஒவ்வொரு காசும், இவர் சொந்த வாழ்க்கைக்குப் போகாது என்பது இந்நகர மக்கள் மட்டுமல்ல, நாட்டு மக்களும் நன்கு அறிந்த ஒன்று.

நண்பர் வீரபாகு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற பெருமையில் முக்கால் பங்கு அவர் துணைவியாருக்கு

உரியதாகும். தாம் ஏற்றுக்கொண்ட வாழ்க்கைத் துணைவரோடு கொள்கையில் எவ்வித மாறுபாடோ, வேறுபாடோ காணாமல், 'அவர் வகுத்த திட்டங்கள், நல்ல திட்டங்களாகத்தான் இருக்கமுடியும்; அவர் சொல்லுகின்ற பாதை நல்ல பாதையாகத்தான் இருக்க முடியும், அவர் போகின்ற வழி அவருக்கு மட்டுமல்ல, நாட்டு மக்களுக்கும் நல்லதாகத்தான் இருக்கும்' என்று நம்பி வாழ்க்கைத் துணைவியாக இருந்த காரணத்தினால்தான், பெயரோடும் புகழோடும் நல்லபடியாக நாடுபோற்ற வாழமுடிகிறது'' என்று பாராட்டியுள்ளார்.

மனைத்தக்க மாண்புடைய பெருமகளை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்று, சமுதாயத்திற்கு நற்பணிகள் பலவற்றை ஆற்றி, மாறுபட்ட சிந்தனையுடையவர்களும் வியக்குமாறு ஏறுபோல் பீடுநடை போட்டவர் வீரபாகு என்பதைத் தெளிய முடிகிறது அல்லவா?

தமிழ்வேள் வீரபாகு!

சமுதாய நலனுக்குத் தன்னலம் துறந்து, அரும்பணியாற்றி வந்த ஏ.பி.சி.வீரபாகு அவர்களைத் தமிழ்ச் சமுதாயம் பெரிதும் மதித்தது. தம்மைப் பாராட்டிப் பட்டம் தரவேண்டும் என எண்ணாத வீரபாகு அவர்களைப் பாராட்டிப் பெருமைப்படுத்துவதன்மூலம் தம் நிலைஉயரும் எனக் கருதிய சான்றோர்களால் நடத்தப்பட்ட சில அமைப்புகள் அவரைப் பாராட்டிச் சில சிறப்புப் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தன.

ஒருநூற்றாண்டு ஏழுதமிழ்ப் புலவர்களால் திருப்பத்தூரில் நடத்தப்பட்டு வந்த தமிழ்ச் சங்கத்தின் சார்பாகக் குன்றக்குடி அடிகளார், வீரபாகு அவர்களுக்குத் 'தமிழ்வேள்' என்னும் பட்டத்தை வழங்கினார். அப்போது குன்றக்குடி அடிகளார், ''சிந்தனையைத் தூண்டி வளர்ப்பது மொழி! கருத்தை வளர்ப்பது மொழி! உணர்வுகளைச் சீராக்கி வளர்ப்பது மொழி! அஃதின்றேல், மனிதன் நிச்சயமாக வளர முடியாது! ஆக, எந்த நாகரிக வளர்ச்சிக்கும் நாயகமாக, அடித்தளமாக அமைவது மொழிதான்!

பழைய காலத்தில் மொழியை வெறும் மொழியாகப் பார்த்தது கிடையாது. இப்போது சிலர், 'தமிழ் வேறு, தமிழன் வேறு' என்று சொல்கிறார்கள். தமிழ் வேறு, தமிழன் சமயம் வேறு, நாகரிகம் வேறு என்று பிரிக்கிறார்கள். உலகத்தில் வேறு எந்த மொழியைப் பிரித்தாலும் பிரிக்கமுடியும், தமிழை அதனுடைய நாகரிகத்திலிருந்து பிரிக்கவே முடியாது. அதனால்தான் சேக்கிழார் 'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துணை வெல்ல' என்று பாடினார்.

தமிழகத்தின் சமயம் வென்றதை, தமிழனுடைய நெறி வென்றதை, தமிழகத்தினுடைய பண்பாடு வென்றதை 'சைவம் வென்றது' என்று சொல்லாமல், 'சமயம் வென்றது' என்று சொல்லாமல், 'தமிழ் வழக்கு வென்றது' என்று சொன்னார்.

தமிழ் என்று சொன்னாலே அதற்குப் 'பண்பாடு' என்று பெயர். எனவே, வீரபாகு அவர்கள் தமிழ் உணர்ச்சி உடையவர் என்பது நாட்டுக்குத் தெரியாது. காரணம்? தமிழுக்காக அவர் எந்தக் கிளர்ச்சியும் செய்ததில்லை! காரணம், அவருடைய நோக்கம் வேறு! தமிழை வளர்ப்பது என்பதைத் தவிர, தமிழுக்குக் கிளர்ச்சி செய்யவேண்டும்

என்பது அவருடைய நோக்கமல்ல. வீரபாகு நல்ல தமிழ் பேசுவார்! தமிழ் இலக்கியத்திலே ஈடுபாடு! நல்ல தமிழ் இலக்கியப் பயிற்சி! இன்னும் தெளிவாகச் சொன்னால், நாயன்மார்கள் இயற்றிய திருமுறைகளில் நிறைந்த ஈடுபாடு. அந்த ஈடுபாடே அவர் தமிழைப் பேசுவதற்குப் பதிலாக, எழுதுவதற்குப் பதிலாக, அந்தத் துறையில் வாழ்ந்து காட்டவேண்டும் என்னும் வேணவா கொள்ளச் செய்தது" என்று பாராட்டினார்.

இதன் வாயிலாக நாட்டின்மீதும் மக்களின்மீதும் மட்டும் அல்லாமல், வீரபாகு அவர்கள் தம் தாய் மொழியின்மீதும் கொண்டிருந்த பற்றுதலை நாம் அறிய முடிகிறது. வெளிப்பார்வைக்கு அரசியல்வாதி யாகவும், சமூகத் தொண்டராகவும் மட்டுமே கண்டு வந்த மக்கள், குன்றக்குடி அடிகளாரின் மொழிகளைக் கேட்டபின், வீரபாகு அவர்கள் சிறந்த தமிழ்ப்பற்று மிக்கவர்; ஆரவாரம் இல்லாத தமிழன்பர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது அல்லவா?

அறநெறி அண்ணல் வீரபாகு!

அறநெறி வளர்ந்தால்தான் சமுதாயம் மேம்பாடு அடைய முடியும். மொழியோடு இணைந்து வளருகிற விரிந்த பண்பாடே, அறநெறி எனப்படுகிறது. உயர்ந்த அறநெறிதான் உலகத்திற்கு உயிராக இருக்கிறது. இதுவரையில் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், அறிந்தோ அறியாமலோ, இன்னமும் சில அறநெறியாளர்கள் நாட்டில் இருப்பதுதான் காரணம் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

வீரபாகு அவர்கள் அந்த உயர்ந்த அறநெறியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற உணர்வுடையவர். வீரபாகு அவர்கள் யாரோடும் கடிந்து பேச மாட்டார்! கருத்து வேறுபாடு உடையவர்களிடம்கூடக் கண்ணியமாக இருப்பார். உயரிய பண்பாட்டின் வழியாக வளர்ந்துவந்த காரணத்தால், மலரினும் மெல்லியதாக அறிநெறியைப் போற்றிப் பாதுகாத்துச் சிறப்புற்றார். இந்தக் காரணங்களால் தூத்துக்குடி நகர 'சைவ சித்தாந்த சபை' வீரபாகு அவர்களுக்கு, 'அறநெறி அண்ணல்' என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

சிவநெறிச் செல்வர் வீரபாகு!

ஏ.பி.சி. வீரபாகு அவர்கள், பல்வேறு கோயில்களில் விழாக்களை நடத்தியதோடு, நாள்தோறும் இறைவழிபாட்டைச் செய்வதிலும் முன்நின்றார். சைவக்குடும்பத்தில் பிறந்து, சிவநெறி தவறாது வழிபாடியற்றிச் சிவநெறி தழைக்கத் தம்மாலான பணிகளைச் செய்து வந்தார். இதையுணர்ந்த குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினத்தின் சார்பில், 'சிவநெறிச் செல்வர்' என்றும் சிறப்புப் பெயரை அளித்துப் பெருமைப்படுத்தினார்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம் உழைப்பில் ஈட்டிய பொருளைக் கொண்டு எண்ணற்ற அறச்செயல்களைச் செய்தார். உழைக்கும் வர்க்கத்திற்குத் துணைநின்று நல்வழி காட்டி ஊக்கப் படுத்தினார். ஏழை எளிய மக்களும் வாழ்க்கையில் முன்னேற வழிகோலினார். அருள் செல்வத்தைச் செல்வத்துள் சிறந்த செல்வமாகப் போற்றினார்; 'பொருள் இலார்க்கு இவ்வுலகில் நல்வாழ்வு இல்லை' என்பதை உணர்ந்து, அனைவரும் தொழில்

செய்து பொருளீட்டி வாழ்வில் உயர நல்வழி காட்டினார்.

சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் சாதி, இன, மத வேறுபாடு கருதாமல் இயன்ற வகையில் எல்லாம், அவர்கள் உயர்வு பெற உதவினார்; தம்மோடு ஒத்த மக்களினத்தின் இயல்பறிந்து, தனிமனித ஒழுக்கத்தைப் பாதுகாத்து, பிறரும் உயர்வுபெற உதவிகளைச் செய்துவந்தார்.

சுருங்கச் சொன்னால், ஊருணி நீர் நிறைந்தது போலவும், பயன்மரம் உள்ளூர் பழுத்ததுபோலவும், மருந்தாகித் தப்பா மரம் போலவும் வாழ்ந்தார்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் ஒழுக்கம், செயல்திறன், மனோதைரியம், தமக்கே உரித்தான தனிச்செயல் பாட்டுமுறை, பின் நிகழ்வை முன்பே அறியும் தீர்க்க தரிசனம் முதலான பண்புகளை எல்லாம் நோக்கும்போது, வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் கீதாஞ்சலியில் இடம் பெற்றுள்ள,

"எங்கே மனம்
அச்சமின்றி விளங்குகின்றதோ,
தலைநிமிர்ந்து நிற்கின்றதோ,
எங்கே வாய்ச் சொற்கள்
உண்மையின் அடித்தளத்திலிருந்து
வருகின்றதோ,
எங்கே செம்மை நிறைவை நோக்கித்
தளரா முயற்சி தன் கைகளை
நீட்டுகின்றதோ,
எங்கே அறிவெனும் தெளிநீர்ஓடை
உயிரற்ற பழக்கமெனும் பழங்காட்டுப்
பாலை மணலில் போய்ச்
சுவறிவிடவில்லையோ,
எங்கே எண்ணமும் செயலும்
மென்மேலும் பரந்து விரியும்வண்ணம்
என் மனத்தை
நீ இட்டுச் செல்கிறாயோ,
அங்கே அந்தச் சுதந்திர இடத்தில்
என் தந்தையே!
எமது நாடு விழித்து எழுவதாக!"

என்னும் பாடலே நினைவுக்கு வருகிறது.

வள்ளுவம் போற்ற வாழ்ந்தோர்!

'தோன்றின் புகழொடு தோன்றுக' என்னும் பொய்யாமொழிக்கு ஏற்ப தமிழ்நாட்டில் தோன்றியவர் ஏ.பி.சி. வீரபாகு அவர்கள். நல்லாற்றான் நாடி, அருள்சேர்ந்த நெஞ்சினராய், புகழ்பட வாழ்ந்து, தாம் பிறந்த குடிக்குப் பெருமைசேர்த்து, காலப்போக்கில் காலன் கைப்பட்டாலும் அழியாப் பெயரோடும் புகழோடும் இருந்துகொண்டுதான் இருக்கின்றார்.

இம்மண்ணில், கூட்டுறவு இயக்கம் உள்ளளவும், தூத்துக்குடியில் வ.உ.சி. கல்லூரி முதலான கல்வி நிலையங்கள் இருக்கும் வரையும் ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் பெயரும் புகழும் நிலைத்திருக்கும்.

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

- குறள் : 234


"நில உலகில் நெடுங்காலம் நிலைத்து நிற்கவல்ல புகழைச் செய்தால், வானுலகமானது, அவ்வாறு புகழ் செய்தாரைப் போற்றுமே அல்லாமல், தேவரைப் போற்றாது'' என்னும் பொருளமைந்த குறளை, ஏ.பி.சி. வீரபாகு அவர்களைப்போன்ற பண்புடையவர்கள் தமிழகத்தில் தோன்றுவார்கள், தோன்றவேண்டும் என்பதற்காகவே பல நூறு ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த வள்ளுவர் எழுதினரோ!?

பொதுப் பணியில்...





1957ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற்ற ஏ.பி.சி.வீரபாகு, வெற்றி களிப்பில் வீதி உலா வரும் காட்சி



ஸ்ரீவைகுண்டம் பகுதியில் புதிய குடிநீர் இணைப்பைத் திறந்து வைக்கிறார் ஏ.பி.சி.வீரபாகு, எம்.எல்.ஏ.






திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுக்கு
ஏ.பி.சி.வீரபாகு வரவேற்பு அளிக்கிறார்



ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரி விழாவில் அருள்திரு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுக்கு வரவேற்புரை ஆற்றுகிறார் ஏ.பி.சி.வீரபாகு



அமெரிக்காவின் கப்பா ஹவாய் சைவ சித்தாந்த கோயிலின் தவத்திரு சைவ சுப்ரமணிய சுவாமிகளுடன் ஏ.பி.சி.வீரபாகு



ஏ.பி.சி.வீரபாகுவின் மணிவிழாவில்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்



கீ.வா.ஜகன்நாதன் அவர்களுடன்
ஏ.பி.சி.வீரபாகு



ஸ்ரீ அனந்தராம தீட்ஷிதர் மற்றும்
அவருடைய துணைவியாருடன்
ஏ.பி.சி.வீரபாகு மற்றும் அவருடைய
துணைவியாரும். அருகே நின்று
கொண்டிருப்பவர் மகள் உலகம்மாள்



சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீட்ஷிதர்
சுவாமிகளுடன் ஏ.பி.சி.வீரபாகு



ஏ.பி.சி.வீரபாகு ஆற்றிய சட்டமன்ற உரைத் தொகுப்பு

திரு. ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதி சட்டமன்ற வேட்பாளராக 1957இல் முதன்முறையாகப் போட்டியிட்டார். இந்தத் தேர்தல், விடுதலைபெற்ற இந்தியாவின் இரண்டாவது பொதுத்தேர்தலாகும். திரு.ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் இரண்டுமுறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தென் தமிழ்நாட்டின் தொகுதிகளுள் ஒன்றான திருவைகுண்டத்திற்குத் தனித்தன்மைகள் பல உண்டு. கிட்டத்தட்ட தமிழ்நாட்டின் தென்கோடியில் அமைந்துவிட்டதாலும், முக்கிய நெடுஞ்சாலை, மற்றும் தொடர்வண்டிபாதைகளைவிட்டு விலகி இருப்பதாலும், ஆட்சியாளரின் கவனத்திற்கும், நிர்வாகத்தின் அக்கறைக்கும் அப்பாற்பட்டே திருவைகுண்டம் இருந்திருக்கிறது.

1951ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, திருவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியின் மக்கள்தொகை 3,01,859; 1961இல் 3,31,020. ஏறத்தாழ 600சதுரகிலோமீட்டர்பரப்பளவுகொண்ட திருவைகுண்டத்தில், இன்றுவரை ஒரு நகரம்கூட உருவாகவில்லை. கிராமப்புறங்கள் மட்டுமேகொண்ட வெகுசில சட்டமன்றத் தொகுதிகளில் திருவைகுண்டம்ஒன்று. இங்கு விவசாயம் மட்டுமே முக்கியத் தொழில்.

1875இல் கட்டி முடிக்கப்பட்ட திருவைகுண்டம் அணைக்கட்டைக் கொண்டு, கிட்டதட்ட 22,000 ஹெக்டர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாயம்தான் முக்கியத்தொழில். அருகிலுள்ள தூத்துக்குடியில் துறைமுகம் அமைந்துவிட்டதால் எல்லாத் தொழில் முயற்சிகளும் தூத்துக்குடியை மையமாக்கிக் கொண்டன.

திருவைகுண்டத்தின் மற்றொரு சிறப்பம்சம், இங்குக் காணப்படும் சமூக அமைப்பு. பெரும்பான்மையினரான இந்துக்களைத் தவிர, கணிசமான அளவு கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் வாழ்கின்றனர். நாடார், தேவர், வேளாளர், கைக்கோளர், பரதவர், தாழ்த்தப்பட்டவர் என அனைத்துச் சமூகத்தினரும் வாழும் தொகுதி, திருவைகுண்டம்.

இத்தகைய தொகுதியிலிருந்து அடுத்தடுத்து, இரண்டுமுறை சட்டமன்றத்திற்குத் திரு. ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது அவரின் சிறப்பு. அனைத்துச் சமயத்தவராலும், அனைத்துச் சமூகத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் திரு. ஏ.பி.சி. வீரபாகு ஆவார்.

எளிய மொழியில் வல்லவர்!

சட்டமன்றத்தில் உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில் திரு. ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் ஆற்றிய உரைகள், அவருடைய பல்துறை சார்ந்த அறிவின் சதுரப்பாட்டையும், தொலைநோக்குப் பார்வையையும், விவசாயம், கல்வி மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த அவருடைய கரிசனத்தையும் வெளிப்படுத்துகின்றன. சட்டப்பேரவை விவாதங்களில் கலந்து கொண்டபோதும், ஆளுநர் உரைமீதான விவாதங்களிலும், மானியக்கோரிக்கை உரைகளிலும் தம்முடைய கருத்துக்களை வலுவாக, எளிமையாக, எவரும் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் எடுத்துரைப்பதில், வீரபாகு அவர்களின் உரையாற்றல் சிறப்பாகத் திகழ்ந்தது

விவாதங்களில் மக்கள் பிரச்சினைகளை முன்வைக்கும்போது, தம்முடைய பேச்சை வெறும் கேள்வியாகவோ, பிரச்சினையாகவோ மட்டும் எழுப்பாமல், அவை குறித்த தம்முடைய கருத்துக்களையும், சாத்தியமான தீர்வுகளையும் முன்வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்பதை அவரது உரைகளால் அறிய முடிகிறது.

அவற்றைப்போல், பல பிரச்சினைகளை, தொகுதிக்குரிய பிரச்சினைகளாகப் பார்க்காமல், அவற்றை இந்திய நாட்டின், பிற மாநிலங்களின், பிற பகுதிகளில் நிலவும் சூழல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தார். இதனால், எவ்வகை தீர்வுகள் பொதுவானவை, எவை தனித்தன்மை கொண்டவை என்பதில் தெளிவாக இருந்தார்.

இரண்டுமுறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியபோது, இவர் சார்ந்திருந்த காங்கிரஸ், இம்மாநிலத்திலும் நாட்டின் மைய அரசிலும் ஆளும் கட்சியாக இருந்தது. தாம் சார்ந்திருந்த கட்சியாக இருப்பினும், பல சூழல்களில், ஆளும் அரசைக் கண்டிப்பதிலும், தவறுகளை, குறைகளைச் சுட்டிக்காட்டுவதிலும், திரு. ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தவறவில்லை. மிகக் கண்ணியமாக, சுற்றி வளைக்காமல், அவ்வப்போது இதமான நகைச்சுவை இழையோடும் நடையில் பேசினார். இந்தச் சட்டமன்ற உரைகளுக்குப் பின்புலத்தில் இருந்த விரிவான தயாரிப்பும், ஆழமான சிந்தனையும், சமூக அக்கறையும் வியப்புக்குரியவை.

வரி விதிப்பில் கவனம்!

1957ஆம் ஆண்டு ஜூலை 8 அன்று, விற்பனை வரிவிலக்கு குறித்துப் பேசிய உரை, இந்தியாவின் பிற மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் விற்பனை வரி விதிப்புமுறை, தமிழ்நாட்டிற்குப் பொருந்தாது என்பதைக் கூறிவிட்டு, வரிகள் நிரந்தரமாக இருக்காது என்பதையும் விளக்குகிறார். தானியங்களைக் கொண்டு சமைக்கப்பட்டு விற்பனைக்கு வரும் உணவுக்கு (Cooked food) எவ்வளவு வரி விதிக்கலாம் என்ற கேள்வியை எழுப்புகிறார்.

அதேபோல், இந்த விற்பனை வரி கிராமப்புற வர்த்தகங்களை எப்படிப் பாதிக்கும் என்பதைக் குறிப்பிட்டு, கிராமப்புறங்களுக்கு வரிவிலக்கு தரக் கூடாதா என்று கோரிக்கை வைக்கிறார். அதேசமயம், திரைப்படம் சார்ந்த தொழில்களுக்கு அதிக வரி விதிக்கலாம் என்றும் வாதிடுகிறார்.

தமிழக சட்டமன்ற வரலாற்றில், ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் ஆற்றிய உரை, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. 'விவசாய நில உச்சவரம்பு சட்டம் 1961' (Agricultural Land Ceiling Act 1961) மசோதவாகத் தாக்கல் செய்யப்பட்டு, அதன்மீது நடந்த விவாதத்தில் ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரை உன்னதமானது.

இந்திய அரசியல் சட்ட ஷரத்து 39க்கு உட்பட்டு, இந்த விவசாய நில உச்சவரம்பு சட்டம் மசோதாவாகச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்திற்கு, அதிகபட்சமாக 30 ஏக்கர் நிலம் என்றும், கூடுதலாக இருக்கும் ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் 5 ஏக்கர் நிலம் என்றும், பெண்களுக்குச் சீதனமாக வழங்கப்படும் நிலம் இதில் சேராதென்றும் இம்மசோதா வரையறுத்துள்ளதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருவைகுண்டம், விவசாயப் பணிபுரியும் மக்கள் தொகையை மிகுதியாகக் கொண்ட தொகுதி. திருவைகுண்டம் அணைக்கட்டைக் கொண்டு, 22,000 ஹெக்டேரும், ஆருங்குளம், பேய்க்குளம், ஆறுமுகமங்கலம் ஆகிய குளங்களைக்கொண்டு 8,000 ஹெக்டேர் நிலமும் அந்நாளில் சாகுபடி செய்யப்பட்டது. எனவே, விவசாயம் குறித்தும், விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்தும் ஏ.பி.சி.வீரபாகு அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஏற்கெனவே, 1957ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் தேதியன்று, வருவாய்துறை மானியக் கோரிக்கை உரையில், ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்தில் உள்ள குறைகளை நீக்க வேண்டுமென்று வலியுறுத்திப் பேசியதையும் இங்கே கருத்தில் கொள்ளவேண்டும்.

வீரபாகுவின் சிறப்பான உரை!

கால்நடை மேய்ச்சல் நிலம் (Cattle fodder land) குறித்து ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் இந்த உரையில் குறிப்பிட்டது, இதன் மற்றொரு சிறப்பம்சமாகும். ஐரோப்பிய நாடுகளில், விவசாய நிலத்தை மூன்றாகப் பிரித்து ஒன்றைப் பயிரிடவும், அடுத்ததைத் தரிசாகவும், மூன்றாவதை மேய்ச்சல் நிலமாகவும் (Cattle fodder land) பயன்படுத்துவார்கள். இம்மூன்று பிரிவுகளும் பயிரிடவும், கால்நடை மேய்ச்சலுக்கும் சுழற்சிமுறையில் பயன்படுத்தப்படும். ஐரோப்பாவில் நிலப்பரப்பு அதிகம். எனவே, இம்முறையில் சிரமங்கள் இருப்பதில்லை. மாறாக, இந்தியாவில் மக்கள்தொகை நெருக்கடியால் மேய்ச்சல் நிலத்திற்கு அதிக வாய்ப்பில்லை. எனவே, நில உச்சவரம்புசட்டத்தின்மூலம் பெறப்படும் நிலத்தில் மூன்றில் ஒரு பகுதியை, மேய்ச்சல் நிலமாக அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்.

அன்றைய நிதியமைச்சர் சமர்பித்த 1961ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின்மீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் ஆற்றிய இந்த உரையை, 8 ஜூலை 1957 அன்று விற்பனை வரி குறித்து, அவர் கூறிய கருத்துக்களின் தொடர்ச்சியாகப் பார்க்கவேண்டும். "உணவுதானியங்கள் மீது விதிக்கப்படும் வரி குறைக்கப்பட வேண்டும்; அல்லது, நீக்கப்படவேண்டும்" என்று தொடர்ந்து வலியுறுத்தியுள்ளமை சிந்திக்கத்தக்கதாகும்.

அடுத்து, இந்த உரையில், அரசு உருவாக்கும் வளர்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்து, தொழிற்சாலைகளின் வரவால் நிலத்தின் விலை பலமடங்கு உயர்கிறது. இதனால், தனிநபர் பலர் நிலத்தை விற்று ஏராளமான பொருள் ஈட்டுகின்றனர். ஆனால், இத்தகைய விற்பனையில் அரசுக்கு எந்த வருவாயும் கிட்டுவதில்லை. எனவே, அத்தகைய வருவாய்க்கு (Tax on Unearned Income) விதிக்கவேண்டும். அதேபோல், விலை உயரும் என்ற எண்ணத்தில் நிலத்தில் முதலீடு செய்து, அதைப்பின்னர்விற்று லாபம் ஈட்டும்போது, அதற்கு விதிக்கப்படும் Tax on Capital Goods வரியை இந்த மாநிலத்திற்கு கொண்டுவர வேண்டுமென்று வாதிட்டு அரசின் வருவாயைப் பெருக்குவதற்குரிய நெறிமுறைகளைக் கூறி நிலைநாட்ட முயன்றுள்ளார்.

அகல ரயில் பாதை அமைக்க வலியுறுத்தல்!

இவற்றுடன், இவ்வுரையில் இரண்டு விஷயங்களைக் கவனிக்கவேண்டும். ஒன்று, 1961லேயே சென்னை-தூத்துக்குடி அகல தொடர்வண்டிபாதையாக மாற்றவேண்டுமென்றும், சென்னை - தூத்துக்குடி தொடர்வண்டிக்கு இரட்டைத்தடம் (Double line) அமைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார். இவை இரண்டுமே தமிழக அரசின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டவை என்பதையும், இங்கே கவனத்தில் கொள்வது அவசியம்.

1961இல் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் வலியுறுத்திய அகல தொடர்வண்டி பாதை 1992ஆம் ஆண்டுதான் நிறைவேற்றப்பட்டது. அவர் முன்வைத்த இருவழிப்பாதை 1995ஆம் ஆண்டுதான் முடிவடைந்தது.

மிகநீண்ட விரிவான இந்த உரையில், நிலக்கரிக்குப் பொது விலையின் (Pool Price) அவசியத்தை வலியுறுத்துகிறார். தொழில் வளர்ச்சியில், நிலக்கரியின் அவசியத்தை வலியுறுத்துகிறார். தொழில் வளாச்சியில், நிலக்கரியின் அவசியத்தையும் பயன்பாட்டையும் கோடிட்டுக்காட்டி, நிலக்கரி விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்கிறார்.

1961இல் ஏ.சி.பி.வீரபாகு அவர்கள் தம் உரையில் குறிப்பிட்ட பொது விலை (Pool Price) 2012 நவம்பர், 7 அன்று மைய அரசின் திட்டக்குழுத் துணைத்தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா வலியுறுத்தியுள்ளதைப் பார்க்கும்போது, ஏ.பி.சி.வீரபாகுவின் உரையில் காணப்படும் ஒன்றிணைந்த வளர்ச்சிக் கண்ணோட்டம் (Integrated development perspective) புலப்படுகிறது எனலாம்.

1963-1964ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் ஆற்றிய நீண்ட உரையில் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் இரண்டு. ஒன்று, பெருகி வளர்ந்த தொழில் முயற்சிகளால் கிராமங்களைவிட்டு மக்கள் நகர்புறம் நோக்கி நகரத் தொடங்கிவிட்டதால், விவசாயம் சந்திக்கப் போகும், விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறை. இதனால் விவசாயம் நலிவடையும் ஆபத்து. இந்த இரண்டு சிக்கல்களைத் தீர்க்க ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் முன்வைத்துள்ள கூட்டுறவு விவசாயமுறையின் தேவை, இன்றைய நடைமுறைக்கு அவசியமாகியுள்ளதைத் தெளிவுபடுத்துகிறது.

1964இல் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் முன்னறிவித்த விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறை, இன்று நிதர்சனமாகி விட்டது. ஆனால், அவர் இதற்குத்தீர்வாக முன்மொழிந்த கூட்டுறவு விவசாய முறையை நாம் கவனிக்கத் தவறி விட்டோம். எனினும், இன்றும் காலம் கடந்துவிடவில்லை. அரசோ, சில தனிநபர்கள் கூட்டாகவோ இதை முயற்சி

செய்வது நம் நாட்டின் எதிர்காலப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கலாம்.

அடுத்து, தூத்துக்குடி விமான நிலையம். தூத்துக்குடிக்கு அருகேயே அமையவேண்டுமென்ற வலியுறுத்தல்! கயத்தாறில் பயன்பாடற்று இருந்த சிறிய விமான ஓடுபாதையைச் செப்பனிட்டு, அதை விமான நிலையமாக மாற்றுவது நீண்டகால வளர்ச்சிக்கு ஒத்துவராது என்பதைத் தெளிவாகத் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபாசனத் திட்ட உரையில் சீரிய வாக்குவாதம்!

அதேபோல், சிறுபாசனத் திட்டங்களைப் பஞ்சாயத்துக்களிடம் கொடுப்பதை எதிர்க்கிறார். போதிய நிதி ஆதாரமின்றி, இவற்றை உள்ளாட்சி அமைப்புக்களால் பராமரிக்க முடியாதென்பதை ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம் வாதத்தில் தெளிவாக விளக்கியுள்ளமை, அவரது தீர்க்க தரிசனமாக அமைந்துள்ளமை கண்கூடு. ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் சட்டமன்ற உரைகளில், சில முக்கியமான பொது அம்சங்கள் உள்ளன. பெரும்பாலும் அவ்வுரைகள் கேள்விகளாகவும், குறுக்கீடுகளாகவும் அல்லாமல், தெளிவைத் தரும் விளக்க உரைகளாக, அரசுக்கு ஆலோசனை வழங்கும் உரைகளாக அமைந்துள்ளன எனலாம்.

அரசின் வரவு-செலவுத் திட்ட உரை, மானியக்கோரிக்கை உரை, நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு மறுப்புரை ஆகிய முக்கியமான சந்தர்ப்பங்களில்தான் ஏ.பி.சி.வீரபாகு அவர்களால் உரைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவர்தம் நீண்ட உரைகளின் சிறப்புகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.


- விளக்கமளிக்கும் வகையில், ஆலோசனை வழங்கும் முறையில் உரைகள் ஆற்றப்பெற்றுள்ளதால், அவற்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளின் அனைத்து அம்சங்களும், விரிவாகவும் ஆழ்ந்தகன்று நுணுக்கமாகவும் (Comprehensive and in-depth) ஆய்வுசெய்து விளக்கம் பெற்றுள்ளன.
- தேவையான இடங்களில், நாட்டின் பிறபகுதிகளிலும், சில சந்தர்ப்பங்களில் இங்கிலாந்து, சீனா, ரஷ்யா முதலான நாடுகளிலும் நிலவும் நிலைகளுடன் தமிழகத்தின் சூழலை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் ஆய்வுசெய்யும் முறையில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.
- தேவைக்கு ஏற்ப, ஆனால், மிகப் பொருத்தமான இடங்களில் ஆங்கிலப் பதங்களும் (Terminollogies) பழமொழிகளும் லாவகமாகவும் சரளமாகவும் பயன்படுத்தப் பெற்றுள்ளன.
- மிகக் கண்ணியமாக அமைந்துள்ள உரைகளில் எதிர்கட்சிகளின் குற்றசாட்டுகளை மறுக்கும் தருணங்களில் கூடக் கடுஞ்சொற்களோ, தனிநபர் விமர்சனங்களோ காணப்படவில்லை.
- தமது உரைகளில் தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஆலோசனைகளும் விமர்சனங்களும் முன்வைக்கப்படும் வகையில் பேச எடுத்துக்கொண்ட துறையின் அனைத்து அம்சங்களும் விவாதிக்கப் பெற்றுள்ளன.
- திட்டங்கள் குறித்த விவாத உரைகளில், திட்டத்தின் உடனடி பலனும், நீண்டகால விளைவும் மிகத் துல்லியமாகக் கணிக்கப்பட்டு விளக்கமாக முன்வைக்கப் பெற்றுள்ளன.

❖ தம் தொகுதியின், தம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளின் வளர்ச்சிக்கான திட்டங்களோடு, மாநிலத்தின், நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்த கருத்துகளும் ஆலோசனைகளும் அவரது உரைகளில் பரவலாக இடம்பெற்றுள்ளமை, அதனை அறிந்தவர்களுக்கு அவை வழிகாட்டுதலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் உரைகள் தொடாத துறைகளே இல்லை! விவசாயம், தொழில் வளர்ச்சி, கல்வி, மின் உற்பத்தி, நீர்ப்பாசனத் திட்டங்கள், சுகாதாரம், கூட்டுறவு, போக்குவரத்து என்று அனைத்துத் துறைகள் குறித்தும் தமக்கு இருந்த ஆழமான புரிதலை, அக்கறையை தம் உரைகளில் வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

அனைத்திற்கும் மேலாக, மிகக் கவனமாகத் தேவையான தகவல்களைப் புள்ளிவிவரங்களின் துணைகொண்டு தயாரிக்கப்பட்ட ஏ.சி.பி.வீரபாகு அவர்களின் சட்டமன்ற உரைகள், எக்காலத்திற்கும் சிறந்த முன்னுதாரணங்களாக அமைந்துள்ளன எனக் கூறுவது மிகையான செய்தியாகாது. 'ஒட்டுமொத்த வளர்ச்சி' என்னும் சீரிய எண்ணத்துடன் அவை நிகழ்த்தப்பட்டுள்ளன. 'உடனடி அரசியல் ஆதாயம்' என்கிற குறுகிய எண்ணத்தைத் தவிர்த்து, 'நீண்ட கால நலன்' என்னும் நோக்கத்தில் நிகழ்த்தப்பட்டுள்ளன.

அன்றைய ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும், தம் தொகுதியின், மாவட்டத்தின், மாநிலத்தின், நாட்டின் வளம் பெருக்குதலையும் வளர்ச்சியையும் மக்களின் நல்வாழ்வையும் மனத்துள் கொண்டு, தம் சுயநலனை முன்னிறுத்தாமல் அரசின் நிறைகளைப் பாராட்டியும் குறைகளைத் தயக்கமின்றிச் சுட்டிக்காட்டியும் உள்ளமையை ஏ.சி.பி.வீரபாகு அவர்களின் உரைகளை வாசிப்பவர் உணர்வர்.





விவசாயம் தொடர்பாக ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என, மனிதகுலத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாத தொழிலான விவசாயத்தைத் திருவள்ளுவர் சிறப்பித்துள்ளார்.

"உழுதுண்டு வாழ்வதற்கு
ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்பது ஔவையின் அமுதமொழி.

இவ்வகையில், உலகின் உயிர்நாடியாக விளங்கும். விவசாயம் குறித்த ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் அக்கறை அவருடைய உரைகளில் புலப்படுவதைக் காணமுடிகிறது. விவசாயத்தின் நலன் பற்றிப் பேசும்போது, அதனுடன் தொடர்புடைய, அதற்குத் துணைநிற்கும் பிற துறைகள் பற்றியும், அம்சங்கள் பற்றியும் விவாதிக்கிறார். எடுத்துக்காட்டாக, உணவு உற்பத்தியைப் பெருக்க, உர உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்பதை ரஷ்யா, சீனா முதலான நாடுகளைச் சுட்டிக்காட்டி வலியுறுத்தியுள்ளார்.

ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும், விவசாயத்தின்மீதும், விவசாயிகள்மீதும் விதிக்கப்படும் வரி

அதிகம் என்று கூறி, அத்தகைய வரி விதிப்பிற்குச் சட்டத்தில் இடமில்லை என்று எச்சரிக்கும்போது, விவசாயம் தொடர்புடைய சட்டங்களில் அவருக்கிருந்த தெளிவு வெளிப்படுகிறது.

திருவைகுண்டத்தில் இருந்து சட்டமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், விவசாயம் குறித்துப் பேசும்போது, தஞ்சாவூர்ப் பகுதி விவசாயம், சங்கரன்கோவில் புன்செய் சாகுபடி ஆகியவை குறித்தும் விவாதிக்கிறார். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும்போது, அவர்களது திருப்பிச் செலுத்தும் நிலை, விவசாயம் பொய்த்த காலத்தில் கடன்மீது விதிக்கப்படும் தண்டத்தொகை (Penal interest) ஆகியவற்றில் அரசு கடுமையாக நடந்துகொள்ளக் கூடாதென்பதையும் கவனமாக இருக்கவேண்டுமென்பதையும் வலியுறுத்துகிறார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில்களை அடிப்படையாகக்கொண்ட நாடுகளில் காணப்படும் விவசாய வளர்ச்சியைவிட, விவசாயத்தையே வாழ்வாதாரமாக நம்பி இருக்கும் மக்கள்தொகையைக் கொண்ட இந்தியாவில், விவசாயத்தின் நிலை கவலைக்குரியதாக இருப்பதை விளக்கி, விவசாய கடன் வசூலையும் நிறுத்திவைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார். 'உழுபவனுக்கு நிலம் சொந்தம்' என்பதை வெற்றுச்சட்டமாக வைத்திருக்காமல், நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம் என்பதையும் பரிந்துரைத்துள்ளார்.

அனைத்திற்கும் மேலாக, 1963 மார்ச், 2 அன்று ஆற்றிய உரையில், விவசாயத்தைக் கைவிட்டு மக்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டு (Shift of Population), நாளடைவில் விவசாய வேலைகளுக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாகிவிடுமென்று அன்று அவர் விடுத்த எச்சரிக்கை, இன்று நிஜமாகியுள்ளது.

இனி, ஏ.சி.பி.வீரபாகு அவர்களின் விவசாயம் குறித்த சட்டமன்ற உரைகளைக் காண்போம் :

A.P.C. MAHALAKSHMI COLLEGE FOR WOMEN
LIBRARY
TUTICORIN

1958 மார்ச் 28 அன்று, ஏ.பி.சி.வீரபாகு ஆற்றிய உரைப் பகுதி :

கனம் சபாநாயகர் அவர்களே! இந்த நாட்டில் நல்ல பொருளாதாரத்திற்கு ஜீவநாடியாக இருக்கும் விவசாயம் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். நம் 'பட்ஜெட்', 'விவசாய பட்ஜெட்' என்று சொன்னால் மிகையாகாது! விவசாய அபிவிருத்திக் கண்ணோட்டத்துடன்தான் இந்த ராஜ்யப் பொருளாதார 'பட்ஜெட்' அமைந்திருக்கிறது. ''நாட்டின் பொருளாதாரத் தாழ்வை நீக்குவதில், விவசாயத்துறையைப் பொருத்தவரையில், நாம் வெகுதூரம் முன்னேறியிருக்கிறோம் என்பது, இதர ராஜ்யங்களுடன் நம் ராஜ்யத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கண்கூடாகத் தெரிகிறது'' என்று அரசாங்கத்தார் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க நிலைமை!

விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பல நல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது மிகவும் வரவேற்கத்தக்கது. பொறுக்கு விதைப் பண்ணைகளையும், விவசாய மாதிரிப் பண்ணைகளையும், கால்நடைப் பண்ணைகளையும் அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால், இந்தச் சமயத்தில் நான் ஒரு விஷயத்தைச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. அதாவது, தொழில் பொருளாதாரத்தை நம்பி இருக்கும் நாடுகளில் உள்ள அளவுகூட நம் நாட்டில் விவசாய உற்பத்திப் பெருக்கம் ஏற்படவில்லை! இதற்குப் பெரிதும் காரணமாக இருப்பது,

கடன்வசதி குறைவுதான். விவசாயி களுக்குக்கடன் வசதிகள் மிகவும் தேவை யாக இருக்கின்றன. நீண்டகாலக் கடன், இடைக்காலக் கடன், அவ்வப்போது கொடுக்கப்படும்கடன்முதலியகடன்கள், அவர்களுக்கு மிகவும் அவசியம்.

இந்த நாட்டில் விவசாயிகள் கடன் பளுவால் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களுக்கு அதிக வட்டி வசூலிக்கப் படுகிறது. பலர், கடன் கொடுப்பதை ஆஸ்பத்தமாக வைத்துக்கொண்டு விவசாயிகளிடமிருந்து அவர்கள் உற்பத்தி செய்யும் விவசாயப் பண்டங்களை எடுத்துக்கொள்வதற்கு முன்கூட்டியே அவர்களிடம் 'காண்ட்ராக்ட்' செய்து கொண்டு விடுகிறார்கள்.

'மார்க்கெட்டிங் ஃபெஸிலிட்டீஸ்', 'கிரெடிட் ஃபெஸிலிட்டீஸ்' முதலிய வசதிகளை விவசாயிகளுக்குச் செய்து கொடுப்பதற்கு, எவ்வளவு நடவடிக்கைகள் எடுத்தாலும், அந்த நடவடிக்கைகள் இவ்வாறு 'காண்ட் ராக்ட்' எடுப்பவர்களுக்குப் பயன்படு கிறதேயொழிய, இவர்களிடமிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படவில்லை!

விவசாயிகளுக்குக் கடன் தொல்லைகள் இருந்துகொண்டே இருக்கின்றன. அவர்களுடைய பொருளாதாரநிலை உயரவே இல்லை. கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி நம் மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் எவ்வளவோ பேசுகின்றன. கூட்டுறவு இயக்கத்தை இவை ஆதரிக்கின்றன. கூட்டுறவுமுறை அரசாங்கத்தால்கட்டாய முறையாக ஆக்கப்படாததால், அது மக்களின் இயக்கமாகவே இருப்பதால், கூட்டுறவு இயக்கத்தின்மூலம்கிடைக்கும் கடன் வசதிகள், எட்டு சதவிகிதம்தான் என்று ரிசர்வ் பாங்கின் புள்ளிவிவரங் களிலிருந்து தெரிகிறது. பாக்கிக் கடன் வசதிகளை விவசாயிகள் தாங்களாகவே செய்துகொள்ளவேண்டியிருக்கிறது. அந்தப் பாக்கிக் கடன் வசதிகளை, விவசாயிகள் அவர்களாகவே தேடிக்கொள்ளவேண்டியிருப்பதால், குறைந்தகாலக் கடன்களுக்காகத் தங்கள் நிலங்களை அடமானம் வைத்தால், சர்க்கார் தன் சட்டங்களால் அவர்களைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் இன்று தங்கள் நிலங்களைப் பினாமியில் எழுதி வைத்துகூடக் கடன் வாங்க நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

அம்மாதிரி தங்களுடைய நிலங்களைக் கிரயம் எழுதி வைத்துக் கடன்வசதிபெறவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். கிராம மக்கள், நம்பிக்கையில் குறைந்துவிடவில்லை. நாணயத்திலும் குறைந்துவிடவில்லை. அப்படிக் குறைந்து விட்டால் நிலத்தைக் கிரயம் எழுதிக்கொடுத்தாலும்கூட, மீண்டும் நிலத்தை ஒருவன் எடுத்துக் கொள்ளமாட்டான். ஆகையால், அந்த முறையில் கடன் பெறவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, விரிவானமுறையில், எந்தெந்த முறையில் எல்லாம் கடன்வசதிகள் செய்ய முடியுமோ, அதை உடனடியாகச் செய்ய வேண்டும். குறிப்பாக, விவசாயத்திற்கு வேண்டிய கடன்வசதிகள் செய்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கின்றேன்.

இரவு 10.30 மணிக்கு ஆற்றிய உரை :

ஏற்கெனவே, ஒரு விவசாயக் கல்லூரி இந்த மாகாணத்தில் நடந்து வருகிறது. விவசாயக் கல்லூரியின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால், இருக்கும் கல்லூரியில், சென்றவருஷத்தில்

எவ்வளவு 'சீட்' இருக்கிறதோ, அவ்வளவு 'சீட்டு'களுக்குத்தான் 'அப்ளிகேஷ'னும் வந்திருந்தது. மற்ற 'இஞ்ஜினியரிங்' கல்லூரி, வைத்தியக் கல்லூரி இவைகளில் தேவைக்கு அதிகமான மாணவர்கள் சேர முன்வந்திருப்பதுபோல் விவசாயக் கல்லூரியில் அவ்வளவு தேவைக்கு அதிகமாக மாணவர்கள் சேர முன்வரவில்லை. ஆனால், அதே நேரத்தில், நாட்டின் விவசாய முன்னேற்றத்திற்காக விவசாய 'டெமான்ஸ்ட்ரேடர்'கள் அதிகம் தேவையாக இருக்கிறார்கள். "போதுமான 'டெமான்ஸ்ட்ரேடர்'கள் இல்லாத காரணத்தினால், 'பிளாக் டெவலப்மெண்ட்' பிரதேசத்தைப் பெருவாரியான இடங்களுக்கு விஸ்தரிக்க முடியவில்லை" என்று சர்க்கார் தரப்பில் சொல்லப்பட்டது.

கனம் அங்கத்தினர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அம்மாதிரி, நமக்கு ஒருபக்கம் 'டெமான்ஸ்ட்ரேடர்'கள் அதிகமாகத் தேவை இருக்கிறது. ஆனால், அவர்களைத் தயாரிக்கும் கல்லூரியில் போதுமான மாணவர்கள் சேர முன்வருவது இல்லை என்ற காரணத்தால், இதைத் தீர்ப்பதற்குச் சர்க்கார் விவசாய 'டெமான்ஸ்ட்ரேடர்'களுக்குச் சற்று அதிகமான ஊதியத்தைக் கொடுக்க முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கது. ஆனால், இதைவிட இன்னும் கொஞ்சம் அதிகம் ஊதியம் கொடுக்க முன்வர வேண்டும்.

விவசாயக் கல்லூரியில் மாணவர்கள் சேருவதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, அதன்மூலமாக அதிகக் கல்லூரிகளை ஏற்படுத்தி, விவசாயத் துறையில் நல்ல நிபுணத்துவம் வாய்ந்த, திறமைமிக்க, நுணுக்கம் வாய்ந்த ஒரு பெரிய 'Personnel' தயாரிக்க வேண்டிய நிலையிலிருக்கிறோம். அப்பொழுதுதான், சிறந்தமுறையில் விவசாய அபிவிருத்தி செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1959 பிப்ரவரி 5 அன்று ஆற்றிய உரை :

கனம் உதவி சபாநாயகர் அவர்களே! மேன்மைதாங்கிய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி கூறும் முகத்தான், சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்! கவர்னர், அவர்களுடைய உரையில் "நெல்லை, இராமநாதபுரம், மதுரைப் பகுதிகளில் மழையின்மையால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கு நிவாரண மளிக்கும் காரியங்கள் செய்யப்படும்" என்று, மேலெழுந்தவாரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நெல்லைப் பகுதியைப் பொருத்தவரையில், தாமிரபரணி நதி தீரத்திலுள்ள இடங்களைத் தவிர, மற்ற இடங்களில், சுமார் ஏழு தாலுக்காக்களில் நஞ்சையோ, புஞ்சையோ எந்த விதமான விவசாயமும் நடக்கவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தாமிரபரணி பகுதியிலும் கூட, நஞ்சைப் பயிர்கள்தான், நல்ல விதமாக, காலாகாலத்தில் தண்ணீர் விடுகிற காரணத்தால், ஓரளவு காப்பாற்றப்படுகின்றன. ஆனால், அங்கே, இனி வருகிற கார் விவசாயம், எந்த விதமாக இருக்குமோ என்ற பயம் இருக்கிறது.

அதிலும், கனம் மின்சார அமைச்சர் அவர்கள், பாபநாசத்தில் தண்ணீரைத் தாராளமாகக் கொடுத்தால்தான், சுமார் 20,000 அல்லது 30,000 ஏக்கர் கார் விவசாயம் செய்யமுடியும். எனவே, அங்கே தாராளமாகத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். பாபநாசம் நீர்த்தேக்கத் தண்ணீரும் மணிமுத்தாறு நீர்த்தேக்கத் தண்ணீரும் நல்ல விதமாக உபயோகப்பட்டால்தான் சில பகுதிகளாவது காப்பாற்றப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

விலைவாசிகள் ஏறியிருப்பதால், விவசாயிகளை ஊக்குவிக்கவேண்டுமென்றும், விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றும் கவர்னர் அவர்களுடைய உரையில் கொள்கையளவில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். இந்த நோக்கங்களை ஈடேற்ற வேண்டுமென்றால், முதலில், இருக்கிற விவசாயிகளுக்கு எல்லா சௌகரியங்களும் செய்துகொடுக்கவேண்டும்.

திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கும் ஒரே பாசன வசதி, ஜீவநதி, தாமிரபரணிதான். அந்த நதியால், லட்சத்து இருபதாயிரம் ஏக்கர்கள் பாசன வசதி பெற்றிருக்கின்றன. அங்கே இருபோக நஞ்சையும் சரியாக விளைய வேண்டுமானால், பாசனவசதி பெற்றுள்ள நிலங்கள் எல்லாவற்றையும் நன்றாக ஆராய்வதுடன், அவைகளுக்குக் கொடுக்கக்கூடிய தண்ணீர் வசதிகளை எவ்வாறு பெருக்கமுடியும் என்றும், அந்தப் பகுதிகளிலுள்ள நிலங்களுக்குள்ள தண்டத் தீர்வைகளை எவ்வளவு குறைக்க முடியும் என்றும், இவைகளைச் செய்வதற்குச் சட்டத்திட்டங்களை எவ்வாறு மாற்றலாம் என்றும் ஆராய்ந்து பார்த்து, அந்தக் காரியங்களையெல்லாம் சர்க்கார் செய்யவேண்டும்.

ஆகவே, அவைகளைச் செய்வதற்குத் தனியாக ஒரு 'Special Section' ஏற்படுத்தி, அதை இந்தப் பஞ்சநேரத்தில் செய்து கொடுப்பதால், நிரந்தரமாகப் பாசன வசதிபெற்ற இடங்களுக்கு, நல்லபடியான தொரு ஏற்பாடாக அமையும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பருவமழை தவறிய காரணத்தினால், 'வரிவஜா' போன்ற சலுகைகளை அதிகமாகச் செய்துகொடுக்க வேண்டும்.

ஜில்லாக் 'கலெக்டர்', ''ஏதோ பஞ்சக்குரலை அதிகமாகப் போடுவதால், சலுகைகள் பெறமுடியாது. ஜனங்களிடம் பீதியை ஏற்படுத்தக்கூடிய முறையில் பேசவேண்டாம்'' என்று 'டெவலப்மெண்ட் கவுன்சிலிங்' கூட்டத்தில் சொன்னார்கள் உண்மையிலேயே, மக்களிடையே பீதியை ஏற்படுத்தவேண்டும், மக்களிடையே ஒரு பெரிய 'அஜிட்டேஷன்' ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் கிடையாது. அதிலும் குறிப்பாக, மக்கள் பிரதிநிதிகள் அப்படிச் செய்யவே மாட்டார்கள். ஆனால், உண்மை நிலைமை சர்க்காரிடம் அழுத்தந்திருத்தமாகத் திரும்பத்திரும்ப எவ்வளவு தூரம் சொல்ல முடியுமோ, அவ்வளவு தூரம் சொல்லவேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் கடமையாகும்.

எங்கள் ஜில்லா சரிஇல்லாத நிலையில், இப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள பஞ்சநிலையைப் பற்றி இப்பொழுது பூரணமாகத் தெரியவில்லை. ஆனால், இன்னும் ஓரிரண்டு மாதங்கள் கழித்தால், அதைப் பற்றிப் பூரணமாகத் தெரியும் நிலைமை ஏற்படும்.

கோவில்பட்டி, சங்கரன்கோவில் தாலுக்காக்களில் பருத்தி விளைச்சல் சரியாக ஏற்படவில்லை என்று சொன்னால், அங்குள்ள மக்கள் எப்படி வாழ்வது? தமிழ்நாட்டில் பெரியதொரு பஞ்சநிலை, இதுவரை கண்டிராத அளவு, இன்னும் இரண்டு மாதங்களில் திருநெல்வேலி பகுதிகளில் ஏற்படவிருக்கிறது என்பதை, நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். வரி வஜா, கடன் வசூல் செய்வது போன்றவைகளை நிறுத்தி வைப்பதுபோன்ற நடவடிக்கைகளைக் 'கலெக்டரின் ரிப்போர்ட்' வந்தபிறகு எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலை இல்லாமல், மக்கள் பிரதிநிதிகள் அதுபற்றி இங்கு அறிவிக்கும்போது, அதுபற்றிய நிலைமை என்னவென்று ஒரு 'ரிப்போர்ட்' கேட்கும்படியானநிலையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலப் பிரச்சினையைப் பொருத்தமட்டில், சீக்கிரமாகவே உச்சவரம்பு கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னோடியாக, இனாம்கிராமங்களைப் பற்றி யாரும் குறிப்பிடவில்லை. இம்மாகாணத்தில், 2,000-3,000 இனாம்கிராமங்கள் இருக்கின்றன. அங்கு மேல்வாரம், குடிவாரம் யார்யாருக்கு என்று நிர்ணயிப்பதில் கஷ்டமிருந்து கொண்டிருக்கிறது. மேல்வாரம், குடிவாரம் இவைகள் இனாம்தாரருக்குத் தான் சொந்தம். ஆகவே, அவர்களுக்கு எந்த விதத்தில் நஷ்ட ஈடுகொடுப்பது, எவ்வளவு காலத்திற்குள் கொடுப்பது என்பது பற்றி முடிவு எடுக்கப்படாமல், அது பத்து வருடங்களாக ஒத்திப்போடப் பட்டு வருகிறது.

அவ்விதம், மூவாயிரம் கிராமங்களில் உள்ளவர்களைப் பற்றி எண்ணிப் பார்க்காமல், நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுகிறோம் என்று சொல்வதில் சந்தேகம் எழத்தான் எழும். ஆகவே, இந்த இனாம்கிராமங்களில் மேல்வாரம், குடிவாரம்இவைகளைஎப்படிநிர்ணயிக்க வேண்டுமென்று சொன்னால், 1936ஆம் வருடச் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு, பத்து இருபது வருடமாகத் தீர்வை வசூல் செய்யக்கூடிய முறையில், நஷ்டஈடு கொடுத்து, சர்க்காருக்கு நஷ்டம் வராதமுறையில், இனாம் அபாலிஷனைக் கொண்டுவர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதுள்ள விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க, சர்க்கார் ஒரு உணவுக் கொள்கையைப் பின்பற்றுகிறார்கள். இரண்டு லட்சம் டன் உணவுப் பொருளைக் குறைந்த விலையில் வாங்கி, கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகம் செய்வதின்மூலம் விலைவாசியைக் கட்டுப்படுத்தலாம் என்ற ஆரம்ப நடவடிக்கையை ஏற்கெனவே எடுத்திருக் கிறார்கள். ஜனவரி 31ஆம் தேதியிட்ட சர்க்கார் உத்தரவு பிரகாரம், அது இப்பொழுதே அமலாக்கப்பட்டு வருகிறது என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

உண்மையில் இந்தத் தமிழகத்தில் பத்துலட்சம்டன்உபரியாக இருப்பதைக் கிராமப்பகுதிகள் நீங்கலாக, மற்ற பிரதேசங்களில் விநியோகம் செய்ய வேண்டிய 'க்வாண்டிட்டி' என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதில், இரண்டு லட்சம் டன்தான் நிர்ணயிக்கக் கூடிய விலையில், அதாவது, சர்க்கார் நிர்ணயிக்கும் விலைக்கு வாங்குவது என்ற கொள்கை கையாளப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு தூரம் வெற்றிபெறும் என்று இப்பொழுது சொல்லமுடியா விட்டாலும் கூட அதிலுள்ள குறைபாடுகளை நான் இப்பொழுதே எடுத்துக்காட்ட முடியும்.

இரண்டு லட்சம் டன்னுக்கு, விலைக் கட்டுப்பாடு அமலாகிறது. இரண்டு லட்சம் டன்னுக்கு விலைக் கட்டுப்பாடு 'ப்ரொக்யுவர்மெண்ட்' அமலாகிறது. பாக்கி எட்டு லட்சம் டன்னை இந்தக் கட்டுப்பாட்டு விலைக்கு விவசாயிகள், 'மில்'க்காரர்கள் எவ்வளவு தூரம் கொடுக்க முன்வருவார்கள்? தக்க காலத்தில் அவர்கள் கொடுப்பார்களா என்று பார்த்துத்தான் இதை நிர்ணயிக்க முடியும்.

அறுவடைக் காலத்தில் வாங்கப் பட்டால்தான் 'லீன்மன்த்ஸ்'ஸில் குறிப்பிட்ட விலைக்குக் கொடுக்க முடியும். ஆனால், 12 மாதமாக 'Spread Over'ஆகக் கிடைக்காவிட்டால், சர்க்கார் விலையைவிடக் கூடுதல் விலைக்குத்தான் கிடைக்கும் என்றிருந்தால், இப்பொழுது நாம் காண்கிற பரிகாரம் போதுமா?

ஆகவே, 'ப்ரைஸ் கண்ட்ரோல்'மூலம் ஒரு லட்சம் டன்னையும் சர்க்காரே வாங்கி, விலை நிர்ணயம் செய்தால், மீண்டும் 'ரேஷன்' முறை வரலாம்.

ஆகவேதான், இந்தத் தயக்கமான நிலையைக் கையாள வேண்டி வந்திருக்கிறது. ஆகவே, விலைவாசிக் கட்டுப்பாட்டை அமலாக்கவேண்டுமானால், சட்டரீதியான நடவடிக்கைகளைக் கையாண்டால்தான் விலையைக் கட்டுபடுத்த முடியும்.

தஞ்சாவூரில் உள்ள மில்கள், கொள்முதல் செய்வதையே நிறுத்தி விட்டார்கள். மேற்குறிப்பிட்ட அறிக்கை வந்தவுடன், அவர்கள் கொள்முதல் செய்வதை நிறுத்திவிட்டார்கள். அப்படியிருக்கும்போது அந்த 'மில்'களுக்குப்போய் எப்படி இரண்டு லட்சம் டன் கொள்முதல் செய்யமுடியும் என்ற பிரச்சினை எழுகிறது. பின்னர், பத்து 'மாண்ட்' விற்கிறவரையில் 'கண்ட்ரோல்' கிடையாது என்று சொல்லப்படுகிறது. பத்து 'மாண்ட்'வரை 'ரீட்டேல் ஸேல்ஸ்'க்கு 'ப்ரைஸ் கண்ட்ரோல்' இல்லை என்றிருக்கிறது.

ஆகவே, தனிப்பட்ட வியாபாரிகள் நாலைந்தாக 'பில்'களைக் கிழித்து, பத்துப்பத்து மாண்ட்களாக விற்று விடுகிறார்கள். அவ்விதம் பத்து மாண்ட்களாகவும், அதற்குக் குறைத்தும் விற்று விடுகிறார்கள் மொத்த வியாபாரிகள். அதனால், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இலாபத்தில் குறைவேயில்லை. பத்து மாண்டுக்குக் குறைவாக விற்பதற்குக் 'கண்ட்ரோல்' இல்லையாதலால் மொத்த வியாபாரிகள் இப்படிப் பத்துப்பத்து மாண்ட்களாக விற்று லாபம் ஈட்ட வாய்ப்பளிக்கிறது.

ஆகவே, இந்தப் பத்து மாண்ட்டிற்குக் குறைவாக விற்பதற்கு, இந்தப் 'பிரைஸ் கண்ட்ரோ'லில் இருந்து விதிவிலக்கு கொடுக்காமல், அதையும் 'கண்ட்ரோல்' செய்வதன்மூலம்தான் இப்பொழுது மொத்த வியாபாரிகள் தங்களுக்குச் சாதகமாக வைத்துக்கொள்வதைத் தடைசெய்ய முடியும்.

இன்னும் ஓரிரு வாரங்களில் மழையின்மையால் கஷ்டப்படும் கிராமங்களில், மக்கள் நினைக்கும் விலைக்கு உணவுத் தானியங்கள் வாங்க முடியாமல் போகப்போகிறது. ஆகவே, அதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் உடனே கைக்கொள்ள வேண்டும். அதோடுகூட, நாம் மாத்திரம் விலைவாசியைக் கட்டுப்படுத்துகிறோமே தவிர, கேரள சர்க்கார் அதன் உச்சவிலையை நிர்ணயிக்கவில்லை. ஆகவே, 'ரீட்டைல் பிரைஸ்', 'கண்ட்ரோல்' செய்வதன்மூலம்தான் 'பிரைஸ் கண்ட்ரோ'லை அமலாக்க முடியும்.

இச்சந்தர்ப்பத்தில் நான் வேறு ஒன்று சொல்ல, விரும்புகிறேன். கம்பு, சோளம் போன்றவைகளுக்குக் 'கண்ட்ரோல்' ஏற்படவில்லை. ஆனால், மத்திய அரசாங்கம், இதையும் 'கண்ட்ரோல்' விலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். நம் மாகாணத்தைப் பொருத்தமட்டில், ஏற்கெனவே பருவமழை தவறியிருப்பதன் காரணமாகவும் கம்பு, சோளம் இவைகளை 'ப்ரோக்யூர்மெண்ட் ஆர்பிட்' கீழ்க்காண்டு வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

1960 மார்ச் 12 அன்று ஆற்றிய உரை :

விவசாயப் பண்டங்களைப் பெருக்குவதற்கு நாம் உரம். பொறுக்கு விதை சம்பந்தபட்டமட்டில் பல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறோம். உரம் என்பதை மட்டும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது ஒன்பது அல்லது பன்னிரெண்டு லட்சம் டன் அளவுக்கு நம் உர உற்பத்தி இருக்கிறது. இயற்கை உரம், இரசாயன உரம், 'கம்போஸ்டு' உரம் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்கெடுத்தாலும் பன்னிரெண்டு லட்சம் டன்தான் உற்பத்தி செய்கிறோம்.

ஆனால், நம்முடைய உணவு உற்பத்தி 52 லட்சம் டன்னாக இருக்கிறது.

சீனாதேசம், ரஷ்யதேசம் முதலிய தேசங்களில் நடக்கும் விவசாயத்தை நாம் பார்க்கும்போது, அவர்கள் எந்த அளவுக்குத் தங்களுடைய உணவு உற்பத்தியை வைத்திருக்கிறார்களோ, அந்த அளவுக்கு உர உற்பத்தியை வைத்திருக்கிறார்கள். நம்முடைய உணவு உற்பத்தி, 52 லட்சம் டன் என்று வைத்துக் கொண்டால், நம்முடைய ராஜ்ய உரத் தேவையின் அளவும் 52 லட்சம் டன்னாக வைத்துக் கொள்ள வேண்டும். அப்படியின்றி, 12 லட்சம் டன் என்று தேவையை வைத்துக் கொண்ட இதற்குமேல் ஒன்றிரண்டு டன் உற்பத்தியைத் தேடுவது நல்ல உற்பத்திமுறையாகாது.

நமது உரத் தேவையின் அளவை 52 லட்சம் டன் லட்சிய அளவாகக் கொண்ட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் ளதாகவே இந்த லட்சியத்தை அடைவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாய விஷயத்தில், இம்மாதிரி பல ஏற்பாடுகளைச் செய்யும்போது, அந்த விவசாய மானியம், அல்லது நீர்ப்பாசன மானியம் இவற்றில் குறிப்பிடவேண்டிய ஒன்றிரண்டு வியங்களை இங்கே நான் இப்போது குறிப்பிட விரும்புகிறேன். நெல்லை ஜில்லாவில் அணைக்கட்டு எற்பட்டபிறகு வரி விகிதத்தில் புதிய மாறுதல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மணிமுத்தாறு நீர்ப்பாசன ஏரியாவில், இப்போது திடீரென்று ஏக்கர் ஒன்றிற்கு 8 ரூபாய் வரி விதித்திருக்கிறார்கள். அரசாங்கத்தாரின் இந்த ஏற்பாட்டினால் பெருவாரியான மக்கள் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதோடு 'ரெவின்யூ' வரி விகிதாச்சாரத்தை உயர்த்தப் பார்க்கும்போது, 20 சதவிகிதத் திற்குமேல் நிலத் தீர்வை வரி விகிதாச்சாரம் உயர்த்துவது சட்டத்தில் இடமில்லை.

அதிகப்படியான அளவு வரியைக் கூட்டுவதாக இருந்தாலும், நிலத்தின் தரம், பாசனவசதியின் தன்மை, ஏற்கெனவே இருந்த நிலத்தீர்வை இவை எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துகொண்டு நிலத்தின் தரத்திற்கு ஏற்றார்போல் விதிக்கவேண்டியதுதான் நியாயமாகும். அதைவிட்டுப் பாசனவசதி செய்துகொடுத்துவிட்டோம் என்று, 100 சதம் என்று 'ஆர்பிட்ரரி'யாக அரசாங்கமே தீர்மானம் செய்வது என்பது அவ்வளவு நல்லதல்ல. அது விவசாயத்தை ஊக்குவிப்பதற்குப் பதிலாக விவசாய ஊக்கத்தைக் குறைப்பதற்கே இடமளித்துவிடும். இது சம்பந்தப்பட்டமட்டில் அரசாங்கத்தார் புணராலேசனை செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏக்கர் ஒன்றிற்கு மூன்று அல்லது ஐந்து ரூபாய் அளவிலிருந்து, நிலத்தின் தரத்திற்கு ஏற்றார்போல் பரிசீலனைசெய்து வரி விதிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 'ஃபிளாட்'டாக 8 ரூபாய் என்று விதிப்பது முறையில்லை. இதைச் சரியான முறையில் பரிசீலனை செய்து செட்டில்மெண்ட் முறையில் வரி விதிக்க அரசாங்கத்தார் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியில்லாதமட்டில், இந்தப் பகுதி மக்களுக்குப் பெரிய அநீதி விளைத்ததாகவே ஆகும் என்று இந்தச்சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

இதனால், பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றிரண்டு பேரும் நிலச்சுவான்தாரர்கள் என்றல்ல, பல்லாயிரக்கணக்கான பட்டாதாரர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று வலியுறுத்திக் கூறவேண்டியது அவசியமாக இருக்கிறது. பத்தாயிரத்திற்கு

மேற்பட்டவர்கள் இதனால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது.

தண்டத் தீர்வை விஷயமாகக் கொண்ட கொள்கை முறைப்படிகூட இல்லாமல், நன்றாக விளைந்திருந்தால் அந்தச் சமயத்தில் தண்டத்தீர்வையைக் குறைக்காமல், ஏக்கர் ஒன்றிற்கு 250 ரூபாய் விதிக்கக்கூடிய அளவில் வரி விகிதாசாரங்கள் அமைந்திருக்கின்றன. இது சம்பந்தமாக மந்திரிகளிடத்திலும், அரசாங்கத்திடத்திலும் பலமுறை சொல்லியிருக்கிறோம். சர்க்கார்கூட மந்திரிசபை 'சப் கமிட்டி' போட்டு நேரடியாகப் பரிசீலனை செய்தார்கள். எந்த விதமாகப் பரிசீலனை செய்தாலும், அவர்களுக்கு எவ்விதமான நிவாரணமும் கிடைக்கவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

இருக்கிற சட்டங்களை வைத்துக் கொண்டு எப்படிப் பரிசீலனை செய்வது என்று உணர்ச்சியோடு பார்க்காமல், உண்மையில் நியாயமான நிவாரணம், நியாயமான வரி விகிதாச்சாரம் என்ற முறையில் இப்பிரச்சினையை அணுகவேண்டும். அனுதாபத்தோடு இப்பிரச்சினையைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். இப்போதே அந்தத் தண்டவரியை வசூல்செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஏப்ரல் மாதத்தில், இருக்கிற மாடுகளையும், வீடுகளையும் ஜப்தி செய்வது என்ற முறையில் விவசாயி களைப் பயமுறுத்தி வருகிறார்கள். இப்படிப்பட்ட அநீதியை எடுத்துக் காட்டினால், ஒவ்வொரு பட்டாதாரரும் தனிப்பட்டமுறையில் அதை எதிர்த்து அப்பீல் செய்திருக்கவேண்டும் என்கிறார்கள். இதைத் தனிப்பட்ட பட்டாதாரருடைய பிரச்சினை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. இது பல்லாயிரக்கணக்கான மக்களைப் பாதிக்கின்ற காரணத்தினால் இதைப் பொதுப் பிரச்சினையாகவே கருதி, சர்க்கார் சீக்கிரத்தில் இதைப் பரிசீலனை செய்து அநீதியைப் போக்கவேண்டும் என்பதாகக்கேட்டுக் கொள்கிறேன்.

1962 ஏப்ரல் 24 அன்று ஆற்றிய உரை :

நாம் இப்பொழுது அதிகமாக உணவு உற்பத்தி செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறோம். அந்த அளவில், வருகிற ஆண்டில் 16 லட்சம் டன் அதிகமாக உணவுத் தானியத்தை நாம் எதிர்பார்க்கிறோம். இதைப் பார்க்கும்பொழுது அவர்களுக்கு நாம் அதிகப்படியான போக்குவரத்து வசதி செய்துகொடுக்கவேண்டியதாக இருக்கிறது. கிராமங்களில் விளையக் கூடியவைகள் எல்லாம் நகரங்களுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. அதற்குப் போக்குவரத்து வசதி அதிகம் தேவையாக இருக்கிறது. விவசாய அபிவிருத்திமூலமாக அவர்கள் 16 லட்சம் டன் அதிகமாக உணவு உற்பத்தி செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த இலக்கு அவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது ஏற்கெனவே கொடுத்து வருகிற தீர்வையைவிட நிலச் சொந்தக் காரர்கள் இன்னும் அதிகமாகத் தண்டத் தீர்வை வேறு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதிலும் திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அங்குள்ள நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. தண்டத் தீர்வையைத் தற்காலிகமாக இரண்டுமடங்கு போடலாம் என்று உத்தரவிட்டிருக் கிறார்கள். இப்படி உத்தரவு போடும்போது அவர்கள் நிலத்தின் தரத்தை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. தண்ணீர் எடுத்துக்

கொண்டால் இரண்டு மடங்கு தண்டத்தீர்வு என்றுமட்டும் சொல்லி விட்டார்கள். நிலங்களில் ஒன்று மற்றொன்றைப்போல் தரமாக இருக்காது. அதனால், தண்ணீர் எடுத்துக் கொண்டதற்காக இரண்டு மடங்கு என்று சொல்லிவிட்டால், அதனால் பலர் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் அவர்கள் விவசாயம் செய்வதில் ஊக்கம் குறைந்து போய்விடுகிறது.

இந்த முறையில், ஏக்கர் ஒன்றிற்குக் கிட்டத்தட்ட 50 அல்லது 55 ரூபாய் அளவில்தீர்வையைஉயர்த்தியிருக் கிறார்கள். தண்ணீரைஉபயோகப்படுத்து கிறார்கள்என்பதற்குமாத்திரம், இப்படித் தண்டத்தீர்வை போடுவது என்பதுசரியல்ல. நிலத்தினுடைய தரத்தையும் கவனிக்கவேண்டியதாகவும் இருக்கிறது.

இப்படித் தரத்தைக் கவனிக்காமல் வரிபோடுவதால், விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதில் ஊக்கம் குன்றி விடுகிறது. அதனால் உற்பத்தி பாதிக்கப் படலாம். ஆகவே, தண்டத் தீர்வை விதிக்கும்போது நிலத்தின் தரத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, ஒரு பக்கம் அதிகப்படியாக உற்பத்திசெய்யவேண்டும்என்று சொல்லிவிட்டு, மற்றொரு பக்கத்தில் அவர்களுக்கு ஊக்கம் குன்றும் அளவில் தீர்வை போடக்கூடாது என்று சொன் னார்கள். இதுவரையிலும்எந்த விதத்திலும் பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. பரிசீலனைசெய்ய வேண்டியஒருபிரச்சினைஇது.

விவசாயத்திற்கு அதிகப்படியாக ஊக்கம்காட்ட வேண்டும் என்று சொல்லும்போது, இதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1962 ஜூலை 2 அன்று ஆற்றிய உரை :

கனம் சபாநாயகர் அவர்களே! 1962-63ஆம் வருடத்திய நிதிநிலை அறிக்கையை நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதைப் பாராட்டி, அதை ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன். மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், நமது நிலைமை, ரொக்க வசதிகள் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும். நம்முடைய திட்டங் களுக்கு, நம்முடைய தேவைகளுக்கு ஏற்றபடி, நம்முடைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு, நமது அமைச்சர் அவர்கள் ஒரு பெரும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்றபோது, யாராவது "புதிய வரி இல்லாமல் இதைச் சமாளித்திருக்க முடியும்" என்று சொல்கிறார்களா என்று பார்த்தேன். யாரும் சொல்லவில்லை. 'திட்டங்களையாவது குறைத்துவிடலாம்" என்று சொல்கிறார்களா என்று இந்தச் சபையில் எழுந்த விவாதத்தை உன்னிப் பார்க்கும்போது, ஒருவரும் கூறவில்லை. 'அநாவசியமான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன' என்ற சாக்கும் சொல்லப்படவில்லை. ஆகவே, அவசியமான பல திட்டங்களை மேற்கொள்வது என்று தீர்மானித்திருப் பதோடு, அவற்றை நிறைவேற்றவும், பொருளாதாரப் பற்றாக்குறையைச் சமாளிக்கவும் நிதி அமைச்சர் அவர்கள் தைரியமாக முன்வந்திருக்கிறார்கள் என்றுதான் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதை வெறும் வரவுசெலவுத் திட்டமாகஅமைக்காமல், பல்வேறுபட்ட திட்டத்தின் மதிப்பீடு என்ற முறையில் இதை அமைத்திருப்பதைப் பார்த்திருக் கிறோம். விவசாயத்துறை, தொழில்துறை என்று பிரித்து, இந்த இரண்டு பிரிவு

களையும் தனித்தனியாகப் பார்ப்போமேயானால், நாம் மேற்கொண்டிருக்கும் பல்வேறு நடவடிக்கைகளையும்தெரிந்து கொள்ளலாம்.

விவசாயத்துறையில் அதிகமாக உற்பத்தியாகிக் கொண்டிருந்த 9 லட்சம் டன்னை, இன்னும் அதிகமாக, அத்துறையில் கவனம் செலுத்துவதன் மூலமாக 17 லட்சம் டன் அளவிற்குப் பெருக்குவதற்கு வாய்ப்பு இருப்பதையும், அதற்கான நடவடிக்கைகள், செலவினங்கள் ஆகிவற்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரி பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளும் போது அரசாங்கத்திற்கு உதவியாகப் பல யோசனைகளைக் கூறுவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

விவசாயத்திற்கு வேண்டிய உரத்தைப் பற்றிச் சொல்லும்போது, 'அமோனியம் சல்பேட்'டை மாத்திரம் வைத்துக்கொண்டு இந்தமதிப்பீட்டை சொகிறார்களே தவிர, 'கம்போஸ்டு' உரத்தை அங்கங்கே பெருக்குவதற்கான நடவடிக்கைகள் பற்றி ஒன்றும் இல்லை. அவ்விஷயத்திலும் சிறிது கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

'கம்போஸ்டு' உரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதோடு இல்லாமல், கிராமங்களில் 'கம்போஸ்டு' உரம் தயாரிப்பதற்கு அதிக ஆதரவுகாட்ட வேண்டுமென்பது என் வேண்டுகோள். இந்த விஷயத்தில் கிராமங்களில் கவனக் குறைவு காணப்படுகிறது. கிராமங்களில் ஆறரை அடி நீளம், ஐந்தே முக்கால் அடி ஆழம் என்று குழிதோண்டவேண்டுமானால், அவ்வாறு வெட்டுவதற்கு ஆகும் செலவைப் பஞ்சாயத்துகளினால் சமாளிக்க சக்தி இல்லை. யாரிடமோ சொன்னால், யாரோ வெட்டிவிடுவார்கள் என்பது இல்லை. இம்மாதிரி ஒழுங்காக அங்கங்கே 'கம்போஸ்டு' உரம் தயாரிப்பதற்குக் குழிதோண்டுவதற்கு ஆகும் செலவை ஈடுசெய்ய அரசாங்கம் உதவ முன்வந்தால் கிராமங்களில்பரவலாக இத்திட்டத்தை நல்லமுறையில் செயலாற்ற முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, தென்னாற்காடு, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் 'காட்டன் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம்'படி நெல் சாகுபடிக்குப் பிறகு, இடைக்காலப் பயிராகப் பருத்தி சாகுபடி செய்யும் திட்டத்தை உருவாக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது மாதிரியாக அவர்கள் இதுவரையில் ஏன் சாகுபடி செய்யவில்லை? இம்மாதிரி சாகுபடி செய்யவேண்டுமென்ற முயற்சி இருந்ததா, இல்லையா என்பதை அரசாங்கம் அறியவேண்டும். இதுமாதிரி சாகுபடி செய்வது நிலவளத்தைப் பாதிக்கும் என்று ஏதோ சாக்குச் சொல்லலாம். நான் அந்தப் போலிச்சாக்குகளைக் கேட்கவில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொருத்தவரையில், 11 லட்சம் ஏக்கரா சாகுபடி நிலத்தில், எட்டு லட்சம் ஏக்கரா ஒருபோக பூமியாகத்தான் இருக்கிறது. இதுவரையில், அவர்கள் ஏன் இந்த இடைக்காலப் பயிர் ஒன்றைச் செய்ய முன்வரவில்லை என்று பார்த்தால், நிலச்சுவான்தாரர்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையிலுள்ள உறவு சுமூகமாக இல்லாததுதான் என்று நினைக்கிறேன்.

விவசாயிகள் பயிரிடுவதற்கு முன்வந்தாலும்கூட நிலச்சுவான்தார்கள் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. அதுதான் காரணம் என்று நான் நினைக்கிறேன். அறுபது, நாற்பது சட்டம் அமலுக்கு வந்தும், இன்னும் எத்தனைபேர் நம்நாட்டில் அந்தச்சட்டத்தை அப்படியே ஒப்புக்கொண்டு அமல் நடத்தத் தயாராக இருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும்.

இன்னமும் இரண்டு போகம் விளைவிப்பதாக இருந்தால் நிலவளம்

குறையும்; முதல் போகத்தின் அம்சம் குறைந்துவிடும் என்பதாக எல்லாம் சொல்லித் தடங்கள் விளைவித்திருக் கிறார்கள் என்று எண்ணுகிறேன். அந்த நிலைமையையும் மாற்றி, இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறத்தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'சாயில்ட் டெஸ்டிங் லாபராட்ரி' இரண்டை ஏற்படுத்தப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக் கிறார்கள். தமிழ்நாட்டில் 'சாயில் டெஸ்டிங் லாபராட்ரி' செய்யும் முடிவை அனுசரித்து நிலத்தில் என்னென்ன குறைவாக இருக்கிறது, அதற்குத்தக்க என்ன உரம்போடவேண்டும் என்பதை எல்லாம் தெரிந்துகொள்ளக்கூடிய விவசாயிகள் எவ்வளவு பேர் இருக் கிறார்கள்?

ஜப்பானில் 'மொபைல் சாயில் டெஸ்டிங்' ஒன்றை ஏற்படுத்தி, ஒரு சிறு கருவியை உபயோகப்படுத்தி, மண் வளத்தை ஆராய்கிறார்கள். அந்த மாதிரி, ஒரு சிறு கருவியை நம்முடைய நாட்டில், தாலுக்காவிற்கு ஒன்றுவீதம் கொடுக்க ஏற்பாடு செய்தால், மண்வளத்தைப் பற்றிச் சரியானபடி பரிசீலனை செய்து ஆலோசனை கூற உதவியாக இருக்கு மென்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இது பொது விவாதமாக இருக்கும் காரணத்தால், விவசாயத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தால், விவசாய மானியத்தில் பேசுவதாக ஆகிவிடுமென்ற காரணத்தால், இதோடு இந்த விசயத்தை நிறுத்திக்கொள்கிறேன்.

1963 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

விவசாயத்துறையில் பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது. ''இந்தப் பற்றாக்குறை 'பட்ஜெட்'டைப் பற்றாக்குறையாக விட்டுவிட்டால், அந்த அளவிற்குத் திட்டச்செலவு குறைந்துவிடும்" என்ற நோக்கம் அல்ல, ''ஏற்கெனவே போடப்பட்ட வரி இனங்களிலிருந்து அதிகமான வருவாய் கிடைக்கலாம்'' என்ற காரணத் தினால்தான் இந்தப் பற்றாக்குறை விடப்பட்டிருக்கிறது.

மத்திய அரசாங்கம் விதிக்கும் விற்பனை வரியிலிருந்து ரூபாய் இரண்டு கோடி கிடைக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆகவே, பற்றாக்குறையைச் சரிகட்டாமல் விட்டுவிடவில்லை. திட்டங்களுக்கான செலவைக் குறைக்காமல், நாம் செலவிடவேண்டிய பகுதி பணத்தைக் குறைக்காமல், ரூபாய் 31 கோடி அளவிற்குச் செலவழிப்பதற்கு வகைசெய்திருக்கிறோம். அந்த முறையில் பார்த்தாலும், இந்தவரவுசெலவுத்திட்டம் ஒரு இணைப்பான பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கக்கூடிய வரவுசெலவுத் திட்ட மாகவும் அமைந்திருக்கிறது. இரசாயன உரத்தை அதிகமான அளவிலே கொடுத் திருப்பது வரவேற்கவேண்டிய அம்சம்.

இரசாயன உரம், தழை உரம் பெருக்கத்தைப்பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதற்கு எடுக்கப் பட்டிருக்கும் நடவடிக்கையைக் கண்டு பாராட்டாமல் இருக்கமுடியாது. இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டத்தைப் பார்த்தால், இன்னும் பத்து ஆண்டுகளில் விவசாயத்தைப் பலர் ஆரம்பித்து, பலருக்கு வேலைவாய்ப்பு அமையக்கூடிய அம்சமாக, அது அமைந் திருக்கிறது. இப்பொழுது ஏற்படப் போகிற தொழில்துறை மாறுதலால் நிச்சயமாக "ஷிப்ட் ஆப் பாபுலேஷன்" ஏற்படும்.

இப்பொழுது விவசாயத்தை நம்பி இருக்கக் கூடியவர்கள் சுமார் எழுபது

சதவிகிதத்தினர். இப்பொழுதுள்ள நிலையில், இந்த அளவு 45 அல்லது 50க்குக் குறைந்தாலும் குறையலாம். எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும் அதற்கு விவசாய உற்பத்திவேண்டிய தாயிருக்கிறது. நாம் இப்பொழுது தொழில் துறையில் மாறுதலைச் செய்துகொண்டு வருகிறோம். சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால் இங்குள்ளவர்கள் தொழிலைத்தான் நம்பி இருக்கிறார்கள். தொழில்துறையில் முன்னேற்றம் கண்டால், அதற்குமேல் தொழிலுக்கு வேண்டிய பண்டங்களையும் அதிகப்படியாக உற்பத்தி செய்ய வேண்டியதாக இருக்கிறது.

இப்படித் தொழில்துறையில் முன்னேற்றமடைவதைப்பார்த்தால், தொழில்துறையில், விவசாயத்துறையில் கிடைக்கக்கூடிய கூலியைவிட அதிகமாகக் கிடைக்கிறது. அதனால், சிறுவிவசாயிகளும், சிறுநிலச்சுவான்தாரர்களும் தொழிலைத் தேடிக்கொண்டு போகவேண்டியநிலை ஏற்படலாம் என்று தோன்றுகிறது. அப்பொழுது கிராமங்களில் விவசாயம் செய்வதற்கே கூலிஆள்கள் கிடைக்காதோஎன்றநிலை ஏற்படுமோ என்று தோன்றுகிறது.

விவசாயத்திற்கு வேண்டிய ஆள்வசதி, இப்பொழுதே கிராமங்களில் விவசாயக் கூலிஇரண்டரை அல்லதுமூன்றுரூபாயாக வழங்குகிறார்கள். இனிமேல் இன்னும் அதிகமாக ஆவதற்கு இடம் ஏற்படுகிறது. இன்னும் உற்பத்தி பெருக்குக்கு, விவசாயத்தை ஆரம்பித்தால், அதற்கு வேண்டிய கூலி ஆள்கள் கிடைக்காமல் போவதற்கு இடம் ஏற்படும். அதை உத்தேசம் செய்துதான் பெரிய அளவில் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

இப்படிக் கூட்டுறவுமுறையில் விவசாயத்தை ஆரம்பித்தால், இன்னும் பத்து வருடங்களில் ஏற்படக்கூடிய ஒரு நிலைமையை அதாவது, விவசாயக் கூலிகள் கிடைக்காத நிலைமையைச் சமாளிக்க முடியும். அப்பொழுதுதான் சிறு நிலச்சுவான்தார்களுக்குச் சௌகரியமாக இருக்கும். இந்த நோக்கத்துடன்தான், கூட்டுறவுமுறைச் சாகுபடியைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லுகிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அதற்குத்தான் நமது மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்கள், இந்தக்கூட்டுறவுத்திட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறார்.

தொழில் முறையில் முன்னேற்றம் அடைவதால், விவசாயக் கூலிகளுக்கு அதிகப்படியான கூலி கிடைத்து, விவசாயத்திற்கு வேண்டிய ஆள்கள் கிடைக்காது என்ற காரணத்தால், இந்த முறை கொண்டுவரப்படுகிறது. இதையே சீக்கிரமாக ஊக்குவிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இதைப் பொது மக்கள் ஏற்றுக்கொள்ளாமல், இதில் ஏனோ சில சந்தேகத்தையும் குழப்பத்தையும் உண்டாக்குகிறார்கள். இப்படிப்பட்ட குழப்பங்களும் சந்தேகங்களும் பல்வேறு துறைகளில் ஏற்படுகிறது.

ஆகவே, நல்லமுறையில், விவசாயத்தைக் 'கமர்ஷியல்' முறையிலும் கொண்டு வரவேண்டும். ' Large scale farming by joint stock companies' என்ற முறையிலும் இதை ஏற்படுத்தவேண்டும். இன்னும் பத்து வருடங்களில் ஆள்பஞ்சம் இன்னும் அதிகமாக ஆகிவிடும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இப்பொழுதே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அத்துடன்கூட, பழ மரங்களை நாம் அதிகப்படியாகவளர்க்கவேண்டும். அத்துடன் பாக்கு மரங்கள் வளர்ப்பை ஊக்குவிக்கவேண்டும். மழைப் பிரதேசங்களில்தான் அதிகமாகப் பாக்கு மரங்கள் வளரும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நீர்ப்பாசனம் உள்ள இடங்களில்

பாக்கு மரங்கள் நல்லமுறையில் பயிரிட லாம் என்றும் சொல்லப்பட்டு, அதைப் பற்றி ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. நீர்ப்பாசனம் இருக்கக் கூடிய இடங்களில், பாக்கு மரங்கள் நல்லமுறையில் பயிராகும் என்று ஆராய்ச்சியின்மூலம் நாம் கண்டுகொண்ட உண்மை. நிழல் பாசனவசதி இருந்தால், அங்குப் பாக்கு மரங்கள் நன்றாக வளரும் என்பது நம்முடைய புதிய அனுபவம். பாசனவசதி நிறைந்து இருக்கும் இடங்களில் தோட்ட மகசூல் செய்ய உதவவேண்டும்.

இப்பொழுது உணவு உற்பத்தி அதி கமாக ஆகியிருக்கிறது என்று சொல்லப் படுகிறது. விலையைக் குறைக்க சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உண்மை யிலேயே சர்க்காருடைய கொள்முதல் விலைக்கு 'மார்கெட்' விலை குறைந்திருக் கிறதா என்று பார்க்கவேண்டும். சர்க்கார் 'ரைஸ்மில்'லில் கொள்முதல் செய்கிற விலைக்குக் குறைந்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும். 'ரைஸ்மில்லில் கொள்முதல் விலை 17 ரூபாய் என்று சொன்னால், அந்த அளவிற்கு நெல் விலை குறைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அந்த முறையில் குறைந்து இருக்கிறது என்று சொல்லமுடியாது. ஆனால், மூட்டைக்கு இரண்டு அல்லது மூன்று ரூபாய் விலை குறைந்தாலும், அந்தக் குறைவை விவசாயிகளால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அதற்குக் காரணம், விவசாயினுடைய வருட வருமானம் ரூபாய் 375 என்று கணக்கிடப் பட்டு இருக்கிறது. 'சீசனல் கண்டிஷன்' வேறு காரணமாக இருக்கிறது.

உற்பத்தி பெருகி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. உற்பத்தி பெருகி இருக்கிறது என்று சொன்னால், எந்த அளவில் பெருகி இருக்கிறது என்றால், நமக்கு வேண்டிய அளவிற்கும் கொஞ்சம் கூடுதலாகத்தான் பெருகி இருக்கிறது. அதிகப்படியான அளவில் பெருகிவிட வில்லை. நமக்கு வேண்டிய அளவில் பெருகவில்லை. வேண்டிய அளவைவிட கொஞ்சம் கூடுதலாகத்தான் பெருகி இருக்கிறது என்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மூட்டைக்கு இரண்டு அல்லது மூன்று ரூபாய் விலை குறைந்துவிட்டது என்றாலே, விவசாயத்தை அது பாதிக்கத் தக்கதாக இருக்கிறது. இந்த விலை குறைவினால், சிறிய விவசாயிகளாலும் சிறு நிலச்சுவான்தாரர்களாலும் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அவர்களால் சமாளிக்க முடியவில்லை. இதைச் சமாளிக்கத்தான் கூட்டுறவுமுறை சாகுபடி அவசியம் என்று சொல்லப்படுகிறது. அந்த முறையில் கூட்டுறவுச் சாகுபடியை ஆரம்பிக்கவேண்டும். இதை ஒரு 'கமர்ஷியல் பேஸிஸாக' ஆரம்பிக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய வழிவகைகளை அரசாங்கம் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1964 மார்ச் 2 ஆம் நாளன்று காலை 10 மணிக்கு ஆற்றிய உரை :

பருத்தி உற்பத்தி, தஞ்சை ஜில்லாவில் 11 லட்சம் ஏக்கர் செய்யப்படுகிறது. அதில் 4 லட்சம் ஏக்கரில்தான் இருபோகம் விளைகிறது. ஏனென்றால், 60-40 யாருக்கு என்ற பிரச்சினைதான். மற்றவற்றிலும் இருபோகம் விளைந்தால், நாட்டிற்கு எவ்வளவோ நன்மை பயக்குமே! இதைச் சர்க்கார் வலியுறுத்திக் கூறவேண்டும். நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்று சொன்னால், சீக்கிரமே அதை அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுத்து விடுவது நல்லது. அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டபிறகு, ஏன் உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்கிக் கொடுக்கக் கூடாது? எல்லாக் கட்சிகளும் இதை

எப்படித் தீவிரப்படுத்துவது என்பதில்தான் போட்டி போடுகிறார்கள். எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே இது!

நிலத்தை உழுதவனுக்கே சொந்தமாகக் கொடுப்பது நல்லது. 'இந்த அளவு நிலம் உனக்குத்தான்' என்று வைக்கவேண்டும், இரண்டுங்கெட்டான் நிலைமை இருக்கக் கூடாது. அது உழுபவனுக்குச் சொந்தமாக்கப்படவேண்டும்; அல்லது, அது நிலச்சுவான்தாரர்களுக்கே என்று பகிரங்கமாகக் கொடுக்கவேண்டும். அதில்லாது, இரண்டுங்கெட்டான் நிலைமை நீடிக்குமானால், எவ்வளவு செலவு செய்தாலும், சீக்கிரம் உற்பத்தியைப் பெருக்க முடியாது.

உரம் ஏராளமாகக் கொடுக்கிறோம் என்கிறார்கள். அதைக் கடனாகத்தான் கொடுக்கிறோம். கடன் வாங்கினால், அதைத் திருப்பிக் கொடுக்ககூடிய நிலை இருந்தால்தான் அதை ஏற்றுக் கொள்வான். 'ஃபுல் பைனான்ஸ் ஸ்கீ'மின் கீழ்க்கடன் கொடுங்கள் என்கிறார்கள். அதை வாங்கினால்மட்டும் போதுமா? எப்படித் திருப்பிக்கொடுப்பது என்ற பிரச்சினை இருக்கிறது. திருப்பிக் கொடுக்கும் அளவிற்கு, விளைச்சல் அதிகமாக இருக்கவேண்டும். 'ஃபெர்டிலைசர்' போட்டவுடன், அந்த அளவு வந்துவிடுகிறதா?

ஒரு ஏக்கருக்கு நூறு ரூபாய்வரை 'கல்டிவேஷன் லோன்' என்று கொடுக்கிறார்கள். ஆனால், எந்த விதமான 'லோனை'க் கொடுத்தாலும், அதைத் திருப்பிக் கொடுக்க முடியுமா என்பதைப் பரிசீலனை செய்து பார்த்துத்தான் அந்தக் கடன்களை விவசாயிகள் ஏற்றுக்கொள்ள முடியும். வாங்குகின்ற கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியுமா என்று பரிசீலனை செய்தபின்னர்தான், விவசாயிகள் கடனை ஏற்றுக்கொள்கிறார்கள். அவ்விதம் பரிசீலனை செய்வதற்குக்கூட உரிமை கிடையாது என்று யாராவது சொல்லமுடியுமா? உரங்களைக் கொடுக்கிறோம்என்று சொல்கிறோம். உரங்களை, 'ஃபெர்டிலைஸ'ரை அதிகமாகப் பெருக்கிவிட்டால் மட்டும்போதுமா? அதை வாங்குவதற்குரிய சக்தி இருக்கவேண்டும். அதற்குரிய விலைவாசி இருக்கவேண்டும். விலைவாசியைப் பார்த்தால், ஏறிக்கொண்டே போகிறது.

நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால், அதற்குத் தகுந்தவாறு விலைவாசி இருக்கவேண்டும். அதேநேரத்தில், உற்பத்தியைக் குறைக்கக்கூடியவிலைவாசியாகஇருக்கக் கூடாது. மேற்கு வங்காளத்தை எடுத்துக் கொண்டால், 21 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். நம்முடைய ராஜ்ஜியத்தை எடுத்துக்கொண்டால் 11 ரூபாய், 12 ரூபாய் என்று வைத்துக் கொண்டிருந்தால் இது எப்படிப் பொருந்தும் என்று தெரியவில்லை. விலைவாசி உயருகின்ற நேரத்தில், அந்த அளவுக்கு மக்களிடையே பொருளாதார அளவில் ஏற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்து, அதற்குத் தக்கபடி செயலாற்ற வேண்டும்.

முக்கியமாக 'லாண்ட் டெனியூ'ரைப் பொருத்தவரையில், நிலத்தைத் தரவாரி பிரிக்கவேண்டியது மிகவும் முக்கியம். எந்த மாதிரியான நிலத்தில், எந்த விதமான உரம் போட வேண்டும் என்கிற ஆராய்ச்சியை மேற்கொள்ளுவதற்கு நம்மிடம் வசதியிருக்கவேண்டும். 'நைட்ரேட்' இருக்கிறது, அதை எல்லா நிலங்களிலும் போட்டுவிட முடியாது. நிலத்தை விரிவான முறையில் தரம் பிரித்து இந்த நிலத்திற்கு இந்த உரத்தைப் போடலாம் என்று சொல்லக்கூடிய அளவில் இன்றைக்கு விவசாய 'டிப்பார்ட்மெண்டில்' வசதி கிடையாது. எத்தனையோ தரமுள்ள நிலங்கள் இருக்கின்றன. உவர் பூமி இருக்கிறது. அதைப் பயன்படுத்துவதற்காக

இதற்கென்று தனியாக வித்துக்கள் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த வித்துக்களை எல்லா இடங்களுக்கும் கொடுத்துவிட்டால் எப்படிப் பொருந்தும்?

விவசாயிகள் நல்லமுறையில், 'எந்தெந்த விதமான உரம், என்னென்ன நிலங்களுக்குப்போடலாம்'என்றஅளவில் வகுத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும். நிலத்தின் தரத்தைப் பிரித்துக் கொடுக்கின்ற முறையில், விவசாய இலாக்கா செயல்பட்டால், உற்பத்தி பெருக்குக்கு வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது). இன்னும் சில விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது. சற்று அதிக நேரம் பேசலாம் என்று எண்ணித்தான் இன்று தீர்மானித்திருந்தேன்.

1965 மார்ச் 2 ஆம் நாளன்று காலை 10.30 மணிக்கு ஆற்றிய உரை :

உற்பத்தியைப் பெருக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நாம் சமர்ப்பிக்கப்பட்ட 'பட்ஜெட்டில்' பார்க்கிறோம். அதிலே 4000 கிணறுகள் தோண்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 2000 கிணறுகளிலிருந்து, 4000 கிணறுகளாக உயர்ந்தியிருக்கிறது. இது வரவேற்கத்தக்கதாகும். நம் அபிவிருத்தி நடவடிக்கைகளையும், மற்ற ஏற்பாடுகளையும் வைத்துத் துரிதமாகச் செய்யவேண்டும்.

ஆனால், இன்று கேள்விக்கு விடையளிக்கும்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், "மாதிரிப் பண்ணையில் நஷ்டம்" வருகிறது என்று!

நிலத்தைப் பண்படுத்துபவர்களுக்கும், நிலத்தை வளப்படுத்துபவர்களுக்கும் அதிகமான செலவு வருகிறது. அதனால், 'ரிட்டன்' காணவில்லை. ஏன் 'ரிட்டன்' வரவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். 'கிணறு லோன், மாட்டு லோன்' என்று கொடுத்துக் கொண்டே போனால் விவசாயம் எப்படி அபிவிருத்தியாகும்" என்று எனக்குத் தெரியவில்லை.

கொஞ்ச நாளைக்கு முன்னால், 'மாட்டுத் தீவனத்திற்கு மானியம் கொடுக்கப்போகிறோம்' என்று நீங்கள் சபையில் சொன்னீர்கள். இதை உண்மையாகப் பரிசீலனை பண்ணிப் பார்த்தால் நம்முடைய நாட்டில் நடைபெறுவது 'கன்ஸம்ஷன்' விவசாயம் அல்ல என்பது தெரியும். வேண்டுமானால் ரூபாய் பத்தாயிரத்தில் ஒரு கிணறு வெட்டிக் கொடுங்கள். அதைவிட்டு 'லோன்' தருகிறோம் என்று சொன்னால், அவர்களால் லோனை எப்படித் திருப்பி அடைக்க முடியும்? வட்டியை எப்படிச் செலுத்த முடியும்?

ஆகையால், 'லோன்' கொடுப்பதற்குப் பதிலாகக் கிணறு வெட்டிக்கொடுத்து விடலாம். 'எக்ஸிகியூடிவ் எஞ்ஜினியர்'கள் மூலம் 'சானலைஸ்' பண்ணி, கிணறு வெட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். இன்று எத்தனையோ ரூபாய்கள் செல வழிக்கிறார்கள். இந்த விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் அரசாங்கமே கிணறு வெட்டிக் கொடுக்கலாம்.

விவசாயி யாசிக்கிறவன் அல்ல! அவன் முதுகெலும்பு போன்று உள்ளவன். அவன் 'லோனை'த் திருப்பிக் கொடுக்க முடியாமல் எங்களிடம் வந்து சொல்வான். நாங்கள், கடன் தவணையைத் தள்ளிப் போடுங்கள் என்று சிபாரிசு பண்ண வேண்டியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாகுபடி பொய்த்து விட்டது என்றால், நாலணா வரி வசூல் செய்கிறார்கள். பாக்கியுள்ள 75 சதவிகித விவசாயி அனுபவித்ததனால், நல்ல விளைச்சலை விரும்பும் பொழுது எப்படி விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்

என்பதைப்பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். I am only giving out my thoughts நான் என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன். 'பட்ஜெட்டி'லே கிணறு பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால்தான் இதுபற்றி யோசனை செய்துபார்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

1966 பிப்ரவரி 28 அன்று ஆற்றிய உரை :

இப்பொழுது 'டிரௌட் கண்டிஷன்' காரணமாக, மழையின்மை காரணமாக, உற்பத்தி பெருமளவிற்குப் பாதிக்கப்பட் டிருக்கிறது. 61 லட்சம் டன் உற்பத்தியில், மழையின்மை காரணமாக 10 லட்சம் டன் வரையில் 'ஸ்லாஷ் டௌன்' ஆகும் என்று முதலில் அமைச்சர் அவர்களே குறிப்பிட்டி ருக்கிறார்கள். தமிழ்நாட்டில் சென்ற வருஷம் மழையின்மை காரணமாக அதிகமாகவும் பாதிக்கப்பட்ட ஜில்லா, எங்கள் ஜில்லாதான். இந்தியாபூராவையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, பல பகுதிகள் மழையின்மையால் பாதிக்கப் பட்டிருக்கின்றன.

இறக்குமதி செய்யவேண்டுமானால், அதற்கு அந்நியச் செலவாணி வசதி குறைவாக இருக்கிறது. இந்தக் காரணத்திலே எவ்வளவு தூரம் அரசாங்கத்தினுடைய தொழில் வளர்ச்சி தடைப்படும். இந்தச் சிக்கல்களை எப்படி நீக்குவது என்பதைப் பரிசீலனை செய்வது அரசாங்கத்தினுடைய கடமையாக இருக்கவேண்டும். 'இம்போர்ட் ரெஸ்ட்ரிக்ஷன்' இருக்கிறது. அந்நியச் செலாவணி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கடன் வாங்காமல் முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக் கிறது. திட்டக் 'கமிஷன்' அங்கத்தினராக இருந்து, சமீபத்தில் மத்திய அரசாங்க மந்திரியாகி இருக்கும் அசோக் மேத்தா அவர்கள் "கடன் வாங்காமல் முடியாது" என்று சமீபத்தில் கூறியிருக்கிறார்கள்.

பத்து வருடங்களாகக் கடன் தானாக வந்தது. இப்பொழுது நாம் கேட்கிறோம். கடன் வாங்கமுடியாது என்று சொல் லும்போது, நாம் கடன் கேட்டால், கடன் கிடைக்க முடியும் என்ற நிலையும் இல்லை. எங்கே கடன் கிடைக்கிறது என்பதைக் கண்டறிந்து கிடைக்கக் கூடிய கடன்களை 'பூல்' செய்து அதைச் சீக்கிரமாகக் கிடைக்கும் படியாக வசதி ஏற்படுத்திக் கொடுத்தால்தான், இப்பொழுது இருக்கும் தொழில் வளர்ச்சி தொடர்ந்து செயல்பட முடியும். இல்லையென்றால் தொழில் வளர்ச்சி தடைப்படும்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரையில், ஏற்கெனவே வெகு வேகமாகத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதனால், நாம் இதில் அதிக அக்கறை செலுத்தவேண்டிய நிர்பந்தம் இருக்கிறது என்பதை மாத்திரம் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

சமீபத்தில் எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு அண்டை நாடான 'சிலோ'னோடு நாம் 'ட்ரேட் அக்ரிமெண்ட்' மூலமாகப் பண்டமாற்று ஒப்பந்தம் செய்துகொண்டோம். அவர்கள் வெங்காயம், வத்தல் போன்ற சரக்குகளுக்கு நம் நாட்டை நம்பித்தான் இருக்கிறார்கள். இன்று சர்வதேச அரங்கில் மற்ற நாட்டினரைவிடக் குறைவான விலைக்குக் கொடுக்கக்கூடிய சக்தி, இந்த நாட்டிற்குத்தான் இருக்கிறது. கொழும்புவுக்குச் சாமான்களை ஏற்றிச் செல்வதற்கான 'டிரான்ஸ்போர்ட் காஸ்ட்டும்' குறைவாக இருக்கிறது. அவர்களிடம் இருக்கும் கொப்பரையை நாம் ஏராளமாக இறக்குமதி செய்யலாம்.

கொழும்பு சம்பந்தப்பட்ட வரையில் 'அட்வர்ஸ்ட்ரேட் பாளன்ஸ்' அவர்களுக்குத்தான் ஜாஸ்தி இருக்கிறது. எப்பொழுதும் அவர்கள்தான் அதிக

இறக்குமதி செய்கிறார்கள். ஆகவே, 'அட்வர்ஸ் ட்ரேட் பாளன்'ஸை எண்ணெய் வித்துக்களை நாம் இறக்குமதி செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்களிடம் இருக்கும் 'பாளன்ஸை ஸ்டர்லிங்'காக நமக்குக் கொடுக்கும்படி கேட்கலாம். ஆனால், அது முடியாது. ஏனெனில், அந்த அளவிற்கு அந்தத் தேசத்திலே 'அட்வர்ஸ் ட்ரேட் பாளன்ஸ்' இருக்கிறது.

'ஷார்ட் டர்ம்', 'லாங்க் டர்ம்' எதுவாக இருந்தாலும் நமக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை 15 வருடம் கழித்துக் கொடு என்று சொல்லக் கூடிய நிலைமை வந்திருக்கிறது. 15 வருடம் கழித்துக் கொடு என்று சொல்வதைவிட, அந்த நாட்டிலே உற்பத்தி செய்யும் பண்டங்களை நாம் ஏற்றுக் கொண்டோமானால், பண்டமாற்று விதிபிரகாரம் நாம் எண்ணெய் வித்துக்களைத் தருவிப்பதற்கு உதவிகரமாக இருக்கும்.

சமீபத்தில் ஏற்பட்ட 'ட்ரேட் அக்ரிமெண்டில்' ஒரு கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். அது போதாது! பதினைந்து கோடி ரூபாய் அளவிற்கு 'ட்ரேட் அக்ரிமெண்ட்' செய்து கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது. தென்னாட்டில் உள்ளவர்கள்தான் இதிலே அதிக அக்கறை செலுத்த வேண்டியிருப்பதால் இந்தச் சட்டசபை முன்னால், கனம் அங்கத்தினருடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வருகிறேன்.





நிலச் சீர்திருத்தம் குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

இந்தியா விடுதலையடைந்த பின்னர், 'சோஷலிச', சமத்துவ சமுதாயம் அமைக்கும் முயற்சிகளில் மைய, மாநில அரசுகள் இறங்கின. அதற்காகப் பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றில் நிலச்சீர்திருத்தம் முன்னுரிமை பெற்றது. ஜமீன்தார்முறை ஒழிக்கப் பட்டது. பின்னர், ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும், நிலச்சீர்த்திருத்தத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டது.

1955ஆம் ஆண்டு மைய அரசு திட்டக் குழுவின் பரிந்துரையைத் தொடர்ந்து, இந்திய அரசு விவசாய நில உச்சவரம்பு சட்டமொன்றை நிறைவேற்றியது. இதன் அடிப்படையில் உச்சவரம்பிற்கும் அதிகமாக இருந்த நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டு, ஏழை மற்றும் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மைய அரசின் சட்டத்தையடுத்து, தமிழக அரசும் 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சட்டமொன்றை நிறைவேற்றியது. இது 'தமிழ்நாடு நில உச்சவரம்புச் சட்டம் 58/61' என்று அழைக்கப்படுகிறது. 1961இல் நிறைவேற்றப்பட்ட இச்சட்டம், '1960 ஏப்ரல் 6' என முன்தேதியிட்டுச் செயல்பாட்டிற்கு வந்தது.

இச்சட்டத்தின்படி ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு, அதிகபட்சமாக 30 ஏக்கர் விவசாய நிலம் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்திலும், ஐந்துக்கு அதிகமாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் கூடுதலாக ஐந்து ஏக்கர் ஆனால், மொத்தத்தில் அறுபது ஏக்கருக்கு மிகாதிருக்க வேண்டுமென்று வரையறுக்கப்பட்டது.

இச்சட்டம் குறித்த, விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், "இச்சட்டம் வெறும் சட்டமாக மட்டுமே இருந்துவிடாமல், உழுபவர்க்கு நிலம் உண்மையிலேயே சொந்தமாக வேண்டுமென்று வலியுறுத்தி, அதை நடைமுறைப்படுத்துவதற்காக ஆலோசனைகளையும் கூறுகிறார்.

1957 ஜூலை 6 ஆம் நாள் பிற்பகல் 12.02 மணிக்கு ஆற்றிய உரை :

கனம் சபாநாயகர் அவர்களே, 'ரெவீன்யூ' இலாகா மானியத் தொகையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கிராம ஊழியர்களுக்கு நலம்செய்ய முன்வந்ததனால், நிலத்திலே நேரிடையாக உழைப்பவர்களுக்கு அதிகப் பங்கு கொடுத்து, அதன்மூலம் 'உழைப்பவனுக்கு நிலம் சொந்தம்' என்ற கருத்துக்கு நாட்டிலே ஆக்கம் தேடுவதற்காக, பண்ணையிலே வேலை செய்கின்ற, உழைப்பவனுக்கும்கூட உரிமையை உண்டாக்கிக் கொடுத்து, அந்தச் சட்டங்களை எல்லாம் வெற்றிகரமாக அமல் நடத்துவதற்காகக் கோரியிருக்கும் இந்த மானியத்தை ஆதரிப்பதைத் தவிர வேறுவழி ஒன்றும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால், இந்தச் சட்டங்களை அமலாக்குவதின் கஷ்டங்களைப் பற்றியும், குறைபாடுகளைப் பற்றியும் இங்கே வெகுவாகப் பேசப்பட்டு வருகிறது. இந்தக் குறைபாடுகளை எல்லாம் உண்மையியே நீக்கவேண்டுமானால், நில உடமை உச்சவரம்பை நிர்ணயிப்பது அவசியமாகும் என்பதைச் சர்க்கார் ஏற்கெனவே உணர்ந்து, 'கவர்னர்' பெருமான் இந்த உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கத்தினர்களின் கவனத்திற்கும் அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

ஏற்கெனவே உத்தேசித்துள்ள இந்தக் கருத்தைப் பரிசீலனை செய்து அதற்குப்பிறகு, இந்தக் கருத்துக்குச் சட்ட ரூபம் கொடுத்து இடையிலுள்ள தடைகளை எவ்வளவு சீக்கிரம் அகற்றி, நில உடைமைக்கு உச்சவரம்பைக் காட்டுகிறோமோ, அவ்வளவு சீக்கிரம்தான் உண்மையிலே உழைப்பவனுக்கு நிலம் சொந்தம் என்ற நிலைமையை உண்டாக்க முடியும். இம்மாதிரி சட்டத்தை நிறைவேற்றும்வேளையில், நிலத்தின் சொந்தக்காரர்களுக்கும், நிலத்தில் பாடுபடும் விவசாயிகளுக்கும் ஏற்படக் கூடிய சங்கடங்களைப் போக்குவதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் இருக்க வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஏற்கெனவே கொண்டுவரப்பட்டுள்ள ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்தில் ஒரு குறைபாடு இருக்கிறது என்பதைக் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஜமீன்தார் ஒழிப்புச்சட்டத்தில், இந்த நிலம் ஜமீனுக்குச் சொந்தமா, அல்லது பாடுபடுகிறவனுக்குச் சொந்தமா என்று நிர்ணயிப்பதில், 'தமக்குச் சொந்தம் என்பதை ஜமீன்தாரே நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இருந்தது. நிலச் சொந்தக்காரன் இதற்காக வாதாட வேண்டியது இல்லை. 'இது என்னுடையதுதான் என்று நிரூபிக்க வேண்டாம். ஜமீனுக்குச் சொந்தம் இல்லை'' என்று சொல்லிவிட்டால் போதும். போதுமான தஸ்தாவேஜிகளை எல்லாம் எடுத்துக்கொண்டு வந்து, 'இந்த நிலம் ஜமீனுக்குத்தான் சொந்தம்" என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு ஜமீன்தார்களையே சாரும்.

ஆனால், சட்டத்திலுள்ள அந்தப் பிரிவு ஸ்பஷ்டமாக அதைத் தெரிவிக்காத தனால், 'நிலம் ஜமீனுக்குச் சொந்த மில்லை' என நிலத்தை வைத்துகொண்டி ருப்பவனே நிரூபிக்கவேண்டுமென்ப தாகச் சில இடங்களில் தீர்ப்பு வழங்கப் பட்டுவிட்டது. இதை எதிர்த்து 'ஹைக்கோர்டுக்குக்கூட அப்பீல் செய்திருக்கிறார்கள். 'நியாயமன்றத் தினாலே சரியான தீர்ப்பு வழங்கப்படும்' என்று நம்பினாலும், நாமே சட்டத்தைக் கொண்டுவரும்போது ஸ்பஷ்டமாகக் கொண்டுவந்துவிட்டால், 'ஹைக்கோர்டு,' 'சுப்ரீம் கோர்டு' இவற்றின் வேலை குறையும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சட்டத் திற்கும் சரியான திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்பதாகவும் சொல்லிக் கொள்கிறேன்.

அதோடுமாத்திரம் அல்லாமல், ஜமீன்களுக்குச் சொந்தமான குளம், புறம்போக்கு முதலிய இடங்களில் உள்ள மரம் தங்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லிக்கொண்டு அதன்மூலம் குளத்தையும், குளத்திற்குப்பக்கத்திலுள்ள கிராமப் புறம்போக்கு நிலங்களையும் கூடத் தங்களுக்குத்தான் சொந்தம் என ஜமீன்தார்கள் வாதாடுகிறார்கள். தங்கள் கருத்துக்கு ஆதரவு தேடும் வகையில் அவர்கள் சில பொய் தஸ்தாவேஜிகளைக் கொண்டுவந்து அதிலுள்ள மரங்கள் தாங்கள் வைத்ததுதான் என முதலில் தீர்ப்பை வாங்கிக்கொண்டு விடுகிறார்கள். மரங்கள் இவர்களுக்குத்தான் சொந்தம் என்றவுடன், அந்த மரங்கள் உள்ள நிலம் அவர்களுக்குத்தான் சொந்தம் எனச் சிலச் சில இடங்களில் தீர்ப்பாகியிருக்கிறது.

இதற்கு ஒரு பாதுகாப்புச் சட்டத்தில் இல்லாவிட்டால் கிராம நிலங்கள், மேய்ச்சல் புறம்போக்கு, குளக்கரைப் புறம்போக்கு எல்லாம் தனிப்பட்டவர் களுக்குச் சொந்த நிலமாக மாறிவிடும். இதனால், கிராமத்தின் பொதுச் சொத்து பாதிக்கப்படும். ஆகவே, ஜமீன்தார் ஒழிப்புச்சட்டத்திலேயே கிராமப் பொதுச் சொத்துக்குப் பாதுகாப்புத் தேடவேண்டு மென்பதாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

1958 மார்ச் 28 அன்று காலை 10.30 மணிக்கு ஆற்றிய உரை :

எல்லாவற்றையும்விட மிக முக்கிய மானது, நிலச்சீர்திருத்தச் சட்டத்தை எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவர முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவரவேண்டும். அதில் தாமதம் ஏற்படுத்துவதானால், உணவு உற்பத்தி பெருக்க நடவடிக்கைகளில் ஒரு அளவு உற்சாகம் காணப்படாமல் இருக்கிறது. ஸ்திரமான நிலக் கொள்கையை அனுசரிப்பதன் மூலமாக விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு உண்டான ஒரு சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதற்கு, இடைக்காலத்தில் நமது கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில், நிலத்திற்கு உச்சவரம்பு ஏற்படுத்துவது பற்றிச் சொல்லப்பட்டிருக் கிறது. உயர்ந்தபட்சவரம்பு ஏற்படுத்துவதோடுகூட, 'குறைந்தபட்சமாக இவ்வளவு நிலம் உடையவர்கள்தான் விவசாயத்தைத் தாங்களே நடத்தலாம்' என்ற நிலையையும் சீக்கிர மாக நம் சர்க்கார் அறிவிக்கவேண்டும். குறைந்தபட்ச நிலம் உடைய சின்ன நிலச்சுவான்தாரர்கள் தாங்களே தங்களுடைய உற்பத்தியில் ஈடுபடலாம் என்ற சூழ்நிலையை அமைத்துக் கொடுக்குமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

1960 ஏப்ரல் 14 அன்று ஆற்றிய உரை :

கனம் உதவி சபாநாயகர் அவர்களே! நீண்டநாளாக எதிர்பார்த்து வந்த இந்த நிலச்சீர்திருத்தம் இன்று ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறது. ஒரு நல்ல திட்டத்தோடு, இந்தச் சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஆரம்பித்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, 'நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுப்பது' என்ற ஒரே நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் மாத்திரம் குறை காணலாமே தவிர, "தொழில், பொருளாதாரத்திற்கு அடிகோலுவது, அதிலிருந்து ஒரு உப பொருளாதாரம், மாற்றுப் பொருளாதாரம் அமைக்கவேண்டும்' என்ற கருத்தோடு, 'விவசாயப் பொருளாதார'மாக இருக்கிற நம்முடைய நாட்டில், ஜனங்களிடத்தில் 'பொருளாதாரத்தை மாற்றிக் கொடுக்கவேண்டு' மென்பதற்காக, அதற்கு முதல்படியாக இந்தச்சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை அங்கத்தினர்கள் அணுகவேண்டும். அதோடு, 'பிளானிங் கமிஷன்' அவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் இந்தத் திட்டத்தை அமல் நடத்துகிறார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால், இந்தச் சட்டத்தை அமல் நடத்தும்போது விலைவாசிகள் ஏறிப் போய்க்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், உணவுஉற்பத்தியைப்பாதிக்காத அளவில், இந்தச் சட்டத்தினுடைய அம்சங்கள் இருக்கவேண்டும் என்பதை மனத்தில் வைத்துகொள்ள வேண்டியிருக்கிறது. 'உணவு உற்பத்தியை ஊக்கப்படுத்துகிற நிலையில் இருக்கவேண்டும்; அல்லது, வளர்ச்சியடையக்கூடிய நிலையில் பாதிக்காத அளவில் இருக்கவேண்டும்' என்றநோக்கத்தோடு, இந்தச்சட்டத்தைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே, 'நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பது' என்ற அடிப்படையில் மாத்திரம் பரிசீலனை செய்யாமல், 'மாற்றுப் பொருளாதாரத்திற்கு இது ஆரம்ப நடவடிக்கை' என்ற முறையிலே, விவசாயப் பொருளாதாரத்தை வளப்படுத்துவதன் மூலமாக, விலைவாசியைக் குறைத்து, மக்களுடைய வாங்கும் சக்தியை அதிகரிக்கக்கூடிய அளவுக்கு, உணவு உற்பத்தி பெருக்கத்திற்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் இருக்கவேண்டும் என்றமுறையில் பரிசீலனை செய்யவேண்டுமென்று, இப்போது சட்டசபையில் பேசுகிற எனக்கு, 'செலக்ட் கமிட்டி'யில் இடம் இருக்காது என்ற காரணத்தினால், இனிமேல் வரப்போகிற 'ஜாயிண்ட் செலக்ட் கமிட்டி' அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நாம் பெரிய ஒரு மாறுதலை ஏற்படுத்தும்போது வருங்காலத்தைப் பற்றியும் ஓரளவுக்குச் சிந்திக்கவேண்டும். முப்பது ஏக்கருக்குமேல் வளமான பூமி 'ஃபார்மிங்'கில் இருக்கமுடியாத நிலைமையை இந்த நாட்டில் நாம் நிரந்தரமாக ஏற்படுத்துகிறோம் என்பதைக் கவனிக்கவேண்டும்.

என்னைப் பொருத்தவரையில், 'எனக்கு ஒரு 'செண்ட்' நிலமும்கிடையாது. 'சட்டம் வரப்போகிறது' என்று இருக்கக் கூடிய நிலத்தை விற்றவனும் அல்ல. இந்தச் சட்டத்தை இருபது வருத்திற்கு 'ரிட்ராஸ் பெக்டிவ் எஃபெக்ட்'கொடுத்துப் போட்டாலும் என்னைப் பாதிக்காது. ஆகையால், நான் நிலச்சுவான்தாரர் களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசுவதாகநினைக்கவேண்டாம்.

நான், காங்கிரஸ் கட்சியிலே இருக்கக் கூடியவன். அடிக்கடி, கட்சி மாறுகிற வனும் அல்ல. அதை விரும்பாதவனும்

கூட; உழவர் கட்சியிலிருந்து திராவிடக் கட்சிக்கு வந்தவர்கள் மாதிரி அல்ல. ஆகையால்தான், என்னைப்பற்றி 'பர்ஸ்னல் எக்ஸ்பிளனேஷன்' சொல்லிக் கொள்கிறேன்.

முப்பது ஏக்கருக்குமேல் வளமான பிரதேசம் நம்முடைய நாட்டிலே நிரந்தரமாக இருக்காத ஒரு நிலைமையை ஏற்படுத்துகிறோம். 'லார்ஜ் ஸ்கேல் ஃபார்மிங்' என்று இதிலே, "மேலை நாடுகளைப்போல், ஒரு புரட்சிகரமான விவசாய மாற்றத்தை நம் நாட்டிலே ஏற்படுத்தப் போகிறோம்" என்று நாம் சொல்லிக்கொள்கிறோம். அதுவும் 'மெக்கனைசேஷன்' முறையை நாம் ஏற்படுத்தப்போகிறோம் என்று சொல்லும்போது 'அபேதவாத' பொருளாதாரத்தில் அக்கறை கொண்டவர்கள் எப்படியும் துரிதமாக ஏற்படவேண்டுமென்று ஆத்திரமும் கொள்கிறார்கள்.

இந்த மசோதாவைப் பார்க்கும்போது, '30 ஏக்கர்களுக்குமேல் வளமான பிரதேசம் எந்தக் காலத்திலும் ஒருவரிடம் இருக்கபோவதில்லை' என்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தப் போகிறோம். அதேசமயத்தில், நாட்டிலே இருக்கக் கூடிய நிலையை உணர்ந்து பொருளாதார வளர்ச்சிக்காக 'ஷுகர் இண்டஸ்ட்ரி'க்கு மாத்திரம் அதிக அளவு நிலம் இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அதற்கு இடம் கொடுக்கிறோம்.

இன்று வளர்ந்திருக்கக்கூடிய தொழிலை, முக்கியமாக அமைச்சர் அவர்கள் உணர்ந்து, மசோதாவைத் தயாரித்திருக்கிறார்களே தவிர, இனிமேல் வளரக்கூடிய தொழிலுக்கு எந்தவகையில் இடம்கொடுத்திருக்கிறோம் என்று பார்த்தால் - நான் அக்கறையோடு வேறு எந்த மசோதாவையும் படித்ததில்லை! இதை அக்கறையோடு நன்றாகப் படித்தேன். இதிலே அதற்கானஎந்தத் திட்டமும் கொடுக்கப் படவில்லை. ஆனால், 'லாண்ட் போர்டு' என்று ஒன்று ஏற்படுத்தப் போகிறார்கள். அதைக் கொஞ்சம் 'எலாஸ்டிக்'காக பண்ணினால் நலமாக இருக்கும். இப்போது இருக்கிற விவசாய முறைப்படி இருந்தால் 30 ஏக்கருக்குமேல் வேண்டாம். ஆனால், விவசாயத்தைஅடிப்படையாகக் கொண்டு செயலாற்றக்கூடிய பெரிய தொழில்கள் வளர்ச்சியடைய இடம் உண்டு, ஏற்பட சந்தர்ப்பம் உண்டு! ஆகையால், விரிவாக 'லாண்ட் போர்டு'க்கு அதிகாரம் கொடுப்பதன்மூலம், இந்த நிலைமையைத் தவிர்க்கமுடியும் என்று நான் நினைக்கிறேன்.

'லாண்ட்போர்டு'க்கு எவ்வளவு விரிவாக அதிகாரம் கொடுக்கிறோமோ, அந்த அளவுக்குப் புதிய தொழில்களுக்கு வசதிகள் ஏற்படும். அந்த வகையில் எந்த விதமான முன்னேற்பாடும் செய்யாமல் இருப்பது நல்ல 'லெஜிஸ்லேன்' ஆகாது என்று இந்தச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவேதான், ஏற்கெனவே ஏற்படுத்தியிருக்கிற 'லாண்ட் போர்டு'க்கு, தொழில் பொருளாதாரத்திற்கு வெகு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டிய அளவுக்கு அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக "30 ஏக்கர் நிலம் நஞ்சைநிலமாகவும், அல்லது ஒன்னேகால் ரூபாய் வரையில் உள்ள 'ரேட்டு'க்கு 120 ஏக்கர் வரையில் புஞ்சைநிலம் வைத்துக் கொள்ளலாம்" என்று இதில் இருக்கிறது. கரிசல் காடு பூமி உள்ள விவசாயிகளிடத்தில் இது விஷயமாக அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டேன்.

"எவ்வளவு ஏக்கர் கரிசல் பூமியில் 'ட்ரைக்ராப்ரெய்ஸ்' பண்ணப்படுகிறதோ, அதில் 1/3 பகுதி பூமியாவது கண்டிப்பாகக் கால்நடைத் தீவனம் 'ஃபீடரு'க்கு

வேண்டும் என்று அவர்கள் சொகிறார்கள். பெருவாரியாகக் கரிசல் நிலங்கள் நிறைந்த தாலுக்காக்கள் எங்கள் ஜில்லாவில் இருக்கின்றன. கோவில்பட்டி, சங்கரன்கோவில் ஆகிய தாலுக்காக்களில் மேய்ச்சல் பூமியே இல்லை. மேய்ச்சல் பூமிக்கு இடம் கொடுத்துவிட்டோம். மாடுகளுக்கு நல்ல விதமான மேய்ச்சலுக்கு வகைசெய்து விட்டோம் என்று நாம் நினைத்துக் கொண்டு, ஒரு வரம்பை நாம் நிர்ணயித்திருக்கிறோம். உண்மையில் பல இடங்களில் மேய்ச்சல் பூமியே இல்லை என்பதைக் கவனிக்காமல் நாம் இவ்வாறு நிர்ணயித்திருக்கிறோம்.

எனவே, அவர்களுக்கு அவர்கள் கூறுவதுபோல, 'கேட்டில் ஃபீடரு'க்கு (Cattle fodder) *1/3* பங்கு நிலம் ஒதுக்க வேண்டுமென்ற நிலை ஏற்படுமானால், பாக்கியுள்ள பகுதியை வைத்துக்கொண்ட நாம், விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்று நினைக்கும் சராசரி வருமானத்தைச் சரிக்கட்ட முடியுமா என்பதையும் 'ஜாயின்ட் ஸெலக்ட் கமிட்டி' கவனிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இதையெல்லாம் நன்றாகப் பரிசீலிக்கவேண்டும். மேய்ச்சல் நிலம் இல்லாத பிரதேசங்களில் 'கேட்டில் ஃபீட்டரு'க்கு விவசாய பூமியில் மூன்றில் ஒரு பகுதியை ஒதுக்க வேண்டிய நிலைமையையும் கவனித்து, எஞ்சியுள்ள பகுதியில் விவசாயிகளுக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தைக் கொடுக்கும் பொருளாதாரத்திற்கு வகைசெய்ய முடியுமா என்பதையும் கவனித்துச்சட்டம் இயற்ற வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

'மார்ட்கேஜ், 'மார்ட்கேஜி' இவை பற்றியெல்லாம் ஒரு ஷரத்து இந்த மசோதாவில் இருக்கிறது. அதன்படி, உச்சவரம்புக்குமேலே நிலம் வைத்திருப்பவர், அதை இழந்து விடுவார். ஒத்திவைத்தவர், ஒரு ரூபாயும் கொடுக்க வேண்டாம். ஏதோ ஒரு அளவுக்குப் பணம் நிர்ணயம் பண்ணுவார்கள். 'செக்யூரிட்டி'யைப் பொருத்தவரையில், அதே நிலத்தைச் 'செக்யூரிட்டி' கொடுப்பதற்கு இடம் இருக்கிறது. இந்த நிலையில், பெரிய அளவில் 'எக்ஸ்ப்ரோப்ரியேஷன்' செய்யும் போது, கடன் கொடுத்தவர்களுக்குப் பணம் இல்லை என்று சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்வதைவிட வேறு விதமாக விதிக்கலாம்.

முன்பெல்லாம் முப்பது வருஷங்கள் அனுபவமிருந்தவர்களிடமிருந்து கடனைத் திரும்பப் பெறத் 'தேவையில்லை' என்று சொல்லி வந்திருக்கிறோம். அத்தகைய ஷரத்தைப் போட்டு, அதை அமல்செய்து, நிலத்தை அவர்களுக்குச் சொந்தமாக்கலாம். அவ்வாறு செய்தால், 'நிலமும் அவர்களுக்குச் சொந்தம்; அவர்கள் கடனைத் திரும்பத் தர வேண்டியதில்லை' என்று விதிப்பது விநோதமாக இருக்கிறது. ஒன்று கடன் நிவாரண சட்டத்தைப் பிரயோகித்து, மீதிக் கடனை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்;அல்லது, சர்க்கார் அதற்கான பணத்தை அவர்களுக்குக் கொடுத்து 'ரெவீன்யூ ரெகவரி ஆக்ட்' 'பிரகாரம் 'காம்பன்ஸேஷன்' வசூலிப்பதுபோன்ற முறையைக் கையாளவேண்டும். அதுதான் நியாயமே தவிர, "சொத்துகளை மாத்திரம் திருப்பிக்கொடுக்க வகைசெய்திருக்கிறோம்" என்று சொல்வது எவ்வளவு தூரம் நியாயத்திற்கும் விவாதத்திற்கும் பொருந்தும் என்று பார்க்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இனாம் நிலங்களைப்பற்றி VIIIth சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது. *3000* கிராமங்களில் நிலங்கள் இன்னும் இனாம் நிலங்களாகவே இருக்கின்றன. அந்த நிலங்களுக்கு இன்னும் பரிகாரம் எற்படவில்லை. ஜமீன் நிலங்களுக்குப் பரிகாரம் கொடுத்திருக்கிறோம்; ஜமீன் நிலங்களுக்கு 'ரயத்துவாரிப் பட்டாக்'கள் வழங்கியிருக்கிறோம்; அந்த நிலங்களை அனுபவிப்பவர்கள், 'ரயத்துவாரிப் பட்டாதாரர்'களாக இருக்கிறார்கள்.

ஆனால், இனாம் நிலங்களுக்கு, இன்னும் பரிகாரம் கொடுக்கவில்லை. அவைகளுக்கு இரண்டு வருஷ வாய்தா கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்குச் 'செட்டில்மெண்ட்' பண்ணவேண்டுமென்று நான் எத்தனை தடவை வற்புறுத்தினாலும், வேண்டாத வேலை வற்புறுத்துவதாகக் கனம் அமைச்சர் நினைத்தார்.

இப்போது 3000 இனாம் கிராமங்களுக்கு, 'செட்டில்மெண்ட்' வேலை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வருட காலத்திற்குள் இந்த வேலை முடிந்துவிடுமா, முடியாதா என்று நான் சந்தேகப்படுகிறேன். சில ஜமீன் பிரதேச நிலங்கள்கூட இன்னும் 'செட்டில்மெண்ட்' ஆகவில்லை. 10, 12 வருஷங்களாக 'செட்டில்மெண்ட்' வேலைசெய்து வந்தும் அவை இன்னும் பூராவும் 'செட்டில்மெண்ட்' ஆகவில்லை. அப்படியிருக்க இந்த 3000 இனாம் நிலங்களுக்கு இரண்டு வருடத்தில் 'செட்டில்மெண்ட் செய்துவிட முடியுமா? எப்படியிருந்தாலும், இவைகளுக்கு இந்த இரண்டு வருடத்தில் 'செட்டில்மெண்ட்' செய்வதற்கு சர்க்கார் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

ஜமீன் பிரதேசங்கள் சம்பந்தமாக எடுத்த நடவடிக்கைகளையே சர்க்கார் இந்த நிலங்கள் சம்பந்தமாகவும் எடுப்பார்களோ, அல்லது வேறு எந்த முறைகளைக் கடைப்பிடிப்பார்கள்? இவைகளுக்கென ஒரு 'லாண்ட் கமிஷ்னர்' சர்க்கார் நியமிக்கப் போகிறார்கள். ஜில்லா வாரியாக அதிகாரிகளை நியமித்து எல்லா ஜில்லாக்களிலும் இந்த வேலையை எடுத்துக்கொண்டு ஆறு மாதங்களுக்குள் ஒரு 'அட்மினிஸ்ட்ரேட்டிவ் ட்ரைவ்ஷன்' மாத்திரம் இருந்தால் இது சாத்தியமாகும். 'ஏதோ நடக்கட்டும்' என்று அசிரத்தை இப்போது சர்க்காருக்கு இருக்கிறது.

இனாம் நிலங்களைப் பொருத்தவரையில், இந்த அசிரத்தையைக் கட்டாயம் நீக்கவேண்டும் இந்த நிலங்களைப் பொருத்தவரையில் இவைகளில் 3000கிராமங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. வேறு மக்களின் பிரச்சினையாக இருந்தால், உதாரணமாக ஆலைத் தொழிலாளர்களின் பிரச்சினையாக இருந்தால், சட்டசபையில் தீர்மானம் பிறப்பிக்கப்பட்டிருக்கும். சபையின் 41வது விதியின்படி பிறப்பாணை கொண்டுவரப்பட்டிருக்கும். எல்லாம் வந்திருக்கும்.

நாடு சுதந்திரம் அடைந்து 10 வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. நிலச்சீர்திருத்த சட்டத்தை இயற்றுவதற்கு இப்பொழுது முன்வரும்போது, இனாம் நிலங்கள் சம்பந்தமாகச் 'செட்டில்மெண்ட்' முடிவதற்கு இன்னும் இரண்டு வருட வாய்தா கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறோம். சர்க்கார் அதையாவது கொடுத்தார்களே என்று ஆறுதல் அடையத்தான் வேண்டியிருக்கிறது.

இந்த இனாம் நிலங்கள் சம்பந்தமான 'செட்டில்மெண்ட்' பொருத்தவரையில், சர்க்கார் இந்த வேலையைப் பிரதேச வாரியாக எடுத்துக்கொண்டு ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு 'செட்டில்மெண்ட் ஆபீசர்' போட்டு வேலை செய்தால், இந்த வேலை நிச்சயம் ஆறுமாத காலத்தில் முடிந்துவிடும். அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதற்குரிய முறையில் VIIIவது 'சோப்ட'ரை அமைக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். மேலும், இதில் மேல்வாரம், குடிவாரம், குடிவாரத்தார் என்ற பிரிவினையெல்லாம் குறிப்பிடுகிறோம். எப்படியும் இந்த வேலையை இரண்டு வருடங்களில் இல்லாமல், ஆறுமாத காலத்திற்குள் முடிப்பதற்கு வகைசெய்யவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவில்

ஆனால், இனாம் நிலங்களுக்கு, இன்னும் பரிகாரம் கொடுக்கவில்லை. அவைகளுக்கு இரண்டு வருஷ வாய்தா கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்குச் 'செட்டில்மெண்ட்' பண்ணவேண்டுமென்று நான் எத்தனை தடவை வற்புறுத்தினாலும், வேண்டாத வேலை வற்புறுத்துவதாகக் கனம் அமைச்சர் நினைத்தார்.

இப்போது 3000 இனாம் கிராமங்களுக்கு, 'செட்டில்மெண்ட்' வேலை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வருட காலத்திற்குள் இந்த வேலை முடிந்துவிடுமா, முடியாதா என்று நான் சந்தேகப்படுகிறேன். சில ஜமீன் பிரதேச நிலங்கள்கூட இன்னும் 'செட்டில்மெண்ட்' ஆகவில்லை. 10, 12 வருஷங்களாக 'செட்டில்மெண்ட்' வேலை செய்து வந்தும் அவை இன்னும் பூராவும் 'செட்டில்மெண்ட்' ஆகவில்லை. அப்படியிருக்க இந்த 3000 இனாம் நிலங்களுக்கு இரண்டு வருடத்தில் 'செட்டில்மெண்ட் செய்துவிட முடியுமா? எப்படியிருந்தாலும், இவைகளுக்கு இந்த இரண்டு வருடத்தில் 'செட்டில்மெண்ட்' செய்வதற்கு சர்க்கார் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

ஜமீன் பிரதேசங்கள் சம்பந்தமாக எடுத்த நடவடிக்கைகளையே சர்க்கார் இந்த நிலங்கள் சம்பந்தமாகவும் எடுப்பார்களோ, அல்லது வேறு எந்த முறைகளைக் கடைப்பிடிப்பார்கள்? இவைகளுக்கென ஒரு 'லாண்ட் கமிஷ்னர்' சர்க்கார் நியமிக்கப் போகிறார்கள். ஜில்லா வாரியாக அதிகாரிகளை நியமித்து எல்லா ஜில்லாக்களிலும் இந்த வேலையை எடுத்துக்கொண்டு ஆறு மாதங்களுக்குள் ஒரு 'அட்மினிஸ்ட்ரேட்டிவ் ட்ரைவ்ஷன்' மாத்திரம் இருந்தால் இது சாத்தியமாகும். 'ஏதோ நடக்கட்டும்' என்று அசிரத்தை இப்போது சர்க்காருக்கு இருக்கிறது.

இனாம் நிலங்களைப் பொருத்தவரையில், இந்த அசிரத்தையைக் கட்டாயம் நீக்கவேண்டும் இந்த நிலங்களைப் பொருத்தவரையில் இவைகளில் 3000கிராமங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. வேறு மக்களின் பிரச்சினையாக இருந்தால், உதாரணமாக ஆலைத் தொழிலாளர்களின் பிரச்சினையாக இருந்தால், சட்டசபையில் தீர்மானம் பிறப்பிக்கப்பட்டிருக்கும். சபையின் 41வது விதியின்படி பிறப்பாணை கொண்டுவரப்பட்டிருக்கும். எல்லாம் வந்திருக்கும்.

நாடு சுதந்திரம் அடைந்து 10 வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. நிலச்சீர்திருத்த சட்டத்தை இயற்றுவதற்கு இப்பொழுது முன்வரும்போது, இனாம் நிலங்கள் சம்பந்தமாகச் 'செட்டில்மெண்ட்' முடிவதற்கு இன்னும் இரண்டு வருட வாய்தா கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறோம். சர்க்கார் அதையாவது கொடுத்தார்களே என்று ஆறுதல் அடையத்தான் வேண்டியிருக்கிறது.

இந்த இனாம் நிலங்கள் சம்பந்தமான 'செட்டில்மெண்ட்' பொருத்தவரையில், சர்க்கார் இந்த வேலையைப் பிரதேச வாரியாக எடுத்துக்கொண்டு ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு 'செட்டில்மெண்ட் ஆபீசர்' போட்டு வேலை செய்தால், இந்த வேலை நிச்சயம் ஆறுமாத காலத்தில் முடிந்துவிடும். அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதற்குரிய முறையில் VIIIவது 'சோப்ட'ரை அமைக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். மேலும், இதில் மேல்வாரம், குடிவாரம், குடிவாரத்தார் என்ற பிரிவினையெல்லாம் குறிப்பிடுகிறோம். எப்படியும் இந்த வேலையை இரண்டு வருடங்களில் இல்லாமல், ஆறுமாத காலத்திற்குள் முடிப்பதற்கு வகைசெய்யவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவில்

ஐந்து ஏக்கர்வரையில் 'பெர்சனல் கல்டிவேஷனுக்கு' ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இது வரவேற்கத் தகுந்த அம்சம். இனிமேல் இருக்கக்கூடிய குட்டி நிலச்சுவான்தார் யாரும் ஐந்து ஏக்கருக்குமேல் நிலம் உடையவராக இருக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் நாங்கள் வரவேற்பதாக நினைக்கக்கூடாது. இதை ஏன் வரவேற்கிறோம் என்றால், இன்றுவரையில் நிலத்தில்தான் 'இன்வஸ்ட்மெண்ட்' இருந்து வந்திருக் கிறது. அது எங்கள் குற்றமா, எங்கள் மூதாதையர் குற்றமா தெரியாது! நொண்டுகள், மைனர்கள், 'க்ரைம்' பெண்கள் ஆகியவர்களுக்கு அந்தக் காலத்திலிருந்து நிலத்தில்தான் சொத்து எழுதி வைத்திருக்கிறார்கள்.

இந்த 60, 40 வாரச் சட்டம் வந்து 40 வாரம்கூட கிடைக்காத பெண் நிலச்சுவான்தாரர்களை எனக்குத் தெரியும். நெல்லை ஜில்லாவில், ஆறுவைமங்கலம் என்ற குளத்தில் 2500 பட்டாதாரர்களும், 500 விவசாயிகளும் இருக்கிறார்கள் என்றால், அங்கே யார் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்று நாம் பார்த்துக்கொள்ளலாம். அங்கே இருக்கிற நிலங்களோ 2000 ஏக்கர்தான். இப்போதாவது நிலச்சுவான் தாரர்களுக்குப் 'பர்சனல் கல்டிவேனு'க்கு இவ்வளவு நிலம் அனுமதிப்பதைப் பாராட்டவேண்டியதுதான். இது 'செலக்ட் கமிட்டி'க்குப் போய்விட்டு வரும்போது மாறுதல் இல்லாமல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

''நாம் புத்தகத்தில் படித்ததுதான் 'புராக்ரஸிவ்' இது 'புராக்ரஸிவ்' இல்லை'' என்று வேறுவிதமாகத் தீர்மானித்துவிடக் கூடாது என்று 'செலக்ட் கமிட்டி'க்குப் போகக்கூடிய அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவைக் குறைக்கக்கூடாது என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் 6 ஏக்கர்வரையில் சொந்தமாக விவசாயம் செய்யலாம் என்று 'டெனென்ஸி லீஸிங்' கிற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் பலவிவசாயிகள் சொந்தமாக 10, 11 ஏக்கர்கள் விவசாயம் செய்கிறார்கள். மேலும், 'பெர்சனல் (Personal) கல்டிவேஷ்' னுக்கு நிலவரம்பு நிர்ணயிக்கும்போது, சில பிரதேச வாரியாக நிர்ணயிக்கலாம். அவ்வாறு நிர்ணயிக்கும்போது சில பிரதேசங்களில் அதிகமாகக்கூட அனுமதிக்கலாம். எல்லாப் பிரதேசங் களுக்குமே இது 66 ஏக்கர்களாகத்தான் இருக்கவேண்டுமென்பதில்லை. 'டெனென்ஸி லீஸிங்'கிற்கு அதிகமாக நிலம் கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த ஷரத்தையும் 'செலக்ட் கமிட்டி'யினர் பரிசீலிக்க வேண்டுகின்றேன் சொல்லிக் கொள்கிறேன்.

'கிரேசிங்கிரவுண்டு'க்கு 'எக்ஸம்ப்ஷன்' கொடுக்கப்பட்டிருக்கிறது. 50 ஏக்கர்வரை எக்ஸம்ப்ஷன்' கொடுத்திருக்கிறார்கள். 'கிரேசிங் கிரவுண்டில்' வேறு எதுவும் செய்யமுடியாது. 50 ஏக்கருக்குமேல் இருக்கிறதென்று சொல்லி, பாக்கி பூராவையும் நாம் எடுப்பது என்றாலும், அந்த நிலத்தை யாரும் வந்து கேட்க மாட்டார்கள். விவசாயிகள் தங்களுக்கு வேண்டுமென்று 'அப்ளிகேஷன்' போட்டால், கொடுப்பது பற்றி ஆட்சேபனையில்லை. அந்த 'ரைட்'டை 'லாண்ட் போர்டு' வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். 'சர்ப்ளஸ் லாண்ட்' ஒரு லட்சம் ஏக்கர் என்று புள்ளிவிவரம் போட்டு, அந்த 'கிரேசிங்-லாண்ட்' முழுவதையும் 'கோன்வாப்பரைட்டிவ் டெடன்சி சொசைட்டி'கள் எடுத்து நடத்த 'கோன்வாப்ப ரைட்டிவ் டென்டன்சி சொசைட்டி'களை ஏராளமாக அமைத்து அதன்மூலம் சர்க்கார் பணம் போய்விடக் கூடாது.

ஐம்பது ஏக்கருக்குமேல் இருக்கக்கூடிய நிலத்தை எடுத்துக்கொள்வது என்பதில் 'க்ரேசிங் கிரவுண்ட் சர்ப்ளஸ்', பேர்பாதியிருக்கும். கிணறு வெட்டினால், 25 ஆயிரம், பம்புசெட்டுகளுக்கு 'ஸ்பெனுல் கனெக்ஷன்' கொடுத்து 50 ஆயிரம் ரூபாய் பொதுப்பணத்தைப் போட்டு ஒரு பெரிய 'எக்ஸ்பிரிமெண்டி'ல் போய் இறங்கிவிடக்கூடாது. 'கோவாப்பரேடிவ்' முறைக்கு இதைக்கொண்டுபோனால் நல்லமுறையில் நடத்தமுடியாது. பிறகு, 'கோவாப்பரேட்டிவ்' என்றால் இப்படித்தான் நடக்கும் என்றும் சொல்லக்கூடிய நிலைமைக்குப் போய்விடக்கூடாது. அந்த முறையில், இந்த 'க்ரேசிங் கிரவுண்ட்' ஐம்பது ஏக்கருக்குமேல் இருக்கக்கூடாது என்று விதிகள் வைத்துக்கொண்டு 'சர்ப்ளஸ் லாண்டை' உபயோகப்படுத்தும்போது, 'கிரேசிங் கிரவுண்'டாக உபயோகப்படுத்த வேண்டுமா, அல்லது ஏதாவது மாற்ற முடியுமா என்பதற்கான யோசனைகள் நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டும்.

'காம்பன்சேஷன்' விஷயமாக நான் எவ்வளவுதூரம் பேச அருகதையுள்ளவன் என்று தெரியவில்லை. எல்லா 'ஸ்டேட் காம்பன்சேஷ'னையும் பார்க்கும்போது, நம்முடைய 'ஸ்டேட்'டில் அதிகமாகக் காம்பன்சேஷன்' கொடுத்திருக்கிறார்கள். அது நியாயந்தான். எல்லா ஸ்டேட்ஸையும்விடக் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். 'காம்பன்சேஷனை'க் கொடுக்கும்போது நிலத்தின் 'வேல்யூ' எவ்வளவு என்று நிர்ணயித்துக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. ஏமாற்றம் இல்லாமல் இருக்க, பெரிய வருத்தங்களுக்கு இடமில்லாமல் இருக்க இவ்வாறு 'காம்பன்சேஷன் அமவுண்ட்' நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கத்தக்கதுதான்.

மற்ற மாகாணங்களைவிட அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். இதை இன்னும் கொஞ்சம் 'லிபரலைஸ்' பண்ண வேண்டுமென்ற முறையிலும் யாரும் பார்க்கவேண்டாம். இன்னும் கொஞ்சம் குறைத்துக் கொடுமைப்படுத்த வேண்டுமென்றும் பார்க்கவேண்டாம். இப்போது இருப்பது கூடியவரையில் நியாயமான அடிப்படையில் இருக்கிறதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

'ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷ'னுக்கு 200 ஏக்கர் நிலம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல், தனிப்பட்டவர்கள் ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷனுக்கு நிலத்தை எழுதி வைக்கக்கூடாது என்ற நிலைமைக்குச் சர்க்கார் வந்துவிட்டதுபோல் தெரிகிறது. இன்றைக்குக் கோயிலாக இருக்கலாம், மடமாக இருக்கலாம், வேலையில்லாத மடமாக இருக்கலாம், பாழடைந்த கோயிலாக இருக்கலாம், ஆனாலும், சமய வளர்ச்சி ஸ்தாபனங்களுக்கு ஒன்றும் 'ப்ரோவைட்' பண்ணவில்லை. சமய அறிவு, சமய ஆராய்ச்சி, சமயப் பண்பு ஆகியவற்றை வளர்க்கும் ஸ்தாபனங்களுக்கு நிலம் விற்கக்கூடாது என்ற தீர்மானத்திற்கு வந்திருப்பதாகத் தெரிகிறது.

'கோவாப்ப ரட்டிவ் பார்மிங்' நல்ல முறையில் நடந்து வந்திருக்கிறது என்றால், அவைகள் கோயில் சொத்தாகத்தான் இருக்கும். அந்தச் சொத்தைப்பற்றி அதிக அக்கறை இல்லாமல் சட்டமே இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம். 'லாண்ட் சீலிங்' கொண்டு வருவதற்கு முன்னாலே 'சர்ப்ளஸ் லாண்டை' விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு இந்தச் சட்டமில்லாமல் அதிகாரங்கள் இருந்து வந்தன. அந்த அதிகாரத்தை இப்போது சட்டம் பண்ணுகிறோம். இந்தச் சட்டத்தில்

இந்த மாதிரி அம்சத்தைக் கொண்டுவர வேண்டியதுதான்.

'கோவாப்ப ரட்டிவ்' முறையில் கோயில் நிலங்களும், மடத்தின் நிலங்களும் நல்லமுறையில் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. எப்படி மடத்துக்கும் கோயிலுக்கும் நிலம் சேர்த்தால் 'ஹாண்டிகாப்' ஏற்படுகிறது?

சமயத்தில் நம்பிக்கையில்லாதவர்களைப்பற்றிக் கவலையில்லை. நம்பிக்கையுள்ளவர்களுள் நானும் ஒருவன். அந்தமட்டும் நம்பிக்கை போய்விட்டது என்று சொல்லமுடியாது. சமய ஸ்தாபனங்களுக்கு, இந்தச் சொத்துக்கள் சேரவிடக்கூடாது என்று சொல்வதைவிட, சொத்துக்கள் சேர்த்தாலும், அதிலே உழைப்பவனுக்கு அதிக உரிமை இருக்க வேண்டுமென்ற முறையில் சட்டம் அமைய வேண்டிய வகையில் பரிசீலனை செய்யவேண்டும்.

இந்தச் சட்டசபைக்கு அப்பாற்பட்டு எத்தனையோ லட்சம் பேர், சமயப் பண்பும் சமய நாகரிகமும் சமயத்தில் நம்பிக்கையும் வைத்துள்ளவர்கள் இருக்கிறார்கள். நம்பிக்கை அடிப்படையில்தான் சர்வ விவகாரமும் நடக்கிறது. இந்த அடிப்படையில் பார்க்கவேண்டுமேதவிர, சட்டத்தின் அடிப்படையில் பார்க்கக் கூடாது. இதைப் பண்ணுவதற்கு முன்னால், சமய ஸ்தாபனங்களுக்கு எந்தவிதமான 'எண்டெளமெண்ட்' செலவுஎன்றுதீர்மானம்பண்ணிக்கொண்டு உழைப்பவன் பங்கு நிர்ணயிக்கும் இந்த 'செலக்ஷ்'னைப் போடலாம்.

ஒரு ஏக்கர் வைத்திருக்கும் பெண்மணி, குழந்தை இல்லாவிட்டால், பக்கத்தில் உள்ள விநாயகர்கோயிலுக்கு எழுதிவைக்கலாம். அவ்வாறு எழுதி வைப்பதை இந்தச் சட்டம் தடைசெய்கிறது. இந்த உலகத்தில்மனிதனுடையவாழ்க்கை 30வருஷம், 40வருஷம்என்றுசராசரியாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. 46 வருஷக் வாழ்க்கையில் 10 வருஷம் வேண்டுமானாலும் ஒழுங்காக வேலை செய்திருப்பான். மற்ற நேரம் எல்லாம்தூக்கத்திலும் வேறுவழிகளிலும் செலவாகியிருக்கும். 'இதற்கு அப்பாலும், இதற்கு முன்னாலும் நாம் இருந்தோம்' என்ற நம்பிக்கைகள் இருக்கிறதே, அந்த நம்பிக்கைக்கு உலை வைக்கிறது.

இந்தச்சட்டசபையில்கொண்டுவரப்பட்டிருக்கும் 'சமய ஸ்தாபனங்கள் நிலஉடைமை உச்சவரம்பு', அந்த 'எஃபக்ட்'டை ஏற்படுத்தியிருக்கிறது. இதையும் பரிசீலனைசெய்யவேண்டும்.

''மத நம்பிக்கையுள்ளவர்கள் விரும்பினால் கொடுக்கலாம்'' என்றிருக்கலாம்.

சட்டம் இல்லாத காலத்தில், சமய ஸ்தாபனங்களிடம் இருந்த சொத்துக்கள் மூலம்நல்லபொருளாதாரத்திற்குவாய்ப்பு ஏற்பட்டது. இந்தச் சட்டத்தைப் பரிசீலிக்கக்கூடிய 'ஜாயிண்ட் செலக்ட் கமிட்டி'யில் இந்தச் சபையில் உள்ள பெரும்பாலான அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்கள் இங்குக் கூறப்படுகின்ற கருத்துகளையெல்லாம் நல்ல விதமாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தொழில் வளர்ச்சி குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

நாடு விடுதலைபெற உழைத்தவர்களுள் பாரதிக்கு முக்கிய இடமுண்டு. சுதந்திர நாட்டில் மக்கள் வாழவேண்டிய முறைமையைப் பாரதியார் அழகுபெறப் பாடியுள்ளார்.

"வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் - இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்"

எனக் கூறி, உழுதொழில் செய்தலின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். அத்துடன் நாட்டின் தொழில்வளம் பெருகவேண்டியதன் முக்கியத்துவத்தையும் கூறியுள்ளார்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்றும், "உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்" என்றும் பாடி தொழில்வளத்தைப் பெருக்க வேண்டியதையும் பாடியுள்ளார்.

இவ்வகையில், நம் தமிழகத்தின் 'தொழில்வளர்ச்சி' குறித்த ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் உரைகளில், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி குறித்த அவருடைய நுணுக்கமான அறிவும், தெளிவான புரிதலும் வெளிப்படுகின்றன. பெரிய தொழிற்சாலைகள், சிறிய தொழிற் சாலைகள், குடிசைத் தொழில்களின் செயல்பாடுகள் பற்றியும், அவை சந்திக்கும் சவால்கள் பற்றியும் தெள்ளத் தெளிவாக அறிந்திருக்கிறார்.

அதைப்போல், தனியார் மயம், அரசுடைமை, கலப்புப் பொருளாதாரம் ஆகியவற்றின் பலன்களையும், அவற்றில் காணப்படும் சிக்கல்களையும் தெரிந்து வைத்திருக்கிறார். தம்முடைய தொகுதியை அடுத்திருக்கும் கோவில்பட்டியில் பரவலாக இருக்கும் தீப்பெட்டித் தொழில், நெசவுத் தொழில்

பற்றி அடிக்கடி பேசுகிறார். தீப்பெட்டித் தொழிலுக்கு வரிச்சலுகை தேவையென்றும், நெசவுத்தொழிலுக்குத் தரமான மூலப்பொருளான பருத்தி தேவையென்றும் வலியுறுத்துகிறார். 'மில்' நூற்பில் அன்றிருந்த தேக்கநிலையிலிருந்து வெளியேற, ஜப்பானில் கடைப்பிடிக்கப்படும் 'பேக் பிராசஸ்' (Back process) உதவும் என்று கருத்து தெரிவிக்கிறார்.

இந்த உரைகளில், ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் எடுத்தியம்பும் புள்ளிவிவரங்களும், தொழில் நுட்ப விளக்கங்களும், இவ்விரண்டிலும் அவருக்கிருந்த நுட்பமானஅறிவைத் தெளிவாக்குகின்றன.

தொழில்துறை தொடர்பான விவாதங்களிலும், மானியக் கோரிக்கைகளிலும் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் பலமுறை கலந்துகொண்டிருக்கிறார். இவ்விவாதங்களில் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான நிலக்கரி, வார்ப்பு இரும்பு ஆகியவற்றின் தேவையை வலியுறுத்துகிறார். இவற்றின் விலை அதிகரித்தால், தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும். எனவே, அரசு இதில் கவனம் செலுத்துவது மிக முக்கியம் என்கிறார்.

நிலக்கரி, வார்ப்பு இரும்பு ஆகியவற்றிற்குப் பொதுவிலை (Pool Price) நிர்ணயிக்கப்படவேண்டுமென்ற விவாதம் இன்றுவரை தொடர்கிறது. நாடெங்கும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஒரே விலையில் விற்கப்படுகின்றன. இவை கிடைக்கும் மாநிலங்களில் இவற்றுக்கான விலையும், இவை கிடைக்காத மாநிலங்களில் இவற்றிற்கான விலையும் ஒன்றாகவே உள்ளன. இவ்வாறு பொதுவிலை (Pool Price) நிர்ணயிக்கப்படாவிட்டால், தொழில்களைச் செய்வதற்கு முக்கியமான கனிமங்கள் அதிகம் கிடைக்காத மாநிலங்களில், இவற்றின் விலை அதிகரிக்கும். இதனால், இம்மாநிலங்களின் தொழில் முயற்சிகள் பின்னடையும். இதையடுத்து நாடெங்கும் சீரான தொழில் வளர்ச்சி இருக்காது.

இந்திய நாட்டின் தென்கோடியில் இருப்பதால், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் தொழிற்சாலைகளுக்கு இக்கனிமங்களைக் கொண்டுவருவதற்கான போக்குவரத்துச் செலவு அதிகமாகும். இச்செலவு கனிமத்தின் விலையுடன் சேர்க்கப்படும்போது, இவற்றின் விலை அதிகரிக்கும். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான் 1950-60களிலேயே பொதுவிலை தேவையென்று ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார். ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் அன்று வலியுறுத்தியது, அவருடைய தொலைநோக்குப் பார்வைக்குக் கட்டியம் கூறுகிறது.

இன்றும், பொதுவிலை குறித்து எழும் விவாதங்களை 2013 மே 27 அன்றைய 'Business Standard' என்ற பத்திரிகையில் காணலாம். 2013ஆம் ஆண்டு அன்றைய மத்திய தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு ஆனந்த் சர்மா, நிலக்கரிக்குப் பொது விலை (Pool Price) தேவையென்று குறிப்பிட்டார். இதே கருத்தை 1961 மார்ச் 2 அன்றும், 1962 ஏப்ரல் 24 அன்றும் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு பொது விலை நிர்ணயிக்கும்போது, தொழில் வளர்ச்சி தடைப்படாதென்று அன்றே விளக்கியுள்ளார்.

அதேபோல், நாடெங்கும் மாநிலத்திற்கு மாநிலம், தொழில் முன்னேற்றத்தில் ஏற்றத்தாழ்வு (Imbalance) இருக்கக்கூடாதென்பதைப்போல, மாநிலத்திற்குள்ளேயே வட்டார ஏற்றத்தாழ்வு (Regional imbalance) இருக்கக்கூடாதென்பதை அறிவுறுத்துகிறார். இவற்றையெல்லாம் விளக்கி, 1966 மார்ச் 17 அன்று

ஆற்றிய உரையின் ஒவ்வொரு பகுதியிலும் 'இருக்கும் வாய்ப்புகளையும், வளங்களையும் பொருத்து, அங்குத் தொழிற்சாலைகள் அமையலாம்' என்பதை வலியுறுத்துகிறார்.

எனவே, தூத்துக்குடியில் உப்பு உற்பத்தி அதிகமாக இருப்பதால், அப் பகுதியில் 'சோடா ஆஷ்' தயாரிக்கலாம் என்றது, அவர் காலத்திற்குப் பின்னர் நிஜமானது!

அனுமதி பெற்றபின் தொழிலைத் தொடங்காமையால் விளையும் தீமைகளையும், பனைப்பொருள் தயாரிப்பு, தீப்பெட்டித் தொழில் போன்றவற்றிற்கு வரிவிலக்கு அளிப்பதால் தொழில்கள் வளர்ச்சி பெறும்முறை பற்றியும், தொழில் துறை வளர்வதற்குரிய நெறிமுறைகள் பற்றியும், கைத்தறி நெசவாளர்களை ஆலை முதலாளிகளின் பிடியிலிருந்து விடுவிக்கவேண்டியதன் அவசியம் பற்றியும், 'சோஷலிசம்' என்பது எப்படி இயங்கவேண்டும் என்பது பற்றியும், தொழில்களின் வளர்ச்சிக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு ரிசர்வ் வங்கி நடைமுறைகள் மாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தியும், தொழில் பேட்டைகளை மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கவேண்டிய அவசியம் பற்றியும் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் ஆற்றிய உரைகள் எக்காலத் திற்கும், நாட்டின் எப்பகுதிக்கும் சிறந்த வழிகாட்டுதலாக அமையும் என்பதில் ஐயமில்லை!

1962 ஜூலை 2 அன்று ஆற்றிய உரைப் பகுதி:

''தேசியமயமாக்கலினால் அரசாங்கத்தின் வருமானமானது, தற்போது திட்டமிட்டிருக்கும் அளவைவிட அதிகமாக இருக்கும்" என்ற ஆலோசனையை, முதன்முதலாகப் பேசிய எதிர்க்கட்சி நண்பர் கூறினார். தொழில்களை எல்லாம் தேசிய மயமாக்குவதன் மூலமாக வரிப் பளுவே இல்லாமல், நிர்வாகத்தை நடத்தமுடியும். அம்மாதிரி பல தேசங்களில் நடைபெற்று வருகிறது. தேசியமயமாக்கலினால் அதன்மூலம் ஏராளமான லாபத்தை நாம் அடையவேண்டும். அவ்வாறு லாபம் அடையவேண்டுமானால், அதிக அளவுக்கு விலைகளை நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கும்.

ஒருபக்கம், விலைவாசிகளைக் குறைக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிவிட்டு, இன்னொரு பக்கம், தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்வது, வளர்ந்துவரும் பொருளாதாரத்தை மேற்கொள்ளும்போது, போதிக்கவேண்டிய பிரச்சினையாகும். தேசியமயமாக்குவதானால், ஒரு பெரிய விலைவாசி ஏற்றம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. '

'தனியார் துறைக்குத் தொழில்களை ஒதுக்கிக் கொடுத்துவிட்டால், அந்தத் தொழிலின்மூலம் கிடைக்கும் லாபம் பூராவும், தனியார் துறைக்கே கிடைக்கிறது'' என்ற அபிப்பிராயம் தவறானதாகும். சமீபத்தில், ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். 'சினிமாக்காரர்களுக்கு எவ்வளவு வரி விதிக்கப்படுகிறது' என்ற விவாதத்தைக் காட்டும் விளம்பரம் அது! 'வருவாயில் 15 சதவிகிதம்தான் அவர்களுக்குக் கிடைப்பதாகவும், 75 சதவிகிதம் தீர்வையாகப் போய்விடுகிறது என்றும்' அதில் கூறியிருந்தனர்.

ஆகவே, பெரும் லாபத்தைக் கட்டுப் படுத்த ஆலோசனை சொல்லும்போது, அதன்மூலம் சர்க்காருக்கு எவ்வளவு தூரம் வருவாய் கிடைக்கிறது என்பதை எண்ணிப் பார்த்துச் சொல்லவேண்டும். நாம் எவ்வளவு வேகமாகத் தொழில் வளத்தில் முன்னேற வேண்டுமென்று

ஆசைப்பட்டாலும், நம்முடைய லட்சியத்தை அடைய வேண்டுமென்று முற்பட்டாலும், நாம் வெகு குறைவாகவே முன்னேறி இருப்பது தெரிகிறது. நம்முடைய அபிலாஷைகள் முழுதும் பூர்த்தி செய்யப்படவில்லை, ஏக்கத்தோடுதான் இருக்கிறோம்.

பொதுத்துறையோ, தனியார் துறையோ நாட்டிலே பெரிய தொழில் வளம் ஏற்பட்டால்தான், நாம் நினைக்கிற 'சோஷலிச' சமுதாயத்தை நிறுவமுடியும். இந்தக் குறைபாடுகளை யெல்லாம் யோசித்துப் பார்த்து, தேசியமயமாக்குவதன் குறைகளையும் எடுத்துக் கூறினால் நல்லது. அவ்வாறு இந்த இரண்டு கண்ணோட்டத்தோடு மீண்டும் அவர்கள் பரிசீலனை செய்து, ஆலோசனை, செய்வார்களானால், நாமும் அதுபற்றிப் பரிசீலிக்க வேண்டியது அவசியந்தான்!

நாம் பலவகைத் தொழில்களை நிறுவுவதற்கு முயற்சி எடுத்து வருகிறோம். ஆனால், அதற்கேற்ற அளவு தொழிற் சாலைகள் ஏற்படவில்லை. ஒரு தொழிலை ஆரம்பிக்க 'லைசென்ஸ்' கொடுத்தால் 7, 8 வருஷங்களுக்குக்கூட அதை ஆரம்பிக்காமல் இருக்கிறார்கள். திருச்சிராப்பள்ளியில், 'மூலாசிஸ் ஸ்பிரிட்' தயாரிப்பதற்கான தொழிற்சாலைக்கு 'லைசென்ஸ்' வழங்கப்பட்டு இரண்டு வருஷம் ஆகிறது. 'ஸ்பிரிட்' தயாரிப்பதற் காக முதலில் 'லைசென்ஸ்' வழங்கப்பட்ட பிறகு, அவர்கள் அதைத்தயாரிக்கும்போது மேலும் இரண்டு பொருள்களை அதன்மூலம் உற்பத்தி செய்வதற்கான ஆலோசனையில் ஈடுபடுகிறார்கள். முதலிலே 'ஸ்பிரிட்' தயாரிப்பதற்காக ஆரம்பித்து, பிறகு இன்னொரு துணைப் பொருளை உண்டாக்கினால், தயாரிப்புச் செலவு குறையும் என்ற ஆலோசனையில் இறங்கிவிடுவதால் தொழிலை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படுகிறது.

ஆகவே, இந்த மாதிரி 'லைசென்ஸ்' கொடுக்கும்போது, ஒரு வருஷத்திற்குள் ளாகவோ, இரண்டு வருஷத்திற்குள் ளாகவோ தொழிலை ஆரம்பிக்கா விட்டால், வழங்கப்பட்ட 'லைசென்ஸ்' ரத்து செய்யப்பட்டு விடுமென்று விதிமுறையையும் செய்வது நல்லது. இவ்வாறு செய்வதால் தொழில் வாய்ப்புகள் பெருக வழி ஏற்படும்.

1958 மார்ச் 28 அன்று காலை 10.30 மணிக்கு ஆற்றிய உரை :

நம்முடைய ராஜ்யத்தில் இப்பொழுது ஒரு பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். எல்லா நூற்பு ஆலைகளும் ரொம்பத் தேக்கம் அடைந்திருக்கின்றன. அதற்கு முக்கியமாக வேண்டியது நல்ல பருத்தி. இப்பொழுது ராஜ்யத்தில் பருத்தியினுடைய தரம் குறைந்து வருகிறது. நீண்ட 'ஸ்டேபிள்' பருத்தி அதிகமாகத் கிடைப்பதில்லை. இதற்குப் பெருவாரியாக இறக்குமதியை நம்பித்தான் இன்னும் இருக்கிறோம். இப்பொழுதுள்ள நூல் தேக்கத்தைச் சரியாகச் சமாளிக்க வேண்டுமென்றால், உயர்ந்த ரக நூலை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நிலைமையில் மில்கள் இருக்க வேண்டும். 20, 25, 40ஆம் 'நம்பர்' நூல்களை உற்பத்தி செய்யும் நூல் ஆலைகள் தேக்கத்தின் காரணமாக 60, 80ஆம் 'நம்பர்' ரக நூலை உற்பத்தி செய்யவேண்டிய நிலைமையில் இருக்கின்றன. அதற்கு நல்ல ரகமான பருத்தி தேவையாக இருக்கிறது. ஆனால், ராஜ்யத்தில் இப்பொழுது நல்ல ரகமான பருத்தி விளையும் 'ஏரியா' குறைந்து வருகிறது என்று சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆகவே, பொறுக்கு விதைகள் அமல்படுத்தும் இந்த நேரத்தில், மாதிரிப் பண்ணைகள் அமல் நடத்தும் இந்த

நேரத்தில், எவ்வளவு தூரம், சீக்கிரமாகப் பருத்தியின் தரத்தை உயர்த்துவதற்கு, உயர்ந்த ரக வித்துக்களை ஜனங்களுக்கு வாரி வழங்கமுடியுமோ அப்படி வழங்கினால்தான், தேக்கம் அடைந்திருக்கும் தொழில் பொருளாதாரம் சீர் அடைய முடியும் என்ற நிலைமையில் இருக்கிறது என்றும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

1960 மார்ச் 12 அன்று ஆற்றிய உரை :

தற்காலிகத் தலைவியாரே! புதிய வரி ஏதும் இல்லாத இந்த வரவுசெலவுத் திட்டத்தை வரவேற்கும் முகத்தான் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். அதோடு சில இனங்களுக்கு வரிவிலக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த இனங்களோடு இன்னொரு இனத்தையும் சேர்த்துகொள்ளவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பனைமரத்திலிருந்து செய்யப்படும் சிறு தொழிலாகிய, தும்பு ஈர்க்குத் தொழிலையும் வரிவிலக்கு இனங்களோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். அந்தத் தொழில் மூலமாகச் சுமார் ரூ.40,000தான் சர்க்காருக்கு வருமானம். இந்தத் தொழில்செம்மையாக இயங்காவிட்டால் பாதிக்கப்படுபவர் பலர். இந்தத் தொழிலுக்கு உதவியாக இருப்பது, இந்தப் பொருள்கள் அமெரிக்க நாட்டுக்கு அதிகமாக ஏற்றுமதியாவதுதான்.

நிறைய 'ஸிந்தெடிக் பைபர்' வந்து விட்ட காலத்தில், இந்தக் கைத்தொழில் பொருளுக்குச் சர்வதேச மார்கெட்டில் அதிக விலைகிடைப்பதில்லை. விலைவாசி உயர்ந்திருக்கும் பொருள்களுக்கு வரி விதித்தால், இது ஒப்புக்கொள்ளக்கூடியது. ஆனால், இந்த இனத்தை விற்பனை வரியிலிருந்து விலக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான், இந்தச் சிறு கைத்தொழிலுக்கு அதிக வாய்ப்பு கிடைக்கும்.

அதேபோல், பனைமரத்திலிருந்து எடுக்கும் பதநீருக்கு 'லைசென்ஸ்' கொடுக்கும்விஷயத்தில், ஒரு சிறு மாறுதல் செய்யவேண்டியது அவசியமாகிறது. ஒரு வருஷ காலத்திற்கு மாற்றுவதால், எந்த விதமான கஷ்டமும் ஏற்பட்டு விடாது. ஒரு வருஷத்தில் திரும்பப் பெறுவதில், அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. அப்படியில்லாமல் ஒரு வருஷ காலத்திற்கு 'லைசென்'ஸை வழங்கினால், அது பெரிய சௌகரியமாக இருக்கும். சீனி பற்றாக்குறையாக இருக்கும். இந்தக் காலத்தில் பனை-யேறிகளுக்குச் சந்தர்ப்பம் அளித்தால், அவர்கள் உண்டாக்கும் கருப்பட்டி, சீனிக்கு மாற்றுப்பொருளாக அமையும். ஆகவே, இந்த விஷயத்தையும், சர்க்காரின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன்.

பெரிய தொழில்களின் சாத்தியக் கூறுகளை விமர்சனம் செய்துள்ள நிதி அமைச்சர் அவர்கள், சேலத்திலுள்ள இரும்புக்கனிமம் பற்றியும் கூறியிருக்கிறார்கள். அங்குக் கிடைக்கும் இரும்புக் கச்சாப்பொருள் உலகிலேயே மிகத்தரம் வாய்ந்தது என்று நிபுணர்கள் கருதுவதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்தை வெகு சீக்கிரத்தில் அமலாக்க ஆவண செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சின்னத்துரை அவர்கள் பேசும்போது ஒரு விசயம் சொன்னார்கள், "தனிப்பட்டவர்களுக்குப் பெருமளவில் ஆக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது" என்று! "10 ஆயிரம் கோடிக்குப் பதிலாக, ரூ.50 ஆயிரம் கோடி மூன்றாவது திட்டத்தில் செலவு செய்யவேண்டும்; அமலாக்க வேண்டும்" என்று அவர்கள் கூறியிருந்தார்களேயானால், அது பொருத்தமாக இருந்திருக்கும்.

ஆனால், நமது சர்க்கார் 'சோஷலிச' பாணியில் இயங்குகிறது. ஆனால், அது நேரடியாகத் தனிநபர் நடத்தும் எல்லா

தொழில்களையும் தேசியமயமாக்க வேண்டும்; அப்போதுதான், சர்க்கார் 'சோஷலிச' பாணியில் செயல்பட்டதாக முடியும்" என்ற கருத்தோடு கூறியிருப்பதை ஆட்சேபிக்கிறேன். பெரிய தொழில்களில் உள்ள கஷ்டங்களும் மூலதனப் பற்றாக்குறையும் கண்கூடு. அவற்றிலிருந்து சர்க்காருக்குக் கலால் வரி கிடைக்கிறது. வருமான வரி மூலமாகப் பெருவாரியான வருமானம் கிடைக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

'சோஷலிச பாணி' என்றால், எல்லாவற்றையுமே தேசியமயமாக்கல் என்பதில்லை. அவ்வாறு இருந்தால்தான் 'சோஷலிச' பாணி என்ற வாதத்தை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1961 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

'பிக் அயர்ன்', 'கோல்' சம்பந்தப்பட்ட வரை ஏராளமாக உற்பத்தி செய்கிறோம். ஏற்றுமதி செய்யும் அளவுக்குக்கூட உற்பத்தி செய்கிறோம். என்றாலும், சிறு தொழில்கள் பூராவும் அவற்றை வாங்கி உபயோகிக்கக்கூடிய நிலையில் இல்லை. 'வாகன்' கிடைக்கவில்லை என்ற கஷ்டமும் இருக்கிறது. நிலக்கரிக்கு அதிக விலை கொடுக்க வேண்டியநிலை இருக்கிறது. அவற்றைக் கப்பல் மூலமாகக் கொண்டுவந்து உபயோகிக்கக்கூடிய அளவுக்கு 'ஸ்மால்ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்' களுக்குச் சக்தி இல்லை. ஆகவே, நிலக்கரிக்கும், பூல் பிரைஸ்' ஏன் விதிக்கக் கூடாது? அப்படிச் செய்தால் சர்க்கார் எடுக்கும் சிறுதொழில் வளர்ச்சிக்கு நல்ல விதமான ஊக்கம் அளித்ததாக இருக்கும்; அவைகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1962 ஏப்ரல் 24 அன்று ஆற்றிய உரை :

தொழில் துறையில் நமது மாகாணம் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கிறது? ''மற்ற மாகாணங்களைக் காட்டிலும் அதிகமாகவே முன்னேற்றமடைந்திருக்கிறது'' என்று கூடச் சொல்லலாம். மற்ற மாகாணத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய தொழில் முன்னேற்றத்தைப் பார்த்துவிட்டு, ''இந்த மாகாணத்திற்குள்ள புதிய வசதிகளைக் குறைக்கவேண்டும்" என்று வாதாடக்கூடிய அளவில் இங்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. மற்ற மாகாணங்கள், "இந்த மாகாணத்திற்கு இன்னும் அதிகப்படியாகக் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை" என்று சொல்லக்கூடிய அளவில் இங்கு முன்னேற்றமடைந்திருக்கிறது என்றுகூடச் சொல்லலாம்.

அதேசமயத்தில், முன்னேற்றமடைந்து வருகிற தொழில்களை, முன்னேற்றமடைய செய்யாதபடி பல காரியங்கள் நடைபெற்று வருகின்றன. வடநாட்டிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய நிலக்கரி, 'கோக், இரும்புச் சாமான்கள் முதலியவைகள், வடநாட்டிலிருந்து நமக்குக் குறித்த நேரத்தில், குறித்த அளவு கிடைக்கவில்லை. அதற்குப் பெருவாரியாகத் தடை ஏற்படுகிறது. இவைகள் வருவதற்கு உள்ள போக்குவரத்து வசதி குறைவால் பல காரியங்கள் முன்னேற்றமடையாமல் இருக்கின்றன. அதே நேரத்தில், விலைவாசிகள் வேறு அதைப் பாதிக்கிறது.

நிலக்கரியை எடுத்துக்கொண்டால், அங்கு நிலக்கரிக்கு 80 ரூபாய் ஆகிறது. அதுவும் வேண்டிய அளவில், குறித்த காலத்தில், கிடைக்கவில்லை. இந்தக் காரணத்தால், நமது மாகாணத்திலுள்ள சிறு தொழில்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக்

கனம் தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஆகவே, இவைகளுக்குப் 'பூல் பிரைஸ்' நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது நாம் உரம் சப்ளை செய்வதில் 'பூல் பிரைஸ்' நிர்ணயம் செய்திருக்கிறோம். அதைப்போலவே இதற்கும் 'பூல் பிரைஸ்' நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி நாம் சீனி, உரம் முதலியவைகளுக்கு 'பூல் பிரைஸ்' வைத்திருக்கிறோமோ அதேபோலவே, இதற்கும் வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைப் பற்றி மத்திய சர்க்காருக்கு, இந்த சர்க்கார் எழுதிக் கேட்டு நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 'பூல் பிரைஸ்' மூலமாகத்தான் இந்த ராஜ்ஜியத்திலுள்ள சிறு தொழில்களை நாம் காப்பாற்ற முடியும். இத்துடன் வடநாட்டிலிருந்து நமக்கு வரவேண்டிய நிலக்கரி, கோக் முதலியவைகள் நமக்குக் குறித்த காலத்தில், குறித்த அளவில் கிடைக்குபடியான அளவில், போக்குவரத்து வசதியும் செய்துகொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதன் காரணமாக, நமது நாட்டில் சிறு தொழில்கள் வளர்ச்சி யடைவதற்கு வழி இருக்கிறது என்பதை, இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாகாணத்திலுள்ள 'இஞ்சினியரிங்' தொழில்கள் பூராவும் நிலக்கரி இல்லாததாலும், 'கோக்' இல்லாத தாலும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டி ருக்கிறது என்பதைக் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அத்துடன், நமக்கு வேண்டிய இரும்பு, இரும்புச் சாமான்கள் முதலியவைகள் கிடைப் பதற்கும் தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1963 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை:

தொழில் அமைச்சர் அவர்கள், 'கன்ஸல்டேடிவ் கமிட்டி' ஒன்றைப் போடப்போவதாக நேற்றைய பத்திரிகையில் நான் படித்தேன். நான் குறிப்பிடுகிற அத்தகைய திட்டத்தை, தொழில் சம்பந்தமாக அவர்கள் போட இருக்கிறார். இந்த மாநிலத்தில், ஏராளமான தொழில்களை அமைக்க வேண்டும் என்பதிலே அமைச்சர் அவர்கள் எவ்வளவுதான் ஆர்வம் காட்டினாலும், அவர்களுக்கு இருக்கும் கஷ்டம் நம் மாநிலத்தில் பணக்காரர்கள் அதிகம் இல்லாமல் இருப்பது, தொழில் களை ஆரம்பிப்பதற்கு வேண்டிய மூலதனம், அவர்கள் விரும்பும் அளவுக்குப் பெறமுடியவில்லை. அந்த மூலதனத்தைப் பெற்றாலும், என்ன தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று மூலதனம் போடும் அனேகருக்குத் தெரிவதில்லை.

இப்பொழுதிருக்கும் தொழிலமைச்சர் அவர்கள், என்னவெல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறதென்றால், மூலதன வசதியைத் தேடிக்கொடுக்க வேண்டியதிருக்கிறது. அதற்கென்று 'இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன்' வைத்திருக்கிறார்கள். என்ன தொழில்கள் ஏற்படுத்தலாம் என்று அவர்கள் சொல்லிக் கொடுத்து, அந்தத் தொழில்களை ஏற்படுத்துவதற்கான 'மெஷினரி' எங்கு கிடைக்கும் என்பதைக் கண்டுபிடித்து வாங்கிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த 'மெஷினரி' களையும் 'இன்ஸ்டால்மெண்ட் ஸிஸ்டத்தில்' வாங்கிக்கொடுக்க வேண்டி யிருக்கிறது. இப்படி ஒரு பெரிய தொழில் முயற்சி இல்லையானால், நம் மாநிலத்தில் விரைவில் தொழில் வளர்ச்சி ஏற்படுவது கடினமாக இருக்கும். இவ்வளவெல்லாம் தொழிலமைச்சர் அவர்கள் முயற்சி செய்தாலும், ''என்ன முன்னேற்றம்

கண்டுவிட்டோம்?" என்று லேசாகச் சிலர் கேட்டுவிடக்கூடும்.

நம் தொழில் அமைச்சர் அவர்கள், எந்த நாட்டுக்குப் போனாலும், அமெரிக்காவுக்குப் போனாலும், ஐரோப்பாவுக்குப் போனாலும், அங்கிருந்து நம் மாநிலத்திற்கு என்ன புதிய தொழிலைக் கொண்டுவரலாம் என்ற கண்ணோட்டத்தோடுதான் போகிறார். அதே கண்ணோட்டத்தோடுதான் வருகிறார்.

சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை வைப்பது சம்பந்தமாக இன்று கேள்வி நேரத்தின்போது பல கேள்விகள் இங்குக் கேட்கப்பட்டன. "இரும்பு உற்பத்திசெய்ய ஏன் காலதாமதம் ஆகிறது? அதற்குக் காரணம் மாநில சர்க்காரின் அலட்சியமனோபாவமா? அல்லது மத்திய சர்க்கார் சரியாகக் கவனிக்கவில்லையா?" என்ற ரீதியில் கேட்கப்பட்டன. அமைச்சர் அவர்களும், கேள்வி நேரத்தில் அந்தக் கேள்விக்கு எவ்வளவு விவரங்கள் சொல்லலாமோ அந்த அளவுக்குப் பதில் சொன்னார்கள்.

"எப்பொழுது பார்த்தாலும் தரக் குறைவான கனிமப்பொருளை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம்" என்று சட்டசபையில் சொல்லிக் கொண்டிருப்பதே நமக்கு நல்லதல்ல" என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், சென்னை மாநிலத்தில் தரக்குறைவான கனிமப் பொருளை வைத்துக்கொண்டு தொழில் வாய்ப்பு அதிகமாக ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். "கூடின தரமுள்ள கனிமப் பொருளை வைத்திருந்தும், நமக்குத் தொழில் வாய்ப்புகள் இல்லையே" என்று அண்டை மாநிலக்காரர்கள் கேட்கக் கூடும். 'கேள்வி கேட்கவேண்டாம்' என்று நான் சொல்லவில்லை என்றாலும், இதுமாதிரி 'தரக்குறைவான கனிமப் பொருள்தான் நமக்கு இருக்கிறது' என்ற ரீதியில் இங்கே அடிக்கடி பதில் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

தொழில் அமைச்சர் அவர்கள் செய்யக் கூடிய வேலையின் காரணமாக, சென்ற ஐந்து வருஷங்களுக்கு நல்லதொரு திருப்பம் நம்முடைய மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிறது. 'விவசாயத்தை வியாபாரமாக ஆக்கமுடியுமா?' என்று பரிசீலனை செய்யவேண்டிய சூழ்நிலையைத் தொழில் அபிவிருத்தியின் மூலமாகவும் தொழில் மாற்றத்தின் மூலமாகவும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார் என்பதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

இந்தத் தொழில் மாற்றத்திற்கு முக்கியக் காரணம், இந்த மாநிலத்தில் ஏராளமான மின்சக்தியைச் சீக்கிரமாக உற்பத்தி செய்திருப்பதுதான். அவர்கள் எடுக்கும் பல்வேறு முயற்சிகளிலே ஒரு பெருமுயற்சி, இந்த மாநிலத்திற்கு மின்சாரத் திட்டங்களை அதிகமாகக் கொண்டுவர வேண்டுமென்பதாகும். ஒக்கேனக்கல் திட்டம், மேட்டூர்த் திட்டம் மிகமுக்கியமானவை. திட்டத்தில் இல்லாததைக்கூட எப்படி அவர் எடுத்துக் கொண்டார் என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

மேட்டூர் 'டன்னல் ஸ்கீம்' என்பது 'மேஜர் பிளான் ஸ்கீமி'லே இல்லாவிட்டாலும் அவர் எடுத்துக்கொண்டார். இம்மாதிரி எப்போதுமே மின்சாரத்தை அதிகமாகக் கொடுப்பதன்மூலம் இந்த மாநிலத்தில் பெரிய தொழிற்சாலைகள் அதிகமான அளவில் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. 'லேபர்,' தண்ணீர், நிலம் இவைபோன்ற வாய்ப்புகள் இந்த மாநிலத்தில் அதிகமாக இருப்பதன் காரணமாகத்தான், பெரிய தொழில்களை ஏற்படுத்துவதற்கு இந்த மாநிலம் முற்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டொரு விஷயங்களைக் குறிப்பிட்டுவிட்டு முடித்து விடுகிறேன்.

தொழிலமைச்சர் அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளைச் சிறப்பாகச் செய்து வந்தாலும், இன்னும் சில குறைகள் நீக்கப்பட வேண்டுமென்பதையும் நான் இங்கே குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது. யார் பேரிலும் குற்றம் சொல்வதற்காக அல்ல. நான் இதைச் சொல்வது. 'பிக் அயர்ன்', நிலக்கரி இவ்விரண்டும் நம் மாநிலத்திற்கு வருவது இல்லை. இப்போதிருக்கும் சிறு தொழில்களின் வளர்ச்சியை நாம் காப்பாற்ற வேண்டுமானால், 'பிக் அயர்ன்', ஸப்னை, நிலக்கரி 'ஸப்ளை' விஷயமாகச் சீக்கிரமாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான், ஏற்கெனவே ஏற்பட்ட சிறு தொழில்கள் காப்பாற்றப்பட முடியும் என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன்.

1964 மார்ச் 2 அன்று காலை 10.00 மணிக்கு ஆற்றிய உரை :

இதே சந்தர்ப்பத்தில், இந்த மாநிலத்தில் சிறிய தொழிலாக இருக்கிற தீப்பெட்டித் தொழில், சென்ற இரண்டு வருஷ காலமாகக் கஷ்டதிசையில் இருக்கிறது. உற்பத்தியை 'மார்க்கெட்' பண்ண இப்போது 'மார்க்கெட்டிங் சொசைட்டி'யை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எந்த விதமாக அந்தத் தொழிலுக்கு நிவாரணம் காண முடியுமோ, அந்தவகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் கொஞ்சம் காலதாமதம் இருக்கிறது. உடனடியாக நிவாரணமளிக்கும் நிலைமை இல்லை. பல்வேறு காரணங்களால் அந்தத் தொழில் நசிந்து வருகிறது. அது பெருவாரியான ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் தொழிலாகும்.

ஆகவே, அந்தத் தொழிலுக்கு 'எக்சைஸ்' வரியிலிருந்து ஆறுமாத காலத்திற்காவது சலுகை கொடுத்தால் நலமாக இருக்கும். அந்தச் சிறுதொழில்களின் மூலம் கோடிக்கணக்கான குடும்பங்கள் வாழ்வதோடு, அரசாங்கத்திற்கு அதிலிருந்து வருமானம் கிடைக்கிறபடியால் ஆறுமாத காலத்திற்காவது 'எக்சைஸ் டியூட்டி'யிலிருந்து விலக்கு கொடுப்பதோடு 'மார்க்கெட்டிங்'குக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'பதினாறு ஸ்பெண்டில்' பற்றிக் கடந்த நாலைந்து வருஷங்களாகச் சொல்லப்பட்டு வருகிறது. அது சீக்கிரமாக உருப்பெற்றால் நெசவாளர்களுக்குச் சற்று உதவியாக இருக்கும். ஜப்பானில் 'பேக் புராசஸ்' (Back Process) பூராவையும் பொதுவாக வைத்துக்கொண்டு, 'பதினாறு ஸ்பெண்டில் மூலம் ஆகக் கூடிய 'டெக்ஸ்டைல் புரடெக்ட்ஸை அதிகமாக்கி இருக்கிறார்கள். இதனால் நூல் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஆலைத் தொழிலில் பெரு வாரியான லாபம் வருகிறது. ஆலை, முதலாளிகள் 'எக்ஸ்ப்ளாய்டேஷன்' செய்வதைத் தடுக்க இது உதவும்.

கைத்தறி நெசவாளர்களை, ஆலை முதலாளிகளிடமிருந்து விடுவிக்க இது ஒரு பெரும் வரப்பிரசாதமாக இருக்கும். இதைச் சீக்கிரத்தில் அமல் நடத்துவதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்று தெரியவில்லை. இதற்கு வேண்டிய காரியங்களை உடனடியாக ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1966 பிப்ரவரி 28 அன்று ஆற்றிய உரை :

இந்த அரசாங்கத்திற்குச் 'சோஷலிச' உபதேசம்: ''இந்த அரசாங்கத்திற்குச் 'சோஷலிசத்'தைப் பற்றித் தெரியவில்லை" என்ற முறையில் எடுத்துச்சொல்லப்பட்டது. ''வரியில்லாமல் அரசாங்கம் நடத்தினால்தான் 'சோஷலிச' அரசாங்கம்; வரிபோட்டு அரசாங்கம் நடத்தினால்

'சோஷலிச' அரசாங்கம் அல்ல" என்று விமர்சனம் செய்வது புதிதாக இருக்கிறது. வரி போடாமல் அரசாங்கம் நடத்துவது 'கம்யூனிச' அரசாங்கமே தவிர 'சோஷலிச' அரசாங்கம் அல்ல. 'சோஷலிச'த்தை முதலில் ஏற்படுத்திக் கொண்டு, அதிகாரமே இல்லாத அளவில் ஆண்டான், ஆளப்படுபவன் என்கிற வித்தியாசம் இல்லாத ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிக்கவேண்டும் என்பதுதான் லட்சியம். அதற்கான வழியில் இருப்பது 'சோஷலிசம்' என்கிற லட்சியம். இதைச் சீக்கிரமாகக் கொண்டுவருவதற்கு எவ்வளவோ கஷ்டங்களும் இருக்கின்றன! உண்மையிலேயே, இந்த அரசாங்கம் நல்லவிதமாக, 'சோஷலிச' நடைமுறைகளை மேற்கொண்டு வருகிறது என்பதற்கு என்னால் எவ்வளவோ சொல்ல முடியும்.

எவ்வளவோ நடவடிக்கைகளை நாம் 'சோஷலிச' முறையில்தான் ஆக்கபூர்வமாக நடத்திக்கொண்டு வருகிறோம். அதற்கு நேர்மாறாக இருக்கிற வரியில்லாத ஒரு அரசாங்கத்தை 'சோஷலிச' அரசாங்கம் என்று சொல்ல முடியாது. அது 'கம்யூனிஸ' அரசாங்கமாகத்தான் இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கு சோஷலிசம்' இருக்கிறதா, இல்லையா என்பதைப் பார்க்கவேண்டும் என்று கருதினால், 'சோஷலிச'த்தை ஏற்படுத்துவதற்கான பல காரியங்களைப் பார்க்கலாம். இந்த 'பட்ஜெட்டில்' பெரிய தொழில்கள், சிறிய தொழில்கள், கூட்டுறவு மூலமாக நடக்கிற தொழில்கள், உணவு உற்பத்தி, உணவு விநியோகம் இவை அத்தனையிலும் பங்குகொள்கிற அரசாங்கம், 'சோஷலிச' அரசாங்கமாக இல்லை என்று சொன்னால், வேறு எந்த அரசாங்கம் அவ்வாறு இருக்கமுடியும்? 'போலீஸ்' அரசாங்கமா நடக்கிறது? 'போலீஸ்' அரசாங்கம் என்றால், திட்டமிட்டு 188 கோடி ரூபாய்க்கு வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிப்பானேன்? 'வெல்ஃபேர் ஸ்டேட்' ஆகவும், 'சோஷலிச' அரசாங்கமாகவும் மலரவேண்டிய ஒரு பெரிய போக்கை எடுத்துக்கொண்டதன் காரணமாகத்தான் வரவர அதிகமாக வரியைப் போட வேண்டியிருக்கிறது. ஏராளமான பணத்தை மக்களுக்காகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. உணவு உற்பத்தியிலிருந்து, உணவுவிநியோகம்வரையிலும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கம், 'சோஷலிச'ப் பாதையில் போகிறது என்பதற்கு இதைவிட அதிகமாக எடுத்துக் காட்டத் தேவையில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'சோஷலிச'த்திற்கு அடிப்படையானது, தொழில் வளர்ச்சி. தொழில் வளர்ச்சி இல்லாமல், 'சோஷலிசம்' வரமுடியாது. தொழில் வளர்ச்சிக்காகத் தமிழ்நாட்டு அரசாங்கம் எத்தனை நடவடிக்கைகள் எடுத்து வந்திருக்கிறது என்பதை அண்மையில் நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள், குந்தா திட்டத்தைக் குறித்துப் பேசும்போது கூறியிருக்கிறார்கள்.

'பெர் காப்பிட்டா கன்ஸம்ஷன் ஆப் எலெக்ட்ரிஸிடி' 12 'யூனிட்டி'லிருந்து, 100 'யூனிட்' அளவுக்குப் போயிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளே 150 'யூனிட்' அளவுக்குப் போகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு மின்சார வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த மின்சார வளர்ச்சியைப் 'பாரா மீட்டரா'கக் கொண்டு நம்முடைய தமிழ்நாட்டில் நடக்கின்ற பெரிய தொழில் வளர்ச்சியை நாம் கணக்கிட்டுப் பார்த்தால் நாம் உற்பத்தி பெருக்கத்திலும், தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் கண்டு வேகமாகச் 'சோஷலிச'ப் பாதையில்

போகிறோம் என்பதில் சந்தேகமில்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்பொழுது இருக்கின்ற இந்த வேகமான தொழில் வளர்ச்சி, சில இக்கட்டான கட்டங்களில் மாட்டிக் கொண்டிருக்கிறது. முதலாவது, ரிசர்வ் பேங்க் கிரெடிட் ஸ்கிவீஸ் 'பணமும்' கிடைக்கவில்லை; விலையும் குறைய வில்லை. இந்த நாட்டினுடைய பணப் புழக்கத்தைக் 'கண்ட்ரோல்' செய்கின்ற அதிகாரம் 'ரிசர்வ் பேங்க்'கிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பணம் கிடைக்காமல் இருப்பதற்கு, அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அந்த நடவடிக்கையை எடுத்து வருகிறார்கள். இதற்கு அவர்கள் கூறுகிற முக்கியக் காரணம் என்ன? விலைவாசி யைக் குறைப்பதற்காக என்று காரணம் சொல்லப்படுகிறது. ஜப்பான் முதலிய தேசங்களில், 'பேங்கு'களில் இருக்கக்கூடிய 'டெபாசிட்' எந்த அளவிற்கு இருக்கிறதோ, அந்த அளவுக்கு 'டெபாசிட்'டைப் பூரணமாகவும், அதற்குமேல்கடன்வாங்கமுடியுமானால், அதையும் வாங்கிக் கடன் வழங்குவது என்ற முறை இருந்து வருகிறது. வளர்ச்சி பெற்ற பிரதேசங்களில்கூட இன்னும் அந்தமுறை கையாளப்பட்டு வருகிறது. ஆனால், நம்முடைய நாட்டிலுள்ள 'பேங்கு'கள் 'டெபாசிட்' தொகையில் 30 சதவிகிதத்தைப் பணமாக வைத்துக் கொண்டிருக்கவேண்டும் என்ற விதியை 'ரிசர்வ் பேங்க்' விதித்திருக்கிறது.

முதலில் அது 20 சதவிகிதம் என்று ஆரம்பித்து, பிறகு, 25 சதவிகிதமாக உயர்ந்து; இப்பொழுது, 28 சதவிகித அளவு வந்து, 30 சதவிகிதமாகக்கூட வைத்துக்கொள்ளலாம் என்ற அளவிற்கு நிலைமை வந்திருக்கிறது. இதிலே என்ன கஷ்டம்என்றால்எப்போதுமேபாங்குகள் தங்களிடம் இருக்கும் பணவசதியைப் பூரணமாக உபயோகித்துக்கொள்ள முடியாது. 'சீசன்' காலம் இருக்கிறது. 'சீசன்' அல்லாத காலங்களும் இருக்கின்றன. 'சீசன்' காலத்தில் இருக்கும் பணத்தைப் பூராவும் கொடுக்கவேண்டும். 'சீசன்' இல்லாத காலத்தில் பணம் பூராவும் பாங்குக்கு வந்துவிடும்.

ஆனால், இன்றைக்கு 'ரிசர்வ் பேங்க் கண்ட்ரோல்' பிரகாரம், 'சீசன்' இருக்கிற காலத்திலும் சரி, 'சீசன்' இல்லாத காலத் திலும் சரி, 30 சதவிகிதம் 'டெபாசிட்'டைப் பணமாகப் பாங்குகள் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு 100 ரூபாய் ஒரு பாங்கில் 'டெபாசிட்' இருந்தால், அதில் 30 ரூபாயை 'பாங்க்' தன் கையில் ரொக்கமாக வைத்திருக்கவேண்டும்; பாக்கி 70 ரூபாயைத்தான் லேவா தேவி பண்ணவேண்டும். 'ரிசர்வ் பாங்கு' வைத்திருக்கும் இந்த விதியை அமல் நடத்துவதன் காரணமாக, உண்மை யிலேயே கிட்டத்தட்ட 40 சதவிகிதம், 45 சதவிகிதம்தான் பணம் புழக்கத்தில் இருக்கிறது. இது வளர்ந்து வருகிற, திட்டமிட்ட பொருளாதாரத்தில், தொழில் வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் உதவிகரமாக இருக்கும் என்பதை இரண்டு வருஷ அனுபவத்தில் நாம் பார்க்கிறோம்.

இன்று, பெரிய தொழிற்சாலைநடத்து கிறவர்கள், புதிய புதிய தொழில்களை நடத்த முன்வருவதில்லை. ஏற்கெனவே நடக்கும் தொழில்களுக்கே பணவசதி வேண்டும் என்று சர்க்காரைக்கூட அணுகவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். 'ஸ்பின்னிங் மில்'களை எடுத்துக்கொண்டால் இரண்டு, மூன்று மாதங்களுக்குமுன்பு, அவர்களிடம் நாலைந்து மாத உற்பத்தி, அவர்கள் கையில் தேங்கிப் போய்விட்டது. 'ரிசர்வ் பாங்கி'லிருந்து பணம் கிடைக்கவில்லை. சர்க்காரைப் பார்த்து, 'நீங்கள் ஏதாவது ஏற்பாடு செய்யமுடியுமா?'' என்று கேட்கக்கூடிய அளவிற்கு நிலைமை வந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் பெரிய தொழில் என்றால், 'ஸ்பின்னிங் மில்'லைத்தான் சொல்லவேண்டும். 'ஸ்பின்னிங் மில்' வைத்து நடத்துகிறவர்கள்கூட, பருத்தி வாங்கி வைத்திருப்பதற்கோ, அல்லது நூல் தேக்கம் ஏற்பட்டால், அந்த நிலையைக் கடந்து செல்வதற்கோ, கடன்வசதி இல்லாமல் இருக்கிறார்கள். 'மின்சார வெட்டு' வந்ததை அவர்கள் வரப்பிரசாதமாகக் கருதியிருப்பார்கள். மின்சார வெட்டு வந்திருக்கவில்லை யென்றால், அவர்கள் தொழிலை நடத்தத் திக்கு முக்காடி இருப்பார்கள். ஆகவே, பெரிய அளவிற்குத் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று சொல்லும்போது, 'ரிசர்வ் பாங்க் கிரெடிட் ஸ்க்வீஸ்' எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அரசாங்கம் இதிலே ஒரு பரிசீலனை செய்து, அதற்குரிய 'ரெக்கமண்டேஷனை' மத்திய அரசாங்கத்திற்கு 'ரிசர்வ் பாங்கு'க்கு, அனுப்பவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவு உற்பத்தி பெருக்கத்திற்காக மீன்வளத்தை அதிகப்படுத்த 'பாப்லோ போர்டு'க்கு 90 லட்சம் - ஒரு கோடி அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுகூட 30 மைல் தூரம்தான் போகிறது. இதில் இவ்வளவு அக்கறை காட்டுகிறபோது 'டீப் சீ ஃபிஷ்ஷிங்' பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். தூத்துக்குடி 'டீப் சீ ஃபிஷ்ஷிங்' துறைமுகத்தைப் பொருத்தவரையில், முதல்கட்டமாக 'டீப் சீ ஃபிஷ்ஷிங்' ஏற்பாடு செய்தால் உதவிகரமாக இருக்கும். வரியற்ற சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளில் இன்றைக்கு ஒவ்வொன்றாகக் 'கார்ப்பொரேஷ'னாக ஆக்கிக்கொண்டு வருகிறார்கள்.

'ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்', பெரிய வருவாயைத் தரும் என்று இந்த 'பட்ஜெட்'டில் எதிர்பார்த்தேன். ஒன்றையும் காணோம்! தனியாகக் 'கார்ப்பரேஷன்' ஏற்படுத்தினால், அதன் வருவாய் குறிக்க முடியாதுதான். 'எலக்டிரிசிட்டி போர்'டை எடுத்துக்கொண்டால் எட்டு கோடி ரூபாய், ஒன்பது கோடி ரூபாய் என்று வருவாய் எதிர்பார்க்கிறோம். அதேபோல் இந்த 'ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷ'னிலும் வருவாய் எதிர்பார்க்க முடியும் என்று நினைக்கிறேன்.

'இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் பாங்க்' என்ற ஒன்றை மத்திய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாநில சர்க்காரும் அதை அனுசரித்து அதே மாதிரி ஏற்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது பாங்குகளின் மேல் 'டெபாசிட்'டுகள் குறைந்து வருகிறது. பாங்குகளின் 'பாலன்ஸ் ஷீட்'டை எடுத்துக்கொண்டு பார்த்தால், வருமானம் முன்பு எந்த அளவு இருந்ததோ, அதே அளவுதான் சென்ற ஆண்டு இருந்திருக்கிறது. சென்ற ஆண்டு இருந்த அளவுதான், இந்த ஆண்டு இருக்கிறது. ஆனால், இரண்டு வருஷங்களுக்கு முன்புவரை பார்த்தால் வருமானம் கூடிக்கொண்ட போயிருக்கிறது. 'டெபாசிட்டு'களும் கூடாமல், வருமானமும் கூடாமல் இருக்கிறது. இந்த நிலையில் புதிய புதிய 'பாங்கு'களை ஏற்படுத்திக்கொண்டு போனால், அது எவ்வளவு தூரம் 'சக்ஸஸ் ஃபுல்' ஆக இருக்கும் என்பது தெரியவில்லை.

இப்போது அரசாங்கம் எல்லாக் கடன்களுக்கும், 'கியாரண்டி' கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய கடன், 'எலெக்ரிசிட்டி போர்டு' கடன், 'கோவாப்-ரேடிவ் பாங்கு'களுக்கு உண்டான 'கியாரண்டி' இவை எல்லாவற்றிற்கும் தமிழ்நாடு அரசாங்கம் 'கியாரண்டி' கொடுத்திருக்கிறது. இரண்டு, மூன்று வருஷங்களாக அரசாங்கம் உதவிசெய்து

வருகிறது. இதன் காரணமாக, ஏராளமான 'டெபாசிட்கள்' வந்திருக்கிறது. ஆனால், இன்றைக்கு 'ஃபர்தர் டெபாசிட்ஸ்' வராமல் இருக்கிறது. காரணம் என்னவென்றால், 'இண்டஸ்ட்ரியலிஸ்ட்'களிடம் பணம் இல்லையா என்று கேட்டால், அவர்கள் 'சர்ப்ளஸ்' இல்லையென்று சொல்லுகிறார்கள். விவசாயிகளிடம் கேட்டால், சேமிப்பு இல்லையென்று சொல்லுகிறார்கள்.

முன்பெல்லாம் கிராமங்களில் 'பாங்கு'களைத் தொடங்கினால் பணம் வந்துகொண்டிருந்தன. இன்றைக்கு அந்தச் சூழ்நிலை இல்லை. கிராமங்களில் பணம் இல்லை. 'ரூரல் சேவிங்ஸ்' டெபாசிட்ஸ்' எல்லாம் குறைந்து கொண்டுவருகிறது. இந்த நிலைமையைப் பரிசீலித்து, 'டெபாசிட்ஸ்'க்கு 'ரேட்'டை அதிகமாக்கி ஊக்குவித்தால்தான் வருமானம் வரும்.

இப்பொழுது 'ஜாயிண்ட் ஸ்டாக் பாங்கு'களில் எல்லாம், 7 அல்லது 7.5 சதவீதம் கொடுக்கிறார்கள். அதை 9 சதவீதமாகக் கூட்டினால், பணம் வரலாம் என்று நினைக்கிறேன். இல்லையென்றால், பாங்குகளில் 'டெபாசிட்' பண்ணுவதற்குப் பதிலாகக் கிராம மக்கள், அந்தத் தொகையை, ஏதாவது ஒரு சாமானில் போட்டுவிடுகிறார்கள். அதன்மூலம் கிடைக்கின்ற வருமானம் போதும் என்று நினைக்கிறார்கள். ஆகவே, தற்போது 'இண்டரஸ்ட் ரேட்' ஊக்குவிப்பதாக இல்லை. அதனால், பணத்தைப் போடுவதற்குப் பதிலாகப் பருத்திக்கொட்டை போன்றவைகளை வாங்கிவைத்தால், மிச்சம் கிடைக்கிறது என்று நினைக்கிறார்கள். ஆகவே, வட்டி விகிதாச்சாரத்தைத் திருத்தியமைக்க வேண்டும்.

இந்த 'டெவலப்மெண்ட் பாங்க் கார்ப்பரேஷன்' அமைக்கின்ற இந்த நேரத்தில், வட்டி விகிதாச்சாரத்தைக் கூட்டி அமைத்துக் கொடுத்தால்தான், 'ஃபர்தர்டெபாசிட்ஸ்' நமக்குக் கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1966 மார்ச் 17 அன்று ஆற்றிய உரை :

'மிஸ்டர் ஸ்பீக்கர்' சார்! இந்த மானியத்தை ஆதரித்துப் பேசுகிற இந்த நேரத்தில், பொதுவாக இந்த மாநில மக்களின் பாராட்டுதல்களை நான் முதலில் தொழிலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கருத்துக்களைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், இரண்டொரு விஷயங்கள் பற்றி, எனக்கு முன்னர் பேசிய அங்கத் தினர்கள் பேசியது பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒன்று விசேஷ போலிஸ் படையைப் பற்றி... போலிஸ் படையை அடிப்பதற்குத்தான் வைத்திருக்கிறது'' என்ற அனுமானம் எப்படி வந்தது என்று தெரியவில்லை! அப்படியானால், போலிஸ் படையே வேண்டாமா? போலிஸுக்குள்ள அதிகாரங்கள் எல்லாம் என்னென்ன, அதிகாரங்கள் எப்படி எப்படிச் செய்யலாம் என்பதெல்லாம் வரையறை செய்யப்பட்டுள்ளது. தொழில்துறைப் பாதுகாப்பிற்காகப் போலிஸை உபயோகப்படுத்துகிறோமேதவிர, "போலிஸ் படை தொழில் துறைக்கு வேண்டாம்" என்றால், போலிஸ் படையே வேண்டாம் என்று சொல்லலாம்.

''தொழில் அதிபர்கள் சம்பளம் கொடுக்கிறார்கள்; ஆகவே, அவர்கள் சார்பாக இருப்பார்கள்'' என்ற அனுமானமும் எப்படி வந்ததோ எனக்குத் தெரியவில்லை. போலிஸ் படையினருக்கு நாம்தான் சம்பளம் கொடுக்கிறோம். பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்துதான் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, பொதுமக்கள் சொல்லுகிறபடி எல்லாம் அவர்கள் கேட்பார்களா?

எதற்காகத் தொழில்துறையில் போலீஸ் படை வைக்கப்பட்டிருக்கிறது என்றால், ஆத்திரம் ஊட்டுகிற சந்தர்ப்பங்களில் அவர்கள் எதை நம்பி வாழ்கிறார்களோ, அந்தச் சாதனங்களுக்கே அழிவு தேடுகிறார்கள். தொழிலாளர்கள். சில சமயங்களில் ஆத்திரம் காரணமாக, நிதானம் இழக்கிற நேரத்தில் உற்பத்திச் சாதனங்களைக் காப்பாற்றுவதற்காகவே இந்தப் போலீஸார் இருக்கின்றனர்.

ஆகவே, தொழில்துறையைப் பாதுகாப்பதற்காக, தொழிற்சாலைச் சாதனங்களைப் பாதுகாப்பதற்காகத்தான் போலீஸ் வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, தொழிலாளர்களை அடிப்பதற்காகப் போலீஸ் வைக்கப்பட்டிருக்கிறது என்ற அனுமானம் தவறு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ''கைத்தறி நெசவாளர்களுக்கு எதுவுமே சலுகை காட்டவில்லை'' என்கிறார்கள். ஒன்பது 'ஸ்பின்னிங் மில்ஸ்' கைத்தறிக்காக ஏற்பட்டு 66,000 'பேல்ஸ்' உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். 'ஹாண்ட் லூம்ஸ் செஸ்ஃபண்ட்' வேறு இருக்கிறது. கைத்தறி ஜவுளியை ஏற்றுமதி செய்வதற்கு ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை கைத்தறி சகாப்தத்திலேயே இல்லாத முறையில் 'ப்ளீடிங் மெட்ரா'ஸை ஏற்றுமதி செய்ய எந்த அளவிற்கு ஊக்குவிக்க முடியுமோ, அது செய்யப்பட்டு வருகிறது. ''செய்தது காணாது'' என்று சொல்லாமல், ''எதுவுமே செய்யவில்லை'' என்று சொல்வதில் அர்த்தமில்லை.

''இந்தத் தொழில் நடைமுறைகள் பூராவும் 'சோஷலிச' கருத்துக்குப் புறம்பாகவே அமைந்திருக்கின்றன'' என்று குறிப்பிட்டார்கள். அதுபற்றி நம் தொழில் அமைச்சர் அவர்களின் அறிக்கையிலும் சரி, மத்திய அரசாங்கமும் சரி, சொல்லியிருக்கிறார்கள். 'மிக்ஸ்டு எக்கானமி' யில் இருக்கிறோம். இன்னும் அந்த நிலையைத் தாண்டிவிடவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாநிலத்தில், தொழில் வளர்ச்சிமூலம் உள்ள வருமானம் 18 சதவிகிதம்; மொத்தத்தில் பார்க்கிறபோது, 283 கோடி அளவிற்குத்தான் தொழில் பகுதியிலிருந்து வருமானம் கிடைக்கிறது என்பதைப் பார்க்கும்போது, அதிகப்படியான தொழில்களை நாம் உருவாக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்போதுதான் இந்த மாநிலத்தின் சராசரி வருமானம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

தொழில்களைச் சர்க்கார் துறையில், அல்லது 'க்வாஸி கவர்மெண்ட்' துறையில் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிடலாம். ஐந்தாண்டுத் திட்டம் போட்டு, ஐந்தாண்டுகளில் இன்னின்ன தொழில்களைச் சர்க்கார் துறையில் ஏற்று நடத்தலாம். எந்தெந்தத் தொழில்களை 'க்வாஸி கவர்மெண்ட்' துறையில் நடத்தலாம் என்று திட்டம் போட்டுச் செய்கிறோம். அப்போது பாக்கியுள்ளதை நடத்தவேண்டாம் என்று சொன்னால், அப்படிச் சொல்லிவிடலாம். அப்படிச் செய்வோமானால், மேற்கொண்டு தொழில்கள் வளராது! பத்து ஆண்டுகளுக்கு என்றல்ல, நம் தலைமுறையில் அது நடக்காது. அப்படிச் செய்வது, 'பாவர்டி'யை நிரந்தரமாக ஆக்குவதாகத்தான் அமையும்.

எந்தெந்த 'ஏஜென்ஸிகளை' எல்லாம் உபயோகப்படுத்தினால் நம் தொழில் வளர்ச்சி சீக்கிரம் ஏற்படும் என்றுதான் பார்க்கவேண்டும். நாட்டில் இன்றுள்ள நிலைமையைப் பார்த்தால், இப்போது நாம் கலப்புப் பொருளாதாரத்தை நம்பி வாழவேண்டிய நிலைமையில்தான் இருக்கிறோம்.

இன்னொன்று, இந்தத் தொழில் வளர்ச்சி, இந்த மாநிலத்தில், எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு, இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற விவரங்கள், சான்றுகள் பகருகின்றன. தொழில்களுக்குப் பயன்படுகின்ற மின்சார அளவை எடுத்துக்கொண்டு பார்த்தால், 1,800 'மில்லியன் யூனிட்' அளவை நாம் எட்டியிருக்கிறோம் என்பதைப் பார்க்கும்போது, இந்த மின்சார வளர்ச்சியே நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கிறது என்பதை நாம் பார்த்துக் கொள்ள முடியும்.

மத்திய திட்டங்களைத் தவிர, நாம் 'ஸ்டேட் பப்ளிக் செக்டா'ரின்கீழ் பல திட்டங்களைப் போடுவதற்கு முற்பட்டிருக்கிறோம். இதுமட்டுமே நாம் எந்த அளவுக்குச் 'சோஷலிஸ'ப் பாதையில் முன்னேறிக்கொண்டிருக்கிறோம் என்பதற்குக் கட்டியம் கூறுகிறது. இதில் சுமார் நூறு கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்வதற்கு 'ஸ்டேட் பப்ளிக் செக்டா'ரில் இடம் செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய சாதனையாகும். இதைத் தீவிரமாக ஏற்படுத்திக் கொடுத்தால், மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சர்க்காரிலிருந்து ஏற்படுத்துகிற தொழிலை நம்முடைய மாநிலத்தில் ஏராளமாக வைக்கவேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில் மாநிலங்களில் ஏற்படுத்தக் கூடிய தொழில், மத்திய தொழிற்சாலைகளில் இருந்தாலும் சரி, இவைகள் சென்னை நகரத்தில் இருக்கவேண்டுமா என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

'ரீஜினல் டிஸ்பாரிட்டி' கூடாது என்று சொல்லிவருகின்றநாம், இந்த விஷயத்தில் சற்றுக் கவனம் செலுத்தி ஏற்படுத்துகிற தொழிற்சாலைகளை, எல்லா இடங்களிலும் பரவி இருக்கும்படியாக அமைக்கவேண்டும்.

'மெட்ராஸ்' சிட்டியை எடுத்துக் கொண்டால், தொழிற்சாலைகள் எல்லாம், இதைச் சுற்றியே இருந்து வருகின்றன. சென்னையும் அதன் சுற்றுப்புறமும் தொழில்மயமாகி வருகிறது. 'இது அவ்வளவு பொருத்தமானதுதானா' என்பதைப் பார்க்க வேண்டும். 'திருச்சியில் 'பாயிலர் பிளாண்'டை ஏற்படுத்தவேண்டும்" என்று வற்புறுத்தினோம். அதேபோன்று பல்வேறு ஜில்லாக்களிலும் தொழிற் சாலைகள் வைக்கவேண்டும் என்பதுதான் கோரிக்கை.

தற்போது 'சிமெண்ட்' தொழிற்சாலை, இராஜபாளையத்திற்கு அருகில் நிறுவப் போகிறார்கள். அது வரவேற்கக்கூடிய அம்சம்தான். 'அதேபோன்று 'சோடா ஆஷ் பிளாண்'டைச் சென்னையில் வைக்கபோவதாகத் தெரிகிறது. ஏன் இதைத்தூத்துக்குடியில் வைக்கக்கூடாது? இதற்குத் தேவைப்படுகிற 'காமன் சால்ட்' தூத்துக்குடியில் ஏராளமாகக் கிடைக்கிறது. 'பப்ளிக் செக்டா'ரில் வைப்பதைத் தூத்துக்குடியில் வைக்கவேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். 'ரீஜினல் இம்பாலன்ஸ்' இந்த மாநிலத்தில் இருக்கக்கூடாது என்பதைத்தான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிற்சாலைகளை எந்தெந்த ஜில்லாக்களில் ஏற்படுத்துவதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ, அங்கங்கே ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இப்போது இருக்கக் கூடிய புதிய தொழில் வளர்ச்சியை எடுத்துப் பார்க்கும்போது, ஏற்கெனவே இருந்துவருகின்ற தொழிலையும் காப்பாற்றுவதற்கு நாம் செயல்பட வேண்டும். இப்போது ஏற்கெனவே இருந்து வருகின்ற பல்வேறு தொழில்

களுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஒன்று, பணநெருக்கடி; மற்றொன்று, மூலப்பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி காரணமாக 'ரா-மெட்டீரியல்ஸ்' இறக்குமதி செய்வதில் ஏற்பட்டிருக்கிற கஷ்டம். இவற்றை எல்லாம் நாம் சமாளித்தாக வேண்டியிருக்கிறது. இந்த உணர்வோடு, நாம் புதிய தொழில்களில் ஈடுபடவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்காகப் புதிய வேலைகளை நிறுத்தவேண்டும் என்று நான் சொல்வதாக எண்ணவேண்டாம். இதை நான் ஏமாற்று உணர்வு என்று சொல்லவில்லை. ஜாக்கிரதை உணர்வோடு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஏற்கெனவே இருந்து வரும் தொழில்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இருந்து வரும் தொழில்களுக்குக் குந்தகம் ஏற்படாதவகையில், ஏற்கெனவே இருந்து வருகிற தொழில்கள் வளம்பெறக்கூடிய வகையில் புதிய தொழில்களை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் உதவிகளைப் பொருத்தவரையில், சர்க்கார் மூலமாகவும், இந்த மாநிலத்திலிருந்து 'இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன்' மூலமாகவும் 30 கோடி ரூபாய் அளவுக்கு உதவி செய்திருக்கிறார்கள். 'பிரைவேட் செக்டா'ரில் 200 கோடி ரூபாய் அளவிற்கு மூலதனம் வந்திருக்கிறது என்று சொன்னால், அதில் 30 கோடி ரூபாய், இந்த மாநிலத்திலிருக்கிற 'ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன்' உதவுகிறது என்று சொன்னால், அந்தத் தொகை பெரிய தொரு பங்கு என்று சொல்லலாம். சர்க்காரில் இதற்காக வட்டி வாங்கிக்கொள்கிறார்கள் என்றிருந்தாலும்கூட, தனியாக இதற்கு ஏன் ஒரு 'சென்ட்டேஜ் சார்ஜ்' போடக்கூடாது என்பதுதான் என்னுடைய ஆலோசனை.

இலாபகரமாக நடக்கக்கூடிய தொழில்களுக்கெல்லாம் 'ஸ்டேட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன்' பணம் கொடுக்கிறது என்று சொன்னால், அதற்குத் தனியாக ஒரு சதவிகிதம் என்று ஏன் 'சென்ட்டேஜ் சார்ஜ்' போடக் கூடாது? அவ்விதம் வசூல்செய்தால், அதைத் திரும்பவும் எடுத்துத் தொழில் வளர்ச்சிக்குக் கொடுத்து உதவலாம் அல்லவா? இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் செய்வது 'சோஷலிச' முறைக்கும் பொருந்தியதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

'இண்ட்ரஸ்ட் சார்ஜ்' செய்கிறோம் என்றிருந்தாலும், குறைந்த அளவில்தான் இப்போது 'இண்ட்ரஸ்ட் சார்ஜ்' செய்யப்படுகிறது. வெளியில் 13 சதவிகிதத்திற்குக் குறைந்து பணம் கிடைப்பதில்லை. எந்தப் 'பேங்க்' எடுத்துக்கொண்டாலும் 12 சதவிகிதத்திற்குக் குறைவாகக் கொடுப்பதில்லை. சாதாரணமாக இதைக் கணக்கிட்டுப் பார்த்தால், கொடுக்கிற கடனுக்கு ஒரு சதவிகிதம் 'சென்ட்டேஜ் சார்ஜ்' போடலாம். இதன்மூலமாக மேற்கொண்டும் தொழில்களைப் பெருக்குவதற்கு நிதி உதவி செய்யலாம், இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இருக்கிற தொழில்களை எடுத்துக்கொண்டால், சிறு தொழில்களாக இருக்கிற பல தொழில்களில், அதாவது குடிசைத் தொழில்களாக இருக்கிற தொழில்களை எடுத்துக் கொண்டால், 'நான்மாட்ச்ஃபேக்டரி'யை ஞாபகத்தில் வைத்துகொண்டுதான் சொல்கிறேன். சென்னைமாநிலத்தில், அதிலும் குறிப்பாகத் தென்பகுதியில், இந்தத் தொழிலுக்கு வேண்டிய 'க்ளோரைட்' கிடைக்காமல் இருப்பதன் காரணமாக, இந்தத் தொழிலில் பெரிய

பாதகம் ஏற்படுகிறது. இதன் காரணமாக இதில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு வேண்டிய 'க்ளோரைட்'டை வேண்டிய அளவுக்குத் தருவித்துக்கொள்ள மத்திய சர்க்காரிடம், நம் சர்க்கார் தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும். அவ்வப்போது இப்படிப்பட்டதடங்கல்வராதவண்ணம், 'ரா-மெட்டீரியல்ஸ்' வேண்டிய அளவுக்குத்தருவித்துக்கொள்வதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

ஏற்கெனவே நடந்துவருகிற தொழில்களைக் கணக்கிட்டுத்தான் நம்முடைய 'பெர்-காப்பிட்டா' வருமானத்தைக் கணக்கிடுகிறோம். அப்படியிருக்கும்போது 'பெர்-காப்பிட்டா டிஸ்டிரிப்யூஷன்' சரியாக இல்லாத முறையில் மக்களுக்கு வேலையில்லாமல் போகக்கூடிய நிலைமை ஏற்படக்கூடாது. இப்படிப்பட்ட தொழில்களை எடுத்துக் கொண்டால் வலுவடையாத தொழில் களாகத்தான் இருக்கின்றன. ஏதாவது 'க்ளோரைட்' போன்றவை வராவிட்டால், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமலாகி விடுகிறது. தொழிலும் பாதிக்கப்படுகிறது.

ஆகவே, இப்படிப்பட்ட பொருள்களை வேண்டிய அளவுக்கு வரவழைத்து வைத்துக்கொள்வதற்குச் சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பஞ்சம் ஏற்படாத அளவுக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்தில் விவசாய அபிவிருத்திக் காக, 'அக்ரோ-இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன்' ஏற்படுத்தப்போவது மிகநல்லகாரியம். நான்காவதுதிட்டத்தில் இதை ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது. இதைச் சீக்கிரத்தில் ஏற்படுத்தவேண்டும். இதன்மூலமாக இந்த மாநிலத்தின் விவசாய வளர்ச்சியில் நல்ல பயன் ஏற்படமுடியும் என்று நம்புகிறேன்.


மேலும், 'ஸ்டேட் இண்டஸ்ட்ரியல்ஸ் கோவாப்ரேட்டிவ் பாங்க்' மூலமாக எவ்வளவோ உதவி அளிக்கப்பட்டு வருகின்றன என்று அறியப்படுகிறது. 'டீ இண்டஸ்ட்ரியல்' காரியங்களுக்கும் இதிலிருந்து அமைச்சர் அவர்களுடைய முயற்சியால் உதவி கிடைக்கிற நிலைமை இருந்து வருகிறது. இப்போதைய நிலைமை என்னவென்றால், 'ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் கோவாப்ரேட்டிவ் பாங்கில்' பணம் இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சர்க்கார் நேரடியாகக் கொடுக்கிற பணத்தையும் சேர்த்துக் கணக்கிட்டு இருக்கிறார்கள். 'ஸ்டேட் எய்ட்' என்றமுறையில் கொடுக்கப்படுவதும், தனியாகச் சொல் லப்பட்டிருக்கிறது.

இவ்விதம் சர்க்காரால் கொடுக்கப் படுவதை 'ஸ்டேட் இண்டஸ்ட்ரியல்ஸ் கோவாப்ரேட்டிவ் பாங்க்' மூலமாக 'ரூட்' செய்துகொடுத்தால் நலமாக இருக்கும். இப்போது இந்தப் பாங்கி லிருந்து எத்தனையோ 'லோன்'கள் கொடுக்கப்படுகின்றன. சர்க்கார் உத்யோகத்தில் இருப்பவர்கள் பரிசீலனை பண்ணிப் பார்த்து, அவர்கள் ஒத்துக்கொண்டால்தான் 'லோன்' கொடுக்கப்படுகிறது. தங்கள் இஷ்டப்படி பணம் கொடுத்துவிடுவதில்லை.

இதில்கூட்டுறவுஇயக்கம்மட்டுமல்ல, 'ஸ்மால்ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்' நடத்துபவர்கள், தனிப்பட்டவர்கள் மெம்பர்களாக இருக்கிறார்கள். கிட்டத்தட்ட எட்டு, ஒன்பது லட்ச ரூபாய் தனிப்பட்டவர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 'ஸ்டேட் எய்டாகக்' கொடுக்கப் படுவதையும், இந்த 'பாங்க்' மூலமாக 'ரூட்' செய்தால் மேலும் தொழில்களை

வளர்த்துக் கொள்ளுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னுமொரு விஷயம் என்னவென்றால், 'அலுமினியம் இண்டஸ்ட்ரீஸை' பொருத்தவரையில், நமக்குக் கிடைத்து வருகிற கனிமவள வாய்ப்பில் முக்கியமானதாக இருக்கிறது. அலுமினியத்தை என்னென்ன முறைகளில் உபயோகப்படுத்த முடியும் என்பதை அரசாங்கத் தொழில் 'எஸ்டேட்'களில் முன்மாதிரியாகக் காட்டவேண்டும். சிறுதொழில்களில், அதாவது 'காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ்' என்றமுறையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப்பற்றி அரசாங்கமே முயற்சி எடுத்துக்கொண்டு, தங்கள் தொழில் பேட்டைகளில் முன்மாதிரியாகக் காட்டவேண்டும் என்று கூறிக்கொண்டு அதன்மூலம் அலுமினியத் தொழிலுக்கு நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதைக் கூறிக்கொண்டு இந்த மான்யத்தை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.





வளர்ச்சிப் பணிகளில்...




தமிழக முதல்வர் மு.கருணாநிதி அவர்களுக்கு தூத்துக்குடி இந்தியன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அளித்த வரவேற்பில் ஏ.பி.சி.வீரபாகு, மத்திய வேளாண் துறை அமைச்சர் வி.கே.ஆர்.ராவ்



தூத்துக்குடி வர்த்தகம் மற்றும் தொழில் அமைப்பின் கூட்டத்திற்கு தலைமையேற்கும் ஏ.பி.சி.வீரபாகு



சௌத் இந்தியன் வங்கியின் இயக்குநர் மற்றும் ஊழியர்களுடன் வங்கித் தலைவர் ஏ.பி.சி.வீரபாகு, நடுவில் இருப்பது சட்டமன்ற உறுப்பினர் ஏ.எல்.சுப்பிரமணியன்



திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு நுகர்வோர் மற்றும் வணிகச் சங்க உறுப்பினர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



சௌத் இந்திய வங்கித் தலைவராகச் சிறப்பாகச் செயல்பட்டு பணிநிறைவு செய்யும் ஏ.பி.சி.வீரபாகு. அருகே அமர்ந்திருப்பவர் புதிதாக பொறுப்பேற்கும் வங்கித் தலைவர்



தூத்துக்குடி கூட்டுறவு சங்க வெள்ளி விழா கட்டடத்தின் திறப்பு விழாவில் ஏ.பி.சி.வீரபாகு உரையாற்றுகிறார். தமிழகக் கூட்டுறவு துறை அமைச்சர் செ.மாதவன் மேடையில் அமர்ந்துள்ளார்.



வளர்ச்சிப் பணிகளில்...




மாவட்டக் கூட்டுறவு நுகர்வோர் மற்றும் வணிகச் சங்க வளர்ச்சி ஆலோசனைக் கூட்டத்தில் தமிழகத் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர்.வெங்கட்ராமன் அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



தூத்துக்குடியைப் பெரிய துறைமுகமாக அறிவிக்கவேண்டி பிரதமர் ஜவஹர்லால் நேருவைச் சந்தித்த குழுவின் உறுப்பினராக ஏ.பி.சி.வீரபாகு. பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.கோசல்ராம் அருகே அமர்ந்துள்ளார்.



இந்துஸ்தான் மற்றும் ஸ்டுடிபேக்கர் ஊர்திகளின் விற்பனையகம் பிராவி இன்ஜினியரிங் ஓர்க்ஸின் திருநெல்வேலி கிளை தொடக்க விழாவின்போது.



தமிழக முதலமைச்சர் எம்.பக்தவத்சலம் அவர்கள் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் விழாவில் ஏ.பி.சி.வீரபாகு கலந்துகொண்ட காட்சி



ஸ்ரீவைகுண்டம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தைத் திறந்து வைக்கிறார் ஏ.பி.சி.வீரபாகு.



வ.உ.சி. கல்லூரி ஆண்டு விழாவின்போது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் உரையாற்றுகிறார். அருகில் ஏ.பி.சி.வீரபாகு



வளர்ச்சிப் பணிகளில்...



தூத்துக்குடி வர்த்தகம் மற்றும் தொழில் சங்கக் கூட்டத்தில் மத்திய அமைச்சருடன் ஏ.பி.சி.வீரபாகு கலந்தாலோசிக்கிறார்



இந்துஸ்தான் மற்றும் ஸ்டுடிபேக்கர் ஊர்திகளின் விற்பனையகம் பிராவி இன்ஜினியரிங் ஓர்க்ஸின் மதுரை கிளை தொடக்க விழாவின் பிரம்மாண்டம்



சங்கரன்கோவிலில் நடந்த சர்வோதயா கூட்டத்தில் லோக்நாயக் ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களுடன் உரையாடுகிறார் ஏ.பி.சி.வீரபாகு



திரு. ஆர்தர் ஹோப் அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



1945ஆம் ஆண்டு மகாலட்சுமி பஞ்சு, அரிசி மற்றும் எண்ணெய் ஆலைகள் தொடங்கப்பட்டபோது, அன்றைய மின்துறை செயற்பொறியாளருடன் ஏ.பி.சி.வீரபாகு



திருநெல்வேலி மாவட்ட நூலகக் குழு கூட்டமொன்றில் அதன் தலைவர் ஏ.பி.சி.வீரபாகு



தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டுறவுத்துறை விழாவில், கூட்டுறவில் சிறப்பாகப் பணியாற்றிய ஏ.பி.சி.வீரபாகுவைப் பாராட்டிக் கௌரவிக்கிறார், விடுதலை போராட்டவீரர் என்.எம். ஆர்.சுப்புராமன். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.சிவசாமி அருகே அமர்ந்துள்ளார்.



சிம்சன் மற்றும் அமால்கமேஷன் குழுமத்தின் தலைவர் அனந்த ராமகிருஷ்ணன் அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



கல்வி வளர்ச்சி குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

மக்கள் நல்வாழ்வு பெறுவதற்குரிய நெறிமுறைகளைப் பாரதியார் கூறும்போது,

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக்கு எல்லாம்"

என்று தம் கனவைக் குறிப்பிட்டுள்ளார். இதை நிறைவேற்றுவது எப்படி? அதற்கும் வழிமுறையை அவரே கூறுகிறார். அதாவது,

"பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

என்பதே அவ்வழி!

மக்கள் கல்வி கற்றால், அவரவர் தத்தம் விருப்பமான தொழிலைத் தொடங்கிப் பிறர் கையை எதிர்பார்க்காமல் வாழ வழி பிறக்கும் அல்லவா? இதனை நன்குணர்ந்திருந்தார் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள். இதனடிப்படையில் அவர் சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகளில் சில நெறிமுறைகளைக் காணலாம்.

கல்வி தொடர்புடைய சட்டமன்ற உரைகளில், முக்கிய அம்சங்கள் இரண்டு! ஒன்று, பல கல்வி நிறுவனங்களை உருவாக்கி, நிர்வகித்த ஏ.பி.சி.வீரபாகு அவர்களுக்கு ஆரம்பக் கல்வி குறித்த அக்கறை அதிகம். அதனால்தான், பள்ளிக் கல்வியைப் பற்றிப் பேசும்போதெல்லாம், அதன் தரம், ஆசிரியரின் தரம் மற்றும் நலன், பாடத்திட்டம், பாட உள்ளடக்கம் மற்றும் ஆசிரியர் கல்வி பற்றி வற்புறுத்துகிறார். எந்தப் பாடத்தையும், ஒதுக்கி விடாமல், ஒவ்வொரு பாடத்திற்கும் உள்ள அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் விவாதிக்கிறார்.

எடுத்துக்காட்டாக, கல்வி மானியக் கோரிக்கையில் தம் முதல் உரையிலேயே (8 நவம்பர் 1957) 'கணிதத்திற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென்பதை' வலியுறுத்திக் கூறிவிட்டு, அப்பாடத்தின் வளர்ச்சியையொட்டி ஏற்படக்கூடிய அறிவியல் வளர்ச்சியை விளக்குகிறார். கணக்குப் பாடத்தைப் புறக்கணித்த அமெரிக்கா, விண்வெளி அறிவியல் போட்டியில், சோவியத் யூனியனிடம் தோற்றுப்போன யதார்த்தத்துடன் ஒப்பிட்டு எச்சரிக்கை விடுக்கிறார். அவர் அன்று எச்சரிக்கை செய்த நிலையில் தொடர்ச்சியாக, கணிப்பொறியின் மென்பொருள் துறையில், அமெரிக்கா இன்றும் இந்தியாவை எதிர்பார்த்து நிற்கும் நிலை உருவாகியுள்ளது கண்கூடு.

அடுத்து, 24 ஜூலை, 1962 அன்று, கல்வி மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசும்போது, முதுகலைக் கல்விக்கும், அதனைப் பயின்ற மாணவர்களுக்கும் தட்டுப்பாடு உருவாகுமென்று கூறியதை, இன்று தமிழகமெங்கும் கல்லூரிகளில் முதுகலைப் பாடப்பிரிவுகளுக்கு ஏற்பட்டுள்ள இடநெருக்கடி உறுதிசெய்து விட்டது. இன்று மேனிலைப்பள்ளிகளில் அனைத்துப் பாட ஆசிரியர்களுக்கு, உருவாகியிருக்கும் தேவை இதைப் பிரதிபலிக்கிறது. அதே உரையில், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு முதுகலைப் படிப்புகளில் இடஒதுக்கீடு தேவை என்று, அத்தகைய இடஒதுக்கீடு வரும்முன்னரே வலியுறுத்திவிட்டார்.

கல்வி குறித்த உரைகளில், அன்று நிலவிய ஒருமொழி - மும்மொழி குறித்த கருத்துகளும் காணப்படுகின்றன. தமிழின் உயர்விலும், அதன் கல்வி கற்றுத்தரும் திறனிலும் நம்பிக்கை யுடையவர் ஏ.பி.சி.வீரபாகு, தாய்மொழி வழிக் கல்வியின் அவசியத்தையும், அதனால் ஏற்படும் அறிவு வளர்ச்சியையும் ஜப்பான் போன்ற நாடுகளில் தாய்மொழி வழிக் கல்விமூலம் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும் உதாரணம் காட்டுகிறார். அதேநேரம், அனைத்துப் பாடங்களையும், அனைத்து நிலைகளிலும் கற்றுத்தரும் வளர்ச்சியை அடையும்வரை, ஆங்கிலவழிக் கல்விமுறை தொடரவேண்டுமென்று கூறுகிறார்.

1957 நவம்பர் 8 அன்று காலை 10.12 மணிக்கு ஆற்றிய உரை :

''கனம் சபாநாயகர் அவர்களே! கட்டாயக் கல்வியைப் புகுத்தவேண்டுமென்று அரசியல் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நோக்கத்தை, இருக்கும் குறைவான நிதிவசதிகளைக்கொண்டு நிறைவேற்றுவதற்கான சிபாரிசுகளைக் கொண்ட அறிக்கையை நான் வரவேற்கிறேன். 'ஹிந்தி'யைத் தேசிய மொழியாக 1960 ஆம் வருஷத்திலேயே கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஹிந்தியை நாட்டின் 'பொது மொழி'யாக வைக்கலாம் என்ற யோசனைக்கு நாட்டின் பெரு வாரியான மக்கள் ஆதரவு தந்துள்ளதன் காரணமாக, அதைப் பள்ளிப் படிப்பில் போதிப்பதற்கு அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. புதிய 8வது வகுப்பிலிருந்து, 11வது வகுப்புவரையில் ஹிந்திகட்டாயப்பாடப் பிரிவில் போதிக்கப்படவேண்டுமென்றும், புதிய 6வது 7வது வகுப்புகளில், அதைப் போதிக்கவேண்டாமென்றும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது 'Compressed Course' ஆக இருக்கிறது. ஆறு, ஏழாம் வகுப்புகளிலும் மாணவர்கள் ஹிந்தி படிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். கட்டாயப் பாடப் பிரிவில் ஹிந்தியை ஆறாம் வகுப்பிலிருந்து பதினோராம் வகுப்புவரை போதிக்க வேண்டும்.

அறிக்கையில், கணக்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மொழிகளுக்குத்தான் அறிக்கையில்

முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், நாட்டு மக்களுக்குக் கணக்கு அறிவு மிகவும் வேண்டும். 'கணக்கு பரவும் அளவைப் பொருத்துத்தான் விஞ்ஞான அறிவின் அளவு இருக்கிறது' என்பது, விஞ்ஞான நிபுணர்கள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை.

'அமெரிக்க தேசத்தில், மக்களிடையே கணக்கு அறிவு குறைவாக இருப்பதால், அவர்களுடைய விஞ்ஞான அறிவுக்கும் அந்தநாட்டில் விஞ்ஞான வளர்ச்சிக்கும் பாதகம் ஏற்படும்' என்று இரண்டு மூன்று வருடங்களுக்குமுன் அமெரிக்க தேசத்து நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். அவர்கள் அபிப்பிராயப்பட்டது உண்மை என்பது, அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் ஏற்பட்ட 'ஸாட்டிலைட்' போட்டியில், இப்போது அமெரிக்கா தோற்றுவிட்டது என்பதிலிருந்துகூட தெரிகிறது. ஆகவே, நாம் கணக்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அல்ஜீப்ரா, ஜியாமென்ட்ரி என்ற இரு கணிதங்களையும்கூட பத்து, பதினோராம் வகுப்புகளின் பாடத் திட்டங்களில் சேர்க்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கல்லூரி செல்வதற்குமுன்புள்ள பள்ளிப்படிப்பு 1961-62க்குப்பிறகு 11 வருஷ 'கோர்ஸ்'ஆக இருக்கவேண்டுமென்று அறிக்கைகூறுகிறது. அதுவரையில் இது 12 வருஷப் படிப்பாகவே இருக்கும். மேலும் எட்டு வருஷப் படிப்பு 'அன்னெஸஸரி அப்பெண்டேஜ்' என்று நான் சொல்லுவேன். 1962ஆம் வருஷத்திற்குள்ளேயே எட்டாம் வகுப்பை எடுத்துவிட முயற்சிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், 'ப்ரீ ப்ரொபெஷனல்' கோர்ஸை எடுத்துவிட்டு அதைத் தொழிற் கல்லூரி படிப்பில் சேர்த்துவிடவேண்டும். இப்போதே 'ஹையர் செகண்டரி கோர்ஸ்'இல் தொழிற்கல்வியை 2,200 மாணவர்கள்தான் பயிலுகிறார்கள் என்றும் மற்ற பாடங்களைப் படிப்பவர்களின் எண்ணிக்கை 25,000ஆக இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, தொழிற்கல்வி பயிலுவதற்குப் போதிய மாணவர்கள் வராதிருக்கும் நிலையில், 'ப்ரீப்ரொபெஷனல்' கோர்ஸை எடுத்துவிடவேண்டாம் என்றும், அதை 11வருஷபடிப்புடன்இணைப்பதுகூடாது என்றும்சொல்லிக்கொள்கிறேன். 1962வது வருஷத்திற்குள் தொழிற்பள்ளிகளில் எல்லாச் சாதனங்களையும் வசதிகளையும் ஏற்படுத்திவிட்டு, அதற்குப்பிறகு தொழிற்கல்வியை 'இன்டெக்ரேடட் கோர்ஸ்' ஆக ஆக்கிவிடவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

வயது வரம்பைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். 'ப்ரைவேட் ஸ்டடி'க்கும் வயது வரம்பு நிர்ணயிக்கப்படவேண்டும். கல்லூரிப் படிப்புக்குக் குறைந்தபட்சம் வயது 14 என்று இங்கே நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், இங்கே பள்ளியில் சேராமல் தனியாகப் படித்த மாணவர்கள் பிற ராஜ்யத்திலுள்ள யூனிவர்ஸிட்டியில் சேர்ந்துவிடுகிறார்கள். பிற ராஜ்ய யூனிவர்ஸிட்டிகளில் 13 வயது மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். ஆகவே, எல்லா யூனிவர்ஸிட்டிகளிலும் குறைந்தபட்சம் 14 வயது வந்துள்ள மாணவர்களைத்தான் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அகில இந்தியரீதியில் ஒருவிதி நிர்ணயிக்கப்படவேண்டும். இதற்கு முயற்சிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக 'ப்ரைவேட் ஏஜென்சிஸ்'ஸைப்பற்றிப்பலவிஷயங்கள் கூறப்பட்டிருகின்றன. ஏற்கெனவே உபாத்தியாயர்களுக்காகக் கொடுக்கப்படும் பணத்தைப் 'ப்ரைவேட் ஏஜென்சீஸ்' துர்வினியோகப்படுத்துகின்றன என்று சொல்லப்படுகிறது.

அதற்காகப் 'ப்ரைவேட் ஏஜென்சீ'ஸைத் தள்ளிவிடுவதற்கில்லை. திருநெல்வேலியில் பெரும்பாலான பள்ளிகள் 'ப்ரைவேட் ஏஜென்சிஸி'யால்தான் நடத்தப்படுகின்றன. 'ப்ரைவேட் ஏஜென்சிஸிஸ்'க்கு ஊக்கம் கொடுக்காவிட்டாலும், அவர்களுக்குப் பள்ளி நிர்வாகத்திற்கான நிதிக்குச் சர்க்கார் உதவி அளிக்க வேண்டும். அவர்களுக்குத் தகுந்த நிதி உதவியளிப்பதற்கான வகையில் 'கிராண்ட்-இன்-எய்ட் கோட்'ஐச் சர்க்கார் திருத்தியமைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

1962 ஏப்ரல் 24 அன்று ஆற்றிய உரை :

ஆரம்பக் கல்வியைப் பற்றி மாத்திரம் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது போகின்ற வேகத்தைப் பார்க்கும்போது, ஏராளமான உயர்நிலைப் பள்ளிகள் வேண்டியிருக்கின்றன. கல்வி சம்பந்தமாக வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையின்படி, 'செகண்டரி எஜுகேஷன் போர்டு' ஒவ்வொரு ஜில்லாவிலும் நிர்மானித்து, அதன் மூலமாக உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப் போகிறோம் என்று இதற்கு முன்னால் சொல்லப்பட்டது. வருகிற ஜூன் மாதத்தில் பல இடங்களில் உயர்தரப் பள்ளிகள் ஏற்படுத்தவேண்டிய அவசியம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறதென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இருந்த ஜில்லா-போர்டுகளிடம் நிதிவசதி குறைவின் காரணமாக, ஜில்லாக்களில் புதிய உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிப்பதில் ஊக்கம் காண்பிக்காத நிலை ஏற்படுகிறது. நிதிவசதி குறைவால், புதிய உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த முடியாமலிருக்கிறோம் என்று ஜில்லா கலெக்டர்கள் சொல்லுகிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் ஐந்தாறு இடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட வேண்டியதிருக்கிறது.

ஆகவே, இந்தப் பிரச்சினையில் நல்லதொரு முடிவுகாண வேண்டுமென்று 'பாலிஸி டெஸிஷன்', எடுத்து 'எஜுகேஷன் கமிட்டி' ஏற்படுத்துவதன் மூலமாக, அல்லது 'டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' நேரடியாகப் பள்ளிக் கூடங்களைத் திறக்கலாம் என்று அவருக்கு அதிகாரம் கொடுப்பதன் மூலமாக இப்பிரச்சினையை உடனடியாகச் சமாளித்துவிடக்கூடிய நிலை இருக்கிறது என்பதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த கனம் சபாநாயகருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1962 ஜூலை 2 அன்று ஆற்றிய உரை :

அடுத்தபடியாக, கல்விக்காக ஒரு பெருந்தொகையை நம்முடைய அமைச்சரவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். 'வீதிதோறும் பலபல பள்ளிகள்' என்று பாரதி சொன்னான். பல பல ஆரம்பப் பள்ளிகளை நாம் ஏற்படுத்திவிட்டோம். ஊருக்கு ஊர் உயர்நிலைப் பள்ளி என்ற விதத்தில் நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் செயலாற்றி வருகிறார்கள். கல்விக்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதில் மருத்துவக் கல்லூரி, 'அக்கரி கல்சுரல்' கல்லூரி, 'வெட்டினரி' கல்லூரி சேர்க்கப்படவில்லை. தொழில் நுட்பக்கல்வி சேர்க்கப்படவில்லை. இவற்றைச் சேர்த்துக்கொள்ளாமல் 25 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதைப் பார்க்கும்போது, கல்வியிலே ஆர்வமுள்ளவர்கள், இந்தத் தேசத்திலே அறியாமை இருளைப் போக்கவேண்டுமென்றால், கல்வியினால்தான் முடியும்" என்ற நம்பிக்கையுள்ளவர்கள் நிச்சயமாகச் சந்தோஷப்படுவார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1962 ஜூலை 24 அன்று ஆற்றிய உரை :

கனம் சபாநாயகர் அவர்களே! இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில விஷயங்களைச் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கல்விக்காகச் சுமார் 1.5 கோடி ரூபாய்வரை இந்த மானியத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது கல்விக்காக நேரிடையாக 90 லட்சம் ரூபாயும், மதிய உணவு, 'ஹாஸ்டல்' இவற்றிற்காக 60 லட்சம் ரூபாயும், இப்படிக் கிட்டத்தட்டக் கல்விக்காக 1.5 கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க அம்சம். இதனால் பெரும்பான்மையான மக்கள் பயனடைவதற்கு உதவியாக இருக்கும்.

அதேநேரத்தில் 'போஸ்ட் கிராஜ்வேட்' எம்.ஏ படிக்க விரும்புகிறவர்களுக்கு உதவி செய்ய எவ்வித வசதியும், உற்சாகமும் காட்டப்படவில்லை. 'இதற்கு உதவினால், மற்றவர்களுக்கு அதிகமாகக் கல்விக்கு உதவியளிக்க முடியாது' என்ற காரணத்தினால் இதற்குக் கொடுக்கவில்லை. இருந்தாலும் 'போஸ்ட் கிராஜ்வேட் கோர்ஸு'க்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருங்காலக் கல்வி அமைப்பில் எம்.ஏ. பட்டதாரிகளுக்குத்தான் ஆசிரியர்கள் பொறுப்பு வரும். பின்தங்கிய, ஹரிஜன மாணவர்களிடமிருந்து எம்.ஏ. படிக்க யாராவது விரும்பலாம். எல்லோரும் படிப்பார்கள் என்று எண்ணவேண்டாம். ஒன்றிரண்டு பேர்தான் பி.ஏ படித்து, மேல்படிப்புக்கு வரமுடியும். அதுவும் படிக்க விரும்புகிறவர்களுக்கு இடம் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. சர்வ கலாசாலையில், அதற்கு ஒரு தேர்வுக் குழு இருக்கிறது. பி.ஏ. முதல் வகுப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவேண்டும். அவர்கள் பரிசீலனை செய்து யாருக்காவது இடம்கொடுத்தால் அவர்கள் பின்தங்கிய வகுப்பு, ஹரிஜனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அரசாங்கம் இந்த மானியத்தின்கீழ் அப்படிப்பட்ட ஒன்றிரண்டு பேர்களுக்கு நிதி உதவி அளிக்கத்தக்க ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் படிப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1963 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

கல்வித் திட்டத்தைப்பற்றி நான் சொல்லவேண்டியதே இல்லை. ஏனென்றால், நம் மாநிலத்தில் கல்விக்கொடை வழங்கப்படுகிறது என்று சொன்னால், அது மிகையல்ல. மதிய உணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, எங்கோ 'பாலில் பல்லி செத்திருந்தது' என்று சொல்லி, அதைப் பரிசீலனை செய்கிறோம் என்று, ஒரு வருஷமாகப் பால் பவுடர் சப்ளை நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. 'பால் பவுடராகக் கொடுக்கலாம், தயிராகக் கொடுக்கக்கூடாது' என்று சொல்கிறார்கள். வெறும் பாலைச் சாப்பிட வாருங்கள் என்றால், அதிக உபயோகமில்லை. பால்பவுடர் வழங்கப்படாததால் தயிர்சாதம் வழங்கமுடியவில்லை. ஏதோ ஒரு 'ஐஸலேடெட் இன்ஸ்டன்ஸை' வைத்துக்கொண்டு இவ்வளவு நாள் பாராமுகமாக இருப்பது சரியல்ல.

என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்கிறேன். தூத்துக்குடியில், மதிய உணவுத் திட்டத்தின்கீழ் நாங்கள் கிட்டத்தட்ட 2,500 பையன்களுக்கு மதிய உணவு போட்டு வருகிறோம். அங்கே தயிர்சாதம் போட அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டிருந்தோம். அந்தப் பக்கம் வரும் அமைச்சர்களையும், கனம்சபாநாயகர் அவர்களையும் கல்வி இலாகா டைரக்டர் அவர்களையும்கூட இதுபற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இவ்வளவு கால

தாமதம் இருப்பது பொருத்தம் இல்லை. பால் பவுடரை உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய உதவியைச் சீக்கிரமாகச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1964 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

நமது உயர்கல்வி வரவுசெலவுத் திட்டத்தில், பதினோராம் வகுப்புவரை எல்லோருக்கும் இலவசக் கல்விச் சலுகை அளித்திருப்பதையும் மதுரையில் ஒரு புதிய பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதையும் யாவரும் பாராட்டுவார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள், இந்தப் பல்கலைக்கழகம் மதுரையில் அமையவேண்டும். ஏனென்றால், ஆங்காங்கே கலாசாலைகள் அதிகம் பெருகி வருகின்றன. இந்த வருஷமும்கூட இன்னும்ஐந்து கலாசாலைகளின் வசதியைப்பெருக்குவதற்குஇந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாகவே மதுரையில் ஒரு பல்கலைக்கழகம் அமையவேண்டும் என்பதை நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், நமது கல்விக் கொள்கையில் ஒருதைரியமான முடிவை நமது அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மும்மொழித் திட்டம் என்கிற அந்தக் கொள்கையை நாம் ஒத்துக்கொண்டிருக்கிறோம். எனக்குமுன் பேசிய நண்பர், "ஹிந்தியை ஏற்றுக்கொள்வதால் ஏதோ பெரிய கெடுதி ஏற்பட்டுவிடும்'' என்பதுபோலத் தம்முடைய பயத்தை வெளியிட்டார்கள். அப்படிப் பயப்படக் கூடியவர்களின் அச்சத்தைப் போக்குவதும் நம்முடைய அரசாங்கத்தின் கடமையாகும்.

இந்தி அகில இந்திய மொழியாகும். அது ஒரு காலத்தில் அரசாங்க நிர்வாக மொழியாகவும் வரக்கூடும். ஆகவே, அதைக்கற்பது இன்றியமையாதது என்பதை மற்ற மாநிலக்காரர்கள் எல்லாம் ஒத்துக்கொண்டு, தங்களது அரசாங்கப் பாடத்திட்டத்தில் 'கட்டாய மொழி'யாக வைத்திருக்கிறார்கள். நம் நாட்டிலுள்ள மக்களிலும் ஒரு கணிசமான பகுதியினர், அந்தக் கொள்கையை ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே, ஒரு சிலர், இந்தி வேண்டாம் என்றாலும்கூட அவர்கள் படிக்காமல் இருக்கலாமே தவிர, படிக்க விரும்புகிறவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடாது என்று சொல்ல முடியாது. இந்தி வேண்டும் என்பவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க நமது அரசாங்கம் வசதிசெய்து தரக் கடமைப் பட்டிருக்கிறது.

ஆகவே, இந்தியைப் பாடத் திட்டத்தில் இருந்தே எடுத்துவிட வேண்டும் என்று ஆளும் கட்சியினரை வற்புறுத்த யாருக்கும் உரிமை கிடையாது. வேறு அரசியல் காரணங்களுக்காகப் போராட்டம் நடத்துவது என்றால், அது வேறு விஷயம். 'இந்திக்காகவே போராட்டம் நடத்துவோம்' என்பது, தங்கள்கட்சிக்காகப்போராட்டம் நடத்துவதாக அமையுமேதவிர, மக்களுடைய நலனுக்காகப் போராட்டம் நடத்துவதாக அமையாது என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தி, இந்தியப் பொது மொழி. ஆகவே, அது நம்முடைய கல்வித் திட்டத்தில் கட்டாயப் பாடமாக அமையவேண்டும். தொடர்ந்து இந்திக்குப் போதுமான முக்கியத்துவத்தை அளிப்பதும் நம்முடைய கடமை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

1964 அக்டோபர் 16 அன்று ஆற்றிய உரை :

கனம் சபாநாயகர் அவர்களே! இந்தச் சட்டத்தை நான் வரவேற்றுப் பேசும் அதேசமயத்தில், இதனுடைய

அவசியத்தை உணர்ந்து நாம் செயல்படும்பொழுது, நாம் நம்முடைய லட்சியங்களுக்கு உகந்தவாறு, நம்மைத் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். 1965 ஜனவரி 26ஆம் தேதிக்குப் பின்னர், ஆங்கிலமே தொடர்ந்து நம்முடைய சட்டசபை நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டியதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தோழரும் ஒப்புக்கொண்டார்கள். நல்ல வேளையாக, ஹிந்தி வெறியர்கள் காட்டுகிற அந்த மனப்பான்மையை, அவர்கள் காட்டாமல் இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், 'ஆங்கிலமே எப்பொழுதும் நம்முடைய நிர்வாகத்தை நடத்துவதற்கு இருக்கவேண்டும். அதுவே கல்வி பெறுவதற்கான பாஷையாக இருக்கவேண்டும். அரசாங்க அலுவல்களை நடத்துவதற்கு அதுவே நிரந்தரமாக இருக்கவேண்டும்' என்கிற நிலையை நாம் எவ்வளவு காலம் அனுமதிக்கப் போகிறோம் என்பதை நாம் யோசிக்க வேண்டும்.

நமக்கு அரசியல் சட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தவர்கள், 15 வருஷ அவகாசம் போதுமென்று நினைத்தார்கள். அதன்படி நம்மைத் தயார்செய்து கொள்ளவில்லை என்பதுதான் இந்தச் சட்டத்தின் மூலமாகத் தெரிகிறது. ஸி.ஆர்.தாஸ் அவர்கள், அகில இந்தியகாங்கிரஸ்கமிட்டி கூட்டத்திலே, "15 வருஷ காலத்திற்குள் இந்தத் தேசத்திலுள்ள அத்தனைபேரும் கல்வியறிவு பெற்று, இந்தத் தேசத்தின் பொதுமொழி மூலமாக, இந்தத் தேசத்தின் அலுவல்களை, அதிகாரம் கொடுத்தால் நடத்திக்காட்ட முடியும்" என்று குறிப்பிட்டார்கள். அதற்கு உதாரணமாக "ஜப்பான் தேசத்தை, அந்தப் பிரசங்கத்திலே குறிப்பிட்டார்கள். ஜப்பான் தேசம், தன்னுடைய கல்வித் துறையிலும், ஆட்சித்துறையிலும் 15 வருட காலத்திற்குள் தன்னுடைய சொந்த பாஷையைக் கொண்டுவர முடிந்தது என்றால், ஏன் நம்முடைய தேசத்திலும் அது சாத்தியமாக இருக்கக்கூடாது" என்று அந்தக் காலத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நினைவில் வைத்துக் கொண்டுதானோ என்னவோ, 15 வருஷ அவகாசம் போதுமென்று தீர்மானித்து, ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, அதனுடைய இடத்தை இந்தியாவின் பொதுமொழியான இந்திக்கு அளிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள்.

இந்த 15 வருஷ கால தயாரிப்பு, இந்தத் துறையிலே மாத்திரம் தயங்கி விட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், 'தென்னிந்தியப் பகுதியிலேவசிக்கிறநம்முடைய மக்கள் எப்பொழுது ஆங்கிலத்தை அகற்ற விரும்புகிறார்களோ, அதுவரையிலும் அதுதொடர்ந்து இருப்பதற்கு நம்முடைய தேசத்தின் பெருந்தலைவர் பண்டித நேரு அவர்கள் வாக்களித்துள்ளார்கள்.' அதையொட்டி, இந்தச் சுதந்திரம் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நடைமுறைக்காக அதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இதிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. உணர்ச்சிவசப்படாமல், நிதானமாக, இந்தத் தேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும், அரசாங்க நிர்வாகத்திற்கும் உதவியாக அமைவதற்கு நம்முடைய தாய்மொழியாகிய தமிழ் எவ்வளவு சீக்கிரத்தில் தகுதி அடையும்? அந்தத் தகுதியைப் பெறுவதற்கு நாம் எவ்வாறு முயற்சி செய்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். அதேசமயத்தில், நாம் தனித் தமிழ்நாடாக இயங்கமுடியாத காரணத்தினால், நாம் எல்லோரும் ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு ஏற்கெனவே ஏற்பட்டுவிட்டதனால், இந்தத் தேசம் சிதறுண்டு போகாமலிருப்பதற்கு ஒரு பொதுமொழியின் அவசியத்தை

ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தப் பொதுமொழி ஆங்கிலமாக இருக்கவேண்டும் என்பது ஒப்புக்கொள்ள முடியாதநிலை.

ஆங்கிலம் ஒரு பெரிய பாஷை. உலக மொழியாக வேறு, அது பெற்றுள்ளது. ஆனால், நம்முடைய தேசிய மொழி ஆங்கிலமாக வந்துவிடக்கூடாது என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன். பிராந்திய மொழியை வைத்துக்கொண்டே எல்லா வற்றையும் நடத்திக்கொள்ளலாம் என்றாலும், பிராந்திய மொழியைத் தவிர, வேறு ஒரு மொழி ஒப்புக்கொள்ள வேண்டு மென்று சொன்னால், அது ஹிந்தி மொழி யாகத்தான் இருக்கமுடியும். அதற்கு இரண்டு காரியங்கள் இருக்கின்றன. இந்த உலகத்தில், பெரும்பகுதியான மக்கள், ஹிந்தியை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஹிந்தி பேசுகிறார்கள். 'எங்களுக்கு ஹிந்தி தெரியாது' என்று நொண்டிவாதம் இனிமேல் பொருந்தாது.

மற்றொன்று, தென்பகுதியில் அத்தனை ராஜ்ஜியங்களும், தமிழ்நாடு தவிர, மற்ற எல்லா ராஜ்ஜியங்களும், இந்தியைக் கட்டாயமாக ஏற்றுக்கொண்டு பயின்று வருகிறார்கள். ஆனால், நம் ராஜ்ஜியத்தில் சிலருடைய கிளர்ச்சிக்காக, பலருடைய விருப்பத்திற்கு மாறாக, இந்தி கட்டாய பாடமாக இல்லாமல் இருக்கிறது. அப்படிக்கட்டாய பாடமாக இல்லாமலேயே நம் ராஜ்ஜியத்தில் 'தட்சிண பாரத இந்தி பிரச்சார சபை'யின் முயற்சியினால் கட்டாயம் இல்லாமலே, நல்லமுறையில் இந்தி பரவி வருகிறது. அதோடுகூட, சமீபத்தில் கல்வித் திட்டத்திலே ஏற்படுத்தியிருக்கின்ற முக்கியத்துவத்தின் மூலமாக, நல்ல பலன் இருக்கும் என்று நம்புகிறேன்.

இருந்தபோதிலும், இதிலே இருக்கும் ஒன்றிரண்டு குறைபாடுகளை எடுத்துக் கூற விரும்புகிறேன். 'தமிழ்மொழியே போதனை மொழியாக, பயிற்று மொழி யாக, அலுவலக மொழியாக எல்லாத் துறையிலும் இருக்கவேண்டும்' என்று எல்லோரும் அபிப்பிராயப்படுகிறார்கள். அது நியாயமும்கூட. ஆனால், அந்த அளவுக்குத் தமிழுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அதற்கென்ன செய்யவேண்டுமென்றால் அதுவரைக்கும் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அந்தக் காலத்திற்குள் தமிழ் முன்னேற்றம் அடைந்து விடும் என்பது நம்பிக்கை.

இதிலே வேறொரு கருத்தும் இருக்கிறது. சில மொழி வல்லுநர்கள் சொல்கிறார்கள். ''தெரிந்ததைத் தெரிந்து கொள்ளத்தான் ஆங்கிலம் பிரயோசனப்படும். தெரியாததைத் தெரிந்துகொள்ள ஆங்கிலம் பிரயோசனம் இல்லை'' என்று 'இன்வெண்டிவ் ஃபாக்கல்டி' கொடுப்பதில்லை என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம், "அந்நிய மொழியில் பயிற்சி பெறுவதால்" என்றும் சொல் கிறார்கள்.

நம் நாட்டிலே உள்ள பல்வேறு ராஜ்ஜியங்களிலும், பல நிபுணர்கள் இருக்கிறார்கள். விஞ்ஞானத் துறை, கணக்கியல் துறை போன்ற பல்வேறு துறைகளில் அறிவாளிகள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய ஆற்றல் எல்லாம், ஆங்கிலம் அந்நியமொழியாக இருப்பதால்தான் தடைப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். பொதுவாக, உலகத்திலே கண்டுபிடிப்புப் பட்டியலிலே உயர்ந்தநிலையை அடையவேண்டுமானால், தமிழுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அதிகமாக அது வளர்ச்சி யடையவேண்டும்.

முதலில் ஆங்கிலத்திற்கு 15 வருஷ காலம் என்று குறிப்பிட்டார்கள். அன்றைக்கு இருந்தநிலையில் நம்

தலைவர்கள் அப்படி வரையறை செய்தார்கள். இப்பொழுது, அது போதவில்லை என்று காலத்தை நீடிக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தைச் செய்கிறோம். அப்படிச் செய்யும்போது, 'ஆங்கிலம் அப்படி எவ்வளவு நாள்களுக்கு நீடிக்கும்' என்று சொல்லப்படவில்லை. தமிழ் வளர்ச்சிக்கு வேண்டிய காலம், அல்லது தமிழ் அறிவுத்திறன் கொடுக்கும் சக்தி ஏற்படும்வரை என்று எடுத்து கொள்வதா? அல்லது, நிரந்தரமாகவா என்ற புரியவில்லை. ஆகவே, ஒரு கால வரையறையை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். கால வரம்பிற்குள் வளர்ச்சியடையவில்லை என்றால், அதைப் பின்னால் நீடித்துக்கொள்ளலாம்.

முன்பு ஆங்கிலத்திற்கு 15 ஆண்டுகள் என்று வைத்தார்கள். இப்பொழுது அதை நீடிக்கிறோம். அதைப்போல இப்பொழுதும் ஒரு காலவரம்பு கட்டுவதுதான் சாலச்சிறந்தது. ஆனால், அந்தக் கால வரம்பிற்குள் தமிழ் வளர்ச்சி அடைந்துவிட்டாலும், ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆங்கிலம் மட்டுமன்றி பிரெஞ்சு, ரஷ்யன், ஜப்பனிஸ் முதலிய பாஷைகளையும் நாம் படிக்கவேண்டும். ஆனால், அப்படிச் சொல்லும்போது அத்தனைபேருமே ஆங்கிலம் படிக்கவேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆராய்ச்சியாளர்கள்மட்டும் படித்தால் போதாதா என்றும் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் அது 'எஜூகேஷனல் வேஸ்ட்' ஆகப் போய்விடும். ஏற்கெனவே நம் குழந்தைகளின் திறமையைப் பற்றித் தெரியும். ஆகவே, ஆங்கிலத்தை நீடிப்பது, ஆங்கிலத்தைக் காப்பாற்ற இல்லை. நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேதான். ஆங்கிலத்திற்குத் தேவையிருக்கிறது என்றால், அந்த அளவுக்குத் தமிழுக்கு வளர்ப்பின்மை இருக்கிறது என்பதைத்தான் அது காட்டுகிறது.

தமிழின் வளர்ப்பை உயர்த்தவேண்டுமென்றால், அது சுலபத்தில் முடியாத ஒன்று. ஊர்வலம் போகலாம், பொதுக் கூட்டங்கள் போடலாம், ஆள் சேர்க்கலாம். ஆனால் வளர்ப்பை ஏற்படுத்தமட்டும் இயலாது. ஆகவே, அந்த 'ஃபெயில்யூரை'ப் பார்க்கிறோம். அதனால், ஆங்கிலத்தை நீடிக்கவேண்டும் என்று நம்மீது அந்த முத்திரையை அடித்துக் கொள்கிறோம். அதுவும் எதற்காக? விஞ்ஞானத்தை, ஆராய்ச்சி அறிவை வளர்க்க அல்ல, நிர்வாகத்தை நடத்த!

ஆகவே, இந்தச் சட்டம் அமலாக்கப்படும்போது, இந்தி பொதுமொழியாக வளர்வதைத் தடைப்படுத்தும் வகையில் அமையாமல், அமல்படுத்தப்படவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அது பொதுமொழியாக அமைய அனுகூலமாக இருக்கும்வகையில் அமலாக்கப்படவேண்டும். அதேசமயத்தில், 'நாம் தக்க பயிற்சி பெறும்வரையில்தான் ஆங்கிலம்' என்று ஒரு காலவரை செய்வதும் நல்லதே என்ற என் எண்ணத்தையும் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

1964 அக்டோபர் 22 அன்று ஆற்றிய உரை :

"இந்தக் கல்விமுறையிலே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதுதான், இந்த மந்திரி சபையின் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு முக்கியக் காரணம்'' என்று பொருள்படும்படி புலவர் கோவிந்தன் அவர்கள் ஆமோதித்து ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, வழிமொழிந்து பேசினார் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அப்படி அவர் வழிமொழிந்து பேசும்போது உணவுக் கொள்கையைப் பற்றிச் சொல்லியிருந்தால், ஓரளவுக்குப் பொருத்தமாக இருக்கும்.

ஆனால், கல்விக்கொள்கையைப் பற்றிப் பேசினார்கள். 'ஒரு நாளைக்கு ஒருவிதமாகக் கல்விக்கொள்கையை இந்த மந்திரிசபை மாற்றுகிறது' என்று சொன்னார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு இந்தக் கல்விக்கொள்கை தானா அகப்பட்டது என்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே எனக்கு அவர்மீது பரிதாபமாக இருக்கிறது. கல்விக்கொள்கை என்று சொன்னார்களே தவிர, கடைசியில் பேசும்போது மதிய உணவையும் சீருடையையும் எதிர்த்து அவர்கள் பேசினார்கள். 'இங்கே செகண்டரி கல்வி 11 வருஷம் என்ற கொள்கை வேண்டாம்' என்று சொல்கிறாரோ, அல்லது 'கல்லூரியில் ஆங்கில மீடியம் இருக்கக்கூடாது, தமிழ் மீடியம்தான் இருக்கவேண்டும்' என்றெல்லாம் சொல்லப் போகிறாரோ என்று நான் நினைத்தேன்.

இந்த சர்க்காரின் கல்விக்கொள்கை மாதிரி, எடுத்துக்காட்டாக இருக்கிற கொள்கை வேறு எங்கும் கிடையாது. ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. மறுபடியும் சொல்கிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு இதை நீங்கள் எடுத்துக்கொண்டீர்களே என்றுதான் பரிதாபப்பட வேண்டியிருக்கிறது (சிரிப்பு).

செகண்டரி, கல்வி லெவலிலே, தாய்மொழிக்கு முதலிடம் கொடுக்கும் திட்டத்தைத் திரு.அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கொண்டு வந்தார்கள். இதுவரையிலும் இந்தக் கல்விக்கொள்கையில் ஒரு மாற்றமும் செய்யவில்லை. நமது முதலமைச்சர் அவர்கள், அதிலே பிடிவாதமாக இருக்கிறார். ஆனால், செகண்டரி கல்வி கமிஷன் ரிப்போட்டின்படி, சில முடிவுகள் எடுத்தோம்.

1957இல் இந்தச் சபைமுன்பு 'ஓயிட் பேப்பர் ஆன் எஜுகேஷன்' சமர்ப்பிக்கப் பட்டது. 'அகில இந்திய செகண்டரி எஜுகேஷன் கமிஷன்' கொடுத்த ரிப்போர்ட் அது. அந்தக் கமிஷனில் சிபாரிசுகளின் பேரில் பாரத நாடு பூராவும் ஒரு 'இண்டகிரேட்டட் சிஸ்டம் ஆப் எஜுகேஷன்' இருக்கவேண்டுமென்ற வகையில் ஒரு 'ஓயிட் பேப்பர்' தயாரித்து, அதன்படி செய்தோம். இது, மந்திரிசபை கொண்டுவந்த கல்வித் திட்டமா என்று நான் கேட்கிறேன். கல்வி நிபுணர்கள் கொண்டுவந்த திட்டம். நம் எல்லோருடைய மதிப்பிற்குரிய திரு. ஏ.எல்.முதலியார் அதிலே இருந்திருக்கிறார். நீங்கள் பேசுவதாயிருந்தால் 'எங்கள் மதிப்பிற்குப் பாத்திரமான திரு.முதலியார்' என்று சொல்வீர்கள், அவர் மேல்சபையில் எதிர்க்கட்சித் தலைவராக 'திரு.முதலியார்' இருப்பதைக் கொண்டு! ஆனால், நான் சொல்கிறேன், 'நம் எல்லாருடைய மதிப்பிற்கும் பாத்திரமான அவர் கொண்டுவந்த திட்டம் அது'.

11வருஷம் 'இண்டகிரேட்டட் செகண்டரி எஜுகேஷன்' இருக்க வேண்டும். '14 வருடத்திற்குமேல் படிப்பின் காலம் கூடாது' என்று கொண்டுவந்தார்கள். அது எப்படி சென்னை சர்க்காரின் கல்வித் திட்டமாக இருக்கும்? அதை எதிர்க்கட்சிகள் என்ன எதிர்க்கிறார்களா? வேண்டாம் என்று சொல்கிறார்களா? என்ன மாற்றம் செய்துவிட்டோம்? ஒரே ஒரு மாற்றம், அதாவது, 'ஆப்ஷனல் சப்ஜெக்ட்'களைப் பழையபடி கொண்டுவரலாம் என்று சொன்னார்கள். அதுவும் 'ஸ்டேட் எஜுகேஷன் கன்சல்டேட்டிவ் கமிட்டி' ஒப்புக்கொண்டபிறகு கொண்டு வந்தார்கள். எதிர்கட்சியிலுள்ளவர்களும் அந்தக் கமிட்டியிலே அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அப்படி ஆப்ஷனல் வேண்டாம் என்றால், ஏன் அங்கே சொல்லியிருக்கக்கூடாது. கல்விக் கொள்கையிலே ஏதோ ஒரு பெரிய

மாற்றம் செய்துவிட்டோம் என்று ஒரு 'பாசுபதாஸ்திரத்'தை இங்கே கொண்டுவந்துவிட்டார்கள். அந்தக் கொள்கையினால் என்ன ஏற்பட்டுவிட்டது என்று சொல்லவில்லை. அதற்கு நேர்மாறாக, மதிய உணவு ஏன் போடுகிறீர்கள்?, சீருடை ஏன் வழங்குகிறீர்கள் என்று கேட்டார்கள். நல்லவேளையாக இங்கே அயல்நாட்டு 'ரிப்போர்ட்டர்'கள் ஒருவரும் இல்லை. இருந்திருந்தால், 'இப்படிக் கேட்கிறவர்களுக்கு, நாம் ஏன் ஒன்றரை கோடி ரூபாய் கொடுக்கிறோம்' என்று நினைத்திருப்பார்கள். மதிய உணவு கொண்டு வந்ததன் காரணமாகத்தான் இன்று எல்லா ஏழை மாணவர்களும் பள்ளிக்கூடத்திற்கு வருகிறார்கள்.

'மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஊழல் இருக்கிறது' என்று சொல்லி, இதைக் கல்விக் குற்றச் சாட்டாகக் கூறினார்கள். (குறுக்கீடு)

அவர்களுக்கு ஏன் ஆத்திரம் வருகிறது? சொன்ன குற்றசாட்டு சரியில்லை என்று சொன்னால், ஆத்திரம் வருகிறது. கடைசியாக இவற்றிற்கெல்லாம் மந்திரி அவர்கள் பதில் சொல்லலாம். எதிர்க்கட்சிகாரர்கள் எல்லாம் இரண்டு நாள்களில், 10 மணி நேரம் பேசுகின்ற எல்லாவற்றிற்கும், முதலமைச்சர் அவர்கள் ஒன்றரை மணி நேரத்தில் பதில்சொல்ல முடியாது என்ற காரணத்தால், நாங்கள் பதில் கொடுக்கவேண்டிய வேலையை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

யார் அந்த ஊழலைக் கண்டுபிடித்தார்கள்? இந்த சர்க்கார் போட்ட கமிட்டி அது. சுப்பிரமணிய கவுண்டர் தலைமையில் நடந்தது. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், மதிய உணவுத் திட்டத்தை நல்லமுறையில் நடத்த 'பீப்பிள்ஸ் கிச்சன்' என்ற அளவிலே கொண்டுவருவதற்குக் கோவாப்-ரேஷனைத் தந்திருக்கிறார்களா? இப்போது மதிய உணவு திட்டத்தில் ஊழல் இருக்கிறது என்று சொன்னால், அந்தப் பொறுப்பில் உள்ள ஆசிரியர்கள் ஊழல் செய்கிறார்கள் என்று சொல்கிறார்களா? அப்படி ஊழல்செய்கிறார்கள் என்று சொன்னால், 'ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டும்' என்றுநீங்கள்காட்டுகிறபரிவுஎத்தகையது? பிரச்சினையைச் சரியாகப் புரிந்துகொண்டு செயல்படவேண்டும் என்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் குறிப்பிட விரும்புகிறேன்.

சீருடையைப் பொருத்தவரையில், சில இடங்களில் இலவசமாகக் கொடுக்கலாம். சில இடங்களில் அவரவர்களே சொந்தத்தில் தைத்துக் கொள்ளலாம். சீருடைத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் பள்ளி மாணவர்கள் மனத்திலே தோன்றக்கூடாது என்பதுதான். பணக்காரவீட்டுக் குழந்தைநல்லமஸ்லின்சட்டைபோட்டுக் கொண்டும், ஏழைக் குழந்தை சாதாரண சட்டை போட்டுக்கொண்டிருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வானநிலை இருக்கக்கூடாது என்ற காரணத்தால்தான் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சீருடையை, 'இலவச உடை' என்று மாற்றிக்கொண்டு ஏன் குற்றம் காண்கிறீர்கள்?

"இந்தியை 'மாடரேஷனில்' சேர்த்திருப்பதால், தரம் குறைந்துவிட வில்லையா?" என்று கேட்டார்கள். கணக்கில் 10 மார்க், 15 மார்க் வாங்கி 'மாடரேஷன்' செய்தால், தரம் குறைந்து இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், 'மாடரேஷன்' என்பது கல்வி முறையிலே ஒரு 'பாலிசி'யாக வகுக்கப் பட்டிருக்கிறது. 'மாடரேஷ'னில் 'பாலிசி'யாக ஒத்துக்கொண்டிருக்கிறார்களா, இல்லையா? ஒரு 'சப்ஜெக்டில்' குறைவான 'மார்க்' வாங்கி, இன்னொரு 'சப்ஜெக்டில்' அதிகமான 'மார்க்' வாங்கியிருந்தால்,

அப்போது 'மாடரேஷன்' பயன்படுகிறது. கணிதத்துறையில் குறைவாகவும், சரித்திரத்தில் நிறையவும் மார்க் வாங்கியிருந்தால், அவன் சரித்திர 'ஸ்பெஸலிஸ்ட்' ஆவான். 'எஜுகேஷன் ஸ்டாண்டர்'டைப் பொருத்து 'மாடரேஷன்' என்பது 'வைஸ் சாண்சிலர்' மற்ற நிபுணர்கள் எல்லாம் பரிசீலித்துக் கொண்டுவந்த கொள்கை. அந்த 'மாடரேஷன் பிரின்சிபி'லை இந்திக்குக் கொடுத்தால் என்ன? அவன் 'லீங்விஸ்ட்' ஆகிறான். அதனால் கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று சொல்வது எவ்வளவு பொருத்தமாகும்? ஆகவே, அதுவும் பொருத்தமாகாது.

1965 மார்ச் 2 அன்று காலை 10.30 மணிக்கு ஆற்றிய உரை :

சந்தோஷமான செய்தி! செக்கண்டரி எஜுக்கேஷனை, 'பெர்பெக்டாக'க் கொடுத்துவிட்டோம் என்று சொல்ல முடியாது. செக்கண்டரி லெவல், எலிமெண்டரி லெவல் எஜுகேஷனுக்கு நிறையப் பணம் வேண்டியிருக்கிறது. எல்லாவற்றையும் பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு வைப்பது என்றிருக்கக்கூடாது என்று கூறினேன். அந்த முறையில், அவர்கள் எண்ணமும், போக்கும் இருப்பது கண்டு சந்தோஷப்படுகிறேன்.

கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. 'ஏழு கல்லூரிகள் திறக்கப் போகிறோம்' என்று முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்கது. 'யூனிவர்சிட்டி எஜுகேஷ'னை, 'யூனிவர்ஸல் எஜுகேஷ'னுக்கும் நிலைமை மாறவேண்டும். எல்லோரும் கல்லூரிப் படிப்பிற்கு லாயக்கு என்ற முடிவுக்கு வரக்கூடாது. தொழில் அமைச்சர் அவர்கள் நடத்தும் தொழில் நுணுக்கப் பள்ளிகள் இருக்கின்றனவே, அவை எப்படி எல்லோரும் 'யூனிவர்சிட்டி'க்கு வரமுடியாது என்பதைக் காட்டுகின்றன. எனக்கு ஓரளவு மாணவர்களோடு தொடர்பு உண்டு. இப்போது நடந்த மாணவர்கள் கிளர்ச்சியிலிருந்து என்ன தெரிகிறது? (Unselected boys - boys who are sure of their failures) 'செலக்ஷன்' ஆகாத பையன்கள்தான் இதில் அதிகம். இந்த ஆண்டு 'பாஸ்' செய்ய மாட்டோம்' என்ற பையன்கள்தான் கிளர்ச்சியை முன்நின்று நடத்தினார்கள். இதற்குக் காரணம் யார்? நாம்தான் காரணம்.

எல்லோருக்கும் 'யூனிவர்சிட்டி எஜுகேஷ'னைக் கொடுக்க முற்படுகிறோம். டாக்டர்களாக வருவதற்கும், என்ஜினியர்களாக வருவதற்கும் சேருவதற்குள்ள கல்லூரிகளில் சேர இவ்வளவு மார்க் வேண்டுமென்று இருக்கிறது. 'ஏ' எடுக்கவேண்டும், 'பி' எடுக்க வேண்டும் என்றிருக்கிறது. கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு 'எலிஜிபிலிட்டி' இருந்தால் போதும், சேர்த்துவிடுகிறார்கள். தஞ்சையில் ஒரு 'பிரின்ஸிபால்' 80 பேர்களிடம் ''நீங்கள் இங்கு வரவேண்டாம், உங்களுக்குப் பணம் தண்டம், எனக்கும் நேரம் போதாது'' என்று சொன்னார்கள்.

எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்து விட்டால் 'காலேஜ் அட்மிஷன்' கிடைக்கும் என்ற நிலைமை இருக்கக் கூடாது. 'காலேஜ் அட்மிஷன்' குறித்து மக்கள் பிரதிநிதிகள் என்ன அபிப்பிராயப் படுகிறார்கள் என்பதை 'யூனிவர்சிட்டி'யின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

1965 மார்ச் 11 அன்று ஆற்றிய உரை :

கனம் சபாநாயகர் அவர்களே! நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தக் கல்வி மானியத்தை ஆதரித்துச் சில விஷயங்களை நான்

குறிப்பிட விரும்புகிறேன். 37 கோடி ரூபாய்க்கு அதிகமான தொகையை, நாம் இந்த மாணியத்தில் கல்விக்காக ஒதுக்கு கிறோம். அதிலே ஆரம்பக் கல்விக்கும், உயர்நிலைக் கல்விக்கும் 31 கோடி ரூபாய் அளவிற்குச் செலவிட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. முப்பதாயிரத்திற்கும் அதிகமான ஆரம்பப் பள்ளிகளும், எழுபத்தெட்டுக்கும் அதிகமான கலைக்கல்லூரிகளும் இவற்றைத் தவிரத் தொழில் நுணுக்கப் பள்ளிகள், இன்ஜினியரிங் பள்ளிகள் போன்றவைகளும் இருப்பது இந்த மாநிலத்தினுடைய கல்வி நிலையிலே இருக்கிற வளர்ச்சியையும், இதிலே அரசாங்கத்திற்கு இருக்கிற அக்கறை யையும் காட்டுகிறது.

இவ்வளவு பெரிய வளர்ச்சிக்கு, நாம் மிகுந்த சந்தோஷத்தைத் தெரிவிக்கின்ற இந்த நேரத்தில், சென்ற இரண்டு மாதங்களாகக் கல்விச் சாலைகளிலே இருக்கின்ற மாணவர்களுடைய போக்கு, கவலை தருவதாக இருக்கிறது. இந்தப் போக்கிற்கு யார் காரணம் என்பதை ஆராயாமல், ஒருபுதிய அத்தியாயத்தையே துவக்கவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் 'ஜெனரல் அம்னெஸ்டி' ஒன்று வழங்கினார்கள். இம்மாதம் 8ஆம் தேதியிலிருந்து கல்லூரி மாணவர்கள் ஒழுங்காகக் கல்லூரிகளுக்குச் செல்வதற்கு உண்டான சூழ்நிலையை அரசாங்கம் தோற்றுவிக்கத்தான் செய்தது. அது, 'வைஸ்-சான்ஸலர்'கள் ஆலோசனையின் பேரில் என்று குறிப்பிட்டதும் சரிதான். இன்று மாணவர்களிடையே நடக்கிற குழப்பத்திற்குத் தலைமை தாங்குவது பல்கலைக்கழக மாணவர்கள். ஆகவே, அவர்களுடைய 'டிஸிப்ளி'னைப் பொருத்தமட்டில், 'வைஸ்-சான்ஸிலர்' கள்தான் அதிகமான பொறுப்பு வகிக் கிறார்கள். ஆகவே, அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு இந்த அரசாங்கம் ஒரு நல்ல சூழ்நிலையைத் தோற்றுவித்து, அதன்மூலமாக மாணவர்கள் இந்த வருஷம் பரீட்சைக்குச் செல்வதற்கு உண்டான ஒரு பெரு வாய்ப்பு பெறுவார்கள் என்கிற சூழ்நிலை உருவாகி வந்ததை, இரண்டு மூன்று நாள்களாக நடந்துவரும் சில சம்பவங்கள், மீண்டும் சீர்கெட வைக்குமோ என்ற கருத்து தொனிக்கிற முறையிலே இருக்கிறது.

எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், இன்று பேசிய பாங்கு, நல்ல சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆனாலும்கூட, இந்த மூன்று நாள்களில் நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது, பாதிக்கும் மேற்பட்ட மாணவர்கள், கல்லூரிக்குச் செல்லவே விரும்புகிறார்கள் என்று தெரிகிறது. 'ஸிடி காலேஜ்'களுக்கு மாத்திரமல்ல, பல்வேறு மாவட்டங் களிலே உள்ள கல்லூரிகளிலும், தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியிலும், 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் முதல்நாள் கல்லூரிக்குச் சென்றிருந்தார்கள். இரண்டாம் நாளென்று மதுரையிலும் திருச்சியிலும் ஏற்பட்ட சம்பவங்களையொட்டி, கல்லூரிக்குச் செல்கின்ற மனப்பாங்கு குறைந்திருக்கிறது. நேற்று நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது கல்லூரிக்குச் செல்கிற மாணவர்களை, மாணவர்களே தாக்குகிறார்கள் என்கிற நிலைமையும் உருவாகி வருகிறது.

கல்லூரியிலே வகுப்புக்குச் சென்ற மாணவர்கள்மீது வகுப்புகளிலே கல்லெறியப்பட்டிருக்கிறது. ''கல்லூரி 'Campus'க்குள் போலிஸ் போகக்கூடாது'' என்ற உத்தரவு ஏற்கெனவே போலிசாரால் அமலாக்கப்பட்டு வருகிறது. ஆனால், கல்லூரி முதல்வர் வேண்டுகோள் விடுத்தால், போலிஸ் அங்குப்போய்ப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அவர் வேண்டுகோள் விடுத்தால், அதற்குரிய நடவடிக்கைகளைப் போலிஸ்

எடுக்கும் என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

தூத்துக்குடியிலே கல்லூரி வகுப்பிலே கல்லெறியப்பட்டிருக்கிறது! முந்நூறு மாணவர்கள்,தங்களுடைய பயிற்சியைப் பெறுவதற்கு இடமில்லாமல் 100, 150 மாணவர்கள் சேர்ந்து கல்லெறிந்ததன் காரணமாக, அங்கு நேற்று விடுமுறை, தற்காலிக விடுமுறை அளிக்கப்பட்டிருக் கிறது. இதை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டு வருவதன் நோக்கம், கல்லூரி இடத்தை, ஒரு கிளர்ச்சி இடமாக மாற்றுவதற்கு மாணவர்கள் முற்படும்போது, அதற்குப் போலிஸ் பாதுகாப்பு வேண்டும் என்று கல்லூரி முதல்வர் கோரிக்கை விட்டிருக்கும் போது, அதற்குரிய பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை, அது கொடுக்கப்படவேண்டும் என்பதற் காகத்தான்.

அப்படியில்லாவிட்டால், கல்லூரியைப் பாதுகாப்பதற்குக் கல்லூரி முதல்வர்களே நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று விட்டுவிட்டால், வகுப்புக்குச் செல்கின்ற மாணவர் களுக்கும், வகுப்புக்குச் செல்லாத மாணவர்களுக்கும் இடையே, நேரடிப் போராட்டம் நடந்தாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை! அந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டுவிடும். அதைத் தைரியமாக அரசாங்கம் சமாளித்தாக வேண்டிய கடமை இருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அப்படி மாணவர்களுக்குள்ளேயே அடிதடி என்கிற நிலைமை வருவதற்குக் காலம் படைத்தாலும், கல்லூரிகளை நடத்துகிறவர்களுக்கே அந்தப் பொறுப்பு ஏற்படுமோ என்று அச்சப்படுகிறேன். போலிஸ்காரர்களை நம்பி, நாம் வாழ்க்கை நடத்தமுடியாது என்பது வாஸ்தவம்தான். கல்லூரிகளை நடத்துகிறவர்களே, தங்களுக்குப் பாதுகாப்பு தேவை என்பதாக நேற்று நடந்த நடவடிக்கை களின்மூலம் கோரினால், அரசாங்கம் உதவி செய்தாகவேண்டும். அவர்களே பார்த்துக்கொள்ளட்டும் என்று விட்டு விடக்கூடாது என்று தெரிவித்துக்கொள் கிறேன். போலிஸ்காரர்கள் இப்போது தயங்குகிறார்கள். சப்-இன்ஸ்பெக்டர்கள் எரிக்கப்பட்டாலும், ஹெட்-கான்ஸ்ட-பிள்கள் அடிக்கப்பட்டாலும் மீண்டும் ஏதாவது நடவடிக்கையில் ஈடுபட்டால், நம்மால்தான் சிக்கல் வந்துவிட்டது என்ற நிலைமை வரக்கூடாது என்பதாகப் பயப்படுவதுபோலத் தெரிகிறது.

போலிஸ்காரர்களின் மீது கல்லெறிந்தால், திரும்பவும் இவர்களைக் கல்தான் எறியவேண்டும் என்று சொல்வதா? ஒன்றும் புரியவில்லை. திராவிட முன்னேற்றக்கழகத்தலைவர்கள் 'இனிமேல் இந்தக் கிளர்ச்சிக்கு அவசியம் இல்லை' என்று பல வேண்டுகோள் இங்கேயே விடுத்திருக்கிறார்கள். மாணவர்களுக்குத் தலைமை தாங்கிய, மாணவர் கவுன்சில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நிறுத்திக்கொள்வதாக அறிவித்துவிட்டது. இருந்தும் மாணவர்களே, தொடர்ந்து அரசியல் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவது என்றால், "கல்விக்காக நாம் எதற்காக 37 கோடி ரூபாய் செலவழிக்கிறோம்? இது வியர்த்தமாகப் போய்விடாதா" என்று கேட்க விரும்புகிறேன். இந்தக் கிளர்ச்சியின் முடிவாக நாம் நல்லதொரு சூழ்நிலையை உண்டாக்கவேண்டும் என்பதற்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

அரசாங்கம் எல்லா மாணவர்களையும் விடுதலை செய்திருக்கிறது. 'செலக்ஷ்'னில் தேர்ச்சி பெறாதவர்கள்கூட பரிட்சை எழுதலாம் என்பதாக இதுவரையிலும் கொடுக்காத சலுகையை இவ்வாண்டு 'யூனிவர்சிடி' கொடுத்திருக்கிறது. இருந்தும் மாணவர்கள் கிளர்ச்சியை நீடிக்கச்செய்கிறார்கள் என்றால், 'பரீட்சை

எழுதாமலேயே 'டிகிரி' வந்துவிடும் என்ற காரணத்தினாலா இப்படிச் செய்கிறார்கள்?' என்று யோசிக்க இடமேற்படுகிறது. இன்றைக்கு மிகக்குறைந்த மாணவர்கள் என்று சொல்லலாம், இருந்தும் 50 சதவீதம் மாணவர்கள் கல்லூரிகளுக்குப் போக விரும்புகிறார்கள். இதைவிட இன்னும் குறைந்தபட்ச மாணவர்கள்தான் பரீட்சை எழுத விரும்புகிறார்கள் என்றாலும், இவர்களுக்காகப் பரீட்சை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தக் காரணம் கொண்டும் பரீட்சை எழுத விரும்புகிற மாணவர்களின் நலன் இவ்வாண்டு பாதிக்கப்படக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவோ நல்லெண்ணத்துடன், ஒரு நல்ல சூழ்நிலையைத் திரும்ப ஏற்படுத்திக் கொடுத்தும், சில மாணவர்கள் பள்ளிக்குப் போக மறுக்கிறார்கள் என்றால், "பரீட்சை எழுதாமலே 'ப்ரோமோஷன்' கொடுத்து விடுவார்கள்'' என்ற காரணமோ என்றுதான் ஐயப்பட வேண்டியிருக்கிறது. இன்றுகூட எதிர்த்தரப்பில் இருந்து ஆலோசனை கூறப்பட்டது. இங்குள்ள மாணவர்கள் அத்தனைபேரும், ஒவ்வொரு மாணவருடைய வீட்டிற்கும் போய் (திரு. எம்.எஸ்.மணி: 'ஒவ்வொரு வீட்டிற்கும்போய்' என்று சொல்ல வில்லை, "ஒவ்வொரு கல்லூரிக்கும்' என்று சொன்னேன்) நான்போய்ச்சொல்வ தானால், ஏற்படக்கூடிய விளைவு என்ன என்று பார்க்கவேண்டும். மாணவர் களுடைய 'கவுன்சில்' குழுத்தலைவர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து இருக் கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அரசியல் சட்டத்தைக் கொளுத்தி யவர்களையும்கூட விடுதலை செய்ய - சர்வ கலா சாலை உப அத்யட்சகருடைய சிபாரிசை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மதுரை, திருச்சி ஆகிய இடங்களுக்கும் போய்ச் சொல்லியிருக்கிறார்கள். இதைவிட இன்னும் என்ன பண்ண வேண்டும் என்பதுதான் புரியவில்லை. இனிப் பெற்றோர்கள்தான் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் என்றால்கூட முடியாது. காரணம், ஒரு கல்லூரியில் ஆயிரத்து ஐந்நூறு, இரண்டாயிரம் மாணவர்கள் இருக்கும்போது, நாற்பது, ஐம்பது ஆசிரியர்களுக்கு எல்லா மாணவர் களுடைய மனப்பாங்கும் தெரிந்திருக்கும் என்று சொல்லமுடியாது. எல்லோரிடத் திலும் இந்த நாற்பது, ஐம்பது ஆசிரியர் களுக்கு 'கிரிப்' இருக்க முடியாது. ஆகவே, பெற்றோர்கள்தான் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். அதேபோது கல்லூரி ஸ்தலத்தைக் கிளர்ச்சி ஸ்தலமாக மாற்றுவதைத் தடுக்கவேண்டுமென்று கல்லூரி முதல்வர்களிடமிருந்து கோரிக்கை வந்தால் அரசாங்கம் உடனடியாக உதவிசெய்ய வேண்டும்.

மொழிப் பிரச்சினையைப் பற்றி, 'தமிழுக்குப் போதனா மொழியின் அந்தஸ்தை அரசாங்கம் கொடுக்க விரும்பினாலும், அது ஏன் வளர மாட்டேன் என்கிறது என்றால், 'இந்தி, தேர்வு மொழியாக வைக்கப்பட்டுள்ளது" என்றார்கள். இந்தி தேர்வு மொழி என்பது பூராவும் அல்ல. ஆங்கிலமும் தேர்வு மொழியாக இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறது. தேர்வுமொழி என்றவுடனே, அது 'பாப்புலர்' ஆகிவிடுமா? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில், 'எல்லா மொழிகளும் தேர்வு மொழியாக ஒப்புக் கொள்ளவேண்டும்' என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு நம் ராஜ்ஜியத்தைப் பொருத்தவரையில், தமிழ்தான் ஆட்சி மொழி. இதற்கு எல்லா வகையிலும் ஊக்கம் கொடுக்கப்படுகிறது. நாட்டை ஆளுவது நாம். நம் தாய்மொழி தமிழ். நம்மைவிட அதற்கு இன்னும் வளம் கொடுக்க எப்படி முடியும்? இதனாலே,

அது போதனாமொழி அந்தஸ்த்தைப் பெற்றுவிடுகிறதா என்று ஆலோசிக்க வேண்டும். நல்ல அறிஞர்கள்கூட பத்துப் பதினொன்றாவது வகுப்பிலேயே, போதனாமொழியாக ஆங்கிலத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதாகச் சொல்ல ஆரம்பித்தார்கள். ஏன் ஆங்கிலம் இருக்கவேண்டும் என்பதற்கான காரணங்களையும் சொல்கிறார்கள். தமிழ் மொழியின் அந்தஸ்து, போதனா மொழியாக ஏற்படுத்தினால்தான் உண்டாகும் என்று சொல்வது பொருத்தமில்லை.

இன்று ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே, தொடர்ந்து ஆங்கிலம் இருப்பதற்கு அவசியம் இருக்கிறது என்று எண்ணி, நமது முதலமைச்சர் அவர்கள் ஆங்கிலத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, எலிமெண்டரி எஜூகேஷன், செகண்டரி எஜூகேஷன் ஸ்டேஜ்களில் கூட ஆங்கிலம் கொண்டுவருவதற்காகக் கவனம் செலுத்தி வருகின்ற இந்த நேரத்திலே, கல்லூரிகளிலே தமிழைப் போதனாமொழியாக உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, சர்ச்சையைக் கிளப்புவது சரியான முறையல்ல. போதனாமொழி அந்தஸ்தை சட்டரீதியாக உடனடியாகக் கொடுத்து விட்டாலும்கூட உடனே அதை நிறைவேற்றிவிட முடியாது. இந்திக்கு சட்டரீதியாக ஆட்சிமொழி என்று கொடுத்து விட்டாலும்கூட அது சீக்கிரமாக ஆட்சி மொழியாக வராது.

நமது அரசாங்க வேலைகள் எல்லாவற்றையும் தமிழிலே ஆக்கவேண்டுமென்று நம்முடைய முயற்சிகள் இருந்தாலும்கூட, இன்னும் சில நிர்வாகக் காரியங்களிலே, உதாரணமாக 'ஜஸ்டிஸை' எடுத்துக்கொண்டால், தமிழ் மொழி இப்போதைக்கு வரமுடியாது என்றுதான் சொல்லப் படுகிறது. தமிழைச் சரியாக நிறைவேற்ற முடியாத நிலையில்தான் இருக்கிறோம். போதனா மொழியாகத் தமிழை மாற்றுவதற்கு அரசாங்கம் சரியான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று சொல்லக் கூடிய முறையில் அங்கத்தினர்கள் மனோபாவம் இருக்குமானால், உண்மையிலே அந்தக் கோணத்திலிருந்து பார்ப்பவர்கள், கொஞ்சம் சிந்தனை செய்து பார்க்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆரம்பக் கல்வியும், உயர்நிலைக் கல்வியும் அவ்வளவு நல்ல தரமான நிலையில் அமையவில்லை என்று சமீபத்திலே நமது 'வைஸ் சான்ஸிலர்' அவர்கள் கல்லூரிக் கல்வியின் நிலைபற்றிக் கூறும்போது கூறியிருக்கிறார்கள். இதற்குப் பல்வேறு காரியங்கள் இருக்கின்றன, என்பது நம்முடைய அறிக்கையிலிருந்து தெரிகிறது. ஒரு வேகமான முன்னேற்றம், அதாவது 'ஃபாஸ்ட் எக்ஸ்போன்ஷன்' வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

ஆயிரம் பள்ளிக்கூடங்கள் இருந்த இடத்திலே, இன்று இரண்டாயிரம் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, அரசாங்கம் 'ஃபேஸ்டு புரோகிரா'மாக எடுத்து நூறு, இருநூறு கட்டடங்கள் கட்டுவதற்கு மானியம் அளிக்கிறதென்று இந்த அறிக்கையில் நாம் பார்க்கிறோம். ஆகவே, இடவசதி, போதனா சாதானங்கள் வசதி, இருக்கின்ற ஆசிரியர்கள் தரம், இவற்றையெல்லாம் பொருத்துத்தான் நல்ல கல்வித்தரம் ஏற்பட முடியும். ஆகவே, ஆட்சிமுறையில் குறைபாடு இல்லை, நிலைமையிலேதான் குறைபாடு இருக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

இன்றுள்ள ஆசிரியர்களோடு, இருபது, முப்பது வருஷங்களுக்கு முன்னால் இருந்த ஆசிரியர்களின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். முன்பெல்லாம், 'கிளாஸ் டீச்சர்'ஆக

இருந்தால் அநேகமாக எல்லாப் பாடங்களையும் சொல்லிக்கொடுக்க வேண்டும். ஆனால் இப்பொழுது, கணக்குக்கு ஒரு வாத்தியார், சயின்ஸுக்கு ஒரு வாத்தியார், தமிழுக்கு ஒரு வாத்தியார் என்று, ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு வாத்தியார்கள் இருக்கிறார்கள். 'பிரைவேட் டியூஷன்' சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்கள்கூட ஆங்கிலம் சொல்லிக்கொடுக்க முடியாது. அதாவது இந்த 'அர்த்மெடிக்'கூடச் சொல்லிக் கொடுக்க முடியாது. கணக்கு சொல்லிக் கொடுப்பவர் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க முடியாது. அந்த அளவுக்குத் தான் ஆசிரியர்களுடைய தன்மை இருக்கிறது.

எனவே, ஆசிரியர்களுக்கு, 'டிரெயினிங்' கொடுக்கும்போது அவர்களுக்கான 'டிரெயினிங் சிலபெஸ்ஸில்' என்ன மாற்றம் செய்தால் அவர்கள் சப்ஜெக்ட் ஓரியண்டேஷன்' பெறமுடியும் என்பதைப் பார்க்க வேண்டும். இந்தநிலை பல்கலைக்கழக அளவிலேகூட இருக்கிறது. 'ஜெனரல் மெத்தட்ஸ் ஆப் டீச்சிங்' அவர்கள் பெற்றுவிட்டார்கள் என்றால், அவர்கள் ஆசிரியர்கள் ஆவதற்குப் பக்குவம் பூராவும் பெற்றுவிட்டார்கள் என்று கருதமுடியாது. எனவே, ஆசிரியர்கள் 'டிரெயினிங் காலேஜ்'களுக்காக என்று ஏற்படுத்தப்பட்ட 'ஜெனரல் எக்ஸ்பான்ஷன் கமிஷன்' கூட, ஆசிரியர்களுக்கு ஒரு வருஷ பயிற்சி போதாது, இரண்டு வருஷங்கள் இருக்க வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள்.


இன்னொரு முக்கியமான விஷயம், ஆசிரியர்களுடைய வேலைக்கு அதிகமான சம்பளம் கொடுத்து வருகிறோம் என்றாலும், 'ஃபர்ஸ்ட் கிளாஸ்', 'செகண்ட் கிளாஸி'ல் பாஸ் பண்ணிய 'கிராஜுவேட்'கள், எம்.ஏ.க்கள், இவர்களுக்கு எல்லாம் 'ஸ்டைபண்டு' கொடுத்தாவது ஆசிரியர் வேலைக்குப் பயிற்றுவிக்கப்படவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் தரமான சம்பளமாக இருக்கவேண்டும். நல்ல தரமானவர்கள் அந்த வேலைக்கு வரக்கூடிய நிலைமையிலே சம்பளம் கொடுக்கவேண்டும். முன்பெல்லாம் 'ஆசிரியர் புரொஃபஷன்' என்று சொல்வார்கள். ஆனால், இன்று 'புரொஃபஷன்' பார்க்கப்படுவதில்லை. பணம்தான், சம்பளம்தான், கணக்குப் பார்க்கப்படுகிறது.

ஆசிரியர்களாக இருப்பவர்கள் ஒரு வருஷம், இரண்டு வருஷங்களுக்கு ஆசிரியர்களாக இருந்துவிட்டு, பின்பும் பி.எல்.; ஐ.ஏ.எஸ். ஆவதற்கு இந்தத் தொழில் உதவிகரமாக இருக்கு என்றுகூட நினைக்கிறார்கள். அம்மாதிரி 'அட்மினிஸ்ட்ரேஷன் சர்வீஸ்க்'குப் போகவேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். அவர்களாகவே, இந்த ஆசிரியர் தொழிலைத் தங்களுடைய தொழிலாக முன்வந்து ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்திலே சம்பள விகிதாச்சாரத்தை அமைக்க வேண்டும். அதாவது ரூ.250, ரூ.300 என்று அமைத்துவிட்டால் போதுமானது. இதுமாதிரி முக்கியமான சயின்ஸ், கணக்கு இந்த 'சப்ஜெக்ட்டு'களுக்குமட்டும் செய்தால் போதும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது டீச்சர்களுக்குப் 'பென்ஷன்' கொடுக்கப்படுகிறது. அதிலே, சர்க்காரில் வேலை செய்தவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அளவுக்கு இதர இடங்களிலே வேலை பார்த்தவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கெல்லாம் ஏதோ கால்பங்குதான் கொடுக்கிறார்கள். முன்பு பி.ஏ., எல்.டி.யாக இருந்தவர்கள்கூட இப்பொழுது முப்பத்தைந்து ரூபாய்தான் 'பென்ஷன்' வாங்குகிறார்கள். அப்படி அவர்கள் வாங்குவதை அவர்களுடைய பையன் பி.ஏ. அல்லது எம்.ஏ. படிக்கிறவன் பார்த்தால்கூட அவனுடைய

ஆலோசனை, ஆசிரியர் வேலை வேண்டாம், வேறு வேலைக்குப் போகலாம் என்பதாகத்தான் இருக்கும். அவர்களும் தங்கள் பையன்களை 'ஆசிரியர் வேலை வேண்டாம், வேறு வேலைக்குப் போ' என்றுதான் கூறுவார்கள்.

ஆகவே, சர்க்காரில் வேலை பார்த்தவர்களுக்குக் கொடுப்பதுபோல் இதர இடங்களிலே வேலை பார்த்தவர்களுக்கும் பென்ஷன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, அடுத்த ஆண்டில் ஏற்படப்போகிற என்ஜினியரிங் காலேஜை நெல்லை ஜில்லாவுக்குக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையைச் சமர்ப்பித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



கல்வி நிறுவனங்கள்...





ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரியின் எழில்மிகு நுழைவு வாயில்




வ.உ.சி. கல்லூரியில் 1951ஆம் ஆண்டில் கட்டப்பட்ட முதன்மை விடுதி கட்டிடம்



வ.உ.சி. கல்வியல் கல்லூரி நிர்வாக அலுவலகக் கட்டிடம்



சீர்மிகு வ.உ.சி. கல்வியியல் கல்லூரியின் நுழைவு வாயில்



வ.உ.சி.
கல்லூரியின்
விலங்கியல் பிரிவு
கட்டிடம்



1955ஆம் ஆண்டில் உருவான எம்.வி.எஸ்.சுந்தரவேல் நினைவு கட்டிடம்





1970ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வ.உ.சி. கல்லூரி வேதியியல் பிரிவு கட்டிடம்



1967ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வ.உ.சி. கல்லூரியின் மாணவர் விடுதி




1969ஆம் ஆண்டில் எழுப்பப்பட்ட வ.உ.சி. கல்லூரியின் எழில்மிகு கலையரங்கம்

1970ஆம் ஆண்டில் உருவான வ.உ.சி. கல்லூரி நிர்வாகக் கட்டிடம்





1951ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வ.உ.சி. கல்லூரியின் முதல்வர் இல்லம். தற்போது விருந்தினர் இல்லம்



1951ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வ.உ.சி. கல்லூரியின் முதன்மைக் கட்டிடத்தின் கிழக்குப் பகுதி



வரி விதிப்பு குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

குடியரசு நாட்டில் ஆட்சி செம்மையாக நடைபெறவேண்டுமானால் நிதி திரட்டி சமூகநலத் திட்டங்களை நிறைவேற்ற, வரி விதித்தல் இன்றியமையாததாகும். இதற்கு அரசு எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை விளக்க வந்த வள்ளுவர்,

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு"

என்று கூறியுள்ளார்.

அதாவது, ஓர் அரசு என்பது, தனக்குத் தேவையான பொருள் வருவாய்க்குரிய நெறிமுறைகளை வகுத்தலும், அதன் வழியாகப் பொருளைத் திரட்டுதலும், அவற்றைப் பாதுகாத்தலும், பாதுகாத்த பொருளைத் தேவையான செலவுகளுக்கு நெறிப்படுத்துதலும் வல்லதே ஆகிய செயல்முறைகளில் அரசாகும் என்பதே இதற்குப் பொருள். மக்களுக்குத் துன்பமில்லாமல் வரி விதித்தல் மூலமாகப் பொருளை எந்தெந்தத் துறைகள் வாயிலாக வரியாகப் பெறலாம் என்பதைப் பல்வேறு நாடுகளின் செயல் முறைகளோடு ஒப்பிட்டு ஏ.பி. சி.வீரபாகு அவர்கள் தம் உரைகளில் விளக்கியுள்ளார். இச்செய்திகளை, பட்ஜெட் உரைகளின் போது அவர் ஆற்றிய உரைகளால் அறியலாம்.

'வரி விதிப்பு' விவாதங்களில் கலந்து கொள்ளும்போது, திரு. ஏ.பி.சி.வீரபாகு அவர்களுக்கு இருந்த ஆழமான, நுட்பமான அறிவு அவர் உரைகளைப் படிக்கும் போது புலப்படுகிறது. அவ்வுரைகளில் நேரடி வரி, மறைமுக வரி, விற்பனை வரி, கலால் வரி, ஒரு முனை வரி,

பல முனை வரி, ஆகியவை பற்றி விரிவாக விவாதிக்கிறார். இவற்றில் மைய அரசுக்குச் செலுத்தவேண்டிய வரிகளை, மீண்டும் எப்படி மாநிலத்திற்கே திரும்பப் பெற்றுப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனைகளையும் முன்வைக்கிறார்.

திரு. ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் வரி விதிப்பு, மற்றும் வரி வசூல் பற்றிப் பேசும்போது, ஆளும்கட்சி உறுப்பினராகப் பேசுவதேயில்லை. 1962 ஜூலை 2 அன்று ஆற்றிய உரையின் தொடக்கத்திலேயே, எதிர்க்கட்சியினரின் தொனியில் பேசுகிறார். ஆளும்கட்சி உறுப்பினராக இருந்தாலும், அரசு விதித்திருக்கும் வரியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறும்போது, வெளிப்படுவது உறுதியும், கோபமும்கூட. அதேஉரையில், 'இத்தகைய வரிவிதிப்பு, மக்கள் எதிர்ப்பிற்குவழிவகுக்கும்' என்று எச்சரிக்கை விடுப்பது வியப்பே!

வரி அதிகரிப்பு, தண்டத் தீர்வை, கெடுபிடி வசூல் போன்றவற்றால் ஏற்படக் கூடிய விளைவுகளைக் கூறிவிட்டு, 1957 ஜூலை 8 அன்று இத்தகைய வரிவிதிப்பு எழும்பிவரும் கிராமப் புறத் தொழில் முயற்சிகளை எப்படி நசுக்கிவிடக்கூடும் என்பதை விளக்கி, கிராமப்புறங்களுக்குப் பல வரிகளிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்பதைக் குறிக்கோளாக்கிப் பேசுகிறார். உணவுத்தானியம், தயாரிக்கப்பட்ட உணவு போன்றவைகளுக்கு வரியைக் குறைக்க வாதாடுகிறார்.

"காங்கிரஸ் என்ற தேசிய இயக்கத்துடன் இணைந்த கட்சி உறுப்பினராகப் பேசுகிறாரா?" என்பது சில இடங்களில் சந்தேகமாகக்கூட இருக்கிறது. 1961 மார்ச் 27 அன்று 'விற்பனை வரி, வருங்காலத்தில் மாநில அரசுக்கு வரும் வருமானத்தைத் தரக்கூடும் என்பதால், அதை மைய அரசுக்கு விட்டுத்தரக்கூடாது" என்று முன்னெச்சரிக்கை விடுக்கும்போது, பிற்காலத்தில் கட்சியினரால் எழுப்பப்பட்ட மாநிலச் சுயாட்சி கோரிக்கைக்கு நிகரானதாக இருக்கிறது.

1957 ஜூலை 6 அன்று பிற்பகல் 12.02 மணிக்கு ஆற்றிய உரை :

திருநெல்வேலி ஜில்லாவில் மணிமுத்தாறு அணை கட்டிமுடித்து அக்டோபர் மாதத்தின் போது மக்களுடைய உபயோகத்திற்குத் திறந்துவிடப்படும் என்று தெரிகிறது. அதில் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் வரையில், இப்போது ஒரு போக நஞ்சையாக இருக்கிறது. இந்த நிலங்களுக்கு இப்போது தண்டத் தீர்வை இருக்கிறது. இதை அரசாங்கம் புனராலோசனை செய்ய வேண்டும். இனிமேல் இருபோக நிலமாக மாறும்போது 'வாட்டர் டாக்ஸும்' விதிக்கப்படும். இவ்வளவு நிலங்களும் இருபோக நிலமாக மாறவேண்டும் என்பதற்காகதான் இத்தனை பெரிய திட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, முன்னாலிருந்து வருகிற தண்டத் தீர்வையிலிருந்து இந்த நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துகொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

1957 ஜூலை 8 அன்று காலை 11.22 மணிக்கு ஆற்றிய உரை :

கனம் சபாநாயகர் அவர்களே! நான் விற்பனை மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வேறு மாகாணங்களின் அனுபவத்தைக் காட்டி நம்முடைய வரி விகிதாச்சாரங்களை அமைக்கவேண்டும் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாகாது. நம்முடைய ராஜ்யத்தின் வரி விகிதங்களின் அமைப்பை அடிப்படையாகச்சில இனங்களில் மாற்றியமைப்பது பெரிய சிக்கல்களுக்குக் கொண்டுபோய்விடுமே தவிர, உதவியாக இருக்காது. எதிர்க்கட்சியிலுள்ளவர்கள்,

நமக்கு உதவியாக ஆலோசனை கூறிய தாகக் கருதக்கூடாது. நம்மைச் சிக்கல் களுக்குள் இழுத்துச் செல்வதே அவர்கள் நோக்கம். நம்முடைய வரிவிதிப்புக் கொள்கையை மக்கள் எவ்வளவு தூரம் ஆதரிக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சி உபதலைவர் குறிப்பிட்டுவிட்டு, "1937ஆம் வருஷம் ஆதரித்த அளவில், இப்போது மக்கள் காங்கிரஸ் சர்க்காரை ஆதரிக்கவில்லை" என்று சொன்னார்.

1937ஆம் வருஷத்தில் அந்நியர் ஆதிக்கத்தின் எதிர்ப்பு இருந்தது. இப்போது நமக்கு எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புதான் இருக்கிறது. அவர்களின் எதிர்ப்பு இருந்தபோதிலும், 8 சதவிகித மக்கள் அதிகமாக இந்த வரி விதிப்புக் கொள்கைக்கு ஆதரவு அளித்து 'ஓட்டு' போட்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

நம்முடைய ராஜ்ய வருமானத்திலே, இம்மாதிரி விற்பனை வரிகள் மூலமாகச் சுமார் 11 கோடி ரூபாய் வந்தபோதிலும், அவ் வரிகளைக்கொண்டு வேறு நல்ல காரியங்களுக்குச் சர்க்கார் உதவி செய்து கொண்டுவருகிறது. இவ்விஷயத்தில் மத்திய சர்க்கார் ஆலோசனை கூறிய தாகவும் சொல்லப்பட்டது. ஆனால், இந்த வரிகளினால் கிடைக்கக்கூடிய அதிக வருமானத்தைச் சர்க்கார் என்னென்ன விதத்தில் உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கல்விக்கும் விவசாயிகள் சாதனங்கள் வாங்குவதற்கும் நமது சர்க்கார் மான்யம் கொடுக்கிறது. தவிர, 'இந்த வரிகளெல்லாம் நிரந்தரமானவை' என்று யாரும் கருதக் கூடாது. 'அது சர்க்கார் கொள்கையல்ல' என்று இந்தச் சட்டசபையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, நமது கனம் நிதிமந்திரி அவர்கள் 'Budjet' பிரசங்கத்தின்போது உணவு தானியங் களின்மீது வரி விதிப்பதை 1.9இலிருந்து ஒரு சதவிகிதத்திற்குக் குறைக்கப்படும் என்று சொன்னதை நான் இந்தச்சமயத்தில் அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆனால், வேறு எந்த இனங்களுக்கு ஒரு சதவிகித வரி விதிக்கலாம் என்று பார்க்கும்போது, Pulsesக்குக்கூட '1 சதவிகிதம்தான் விதிக்கலாம்' என்று தோன்றுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கவள உணவுக்குக்கூட வரிபோட வேண்டுமென்று சொல்லப் பட்டது.

"சாதாரணமாக Hotelகளில் 'Cooked Food' விற்கப்படுகிறது. அதற்கும் வரி விலக்கு அளிக்கப்படவேண்டுமா?" என்பதை ஆராயவேண்டும். ஏனென்றால், Hotelகளை நடத்துபவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கிறது. ஆனால், அதேசமயத்தில், 'உணவுப் பண்டங் களுக்கும் 1 சதவிகிதம் வரி விதிக்க முடியுமா?' என்பதைச் சர்க்கார் ஆலோசனை செய்யவேண்டும்.

தவிர, கிராமப்பகுதியில் இப்பொழுது வியாபாரம் கொஞ்சம் பெருகி வருகிறது. ஆனால், அங்குள்ள மக்கள் சரியாகக் கணக்கு வைத்துக்கொள்வதில்லை. அவர்களை Harassmentக்கு உட்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, நகரப் பகுதியிலுள்ள மக்கள் 1937ஆம் வருஷத்திலிருந்து இதுவரைக்கும், அதாவது 20 வருஷ காலமாக விற்பனை வரி அதிகாரிகளின் Harassmentக்கு உள்ளாகிறார்கள் என்று சொல்லப்பட்டது. கிராம மக்கள் இப்பொழுதான் கொஞ்சம் அதிகமாக வியாபாரம் செய்து கொண்டிருப்பதாலும், அவர்களுக்குக் கணக்கைச் சரியாக வைக்கத் தெரியாததாலும், அவர்களுக்கு ரூபாய் பத்தாயிரத்திலிருந்து ரூபாய் இருபதாயிரம் வரைக்கும் வரிவிலக்கு கொடுக்கமுடியுமா என்று சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது Panchayatகளுக்கு, சினிமாக் காட்சிகளின்மீது விதிக்கும் வரியின்மூலம் ரூபாய் 92 லட்சம் கிடைக்கிறது. சர்க்கார் இந்த சினிமாத் தொழில்மீது இன்னும் எவ்வளவு அதிகமான வரி விதிக்கலாம் என்று ஆராயவேண்டும். ஏனென்றால், சினிமாத் தொழில் ஒரு கேந்திரத் தொழில். அது அதிக வருமானத்தைக் கொடுக்கிறது. அதை நடத்துகிறவர்கள் ஒரு நிமிஷத்தில் Multi Millionireகளாகி விடுகிறார்கள். வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தத் தொழிலின்மூலமாக எவ்வளவு வருமானம் சர்க்காருக்குக் கிடைத்து வரவுசெலவு கணக்கைச் சரிப்படுத்த முடியும் என்று சர்க்கார் ஆராயவேண்டும். Panchayatகளுக்குக் கிடைக்கக்கூடிய இந்த வருமானத்தைச் சர்க்கார் எடுத்துக் கொண்டால் Panchayatகளுக்கு வருமானம் இல்லாமல், அவர்கள் கஷ்டப்பட வேண்டியநிலைமை ஏற்படும். ஆதலால், சர்க்கார் வேறு எந்தமுறையில் இந்தத் தொழிலின்மீது வரி விதிக்கலாம் என்பதை ஆராயவேண்டும்.

தவிர, Petrol மீதும் Diesel Oil மீதும் விதிக்கும் வரியின் விகிதாச்சாரத்தில் அதிக வித்தியாசமிருக்கிறது. Petrolமீது 6 அணா வரி போடப்படுகிறது. ஆனால் Diesel Oilமீது ஒன்னரை அணாதான் வரி விதிக்கப் படுகிறது. இதனால் Petrol Consumption குறைந்து, Diesel Oil அதிகமாகச் செலவாகிறது. கிராமத்திலுள்ள விவசாயிகளெல்லாம் Diesel Oil மீதுள்ள வரி குறைவாக இருப்பதால் Diesel Oilலைத் தான் அதிகமாக உபயோகிக்கிறார்கள். இதனால் சர்க்காருக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் குறைந்துகொண்டு போகிறது. ஆதலால் Diesel Oilமீது விதிக்கும் வரியின் விகிதாச்சாரத்தை உயர்த்தமுடியுமா என்று சர்க்கார் ஆலோசனை செய்ய வேண்டும். இதனால்விவசாயிகளுக்கு அதிக வரி கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் சர்க்காருக்கு அதிக வருமானம் கிடைக்கும்.

வேண்டுமானால், விவசாயிகளுக்கு இதர வழிகளில் உதவி புரியலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயத்தைச் சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாகாணத்தில் விறகு கிடைப்பது மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. விறகு எல்லாருக்கும் வேண்டிய அத்தியாவசியமான பொருள். இதற்கு வரிவிலக்கு அளிப்பதற்கு ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1961 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

தலைவர் அவர்களே! நிதிமந்திரி அவர்கள் சமர்ப்பித்த இந்த வரவு செலவுத் திட்டத்தையும், அதை அவர் பூரணமாக எடுத்துச் சொல்லிய விவரத்திற்கும் நான் அவரைப் பாராட்டுகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் ஆதரிக்கிறேன். அந்த ஆதரிக்கும் முகத்தான், நான் சில எண்ணங்களை இந்தச் சபையின் முன்வைக்க முற்படுகிறேன். நமது வரவு செலவுத் திட்டத்தைப் பற்றாக்குறையாக நாம் சமர்ப்பிக்கின்ற காலத்திலிருந்தாலும்கூட, அது முடிவடைகின்ற காலத்தில், அது உபரியாகவும், ஆனால் அதிகமான உபரித் தொகையாக இல்லாமலும், ஏதோ பற்றாகுறை என்ற அளவில் இல்லாமல், சரிக்கட்டிக் கொண்டு போகக்கூடிய நிலையைத்தான் நாம் பார்த்து வருகின்றோம். அந்தத் தைரியத்தோடு கூடிய, அந்த முன்யோசனையோடு கூடிய அளவில்தான் நம்முடைய வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுப் பற்றாக் குறையைச் சரிக்கட்டிக்கொண்டு போகக்கூடிய அளவில் இருந்திருந்தது. இப்போதும் அதேமுறையில்தான் பற்றாக்குறையைச் சரிக்கட்டிக்கொண்டு

போய்விடும் என்பதற்காகப் புதிய வரிகள் ஏதும் இல்லாமல், நமது வருமானம், நாம் வைத்திருக்கக்கூடிய இலக்குகளுக்குச் சற்று அதிகமாகவே வரக்கூடிய அளவில் இருக்கிறது என்பதை நமது வரவு செலவுத் திட்டம் காட்டுகிறது. ஆனால், புதிய வரிகள், நாம் எதுவும் போடவில்லை என்றாலும்கூட, பழைய வரிகளை அதேநிலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நிலையில் நாம் போவது அவ்வளவு சரியல்ல என்று நினைக்கிறேன்.

நிதிமந்திரி அவர்கள், இரண்டு வருஷங்களுக்குமுன்னால் சொன்னதுபோல், 'இந்த வருஷ வரவு செலவுத் திட்டத்திலே சாப்பாட்டு இனங்களுக்காக, அதாவது தானியங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்படுமென்பதை எதிர்பார்த்தேன். ஆனால், அப்படி ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. இரண்டு சதவிகிதத்திலிருந்து ஒரு சதவிகிதமாகக் குறைக்கப்படும். அதுமாதிரி, இன்னும் கொஞ்ச நாள்களில் அது பூரணமாக எடுத்துவிடப்படும்' என்று கூறினார்கள். அதைப் பூரணமாக எடுக்காவிட்டாலும், '0.5 சதவிகிதமாவது இந்த வருஷத்தில் நீக்கப்படும் என்று நான் எதிர்ப்பார்த்தேன். இப்போது 2.5 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்கும்போது, நாம் எப்படி இந்த விற்பனை வரிக்கு விலக்களிக்க முடியும் என்று நினைத்துவிட்டிருக்கலாம்' என்று நினைக்கிறேன். எப்படியிருந்தாலும், சென்றகால அனுபவத்தைப் பார்க்கும்போது இந்த ஆண்டு ஐந்து கோடி ரூபாய் உபரி ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இரண்டு வருத்திற்கு முன்னால், 68 கோடியாக இருந்த நமது பட்ஜெட், இப்போது 91 கோடியாகியிருக்கிறது. இந்த வருஷத்தில், அது 95 கோடி ரூபாயாக ஆகும் என்று நம்பிக்கை தெரிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால், 'இன்கம்-டாக்ஸ்' இந்த வருஷத்தில் 6 கோடி ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். வருகின்ற வருஷத்தில் இது 10 கோடி ரூபாயாகப் பெருகுகிற அளவுக்கு வாய்ப்பிருக்கிறது என்று கேள்விப்பட்டேன். ஆகவே, இப்போது பற்றாக்குறை பட்ஜெட்டாகப் போடப்பட்டிருப்பது, துண்டு ஏதும் ஏற்படாமல் பூர்த்தியடைய வாய்ப்பிருக்கிறது. ஆனால், அதேநேரத்தில், சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய இந்த உணவுத் தானியத் தின்மேல் உள்ள விற்பனை வரியை நீக்கியிருந்தாலும், அதனால் இரண்டு கோடி ரூபாய்தான் துண்டு விழுந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

தவிர, இன்னும் மேற்கொள்ளும் இந்த விற்பனை வரி இலாக்காவின்மூலம் கிடைக்கக்கூடிய 18 கோடி ரூபாய் வருமானத்திலிருந்து இந்த வருஷம் 20 கோடி அல்லது 21 கோடி ரூபாய் இருக்குமென்று, இறுதியில் அதிகமான வருமானம் வருவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று நினைக்கிறேன். நம்முடைய நாட்டிலே இப்போது தொழில் வளர்ச்சி அதிதீவிரமாக முன்னேறிக்கொண்டு வருகின்ற காரணத்தாலும், இந்த வருமானம் அதிகமாக ஏற்பட ஒரு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தாலும், தானிய விற்பனைக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, கலால் வரியாலும் இந்த வருஷம் அதிகமான வருமானத்தை நாம் எதிர்பார்க்கலாம். நம்முடைய மாகாணத்திலே இப்போது சீனி உற்பத்திச் சாலைகள் நிறைய ஏற்பட்டு வருகின்ற காரணத்தினால், இந்தச் சீனி உற்பத்திச் சாலைகள்மூலம் நமக்கு ஏராளமான வருமானம் வருவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. இதையெல்லாம் நான் ஏன் இவ்வளவு சுற்றி வளைத்துச் செல்கிறேன் என்று சொன்னால், இந்த உணவு

தானியத்திற்குச் சற்றுச் சலுகை அளிக்க சர்க்கார் முன்வரவேண்டுமென்பதற் காகத்தான். இந்த உணவுத் தானியத்தின் மீது எப்படியாவது 2 சதவிகிதத்திலிருந்து 1.5 சதவிகிதத்திற்குக் குறைக்க முடியுமா என்று இந்த வருஷத்திலேயே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். அதைச் சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, புதிய வரிகளை நாம் போடுவதற்கு முயற்சிசெய்கின்ற காலத்திலே இப்போது ஏராளமான தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. அதனால், அர்பன் ஏரியாவில் நிலத்தினுடைய விலை, வீடுகட்டும் மனையாக இருந்தாலும் சரி தொழிற் சாலை நிறுவும் மனையாக இருந்தாலும் சரி, நிலத்தின் விலை தாருமாறாக ஏறுகின்றன.

1958இல் ஒரு ஏக்கர் 1,000, 1,500 என்றிருந்தது. இப்போதுள்ள நிலையைப் பார்த்தால், அதே நிலம் 5,000 ரூபாய், 7,000 ரூபாய் என்று விலை ஏறிக் கொண்டே போகிறது. இதற்குக் காரணம் பூரணமாகச் சர்க்கார்தான். பெரிய அபிவிருத்தித்திட்டங்களைநாம் ஏற்படுத்தும்போது, அந்த இடங்களுக்குக் கிராக்கி ஏற்படுகிறது. நியாயப்படி, அந்தக் கிராக்கி தொகையெல்லாம் சர்க்காருக்குத்தான் சேரவேண்டும். அதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படி நான் நிலத்தின் விலை ஏற்றத்தைப் பற்றிச் சொல்லும்போது, விவசாயத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அதுவும் தொழிற்சாலைகள் உருவாகி வருகின்ற நகரப் பிரதேசங்களில் யாரும் எதிர்பாராத விதமாக 100 மடங்கு, 200 மடங்கு என்றுநிலத்தின் விலை ஏறிக்கொண்டு போகிறது. சாதாரண நிலத்திற்கு இந்த விதமாக விலையைக் கூட்டுவதற்கு நிலச் சொந்தக்காரர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆனால், இந்த விலை, சர்க்கார் ஏற்படுத்தும் அபிவிருத்தித் திட்ட வேலைகளினால் ஏற்படுவதால், அப்படி நிர்ணயிக்கப்படும் விலையின் பெரும்பகுதி சர்க்காருக்குச் சேரவேண்டும். Tax on unearned income என்றிருக்கிறது.

இம்மாதிரி நிலத்தை விற்று அதன்மூலமாகக் கிடைக்கக்கூடிய வருமானத்தை ஒருவன் எடுத்துக் கொள்வதைத் தடுக்கவேண்டும். நிலத்தை, வாங்கி ஸ்பெகுலேஷனில் வைத்துக்கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் பின்னால் ஏற்படும், அப்போது லாபத்திலே Tax on capital gains, இன்கம்டாக்ஸ் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிக் கிடைக்கக்கூடிய 'ஷேர்' நம் மாகாணத்திற்கு வருகிறது என்றாலும், நாம் அதை நேரடியாகப் பெறுவதற்கு முயற்சி மேற்கொண்டால், பெருவாரியாக நாம் எதிர்பார்த்த தற்கும்மேல் வருமானம் கிடைக்கும்.

1961 மார்ச் 27 அன்று ஆற்றிய உரை :

கனம் தற்காலிகத் தலைவர் அவர்களே! விற்பனை வரி சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மானியம் மிக முக்கியமானது. ஆகவே, அதன்வருமானம்குறையாமலும், அதேநேரத்தில் இந்த வருமானத்தினால் வியாபாரிகளுக்குச் சங்கடம் இல்லாமலும், இந்த விற்பனை வரி அமைப்பு இருக்கவேண்டுமென்பதை அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொள் வார்கள் என்று நினைக்கிறேன். இவ்வளவு பெரிய வருமானம் வரக்கூடிய இனத்தைச் 'சென்ட்ரல் எக்ஸை'ஸாக விட்டுக்கொடுக்கும்தன்மை சிலகாலமாக ஏற்பட்டு வருகிறது.

நிச்சயமாக வருங்கால அமைப்பிலே பெரிய வருமானம் வரும் இனமாகிய இதைக் கலால் இனத்தோடு இணைத்து, ராஜ்ய சர்க்கார் 'ஜுரிஸ்டிக்ஷ்'னை மத்திய சர்க்காருக்கு மாற்றி அமைக்க, மத்திய சர்க்கார் வற்புறுத்தினால், நம் ராஜ்யசர்க்கார், அதற்கு ஆதரவு கொடுக்கக் கூடாது. அந்த விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று கொள்கையளவில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் பொது விவாதத்தின்போதே குறிப்பிட்டேன். 'உணவுப் பொருள்கள் மீதுள்ள வரிக்கு விலக்கு அளிக்கவேண்டும்' என்று, இவ்வளவு பெரிய வருமானம் வரும் இனத்தில் உணவுப் பண்டங்களுக்கு இன்றைக்கு இருக்கும் ஒரு சதவிகித வரியையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக்கொண்டு வருகிறேன். (கனம் ஸ்ரீ. ஆர். வெங்கட்ராமன் : என்ன?) "உணவுப் பொருள்கள் மீதிருக்கும் ஒரு சதவிகித வரியையும் புராக்ஷிவ் வாக அரை சதவிகிதமாகக் குறைத்து, பிறகு இல்லாமல் செய்யவேண்டும்" என்று சொன்னேன்.

கல்செக்கு எண்ணெய்க்கு வரி விலக்கு கொடுத்திருக்கிறோம். ஆனால், வேறு எண்ணெயோடு சேர்த்து வியாபாரம் செய்தால் வரி விலக்கு கிடையாது. கல்செக்கு எண்ணெயாகத் தனியாக வியாபாரம் செய்வது என்பது முடியாத காரியம். இன்றைக்குக் கொடுத்திருக்கும் விலக்கு, தெருவில் தலைச்சுமையாகக் கொண்டுவரும் 'ஹாக்கர்ஸ்'களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தேவை யில்லை என்று சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், அவர்கள் விற்பனை ரூபாய் பத்தாயிரத்துக்குள்ளே விழும் 'டர்னோவர்'தான். ஆகவே, இந்த 'ஹாக்கர்ஸ்'களுக்கு இந்தச் சலுகை தேவையற்றது. தனியாக இந்தச் செக்கு எண்ணெயை வியாபாரம் செய்வதென்றால், அவர்களுக்குக் கொடுக் கிறோம் என்று சொல்கிறோம். ஆனால், அது நடைமுறையில் அப்படிச் செய்ய முடியாது. ஆகவே, கல்செக்கு எண்ணெய்க்கு எந்த வகையில் இருந்தாலும் அதற்கு விலக்கு உண்டு என்று இருக்கவேண்டும். மற்ற எண்ணெயோடுதான் சேர்த்து வியாபாரம் செய்ய வேண்டியிருக்கிறது.

'எவேஷன் ஆப் டேக்'ஸுக்கு வழி, மெம்பர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. ஆனால், நான் சொல்லுவது என்னவென்றால், அந்தக் கல்செக்கு எண்ணெயை எங்கிருந்து வியாபாரம் செய்தாலும், அதற்கு விலக்கு அளிக்க வேண்டும்என்பது. அவர்களைநம்பித்தான் செய்யவேண்டும். இன்றைக்கு மற்ற விஷயங்களில் அவர்கள் கணக்கு வைத்திருக்கிறார்கள். அவைகளை நம்பித்தான் வரிவசூல் செய்யவேண்டி யிருக்கிறது. அப்படிச் செய்யத் தவறியவர்கள் தண்டனைக்கு உள்ளாகிறார்கள்.

பொதுவாகக் 'காரண்டி' உண்டு பண்ணிக் கொடுக்கமுடியாது. ஆகவே, நாட்டுச் செக்கு எண்ணெய்க்குக் கொடுத் திருக்கும் விலக்கை நல்லமுறையில் பயன்படும்படி செய்யவேண்டும். செக்கு எண்ணெய் மட்டும் வியாபாரம் செய்வதனால், அதன் 'க்வாண்டம்' குறைந்துதான் இருக்கும். அப்பொழுது சலுகையே தேவையில்லை. ஆகவே, இந்த விஷயத்தை நன்கு பரிசீலித்து, இந்த வரியின் 'அட்மினிஸ்ட்ரேஷ்'னில் என்ன உதவிகள் அவர்களுக்குச் செய்யலாமோ அந்த முறையில் அதை அமைக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். அதோடுகூட வியாபாரிதான் 'Evade' பண்ணலாம்.

கூட்டுறவு 'சொசைட்டி'கள் பண்ண மாட்டார்கள் என்ற நம்பிகையாவது வைத்து, கூட்டுறவு 'சொசைட்டி'கள் மூலமாக விற்பனை செய்யக்கூடிய

எண்ணெய்க்காவது விலக்கு அளிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் மந்திரி சொல்கிற 'மூடை' பார்த்தால் ஒன்றும் உதவியாக இருக்கு மென்று தோன்றவில்லை. 'இப்படிச் சொன்னால் அப்படி, அப்படிச் சொன் னால் இப்படி' என்றால், நாங்கள் என்ன செய்யமுடியும்? இருக்கக்கூடிய கஷ்டத்தை நிவர்த்தி செய்யவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இது 'டிஸ்கிரிமினேஷன்' என்றால் என்ன பண்ணுவது?

ஏற்கெனவே கூட்டுறவு சொசைட்டி களுக்குச் சில விற்பனை வரிகளிடமிருந்து விலக்கு அளித்திருக்கிறோம், அளிக்காமல் இல்லை. அதைப்போல அமைச்சர் அவர்கள், கொஞ்சம் யோசனை செய்தால் வழி கண்டுபிடிக்கலாம். இன்னொன்று, கல் செக்கு எண்ணெய்க்கு மத்திய சர்க்கார் மானியம் கொடுக்கப்படுகிறது. 'ரீஜனல்' வாரியாகக் கொடுக்கப்பட்ட மானியம் எவ்வளவு என்கிற கணக்கிருக்கிறது. அதைக்கொண்டு கல் செக்கு எண்ணெய் எவ்வளவு உற்பத்தியாகியிருக்கும் என்று கணக்கிட்டுவிடலாம். அந்தக் கணக்கைக் கொண்டு பின்னால் 'சேல்ஸ் டாக்ஸ் ரிமிஷன்' கொடுத்துக்கொள்ளலாம். இதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, பிற மாகாணங்களில் இருந்து வரக்கூடிய பொருள்களுக்கு ஆறு சதவிகித வரி போட்டு வசூல் செய்கிறார்கள். 'சப்ளையர் சேல்ஸ்டாக்ஸ்' என்று குறிப்பாக, 'ஆட்டோ மொபைல்ஸ் ஸ்பேர் பார்ட்ஸ்'களுக்குக் கட்டிய வரி வசூல் செய்தால், இப்படி ஏதோ சட்ட வியாக்கியானப்படி கட்டவேண்டு மென்று சொன்னால், பல வியாபாரிகளைப் பாதிக்கிறது. குறிப்பாக ஒரு வருஷத்திற்குச் சிறு வியாபாரிகள்கூட இருபது, முப்பது லட்சம் 'டர்ன் ஓவர்' காட்டியிருப்பார்கள். அவர்களை இன்றைய தினம் வரி கட்டுங்கள் என்று நோட்டீஸ் கொடுப்பதானது, சொத்தை விற்று முதலைக் கட்டும்படியான நிலைமையை உண்டாக்கும். 'காப்பிடல்' நஷ்டத்திற்கே அது கொண்டுபோய் விடும். இனிமேல், விற்கக் கூடியவற்றிற்கு வரி கட்டவேண்டுமென்றால், எப்படியோ கணக்கு வைத்திருந்து கட்டிவிடுவார்கள்.

ஆகவே, பழைய வருஷங்களுக்கு இப்போது கட்டவேண்டுமென்று வற்புறுத்தக்கூடாது என்றும், செக்கு எண்ணெய் சம்பந்தப்பட்டவரையில், மில் எண்ணெயாடு வைத்துப் பார்த்தாலும் தரம் கம்மியாக இருக்காது, விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்றும் நடைமுறையில் எனக்குத் தெரிய வந்த கஷ்டங்களை எடுத்துச் சொல்லி, கலால் மானியங்களுக்கு இதைக் கொண்டுபோய் விடக்கூடாது. நாளுக்கு நாள், இந்த இனம் 20, 40 கோடியாக அதிகரிக்கக்கூடிய வகையில் நம் கையில் இருக்கத்தக்க வழிவகைகளைக் காணவேண்டும். எதற்கு உதவிசெய்ய வேண்டுமென்று நினைக்கிறோமோ, அதைப் 'பைனலைஸ்' பண்ணும்படியான நிலைமை இருக்கக் கூடாது என்பதை எல்லாம் சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

1962 ஏப்ரல் 24 அன்று ஆற்றிய உரை :

நமது கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில், மூன்றாவது திட்டத்தில் நமக்கு வேண்டிய நிதிவசதி பற்றிக் குறிப்பிட்டி ருக்கிறார்கள். 'ஃபிஸ்கல் கமிஷன்' அறிக்கைப்படி நமக்கு 2.5 கோடி ரூபாய் வருகிறது. அது வருவாய் இனம் என்று காட்டியுள்ளார்கள். 'பட்ஜெட்' அறிக்கையில் விரிவாக உரிய வரிகள் பற்றியும், மற்ற திட்டங்கள் பற்றியும் கனம் நிதி அமைச்சர் சொல்லுவார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'பினான்ஸ் கமிஷன்' முன்னாள் 'சேர்மன்' ஸ்ரீ சந்தானம் அவர்கள், 'ப்ரஸ்ஸில்' ஒரு ஆர்ட்டிகல் எழுதியிருந்தார்கள். "தமிழ்நாட்டுக்குத் தொகையைப் பகிர்ந்து அளிப்பதில் ஒரு புதிய விகிதாச்சாரத்தில் வேண்டும்" என்று!

நம் பங்கு குறைவாகயிருக்கிறது. ஆகவே, 'பகிர்க்கும்முறையில் இன்னும் கொஞ்சம் ஆட்சேபனையைத் தெரிவித்து வற்புறுத்தினால், நமக்கு அதிகமான வருவாய் வர வாய்ப்பு இருக்கிறதா?' என்று கனம் புதிய நிதி அமைச்சர் பரிசீலனை செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அதோடுகூட, 'இன்கம்டாக்ஸ்', 'கார்ப்பரேஷன் டாக்ஸ்' இருக்கின்றன. இப்பொழுது புதிய 'ரிவிஷ்'னைப் பார்க்கும்போது, கார்ப்பரேஷன் வரியில் அதிகப்படியான விகிதாச்சாரம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அதேபோல், 'இன்கம்டாக்ஸ்' இருக்கிறது. இவைகளின் மூலமாக மத்திய அரசாங்கத்திற்கு அதிகமாக மாகாணத்திலிருந்து கிடைத்து வருகிறது. அது எந்த இனமாக இருந்தாலும் சரி, கார்ப்பரேஷன் வரியாயிருந்தாலும் நமக்குக் கிடைக்கவேண்டியதை நமக்குக் கொடுக்கும்படியாக இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

1962 ஜூலை 2 அன்று ஆற்றிய உரை :

இந்த நேரத்தில், வரிவிதிப்பு அத்தனையையும் நான் ஆதரித்தாலும், நில வரி விதித்திருப்பதை என்னால் ஆதரிக்க முடியவில்லை. தண்ணீர்த் தீர்வையை அதிகரித்திருப்பதனால் கிடைக்கக்கூடிய வருமானம் ஒரு கோடி ரூபாய். 'மார்ஜினல் அண்ட் சப் மார்ஜினல் கல்டிவேட்டர்ஸ்' இந்த நாட்டில் ஏராளமாக இருக்கிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது அவர்களைப் பாதிக்கக் கூடிய வரியாகும். வசதி பெற்றோருக்கு வரி போடுவது என்றால், 'அக்ரிகல்சுரல் இன்கம்டாக்'சை அதிகப்படுத்தலாம். ஆனால், 'மார்ஜினல் அண்டு சப் மார்ஜினல் கல்டிவேட்டர்ஸ்' என்று ஒத்துக்கொண்டு அவர்களுக்குப் பலவகை வசதிகளையும் செய்துகொண்டு, நஞ்சையானால் 100க்கு 60 சதவிகிதமும், புஞ்சையானால் 100க்கு 100 சதவிகிதமும் வரியை உயர்த்தினால், 'விவசாய உற்பத்தி தடைப்படும்'. விவசாயிகளுடைய உற்சாகத்திற்கு இடுக்கண் ஏற்படும்' என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நெல்லை ஜில்லாவில் நிலவுகின்ற அவலநிலையைச் சொல்ல விரும்புகிறேன்.

அதிலும் 'பெனால்டி' வேறு போடுகிறார்கள். ஒன்றுக்கு மூன்று தண்டத் தீர்வைப் போடுகிறார்கள். இப்போது இரண்டுமடங்கு தண்டத் தீர்வை இருக்கிறது. 'இனிப் போடமாட்டோம்' என்று சொல்கிறார்கள். 'செண்ட் பெர்ஸன்ட்'டானால் புஞ்சை பாதிக்கப்படும். இப்போது 20இலிருந்து 40ஆகி, ஏக்கர் ஒன்றுக்கு 80 ரூபாய் தீர்வை வருகிறது. இது பொதுஜன எதிர்ப்பாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே, இதை நன்கு பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய நிலச்சுவான்தார்களின் வருவாயைப் பயன்படுத்திக்கொள்ள விவசாய வருமான வரிமூலம் ஏற்பாடு செய்துகொள்ளலாம். இதை மந்திரிசபை பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்' ஜாஸ்தியாகயிருக்கிறது. 'காட்டு அமைச்சர்' என்றால், காட்டுக்குப் போகிற அமைச்சர் அல்ல. அந்த இலாகாவை வகிக்கும் அமைச்சர் அவர்களைச் சொல்கிறேன்.

தெள்ளத் தெளிவாகப் பேசினால், 'பாயிண்ட்ஸ்' களைச் சொல்ல முடியவில்லை. 'மாச்வுட்'டை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த 'ஜெனரல் டிபேட்'டில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1963 பிப்ரவரி 27 அன்று ஆற்றிய உரை :

இதில் ஒரேஒரு விளக்கத்தைக் கனம் மந்திரி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மணிமுத்தாறு 'பிராஜெக்'டை விதிவிலக்கில் சேர்க்கவில்லை. இதனால் இந்தப் புதிய சட்டப் பிரகாரம், விதிவிலக்கில் சேர்க்கப்பட்ட திட்டங்கள் ஒருவகை, புதியதிட்டங்களில் விதிவிலக்கு அளிக்கப்படாமல் இருப்பவை ஒருவகை, பழைய திட்டங்களில் இருக்கக்கூடிய நிலங்கள் ஒருவகை என்று மூன்று விதமான பாகுபாடுகள் ஏற்படும்.

மணிமுத்தாறைப் பொறுத்தவரையில், ஒரு ஏக்கருக்கு ரூபாய் 7 முதல் 10 வரையில், ஏற்கெனவே உள்ள தீர்வைப் பேரில் விதித்திருக்கிறார்கள். இது 1958ஆம் வருஷத்துக்குப் பிறகு விதித்தத் தீர்வை. ஏற்கெனவே உள்ள தீர்வையோடு இந்த ரூபாய் பத்தும் சேர்த்து, அந்தத் தீர்வையோடு கூடுதலாகச் சேர்க்கவேண்டிய வரியையும் சேர்ப்பது என்ற முறையிலே இந்த மசோதா அமைந்திருந்தது அப்படிப்பார்த்தால், மணிமுத்தாறு திட்டத்திற்கு மாத்திரம் இந்த வரி விதிப்பை அமல் செய்வதாக இருக்கிறது. வைகைத் திட்டம், ஆழியாறு திட்டம், இவற்றிற்கு எந்த அடிப்படையில் புதிய வரியைப் போட்டிருக்கிறார்களோ, அதே அடிப்படையில் மணிமுத்தாறு திட்டத்திற்கும் இந்தக் கூடுதல் வரியைப் போட்டு 'ரேஷனலைஸ்' செய்வதாக இருந்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை கிடையாது.

1965 மார்ச் 2 அன்று காலை 10.30 மணிக்கு ஆற்றிய உரை :

'சேல்ஸ் டாக்ஸ்', 'ஸ்டாம்ப் டியூட்டி' ஆகியவற்றிலிருந்து நிறைய பணம் வரும் என்று நினைத்து, இந்த வருஷம் 11 கோடி ரூபாய் பற்றாக்குறையைக் 'கவர்' பண்ணாமல், முதலமைச்சர் அவர்கள் 'பட்ஜெட்'டைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். 'சேல் ஸ்டாக்ஸ்'மூலம் நிறைய பணம் வருகிறது. 'ஸ்டாம்ப் டியூட்டி'யிலிருந்து வரும் என்று எதிர்பார்க்கிறோம். அதோடுகூட 'பிஸ்கல் கமிஷன்' வரப்போகிறது. 'கிரேட்டர் அலொகேஷன்' கிடைக்குமென்ற காரணத்தால், ஜனங்களைத் தொந்தரவு பண்ணவேண்டாமென்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதற்காக நமது பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆனால், 'எவேஷன்ஸ் ஆப் சேல்ஸ் டாக்ஸ் ஆண்டு ஸ்டாம்ப் டியூட்டி' அதிகமாக இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். 'ஸ்டாம்ப் டியூட்டி'யில் 'எவேஷன்' அதிகமாக இருக்கிறது. இதிலே எல்லோருக்கும் ஒரு பாலிசி 'மெத்தட்' போடுவது நல்லதா என்று பார்க்க வேண்டும். தற்போது சட்டத்தின் மூலமாகப் பயன்படுத்தி 'எவேஷன்' இல்லாமல் தடுக்கமுடியும் என்ற ஒரேபோக்கில் சிந்தனை போய்க் கொண்டிருக்கிறது. 'எவேட்' பண்ணாமல் தடுக்க என்ன சூழ்நிலைகளை உண்டாக்க வேண்டுமென்று பார்த்தால் நன்றாக இருக்கும்.

நம்முடைய நாடு ஜனநாயக நாடாக இருப்பதால், அந்த வகையில் சிந்தித்துப்

பார்க்க வேண்டும். என்னதான் இருந்தாலும், 'சேல்ஸ் டாக்ஸ் எவேட்' பண்ணாத வியாபாரி இருப்பான் என்று சொல்லவே முடியாது. இதை எந்த வியாபாரியாக இருந்தாலும் ஒத்துக் கொள்வார்கள். அதேமாதிரி, சொத்து வாங்குகிறயாரும் 'ஸ்டாம்ப் டியூட்டி'யை 'எவேட்' பண்ணாமல் இருக்க முடியாது. இது தெரிந்த உண்மை. வாங்குகிற சொத்தின் மதிப்பை சர்க்காரே நிர்ணயம் செய்துவிடுவது நல்லது.

ஒரு சொத்தை வாங்குகிறவன் 7.5 சதவிகிதமாவது போட்ட மூலதனத்திற்குக் கிடைக்குமா என்று பார்த்துத்தான் வாங்குகிறான். கட்டிடம் இல்லாத நிலத்திற்கு இப்போது 'அர்பன் லாண்ட் டாக்ஸ்' கொண்டு வந்திருக்கிறோம். நிலம் என்ன விலைக்கு விற்றாலும், இந்த 'வால்யூவேஷன்'படி 'டியூட்டி' கட்ட வேண்டுமென்று நிர்ணயித்து விடுகிறோம். ஆகவே, சட்டத்தின்மூலம் மட்டும்சட்டத்தையும், அதிகாரிகளையும் நம்பமட்டும் இந்தக் 'கலெக்ஷ்'னைச் செய்யவேண்டுமா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் சமீபத்தில் பத்திரிகையில் ஒன்று பார்த்தேன். எல்லாவற்றையும் 'மல்டி பாயிண்ட் சேல்ஸ் டாக்ஸ்'ஆக மாற்ற வேண்டுமென்றால், அதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாக மந்திரியவர்கள் ஓரிடத்தில் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டவர்கள்எல்லாம் 'மான்யூபாக்சாரர்'கள். 'மல்டி பாயிண்ட் சேல்ஸ் டாக்ஸா'க இருந்தாலும் 'சிங்கிள் பாயிண்ட் சேல்ஸ் டாக்ஸா'க இருந்தாலும் சர்க்காருக்கு 'ரெவின்யூ' கிடைத்துவிடுகிறது. நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள், நிதியமைச்சர் அவர்களுடைய கண்ணோட்டத்தில் பார்த்திருக்கிறார்கள். சர்க்காருக்கு அதனால் அதிகப் பணம் வரும்.

டாக்டர் லோகநாதன் 'ரிப்போர்ட்'படி வேண்டாமென்று சொன்னால், 'மல்டி பாயிண்ட் சேல்ஸ் டாக்ஸ்' போட ஒத்துக்கொள்கிறோம் என்று மந்திரியவர்கள் உடனே சொல்லியிருக்கிறார்கள். அங்கு வந்திருந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள், 'மான்யுபாக்சரர்'கள். அதிலே 'கன்ஸ்யூமர்'ஸோ, 'ஹோல்சேல்', 'ரீடெய்ல் டீலர்'களோ இல்லை. மறைமுகமாக 'டாக்ஸ்' போடுவது என்பது நம்முடைய ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல. 'we are partaking in the welfare of the State'. இவ்வாறு மாற்றுவது பரிசீலனையில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது நல்லதல்ல. அது 'டாக்ஸ் எவேஷ'னுக்குக் கொண்டுபோய் விட்டுவிடும். ஆகவே, இதுபற்றிப் பரிசீலனை செய்யும்போது இந்த விஷயங்களையெல்லாம் பார்த்து 'ரெவீயூ' செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

'சேல்ஸ்டாக்ஸ்'வசூல் பண்ணுவதைப் பொருத்துச் சமீபத்தில் 'ஹைகோர்ட்டில்' ஒரு 'டெசிஷன்' கொடுக்கப்பட்டிருக்கிறது. 'கான்ஸ்டியூஷன்' பிரகாரம், வீட்டுக்குள்ளே போய்ப் பரிசீலனை செய்து கணக்குகளைப் பிடிக்கக்கூடாது என்று கூறியிருப்பது ஒரு பெரிய வரப்பிரசாதம் மாதிரி இருக்கிறது. நானும், ஜனங்களைப் பயப்படுத்தி வாங்கக்கூடிய சூழ்நிலையை அதிகமாக உருவாக்கக்கூடாது என்ற அபிப்பிராயம் உள்ளவன். அதனால்தான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட, அவர்கள் கணக்குகளைக் காட்ட 'டைம்' கொடுத்தார்கள். 'இன்கம்டாக்சை'ப் பொருத்தும்

கூட மத்திய சர்க்கார் டைம் கொடுத்திருக்கிறார்கள். யாராக இருந்தாலும் மூன்று மாதத்திற்குள் கணக்குகளைக் கொடுத்தால் 60 சதவிகிதத்தைக் கட்டிவிட்டு 40 சதவிகிதத்தை வரவு வைத்துக்கொள்ளலாம் என்று கூறினார்கள்.

'டாக்ஸ் எவேட'ரை 'பர்சுவேடு' பண்ணி வாங்குவதைவிட்டு 'கொயர்ஸ்' பண்ணி வாங்குவதால், நான்கு கோடி ரூபாய்வரை வசூலிக்கப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் 'கொயர்ஸ்' பண்ணுவது 'எக்ஸஸ்'ஆகப் போய்விடுகிறது. இந்தச் சமயத்தில் நான் ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன்.

ஒரு 'ஹனஸ்ட் டிரேடர்', சாதாரண 'ஷாப் கீப்பர்', மாதா மாதம் ஒழுங்காக 'டாக்ஸ்' செலுத்தி வருபவன். ஆபீசரைக் கண்டு பயப்படமாட்டான். கடையில் அவன்தான் முதலாளி, அவன்தான் கணக்குப்பிள்ளை. அவனை மூன்று நான்கு நாள்கள் அலைக்கழித்திருக்கிறார்கள் அதிகாரிகள். அந்த அதிகாரி 'இன்னின்ன சாமான்கள் எல்லாம் கொடுத்தால் விட்டுவிடுகிறேன்' என்று சொல்லியிருக்கிறார். அந்தச் சாமான்கள், பத்து ரூபாய் பெறுமானமுள்ளவைதான். அந்தக் கடைக்காரன், அவர்கள் கேட்ட சாமான்களைக் கொடுத்துவிட்டுப் போலீஸிக்கு தெரிவித்துவிட்டான். அந்த அதிகாரி அகப்பட்டுக்கொண்டான் ஆபீசர்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்திருப்பதால், 'ஹானஸ்ட் டிரேடர்'கூட வீண் தொல்லைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது.

'என்ன வேண்டுமென்றாலும் செய்துகொள், வரியைமட்டும் வசூல் செய்துவிடு' என்று அளவுக்கு மீறி அதிகாரிகளுக்கு அதிகாரத்தைக் கொடுத்திருப்பதால், ஒரு சாதாரண 'ஷாப் கீப்பர்'கூட 10 ரூபாய் கொடுத்துத் தன்னுடைய காரியத்தை முடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். இது பிரத்தியட்சமான நிலை. 'டாக்ஸ் எவேஷன்' இருந்தாலும் வியாபாரிகள் அத்தனைபேரும் மோசமான ஆள்கள் அல்ல. அதிகாரிகள் என்ன வேண்டுமென்றாலும் பண்ணலாம் என்றநிலை இருந்தால், என்ன நிலைமைகள் உருவாகும்? அவர்கள் 'அன்சோஷியல் எலிமெண்ட்ஸ்'ஆக மாறினால்கூட ஒன்றும் செய்ய முடியாது.

சமீபத்தில் 'ஹிந்தி எதிர்ப்பு அஜிடேஷன்'போது இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பெரிய 'மில் ஓனர்ஸ்' போராட்டத்தில் ஈடுபடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பெரிய 'மில் ஓனர்ஸ்' போராட்டத்தில் ஈடுபடும் நிலைமை எதனால் ஏற்பட்டிருக்கிறது. அவர்களால் நிறைய சம்பாத்தியம் பண்ணமுடிய வில்லையா? 'இன்கம்டாக்ஸ்' கெடுபிடி அவர்களுக்கு இவ்வளவு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்குமேயானால், நாட்டிலே நடக்கக்கூடிய வேறு முயற்சிகளிலே 'அன்சோஷியல் எலிமெண்ட்ஸ்' இடையிலே வரக்கூடிய நிலைமை உருவாகி வருகிறது. ஆகவே, இந்த நிலைமையில், ஜனநாயக சம்மதம் பெற்ற நம்முடைய அரசாங்கமானது, 'வோட்டு' பெற்றால்கூட நிற்கமுடியாது. ஆகவே, ஜனநாயக சர்க்காராக இருந்தபோதிலும், செயல்பட முடியாதநிலைமையை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இதைக் கூறும் நேரத்தில், 'சேல்ஸ் டாக்'சை இழந்துவிடவேண்டுமென்று சொல்லவில்லை. இன்னும் திறமையாக வசூலிப்பதற்குப் பரிகாரத்தைக் காண

வேண்டுமென்றுதான் கூற விரும்புகிறேன். என்னென்ன 'இன்ஸண்டூவ்ஸ்' - சலுகைகள் கொடுத்தால், 'டாக்ஸ்' வருமென்று பார்க்கவேண்டும். பயமுறுத்தல் அல்லது சட்டம், நிர்ப்பந்தம் என்றமுறையில் வரிவசூல் செய்யக்கூடாது. 'வரிவசூல் என்பது ஒரு பேரம்' என்றமுறையில்தான் வரிவசூல் நடத்தவேண்டும்.

1965 மார்ச் 20 அன்று ஆற்றிய உரை :

கனம் சபாநாயகர் அவர்களே! இந்த மானியத்தை ஆதரிக்கும் முறையில் ஒன்றிரண்டு கருத்துக்கள்மட்டும் கூற விரும்புகிறேன். மந்திரி அவர்கள், 'ஒரு கட்ட விற்பனை வரி'யை, 'பல கட்ட விற்பனை வரி'யாக மாற்றுவதற்கு அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். ஒருகட்ட விற்பனைவரியை ஆதரிக்கிறவன் நான். பலகட்ட விற்பனைவரியாகமாற்றக் கூடாது என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பலகட்ட விற்பனை வரி, விலைவாசியை உயர்த்திவிடுகிற நடவடிக்கையாக அமையும். அதோடுகூட, இப்போது விற்பனை வரியிலே அதிகமான மறைப்பு இருக்கிறது. அதைக் கண்டுப்பிடிப்பதிலே நாம் அதிகமாக முயன்று வருகிறோம்.

பலகட்ட விற்பனை வரியை ஏற்படுத்தும்போது, அம்மாதிரி 'எவேஷ்'னுக்கு அதிகச் சந்தர்ப்பம் அது கொடுக்கும். நாமே பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திவிட்டு, அதற்காக நடவடிக்கை எடுப்பது என்பது எவ்வளவு தூரம் பொருத்தம் என்பது எனக்குத் தெரியவில்லை.

சென்னையிலே கூடிய வியாபாரிகள் கூட்டத்திலே, பலகட்ட விற்பனைவரியை அவர்கள் ஆதரித்து, மந்திரி அவர்களிடம் கூறியதாக இங்கே சொல்லப்பட்டது. நானும் பத்திரிகையில் படித்தேன். ஆனால், பொதுவாக அவர்கள் எல்லோரும் 'மான்யுஃபாக்சரர்'கள். அதிக வருமானம் உள்ளவர்களுக்கு வருமான வரி கட்டுவதில் எந்தக் கஷ்டம் இருக்கிறதோ, அந்தக் கஷ்டம்தான் இவர்களுக்கும் ஏற்படுகிறது என்று நினைக்கிறேன். அந்த வருமானம் வரும்போது, 'நாம் இவ்வளவு வருமான வரி கட்டவேண்டும்' என்பதை அவர்கள் கவனித்து ஒதுக்காமல், பின்னால் வருமான வரி செலுத்துவதற்குக் கஷ்டப்படுகிறார்கள்.

ஆனால், வருமானம் வரும்போது, 'நாம் இவ்வளவு வருமான வரி கட்டவேண்டும்' என்பதை அவர்கள் கவனித்து ஒதுக்காமல், தங்களுடைய பணம்போலச் செலவழித்துவிட்டு, பின்னால் வருமான வரி கட்டுவதற்கு அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதன்மேல் அவர்களுக்குக் கோபம்கூட ஏற்படுகிறது.

அம்மாதிரி 'மான்யுஃபாக்சரர்'கள் 7 சதவிகிதம் வரி என்றால், அதை வசூல் செய்துதான் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், பெரிய வருமானமாக இருக்கிறது. அந்தப் பணத்தைப் பாதுகாத்து வைத்து அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டிய ஒரு சிரமம் இருக்கிறது. அந்தச் சிரமத்திற்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்று அவர்கள் இந்த மாற்று யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

'பலமுனை விற்பனை வரியானது, விலைவாசியை ஏற்றுவதாக அமைகிறது' என்பது ஒன்று. மற்றொன்று, 'வரியை டிமிக்கியடிக்க இது உதவிகரமான

அம்சமாக இருக்கிறது'. இந்தக் காரணங்களுக்காகப் பலமுனை விற்பனை வரியைக் கொண்டுவர வேண்டாம் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள், விற்பனை வரி வருமானத்தைக் 'ரிவீயூ' பண்ணும்போது, கிட்டத்தட்ட எட்டு கோடி ரூபாய் அளவுக்கு ஒரு வருஷத்திலே 'எக்ஸெஸ்' ஸாக வந்திருப்பதாகச் சொன்னார்கள். இந்த ஏற்றத்தைப் பார்க்கும்போது, இது தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பெரிய அறிகுறியாகவும் இருக்கிறது. ஆனால் அதேநேரத்தில், இம்மாதிரி ஒரு வருஷத்தில் எட்டு கோடி, பத்து கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் வரும்போது, மந்திரி அவர்கள் என்ன சலுகை அளித்தார்கள் என்று சிந்திக்க வேண்டும். சலுகை அளிப்பதன்மூலம் இன்னும் அதிக வருமானம் பெறுவதற்கு என்ன ஏற்பாடு செய்யலாம் என்ற கண்ணோட்டத்தோடு இது பரிசீலனை செய்து முடிவுசெய்யப்படவேண்டிய ஒரு விஷயம்.

இரண்டு சதவிகிதம் என்று சொல்லும்போது, 'ஹோல் சேல் டீலர்' களுக்கும் இரண்டு சதவிகிதம்தான் 'மார்ஜின்' செய்கிறோம். வியாபாரிகள் லாப விகிதத்தை நிர்ணயிக்கும்போது, அரசாங்கம் இரண்டு சதவிகிதம்தான் லாப விகிதம் என்று நிர்ணயித்திருக்கிறது.

பலமுனை விற்பனை வரியிலே இரண்டு சதவிகிதம் விதித்து வியாபாரத்தில் எவ்வளவு உச்சகட்ட லாபம் வரும் என்று எண்ணுகிறோமோ, அதைவிட அதிக வருவாயை வரியின் மூலமே பெற விரும்புகிறது என்றுதான் அர்த்தம். பலகட்ட விற்பனை வரியிலே 16 சதவிகிதம் வந்தால், அது நம்முடைய வருவாய்க்கு அதிகமாக, உகந்ததாக இருந்தாலும் 'கன்ஸ்யூஸ் டாக்ஸ்' என்ற காரணத்தினாலே இதற்கு எந்தவிதமான சலுகை கொடுக்க முடியும் என்பதையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

உணவுதானியங்களைப் பொருத்தவரையில், இதற்கு ஒரு விதிவிலக்கு கொடுக்கவேண்டும். 1958 ஆம் வருஷத்திலேகூட, அப்போதிருந்த நிதி அமைச்சர், ஒரு சதவிகிதம் என்று இருப்பதை 'ப்ரொக்ரெஸிவ்'வில் அரை சதவிகிதம் அளவுக்குக் குறைத்து, பின்னால் அதை மேலும் குறைப்பதற்கான வழிவகைகளை இந்த அரசாங்கம் காணும் என்று இந்தச் சட்டசபையிலே கூறியிருப்பதை இப்பொழுது நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகின்றேன். அதனால், பெரிய அளவுக்கு வருமானப் பாதிப்பு இருக்காது.

செய்யும் பண்டங்கள் அதிகமாக இருக்கையில், ஒரு வருஷத்தில் எட்டு கோடி ரூபாய், பத்து கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் அதிகமாகியிருக்கிற நேரத்தில், 'சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களுக்கு எந்த வகையில் சலுகை அளிக்கமுடியும்?' என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். ''சாதாரண மக்களுக்குத் தேவையான சாமான்களைப் பொறுத்தவரையிலாவது ஏதாவது சலுகை கொடுக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டு, இந்தப் பல முனை வரித் திட்டம் பற்றிய 'ப்ரபோசலை'க் கைவிடுமாறு கேட்டுகொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.



மீன் வளம் குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

1958 மார்ச் 28 அன்று காலை 10.30 மணிக்கு ஆற்றிய உரை :

விவசாயத்திற்கு இந்த மானியத்தில் மிகமுக்கிய இடம்கொடுக்கப் பட்டிருப்பது மீன் இலாகாவுக்கு. மீன் உற்பத்தியானது எந்த அளவுக்கு உற்சாகமுற விரிவடைகிறதோ, அந்த அளவுக்கு நம்முடைய விவசாயப் பொருளாதாரமும் சீரடையும் என்ற நம்பிக்கையுடையவர்களில் நானும் ஒருவன். மீன் உற்பத்தியின் மூலமாக, ஜப்பானிய தேசத்துப் பொருளாதாரத்தை 40 சதவிகிதத்திற்கு மேலாக உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். தொழில் துறையிலோ, அல்லது பிற தேசத்திற்குக் கொடுக்கக்கூடிய நுணுக்கமான இயந்திரங்களைக் கொடுப்பதிலோ, ஜப்பானுடைய நிபுணத்துவம் பிரசித்தம் வாய்ந்தது. ஆனால், அவர்கள் தங்களுடைய ஜீவனோபாயத்திற்குப் பெரும்பாலும் மீன்பிடிப்பையே நம்பியிருக்கிறார்கள். அவர்கள் அந்த அளவு விஸ்தாரம் அடைந்திருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம், அவர்கள் கடல்பூராவையும் தங்களுக்குச் சொந்தமாகவைத்துக் கொள்ளுகிறார்கள்.

நம்முடைய நாட்டின் கடலோரத்திலேகூட அவர்கள் மீன்பிடித்துச் செல்கிறார்கள். அப்படிப் பிடிக்கும் மீனை, அவர்கள் தங்களுடைய நாட்டில் கொண்டுபோய்ச் சேர்ப்பதில்லை. மீன்பிடித்து, 'ஃபாக்டரி' கப்பல் மூலமாகப்

பிடித்த இடத்திலேயே 'க்யூர்' செய்து, மேலைநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். இம்மாதிரி அவர்கள் விசை பொருத்திய கப்பலில் சென்று நைலான் வலைகளை உபயோகப்படுத்தி ஏராளமாக மீன் பிடித்து 'ஃபாக்டரி' கப்பலில் 'க்யூர்' செய்து அவைகளைப் பல நாடுகளுக்கு அனுப்பி, மீன்பிடித் தொழிலை விஸ்தாரம் அடையச்செய்து அதன்மூலமாகத் தங்களுடைய பொருளாதாரத்தை அவர்கள் சீர்படுத்திக்கொண்டிருக் கிறார்கள்.

இப்பொழுது இந்திய நாட்டின் அரசாங்கம்கூட, 'Foreign Collaboration' மூலமாக இந்தத் தொழிலுக்குப் பெரிய ஊக்கம் தேடக் காத்திருக்கிறார்கள். அதை இந்த மாகாண அரசாங்கம் ஒரு ஆஸ்பதமாக எடுத்துக்கொள்ள வேண்டும். நமக்கு 600 மைல் நீளமுள்ள கடலோரம் இருக்கிறது. 'Foreign Collaboration' நமக்கு ஜப்பானிடமிருந்து கிடைத்தாலும் சரி, அமெரிக்காவிட மிருந்து கிடைத்தாலும் சரி, எவ்வளவு அதிகமாகப் பெறமுடியுமோ அதைப் பெறவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற (1957ஆம்) ஆண்டில், 172 நைலான் வலைகள் கொடுத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு வலையின் விலை ரூ.600 முதல் ரூ.700 ஆகிறது. நைலான் வலைகளை எவ்வளவு அதிகமாக ஆக்கித்தரமுடியுமோ, அவ்வளவு அதிகமாக ஆக்கித்தரவேண்டும். நைலான் வலைகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆகவே, அவைகளை உள்நாட்டிலேயே தயார் செய்வதற்கு இயந்திரச் சாதனைங்களை இந்தச்சர்க்கார் ஏற்படுத்துவதற்கு உண்டான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1962 ஜூலை 2 அன்று ஆற்றிய உரை :

'ஃபிஷரிஸ்'க்காக நைலான் நூலும், விசைப்படகும் மீனவர்களுக்குக் கொடுப் பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். விசைப் படகுகளை மட்டும் வைத்துக்கொண்டு இந்த நாடு மீன்வளத்தைப் பெருக்கிவிட முடியாது. 'இந்தியன் ஓஷனை'ப் பற்றி எல்லா நாடுகளும் சேர்ந்து ஒரு ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

முக்கியமாக 'இந்தியன் ஓஷனில்' மீன்வளம் ஏராளமாக இருக்கிறது; ஆழ்கடலில் இருக்கும் மீன்வளத்தை நாம்பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்கு விசைப்படகுகளால் பயனில்லை. 10 ட்ராய்லருக்கு, ஒரு 'ஃபாக்டரி ஷிப்' வைத்துக்கொண்டு, ஜப்பான் நாட்டு முறைப்படி ஆழ்கடலில் மீன்பிடிப்பை மேற்கொண்டால்தான் நிச்சயமாக நாம் மீன்வளத்தைப் பெருக்கமுடியும். இதை நீண்டகாலத் திட்டமாக வேண்டு மானாலும் வைத்துக்கொள்ளலாம். இதைச் சர்க்கார் துறையில் செய்ய முடியவில்லை என்றால், 'ப்ரைவேட் கார்பரேஷ'னில் செய்யலாம். பம்பாயில், இதன்மூலம் சென்ற வருஷத்தில் மாத்திரம், இரண்டு மூன்று கோடி ரூபாய் அளவுக்கு லாபம் சம்பாதித் திருக்கிறார்கள்.

நம்முடைய தமிழ்நாட்டில், கடற்கரை ஓரப்பகுதி நிறைய இருப்பதால் இதனைச் சர்க்கார் ஏற்றுச் செய்யலாம். முடியாவிட்டால், தனியார் துறையில் செய்யலாம். அந்நியச் செலவாணி குறைவாக இருப்பதால், நைலானுக்கு முக்கியத்துவம் இல்லாமல் போனாலும் போகலாம். நைலான் நூலைக் கொடுக்க முடியாத நிலைமைக்குச் சர்க்கார் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதற்கு

முன்ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நைலான் நூலை நாமே உற்பத்தி செய்வதற்கு வேண்டிய தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும்.

1964 மார்ச் 2 அன்று காலை 10.00 மணிக்கு ஆற்றிய உரை :

விவசாய உற்பத்தி என்று சொல்லும்போது, நாம் நிலத்தை மட்டும்தான் எப்போதும் நினைவுக்குக் கொண்டுவருகிறோம். ஆனால், கடல் இருப்பதை நாம் மறந்துவிடுகிறோம். கடல் மிகப்பெரியதாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் கடலோரம் அதிகமாக இருக்கிறது. ஆனால், நாம் இன்று நினைப்பது நிலத்தை மட்டும்தான். 'இருக்கின்ற தண்ணீர் வசதி போய்விட்டது. இனிமேல் 'வெஸ்ட் ஃப்ளோயிங் ரிவர்ஸ்' இருக்கிறது. அதைத்தான் இனிப் பார்க்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம்.

இங்கு, கனம் அங்கத்தினர் திரு. மகாலிங்கம் அவர்கள் சொன்னார்கள். 'ப்ரோட்டீன் குறைந்து விட்டது. ஆகவே, பருப்பைத்தான் இனிமேல் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும்' என்று. பருப்பின் விலைதான், அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறதே! ஆகவே, அதிலேயே ஏன் கவனம் செலுத்திக்கொண்டிருக்கவேண்டும்? கிராக்கியாகப் போய்க்கொண்டிருக்கிற பொருளையே திரும்பித் திரும்பி ஏன் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்?

'ஃபிஷரீஸ் அலாக்கேஷ்'னை எடுத்துக் கொண்டால் 75 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், இதிலிருந்து வருமானமே 25 லட்சம் வருகிறது. 'ஸ்டேட் பண்டி'லிருந்து செலவு செய்வது 50 லட்சம் மட்டும்தான். இதைக்கொண்டு நைலான் வலைகள், 'பாப்லோ' படகுகள் கொடுக்கிறோம் என்று சொல்வார்கள். இதனால்மட்டும் நம்முடைய உற்பத்தி பெருகிவிட முடியாது. குறைந்த அளவுக்கு இந்தத் துறைக்கு நான்கு அல்லது ஐந்து கோடியாவது ஒதுக்கியிருக்க வேண்டும்.

'ஃபிஷிங் ஹார்பர்' வேண்டும் என்று சொல்லி நாலைந்து வருடங்கள் ஆகிவிட்டது. வெறும் 'பாப்லோ' படகுகள் என்பது வெறும் கட்டுமரங்கள் இருப்பது போலத்தான். கட்டு மரங்கள் 25 மைல் 35 மைல் போகிறது. அதேபோன்றுதான் இந்தப் படகுகளும் போகின்றன. ஆகவே, இதனால்மட்டும் 'பிஷரீஸ்' தரம் உயர்ந்துவிடும் என்று சொல்வது பொருத்தமாகாது.

பம்பாயில் ஒரு ஸ்தாபனத்தை வைத்திருக்கிறார்கள். இதிலிருந்து 2 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் வருகிறது. வேறு பல திட்டங்களை எடுத்துக் கொண்டால், ஜப்பான் முதலிய நாடுகளில் போய்த்தான் பார்க்கவேண்டும். நான் சொல்வது பம்பாயிலே நடைபெறுகிறது. 'பிரைவேட் இண்டஸ்ட்ரீ'ஸாகத்தான் நடைபெறுகிறது.

நம்முடைய மாநிலத்திலும் எல்லாம் அரசாங்கத்தின் கீழ்தான் நடைபெறவேண்டும் என்ற 'ஃபிக்ஸ்ட் ரூல்' ஒன்றும் நாம் வைத்திருக்கவில்லை. தனிப்பட்டவர்கள் யாராவது நடத்த முன்வந்தால், அவர்கள் கையிலேயே கொடுக்கலாம். இதன்மூலமாக வருடம் ஒன்றுக்குச் சுமார் 2.5 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். ஆகவே, இந்த 'ஃபிஷரீஸ்'க்குக் குறைந்த அளவு நாலைந்து கோடி ரூபாயாவது ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1965 மார்ச் 2 அன்று காலை 10.30 மணிக்கு ஆற்றிய உரை :

'ஃபிஷரீஸ்' பற்றிச் சொல்லும் பொழுது, இந்த நாட்டிலே 3 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டு மென்று சொல்லப்படுகிறது. அகில இந்திய 'டார்கெட்' 50 லட்சம் டன் என்று விதித்து இருக்கிறார்கள். ஐம்பது லட்சம் டன் னுக்கு, 3 லட்சம் டன் மட்டும் உற்பத்தி செய்வதால், 'டார்கெட்'டைப் பூர்த்தி செய்துவிட முடியாது. உணவுத் துறையில் 'ஃபிஷரீஸ்' மிகவும் முக்கியமான 'டிபார்ட்மெண்ட்', ஆகையால், இன்னும் உற்பத்தியைப் பெருக்கவேண்டிய தற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நானெல்லாம், மீன் சாப்பிடக் கூடிய ஆள் இல்லை. கடலில் உணவு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. கடலில் 'வெஜிடேஷன், ப்ரோட்டீன் கண்டெண்ட்' ஜாஸ்தியாக இருக்கிற தென்று சொல்கிறார்கள். அதை அப்படியே உபயோகப்படுத்த வேண்டு மென்றால், என்னைப் போன்றவர்களால் முடியாது. 'ப்ராசஸ் ஃபுட்'ஆக 'ஸீ-வெஜிடேஷனை' ஏன் உபயோகப் படுத்தக்கூடாது? எவ்வளவோ 'ப்ராசஸ் ஃபுட்' ஆரம்பிக்கிறோம். இதையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





மொழிக்கொள்கை குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

மொழி என்பது ஓர் இனத்தின், நாட்டின், மக்களின் பண்பாடு, நாகரிகம் போன்றவற்றைக் காப்பாற்றி, பிறர் அறியத் துணைபுரியும் சாதனமாகும். மக்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கு மட்டுமன்றி, அறிவு வளர்ச்சிக்கும் தொழில்களைச் செய்வதற்கும் பெருந்துணை புரிவதாகும். பாரத நாட்டில் எண்ணற்ற மொழிகள் பேசும் மக்கள் வாழ்கின்றனர். அவர்களின் பண்பாடும் கலையும் நாகரிகமும், உணவு, உடை, பழக்க வழக்கங்களும் பலவாக உள்ளன. இந்நிலையிலும், இந்த நாட்டு மக்கள் இணைந்து ஒரு தாய் மக்கள்போல் ஒன்றாகவே வாழ்கின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சி நீங்கியநிலையில், சுதந்திரம் பெற்ற நம் நாட்டுக்கு 'ஆட்சி மொழி' என்று ஒரு மொழி தேவை என வலியுறுத்தப் பெறுவதால், பல பிரச்சினைகள், தோன்றியுள்ளன. அவற்றைத் தீர்க்கும்வகையில் ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் தெளிவுபடப் பலமுறை உரையாற்றியுள்ளார். அவற்றை இனிக் காண்க :

1962 ஜூலை 2 அன்று பிற்பகல் 2.35 மணிக்கு ஆற்றிய உரை :

''கனம் சபாநாயகர் அவர்களே! 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்'

என்ற மேற்கோளுக்கு இணங்க, மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையைப் பாராட்டும் முகத்தில், நான் இந்த விவாதத்தில் கலந்துகொள்கிறேன். 'தமிழ்நாட்டிலே, தமிழ்மொழியிலே ஆட்சி' என்று குறிப்பிட்ட அம்சம் வரவேற்கத்தக்கது. 'கல்வித் துறையிலும் தமிழ்மொழிதான் இருக்கவேண்டும்' என்று எல்லோராலும் பேசப்படுகிறது. அதை யாரும் மறுக்கவுமில்லை; ஏற்றுக் கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 'எந்த முறையில் தமிழ்மொழி இன்று இருக்கிறது' என்று கவனித்துப் பார்த்தால், நடைமுறையில் அதிசீக்கிரமாக நிறைவேற்ற வேண்டிய நடவடிக்கைகள், அதிசீக்கிரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய அம்சத்தைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

'தமிழ்ச் சொல்லாக்கம் நிறைந்த பாஷை, சொற்செல்வம் நிறைந்த பாஷை' என்று சொல்லப்படுகிறது. தமிழ் மொழியிலே 15 ஆயிரம் வார்த்தைகள் இருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், மருத்துவநூல்களிலோ, பொறியியல் நூல்களிலோ எந்த 'டெக்னிகல்' பதங்களை எடுத்துக்கொண்டாலும், பிற பாஷையை நம்பித்தான் நாம் அறிவைத் தேடிச் செல்ல வேண்டியிருக்கிறது.

இந்நிலையில், தமிழ்மொழி இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அரசாங்க அலுவல்கள் தமிழ் மொழியிலே நடக்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. அரசாங்கமும் அதை ஒத்துக்கொள்கிறது. ஆனால், அது எவ்வளவு சீக்கிரம் நடைமுறையில் வரும் என்று எண்ணிப் பார்க்கும்பொழுது, சொல்லாக்கத்தை எவ்வளவு துரிதமாக அதிகப்படுத்துகிறோமோ, அதாவது 'Modern Ideas'களை, விஞ்ஞானப் புத்தங்களை எவ்வளவு தூரம் தமிழ் மொழியில் சீக்கிரம் உண்டாக்கி, பாஷை அபிவிருத்தி அடைகிறோமோ, அதைப் பொருத்துத்தான் இருக்கிறது.

தமிழ் ஆட்சி, தமிழ்மொழியிலே நடப்பது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிர்ஷ்டவசமாக, நம் மத்தியில் ஆங்கிலத்தில் அதிகமாக அனுபவம் வாய்ந்தவர்கள், தமிழ்மொழியிலும் சிறந்த அனுபவமுள்ள பல பெரியோர்கள் இருக்கிறார்கள். தமிழில் மாத்திரம் பாண்டித்தியம் பெற்றவர்கள் இருந்தால் போதாது. அறிவியல் சொற்களை நமக்கு நல்குவதற்குத் தமிழில் மாத்திரம் பாண்டித்தியம் பெற்றவர்கள் போதாது.

பல்துறை அறிவுசார் துறைகளிலும் ஆங்கிலத்திலும் பாண்டித்தியம் பெற்றவர்கள்தான் சொற்செல்வங்களை நமக்கு எடுத்துக்காட்ட முடியும். இம்மாதிரி சொல்லாக்கத்தைத் தமிழ் மொழியில் அதிகரிக்க நடவடிக்கைகள் அதிசீக்கிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் சர்க்காருக்கு மாத்திரம் பெரும்பங்கு உண்டு என்று நான் குறிப்பிடவில்லை. சர்க்காருக்குரிய பங்கை அவர்கள் எடுத்துக்கொண்டாலும், பெரிய பண்டிதர்கள், புலவர்கள், தமிழ் அபிமானிகள் போன்றவர்கள் இதில் அதிகம் பங்கெடுத்துக்கொண்டால், சொல்லாக்கத்தை எவ்வளவு சீக்கிரம் விரிவுபடுத்துகிறோமோ, அதைப் பொருத்து இருக்கிறது, அரசாங்கம் தமிழ் பாஷையில் நடப்பது" என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

1965 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

'Connotation of Words' என்பது, சபையிலுள்ள கனம் அங்கத்தினர் அவர்களுக்குப் புரியும் என்ற காரணத்தால், அதை நான் குறிப்பிட விரும்பவில்லை. நான் சொல்லும் ஒவ்வொன்றையும் தங்கள் மூலமாகத்தான் சபைக்குச் சொல்கிறேன். 'இந்தச் சபையில் அசம்பாவிதமாக யார் நடந்துகொண்டார்களோ, அவர்களுக்குத்தான் நான் சொல்லியது பொருந்துமே

தவிர, இந்தச் சபைக்குப் பொருந்தாது' என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தமிழ்நாட்டிலே இந்தியினுடைய ஆதிக்கம் வலுவுற்று, தமிழுக்கு ஆபத்து வரும் என்று பொதுமக்கள் உண்மையாகவேகருதி, 'Genuine Fear' அவர்களுக்கு ஏற்பட்டு, அதனால் இந்தி எதிர்ப்புப் கிளர்ச்சி இதுவரை அடைந்திராத அளவுக்குவலுவுற்றிருந்ததோ" என்றுநான் எண்ணியிருந்தேன். ஆனால், இரண்டு நாள்கள் சம்பவங்களைப் பார்க்கும்போது, 'அரசியல் காரணத்திற்காக அல்ல, ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு, வன்முறையை ஒரு முறையாகக் கொண்டு, தமிழ்நாட்டு அரசியலில் செயலாற்றுவது என்பது இப்பொழுது அதிகமாக ஆக்கம்பெற்று வருகிறது' என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது.

ஜனநாயக வாழ்வில் அக்கறையுள்ளவர்கள், ஜனநாயகப் பாங்குகளையும், சம்பிரதாயங்களையும் வளர்க்க எண்ணுகிறவர்கள், இம்மாதிரிப் போக்கை ஆதரிக்க முடியாது. அதற்கு நேர்மாறாக, இந்த மாதிரி போக்கை வளர்ச்சியுறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினால் அது தவறாக இருக்காது என்றே நான் கருதுகிறேன்.

சரித்திரம்தான் நமக்குப் பெரிய வழிகாட்டி! 'ஃபிரெஞ்சு 'ரெவல்யூஷன்' பதினெட்டாம் நூற்றாண்டிலே நடந்தது. ஜனங்கள் புரட்சி செய்தார்கள். புரட்சி செய்த அன்று, 'பாஸ்டில் ப்ரிசனை' உடைத்து, அங்கே இருந்த 'க்ரிமினெல்' களை விடுதலை செய்தார்கள். அதற்குப் பின்னால், அந்த நாட்டில் என்ன ஏற்பட்டது? நெப்போலியன் போனபார்ட் ஒரு பெரிய எதேச்சாதிகாரியாகி, அந்த நாட்டினுடைய அதிகாரத்தையே கைப்பற்றினான்.

தமிழ்நாட்டில், பிப்ரவரி 10ஆம் தேதிக்குப் பின்னால் நடந்த இரண்டு, மூன்று நாள்களினுடைய சம்பவங்களைப் பார்த்தபோது, 'இந்த நாட்டிலேயே ஆட்சி ஸ்தம்பித்துவிட்டதா? ஜனநாயக முறை தோற்றுவிட்டதா?' என்ற ஐயப்பாடு, சிந்திக்கிறவர்களுடைய மத்தியிலே பரிணமிக்க ஆரம்பித்தது. அதிர்ஷ்டவசமாக, நம்முடைய சர்க்கார், விழிப்பாக இருந்த காரணத்தினால், இரண்டு, மூன்று நாள்களிலேயே நிலைமையைச் சமாளித்துவிட்டது. ஆனால், ஜனநாயகமுறையிலே உணர்ச்சிக்குக் கட்டுப்பாடு விதித்து, விவாதத்தின்மூலம், பரிசீலனையின்மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது என்கிற அடிப்படையை மறந்த காரணத்தினாலோ என்னவோ, எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், விவாதத்திலே நம்பிக்கை வைக்காமல், உணர்ச்சியின் போக்கினைத்தூண்டக்கூடிய வகையிலே இன்றுவரையிலும் நடந்து வருகிறார்கள் என்பதை எண்ணும்போதுதான், ஜனநாயகத்தில் அக்கறையுள்ள என் போன்றவர்களுக்கு மிகுந்த வேதனையும் கவலையும் அளிக்கிறது.

எதிர்க்கட்சி இல்லாத விவாதம், 'சப்'என்றுதான் இருக்கும். ஆனால், கட்சி இல்லையே என்பதற்காக, அரசாங்கம் நின்றுவிட முடியாது என்பதை எதிர்க்கட்சியினர் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த நாட்டினுடைய ஜனநாயகப் பண்பையும், ஜனநாயக வரலாற்றையும் நல்லமுறையிலே அமைக்கவேண்டும் என்ற பொறுப்பு, ஏதோ ஆளும்கட்சிக்கு மாத்திரம்தான் உண்டு என்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் நினைத்துக்கொள்ளக் கூடாது. ஜனநாயகம் இந்த நாட்டிலே தோற்றால், அதற்கு அவர்கள்தான் அதிகப் பொறுப்பாளி என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜனநாயக சம்பிரதாயங்களை நாம் ஏற்படுத்தும்போது, ஜனநாயகத்திற்கு

ஆபத்து விளைவிக்கக்கூடிய காரியங்களைச் செய்துகொண்டே போனால், 'அவர்கள் ஜனநாயகத்தை விரும்பகிறார்களோ, இல்லையோ?' என்பதிலேகூட எனக்கு ஐயப்பாடு ஏற்படுகிறது. 'ஃப்ரெஞ்சு ரெவல்யூஷன்' பற்றி நான் குறிப்பிட்டேன். அந்தச் சரித்திரச் சான்றை நான் சுட்டிக்காட்டினேன். வன்முறைப் புரட்சிகள் தேசத்திலே ஏற்பட்டால், அது எதேச்சாதிகாரத்தில் போய் முடியும். அது, சரித்திரம் நமக்குக் காட்டுகிற மரபு. அது, சரித்திரம் நமக்குக் கற்பிக்கிற படிப்பினை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நம்முடைய ஜீவாதார உரிமைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, நமது ஒப்பற்ற தலைவர், காலஞ்சென்ற பண்டித நேரு அவர்கள், 'Democracy is our way of life' என்று சொன்னார். 'ஜனநாயகம் நம்முடைய வாழ்க்கை முறை' என்றார். அரசியல்முறை மாத்திரம் அல்ல. இது எங்களுடைய வாழ்க்கைமுறை என்று அவர்கள் சொன்னதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். யாரும் ஆட்சியாளராக இருக்கலாம். ஆனால், எல்லா மக்களும் சமசந்தர்ப்பமும் சம சூழ்நிலையும் அரசியலிலே பங்கு கொள்வதற்கான வாய்ப்பும் கொடுக்கின்ற ஜனநாயகமுறையை, நாம் சரியாகப் பயன்படுத்தாவிட்டால், கொடுங்கோல் ஆட்சி ஏற்பட்டு, சம உரிமையைப் பறிப்பதற்குரிய, ஜனங்கள் மத்தியிலே இருக்கும் உரிமைகளைப் (ப்ரிவிலேஜஸ்) பறிக்கக்கூடிய ஆட்சி முறைக்குக் கொண்டுபோய் விட்டுவிடும். ஆகவே, "அவர்கள் ஜனநாயகத்திற்கு உதவி செய்யாமல் இருப்பது மாத்திரமல்லாமல், ஜனநாயகத்திற்கே கெடுதல் விளைவிக்கின்றனர்'' என்ற குற்றச்சாட்டை இந்தச் சபையில் எதிர்க்கட்சியினர்மீது நான் சுமத்த விரும்புகிறேன்.

ஜனநாயகத்திற்குக் கெடுதல் விளைவிக்கக்கூடிய அரங்கமாக இந்தச் சபைவிளங்கமுடியுமாஎன்பதைஅவர்கள் யோசித்துப்பார்க்கவேண்டும். நாட்டிலுள்ள சிக்கலான பிரச்சினைகளைக் குறித்து விவாதித்துத் தீர்வு காண்பதற்குரிய ஆலோசனைகளை எடுத்துச்சொல்லி, எல்லோருடைய சம்மதத்தையும் பெறுவதற்கான விவாத அரங்கமாக விளங்க வேண்டிய இந்தச் சபையில், அவர்கள் இந்த மாதிரி நடந்து கொண்டது ஜனநாயகபோக்கா என்பதை, அந்த எதிர்க்கட்சி நண்பர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டுமென்று, இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, தமிழ் ஆக்கத்திற்காக அல்ல! இந்தி எதிர்ப்புக்காகவும் அல்ல! அரசியல் காரணத்திற்காக! அவர்களையும் அறியாமல், ஜனநாயகத்திற்குக் கொடுக்கப்படுகிற பேரடி என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஆகவே, இந்தி மொழி பிடிக்காமல் இருக்கலாம். இந்திமொழி குறித்துக் கருத்து வேற்றுமை இருக்கலாம், இந்திமொழி எந்தவிதமாகக் கொண்டுவர வேண்டும் என்பதிலேகூட கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால், இந்தி மொழியை இந்த நாட்டின் பொது மொழியாக ஏற்றுக்கொள்கிறவர்களும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பதையும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால், 'இந்தி வேண்டாம் என்று நான் சொல்கிறேன். ஆகவே, எல்லோருக்கும் இந்தி வேண்டாம்' என்று சொல்லக்கூடிய சூழ்நிலையைத் தமிழ்நாட்டில் அவர்கள் தோற்றுவித்தால், அது அராஜகநிலை

அல்லவா, யதேச்சாதிகாரப்போக்கு அல்லவா என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். சமீபத்தில் நாட்டில் நடந்த கிளர்ச்சி என்ன? 'தமிழுக்கு ஆபத்து வருகிறது' என்று மாணவர்களிடையே சொல்லப்பட்டது. ஆனால், அதேநேரத்தில், 'ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்றும் சொல்லப்படுகிறது! 'தமிழை ஆட்சிமொழியாக்கவேண்டும்' என்று கிளர்ச்சி இல்லை!

'ஆங்கில மொழியை இந்தியாவின் பொதுமொழியாக, இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டு' மென்று தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒருசாரார் மாணவர்கள் மத்தியிலே சொல்லிப் பயத்தை ஏற்படுத்தினார்கள். ஆங்கிலம் படித்தவர்களா, ஆங்கிலம் பயின்றவர்களா அவ்வாறு மாணவர்களைத் தூண்டினார்கள்?

இந்தி வேண்டாம் என்று சொல்லுபவர்கள் யார்? தமிழ் மாத்திரம் படித்தவர்கள்! 'தமிழுக்கு ஆபத்து வருகிறது' என்று சொன்னால், அவர்களுக்குச் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களை ஒத்துக்கொள்ளச் சொல்லவில்லை. ஆனால், ஆங்கிலம் படித்தவர்கள், ஆங்கிலம் படிக்கிறவர்கள் என்ன சொல்கிறார்கள்? 'இந்த நாட்டின் பொதுமொழி, ஆங்கிலமாக இருக்க வேண்டும்' என்று சொல்கிறார்கள்.

'ஆங்கிலத்தினால் தமிழுக்கு ஆபத்து வராது, இந்தியினால்தான் தமிழுக்கு ஆபத்து வரும்' என்ற வாதத்தை ஒத்துக் கொள்ளமுடியாது. அந்த வாதத்தை ஒத்துக்கொள்ள முடியாது என்ற காரணத்தினால்தான், விவாதத்தில் கலந்து கொள்வதாக இருந்தால், அவர்கள் சமாதானம் அடையக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். ஆகையால், தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, அரசியல் கிளர்ச்சி! தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, ஜனநாயக விரோதக் கிளர்ச்சி! தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, ஆங்கிலம் படித்தவர்களிடையே கிளர்ச்சி!

தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி, ஆங்கிலம் படிக்கின்றவர்களுடைய கிளர்ச்சி! 'ஆங்கிலம், இந்தத் தேசத்தின் பொதுமொழியாக இருக்க வேண்டுமா, இல்லையா?' என்பதை இந்த முறையில் தீர்மானிக்க முடியாது. இத்தகைய முறையைக் கையாளுவது என்றால், அது தன்னுடைய ஸ்தானத்தையே இழந்துவிடக்கூடும்! 'ஆங்கிலத்தையே வற்புறுத்தவேண்டும்' என்று நினைக்கிற நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு, ஒரு இக்கட்டான நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலைமையைச்சரியாக அரசாங்கம் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும்.

ஆளும்கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்களாகிய நாம், 'இந்திதான், இந்தத் தேசத்தின் பொது மொழி' என்பதை இன்று ஒத்துக்கொள்ளவில்லை. மகாத்மா காந்திஜீ அவர்கள், 'என்றைக்கு இந்தியைப் பொதுமொழியாகக் கொள்ளவேண்டும்' என்று சொன்னார்களோ, அன்றைக்கே தமிழ்நாடு மாத்திரம் அல்ல, இந்தத் தேசத்தின் பல்வேறு பாகங்களில் உள்ளவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்! ஆனால், இன்றைக்குத் தமிழ்நாட்டில் எதிர்ப்பு ஏற்பட்டதே என்றால், அது 'ஸிம்பதடிக் ரீ ஆக்ஷன்'.

பெங்காலில், அப்போது கிளர்ச்சி நடந்தபோது, இங்கு வ.உ.சி. அவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். இப்படித் தமிழ்நாட்டில் எது நடந்தாலும், அதன் பிரதிபலிப்பை வங்காளத்தில் காண முடியும். அப்படியே அங்கே நடப்பதின் பிரதிபலிப்பு இங்கே நடக்கும். இது சரித்திரபூர்வமானது! இங்கே நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, அங்கும் நடந்தது என்றால், அது தேசிய ஒருமைப்பாட்டு

உணர்ச்சி காரணமாக ஏற்பட்டதே! இந்த உணர்ச்சியே, தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவிகரமாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

1906இல் 'பார்ட்டிஷன் ஆப் பெங்கால்' கிளர்ச்சி அங்கே நடந்தபோது, இங்கேயும் நடந்தது என்பதை நினைவு கூர்ந்தால், இங்கே இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்தபோது, தமிழ்நாட்டு மக்களுக்கு உணர்ச்சிபூர்வமாக மதிப்பு தர பெங்காலில் நடந்தது என்பதைப் புரிந்துகொள்ளலாம்! இன்றைக்கு இந்தி பேசாத ராஜ்ஜியங்கள் என்றால் ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு, பெங்கால், மகாராஷ்ட்ரா, பஞ்சாப்! இவற்றில் உள்ளவர்கள், இன்றைக்கு இந்தியை ஏற்றுக்கொண்டுதானே இருக்கிறார்கள்? ஆகவே, இவர்கள் சொல்கிற வாதம், எவ்வளவு அபத்தமானது என்பதைப் புரிந்துகொள்ளலாம்!

பெங்காலில் நடந்தது என்றால், தமிழ்நாட்டு மக்களின் புண்பட்ட உள்ளங்களுக்குக் கொஞ்சம் ஆறுதல் அளிக்கக்கூடியதுதான் அது. ஆனால், 'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி மூலமாக, ஜனநாயகப் போக்குக்கு மாறுதல் ஏற்படுவது மாத்திரம் அல்ல! இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் அடிப்படையில், இந்த நாட்டைப் பிரிக்கச் சூழ்ச்சி நடக்கிறது' என்று சொல்ல விரும்புகிறேன். இந்தி பொதுமொழியாக வேண்டும்! இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகிற வரையில், ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்கு முதன்மை அமைச்சர் அவர்கள் இடம்கொடுத்து விட்டார்கள். ஆனால், 'ஆங்கிலம்தான் பொதுமொழியாக இருக்கவேண்டு' மென்று அவர்களை வற்புறுத்த நமக்கு என்ன உரிமை இருக்கிறது?

எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தங்கள் கருத்தை வலியுறுத்த உரிமை உண்டு. பலாத்காரத்தின் மூலமாகப் பிறர்மீது தங்கள் கருத்தைத் திணிக்க என்ன உரிமை இருக்கிறது? ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்படுவதை முறியடிக்கப் பலாத்காரத்தில் இறங்குவது என்றால், அதை நம்முடைய அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது! நம்முடைய சகோதரர்கள், எதிர்க்கட்சி 'மெம்பர்'கள், இனிமேலாவது சட்டசபையில் நடத்துகிற கிளர்ச்சியை இன்றோடு கைவிடுவார்கள் என்ற நம்பிக்கையோடு, இத்துடன் இவ்விஷயத்தை நிறுத்திக்கொள்கிறேன்.

'பட்ஜெட்' விவாதத்தின்போது, நாட்டிலே இன்று இருக்கிற சிக்கலான உணவுப் பிரச்சினை பற்றிக்கூட அவர்கள் அக்கறை காட்டவில்லை! 'க்ரைஸ் ஃபார் மூன்' என்று சொல்வார்களே, 'சந்திரன் வேண்டும்' என்று அழுவதைப்போல மொழிப் பிரச்சினையை வைத்துக் கிளர்ச்சி செய்கிறார்கள்! இன்னும், 'திருமந்திரம்' என்ற நூலை ஆதாரமாகக் காட்டி, 'பதினெட்டு மொழியும் தமிழில் இருந்துதான் வந்தன' என்றுகூடச் சொல்வார்கள்.

1965 மார்ச் 31 அன்று ஆற்றிய உரை :

கனம் உதவி சபாநாயகர் அவர்களே! 'இந்த நாட்டினுடைய அரசியல் மொழியைப் பற்றி, தமிழ்நாட்டில் ஒரு சீரான மாற்று யோசனை கொடுக்கக்கூடிய சூழ்நிலை இன்றைய விவாதத்திலும்கூட இல்லை' என்பது புலனாகிறது. இங்கே மாற்று யோசனையைக் கூறுகிற அங்கத்தினர்கள், 'நம்முடைய மொழி, ஆட்சிமொழியாக இருக்கவேண்டும்; அல்லது, ஆங்கிலமே தொடர்ந்து இந்தியாவினுடைய ஆட்சிமொழியாக இருக்க வேண்டும்' என்று சொல்லுகிற நேரத்தில், இந்தியை ஆட்சேபிக்கிறவர்களுடைய மத்தியில், ஒரு ஒற்றுமையைப் பார்க்க முடியவில்லை! அதிலிருந்து மொழிப் பிரச்சினை மிகுந்த குழப்பத்திற்கு உள்ளாகியிருக்கிறது என்பது

புலனாகிறது. அதற்கு உணர்ச்சி காரணமாக இருக்கலாம்; அல்லது தமிழ் அபிமானம் காரணமாக இருக்கலாம்; அல்லது இந்தியினால் தமிழ்நாட்டிற்கு ஒரு பெரிய ஆபத்து வந்துவிடுமோ என்ற பயம் காரணமாக இருக்கலாம்; அல்லது அரசியல் காரணமும் இருக்கலாம். ஆனால், நாம் சம்பந்தப்பட்டமட்டிலே, ஒரு உறுதியான கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

உறுதியான கொள்கை என்று சொல்லும்போது, 'பிறருடைய எண்ணங்களை அலட்சியப்படுத்தியோ, அல்லது அவர்களுடைய உணர்ச்சியைப் பற்றிக் கவலைப்படாமலோ, நாம் ஒரு கொள்கையை நிர்ணயிக்கவேண்டும்' என்று நான் சொல்லவில்லை. எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய கொள்கையை நிர்ணயிக்க முடியவில்லை. பிறருடைய பயத்தையும், அச்சத்தையும் போக்கக் கூடிய கொள்கையை நாம் உருவாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையில்தான் இப்பொழுது அகில இந்தியத் தலைவர்கள் எல்லோரும் தமிழ் நாட்டினுடைய உணர்ச்சிக்குக் கௌரவம்கொடுத்து, இதைமறுபரிசீலனை செய்கிற நேரத்தில், நாம் இந்த மொழிக் கொள்கையை விவாதிக்கிறோம்.

இதற்கு மாற்றுயோசனையாக, நாம் குறிப்பிட்டுச் சொல்வது பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியது. 'பை-லிங்குவலிஸம்'தான்! ஆங்கிலமும், இந்தியும் தொடர்ந்து இந்த நாட்டினுடைய ஆட்சிமொழியாக இருப்பதற்கு வகைசெய்வது, அந்த நிலைமை, இந்திமொழி பேசாத மக்கள் விரும்புகிற காலம் வரையிலும் என்கிற முறையிலே ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. இதற்கு உருக்கொடுப்பதற்கு அரசியல்சட்டத்தைத்திருத்தவேண்டுமா, அல்லது ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்தவேண்டுமா என்கிற வரையிலே விவாதம் இருந்தால் பயனுள்ளதாக இருந்திருக்கும்!

அதை விட்டுவிட்டு, "இந்தி, இந்தத் தேசத்தினுடைய பொதுமொழியாக ஆவதற்குத் தகுதிவாய்ந்த மொழியா? அது என்றாவது பொதுமொழியாக வரமுடியுமா? எந்தெந்த மொழிகளெல்லாம் இந்தத் தேசத்தின் பொது மொழியாக ஆவதற்கு அருகதை உள்ளதாக இருக்கின்றன? ஆங்கிலத்திற்கு அவசியம் இருக்கிறதா, இல்லையா? ஆங்கிலம் பெரிய மொழியா, அல்லவா? அந்த எல்லா மொழிகளையும் விட தமிழ்மொழி மிகப்பெரிய மொழி அல்லவா?" என்றெல்லாம் விவாதிப்பது, நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு எவ்வளவு உதவியாக இருக்கமுடியும் என்பது புரியவில்லை!

தமிழ் முக்கியமான மொழியாக இருக்கலாம்! அதற்கு மிகுந்த ஆற்றல் இருக்கலாம்! அது மிகச்செறிவுள்ள மொழியாக இருக்கலாம்! நாமும் அதன்மேல் அதிகமாகப் பற்றுள்ளவர்களாக இருக்கலாம்! அதனால், 'இந்தியாவில் உள்ள எல்லோரும் அதைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று, நாம் எப்படி வற்புறுத்துவது என்று தெரியவில்லை! அதேமாதிரியாக, ஆங்கிலம் இதுவரையிலும் உதவி வந்திருக்கலாம்! இன்னும் உதவக்கூடிய மொழியாக இருக்கலாம்!

விஞ்ஞானத்திற்கும் நுணுக்க அறிவுக்கும் அதையே பயன்படுத்த வேண்டிய காலம் இன்னும் கொஞ்சம், அல்லது அதிகக் காலமாக இருக்கலாம்! அல்லது நிரந்தரமாகவும் அமையலாம்! அதனால், ஆங்கிலம் இந்தநாட்டினுடைய அரசாங்க மொழியாக எப்படி இருக்க முடியும் என்பது புரியவில்லை. நாட்டினுடைய பொதுமொழிக்குத் தகுதியான மொழி என்றால், அது மக்கள் எவ்வளவு தூரம் அந்த மொழியைப் புரிந்துகொள்கிறார்கள் என்பதைப் பொருத்து இருக்கிறது!

மொழிக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்று மொழியினுடைய வரலாற்றில் புகுந்து சர்ச்சை செய்யாமல், பெரும்பாலான மக்கள் உணர்ந்து கொள்ளும், தெரிந்து கொள்ளும் அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்கு நடத்துகிற நிர்வாகத்தையும், மக்களையும் தொடர்பற்றநிலையில், செய்யக்கூடிய நிலைமையில் இல்லாமல், இரண்டையும் இணைத்துச் செயலாற்றக்கூடிய முறையில் இருக்கிற மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியை, நாட்டு நிர்வாக மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்கிறேன்.

ஆற்றலுக்குள்ளே போகாது, வரலாற்றினுள்ளே போகாது, அறிவு எந்தத் துறையில், எந்த மொழியின்மூலம் பெறவேண்டும் என்பதினுள் போகாது, 'நாட்டிலே பெருவாரியான மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழி' என்கிற காரணத்தினால், இந்தியைப் பொது மொழியாக ஆக்கவேண்டும் என்று சொல்கிறார்கள்! '16 கோடி மக்கள், இந்தியைப் பேசுகிறார்கள்' என்று இவர்கள் சொல்லுகிறார்கள்! சிலர் '13 கோடி' என்று சொல்லுகிறார்கள்! 'மற்றவர்கள் வேறு மொழிகள் பேசுகிறார்கள்' என்று சொல்லுகிறார்கள்! ஆகவே, 16 கோடி மக்கள் இந்தியைப் பேசுகிறார்களே தவிர, பாக்கி 28 கோடி பேர் 'இந்தி மொழியே வேண்டாம்' என்று சொல்லுவதாக உள்ள வாதத்தை எப்படி எடுத்துக்கொள்வது என்று புரியவில்லை.

1965ஆம் வருஷம் ஜனவரி மாதம் 26ஆம் தேதிமுதல், 'இந்தி வேண்டாம்' என்பதற்காகப் பலாத்கார செயல்கள் தமிழ்நாட்டில்தான் நடந்தன. ஆக, பாக்கி 28 கோடி பேர்களில், 3 கோடி தமிழர்கள் போக, பாக்கி 25 கோடிபேர்கள் கிளர்ச்சி செய்யவில்லை! அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 'எத்தனை கோடி பேர்கள் பேசுகிறார்கள்' என்பதல்ல முக்கியம். 'எவ்வளவு பேர்கள் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருக்கிறார்கள்' என்பதைக் கொள்ளவேண்டும். நாம் சம்பந்தப்பட்டவரை, இந்தியைப் புகுத்துகிறார்களா, திணிக்கிறார்களா என்பதைப் பார்க்கவேண்டும். அதைப் பற்றிச் சொன்னாலும், சிலர் புண்பட்டு விடுகிறார்கள். மாணவ சமுதாயம் அச்சம் கொண்டிருக்கிறது.

இந்தியைத் திணிக்க மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்கிறதா? இல்லையே! ஆகவே, நாடு பூராவும் 'அந்த மொழி இருக்கவேண்டும்' என்று சொல்லும்போது, 'இந்தி வேண்டாம்' என்ற கிளர்ச்சி, எவ்வளவு தூரம் தர்க்கத்திற்கும், வாதத்திற்கும் பொருந்தும் என்று புரியவில்லை. பெருவாரியான மக்கள் இந்தி பேசுகிறார்கள். இந்தி பெருவாரியான மக்களுக்குப் புரிகிறது. அவர்கள் நாட்டின் நிர்வாகம் இந்தியில் ஆக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் மத்திய சர்க்கார் செயல்படும்போது நமக்கு இடைஞ்சல்கள், இடையூறுகள் ஏற்படும் என்றால், அதற்குப் பரிகாரங்கள் தேவை. அந்தத் துறையில் நம்முடைய ஆராய்ச்சி இருக்க வேண்டுமே தவிர அதற்குப் புறம்பான மற்ற கருத்துக்களைச் சபையில் மொழிக்கொள்கையை விவாதிக்கும்போது எடுத்துரைப்பது பொருத்தமானது அல்ல என்பதைக் கனம் அங்கத்தினர் கவனிக்கவேண்டும் என்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டின் பொதுமொழி - நிர்வாகமொழி, பொதுமொழி என்று கூடச் சொல்லமாட்டேன். மக்களுக்குப் புரியும் மொழியாக இருக்கவேண்டுமென்றால் என்ன தவறு? இன்றைக்கு நாம் 'தமிழ்நாட்டிலே, தமிழிலே நிர்வாகம் நடைபெறவேண்டும்' என்று சொல்கிறோம்! ஆங்கிலத்தில் நடந்து வந்தது. ரொம்ப காலமாக அப்படி நடந்து வந்தது.

ஆங்கிலமே நிரந்தரமாகத் தமிழ்நாட்டில் ஆட்சிமொழியாக இருக்கமுடியுமா? இன்றைக்கு ஆங்கிலமே நிரந்தரமாக இருக்கவேண்டும். நம் மாணவர்கள் படிக்கவேண்டும் என்று விரும்புகிறோம். ஏன் நிர்வாகம் தமிழில் நடக்கவேண்டு மென்று விரும்புகிறோம்? அப்படிச் சொல்லும் நாம், மற்றவர்கள் அவரவர் களுடையபிராந்தியமொழியில்நிர்வாகம் நடத்தக்கூடாது என்று சொல்ல என்ன உரிமை இருக்கிறது?

சரி, பெருவாரியான மாநிலங்கள் இந்தியில் நடத்துவதாக இருந்தால், தொடர்புகொள்கிறவர்கள், இந்தியாபூராவும், மாநிலங்களில் இருக்கக் கூடியவர்கள், யூனியனுடன் தொடர்பு கொள்ள இந்தி இருக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட பிராந்திய மொழிக் கொள்கையை வற்புறுத்தினால், அதில் என்ன தவறு? நாம் அவர்களுக்கு ஆங்கிலத்தில்தான் தொடர்புகொள்ள வேண்டும் என்று சொல்ல உரிமை இல்லை.

நான் இங்கே நம்முடைய பிராந்திய மொழியாகிய தமிழ்மொழி, எல்லா அம்சங்களிலும் வரவேண்டும் என்று விரும்புகிறேன். கல்லூரிகளில் போதனா மொழியாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். அந்தவகையில், நம் பிராந்திய மொழி வளர்ச்சி அடைய வேண்டும் என்று விரும்புகிறோம். அதேபோல மற்றவர்கள், மற்ற பிராந்தியக் காரர்கள், இந்தியில் வேண்டும் என்று விரும்பினால் அதைத்தடுக்கநமக்கு என்ன உரிமை இருக்கிறது? பெருவாரியான மக்கள், பிரதேசங்கள், அது தேசிய மொழியாக இருக்கவேண்டும் என்று விரும்பும்போது, அது தானாகவே மலர்கிறது. அது நம்மீது திணிக்கப்படு கிறதா என்றுதான் நாம் பார்க்கவேண்டும்.

அந்தந்தப் பிராந்திய மக்கள், அந்தந்தப் பகுதி மக்கள், தங்கள் மொழி பற்றி அக்கறைகொள்வது இயல்பே! அதை ஒத்துக்கொள்ளும்போது, பெருவாரியான மக்கள், இந்திமொழி வேண்டும் என்றால், அதை எப்படித் தடைசெய்ய முடியும்? 16 கோடி மக்கள், அந்த மொழியைப் பேசுகிறார்கள் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன்பிறகு பஞ்சாபில், பீகாரில், மகாராஷ்ட்ராவில், இந்தியை ஒத்துக் கொள்கிறார்கள். அவர்களெல்லாம் ஒத்துக்கொண்டு இந்தியாவின் பொது மொழியாக இருக்கவேண்டும் என்று, அது சீக்கிரமாகப் பரவவேண்டும் என்று விரும்பும்போது, நாம் யார் அதைப் பரவக்கூடாது என்று சொல்ல? அந்த உரிமை'நமக்குக் கிடையாது.

இன்னொரு கேள்வி கேட்கப்பட்டது. எத்தனைபேர்கள் தமிழ்நாட்டில் இந்தி படிக்கிறார்கள் என்று! இந்தியைத் தமிழ்நாட்டில் படிக்கவில்லை என்று சொன்னார்கள். வருஷம் ஒன்றுக்கு, ஒரு லட்சம்பேர் படித்துப் பட்டம் பெறுகிறார்கள். நாம் விரும்பாமல் இருக்கலாம். ஆனால், விரும்புகிறவர்கள் இருக்கிறார்கள்! வருங்காலச் சமுதாயம் அதைக் கற்றுக்கொள்வதில் ஈடுபட்டிருக் கிறது. அதை மறுக்க முடியாது.

இங்கே தொடுத்திருக்கிற மாற்றுக் கட்சி அன்பர்களுடைய வாதங்கள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ''இந்தி ஆட்சிமொழியாவதால், இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்புபோன்ற வாழ்க்கை நிலைமை, பெரிதும் பாதிக்கப்படுகிறது" என்பது ஒன்று. அது இன்றைக்குச் சிந்தனையில்இருக்கிறது. வேலைவாய்ப்பு குறையும் என்றால், அதற்கு வழி 'கோட்டா சிஸ்டத்'தை ஒத்துக்கொள்ள வேண்டும்.

MAHALAKSHMI COLLEGE FOR WOMEN
LIBRARY
TUTICORIN

'நாங்கள் வேண்டுகிற ஆங்கில பாஷையில்தான் அகில இந்தியத் தேர்வுகள் நடத்தவேண்டும்! நாங்கள் வெற்றி பெற்றுக்கொண்டு போகிறோம்' என்று சொல்வதனால், அது எப்படிப் பொருந்தும்? பிராந்திய மொழியில் யு.பி.எஸ்.ஸி. தேர்வுகள் இருக்கவேண்டும் என்பதை ஒத்துக்கொண்டால் எவ்வளவு வேலைவாய்ப்பு கொடுக்கமுடியும்? அதற்குத்தான் 'பாபுலேஷன் பேஸிஸி'ல் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள்.

வேலைவாய்ப்பு பெறவேண்டும் என்றால் 'கோட்டா சிஸ்டத்'தை ஒத்துக்கொள்ளவேண்டும். 'கோட்டா சிஸ்டத்'தை வற்புறுத்துகிறார்கள். ஏன்? மொழிக்கொள்கையால் வேலைவாய்ப்பு போகிறது என்று நாம் சொன்னால், அவர்கள் அதை மாறாமல் இருந்தால், தங்கள் வேலைவாய்ப்பு குறைகிறது என்று சொல்லுகிறார்கள். 'ஆங்கிலம் தொடர்ந்து இருந்தால், எங்களுக்கு வேலைவாய்ப்பு பாதிக்கிறது' என்று வடநாட்டினர் சொல்லுகிறார்கள்.

நாம், 'ஆங்கிலம் போனால், வேலைவாய்ப்பு பாதிக்கப்படுகிறது' என்றுசொன்னால், 'ஆங்கிலம் இருப்பதால் அதிக வேலைவாய்ப்பு கிடைக்கிறது' என்றுதானே அர்த்தம்? எதிர்க்கட்சிகள் அதைச் சொல்லவேண்டும். அந்த 'ஆர்கியுமெண்டை'டைச் சொல்லி வேலைவாய்ப்பு பாதிக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு அதிக வேலைவாய்ப்பு இருக்கிறது. அது போகிறது என்றுதானே அர்த்தம். யாரையும் பாதிக்காதமுறையில், எல்லோருக்கும் 'கோட்டா சிஸ்டம்' என்கிறார்கள். 'கோட்டா சிஸ்டத்'தை ஒத்துக்கொள்ளவேண்டும். இதைப்பற்றிக் கனம் அங்கத்தினர்கள் யாரும் பேசவில்லை.

அறித்து, "இந்தி ஆழ்ந்த முதிர்ந்த, தெளிந்த, பொருள் சிறந்த, சொல்வளம் நிறை மொழியாகவும், எக்காலத்திலும், எப்பகுதியிலும் எவர் ஆண்டபோதும் ஆட்சிமொழியாகவிளங்காத ஒரு மொழி" என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரணங்களால், இந்தி மொழி எப்படிப் பொதுமொழியாக இருக்கக்கூடாது என்று சொல்லத்தக்க 'ஆர்க்யூமெண்டா'க ஆகும் என்பதைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. பலமக்கள் பேசக்கூடிய மொழி அது! பல பகுதி மக்களுக்குப் புரியக்கூடிய மொழி அது!

இன்றைக்கு ஆங்கிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள், ஆங்கிலம் மைனஸ் 'ஸாக்ஸன்', ஆங்கிலம் மைனஸ் 'டேனிஷ்', ஆங்கிலம் மைனஸ் 'லாடின்', ஆங்கிலம் மைனஸ் 'அதர் லாங்க்வேஜஸ்' (Other languages) என்ன ஆகும்? ஆகவே, ஒரு மொழி வளப்பட்டதாக இருக்கவேண்டும் என்று சொன்னால், அது மற்ற மொழிகளிலிருந்து எடுத்துக்கொண்டு வளரக்கூடியதாக இருக்கவேண்டும். இன்றைக்கு 'இங்கிலீஷ் லிட்ரேச்சர் ஹிஸ்டரி'யை எடுத்துப்பார்த்தால், அவ்வளவு மொழிகளையும் சேர்த்துக்கொண்ட மொழி அது. இங்கே என்ன பார்க்கிறோம்? நாம் சிறப்பு, 'ழ'கரத்தமிழாக இருக்கவேண்டும் என்கிறோம். (குறுக்கீடு)

இங்கு தமிழ்ச்சங்கமே நடக்குமே என்று பார்த்தேன். ஆக, சிறப்புத் தமிழ், தனித்தமிழ்தான் வேண்டும் என்று சொல்லுகிறோம். மறைமலையடிகளால் அப்படிப்பட்ட தமிழ் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அப்படிப்பட்ட சிறந்த செறிவுள்ள 'பாஷை' பிறமொழிகளை ஏற்றுக்கொள்ளாத மொழியாக இருக்கிறது. எதைக் காரணம் காட்டி இந்தி பொதுமொழி ஆகக்கூடாது என்கிறார்களோ, அந்தக் காரணத்தைக் காட்டியே, இந்தி பொதுமொழியாக

வேண்டும் என்று நான் சொல்கிறேன். பிற மொழிகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய பாஷையாக ஆங்கிலம் இருப்பதால்தான், அது சிறந்த மொழியாக வளர்ந்திருக்கிறது. அதேபோன்று, பிற மொழிகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய, பிற கலாச்சாரச் சொற்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய, வளமுள்ள பாஷையாக வரக்கூடிய வாய்ப்பு இந்திமொழிக்கு அதிகமாக இருப்பதால் இந்தி மொழியானது நம் தேசத்தின் பொதுமொழியாக இருக்கலாம் என்று நான் சொல்கிறேன்.

அடுத்து, "அகில உலக மொழியாக விளங்கும் ஆங்கிலமே தொடர்ந்து நம் ஆட்சிமொழியாக இருக்குமானால், இந்திய அளவில் மட்டுமன்றி, உலக அளவிலும் பயன் விளைவிக்கக்கூடும்" என்ற வகையிலும் திருத்தம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆங்கிலம் தொடர்ந்து நமக்கு 'கன்வீனியெண்ட்' ஆக இருக்கலாம் நமக்கு அதில் விருப்பம் இருக்கலாம்; ஆங்கில மோகம் நமக்கு இருக்கலாம். அதைத் தப்பு என்று நான் சொல்லவில்லை. ஆனாலும், பிற நாடுகளில் ஆங்கிலத்தின் மூலமாக அல்லாமலேயே 'சயின்ஸ்', 'டெக்னாலஜி' போன்றவற்றைப் படித்துச் சிறந்த நிலையை அடைந்திருப்பதையும் நாம் பார்க்கத்தான் செய்கிறோம்.

ஜப்பானிலும் ருஷ்யாவிலும் அந்தந்தத் தேசத்தின் மொழியிலேயே 'சயின்ஸ்', 'டெக்னாலஜி' போன்ற வற்றைப் படிக்கிறார்கள். அவர்கள்கூட ஆங்கிலம் படிக்கிறார்கள் என்றால், ஆங்கிலத்தையும் ஒரு பாஷையாக எடுத்துக்கொண்டு படிக்கலாம். ஆனால், ஆங்கிலத்தின்மூலமாகப் படித்துத்தான் விஞ்ஞானம், 'டெக்னாலஜி' போன்ற துறைகளில் அவர்கள் முன்னேறி இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது.

என்னைக் கேட்டால், 'Originality' இல்லாமற்போனதற்குக் காரணமே ஆங்கிலத்தின் பிராதான்யம் என்றுதான் நான் நினைக்கிறேன். நம்மவர்களுக்கு ஏன் 'ஒரிஜினாலிடி' இல்லை என்று கேட்டால், 'நம்முடைய சொந்த மொழியில் விஞ்ஞானம், பொறியியல் நூல்களைப் படிக்காததன் காரணமாகத்தான் 'ஒரிஜினாலிடி' இல்லை என்று மொழி வல்லுநர்கள் (Language Experts) அத்தனைபேரும் சொல்கிறார்கள். அதற்கு நான் வரவில்லை! நமக்கு ஆங்கில மோகம் அதிகமாக இருக்கிறது என்பதுதான் இந்தத் திருத்தத்திலிருந்து தெரிகிறது.

ஆகவே, தொடர்ந்து ஆங்கிலமே இந்த தேசத்தின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று ஒரு சிலர் சொல் கிறார்கள்.

"பதினான்கு மொழிகளும் தேசிய மொழியாக இருக்கவேண்டும்" என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் திருத்தம் கொடுத்திருக் கிறார்கள். பதினான்கு மொழிகளும் தேசிய மொழி ஆகப் போவதில்லை. 'ஆங்கிலமே, நிரந்தரமாகத் தேசிய மொழியாக இருக்கவேண்டும்' என்கிற கருத்துக்கு Indirect Support கொடுப்ப தாகத்தான் அந்த வாதம் இருக்கிறது.

ஆங்கிலம் நிரந்தரமாகக்கூட தமிழ்நாட்டில் இருக்கவேண்டும் என்று சொல்வதற்கு உரிமை உண்டு. ஆனால், இந்தியா முழுமைக்கும் ஆங்கிலம்தான் இருக்க வேண்டுமென்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்று எனக்குத் தெரியவில்லை என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.



இந்தி பிரசார சபாவில்...




பி.வி.நரசிம்மராவ், ஆஞ்சநேய சர்மா ஆகியோருடன்
ஏ.பி.சி.வீரபாகு மற்றும் இந்தி பிரச்சார சபாவின்
செயற்குழு உறுப்பினர்கள்



சென்னை இந்தி பிரச்சார சபாவின் 1979ஆம் ஆண்டின் பட்டமளிப்பு விழாவில்
கர்நாடக ஆளுநர் கோவிந்த நாராயணன், பி.வி.நரசிம்மராவ் ஆகியோருடன்
ஏ.பி.சி.வீரபாகு மற்றும் சபா குழு உறுப்பினர்கள்

இந்தி பிரசார சபாவில்...





சென்னை இந்தி பிரச்சார சபாவின் 1979ஆம் ஆண்டின் பட்டமளிப்பு விழாவில் கர்நாடக ஆளுநர் கோவிந்த நாராயணன், பி.வி.நரசிம்மராவ் ஆகியோருடன் ஏ.பி.சி.வீரபாகு மற்றும் சபா குழு உறுப்பினர்கள்.



சென்னையில் தக்ஷிண பாரத இந்தி பிரச்சார சபாவின் வைர விழா நிகழ்ச்சியின்போது பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய், தமிழக ஆளுநர் பிரபு தாஸ் பட்வாரி மற்றும் பி.வி.நரசிம்மராவ் ஆகியோர் முன்னிலையில் சபாவின் துணைத் தலைவர் ஏ.பி.சி.வீரபாகு உரையாற்றுகிறார்



சென்னையில் தக்ஷிண பாரத இந்தி பிரச்சார சபா விழாவில் கவிஞர் கண்ணதாசனை வரவேற்கும் சபாவின் துணைத்தலைவர் ஏ.பி.சி.வீரபாகு

உள்ளாட்சிமுறை தொடர்பாக ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்



நம்நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும், ஆட்சிமுறையில் பல்வேறு நிலைகளில், ஆங்கிலேயர்கள் மாற்றி அமைத்த நடைமுறைகளையே பின்பற்றி வந்த நிலையில், எதற்கெடுத்தாலும், சிற்றூர்ப் பிரச்சினைகளுக்கும் தலைநகர் நோக்கி வரவேண்டிய நிலையுள்ளதைப் போக்கி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள, அவ்வப்பகுதி மக்களை ஆயத்தப்படுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தி உள்ளாட்சிமுறையை வலியுறுத்திப் பேசியுள்ளார்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம் உரையில் உள்ளாட்சித் தேர்வு முறையிலும், உள்ளாட்சிக் குழுவின் ஆயுள்காலத்திலும், உள்ளாட்சிக்குத் தேவையான, நிதிவசதி குறித்தும் தெளிவுபட தீர்க்கமாகச் சிந்தித்துச் சீர்திருத்த நெறிமுறைகளை விளக்கியுள்ளார். பிற்காலத்தில் அறிமுகப்படுத்தப் பெற்ற பஞ்சாயத்துராஜ் அமைந்ததற்கு அவர் உரையே அடிப்படையாக அமைந்தது போல அவர் உரை அமைந்துள்ளது நோக்கத்தக்கதாகும்.

1957 நவம்பர் 4 அன்று ஆற்றிய உரை :

சட்டமன்றத் தலைவர்கள் அவர்களே! மக்கள் கையில் அதிகாரம் மாறுவதற்கு விரிந்தமுறையில் இந்த வெள்ளை அறிக்கையைச் சர்க்கார் கொண்டுவந்ததை நான் வரவேற்கிறேன். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்,

அபிவிருத்திக்கெளன்சில், முனிசிபாலிட்டிகள், கார்பொரேஷன் என்றவகையிலே இதைப்பல நோக்கத்தோடு ஆராயவேண்டிய அவசியமிருக்கிறது. பஞ்சாயத்தைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் பலவிதமாகக் கூறியிருக்கிறார்கள். அதில் நேர்முகமாகத் தலைவர் தேர்தல் இப்பொழுது நடைபெறுகிறது. அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால், பஞ்சாயத்தில் இருக்கக் கூடிய இதர அங்கத்தினர்களுக்கு எவ்வித வேலையும் இல்லாமல் போய்விடுகிறது.

நேர்முகத் தேர்தல் மூலமாகத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதன் காரணமாக, அவர்கள் ஏதோ தாங்கள்தான் ஜனங்களுக்குப் பொறுப்பாளி, தாங்கள்தான் பொறுப்புள்ளவர்கள் என்று நினைக்கிறார்கள். நேர்முகத் தேர்தல்மூலம் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று இருந்தால், மற்ற அங்கத்தினர்கள் இல்லாமல் ஒரு தலைவருடைய பஞ்சாயத்தாகவே அமைத்துக்கொள்ளலாம். ஆகவே, நேர்முகத் தேர்தல் இல்லாமல் முனிசிபாலிட்டிகளில், கார்ப்பரேஷன் முதலிய மற்ற ஸ்தாபனங்களில் இருக்கின்ற (இன்டேரைக்ட்) 'Indirect' தேர்தல்போன்ற ஒரு புதியமுறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு முன்னால், 'பாலட் பேப்பர்' முறையில் புதிய தேர்தல்முறை இருக்க வேண்டும். இவ்விதமான தேர்தல் நடத்துவதற்கு எந்தவிதமான தடங்கல் இருந்தாலும், இதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு, தனி மனிதனுடைய சுதந்திரத்தைப் பறிக்கக்கூடிய முறையில் இருக்கிற பகீரங்க தேர்தல்முறையை மாற்றிப் புதிய தேர்தல் முறையைப் புகுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்தப் பஞ்சாயத்துகளுக்கு 5 வருஷகாலம் ஆயுள் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் தரப்பில் இன்று இதற்குக் காரணம் சொல்லப்படுவது, இதனுடைய ஆயுட்காலம் குறைவாக இருந்தால் தேர்தல்மூலம் கிராமங்களில் இருக்கின்ற பல கட்சிகளிடையே மனஸ்தாபங்கள் அதிகமாக ஏற்படுகின்றது. ஆகவே, இதற்கு ஒரு பரிகாரம் ஏற்படுத்துவதற்காக இவ்விதமான காலத்தை நீட்டி வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்விதம், இந்த 5 வருஷகாலம் என்றிருப்பதைத் தற்காலத்திற்கு வேண்டுமென்றால் வைத்துக்கொள்வதில் ஆட்சேபனை ஒன்றுமில்லை. ஆனால், அதிக காலம் இப்படியே நீண்டுகொண்டு இருக்கமுடியாது. குறிப்பிட்ட ஒரு மூன்று வருஷ காலத்தைத்தான் இதற்கு ஆயுட்காலமாக வைக்கமுடியும்.

அதோடு, பஞ்சாயத்துக் கிராமப் பகுதிகளில், முக்கியமாக இருக்கக் கூடிய விவசாய வேலைகளுக்கு இந்தப் பஞ்சாயத்து, பெரும் பொறுப்பாக இருக்கவேண்டும். விவசாய மராமத்து வேலைகள், புதிய திட்டங்கள் முதலியவற்றை நிறைவேற்றுவதற்கு இந்தப் பஞ்சாயத்துகளுக்குச் சக்தியிருக்க வேண்டும். அதற்கு நிதிநிலைமை அவசியமாக இருக்கவேண்டியிருக்கிறது. இதற்குவேண்டுமானால், நமது மாகாணத்திற்கு நில வரியாகக் கிடைக்கும் 4 கோடி ரூபாயைப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கலாம் என்றுதான் நான் சொல்வேன். இந்த 4 கோடி ரூபாய் நமது மொத்த வருமானமான 50 கோடியில் ஒரு பெரும் பகுதியாகக் கருதமுடியாது. நிலவரம்பு, உச்சபட்சவரம்பு நிர்ணயிக்கும்போது, இந்த நிலைமை எப்படியும் மாறித்தான் ஆகவேண்டும். ஆகவே, அந்தப் பிராந்தியத்திலிருந்து கிடைக்கும் நிலவரியை அந்தந்தப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுத்து விடுவதுதான் நல்லமுறையாக இருக்கும்.

பஞ்சாயத்தின் நிர்வாகம் நல்ல

முறையில் இருக்கவேண்டுமானால், இந்த விதத்தில் நிதி உதவி ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே, இதை ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாகப் பஞ்சாயத்து ஜில்லா முறையை மாற்றி, ஜில்லா அபிவிருத்திக் கவுன்ஸிலாக்க வேண்டுமென்று தீர்மானித்து இருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் என்றிருந்தால், ஜில்லா போர்டு அவசிய மில்லை என்றுதான் நானும் கருதுகிறேன். ஆனால், ஜில்லா நிர்வாகம் மாற்றப் பட்டால், சில நிர்வாகக் காரியங்களுக்கு 'மதராஸு'க்கு வரவேண்டிய நிலைமை ஏற்படும். அதிலும் குறிப்பாகக் கன்னியாகுமரி நண்பர்களுக்கு இது மிகவும் கஷ்டமாக இருக்கும்.

ஆகவே, இந்த நிர்வாகக் காரியங் களுக்கு எல்லாம், ஒரு 'ரீஜினல் யூனிட்டு' அவசியமாக வேண்டியிருக்கிறது. அபிவிருத்திக் கவுன்சிலில் அதிக பங்கு கொள்வதற்குச் சட்டசபை அங்கத்தினர் களுக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் பெரும்பங்கு கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். ஆனால், இந்தமுறை எவ்வளவு காலத்திற்கு நிரந்தரமாக இருக்கும் என்பது சந்தேகமாக இருக்கிறது. நம்முடைய பிராந்தியத்தன்மையைப் பிரித்திருப்பது, இங்கிலாந்தின் தன்மையைப்போல் பிரிந்திருப்பதாக வெள்ளை அறிக்கை யிலிருந்து தெரிகிறது. பாரீஸ், பரோ, கௌண்டி கௌன்ஸில் என்ற அடிப்படையில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் என்றமுறையில் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால், நமது நாட்டிற்கும் இங்கிலாந்து தேசத்திற்கும் அடிப்படையான சில வித்தியாசங்கள் இருக்கின்றன. இங்கிலாந்து தேசம், குறுகிய தேசம். குறுகிய எல்லை விவகாரம் உள்ள ஒரு தேசம், அந்தத் தேசத்தின் அனுபவத்தை அப்படியே நாம் ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியமில்லை.

நம்முடைய பஞ்சாயத்துமுறைதான் பல நாடுகளுக்குப் போய் இருக்கிறது என்று சொல்லலாம். பஞ்சாயத்து என்று சொல்லப்படுவது 'ஐந்துபேர்கொண்ட குழு' என்று புராதனமாகவே சோழர் காலத்தில் இருந்து வந்திருக்கிறது. ஆகவே, நமக்கேபழைய அனுபவங்கள் இருக்கிறது. ஆகவே, நீண்டகாலமாகவே ஜில்லா 'டெவலப்மெண்ட் கவுன்சில்' செயல்பட முடியாதநிலைமையில் இருந்திருக்கிறது. இதற்கு இப்போது, 1962 என்று ஒரு 'டார்ஜட்' நியதியைத் தற்காலிகமாக வைத்திருக்கிறார்கள். ஆனால், மதுவிலக்கு ஆலோசனை 'போர்டு' போன்ற 'அட்வைஸரி போர்டுகள்' நீடித்திருக் கலாம். 'அட்வைஸரி போர்'டில் அதிகாரப் பற்றற்றவர்கள் தலைவர்களாக இருக்கலாம் என்று சொல்லப்பட்டது. அவ்விதம் இருப்பது நல்லது. 'அட்வைஸரி போர்'டில் அதிகாரப் பற்றற்றவர்கள் இருப்பதால் பல சங்கடங்களும் ஏற்படுகிறது. ஆகவே, ஜில்லா 'அட்வைஸர்' அதிகாரப் பற்றற்றவர்கள் இருப்பது நல்லது அல்ல என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்ததாகப் பஞ்சாயத்து 'யூனியன்' சிறந்தமுறையாகத்தான் இருக்கிறது. அதன் ஆயுட்காலம், பஞ்சாயத்துகளுக்கு நிர்ணயித்திருப்பது போலவே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கிராமப் பஞ்சாயத்து 5 வருஷம் என்று கொடுக்கும்போது, பஞ்சாயத்து யூனியன் களுக்கும் 5 வருஷம் என்று கொடுப்பது மக்களுக்குப் பிரயோஜனமாக இருக்காது. அதற்கு மாற்றமாக இருக்கக்கூடிய அங்கத்தினர்களில் ஐந்தில் ஒரு பாகம் என்றோ, அல்லது மூன்றில் ஒருபாகம் என்றோ 'ரிட்டயர்' ஆகக்கூடிய விதத்தில் ஆயுட்காலம் அமைக்கப்பட்டால் ஐந்து வருடத்திற்கு ஒரு தடவை, அல்லது மூன்று வருடத்திற்கு ஒரு தடவை மாற்றி

அமைக்கமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, "இதனுடைய நிர்வாகத் தைப்பற்றி, மேற்பார்வை செய்வதற்கு 'ரெவின்யூ' அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும்' என்று நிர்ணயித் திருப்பது நல்லதல்ல. இந்த அதிகாரத்தை ஸ்தல ஸ்தாபன அதிகாரியிடமே கொடுக்க வேண்டும். ஜனநாயகத்தில், ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள், ரொம்பவும் முக்கியமானர்கள். 'ரெவின்யூ' அதிகாரிகள் ஜனநாயக ரீதியில் நிர்வாகத்தைப் பார்க்க முடியாது. தற்போது வேண்டுமானால், பஞ்சாயத்து நிர்வாகச் சிக்கல்களுக்காக வேண்டி இவர்களிடம் தற்காலிகமாகக் கொடுத்து இருந்தாலும், இதை மாற்றி ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளிடமே கொடுக்கவேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதைத் தவிர, முனிசிபாலிட்டியைப் பற்றிச் சில முக்கியமான கருத்துக்கள் சொல்லவேண்டியிருக்கிறது. அவைகளுக்கு 5 வருடம் ஆயுட்காலம் என்று வைத்திருப்பது விரும்பத்தக்கதல்ல. இப்போது இருக்கிற 3 வருடகாலம் என்றிருப்பதை மாற்றி, 5 வருடம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், "அடுத்த தேர்தல் வரும்போது, இந்தத் தேர்தலும் சேர்ந்ததாக இருக்கும்" என்று சொல்லப்படுகிறது. அவ்விதமாகச் சொல்லப்படகிற காரணம் அவ்வளவு போதுமான காரணம் அல்ல என்றுதான் நான் சொல்லுவேன். அடுத்த நவம்பரில், முனிசிபாலிட்டிகளின் ஆயுட்காலம் முடிவடைகிறது. 1961வது வருஷத்தில் முனிசிபாலிட்டிகளுக்குத் தேர்தல் நடந்துவிடும். பொதுத்தேர்தல் 1962இல் நடக்கும். ஆகவே, இந்தக் காரணங்கள் சொல்லப்பட்டிருப்பது சரியல்ல. ஆகவே, 3 வருஷம் என்றிருப்பது போதுமென்றே நினைக்கிறேன். அதைச் சர்க்கார் ஒத்துக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

சேர்மேன்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கவேண்டும் என்பதில் எந்த அபிப்பிராய வித்தியாசமும் இல்லை. காலத்தினுடைய போக்கை உத்தேசித்து, மக்களுடைய பங்கு இதில் எவ்விதம் இருக்கிறது என்பதை ஆலோசித்து அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும். இப்பொழுதெல்லாம், கீறல் (கைநாட்டு) போடுகிறவர்கள்கூட தலைவர்களாக இருந்து வருகிறார்கள் என்று சொல்லப் பட்டது. இவர்கள் பொதுஜனங்களுடைய பிரதிநிதியாக இருப்பதால், சேர்மேன் களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று நான் நினைக்கிறேன்.

இப்போது 'ஹெல்த் ஆபீசரா'க இருப்பதை 'ரீஜனல் ஆபீசரா'க இருந்தால் போதுமென்று ஆலோசனை சொல்லப் பட்டிருக்கிறது. இப்போது (பாப்பு-லேஷன்) ஜனத்தொகை அடிப்படை யைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்பட்டி ருப்பதாகத் தெரிகிறது. ஏரியாவை வைத்துக் கணக்கிடப்படவில்லை என்று தெரிகிறது. ஒரு டவுனுக்குள், அதாவது ஒரு மைல், இரண்டு மைலுக்குள்ளாக ஏராளமான மக்கள் வசிக்கும்போது இவ்விதம் 'ரீஜனல் ஹெல்த் ஆபீசரா'க வைத்திருப்பது போதாது, தனித்தனியாக 'ஹெல்த் ஆபீசர்' இருக்கவேண்டியதைச் சர்க்கார் உணரவேண்டும். விஸ்தாரமான பிரதேசங்களில் இந்த 'ரீஜனல் ஆபீசர்' என்றிருப்பது பொருத்தமில்லை என்றுதான் நினைக்கிறேன்.

ஆகவே, நெருக்கமான இடங்களில், அதிகமாக 'ஹெல்த் ஆபீசர்'கள் இருக்க வேண்டியது மிக அவசியம். ஆகவே, இந்த 'ரீஜனல் ஆபீசர்' என்ற முறையில் வைத்திருப்பதை மாற்றி, 'ஹெல்த் ஆபீசர்' களைக் கூடுதலாக வைக்கவேண்டும் என்றும்அதற்காக முடிவுகளைச் சர்க்கார் எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1960 மார்ச் 12 அன்று ஆற்றிய உரை :

பஞ்சாயத்துகளுக்கு விரிவான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நாம் இதில் ஒரு கொள்கை மாற்றம் செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. பஞ்சாயத்துகளில் வருமானத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆகவே, நிலத் தீர்வையைப் பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்குவது என்ற கொள்கையை ஆரம்பத்திலிருந்தே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு நிலத்தீர்வை கொடுப்பதனால், நமக்குக் கஷ்டம் ஏற்படாது. இந்த 84 கோடி ரூபாய் நிலத் தீர்வையைப் பஞ்சாயத்துக்குக் கொடுப்பதனால் நஷ்டம் ஏற்படாது. இந்தக் கொள்கை மாற்றத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு முடித்து கொள்கிறேன்.

1961 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

பஞ்சாயத்துக்களுக்கு ஏராளமான 'பவர்ஸ்' கொடுத்து இருக்கிறோம். ஏராளமான பொறுப்புகளையும் கொடுத்திருக்கிறோம். விவசாய முன்னேற்றத்திற்கு வசதியளிக்க, நிதி வசதி செய்து கொடுக்க நில வரியிலிருந்து பேர்பாதி கொடுப்பதாகச் சொல்லுகிறோம். நில வரி பூராவையும் கொடுத்தால் நல்லதாக இருக்கும். சென்னை மாகாணத்தில் ஆறு கோடி, ஏழு கோடி கிடைக்கும். அது பூர்ணமாகப் பஞ்சாயத்துகளுக்கு அளிக்கப்பட்டால், அவர்கள் பொறுப்பை வகிக்க நல்ல ஊக்கமளித்ததாக இருக்கும். ஆகவே, நில வரியைப் பூரணமாகப் பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

நீர்வளம்

பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்பே வள்ளுவர், "நீரின்றி அமையாது உலகு" என்று கூறினார். ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், நாட்டில் பெருகிவரும் மக்கள் தொகையை மனத்தில்கொண்டு, எதிர்காலத் தேவை குறித்துச் சிந்தித்து, தண்ணீர் தேவையை நிறைவு செய்வதற்குப் பல திட்டங்களைத் தம் உரையில் குறித்துள்ளார். கங்கை, காவிரி இணைப்பு, மாநில நதிகளை இணைப்பது, சிறு அணைகளைக் கட்டுவது எனப் பல திட்டங்களை நம் மாநிலப் பகுதிகளில், எங்கெங்கு அமைத்தல் அவசியம் என்பதை வலியுறுத்தியுள்ளார். தமிழகத்தில் உள்ள குளங்களை ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் பராமரித்துப் பாதுகாக்க உரிய நெறிமுறைகளையும் கூறியுள்ளார். இன்றைய நிலையில் இந்த உரையை ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்களும் பொதுமக்களும் ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பார்த்துத் தங்கள் குறைகளை நிவர்த்திசெய்து கொள்வார்களானால், நாம் இன்றைக்கு எதிர்கொள்ளும் தண்ணீர்ப் பிரச்சினை, இனி எதிர்கொள்ளப்போகும் தண்ணீர் தொடர்பான பிரச்சினைகள் இல்லாமல் போகும் என்பது உறுதி.

1959 பிப்ரவரி 5 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு ஆற்றிய உரை :

கனம் உதவி சபாநாயகர் அவர்களே! 'இப்பொழுது ஜனத்தொகையின் அடிப்படையில் நம்முடைய மாகாணத்திற்குக் கிடைக்கவேண்டிய சலுகை மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கிறது' என்று 'செட்டிநாடு ராஜா' என்ற முத்தையா செட்டியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். உத்தரப்பிரதேசம்

போன்ற மாகாணங்கள் அவர்களுடைய ஜனத்தொகைக்கு ஏற்பச் சலுகையைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், ஒரு காரியத்தைமட்டும் நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். அதாவது மற்ற மாகாணங்களில் இருக்கும் நீர்த் தேக்கங்களை, அவர்கள் எந்த அளவுக்கு உபயோகப்படுத்துகிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும்.

பக்ராநங்கலை எடுத்துக் கொண்டாலும்கூட அதன்மூலம் பூரா நீரையும் உபயோகப்படுத்திக் கொள்ள வில்லை. பத்து அல்லது பதினைந்து சதமானம்தான் அவர்கள் நீர்த்தேக்கங் களை உபயோகப்படுத்துகிறார்கள். நாம் அப்படியல்ல, பூரா அளவையும் உபயோகப்படுத்துகிறோம். மற்றவர்கள் இருக்கின்ற நீர் வளங்களைக் காட்டி, அதற்குத் தகுந்தபடி மத்திய சர்க்காரிடத் திலிருந்து சலுகையைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால், நீர்த் தேக்கங் களின்மூலம் ஏற்படுகின்ற சாதனைகளைக் காட்டிநாம் மத்திய சர்க்காரிடமிருந்து சலுகையைப் பெறவேண்டும். இதை நாம் சுட்டிக்காட்ட வேண்டும். நாம் நீர்த்தேக்கங்களைப் பூராவும், பூரணமாக உபயோகப்படுத்து கிறோம். மற்றவர்கள், அவ்விதம் உபயோகப்படுத்துவதில்லை. ஆகவே, இந்தமுறையில்பார்க்கும்போது, செய்திருக்கின்ற சாதனைகளை எடுத்துக் கொண்டு பார்த்தால், நமக்கு அதிகமான சலுகைசெய்யமத்தியசர்க்கார் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; இந்தத் தேக்கங்களின் மூலமாக நன்மை பெறுகிறவர்களிட மிருந்து ஏதாவது 'சார்ஜ்' வசூல்செய்ய வேண்டுமென்றால் அதையும்கூட கொடுக்க மக்கள் தயாராக இருக் கிறார்கள். இதெல்லாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கோ, அல்லது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கோ ஒதுக்கியிருக்கும் பணத்திலிருந்து, இந்த நீர்த்தேக்கங்களுக்கு ஒதுக்குவது என்பது தவறாகத்தான் முடியும் என்று நான்நினைக்கிறேன். ஆகவே, நம்முடைய ஜனத்தொகையைக் கணக்கெடுக்காமல், நாம் செய்திருக்கும் சாதனைகளைக் கணக்கிலெடுத்து, அவைகளைச் சுட்டிக்காட்டி, அதன்மூலம் மத்திய சர்க்காரிடமிருந்து அதிகமான சலுகைகளைப் பெற்று, நமது தமிழ்நாட்டில் பெரிய நீர்த்தேக்கங் களை அமல் நடத்தவேண்டு மென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

1959 மார்ச் 19 அன்று ஆற்றிய உரை :

தலைவர்கள் அவர்களே! மராமத்து அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை நான் ஆதரிக் கிறேன். எல்லோரும் பேசியமாதிரி, பம்பையாறு திட்டத்தையும் கீரையாறு திட்டத்தையும் பற்றிக் குறிப்பிட்டு, அதற்கான ஆரம்ப நடவடிக்கையாவது உடனடியாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணா, பெண்ணாறு நதிகளைப் பற்றிப் பேசும்போது, கங்கையும் காவிரியையும் ஒன்றாகச் சேர்க்கலாம் என்று நினைப்பதற்கு ஆதாரமாக இப்பொழுது கிருஷ்ணா, பெண்ணாறு திட்டத்தைப் பரிசீலிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். பெருமளவில் பயன் கிடைக்கக்கூடிய திட்டங்களை அமலாக்குவதற்கு நமக்கு அதிக சிரத்தை இருக்கிறது.

நமக்கு உரிமை (க்ளைம்) இருக்கிறது என்பதை மத்திய சர்க்கார் உணர்ந் திருப்பதற்காக, நாம் மத்திய சர்க்காரைப் பாராட்டுகின்ற நேரத்தில், பிறதண்ணீரை எல்லாம், நாம் உபயோகப்படுத்துவதற்கு, அதன்மூலம் இந்த நாட்டின் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்குக் குறைந்த செலவிலேயே நம்மால் முடியும் என்பதை

மத்திய சர்க்கார் உணர்ந்திருப்பதால், நாம் கேட்கும் பெரும் நிதியுதவியை மத்திய சர்க்கார் கொடுப்பதற்குத் தயங்காது என்று நினைக்கிறேன். நாம் எவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்லுகின்றோமோ, அதற்குத் தகுந்தபடி, நமக்குத் தகுந்த அளவு நிதியுதவி கிடைக்குமென்று நம்புகிறேன்.

கிருஷ்ணா, பெண்ணாறு திட்டத்தைப் பற்றி யோசனை செய்துகொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிற நேரத்தில் கங்கைநீரைக் கொண்டுவருவதற்கு யோசனை செய்து கொண்டிருக்கிறோம் என்று வற்புறுத்திச் சொன்னால், அதற்கும் ஓரளவு பணத்தை நமக்கு ஒதுக்குவார்கள் என்று நம்புகிறேன். அமெரிக்க தேசத்து மிஸௌரி, மிஸிஸிப்பி நதியிலிருந்து 200, 800 மைல் தூரத்திற்கு எஃகு கால்வாய்கள் மூலம்கொண்டு போகிறார்கள் என்றால், பாரதியின் கனவு எங்கே நிறைவேறப்போகிறது என்று நாம் திகைக்கவேண்டிய அவசியமில்லை. பெருநிபுணர்களை எல்லாம் கொண்டிருக்கிற நாம், நமக்குத் தண்ணீர்த் தேவையாக இருக்கின்ற இந்த நேரத்தில், இம்மாதிரி தண்ணீர் கொண்டுவர வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, கங்கைநீரைக் கொண்டுவருவதற்கு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை ஜில்லாவைப் பொருத்த மட்டில், தாமிரபரணி 'பேஸின்' என்கிற ஒரு திட்டம்தான் இப்போது இருந்து வருகிறது. இப்போது இதன்மூலமாக அதிகாரப்பூர்வமாக 85,000 ஏக்கர்கள் பாசனவசதி பெற்றிருந்தாலும், நடைமுறையில் ஒரு லட்சம் ஏக்கர் வரையிலும் பாசனவசதி பெற்று வருகிறது. மேலும், இதிலிருக்கின்ற சில குறைகளைத் தீர்ப்பதன்மூலமாக அங்கே இன்னும் அநேக ஏக்கர்களுக்கு நீர்ப் பாசனவசதி செய்துகொடுக்க முடியும் என்பதை, அங்கு அமைச்சர் அவர்கள் விஜயம் செய்திருந்தபோதும் தெரிவித்தோம். அவைகள் எல்லாம் புறக்கணிக்கப்படக்கூடாது. பெருந்திட்டங்களை நிறைவேற்றுவதில் காட்டப்படுகின்ற ஆத்திரம், இருக்கின்ற பாசனத் திட்டங்களிலுள்ள குறைகளை நீக்குவதில் காட்டப்படவில்லை என்பதைத்தான் சொல்லவேண்டியிருக்கிறது.

தாமிரபரணி பாசனத்தில் இருக்கிற சில குறைகளை நீக்குவதன்மூலமாக, இப்போது இருப்பதைவிட உணவு உற்பத்தியை 25 சதமானம் பெருக்கமுடியும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதே பாசனத்தில் (டெயில் எண்டி-ல்) இருக்கக் கூடிய பேய்க்குளம் என்ற இடத்தில் சுமார் 8 ஆயிரம் ராத்தல் வரையிலும் உற்பத்தி செய்கிறார்கள். இந்த இடத்திலுள்ளவர்கள் அதற்காகப் பரிசும் வாங்கியிருக்கிறார்கள். இந்த 'டெயில் எண்ட்'களை எல்லாம், அதாவது தாமிரபரணி தீரத்தில் இருக்கக்கூடிய பாசனவசதிகளையெல்லாம் நல்லவிதத்தில் விரிவுபடுத்தி, அங்கே இருக்கக்கூடிய குறைகளையெல்லாம் போக்கினால், ஏற்கெனவே உற்பத்தி செய்கிறதைவிட 25 சதமானம் அதிகமான உற்பத்தி செய்யமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக ஒரு 'ஸ்பெனுல் டிவிஷன்' ஏற்படுத்தியாவது இந்தக் குறைகளை நீக்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கம் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, ஆலங்கால் வடிகால்கள் இல்லாததன் காரணமாகப் பல ஏக்கர் நிலங்கள் தண்ணீரால் பாதிக்கப்படுகின்றன. பல இடங்களில் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகின்ற நேரத்தில், இங்குத் தண்ணீரால் பல விதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றது. இதில்

80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி 'டெயில் எண்டி'ல் மாத்திரம் வேலை செய்வதற்கு ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்விதம் ஒரு வடிகாலை வெட்டுவதற்கு, இரண்டு அல்லது மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்து பூராவும் சீர்படுத்துவதாக இருந்தால், சுமார் இரண்டாயிரம் ஏக்கர்களுக்குப் பேருதவியாக இருக்குமென்பதை வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

காலை 11.20 மணிக்குத் தொடர்ந்து ஆற்றிய உரை :

தாமிரபரணி பாசனப் பகுதியில் இருந்தும், சில பகுதிகளில் நேராக ஆற்றிலிருந்து பாசனவசதி பெறாமல், குளங்கள் மூலமாக வசதி பெறுகின்றன. பாய்ச்சல் வசதி பெறுவதிலே பெரிய பெரிய குளங்கள் மேடிட்டுப் போய் இருக்கின்றன. ஆருங்குளம், பேய்க்குளம், ஆறுமுகமங்கலம், கோரம்பள்ளம் என்ற குளங்கள் மூலமாகப் பாசனவசதி பெறக் கூடிய 16 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்கள், இருபோக நிலங்கள் இருக்கின்றன. இந்த மூன்று, நான்கு குளங்களை 'டீஸில்ட்' செய்வதிலேயே பெருவாரியாகச் செலவு ஆகிவிடாது. 'டீ ஸில்ட்' செய்வதை இந்த வருஷமே எடுத்துக்கொள்ளலாம். இப்போது மார்ச் மாதம் ஆகிவிட்டதால், அங்கே தண்ணீர் இல்லாத காலம். இதை உடனடியாகச் செய்தால் மிகவும் பேருதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரி, சிறுசிறு நீர்ப்பாசன வசதிகளை இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அதிகமாக வற்புறுத்திச் சொல்லப்பட்டது! 48 கண்மாய்கள் உள்ள ஒரு ஓடையிருக்கிறது. இதனாலே ஏராளமான தண்ணீர் வீணாகப் போகிறது. அந்தப் பகுதியிலுள்ள கிராம மக்கள் 'அந்த ஓடை ஓடக்கூடிய பகுதிகளில் பரவலாகச் சிறு அணைக் கட்டிச் சிறுசிறு குளங்களுக்கு வசதி செய்துதர வேண்டு'மென்று பல காலமாக மனுசெய்து வருகிறார்கள். இதிலிருந்து தண்ணீர் வீணாகப் போகிறது என்பதை மறுக்க முடியாது. இப்படி 48 கண்மாய் வழியாக, வருஷத்தில் 40 அல்லது 50 நாள்களாவது தண்ணீர் விரயமாகிக் கொண்டிருக்கிறது. இந்த உபரித் தண்ணீரைப் பேரூரணி ஓடைக்குத் திருப்பவும், தூத்துக்குடி பக்கம் போகிற 'பக்கின்' (Buckein) சாலை, 'டைவர்ட்' செய்வதின்மூலமாகத் தூத்துக்குடியிலுள்ள மணல் (Channal) பகுதியை வளமாக்க நீண்டகாலத் திட்டமாக ஒரு திட்டம் தயார் செய்யவும், உபரியாகப் போகிற தண்ணீரை உபயோகித்துத் தூத்துக்குடி பகுதியில் 'ஸாண்டி டிராக்டில்' (Sandy Tract) தென்னை சோலைகளை வைக்கக்கூடிய நீண்டகாலத் திட்டமாக நிறைவேற்ற முடியும். 'ஸப் ஸாயில்' வாட்டராக மாற்றிக்கொண்டு உபரித் தண்ணீரை ஏற்கெனவே இருக்கக்கூடிய சானல்களில் 'டைவர்ட்' செய்தால், தென்னை மரத் தோப்புகளை ஏற்படுத்தவும் சுகாதாரத்தை 'Improve' செய்யவும் உதவியாக இருக்கும்.

அதேமாதிரி, பூவானி பக்கம் (ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா) ஹரிஜனங்கள் 'ஒரு குளத்தை ஏற்படுத்த வேண்டு'மென்று மகஜர் தயார்செய்து அதிகாரிக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். 'ரெவீன்யூ' அதிகாரிகள் அதைப் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்கள். ஆரம்ப நடவடிக்கை ஒன்றும் எடுக்கப்படவில்லை.

கோவில்பட்டி தாலுக்காவில் 'கல் மதகு' என்ற அணைக்கட்டுகள் 70 அல்லது 80 வருஷங்களுக்கு முன்பு இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது அந்தப் பகுதியில் பார்த்தால், இருந்த இடம் தெரிகிறது. இதை உபயோகித்துச் சிறுகுளம் பாசனங்களை விரிவுபடுத்த முடியும். பல லட்சக்கணக்கான ஏக்கர்கள் என்று கணக்குப்போட முடியாவிட்டாலும், குறிப்பாக, அங்கு

இருக்கக்கூடிய 'பேக்வார்டு கம்யூனிட்டி'கள் அந்த இடத்திலிருந்து நல்ல கல்வியறிவு பெற்றவர்கள் "இதை நம்பி இருப்பதில் பிரயோஜனம் இல்லை" என்று காலிசெய்து விடுகிறார்கள். எஞ்சியிருக்கக்கூடிய, பின்தங்கிய வகுப்பினருக்கு உதவிசெய்து எவ்வளவு 'ரிட்டர்ன்' கிடைக்குமென்று கணக்கு போட்டுப் பார்க்காமல், ஒவ்வொன்றாலும் 30 ஏக்கர், 40 ஏக்கர், 50 ஏக்கர் என்ற அளவுக்குப் பாசனவசதி பெறக்கூடியதாக இருந்தாலும், அவர்களுக்கு மிகவும் பேருதவியாக இருக்கும் என்ற மனபாவத்தோடு செயல்பட்டால், இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் தேவைப்படாது.

ஒவ்வொன்றிற்கும் 30,000, 40,000 என்று ஆகக்கூடிய திட்டங்களை, எப்படியும் லட்சம் ரூபாய்க்குக் குறைவாகக்கூடிய திட்டங்களை நிறைவேற்றுவதன்மூலம் மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க ஆரம்ப நடவடிக்கை எடுக்கிறோம் என்ற முறையில் செய்வதால் அவர்களுடைய நல்ல எண்ணத்தைப் பெற உதவியாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம், ஒருபோக நிலங்கள், பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் சங்கரன்கோவில் தாலுக்காவில் இருக்கின்றன. இந்த ஒருபோக நிலங்கள், காலத்தின் நிச்சயமற்ற போக்கினால், சில காலம்தான் நஞ்சை சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு போகம் செய்ய முடியாமல் இருக்கிறது. கோடைமழைத் தண்ணீர் ஆற்றிலே வெள்ளமாகப் போகிறது. 'ரிசர்வ் வாயர் சிஸ்டம்' என்ற ஒரு 'சிஸ்டத்தை' (கனம் ஸ்ரீ வி.ராமய்யா குறுக்கீடு) மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்வதில் இதுதான் 'அட்வான்டேஜ்'. கனம் அமைச்சர் ராமய்யா அவர்கள் வரும்போது, அந்தக் கல் மதகு தண்ணீரில் மாட்டிக்கொண்டார்கள். அதனால் குறித்த நேரத்தில் வரமுடியவில்லை. அதனால்தான், மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் வருவதை வரவேற்கிறேன்.

சங்கரன்கோவில் தாலுக்காவில் ஒருபோக நஞ்சை 50,000 ஏக்கர் இருக்கின்றன. அவைகள் பாசனவசதி பெறாத நஞ்சையாக இருக்கின்றன. காட்டாறுகளில் தண்ணீர் வந்துவிடுகிறது. அங்கே 'ரிசர்வ் வாயர் சிஸ்டம்' இல்லை. இப்போது என்ன செய்கிறார்கள் என்றால், கோடைக்காலங்களில் மழைநீர் அதிகமாக வந்தால், குளங்களில் தண்ணீரை, ஆற்றில் பிடுங்கி விட்டுவிடுகிறார்கள். 'ரிசர்வ்வாயர் சிஸ்டம்' ஒன்றை அமைக்கப் பூர்வாங்கமாக ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த மாதிரியான நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்பொழுது, ஏற்கெனவே உள்ள உற்பத்திக் குறைவை நீக்கிவிடமுடியும் என்பது மாத்திரம் அல்ல, பாக்கி மாகாணங்களுக்கு நெல் போகவேண்டாம் என்பதைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கூறுவதையும் தவிர்க்கமுடியும் என்பதை நம்புகிறேன். "அண்டை மாகாணங்களுக்கு உதவி செய்ய மறுக்கிறார்கள்" என்று சட்டசபை அங்கத்தினர்கள்கூட குறிப்பிட்டார்கள் என்று சொல்கிறார்கள். இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றினால், ஏராளமான நெல்லைப் பாக்கி மாகாணங்களுக்கும் நம்மால் கொடுக்கமுடியும்.

கங்கைத் தண்ணீர் நம் நாட்டிற்கு வரவேண்டும் என்று சொல்லித் தெற்கு, வடக்கு என்ற நிலையை ஒழிக்கும் நிலையை நாம் முயற்சிசெய்து கொண்டிருக்கிறோம். அந்தவகையிலே கேரள நாடும் நம் நாடுதான் என்றமுறையில் இப்பொழுது சொல்லக்கூடிய குறைகள் நம்மைவிட்டு அகலுவதற்கு இவைகளெல்லாம் பேருதவியாக இருக்கும்

என்று சொல்லிக்கொண்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, இந்த, சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கு மென்று நம்பிக்கையோடு முடித்துக் கொள்கின்றேன்.

1961 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

விவசாய உற்பத்திக்காக, நம் அரசாங்கம் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. உர உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறது. இரண்டு வருஷ காலத்தில் நிலைமை சீர்பட்டுவிடும் என்று சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள்; நமக்கும் அம் மாதிரி சீர்பட்டுவிடும் என்ற நம்பிக்கை யிருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் இந்த ராஜ்யத்தில் பெருந்தண்ணீர் வசதிகள் அதிகமாக இல்லை. ஆகையால், அதிகமாகப் பெரு வேலைகள் மேற்கொள்ள வசதிகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. இன்னும் கழிவுபோகும் தண்ணீரைச் சீர்படுத்தி உபயோகிக்கும் திட்டங்கள் போடப் படுகின்றன.

குளங்களை ஆழப்படுத்தும் திட்டங் களும் போடப்படுகின்றன. சுமார் 50,000 குளங்கள் இருக்கின்றன. அவற்றில் வருஷத்திற்கு ஓராயிரம் குளங்கள் வீதம் எடுத்து, மாதம் மராமத்து செய்வதனால், இந்த வேலை குறைந்தபட்சம் 10 வருஷத்திற்குமேல் நீடிக்கும் நிலையில் இருக்கிறது. இந்த வேலையைத் துரிதப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த 50,000 குளங்களையும் வருஷத்திற்கு 10,000 என்று எடுத்து வேலை செய்து, இந்த எல்லாவற்றையும் மூன்றாவது திட்டகாலத்திலேயே மராமத்து செய்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதில் பல சங்கடங்கள் இருக்கலாம். இருந்தாலும் தைரியமாக நடவடிக்கைகளை எடுத்துத் துரிதமாகச் செய்த நீர்ப்பாசன வேலையாக அமையவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என் பகுதியில், கோரம்பள்ளம், பேய்குளம், ஆறுமுகமங்கலம் முதலியவை வெகு முக்கியமான குளங்கள். அவற்றால், ஒவ்வொரு குளத்திலும் குறைந்தபட்சம் 5,000 ஏக்கர்கள் சாகுபடியாகும். அப்படிப் பார்க்கும்போது 15,000 ஏக்கர்கள் சாகுபடி யாகக் கூடிய குளங்கள் இவை. இந்தக் குளங்களை ஆழப்படுத்த வேண்டும் என்று நீண்ட நாள்களாக வற்புறுத்தி வந்திருக்கிறேன். பரீட்சார்த்தத் திட்டங்கள் போட்டும் அவை நிறைவேறாமல் இருக்கின்றன. ஐந்து வருஷகாலமாக முயற்சிகள் செய்தும், அந்தக் குளங்கள் பற்றிய திட்டங்கள் அப்படியே இருக்கின்றன என்பதைக் கனம் மராமத்து இலாகா அமைச்சரவர் களிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிலும், பாசனவசதி பெற்ற குளம் என்று பேய்குளத்தைப் பரீட்சார்த்தத் திட்டத்திற்கு எடுத்துக்கொண்டார்கள். பாசன வசதியைப் பெருக்கவேண்டும். மராமத்து செய்யவேண்டும் என்று பரீட்சார்த்தத் திட்டத்திற்குப் பேய்க்குளத்தை எடுத்துக்கொண் டார்கள். ஆனால், ஐந்து வருஷமாகியும் அது நிறைவேறவில்லை. பரீட்சார்த்தத் திட்டங்களையாவது துரிதமாக எடுத்துத் தீவிரமாக வேலைசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல நல்ல காரியங்களைச் செய்திருக் கிறோம் என்றும், மேலும் செய்ய வேண்டிய காரியங்களில் அசிரத்தையாக இருக்கக்கூடாது என்றும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். நல்ல காரியங்கள் பல செய்திருக்கிறோம். நல்ல காரியங்களின் விளைவாக, நல்ல பொருளாதார அமைப்பு இருக்கிறது. சமுதாயமும் சீராக இருக்கிறது. ஒரு

'ஸ்டேபிள் கவர்ன்மெண்'டையும் அமைத்திருக்கிறோம். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் செய்யவேண்டிய வேலைகளை, குறைபாடுள்ள வேலைகளை, துரிதமாக ஆழப்படுத்தும் வேலையை ஆரம்பிக்கவேயில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பரீட்சார்த்தத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் மேலும் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்றால், கிணற்று வசதியைப் பெருக்க வேண்டியது அவசியம். கிணற்று ஊற்றுக்கள் இருக்கக் கூடிய, அதற்கு உதவக்கூடிய குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு மராமத்து செய்யப் பட்டிருந்தால்தான், அவை நல்ல விதமாகப் பயன்படுத்தப்பட்டால்தான் கிணறுகளில் ஊற்றெடுக்கும்.

இந்த வருஷத்தில் ஏராளமான மழை பெய்துவிட்டிருக்கிறது. ஆனால், குளங்கள் ஆழமில்லாததாக இருந்ததால் ஏராளமான தண்ணீர் வீணாகப் போய் இருக்கிறது. தாமிரபரணியிலிருந்து நாள் ஒன்றுக்கு 20,000 க்யூசெக் அளவில் 45, 50 தினங்களுக்குத்தண்ணீர் வீணடைந் திருக்கிறது. அப்படிப் போகும் கழிவுத் தண்ணீரை நாம் தடுக்க முடியவில்லை. பாசனவசதி பெற்றுள்ள குளங்கள் ஏராளமாக இருக்கையில் அவை நல்ல விதத்தில் மராமத்து செய்யப்பட்டி ருந்தால், இருபோகம் தடையின்றிச் சாகுபடி செய்யச் சௌகரியமாக இருக்கும். அது ஊற்று எடுக்கும் கிணற்று வசதிகளையும் பெருக்கமுடியும் என்பதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1962 ஏப்ரல் 24 அன்று நிகழ்த்தப்பட்ட உரை :

தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி சம்பந்தமாகக் கவர்னர் அவர்கள், தம்முடைய உரையில் குறிப்பிட்டிருப் பதைக் கண்டு, நான் மகிழ்ச்சி அடைகிறேன். தூத்துக்குடி துறைமுகம் சம்பந்தமாகச் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு இது கொஞ்சம் மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று நினைக்கிறேன். இதை முடிப்பதற்கு எந்தந்த விதத்தில் நடவடிக்கைகள் எடுத்து வரவேண்டுமோ, அந்த வகையில் எடுத்துவரப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக அரசாங்கம் ஒரு 'ஹைபவர் கமிட்டி' கூட போட்டிருக்கிறது. இந்த அபிவிருத்தி வேலை செய்வதற்குப் பெருந் தடையாக இருப்பது அங்குள்ள குடித் தண்ணீர் சப்ளை வசதி. அங்கு அது சரியாக இல்லை. இப்பொழுதுள்ள வசதி யைவிட இன்னும் இரண்டு மூன்று பங்கு அதிகப்படுத்தினால் வசதியாக இருக்கும். ஒவ்வொரு வருடமும் அங்கு இரண்டு விதப் பருவமழை உண்டு. அதாவது வடகிழக்கு, தென்மேற்குப் பருவமழை அங்கு உண்டு. வருஷத்தில் ஆறு மாதத்தில் தண்ணீர் 'Over Flow' ஆகி, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிலிருந்து விழுகிறது.

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து ஐந்நூறு மைல்களுக்கு அப்பால், ஆத்தூருக்கு அருகில், முக்காணிக்குப் பக்கத்தில் ஒரு பாலம் இருக்கிறது. இந்த நதியின் குறுக்கேயுள்ள பாலத்தை அணைக்கட்டாக மாற்றியமைத்தால், நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்குமோ என்று நான் எண்ணுகிறேன். இது 'டெக்னிகல் பீபிள்' (Technical People) யோசனை செய்யவேண்டிய விஷயம் என்றாலும், எனக்குத் தோன்றுகிறதைச் சொல்லுகிறேன்.

ஆத்தூர் பக்கத்தில் போட்டிருக்கின்ற பாலத்தை அணையாக மாற்றினால், ஸ்ரீவைகுண்டத்திலிருந்து ஆறு மைல் நீளமுள்ள ஆற்றுப்படுகையில் தண்ணீர் வருவதோடு, 'ஸீபேஜ் வாட்ட'ரும் (Seepagewater) கிடைக்கும், 'ஸப்மெர்ஜி-பிள்டாம்ஸ்'ஸும் (Submergibledams) நதியில் கட்டலாம். 'ரிவர் பெட்'டில்

(River Bed) 'சப்மெர்ஜிபிள் டாம்ஸ்' போட்டால் அதிகத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கும். தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இந்த முறையில் அணுகிப் பரிசீலக்க வேண்டுமென்ற யோசனையை இந்தச் சபை மூலமாகச் சமர்ப்பிக்கிறேன்.

1963 மார்ச் 2 அன்று நிகழ்த்திய உரை :

சிறிய நீர்ப் பாசனங்களை நாம் இப்பொழுது பஞ்சாயத்துக்களிடம் கொடுத்து இருக்கிறோம். இதைப் பல எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் வரவேற்றாலும், என்னால் அதை வரவேற்க முடியவில்லை. சிறிய நீர்ப் பாசனங்களை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்க வேண்டியது அவசியம்தான் என்று ஒப்புக்கொண்டாலும், அதை எடுத்து நடத்தவேண்டிய நிதி வசதியையும் நாம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். சிறிய நீர்ப்பாசன வேலைகளிலிருந்து வரக்கூடிய பலன்கள் யாவும் பஞ்சாயத்துக்களுக்குப் போவதாக இருந்தாலும், அதை எடுத்து நடத்துவதற்கு வேண்டிய நிதிவசதி அவர்களிடம் கிடையாது. அதனால் அந்த நிதிவசதியை அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆகவே, இதைப்பற்றியும் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, விவசாய உற்பத்தியைப் பெருக்கும்நடவடிக்கையில், பெரிய பாசனத் திட்டங்களை அரசாங்கம் எடுத்து முடித்த பின்பு, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பஞ்சாயத்துக்கு விடாமலிருப்பது நல்லது. அப்படிக் கொடுப்பதாக இருந்தாலும், அவர்களுக்கு நிதிவசதி செய்துகொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடுகூட இப்பொழுது பல ஐந்தாண்டுத் திட்டங்களை எடுத்து முடித்துக்கொண்டு வருகிறோம். எனக்கு அதிகப்படியான நேரம் இல்லாவிட்டாலும் சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறேன். திருநெல்வேலி சம்பந்தமாகக் குடகனாறு திட்டம் என்று ஒன்று இருக்கிறது. பல திட்டங்களை எடுத்து முடித்துவிட்டோம் என்று சொன்ன போதிலும் இந்தத் திட்டம் இன்னும் எடுத்து நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இதைப் பற்றி வரவுசெலவுத் திட்டத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், ராமநிதி திட்டத்தை மட்டும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாகக் கலெக்டருக்கு எழுதி அனுப்பியிருப்பதாகச் சொல்லப்பட்டது. அதனால் அது சீக்கிரம் அமலுக்குக் கொண்டுவரப்படும் என்று இருந்தோம். ஆனால், இன்னும் அது ஆரம்பிக்கப்படவில்லை.

சமீபத்தில் மராமத்து அமைச்சர் அவர்கள், அங்குச் சுற்றுப் பிரயாணம் செய்தபோது, இதுசம்பந்தமாக அவரிடம் சொல்லப்பட்டது. அதனால் அவைகள் எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. அது முடிந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும் என்றாகிலும் சொல்லி இருக்கலாம். அப்படியும் சொல்லப்படவில்லை. அது ஒரு பெரிய திட்டமாகக் குறிப்பிட்டார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது என்றாகிலும் சொல்லி இருக்கலாம். அப்படியும் சொல்லப்படவில்லை. இந்தத் திட்டத்தை அடுத்த வருடம் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கலாமோ என்னவோ? அப்படி இருந்தாலும், அதுசம்பந்தமாக இந்த வருடமே அதற்குச்செலவு செய்ய முற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் சிறிய நீர்ப்பாசனங்களை நிறைவேற்ற இந்த மாகாணம் பூராவிலும் எடுத்துப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கனம் மராமத்து அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு.ராமையா அவர்கள் மின்சார அமைச்சராக இருந்தபோது,

கிராமங்களுக்கெல்லாம் ஏராளமான மின்சாரத்தைக் கொடுத்த பெருமை அவர்களுக்குக்கிடைத்தது. அதைஎப்படிக் கொடுக்க முடிந்தது என்பதற்கான காரணத்தையும், அவரே சொன்னார்கள். அதாவது, "மின்சாரம் கொடுக்கப்பட வேண்டிய பகுதிகளை எல்லாம் முன்கூட்டியே 'சர்வே' செய்து, 'எஸ்டிமேட்' முதலியவைகளை எல்லாம் தயார்செய்து, திட்டங்களை எங்கள் பக்கத்திலேயே வைத்துக்கொண்டிருந்தோம். பணம்வரும்போது, அவ்வப்போது திட்டங்களை உடனடியாக எடுத்துக் கொண்டு, மின்சாரம் சீக்கிரமாகக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. அதனால், இந்த மாநிலத்திற்கு வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லாத ஒரு பெருமையைத் தேடித் தருவதற்கான வாய்ப்பு கிடைத்தது" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதே பெருமையை அவர்கள் நீர்ப் பாசனத் துறையிலும் தேடிக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். சிறிய பாசனத் திட்டங்களுக்கு என்று ஒரு பெரிய 'ப்ளூ பிரிண்ட்' தயார்செய்ய வேண்டும். இத்தகைய திட்டங்கள், நம் மாநிலத்தில் நிறைவேற்றப்பட வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன.

எந்தப் பாசனத் திட்டமும் நூறு வருடங்களுக்குள்ள திட்டமாகத்தான் இருக்கும். மக்கள் பல திட்டங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அவைகளை எல்லாம் பரிசீலிக்கும்போது 'இப்பொழுது எடுக்கத் தகுந்ததல்ல' என்றும், 'ரெயின் ஃபால் ரீடிங்' எடுக்கிறோம்' என்றும் சொல்லிக்கொண்டே இருந்துவிடக்கூடாது. 'புதிதாகத்தான் திட்டங்கள் உருவாக வேண்டும்' என்பதல்ல.

ஆகவே, சிறிய பாசனத் திட்டங்கள் எங்கெங்கெல்லாம் இருக்கவேண்டும் என்பதைக் கணக்கெடுத்து, அவர்களுடைய காலத்திலேயே ஒரு பெரிய பட்டியலைத் தயார்செய்து விட்டால் நலமாக இருக்கும். ஏதோ ஐந்து அல்லது பத்து வருடங்களில் முடிந்து விடுகிற வேலை அல்ல இது. இதற்குப் பல வருடங்கள் ஆகும். ஆகவே, நீண்டகாலத் திட்டமாக வைத்துக்கொண்டு வசதிகள் கிடைக்கும்போது ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டுவரலாம். இதற்கென்று 'ஆர்டர் ஆஃப் பிரிஸிடென்ஸ்'கூட போட்டுவிடலாம். அம் மாதிரி அந்தத் திட்டங்களைத் தயார் செய்வதன் மூலமாகப் பல பெரிய வாய்ப்புகள் இந்த மாநிலத்திலுள்ள விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிச்சைக்கார விடுதிகள் நிர்வகித்தல் தொடர்பான உரை :

நாட்டில் பெரும் பிரச்சினையாக இருப்பது பிச்சை எடுப்பவர்களின் தொகை பெருகிக் கொண்டிருப்பதுதான். இதனைச் சமாளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தம் உரையில் வினா எழுப்பி விளக்கியுள்ளது நோக்கத்தக்கதாகும்.

1957 ஜூலை 10 அன்று நிகழ்த்திய உரை :

பிச்சைக்கார விடுதிகளை ஏற்படுத்தி நடத்திவரும் காரியம் ஸ்தல ஸ்தாபனங்களைச் சேர்ந்ததாக இருப்பதால், இதற்காக ஸ்தல ஸ்தாபனங்களுக்கு குறைந்தபட்ச, அல்லது உயர்ந்தபட்ச உதவி ஏதேனும் அளிப்பதுபற்றிச் சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா? அப்படியானால், அந்தத் தொகை, ஜனத்தொகைப்படி இருக்குமா? அல்லது, ஸ்தல ஸ்தாபனம் செலவழிக்கும் தொகையை அனுசரித்து இருக்குமா?



திட்ட ஒதுக்கீடு குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரை

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், திட்டம், வரைமுறை, திட்ட நிறைவேற்றம் எனப் பல பிரிவுகளாகப் பிரித்து, திட்ட ஒதுக்கீடு என்னும் தலைப்பில் பேசியுள்ள உரை, இன்றைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஆழ்ந்து படித்துப் பார்த்தல் வேண்டும். திட்டமிடுதலும், திட்டமிட்டதை நிறைவேற்றுதலும் எந்தெந்த வகையில் இன்றியமையாதது என்பதைத் தம் உரையில் தெளிவுபடக் கூறியுள்ளார். மக்களின் சேவைக்காகத் திட்ட நிறைவேற்றத்திற்கு அவர் கூறும் கருத்து, "தனிப் பட்டவரின் மூளையைவிட, இரண்டு மனிதர்களின் மூளை சிறந்தது" என்பது சிந்திப்பதற்குரியதாகும்.

'ப்ளான் டார்கெட்' ஆயிரம் கோடிக்கு, தி.மு.கழக தலைவர் அண்ணா பேசும்போது திட்டம் கொடுத்தார். இரண்டாவது 'ப்ளானி'ல் இன்று, நான்காவது திட்டத்தில், ஆயிரம் கோடிக்குத் திட்டம் தீட்டியிருக் கிறார்கள். நம் முதலமைச்சர் அவர்கள், 800 கோடிக்குப் 'ப்ளான்' செய்திருக் கிறார்கள். 'சென்ட்ரல் கவர்மெண்ட்'டின், 'இன்வஸ்ட்மெண்டை'யும் சேர்த்தால் ஆயிரம் கோடி ரூபாய் ஆகிவிடும்.

இப்படிப்பட்ட ஆயிரம் கோடி திட்டத்தை வரவேற்காமல் போய்விட்டார்களோ என்பதுதான்

எனக்கு வருத்தம். நாளைக்கு வருவார்களோ என்னவோ தெரியாது. இன்று வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்தாலும்கூட, அவர்கள் இருந்து பேச முடியாமல் போய்விட்டதே என்றுதான் எனக்கு வருத்தம்.

'லான்ட் சீலிங்' 60-40 என்று கொண்டு வந்தபோது கம்யூனிஸ்டுகள் என்ன சொன்னார்கள்? 'நாங்கள் இருந்து கொண்டுவந்திருக்கிறோம்' என்று சொன்னார்கள். இவர்கள், 'நாங்கள் சொன்னதால் வந்தது! இப்போதாவது முடிந்ததா?' என்று கேட்பார்கள். நீங்கள் சொன்ன காலத்தில் முடியாது என்றுதான் நாங்கள் சொன்னோம்.

நம் தமிழ்நாட்டுப் பொருளாதாரம் பட்ஜெட்டில் பிரதிபலிக்கிறது. நேற்று மேல்சபைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும்போது, 'பெர் காப்பிட்டா கன்ஸம்ஷன் ஆப் எலக்ரிசிட்டி கூடியிருக்கிறது' என்று சொன்னார்கள். 27இலிருந்து 83ஆகக் கூடியிருக்கிறது என்று சொன்னார்கள். நமது பொருளாதார வளர்ச்சியின் அளவுகோல் இது என்று 'கரெக்டா'கச் சொன்னார்கள். நம் திட்டங்கள் எல்லாம், மக்களுக்கு நல்ல பலன் கொடுக்கக்கூடிய அளவில் நிறைவேறி வருகின்றன. அதன் பயனாக, இந்த சர்க்கார் பொதுமக்களின் பாராட்டுக்கு உரித்தானதாக இருக்கிறது; நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருக்கிறார்கள்;. அவநம்பிக்கைக்கு அல்ல.

'ப்ளான்' குறித்து ஆலோசித்து, எது எதற்கு 'எம்பஸிஸ்' கொடுத்திருக்கிறார்கள், எது எதற்கு 'எம்பஸிஸ்' கொடுக்கவேண்டும் என்று ஆலோசனை சொல்பவர்கள், பொதுமக்களுக்குச் சேவை செய்தவர்களாவார்கள்! 'தனிப்பட்டவரின் மூளையைவிட, இரண்டு மனிதர்களின் மூளை சிறந்தது' என்ற அடிப்படையில்தான் சட்ட சபைகள் எல்லாம் இயங்குகின்றன. அப்படி அவர்கள் தங்கள் ஆலோசனைகளைக் கூற வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. நேர 'கான்ஃபிடன்ஸ் மோஷ'னுக்கு நாலைந்து நாள்கள் ஆகும். அவர்கள் உணர்ச்சிபூர்வமாக இருக்கிறார்கள். விவாதத்திற்கும் தர்க்கத்திற்கும் தங்களை ஆளாக்கிக் கொள்ளவில்லை.

நான் பொதுமக்களிடம் சொல்வேன், ஆயிரம் கோடிக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறதென்று. அவர்கள் 800 கோடி என்று கூறலாம். மத்திய சர்க்கார் செலவு செய்வதையும் சேர்த்தால், ஆயிரம் கோடி வரும் என்று சொல்வேன். அந்த அளவுக்கு, நம் பொருளாதார வளர்ச்சி வளர்ந்து கொண்டு வருகிறது. நாம் உணர்ச்சிபூர்வமாக நடப்பவர்கள் என்றாலும், இந்தியா 'ஒரு தேசம்' என்ற மனோபாவம்கூட இல்லாது நடக்கும் பகுதிக்கும், மத்திய அரசாங்கம் 200 கோடி ரூபாய் செலவழிக்க முற்பட்டிருக்கிறார்கள் என்றால், இந்தத் தேசத்தின் ஒருமைப்பாட்டைப் பற்றி, நம் தேசத்தலைவர்கள் எவ்வளவு ஆவலோடு இருக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது.

இதற்கு முன்பு நடந்த திட்டங்களானாலும் சரி, நடக்கப் போகும் திட்டங்களானாலும் சரி, தமிழ்நாட்டுக்கு அவை மிக்கப் பலன் உள்ளதாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று கூறி, எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்ததற்குக் கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



மின்சாரம் குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

தமிழ்நாடு (சென்னை) மாகாணத்தின் பல்வேறு சிற்றூர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்ட காலம் அது. அப்போது மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியிருந்தது. அதனை எவ்வகையில் அதிகரிக்கலாம் என்பதற்குப் பல வழிமுறைகளை அரசுக்கு எடுத்துரைத்தமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

இன்றைய செயல்பாட்டு நிலையை, அன்றைய செயல்பாட்டு நிலையோடு ஒப்பிட்டு நோக்கினால், அன்றைய அரசும், அரசில் அங்கம் வகித்த மக்கள் பிரதிநிதிகளும் எந்த அளவுக்கு மாகாண முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு செயல்பட்டனர் என்பது புலப்படும்.

1958 பிப்ரவரி 5 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு ஆற்றிய உரை:

மின்சாரம் சம்பந்தமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். மின்சார அமைச்சர் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய அளவுக்கு மின்சார வசதி 8000 கிராமங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று காட்டப் பட்டிருக்கிறது. ஆனால், இன்னும் பல கிராமங்கள் ஏமாற்றம் அடைந்த நிலையில்தான் இருந்து கொண்டிருக் கின்றன. 'லைசென்ஸ் கம்பெனி' நடத்துகிற இடங்களில் ஒருவிதமான முன்னேற்றமும் இல்லாமல், அப்படியே

இருந்துகொண்டிருக்கின்றன. வேறு பல பகுதிகளில், மின்சாரவசதி அபிவிருத்தி அடைந்திருந்தாலும்கூட 'லைசென்ஸ் கம்பெனி' நடத்துகின்ற பிராந்தியங்களில் ஒரு விதமான முன்னேற்றமும் இல்லாமல்தான் இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பிராந்தியங்கள் 'ப்ளாக் டெவலப்மெண்ட்' ஏரியாவாக இருந்தாலும்கூட, அந்த இடங்களிலெல்லாம் மின்சாரவசதி பெறாமல்தான் இருந்துகொண்டிருக்கின்றன. 'லைசென்ஸ் கம்பெனி'கள் அவர்களுடைய சுதந்திரமான பிராந்தியங்கள் என்றமுறையில் உரிமை கொண்டாடுகின்றன. அந்தப் பிராந்தியங்களை ஏன் சட்டரீதியாக எடுத்து, அரசாங்கத்தின்கீழ்க் கொண்டு வரக்கூடாது என்பதுதான் தெரியவில்லை. இதற்கு ஏன் அரசாங்கத்தார் தயங்குகின்றனர் என்பதற்குதான் எந்தவிதமான சமாதானமும் கிடைக்கவில்லை.

ஏற்கெனவே நமக்கு இரண்டு லட்சம் 'கிலோவாட்ஸ்' மின்சாரம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. மேலும், இனி இரண்டு லட்சம் 'கிலோவாட்ஸ்' கிடைக்கும் என்று தெரிகிறது. இவற்றையெல்லாம் நாம் யாருக்கு 'சப்ளை' செய்யப்போகிறோம்? ஆகவே, இதில் சட்டரீதியாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிலும்கூட சட்டரீதியாக எடுக்கும்போது, பல விவாதங்கள் எழலாம். ஆகவே, இதற்குத் தனியாக ஒரு அவசரச் சட்டத்தைப் பிறபித்துக் 'கம்பெனி'யாளர்கள் மூலதனம் போடாத இடங்களையெல்லாம் எடுத்து, மின்சார அபிவிருத்தி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

இப்போது எப்படி இருக்கிறது என்றால், 'நானும் செய்யமாட்டேன், பிறரையும் செய்யவிட மாட்டேன்" என்றமுறையில் 'நந்தி' போன்று இருக்கிறார்கள், இந்த 'லைசென்ஸ் கம்பெனி'யார்! ஆகவே, ஒரு அவசரச் சட்டம்கொண்டுவந்தாவது இதை மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1962 ஜூலை 2 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆற்றிய உரை :

நமது மாகாணத்தில் அநேக கிராமங்கள் மின்வசதி பெற்றுள்ளன. ஆனால், அதேநேரத்தில் நிரந்தரமாக 25 சதவிகித மின்வெட்டையும் நாம் அனுபவித்துக்கொண்டு வருகிறோம். 'தெர்மல் ஸ்டேஷன்'கள் மூலம் மின்சாரத்தை அதிகரிக்க முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருப்பது பாராட்டுதற்குரிய விஷயம். இன்னும் மின்சார உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செய்ய வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

1964 மார்ச் 2 அன்று காலை 10.00 மணிக்கு மின்சாரம்/தொழில் வளர்ச்சி குறித்து ஆற்றிய உரை :

திட்டங்களிலே வேகமான முன்னேற்றத்தின் காரணமாக, நம்முடைய வருவாய் கூடியிருக்கிறது என்பதை நம்முடைய வரவு செலவுத் திட்டம் காட்டுகிறது. இந்தவகையில் வருவாய் உயர்ந்திருப்பதற்குக் காரணம், நம்முடைய மாநிலத்தைப் பொருத்தவரை மின்சார வளர்ச்சிதான். மின்சார வளர்ச்சிதான், தமிழ்நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒளி தருகிறது என்றுகூடச் சொல்லலாம். அந்த வளர்ச்சியின் காரணமாக, நம்முடைய தொழில் மந்திரியவர்கள், ஒரு தொழில் அதிபராகவே ஆகிவிட்டார் என்றுகூடச் சொல்லலாம்.

சிறந்த பெரிய தொழில்களை நம்முடைய நாட்டிலே ஏற்படுத்து

வதற்கான முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தவகையில் அவர்களேஒரு 'போர்'டாகஇருக்கிறார்கள். 'ஃபாரின் கொலாபரேஷன்' மூலமாக என்னென்ன தொழில்களை நம்முடைய நாட்டில் ஏற்படுத்தலாம் என்பதற்கான நடவடிக்கைகளை எல்லாம் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய ராஜ்ஜியத்திற்கு என்று முன்னெச்சரிக்கையாக ஒரு 'இண்டஸ்ட்ரியல் பாங்'கை இரண்டு, மூன்று வருஷத்திற்கு முன்னாலேயே ஆரம்பித்தார்கள். அதை 'ரிசர்வ் பாங்க்' ஒத்துக்கொள்ளக்கூடாதநிலை இருந்தது.

ஆனால், இன்று மத்திய அரசாங்கமே, ஒரு மத்திய 'இண்டஸ்ட்ரியல் பாங்கை' ஏற்படுத்தப்போவதாகச் சமீபத்தில் அறிவித்திருக்கிறார்கள். இதிலிருந்தே, இந்த மாநிலம் எவ்வளவு முன்னெச்சரிக்கையாக, முன்மாதிரியாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். மந்திரிக்குப் புகழ்மாலை பாடினால், அதனால் நன்மை ஏற்படும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை.

'The desire for fame, is the last infirmity of a noble man'. அந்த உற்சாகம், அவர்கள் இன்னும் தீவிரமாகச் செயல்படுவதற்கு உதவும். அவர்கள், இன்னும் அதிகமாக வேலைசெய்யலாம். அவர்களுக்கு எவ்வளவுதான் சம்பளத்தை உயர்த்தினாலும், அந்த உற்சாகத்தை ஏற்படத்த முடியாது. பலருடைய புகழ்ச்சிக்கு ஆளாகும் நிலைமை இருந்தால், உற்சாகம் ஏற்படும். கனம் அமைச்சர் அவர்கள், வெளிநாடுகளுக்குச் சென்று 'கொலாபரேஷன்'மூலம் புதிய தொழில்களை ஆரம்பிக்கவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'கால்வனைசிங் பிளாண்ட்', 'செர்விசிங் கார்பரேஷன்' போன்றவற்றை எல்லாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இவைமூலம் பெருவாரியான வருமானத்தைப் பெறுகிறோம். இவை நம்முடைய ராஜ்ய வருவாயைக் கூட்ட உதவியாக இருக்கிறது. இந்த மூன்று, நான்கு தொழில்கள் மூலமாக இரண்டு, இரண்டேகால் கோடி ரூபாய் அளவுக்கு, நம்முடைய ராஜ்ஜியத்திற்கு வருவாய் பெருகிவருகிறது. 'இன்-டைரக்ட் சோர்ஸ்' மூலம் வருவாய் கிடைக்கிறது.

'இன்-டைரக்ட் சோர்ஸ்' என்பது வரியாகவும், இருக்கலாம். ஆனால், இந்த வருவாய் வியாபாரத்தின்மூலம் பெருகுவதாகும். இந்த மாதிரி இனங்களை மேலும் பெருக்கி, நம்முடைய வருவாயை அதிகரிப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டபொம்மன் நினைவை போற்றுமாறு ஆற்றிய உரை :

நாட்டின், குறிப்பாகத்தமிழ்நாட்டின் உரிமையைப் பாதுகாக்கப் போராடி, தூக்கிலிடப்பட்ட மாவீரன் கட்டபொம்மன். அந்தக்கட்டபொம்மன் நினைவைப் போற்ற அரசு திட்டமிட வேண்டும் என்பதையும் தம் உரையில் வினாவாக எழுப்பி வலியுறுத்தியுள்ளார்.

1957 அக்டோபர் 31 அன்று ஆற்றிய உரை :

பாஞ்சாலங்குறிச்சி வீரர் கட்டபொம்மன் அவர்கள் பிறந்த இடத்திலோ, அல்லது அதைச் சார்ந்த இடத்திலோ உள்ளவர்கள், அவருடைய நினைவாக அவர் பிறந்த பிரதேசத்தை, பாஞ்சாலங்குறிச்சியைப் புனருத்தாரணம் செய்ய முன்வந்தார்களானால், சர்க்கார் அவர்களுக்கு எந்தெந்த விதமான உதவிகளை அளிக்கும் என, கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

குதிரைப் பந்தயச் சூதாட்டத்தை ஒழிக்க ஆற்றிய உரை :

மக்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த மதுவை ஒழித்தது காங்கிரஸ் அரசு. அத்துடன் சூதாட்டத்தையும் ஒழிக்கவேண்டும். குறிப்பாகக் குதிரைப் பந்தயச் சூதாட்டத்தில் சீரழிந்த குடும்பங்கள் பல என்பதனால், அதையும் தம் உரையில் வலியுறுத்தினார் என்பதற்கு சான்று இது!

1957 ஜூலை 8 அன்று காலை 11.22 மணிக்கு ஆற்றிய உரை :

கேள்வி நேரத்திலும், இந்த மானிய விவாதத்திலும், குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. 'சூது ஒழிப்பு' சர்க்காருடைய லட்சியமாக இருக்கும்பொழுது, அதைப் பற்றி எதிர்க்கட்சிகளும் சாதகமாக ஆலோசனைகள் சொல்லும்போது, அதை ஒழிக்க நடவடிக்கைகள் சீக்கிரமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.





கிராமப்புற மேம்பாடு குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரை

"கிராமங்களே இந்தியாவின் உயிர்நாடி" என்றார் காந்தியடிகள். "குடி உயரக் கோன் உயரும்" என்பது ஔவையார் வாக்கு அல்லவா? இதை மனத்துள்கொண்ட ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், கிராமப்புற மேம்பாட்டுக்கான நெறிமுறைகளைத் தெளிவுபடத் தம் உரையில் கூறியுள்ளார். மத்திய, மாநில அரசுகள், நாட்டை முன்னேற்ற கிராமப் புறங்களை மேம்படுத்த நிதிவசதியை அதிகரிக்க வேண்டும் என்றும் அதன் வாயிலாகமட்டுமே போக்குவரத்து, குடிநீர் வசதிகளைப் பெற்றுக் கிராமத்தில் வாழும் மக்கள், செல்வ வளத்தில் உயர்ந்து, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும் என்பதைத் தம் உரையில் வலியுறுத்துகிறார் எனலாம்.

1962 ஏப்ரல் 24 அன்று ஆற்றிய உரை :

இப்பொழுது, பஞ்சாயத்துகளின் மூலமாகப் பல திட்டங்களை நிறைவேற்றுவது என்று, அவற்றின் மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்கு வேண்டிய அதிகாரத்தையும் நாம் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். இப்பொழுதுள்ள அனுபவத்தைப்

பார்த்தபிறகு, கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி எல்லாம் செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது; மற்றும், போக்குவரத்து வசதிகூட செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் செய்துகொடுப்பதாகவும் நாம் ஏற்பாடுசெய்து, வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

அந்த நிலைமையைப் பார்க்கும்போதும், அங்குள்ள நிதிவசதியைப் பார்க்கும்போதும் அவைகளை நிறைவேற்றிவைக்க முடியுமா என்ற சந்தேகமும் ஏற்படுகிறது. அவர்களுக்குநாம்இப்பொழுதுகொடுத்து வருகிற நிதிவசதியை வைத்துக்கொண்டு, போக்குவரத்து வசதி, குடிதண்ணீர் வசதி முதலிய வசதிகளைச் செய்துகொடுக்க முடியுமா என்று யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அது தடைப்படுமோ என்று கூடத் தோன்றுகிறது. இப்பொழுதுள்ள நிதிவசதியை வைத்துக்கொண்டு, அவர்கள் அடையக்கூடிய இலக்குகளை அவர்களால்அடையமுடியுமா என்றுகூட யோசிக்க வேண்டியதாக இருக்கிறது.

கிராமங்களில் உள்ள பண்டங்களை வெளியே கொண்டுபோவதற்கு வேண்டிய போக்குவரத்து வசதி முதலிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, கிராமப் பகுதிகளில் அதிகப்படியான போக்குவரத்து வசதி, 'கூட்ஸ்' வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது கிராமங்களில் இரயில் வசதி கிடையாது. கிராமங்களில் உள்ள பண்டங்களை வெளியே கொண்டு போய்ப் பரிமாறிக்கொள்ள வசதியை நாம் அவர்களுக்குச் செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது. எந்த அளவுக்கு நாம் அவர்களுக்கு வசதிசெய்து கொடுக்கிறோமோ, அந்த அளவுக்கு அவர்களுக்கு நிதிவசதி வளரக் கூடியதாக இருக்கிறது.

இப்பொழுது திட்டப்படி, அவர்களுக்கு நிதிவசதி பெருகுவதற்கு என்று நிலத்தீர்வையில் பாதியை அவர்களுக்குக் கொடுப்பது என்று முடிவுசெய்திருக்கிறோம். இந்தப் புதிய ஏற்பாட்டின்படி அவர்களுக்கு நிலத் தீர்வையில் ஒருபகுதியைக் கொடுத்து வருகிறோம். அதை வைத்துக்கொண்டு அவர்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில், கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒரு யோசனையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்பொழுது கொடுக்கக்கூடிய 50 சதவிகிதத்தை, 75 சதவிகிதம் என அதிகப் படுத்தலாம் என்றும் சொல்லப்பட்டிருக் கிறது. மற்ற வசதிகளைச் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டு, அதனால் ஏற்படக்கூடிய பளுவை அவர்களால் தாங்கமுடியுமா என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் யோசித்துப் பார்க்கவேண்டும். இத்துடன் அவர்களுக்கு, நாம் குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி எல்லாம்கூட செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த இலக்கு, அவர்களுக்கு ஏற்படப் போகிற பளுவை அவர்களால் தாங்க முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆனால், இந்த ஐந்து வருஷ அனுபவத்தை எடுத்துப் பார்த்தால், அங்கு எந்தவிதமான விஸ்தரிப்பும் ஏற்படவில்லை.



கூட்டுறவு இயக்கமுறை சார்பாக ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

கூட்டுறவு இயக்கத்தின் வாயிலாகத் தமது மாவட்டத்தில்சாதனை படைத்தவர் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள். அவர் நாட்டின், நமது மாநிலத்தின் முன்னேற்றத்திற்குக் கூட்டுறவு இயக்கத்தின்மூலம்சாதனைபடைக்கவழிகாட்டும் வகையில் உரையாற்றியுள்ளார். நிலம் உள்ள விவசாயிகளுக்குக் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக உதவியதுபோலவே, நிலமற்ற விவசாயிகளுக்கும் உதவுவதற்குரிய வழிமுறைகளைக் கூறி, அரசு கூட்டுறவு இயக்கத்தை மேலும் எவ்வெவ்வாறு திட்டமிட்டு விரிவுபடுத்த வேண்டும் என்பதையும் தெளிவுபட சுட்டிக்காட்டியுள்ள பாங்கு நோக்கத் தக்கதாகும். குறிப்பாக, இன்று நலிந்து கிடக்கும் கூட்டுறவு இயக்கத்தை ஏ.பி.சி. வீரபாகு அவர்களின் வழிகாட்டுதலோடு புத்துயிரளிக்க இன்றைய அரசும், அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் முன்வர வேண்டும்.

1960 மார்ச் 12 அன்று ஆற்றிய உரை :

இந்த பட்ஜெட்டில், 'கோ-ஆப்ரேடிவ்' இயக்கத்திற்குப் பெரிய ஊக்கத்தையும் முக்கியத்துவத்தையும் கொடுத்திருக்கிறார்கள். இது ரூ.22 கோடி நிலம், இல்லாத விவசாயிகளுக்குக் கொடுத்துக் கடன் வாய்ப்புகளை அளிக்க

விரும்புகிறார்கள். அதேசமயத்தில், அவர்கள் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின்மூலம் செயல்படும் வியாபாரிகளுக்கும் மற்ற வியாபாரிகளுக்கும் வித்தியாசம் இல்லை. ஆதலால், இதற்கு வருமான வரி போடுவோம் என்கிறார்கள். அவர்கள் கூறுவது, 'நீங்கள் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகப் பல தொழில்களை நடத்தி வியாபாரம் செய்கிறீர்கள்' என்பதாகும். இதில் நம் சர்க்கார், சிறிது உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும்.

'சொசைட்டி'யின் அடிப்படையில் நிதிவசதி, மற்ற ஆதாரங்கள் எப்படி என்பதெல்லாம் கவனித்துத்தான் அந்த 'சொசைட்டி'கள் நிதி பலப்பட்டிருந்தால் மாத்திரம்தான். வருமான வரி விதிக்கவேண்டியது அவசியம். ஆகவே, அந்த முறையிலே இந்தப் பிரச்சினையை மத்திய சர்க்காரிடம், நம் சர்க்கார் வற்புறுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பட்ஜெட்டில், எவ்வளவு தூரம் நம்முடைய பொருளாதார நிலைமையை உயர்த்திக்கொள்வதற்குச் சிறிய தொழில்கள், பெரிய தொழில்கள் முதலியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கவனித்திருக்கிறோமோ, அவ்வளவு தூரம் விவசாயத்தையும் புறக்கணிக்காது, விவசாய அபிவிருத்தியையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து, பெருவாரியான ஏற்பாடுகளைச் செய்துவருவது இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கது. ஆனால், ஆங்காங்கே நீர்நிலைகளையும், குளங்களையும் மராமத்து செய்வது என்ற கொள்கையை ஒப்புக்கொண்டு, ஆண்டுக்கு முந்நூறு குளங்கள் மராமத்து செய்வது என்று போய்க்கொண்டிருந்தால், நம்முடைய ராஜ்யத்தில்உள்ளசிறியபாசனவசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நூறு வருஷங்களுக்கு மேலாகும்.

ஆகவே, இந்தக் கொள்கை சம்பந்தப்பட்டமட்டில் உடனடியாக விரிவான தொரு நடவடிக்கைமேற்கொள்ளப்பட வேண்டும். சிறிய நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்குவிரிவானமுறையில் அமல் நடத்துவதற்கு, அதற்கேற்ற ஒரு திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில்வலியுறுத்த விரும்புகிறேன்.

1962 ஜூலை 25 அன்று ஆற்றிய உரை :

கனம் சபாநாயகர் அவர்களே! கூட்டுறவு மானியத் துறையை நான் வரவேற்கிறேன்! இதை ஆதரித்துப் பேசும்போது நேரம் குறைவாக இருக்கிற காரணத்தினால், சுருக்கமாகச் சில விஷயங்களை மட்டும் குறிப்பிட்டுப் பேசலாம் என்று நினைக்கிறேன். 'ஃபூல் பைனான்ஸ் ஸ்கீம்', இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திலேயே பூராவும் அமலாக வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை அமலாக்குவதிலே, இன்றுள்ளகஷ்டங்கள் எல்லாம் ஒருவாறு நாம் புரிந்துகொண்டு செயல்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

மூன்று வருஷங்களுக்குமேல் அவர்கள் 'கிரெடிட் சொஸைட்டி'மூலம் கடன் வாங்கமுடியவில்லை. நீண்டகாலக் கடன் பெறுவதற்கு, ஒரு வாய்ப்பை நாம் ஏற்படுத்திய பிற்பாடுதான், எல்லா இடங்களுக்கும் இதை அமலாக்க வேண்டுமென்று கனம் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி நீண்டநாள் கடன் பெறுவதற்கு இப்போதுள்ள பாங்கு வசதியைக்கொண்டு செய்யமுடியுமா என்றுநாம் யோசித்துப்பார்க்கவேண்டும்.

இப்போது எல்லா தாலுக்காக்களுக்கும் ஒரு பாங்கு என்றுதான் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்

கிறது.ஆனால் அதைக் கொண்டுவந்து எல்லா இடங்களுக்கும் இந்த 'ஃபூல்பைனான்ஸ் ஸ்கீ'மை அமலாக்கமுடியுமா என்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், இரண்டு பகுதிகளிலே இது அமைக்கப்பட்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு இந்த நீண்ட நாள் கடன்கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க முடியுமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, 'லாண்ட் மார்ட்கேஜ் பாங்கு' ஏற்படுத்திக் கொண்டு அதற்குப் பின்னாலே 'ஃபூல் பைனான்ஸ் ஸ்கீமை' அமலாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கத்திற்குப் புதிதாக நாம் ஒரு சட்டத்தைச் செய்திருக்கிறோம். இந்தச் சட்டத்தின் மூலமாக இந்தக் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து 'வாலண்டரி' இயக்கமாக வளருவதற்கு வழிவகை செய்து தருகிறோம். முன்னாள் கூட்டுறவு அமைச்சர் கனம் ஆர்.வெங்கட்ராமன் அவர்கள், இந்தச் சட்டத்திற்காகப் பல முயற்சிகள் எடுத்துக்கொண்டு, அதை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே நம் முடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



பொதுச் சுகாதாரம் குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்



1963 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

பொதுச் சுகாதாரம் பற்றிக் குறிப்பிட வேண்டுமானால், சாக்கடைத் திட்டத்திற்கு நம்முடைய சர்க்காரிட மிருந்து லேசில் அனுமதி கிடைப்பதில்லை. 'ஆஸ்பத்திரி'களுக்கே பணம் இல்லையே. 'மெடிக்கல் காலேஜ்' வைக்கவே பணம் இல்லையே என்று சொல்லிக்கொண்டிராமல், சாக்கடைத் திட்டங்களைப் பற்றியும் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும்.

என்னுடைய தொகுதிக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று நான் கேட்டது கிடையாது. என்றாலும், ஸ்ரீவைகுண்டம் சாக்கடைத் திட்டத்தைப் பற்றி நான் வற்புறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன்.

சாக்கடைத்திட்டம், ஸ்ரீவைகுண்டத் திற்கு வேண்டுமென்று பொதுமக்கள் எல்லோரும் ரொம்பவும் 'அஜிடேட்' பண்ணுகிறார்கள். லட்ச ரூபாய் வருமான முள்ள பஞ்சாயத்து, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள அனுமதி கேட்டிருக் கிறது. மானியமாகக்கூட கேட்கவில்லை.

இத்திட்டத்தைச் சர்க்கார் பரிசீலனை செய்து, அதற்குவேண்டிய தொகையைக் கடனாகப் பஞ்சாயத்துக்குக் கொடுத்தால், உதவிகரமாக இருக்கும் என்று சொல்லி, பொதுவாக இந்த 'பட்ஜெட்'டை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன்.

1964 மார்ச் 2 அன்று காலை 10.00 மணிக்கு ஆற்றிய உரை :

'மெடிக்கல் அண்ட் ஹெல்த்' என்ற தலைப்பில், 'பப்ளிக் ஹெல்த்'துக்காக இரண்டரை கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. 'மெடிக்கல்' என்ற இனத்தில், 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட் டிருக்கிறது. இதில் விவசாயிகள் அதிகமாகப் பயன்படுத்தக்கூடியது 'பிரைமரி ஹெல்த் சென்டர்'கள் மூலமாகத்தான், ஆனால், அதற்கு ஒதுக்கப்பட்டிருப்பது 30 லட்சம் ரூபாய்.

அதேநேரத்தில், 'ஈ.எஸ்.ஐ.'-க்கு மட்டும் 63 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட் டிருக்கிறது. கூப்பாடு எங்கே அதிகமாக இருக்கிறதோ, அதற்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜனத்தொகை அதிகமாக இருக்கிற இடங்களைப் பார்த்துத்தான் நாம் திட்டங்களைப் போடுவதாகச் சொல்லுகிறேன்! சமூகநீதியை, அந்த முறையில்தான் நிலைநாட்டுகிறோம் என்றெல்லாம் சொல்லுகின்றேன்!

ஆனால், சமூகத்திற்கு முக்கியமான 'பிரைமரி ஹெல்த் சென்ட'ருக்கு 30 லட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட் டிருக்கிறது என்றால், அது எந்த அளவுக்கு நியாயமாக இருக்கும் என்பதை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். இதுவரை நாம் வேறுவிதமான பழக்கத்தில் வந்துவிட்டோம். இப்போது நமக்குச் சமூகநீதி, சமூகப்பொறுப்பு இவைகள் எல் லாம் வந்திருக்கின்றன. அதற்கு ஏற்றவாறு 'ஷிப்ட்'செய்யவேண்டும்.

'ஹெல்த் சென்டர்'தான் மிகவும் முக்கியம், அதுதான்ஜனங்களுக்குமிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றெல்லாம் நாம் பேசுகிறோம். சட்டசபையில் அதைப் பற்றி விவாதிக்கிறோம். இருந்தும் தார்ரோட்டுக்கு 60 லட்சமும், சம்பளத் திற்காக ஒன்றரை கோடியும் கொடுக் கிறோம் என்றால், என்ன பிரயோசனம் கிடைக்கும்?

'ப்ரிவெண்டிவ்' நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று சட்டமன்றத்தில் மணிக்கணக்காகக் கேள்வி போடுகிறோம். ஆனால், போதுமான அளவுக்கு நிதி ஒதுக்காமல் எந்த நடவடிக்கையை மேற்கொள்வது?

ஆகவே, இதைப்பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்து பார்த்து, 'ரீ-அப்ராப்ரியேஷன்' கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



வீட்டுவசதி குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரை



1962 ஜூலை 24 அன்று ஆற்றிய உரை :

வீட்டுவசதி மானியக் கோரிக்கையை முக்கியமாகப் பேச வேண்டும் என்று நான் எண்ணியதற்குக் காரணம், வீடுகட்டும் திட்டத்தில் ஏற்பட்ட மாறுதல்தான். இதுவரையில் இருந்த வீடுகட்டும் திட்டத்திற்குப் பதிலாக, வீடுகட்டிக் கொள்வதற்கான மனைகள் வழங்குவது என்றவகையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை இந்த மானியக் கோரிக்கையில் நாம் காண்கிறோம். வீடுகட்டும் திட்டம் பெருவாரியான மக்களுக்கு வழங்கப்பட வில்லை என்ற காரணத்தினாலும், ஒரு சிலருக்குக் கொடுத்து, பலருக்கு, அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு வீடு கிடைக்க வில்லையே என்ற ஏக்கம் இருக்கும் காரணத்தினாலும், எல்லாருக்கும் சமவாய்ப்பு கொடுக்கவேண்டும் என்ற கண்ணோட்டத்தோடு, இந்த மாற்றத்தை அரசாங்கம் புகுத்தியிருக்கிறது என்று நான் நம்புகிறேன். அது வரவேற்கத்தக்க அம்சம்தான். ஆனால், இந்தப் பொறுப்பு பூராவும் இப்பொழுது கூட்டுறவு இயக்கத் திற்கு மாற்றிக்கொடுக்கப்பட்டுள்ளது.

'வில்லேஜ் பிராஜெக்ட் ஸ்கீம்', 'ரூரல் ஹவுஸ்சிங் ஸ்கீம்', இப்படி, வீடு கட்டும் திட்டங்கள், குறிப்பிட்ட சமூகத்தினருக்கு இருக்கின்றன. ஆனால், 'வில்லேஜ் பிராஜக்ட் ஸ்கீமின்' கீழ் இதுவரை

எடுக்கப்பட்ட வேலைகளைத் தவிர, பாக்கி வேலைகளுக்குப் பயன்படுகின்றனவா என்பது சந்தேகம். 'ரூரல் பிராஜெக்ட்ஸ் ஸ்கீமின்'கீழ் ரூ.7,250 அளவுக்குக்கூட வீடுகட்டிக் கொள்ளலாம் என்று அரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், அதற்கு ஐந்தில் ஒருபங்கு தொகையை யார் வீடுக்கட்ட நினைக்கிறார்களோ அவர்கள் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தலையிலே ஒரு பெரிய சுமையாக வைக்கப்பட்டிருக்கிறது.

வீடுகட்டுவதற்கான மனையை வாங்கிக்கொடுப்பது ஒருபக்கம், அதற்குமேல், அந்த வீடுகட்டுவதற்காக ஐந்தில் ஒருபங்கு தொகையைக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிற ஒரு சுமை இன்னொருபுறம்.

இன்றைக்குக் குறைவான வீடுகளைக் கட்டிக்கொடுக்கிறோம். அதிக வீடுகளைக் கட்டிக்கொடுக்க முடியவில்லையே என்ற காரணத்தால், இதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் புதிய மாற்றம், அதிக வீடுகளைக் கட்டிக்கொடுக்கப் பயன்படுமா என்ற கண்ணோட்டத்தோடு அரசாங்கம் கவனிக்கவேண்டும். 'மனைக்கட்டை நாங்கள் வாங்கிக் கொடுத்துவிட்டோம்' என்று அரசாங்கம் சொல்லலாம். நகரப் பகுதியில்வேண்டுமானால், பெரியகிரயம் கொடுத்து மனைக்கட்டு வாங்கவேண்டிய அவசியமிருக்கலாம்.

இந்தச் சமூகத்தினர், பெரும்பாலும் கிராமப் பகுதியில்தான் வசிக்கிறார்கள். கிராமப்புறங்களில் அவர்களுக்கு இலவசமாகப் பலர் மனைக்கட்டு வழங்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அதற்கென்று ஒரு 'ஏஜென்ஸி'தான் வேண்டும். சர்க்காருக்கு ஒரு பெரும் பணப்பொறுப்புகூட இருக்காது.

கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வசிப்பதற்காக ஏற்கெனவே இருக்கும் திட்டத்திலேகூட இனாமாகத்தான் ஏராளமான வீடுகட்டும் மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தவிர, சர்க்கார் பணம் கொடுத்து வாங்கிக் கொடுக்க வேண்டியநிலை அநேக இடங்களில் இல்லை. அதற்கென்று ஒரு 'ஏஜெண்டு'மட்டும் இருக்குமானால், இனமாகக் கிடைக்கும் நிலத்தை இன்னும் வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளலாம். எங்கள் பகுதியில், ஹரிஜன காலனிக்காக, நாங்கள், பூராவும் இனாமாகத்தான் மனைகள் கொடுத்திருக்கிறோம். என்னுடைய அனுபவத்தை வைத்துத்தான் இதைச் சொல்கிறேன். மற்ற பகுதிகளைப் பற்றி எனக்குத் தெரியாது.

இப்பொழுதுகூட, பல கிராமங்களில் இனாமாக நிலம் கொடுப்பதற்குப் பொதுமக்கள் தயாராக இருக்கிறார்கள். அந்த ஒரு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பூதானம் கேட்கிறமாதிரி ஹரிஜனங்களுக்கான வீட்டுமனையைக் கொடுக்கவேண்டும் என்ற முறையில் அணுகினால், இனாமாக ஏராளமான நிலங்கள் கிராமப்புறங்களில் கிடைக்கும். இப்படி இனாமாக நிலத்தை வாங்கிக்கொண்டு, அதைக் கூட்டுறவு இயக்கத்திற்கு மாற்றிக்கொடுத்துக் கட்டிடத்திற்காக ஐந்தில் ஒருபங்கு தொகையைக் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயம் இருக்கிறது. அதை வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கலாம். இனாமாகக் கொடுக்கவேண்டும் என்றுகூட சொல்லவில்லை. பத்துப் பதினைந்து வருஷங்களில் தொகையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

இனாமாகக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையைக் கைவிடவேண்டுமென்று ஆசைப்படுபவன்நான். கடனாகவே கொடுங்கள். கடனை,

பளுவைப் பூராவும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமுதாயமாக இல்லாத, பின்தங்கிய சமுதாயமாக இருப்பதால், வட்டியில்லாக் கடனாக அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், எல்லா ஹரிஜன மக்களுக்கும், எல்லாத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அதிகப்படியான வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நிலையில், ஐந்தில் ஒரு பங்கு தரவேண்டிய தொகையை அரசாங்கம் அவர்களுக்கு வட்டியில்லாக் கடனாகக் கொடுக்க வேண்டும். அப்பொழுதான் அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு உதவிகரமாக இருக்கும். ரூ.7,250 என்று நிர்ணயம் செய்திருப்பதில் ரூ.3,500 அளவுக்குத்தான் அநேகமாக எல்லோரும் வீடுகட்டுவதற்குப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று வைத்துக்கொண்டாலும், ஐந்தில் ஒரு பங்கு தொகையான ரூ.1450 கொடுக்க ஹரிஜன மக்களின் எத்தனை பேரால் முடியும்? எத்தனைபேர் ரூ.1,450 பங்குத் தொகையைச் செலுத்தமுடியும்? எத்தனைபேருக்கு அந்தத் திட்டம் பயன்படும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேணடும்.

நாங்கள் மனைக்கட்டு கொடுத்து விட்டோம் என்று அரசாங்கம் சொல்லலாம். ஆனால், ஹரிஜன மக்கள், மனை இல்லாமல் இல்லை. அவரவர்கள் மனையில் குடியிருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், 'எப்பொழுது வெளியேற்றப்படுவோமோ?' என்ற பயத்தில் இருக்கிறார்கள். அந்தப் பயத்தை இப்பொழுது அரசாங்கம் போக்க முயற்சிக்கிறது. ஆகவே, இதுவரைக்கும் இல்லாத ஒரு வாய்ப்பை, சர்க்கார் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்று சொல்ல முடியாது. மனைக்கட்டு வாங்கிக் கொடுப்பது என்பது கொள்கை ரீதியாக அரசாங்கத்திற்கு இருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கக்கூடிய ஒரு பெரிய கஷ்டத்தை வைத்துக்கொண்டு, எல்லா ஜில்லாக்களிலும் இம்மாதிரி கஷ்டம் இருக்கிறது என்ற மனோபாவத்தில், இந்தப் பிரச்சினையை அணுகக்கூடாது. மனைக்கட்டு வழங்கப்பட வேண்டியது அவசியம்தான். ஆனால், இதுவரையிலும் இல்லாத ஒரு பெரிய பிரச்சினை அல்ல இது. அதற்காக வீடுகட்டிக் கொடுக்கும் பொறுப்பைவிட்டுவிடவேண்டியதில்லை.

வீட்டுமனை வழங்குவது என்பதை ஒரு பெரிய உதவியாகச் சொல்லி, அந்த வகையில், வீடுகட்டும்திட்டத்தில்மாற்றம் ஏற்படுத்துவதால், நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அரசாங்கம் இதுவரை வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தின் மூலமாகச் செய்துவந்த முறையை மாற்றி, நிலங்கள் மாத்திரம் வாங்கிக் கொடுக்கப் போவதாகச் சொல்லும் காரணத்தினால்தான் நான் இதைச் சொல்கிறேன்.

ஹரிஜன மக்களுக்கு உண்மையிலேயே இந்தத் திட்டத்தின்மூலம் பலன் ஏற்படவேண்டுமானால், அவர்கள் சொந்த வீட்டில் வசிக்கும் வகையில் அவர்களுக்கு இந்த அளவு ரூ.1,450க்குள்ள ஐந்தில் ஒரு பங்குத் தொகையை அவர்களுக்கு வட்டியில்லாக் கடனாகக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

வட்டியில்லா கடனாக இருந்தால், அவர்கள் கடனை திருப்பித் தரவசதி இருக்காது. அவர்களுக்கு அரசாங்கம் மனைக்கட்டு வழங்க உதவி செய்வதோடு, கூட்டுறவு இயக்கம்மூலமாக வீடுகட்டிக் கொடுக்கும்போது வட்டியில்லாக் கடனாகக்கொடுத்து, வீடுகட்டிக்கொள்ள உதவி செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.



விலைவாசி உயர்வு குறித்து ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

1962 ஜூலை 25 அன்று ஆற்றிய உரை :

இப்பொழுது விலையேற்றத்தைத் தடுக்க நாம் 'கன்ஸ்யூமர்ஸ் மூவ்மெண்ட்'டை உபயோகப்படுத்த வேண்டுமென்ற ஒரு கொள்கை ரீதியிலே ஆரம்ப முயற்சி மேற்கொண்டிருக்கிறோம். ஆனால், 'கிரெடிட் அண்ட் மார்கெடிங்' எவ்வளவு அதிகமாக முன்னேற்றம் ஆகிறதோ, அதற்கு இதைப் பயன்படுத்தலாமா என்று நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். 'பிளானிங் கமிஷன்' ஏராளமான பணத்தை 'ரிசர்வ் பாங்கி'லிருந்து இந்த இயக்கத்திற்குக் கொண்டு வருவதற்கும், அந்தப் பணத்தை வசூல் செய்வதற்கும் நாம் வகைசெய்ய வேண்டுமென்ற காரணத்திற்காக, 'கிரெடிட் அண்ட் மார்க்கெட்டிங்' இரண்டையும் 'லிங்க்' செய்து இருக்கிறார்கள்.

ரூ.25 கோடி அளவில் இருந்த இந்தக் கடன் வசதி, ரூ.60, 70 கோடி அளவிற்கு இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வந்துவிடும். இவ்வளவு பெரிய கடன் தொகையை, நாம் கொடுக்கும்போது எப்படி வசூல் செய்வது? 'மார்க்கெட்டிங்' கையும் சேர்த்து இணைத்து வசூல் செய்வதற்கான ஒருமுறையைத்தான் ஏற்படுத்த வேண்டுமென்று 'பிளானிங் கமிஷன்' வற்புறுத்தி வருகிறார்கள். அதை நாமும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இதிலுள்ள சிக்கல் இரண்டு விதமானது.

அறுவடையான உடனே விற்க வேண்டும் என்ற ஒரு முயற்சியிலே எவ்வளவு தூரம் 'கிரெடிட் சொஸைட்டி', 'பிரைமரி மார்க்கெட்டிங் சொஸைட்டி' நேரடியாக, உடனடியாகக் கொள்முதல் செய்வதற்கு வசதி, பலம் படைத்திருக்கின்றன என்பது ஒரு விஷயம்.

இன்னொரு விஷயம், பின்னாலே விலை ஏறும்போது விற்பதற்கு உதவி செய்வது. அவர்கள் பண்டங்களை வைத்துக்கொண்டு, பயிர் செய்தவர்களுக்குச் சாதகமான, விலை ஏறுகிற காலத்தில், விற்பதற்கு உண்டான வசதிசெய்வது என்பதாகும். ஆந்திரப் பிரதேசத்தில், 'வில்லேஜ் கிரெடிட் சொஸைட்டி மார்கெட்டிங் ஆக்ட்டை' நிறைவேற்றுவதையும் சேர்த்துச் செய்துவருகிறார்கள். 'கிரெடிட் சொஸைட்டி', 'பிராட்யூஸ் லோன்' கொடுக்கிறார்கள். நேரடியாக வாங்குவதற்கும் உள்ள வசதி செய்திருக்கிறார்கள்.

நம்முடைய பகுதியின் 'பிரைமரி மார்கெட்டிங் சொஸைட்டி' நேரடியாக வாங்கக்கூடிய ஒரு வசதியை நாம் செய்துகொண்டிருக்கிறோம். நேரடியாக அவர்கள் வாங்கவேண்டுமென்றால், 'பிசினஸ் ரிஸ்க்' அவர்கள் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். இப்பொழுது 'பிரைமரி மார்க்கெட்டிங் சொஸைட்டி' எவ்வளவுதூரம் நேரடியாக வாங்க முடியும், எவ்வளவு ரூபாய்க்கு, எவ்வளவு அளவுக்கு வாங்கமுடியும் என்பதையும் நாம் கண்காணிக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே, நாம் 'சீசனல் பர்சேஸ்' என்றமுறையில் விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்குக் 'கன்ஸ்யூமர் மூவ்மெண்'டை உபயோகப்படுத்தும்போது, 'மார்க்கெட்டிங் சொஸைட்டி'ஸை, 'சீஸனல் பர்சேஸிங்'குக்கு உபயோகப் படுத்த முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

'லீங்கிங் கிரெடிட் அண்ட் மார்க்கெட்டிங்' என்பதற்குப் பதிலாக, 'லீங்கிங் கிரெடிட் அண்ட் மார்க்கெட்டிங் அண்ட் கன்ஸியூமர் சொஸைட்டி' என்கிற முறையில் விஸ்தரிக்க முடியுமா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் பார்க்கவேண்டும். இதில் ஒரு முரண்பட்ட கருத்து இருக்கிறது. ஒன்று 'ப்ரோடியூஸ'ருக்கு அதிகமாக விலை வாங்கிக் கொடுப்பது என்ற நோக்கத்தோடு செயல்படும்போது 'கன்ஸியூமர்ஸ்'க்கு குறைவான விலைக்கு வாங்கிக் கொடுக்கிற நோக்கத்தோடு செயல்பட முடியுமா? இந்த இரண்டும் முரண்பட்ட சக்தியாக இருந்தாலும், இரண்டையும் நியாயமாகச் செயல்படப் பார்த்துக்கொள்ளவேண்டும். நியாயமான விலை, உற்பத்தியாளருக்குக் கிடைக்க வேண்டியது அவசியம்.

அதேமாதிரி, மக்கள் வாங்குகின்ற சக்திக்கு அதிகமாக விலைவாசி இருக்கக்கூடாது என்பதும் அவசியம். இரண்டையும் இணைத்துச் செயல்படக்கூடிய இயக்கம், கூட்டுறவு இயக்கம்தான். இது ஒரு தத்துவமாகவும், இயக்கமாகவும் இருக்கிறது. மற்றது, தத்துவமாக இருக்கலாம். இயக்கம், வேறொன்றாக இருக்கும். இயக்கம், தத்துவம் இரண்டும் இருப்பது, கூட்டுறவில்தான். இதன் காரணமாக 'ப்ரோடக்ஷன் சேல்ஸ்', 'கன்சியூமர்ஸ் இண்டஸ்ட்ரெஸ்டு' இவைகள் இரண்டையும் சேர்த்துப் பயன்படுத்தக்கூடியவகையில் செயல்படமுடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

'லிங்கிங் கிரெடிட் அண்ட் மார்கெட்டிங்' என்பதை இப்பொழுது சமீபத்தில் பரீட்சார்த்த திட்டமாக நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். 'கன்ஸ்யூமர் மூவ்மெண்ட்' மூலமாக விலைவாசியைக் கட்டுப்படுத்தக்கூடிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். ஆகவே, 'சீசனல் பர்சேஸ்' செய்வதற்கு, 'கன்சியூமர் சொஸைட்டி'களுக்கு வசதி

தேவையே, 'பிரைமரி மார்க்கெட்டிங் சொஸைட்டி' இதைச் செய்வதற்கு உண்டான வழிவகைகளைச் செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அதேநேரத்தில் நீண்ட காலத்திற்குப் பண்டங்களை வைத்துக்கொள்வதற்கு வசதி ஏற்படவேண்டும். திரு.சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் சொன்னதுபோல நாம் ஒவ்வொரு கிராமத்திலும் 'குடோவுன்' வசதிசெய்து கொடுக்கவேண்டும். ஏராளமாக 'குடோவுன்' வசதி செய்துகொடுப்பது நமது மாகாணத்தில் அவசியமாக இருக்கிறது. இந்த வசதியைப் பெருக்குவதற்கு உண்டான திட்டம் அதிகமாக இடம்பெறுவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும்.

'கன்ஸ்யூமர்ஸ் மூவ்மெண்ட்' பற்றி ஒருகுறை! ஏற்கெனவே, அவர்கள் 'ஜெயில்', 'ஹாஸ்பிட்டல்' போன்ற ஸ்தாபனங்களுக்குச் 'சப்ளை' செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது அந்த நிலைமையை மாற்றி, 'டெண்டர் சிஸ்டத்'தில், எல்லோருடனும் போட்டி போட்டு சப்ளை செய்யவேண்டிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். முன்புஒருகுறிப்பிட்ட லாபத்தை வைத்துக்கொண்டு இந்த ஸ்தாபனங்களுக்கு 'சப்ளை' செய்துவிடலாம் என்று சொல்லப்பட்டிருந்தது. சமீபத்தில் ஒரு வருஷ காலமாக இந்த முறையை மாற்றி விட்டார்கள். 'டெண்டர் சிஸ்டத்'தில் போட்டிபோடக் கூடிய நிலைமையில் சில சொஸைட்டிகள் இருக்கலாம்.

அதேநேரத்தில் 'அஷ்யூர்டு சேல்ஸ்' இருக்கவேண்டுமென்றால், கிராமங்களில் இருக்கக்கூடிய சொஸைட்டிகளுக்கு இந்த மாதிரி ஒரு 'பிரிவிலேஜ்' இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. 'கன்ஸ்யூமர் மூவ்மெண்ட்'நல்லமுறையில் வளரவேண்டும். விலைவாசி ஏற்றத்தைக் குறைப்பதற்கு அது ஒருவழியாக அமையுமென்று சர்க்கார் நம்பக்கூடிய காரணத்தால், இந்த நிலைமையை மாற்றி, முன்பு இருந்ததைப்போல் 'ஜெயில்' போன்ற ஸ்தாபனங்களுக்குச் 'சப்ளை' செய்வதற்கு இவர்களுக்கு உரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மார்ச் 2 அன்று பகல் 10.00 மணிக்கு ஆற்றிய உரை :

இந்த வரவு செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டிருக்கும், இன்னொரு அம்சம், விலைவாசியைப் பற்றியதாகும். விலைவாசி அதிகமாக ஏறியிருக்கிறது. அதனால், 'ஃபிக்செட் இன்கம்குரூப் பீப்பிள்' மிகவும் சங்கடப்படுகிறார்கள். அமைச்சர்கள் அவர்கள், விலைவாசிப் பிரச்சினையைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது அவர்கள் நடுத்தர மக்களுக்கு ஏதோ நிவாரணம் கொடுக்கப் போகிறார்களோ என்றுதான் நினைத்தேன். ஆனால், நிவாரணம் அளிக்கப்படவில்லை. தீர்வு காண்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்று முதலமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறியிருக்கிறார்கள்.

ஒன்று, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உணவுப்பொருள்களைக் கொடுப்பது; 85 லட்சம் ஒதுக்கி வைத்து, 50,000 ஜனத்தொகைக்கு மேலுள்ள பிராந்தியங்களில் 'ப்ரைஸ் ஸ்டேபிலைசேஷன்' மூலமும் விலைவாசி உயர்வைத் தடுக்க ஒரு 'விஜிலென்ஸ் கமிட்டி' மூலம் விலையைக் குறைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஒரு அம்சத்தால் மட்டும் தடுக்கமுடியாது.

'ஸ்பெகுலேஷன்'மூலம் அறுவடைக் காலத்தில் குறைவான விலைக்கு வாங்கி, விலை உச்சக்கட்டத்தை அடையும்போது

அதிக லாபத்தைப் பெறுவது என்ற ஒரு நோக்கத்தை, முழுவதும் அல்ல - ஓரளவு தடைசெய்கிறது. ஆனால், 'ஓப்பன் மார்க்கெட்டி'ல் குறைவான விலைக்கு விற்பது என்பது முடியாது. 'கன்சியூமர் கோ-ஆப்பரேடிவ் சொஸைட்டி' என்றாலும் அதன் மூலமும் வியாபாரம்தான் நடக்கிறது. அதற்கு அதிக லாப நோக்கம் இல்லாமல் இருக்கலாமே தவிர, நஷ்டத்திற்கு வியாபாரம் செய்ய முடியாது. ஆகவே, இது விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்றவாறு நிவாரணம் கொடுக்கக்கூடியதாக இருக்கிறதே தவிர, பூரண சஞ்சீவியாக அமையமுடியாது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இதில் உயர்ந்தபட்ச விலையையும் குறைந்தபட்ச விலையையும் நிர்ணயித்துக்கொள்வது சரி. அதைக் கண்காணிக்க 'பிரைஸ் விஜிலென்ஸ் செல்' ஒன்றை 'போர்டு ஆப் ரெவின்யூ'வில் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதை ஒரு ஆலோசனையாக மத்திய சர்க்காருக்கும் கூறுவதாகக் கூறினார்கள்.("Price control without price enforcement") இதுவந்து 'பிரைஸ் கன்ட்ரோல், ஃபிரைஸ் என்ஃபோர்ஸ்மெண்ட்' உயர்ந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நிர்ணயிக்கப்பட்ட விலையை அமல் நடத்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதே 'பாலிசி', 'அயர்ன் ட்ரேடில்' (இரும்பு விலையில்' இருக்கிறது. அங்கும் 'பிரைஸ் கன்ட்ரோல்' இருக்கிறது. ஆனால், 'பிரைஸ் என்போர்ஸ்மெண்ட்' இல்லை. சிலரக இரும்பிற்கு 'பெர்மிட்' கிடைக்கும். 7 ஆண்டுகள் கழித்துகூட 'பெர்மிட்' வருகிறது. ஆனால், அந்த ரக இரும்பு 'மார்க்கெட்'டில் கிடைக்கவில்லையா? கிடைக்கத்தான் கிடைக்கிறது. ஆனால், 'கண்ட்ரோல் பிரைஸ்'க்குக் கிடைக்க வில்லை. அது எல்லோருக்கும் தேவையான சாமானும் இல்லை. அன்றாடத் தேவைக்கு, உடனுக்குடன் வேண்டிவரும் சாமானும் அல்ல. 'ரெஸ்ட்ரிக்ட்க்வாண்டிட்டி'தான் வேண்டியிருக்கிறது. அது ஒரு 'மானுபாஃக்சர்ட் குட்ஸ்'. அது வயலில் விளைவதில்லை. 'Factory' மூலம்தான் வரவேண்டியிருக்கிறது. அது ஒரு செய்பண்டம். குறைவான அளவிற்கு வேண்டிய 'மாக்சிமம் பிரைஸை'மட்டும் நிர்ணயிப்பது என்ற கொள்கை, இதில் எவ்வளவு தூரம் நிவாரணம் அளிக்கும் என்பது யோசிக்கவேண்டிய விஷயம்.

நம் சர்க்கார், ஒரு பாலிசியைப் பின்பற்றி இருக்கிறார்கள். "எல்லோருக்கும் தேவையான சாமான்கள் பூராவும் குறிப்பிட்ட விலைக்கு, குறிப்பிட்ட பகுதியினருக்குக் கொடுத்தால் விலைவாசியை மட்டுப்படுத்தலாம்" என்ற கொள்கை. நடைமுறையில் அது நல்ல கொள்கையாக இருக்கிறது. அதைப் பார்த்துத்தான் சகாயவிலை 'டிப்போக்'களை 'ஓபன்' செய்கிறார்கள். தேவை ஒரு லட்சம் டன் என்று மதிப்பிடுகிறார்கள். இதை இரண்டு லட்சமாகக் கூட்டலாம். ஒரு லட்சமே வரக் கஷ்டமாக இருக்கிறது. அப்படியே இருக்க, இரண்டு லட்சம் எப்படி வரப்போகிறது என்று நினைக்கலாம். 'சப்ஸிடைஸ்' செய்யலாம். எல்லாப் பண்டங்களுக்கும் 'சப்ஸிடைஸ்' செய்யவேண்டும் என்று கூறவில்லை. அரிசியை எடுத்துக்கொண்டால், அதற்கு டன் ஒன்றிற்கு 75 ரூபாய் வீதம் 'சப்ஸிடைஸ்' செய்து, இரண்டு லட்சம் டன் நியாயவிலைக் கடைகள்மூலம் விற்பனை செய்வதென்றால் நமக்கு மூன்று கோடி ரூபாய் தேவையாகும். இதை யார் கொடுப்பது?

நாம் ஒன்றை ஒத்துக்கொள்கிறோம். 'கொடுக்கக்கூடியவனிடமிருந்து பெற்று, கொடுக்க முடியாதவனுக்குக் கொடுப்பது' என்பதை ஏற்றிருக்கிறோம். 'சேல்ஸ் டாக்ஸி'ன் விகிதாச்சாரத்தை மாற்றியமைத்தால், இந்த மூன்று கோடி ரூபாய்

கிடைக்கும். இதை வைத்து, நியாயவிலைக் கடைகளுக்கு வேண்டி, ஏன் 'சப்ஸிடைஸ்' செய்துகொடுக்கக்கூடாது? மூன்று கோடி ரூபாய் செலவானாலும், எந்தப் பகுதியினரிடமிருந்து பெறமுடியுமோ அவர்கள் தலையில் வைப்பது. அதை 'சேல்ஸ் டாக்ஸி'ல்தான் செய்யமுடியும். புதிய சோர்ஸ் ஆப் இன்கம்' எங்கிருந்து வரப் போகிறது? இந்த 'சேல்ஸ் டாக்ஸ்' ஒன்றுதான் இருக்கிறது. ஆகவே, எந்த அம்சத்தில் வைக்கலாம் என்று பார்க்க வேண்டும்.

புஞ்சைத் தானியம் உட்கொள்ளும் பழக்கம் குறைந்து வருகிறது. கம்பு, சோளம், கேப்பை போன்றவற்றைச் சாப்பிடும் பழக்கம் குறைந்து வருகிறது. அதாவது, அந்த 'ஃபார்மில்' சாப்பிடுவது? ஆனால், பட்டணத்தில் 'ராகி மால்ட்' சாப்பிடுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, புஞ்சைத் தானியங்களை எப்படி எப்படி 'ப்ராசஸ்' செய்தால் அதை நாகரிகப் பழக்கமாக ஏற்று, மக்கள் உட்கொள்வார்கள் என்பதைப் பரிசீலித்து, அதற்கு ஒரு திட்டமிட வேண்டும்.

இன்று கம்பு இரண்டேகால் படி கிடைக்கிறது. தவசம் 30 ரூபாய் என்றிருக்கிறது, கோட்டைக்கு அது காட்டாது என்று சொல்கிறார்கள். ஆனால், நெல்லூர் அரிசிதான் வேண்டும் என்கிறார்கள். மக்கள் நல்ல அரிசி, வெள்ளை அரிசிதான் வேண்டும் என்கிறார்கள். இல்லாவிடில், வயிற்றுவலி வந்துவிடும் என்கிறார்கள்.

புஞ்சை தான்ய விளைச்சலை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லப் படுகிறது. அதிகப்படுத்தி என்ன பிரயோசனம்? விலை கட்டுப்படியாக இருக்கவேண்டாமா? கம்பு, சோளம் சாப்பிடும் மனோபாவம் மக்களிடையே பரவவில்லை. இனிமேல் சாப்பிடு என்று சொல்லமுடியாது. 'கைக்குத்தல் அரிசியைக்கூட சாப்பிடு' என்று சொல்ல முடியவில்லை. 'சொல்லமுடியாது' என்கிறார் முதல் அமைச்சர் அவர்கள்.

வளர்ந்துவரும் பொருளாதாரத்தில், 'அப்படிச் சொல்ல முடியாது' என்கிறார்கள். ஆனால், ஒன்று செய்யலாம், எப்படிப் புஞ்சைத் தான்ய உணவின் 'டேஸ்'டை அதிகரித்து, அவற்றை மக்கள் வாங்கி உபயோகிக்கும்படி செய்யலாம் என்பது பற்றி, புஞ்சைத் தான்யத்தை எப்படிப் பக்குவம் செய்து, அதை மக்கள் விரும்பி வாங்கி உபயோகிக்கும்படி செய்யலாம் என்பது பற்றிச் சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும்.

'Food Processing Index-ஐ 'ரேஷனலைஸ்' செய்யவேண்டும். உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் என்று பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விளைச்சல் அதிகரித்திருக்கிறது. மூன்று லட்சம் டன் உபரியாக இருக்கிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். நமக்குத் தேவை இன்னும் 10 சதவகிதம்தான். அந்த அளவிற்குத்தான் பற்றாக்குறை இருக்கிறது.

இவ்வளவு பெரிய பெரிய திட்டங்கள் போட்டும், இதைச் சமாளிக்க முடியாது என்று சொன்னால், அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. 'ரியல் ரீசன்ஸ்' என்னவென்று பார்க்கவேண்டும். உற்பத்தி செய்யக்கூடிய 'ஏஜென்ஸி'யை மாற்றியமைக்கவேண்டும். நிலப் பிரபுக்கள் இருந்தார்கள். அவர்கள் உற்பத்திசெய்து வந்தார்கள். இன்று நாம் ஒரு 'ட்ரான்ஸிஷன் ஸ்டேஜில்' இருக்கிறோம். உழைப்பவனுக்குப் பூரண உரிமை கிடைக்கவில்லை; 60-40 என்று சொல்கிறோம்.

போக்குவரத்து தொடர்பாக ஏ.பி.சி.வீரபாகு சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்



1961 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

நம் மாகாணம் தொழில்மயமாகிக் கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில், 'டிரான்ஸ்போர்ட்'டு, நல்லவிதமாக அமைக்கப்படவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எங்கும் 'டபுள் லைன்' இல்லை. நம் மாகாணத்தில், குமரிப் பகுதியிலும், சேலம் - பெங்களூர் பாதையையும் மட்டும் போட்டால் காணாது. திருச்சி - தூத்துக்குடி பாதையை 'பிராட் கேஜா'கப் போட்டாலொழிய, தொழில் வளர்ச்சியடைந்ததாகாது. தொழில் வளர்ச்சியில் பூரண பலனை அடைய முடியாது.

இன்னும் இரண்டு நிமிஷம் கொடுங்கள் சார், திருச்சி - தூத்துக்குடிப் பாதையை 'டபிள் லைனாக்க' முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். நமக்கு 'ரெயில்வே' வளர்ச்சி 'சென்ட்ரல் கவர்மெண்டி'ல் அதிகமாகக் கொடுக்க வில்லை. என் பிராந்தியத்திற்காக நான் சொல்லவில்லை. அம்மாதிரி எங்கு செய்தாலும் சரி, மதராஸ் - திருச்சி பாதையைச் செய்தாலும் சரி. எதானாலும் ஆரம்ப முயற்சியாவது செய்யத் தொடங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1961இல் வற்புறுத்திய தூத்துக்குடி அகல ரயில் பாதைத் திட்டம்தான் நடைமுறைச் சாத்தியமாயிற்று.

இன்றுவரை தூத்துக்குடி ரயில் போக்குவரத்து இரட்டைவழிப் பாதையாக மாறவில்லை; அதற்கான தயாரிப்புகள்தான் நடைபெற்று வருகின்றன.

பல அபிவிருத்தித் திட்டங்களை நாம் இப்போது மேற்கொள்கிறோம். தூத்துக்குடி துறைமுகத்தை எடுத்துக் கொண்டால், அங்கு விஸ்தரிப்பு வேலை செய்வதற்காக இன்னும் 4 வருஷங்களில், 15 கோடி ரூபாய் செலவிட இருக்கிறோம். துறைமுகத்தைச் சுற்றியுள்ள நிலங்கள் யாருடைய முயற்சியும் இல்லாமல், விலை ஏறுகிறது. அதன் சொந்தக்காரர் களுக்குப் பெரிய அளவில் விலை கிடைக்க இருக்கிறது.

ஆகவே, அதன்பெரும் பகுதியைச் சர்க்கார் எடுத்துக்கொண்டால், அதன்மூலம் கிடைக்கக்கூடியதை வைத்துக்கொண்டு, உணவுத்தானியத் திற்கு மானியம் கொடுக்க உபயோகிக் கலாம் என்பதற்காக இப்படிச் சுற்றி வளைத்துச் சொல்கிறேன்.

ஆகவே, பற்றாக்குறை 'பட்ஜெட்' என்ற நிலையில் இல்லாமல். 4 கோடி ரூபாய் உபரி கிடைக்கக்கூடிய ஒரு காரணத்தினால், அதேநேரத்தில், பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள இருக்கின்ற காரணத்தினால், அப்படி ஏற்படுகின்ற அபிவிருத்தி வேலை களினால், கிடைக்கக்கூடிய லாபத்தை வைத்துக்கொண்டு, உணவு தானியத் திற்குச் சர்க்கார் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப் பெருமுயற்சி செய்ய வேண்டும்.

1962, ஜூலை 2 அன்று பிற்பகல் 2.35 மணிக்கு ஆற்றிய உரை :

சமீபத்தில் இந்த மாதத்திலே நெய்வேலித் திட்டத்தை 60 கோடி ரூபாய் செலவிலே நமது ஒப்பற்ற தலைவர் பண்டித நேரு அவர்கள் ஆரம்பித்து வைக்கப் போகிறார்கள். ஆனால், இந்த நாட்டில் தொழில் பெருக்கத்திற்குத் தடையாக இருப்பது போக்குவரத்து சாதனங்களின் குறைவுதான். 'Lack of adequate transport facilities is the main bottleneck for all our progress' என்று உலக பாங்கர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

போக்குவரத்துச் சாதனங்களை விஸ்தரிப்பதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ரூபாய் 1,440 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாள் ஒன்றிற்குப் போக்குவரத்துச் சீரமைப்புக்காக ஒரு கோடி ரூபாய் செலவழிப்பதற்கு மத்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். கடலோரப் போக்குவரத்துச் சாதனங்கள் விஸ்தரிக்கப்படவேண்டும்.

போக்குவரத்துச் சாதனங்களை விஸ்தரித்தால்தான் உண்மையிலே நம் நாடு தொழிலாக்கம் பெறமுடியும். போக்குவரத்துத்தான், தொழிலாக்கம் கொடுக்கக்கூடிய சாதனம் என்பதை நமது மத்திய சர்க்கார் நன்கு உணர்ந்து, இன்றைக்கு நாள் ஒன்றிற்கு ஒரு கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டிருக் கிறார்கள். ஆனால், கடலோர வர்த்தகத் திற்கு எந்தவிதமான இடமும் அளிக்க வில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது மாகாணம் சம்பந்தப் பட்டவரை, மதராஸ் துறைமுகத்தை விருத்திசெய்வது எவ்வளவு அவசியமோ அவ்வாறே, தூத்துக்குடி துறைமுகத் தையும் விஸ்தரிக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

சேது சமுத்திரத் திட்டத்தைப் பரிசீலிக்க ஏற்கெனவே ஸர். ஏ. ராமஸ்வாமி முதலியாரைக்கொண்ட ஒரு கமிட்டியைச் சர்க்கார் நியமித்தார்கள். அந்தக் கமிட்டியும் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. மீண்டும் நிதி நிலையைச் சீர்செய்வதற்காகச் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சென்னை சர்க்கார் இந்த சேது சமுத்திரத்திட்டத்தை வற்புறுத்தவேண்டும். இந்தப் பிராந்தியத்தில் தொழில் வளம் பெருகவேண்டுமானால், போக்குவரத்து அவசியம் என்பதை உணர்ந்து, சர்க்கார் இதை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1963 மார்ச் 2 அன்று ஆற்றிய உரை :

தூத்துக்குடி 'ஏரோ ட்ரோம்' விஷயமாக ஒரு வார்த்தை! கயத்தாறு 'ஏரோ ட்ரோ'மை இணைப்பதற்கு 25 மைல் 'ரோடு' போடத்திட்டம் போட்டிருக்கிறார்கள், மத்திய சர்க்கார். இதிலே நம்முடைய மாநில சர்க்காருக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிடக் கூடாது. இவர்கள் 'நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சி'லில் அதைப்பற்றிப் பேச வேண்டும். 25 மைல் 'ரோடு' போடுவதற்கு ஆகும் செலவுக்குக் குறைவாகக்கூட தூத்துக்குடிக்கருகே 'ஏரோ ட்ரோம்' கட்டிவிடலாமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். 25மைல் 'ரோடு' போடுவதற்கு ஆகும் செலவோடு, சற்று அதிகமாகச் செலவானாலும்கூட அதை மத்திய சர்க்கார் கொடுத்தாவது, தூத்துக்குடியில் 'ஏரோ ட்ரோ'மைக் கட்டமுடியுமா என்பதை இந்த மாநில சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1963இல் திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் எடுத்துரைத்த திட்டம்தான் நடைமுறைச் சாத்தியாமாயிற்று. அவர் வலியுறுத்தியதைப்போல், இன்று தூத்துக்குடி விமான நிலையம், தூத்துக்குடியில்தான் அமைக்கப் பட்டுள்ளது.





தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர்
திரு. ஜ. பி. சி. வீரபாகு அவர்களின் மணி விழா

அழைப்பிதழ்

அன்புடையீர்,

வணக்கம், 24—6—1975 சனிக்கிழமை மாலை 6—30 மணிக்கு, சென்னை, புரசைவாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள மீனாட்சி திருமண மண்டபத்தில்,

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்
தமிழ் வேள்
திரு. ஏ. பி. சி. வீரபாகு
அவர்களின் மணி விழா நடைபெறும்.

பாரத நிதியமைச்சர்
திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்
தலைமையில்

பாரத கனரகத் தொழிலமைச்சர்
திரு. டி. ஏ. பை அவர்களும்

நல்லறிஞர் பலரும் கலந்து கொள்வர். தாங்கள் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

வரவேற்புக் குழுவினர்

வரவேற்புக் குழு

திரு கே. எஸ். இராமசாமி, தலைவர்
,, ஈ. வே. கி. சம்பத்
,, எம். ஆறுமுகசாமி, எம் எல் சி.
திருமதி டி. என். அனந்தநாயகி, எம்.எல் ஏ.
திரு எல். எஸ் கோபாலகிருஷ்ணன்
,, பி. பி. கலியபெருமாள்
,, பசுபதி தனராஜ்
,, பி. ஆர். இராமகிருஷ்ணன்
,, ஏ. ஜே. தாஸ்
,, அ. முத்தையா
,, கே. வெங்கடசுப்பராஜு
,, டி. பட்டுசாமி
,, கண்ணப்பா வள்ளியப்பா
,, எஸ். காமராஜ்
,, எம். எஸ். செல்வராஜ்
,, எஸ். வைத்தியநாதசாமி
,, டி. வி. டிமாண்டி, எம்.எல்.சி.,

திரு எம். பக்தவத்சலம்
திருமதி மரகதம் சந்திரசேகர்
திரு ஆர். வி. சுவாமிநாதன், எம்.பி.
,, ஏ. ஆர். மாரிமுத்து, எம்.எல்.ஏ.
,, ப. சிதம்பரம்
,, ஜி. இராமானுஜம்
,, டி. தீர்த்தகிரி கவுண்டர்
,, ஏ. ஜெயராமன்
திருமதி வி. ஜெயலட்சுமி, எம்.பி.
திரு ஏ. கே. சண்முகசுந்தரம்
,, பழனியாண்டி
,, எஸ். ஆர். முத்துவேல்
,, ஆ. ரத்தினம்
,, கே. கே. கோதண்டராம கவுண்டர்
,, கோ. மாசிலாமணி
,, அக்பர் பாஷா
,, சி. ஆர். ராமசுவாமி

திரு வி. இராமய்யா
,, ஒ. வி. அளகேசன், எம்.பி.
,, டாக்டர் எல். கே. முத்துசாமி
,, எஸ். எல். கிருஷ்ணமூர்த்தி
,, கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்
,, டி ஆர். எஸ். வீஜயராகவாச்சாரி
,, கோ. பூவராகன், எம்.பி.
,, தஞ்சை ராமமூர்த்தி
,, கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்
,, ஜி. பி. வி. ராஜு
,, கே. டி. கோசல்ராம்
,, டி கே. ஈஸ்வரன் பிள்ளை
,, பி. எஸ். நஞ்சா கவுடர்
,, பி. கே பழனிசாமி
,, பி. வேலுசாமி
,, ஆர். ஜெயச்சந்திரன்
,, டாக்டர் பா. நடராஜன்



ஏ.பி.சி.வீரபாகுவின்
மணிவிழாவில்
டி.ஏ.பாய்,
சி.சுப்பிரமணியம்



ஏ.பி.சி.வீரபாகுவின்
மணிவிழாவில்
அவருக்குத் 'தமிழ்வேள்'
பட்டம் அளிக்கும்
தவத்திரு குன்றக்குடி
அடிகளார். உடன்
இருப்பவர் பேராசிரியர்
சிட்டிபாபு



சென்னையில் நடைபெற்ற
ஏ.பி.சி.வீரபாகுவின் மணிவிழாவில்
சி.சுப்பிரமணியம் அவர்களுடன்
ஏ.பி.சி.வீரபாகு





ஏ.பி.சி.வீரபாகுவின் மணிவிழாவில் திரைப்படத் தயாரிப்பாளர் ஜி.உமாபதி அவர்கள் உரையாற்றுகிறார். தமிழக முதல்வர் பக்தவத்சலம், மத்திய அமைச்சர் சி.சுப்பிரமணியம் ஆகியோர் உடன் உள்ளனர்.



ஏ.பி.சி.வீரபாகுவின் மணிவிழாவில் வாழ்த்தும்
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.ராமசாமி



மணிவிழாவில் ஏ.பி.சி.வீரபாகுவைக் கௌரவிக்கும்
தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் க.ராசாராம்



மணிவிழாவில் ஏ.பி.சி.வீரபாகுவை வாழ்த்தும்
இந்திய கனரக தொழில்துறை அமைச்சர் டி.ஏ.பை



சென்னையில் நடைபெற்ற



சென்னையில் நடைபெற்ற மணிவிழாவில் சி.சுப்பிரமணியம், கே.எஸ்.ராமசாமி மற்றும் அமைச்சர் பெருமக்கள்



மணிவிழாவில் கலந்துகொண்ட தேசிய தொண்டர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு





மத்திய அமைச்சர் சி.சுப்பிரமணியன் அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு மற்றும் ஜி.பி.வி.ராஜு







சென்னையில் நடைபெற்ற







மணிவிழா நிகழ்வுகள்...










அரசியல் தலைவர்களுடன்...





1972இல் மதுரை மாநில காங்கிரஸ் மாநாட்டில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ.பி.சி.வீரபாகு தலைமையுரை ஆற்றுகிறார். மத்திய அமைச்சர்கள் சங்கர் தயாள் சர்மா, மோகன் குமாரமங்கலம் மற்றும் தஞ்சை ராமமூர்த்தி ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர்

வ.உ.சி. கல்லூரி வெள்ளி விழா கொண்டாட்டத்தின் திரை இசை நிகழ்ச்சியில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு





05.09.1972 அன்று, பாரதப் பிரதமரின் வருகையையொட்டி மத்திய தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர் சி.சுப்பிரமணியம், பாராளுமன்ற விவகாரத்துறை துணை அமைச்சர் ஓம் மேத்தா ஆகியோருடன் ஏ.பி.சி.வீரபாகு



1945இல்
திருநெல்வேலி
மாவட்டம்,
செய்துங்கநல்லூரில்
நடைபெற்ற காங்கிரஸ்
மாநாட்டில், தமிழ்நாடு
காங்கிரஸ் கமிட்டி
தலைவர் கு.காமராஜர்
அவர்களுடன்
ஏ.பி.சி.வீரபாகு
மற்றும் காங்கிரஸ்
தொண்டர்கள்

மத்திய அமைச்சர் சி.சுப்பிரமணியம்
அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு





தமிழக முதலமைச்சர்
எம்.பக்தவத்சலம் அவர்களுடன்
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி
தலைவர் ஏ.பி.சி.வீரபாகு



தூத்துக்குடி
துறைமுகத்தில்
மத்திய கப்பல் துறை
இணை அமைச்சர்
கே.எஸ்.ராமசாமி
அவர்களுடன்
ஏ.பி.சி.வீரபாகு



அரசியல் தலைவர்களுடன்...





தூத்துக்குடி கூட்டுறவு பண்டகசாலை திறப்பு விழாவில் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் சி.மாதவன் அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



தூத்துக்குடி கூட்டுறவு பண்டகசாலை திறப்பு விழாவில் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் சி.மாதவன் அவர்கள் உரையாற்றுகிறார். அருகில் ஏ.பி.சி.வீரபாகு



மன்னார்குடியில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டில் ஏ.பி.சி.வீரபாகு உரையாற்றுகிறார். மத்திய அமைச்சர்கள் ஒய்.பி.சவான், சுவாமிநாதன் மற்றும் சி.சுப்பிரமணியம் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர்.



தமிழ்நாடு காங்கிரஸ்
கமிட்டி பொதுச்செயலாளர்
ஈ.வி.கே.சம்பத் அவர்களுடன்
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி
தலைவர் ஏ.பி.சி.வீரபாகு



சென்னையில் காங்கிரஸ் கட்சி
கூட்டத்தில் ஏ.பி.சி.வீரபாகு
உரையாற்றுகிறார்.
மத்திய அமைச்சர்கள்
சி.சுப்ரமணியம், கே.எஸ்.ராமசாமி
ஆகியோர் உடனுள்ளனர்.



மத்திய தொலைத்தொடர்புத் துறை
அமைச்சர் ராஜ் பகதூர் அவர்களுடன்
ஏ.பி.சி.வீரபாகு மற்றும் தமிழக
அமைச்சர் எஸ்.ஜே.சாதிக்
பாட்சா, பாராளுமன்ற உறுப்பினர்
எஸ்.ஏ.முருகானந்தம்



தூத்துக்குடிக்கு அருகிலுள்ள
கழுகுமலையில் நடைபெற்ற
சர்வோதயா மாநாட்டில்
ஏ.பி.சி.வீரபாகு




அரசியல் தலைவர்களுடன்...







பாராளுமன்ற உறுப்பினர் ஏ.வி.தாமஸ் (இடதுபுறம்), ஏ.பி.சி.வீரபாகு



மா.பொ.சிவஞானம், எம்.சி.வீரபாகு ஆகியோருடன் ஏ.பி.சி.வீரபாகு



தமிழக முதலமைச்சர் கு.காமராஜர், கே.டி.கோசல்ராம் ஆகியோருடன்
ஏ.பி.சி.வீரபாகு மற்றும் காங்கிரஸ் கட்சியினர்



1971இல் தென்காசி நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வெற்றி பெற்றவுடன் நடந்த கூட்டத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ.பி.சி.வீரபாகு தேர்தலில் வெற்றிபெற்ற செல்லச்சாமி (இடதுபுறம்), முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சங்கரபாண்டியன் பிள்ளை (வலதுபுறம்)



அரசியல் தலைவர்களுடன்...



திராவிடர் கழக பொதுச்செயலாளர் கி.வீரமணி அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



1957 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் மக்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக்கொள்ளும் ஏ.பி.சி.வீரபாகு

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் ஏ.பி.சி.வீரபாகு உரையாற்றுகிறார். காங்கிரஸ் தலைவர் சங்கர்தயாள் சர்மா மேடையில் அமர்ந்துள்ளார்





06.05.1965 அன்று,
தூத்துக்குடி துறைமுக
நிகழ்ச்சியில் சென்னை
மாநிலக் கூட்டுறவுத் துறை
அமைச்சர் மன்றாடியார்
அவர்களுடன்
ஏ.பி.சி.வீரபாகு



தமிழ்நாடு உள்ளாட்சி
மற்றும் வேளாண்துறை
அமைச்சர் அன்பில்
தர்மலிங்கம்
அவர்களுடன்
ஏ.பி.சி.வீரபாகு



மதுரை கூட்டமொன்றில்
வேளாண் துறை அமைச்சர்
அன்பில் தர்மலிங்கம்
உரையாற்றுகிறார்.
தமிழக சட்டமன்ற
சபாநாயகர்
பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன்,
மத்திய அமைச்சர்
ஆர்.வி.சுவாமிநாதன்
ஆகியோருடன்
ஏ.பி.சி.வீரபாகு



அரசியல் தலைவர்களுடன்...



1980ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில்
தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம்
தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில்,
தமிழக முதல்வர் மு.கருணாநிதி,
வை.கோபால்சாமி ஆகியோருடன்
ஏ.பி.சி.வீரபாகு



விடுதலை போராட்ட வீரரும்
இந்திய அரசியல் சட்ட வரைவு குழு
மற்றும் வ.உ.சி. கல்விக் கழக
உறுப்பினர் எம்.சி.வீரபாகு
அவர்களுக்கு ஏ.பி.சி.வீரபாகு மாலை
அணிவிக்கிறார்



வ.உ.சி. கல்லூரி விழாவில்
தமிழ்நாடு கல்வி அமைச்சர்
வி.ஆர்.நெடுஞ்செழியன்
அவர்களுடன் ஏ.பி.சி.வீரபாகு



மதுரையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுச்செயலாளர் ஹென்றி ஆஸ்டின், மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம், ஈ.வி.கே.சம்பத், கே.எஸ்.ராமசாமி ஆகியோருடன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ.பி.சி.வீரபாகு



திரு. கே.எஸ். மணிபாரதி, தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் க.ராசாராம் ஆகியோருடன் ஏ.பி.சி.வீரபாகு



தமிழக நிதி அமைச்சர் வி.ஆர்.நெடுஞ்செழியன் அவர்களுடன் மாவட்ட நூலகக் குழுத் தலைவர் ஏ.பி.சி.வீரபாகு

அரசியல் தலைவர்களுடன்...





மத்திய அமைச்சர்
சி.சுப்பிரமணியம்
அவர்களுடன்
ஏ.பி.சி.வீரபாகு



1947 ஆகஸ்ட் 15 அன்று
நாடு விடுதலைப் பெற்றபோது
தூத்துக்குடி மாநகரில்
தேசிய கொடியை ஏற்றிச்
சுதந்திர உரையாற்றுகிறார்
ஏ.பி.சி.வீரபாகு



மதுரையைச் சேர்ந்த
விடுதலை போராட்டத் தியாகி
என்.எம்.ஆர்.சுப்புராமன் அவர்கள்
ஏ.பி.சி.வீரபாகுக்குப் பொன்னாடை
அணிவித்துக் கௌரவிக்கிறார்

உழைப்பால் உயர்ந்தவர்...









உழைப்பாலும்
உள்ளத்தாலும்
உயர்ந்த மனிதர்
ஏ.பி.சி.வீரபாகு!



குலபதி ஏ.பி.சி.வீரபாகு மறைவு








இவ்வுலக வாழ்வைத் துறந்த
குலபதி ஏ.பி.சி.வீரபாகுவைச் சுற்றி துயரத்தோடு குடும்பத்தினர்

இறுதி ஊர்வலம்...



தூத்துக்குடி நகர முக்கிய வீதியை அடைத்துச் செல்லும்
குலபதியின் இறுதி ஊர்வலம்

நினைவைவிட்டு நீங்காதவர்...

என்றும் எளிமையாய்
எல்லோர் நினைவுகளிலும் வாழும்
எங்கள் ஏ.பி.சி.வீரபாகு!

